ஸ்ரீகுஹேசாய நம:

# தகராலயரகசியமூலமும்,

## சதா ரந்தசாகரமெனு முரையும்.

ஸ்ரீமத் - குமாரகுருதாசசுவாமிகள்.

பாம்பன்

(6988)

ஓம் குஹப்ரஹ்மணே நம:

# தகராலயரகசியமூலமும்,

## சதானந்தசாகரமெனு முரையும்.

திருத்தேவையெனுந் திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த

பாம்பன்:

ஸ்ரீமத்-குமரகுருதாசசுவாமிகளால்

அருளிச்செய்யப்பட்ட

மூலமும், விசேடவுரையும்,

**First Edition—300 Copies.**

*விருத்தாசலம்: தியாகராஜ கவிராயர் குமாரர்*

வி. கலியாணசுந்தரம்பிள்ளை (B. A.) பி. ஏ. அவர்களால்

இயற்றப்பட்ட

பொழிப்புரையுமாக வுள.

சென்னை: வைஜயந்தி அச்சுக்கூடத்திலும்,

பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திலும்

*அச்சிடப்பட்டன.*

*Copy-right Registered.*

**1916**

இதன் விலை **2—8—0**

சிவமயம்.

ஓம் குஹேஶாயநம:

குமரகுருதாஸகுருப்யோநம:

# முன்னுரை.

"எவ்வுயிரு நீங்கா துறையு மிறைசிவனேன்
றெவ்வுயிர்க்கு மன்பா யிரு." [சைவசமயநெறி]

இந்நூலிற் கிதனாசிரியர் தாமே நூற்பாயிரம் விசேடவுரைப் பாயிரம் நுவன்றிருக்க, மற்றொரு முன்னுரைவரைய யாம் விழைந்தமை யாது கருதி யெனின், இவ்வாசிரிய ரருளிச் செய்துள்ள நூல்களுள் இதனை முதலில் வாசிக்கப் புகுவோர், ஆசிரியர் கொள்கைகளில் முக்கியமான சிலவற்றை முன்னர்த் தெரிந்திருப்பது அச்செயற்கொரு துணையாயிருத்தல் கூடுமென்பது குறித்தென்க.

இந்நூலைச் செய்தருளிய சுவாமிகள் வடமொழி தென்மொழிகளிலுள்ள ஞானநூல்களைத் திறம்படத் தெள்ளித்தெளிந்துள்ளோர். அன்றியுமிவர், தமது இளமைப்பருவந் தொட்டே இறைவன் மாட்டு மெய்யன்பு செலுத்திவந்து அவனது விசேட அருளுக்கொரு கொள்கலனாய் விளங்கும் பெற்றியர். இவரருளிச்செய்த அரிய பெரிய நூல்கள் பலவுள. அவற்றின் மேம்பாடும் அவை யாக்கப்பட்ட காரணங்களும் பல்லாற்றானும் பாராட்டத்தக்கவை. இவ்வாறு வெளிவந்த நூல்களுட் "பரிபூரணானந்தபோதம்" "தகராலயரகசியம்" என்பன பிரமாண முதலியவற்றான் மிகச்சிறந்தவை யென்னலாம். இவ்விரண்டும் சுவாமிகள் துறவொழுக்கம் பூண்டபின்னர் மௌனமாயிருந்தகாலத் தருளிச்செய்யப்பட்டவை. இவற்றுண் முன்னது "இலகுமெய்ஞ் ஞானநூல்கள் பலவுளும் எடுத்தசாரம் சொலுமுறை பொலிந்துநிற்பச் சுருக்கமாய்ச் சொற்றது." பின்னது, அம் முன்னதாகிய பரிபூரணானந்தபோதத்துத் தொடர்பு நூலாம். இதன்கட் கூறப்படூஉந் தகரவித்தையை, இந்நூலாசிரியர் ஒருகால் "முப்பத்தைந்து நாள், தனிநிட்டை சாதித்திருந்தஞான்று, கௌபீனதாரியாய் வெளிப்

பட்ட இறைவன் அவர்க்கு ஒருசொல்லா லுணர்த்தியருளினன்." இவ்விரண்டு ஞான நூல்கட்கும் முறையே "சிவசூரியப்பிரகாசம்" எனவும், "சதானந்தசாகரம்" எனவும் பெயர்பூண்டொளிருஞ் சீரியவுரைகளுள் விசேட உரைகளைச் சுவாமிகளே தந்துள்ளார்கள். இந் நூல்களை அவையற்றி னுரையோடு கற்பதே விழுப்பயன்றருவதாகும். அன்றியும், பரிபூரணானந்தபோதத்தை நன்காராய்ந்த பின்னரே தகராலயரகசியத்தைப் படிக்கத்தொடங்கல் நேர்முறையென்பது மேற்காட்டிய உண்மையால் இனிது விளங்கும். இனி, இவ்விரண்டு சாத்திரங்களினுழைக் காணப்படுங் கோட்பாடுகளிற் சிலவற்றை விளக்கமுயல்வாம்: .

முதலிற் சுவாமிகள், தமதுகொள்கைகட்கு எவற்றைப் பிரமாணமாகக் கொண்டுள்ளார் என்பதைப்பற்றிச் சிறிதாராய்தல் பயனுடைத்தாம். வடமொழி நூல்களில் வேதம், சிவாகமம், புராணம், இதிகாசம், மிருதி, பிரமசூத்திரம் என்பனவற்றையும், தமிழ் நூல்களில் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், சித்தாந்தசாத்திரங்கள், அருணகிரியார், தாயுமானார், பட்டினத்தார் ஆகிய ஞானச்செல்வர்களுடைய திருவாக்குக்கள் என்பனவற்றையும் தந் நூல்களிற் பெரும்பாலும் பிரமாணித்துள்ளார். வேதம் முதலிய வித்தை பதினெட்டுள் வேதத்தின் ஞானகாண்டமாகிய நூற்றெட்டு உபநிடதாதிகளையே தலைமைப் பிரமாணமாகக் கருதியிருக்கின்றாரென்பதூஉம் உணரப்படுகின்றது. இவருடைய நூலுரைகளிற் பெரும்பாலும் வேதவாக்கியங்கள் முன்பும், ஆகம உரைகள் பின்பும், ஏனைய நூல் மேற்கோள்கள் இவையற்றைத் தொடர்ந்தும் நிற்பது இதை வலியுறுத்துகின்றது. வேதாகமங்களை இருகண்களாகப் போற்றியுள்ளாரென்பதும் புலப்படுகின்றது. வேதத்தை யிழித்துக்கூறும் ஆகம வாதியர்க்குச் சுவாமிகள், வேதம், சிலர் சொல்லுவதுபோல் யோகத்தோடு நிற்பதொன்றன்றென்றும், உபநிடதவாயிலாக ஞானத்தை விரித்துப்பேசுநூலே என்றும், ஆகம ஞானபாதசாரமுழுவதும் வேதத்திலுள்ளதே என்றும் பிரமாணவாயிலாக அறிவுறுத்துகின்றார். மேலும் "சித்தாந்தம் வேதஸாரமாயிருக்கின்றமையின்" எனப் பொருள்தரும் ஸுப்ரபேதாகம வசனத்தையும், "இவ் வேதாந்தப் பொருளாகிய ஞானம் பரமசுப்மாகிய சித்தாந்தம்" என்னுந் தமிழைத்தரும் மகுடாகம வசனத்தையும், திருமந்திரம், சிவஞானசித்தியார், சிவதருமோத்தரம் முதலிய நூல்களின் செய்யுள்களையும், "வைதிகசைவம்" என்னும் பிரயோகம் காமிகாமத்துள்

ளது என்னுமுண்மையையும் எடுத்துக்காட்டி வேதநிந்தை செய்தல் அடாது என்று புலப்படுத்துகின்றார். வேதாகமக்கருத்தொற்றுமையை, இப்போது பேசப்படும் இரண்டு நூல்களிலுந் திருமூலரும் நீலகண்டசிவாசாரியரும் இவ்விடயமாகக் கொண்டகருத்தைத் தழுவி நன்கு விளக்கியுள்ளார். தமிழ் வேதத்தும், அருணகிரிநாதனூர் நூலிடத்தும் இவர்க்குள்ள நன்மதிப்பும் வெளிப்படை. மேலோக்காகப் பார்ப்போர்க்கு ஆசிரியர், உபநிடதங்கள்பாற் சிறப்புவகையிற் பற்று வைத்திருப்பது எற்றிற்கெனப் புலப்படாது போதல்கூடும். அந்த நூற்றெட்டாதி நூல்களும் ஒருவகையிற் றம்முள் மாறுபடப் பேசுவனபோலவும், உபாசனை முறைகளிற் பலபடப் பகர்வனபோலவுங் காணப்படினும் அவையாவும், மனோலய வாய்ப்பின்கண்ணே நாட்டமுடையனவாய் அதனையே பலதிறத்தானும் விரித்துரைப்பனவாயுள்ள சுவானுபவ நூல்கள் என்றும், பரதகண்ட பண்டிதர்களான் முதற்பிரமாணமாகக் கொள்ளப்பட்டுளவென்றும் அவரறிந்தவொழுங்கே அப்பற்றிற்குக் காரணமாம். இவ்வாறு பிரமானுபவத்தைக்கூறு நூல்கள் எம்மொழியிலிருப்பினும், எக்காலத்தனவாயிருப்பினும், எந்நாட்டனவாயிருப்பினும் அவையற்றைப் பிரமாணமாகக் கோடற்கு அவர் மனந் துணிந்திருக்கின்றது. அங்ஙனமே முழுமுதற்கடவுளிலக்கணத்திற்கும், பிரமானுபூதிப் பெருஞ்செல்வர்களது ஞானானுபவத்திற்கும் மாறாகவுள்ள கதைகளையுங் கொள்கைகளையுங் கூறும் புத்தகங்கள் வேறெத்துணைப் பழமையையுஞ் சிறப்பையுங் கொண்டனவாயிருப்பினும் அவை தள்ளற்பாலனவே என்று கட்டுரைத்தற்கும் இவர் பின்னிடையார். சில பழைய நூல்களில் அன்னியர் நுழைப்பும் அறிவுக்குறைவாலேற்பட்ட பிரதிபேதங்களும் உள்ளன என்பதும், "முந்து நூல்களில் விதிக்கப்பட்டிருந்த கன்மங்களுட்பலவும் பின்றை நூல்களில் விலக்கப்பட்டவாறே, பின்றை நூல்களுள்ளும் விதிக்கப்பட்டவற்றுட் பலவும் பல்லாயிர வருடங்கட்குப் பிற்பட்ட இஞ்ஞான்றியைபுபற்றி விலக்கப்படுதல் ஏற்புடைமையேயாகும்" என்பதுஞ் சுவாமிகட்கு உடம்பாடே.

இனி, சுவாமிகளது தத்துவ விசாரணை எம்முடிபைக்கொண்டுள்ளது, அவர் எச்சமயத்தினர் என்பதைப்பற்றிச் சிறிதெழுதுதல் மிகையாகாது. சாதாரணமாகத் தத்துவ விசாரணையானது மனிதனது பெத்தநிலையில் அவனுக்குக் கிடைத்துள்ள மதிநுட்பத்தைக் கொண்டே நிகழ்வதொன்றாம். காரணந் தெரிந்துகொள்ளாது குரு

மொழியென்றோ சமயநூலுரை யென்றோ ஒன்றை நம்புதல் ஒரு சமயச் சார்புபெறுதற்கு வேண்டற்பாலதா யிருப்பினும் அஃது இத்தத்துவ விசாரணைக்குப் பொருத்தமாக மாட்டாது. தத்துவ ஆராய்ச்சியி னியல்பைப்பற்றி மேற்புலத்து நுண்ணறிவாளர் எண்ணி யிருப்பது கீழ்வரு மொழிபெயர்ப்பாய எடுத்துக்காட்டொன்றால் இனிது புலனும். அது வருமாறு:—

"(பலதிறப்பட்ட) அனுபவத்திற்கு நிலைக்களமா யுள்ளவற்றின் தன்மைகளை யறிந்துகொள்ளற்கும், உயிர்வாழ்க்கை அல்லது உண்மைப்பொருள் முழுதும் (அதன் எல்லா அமிசங்களும் உட்பட) இவ்வியல்பிற்றென மனித அறிவாற் கிரகிப்பதற்குஞ் செய்யப்படு முயற்சியே தத்துவ ஆராய்ச்சியாம். இது, சேதனுசேதனப் பிரபஞ்சத் திருப்பிற்குப் போதிய காரணத்தை நம் அறிவிற்குத் திருத்தி தருமாறு கண்டுபிடிக்க முயல்வது. பிரபஞ்சத்தில் உலகம் கடவுள், மனிதன் எனவுள்ள எல்லாப் பகுதிகட்கும் அவைதம் உரிமையைத் தந்து, எல்லாப் பொருள்களையும் அவையற்றின் இயல்பிற்கேற்ப நிரல் படுத்து, அனுபவத்திற்றோன்று முரண்பாடுகளை விளக்கி மிளிரவல்லதொரு அறிவுக்குப் பொருத்தமான காரணத்தை விவரமாய்க் கண்டு பிடிப்பது அம்முயற்சியின் நோக்கம்." [Prof. S. Radhakrishnan in *The Monist.*]

இங்கிலைநின்று உலகுயிர் கடவுளைப்பற்றி விசாரிக்குங்கால், எடுத்துக்கொண்ட தத்துவ ஆராய்ச்சிக்குப் பிறப்பிடமாய்நிற்கும் உடல், உலகு, உயிர் என்பனவே முற்றும் "இல்லாப் பொருள்கள்," "சூனியம்," "மித்தை," "வெறும்பாழ்" என்று முடிபுகூறும் விசாரணை போலித் தத்துவவிசாரணையாகத் தோன்றும். உலகுயிர்கள் மித்தையென்று நினைப்பதும், சொல்லுவதும், உலகத்தில் உடம்பொடு கூடிநிற்கும் ஒரு பிரேயன்றோ? இவ்விதவுயிர் அவ்வாறு நினைப்பதுஞ் சொல்லுவதும் "என் தாய் மலடி" என்பான் கூற்றைப் பொருவுவனவே. அவை வெறுந் தோற்றமென்னில், அதற்குக்காரண மென்னை? என்னுங் கடாவெழும். 'இம்முடிபு கொள்ளத் தக்கதன்றென்பதற்குப் பெரியோர்காட்டியுள்ள வேறொரு நறு நியாயமு முளது. அஃது 'இக் கொள்கையின்படி ஒரு விநாடிநேரமேனும் சொல்லுகின்ற எவனும் வாழமுடியாது' என்பதே. ஞானிக்கு உலகுயிர் இல்லை(=தோற்றுவதில்லை) என்னும் உண்மை இவ் வைசித்தாந்தத்திற்கு வலிசெய்வதின்று. இவ்வுண்மையை வரம்பு கடந்து வற்புறுத்தியதே இக் காலத் தொருசாரார்து நவீன வேதாந்தப் புறப்பட்டதற்குக் காரணம் என்று தோன்றுகிறது. அறிவாற் கொள்ளப்படுதற்கு நேர் முரணு

கவே சொல்லுஞ் செயலும் இன்றியமையாது நிகழவேண்டியிருத்தல் அக்கொள்கையின் குறைபாட்டைக் காட்டும். அன்றியும், நாம், பெத்த நிலையிலுள்ள மதியினுதவியால் தத்துவ விசாரணை செய்துகொண்டே மேற்செல்லுங்கால், ஒருவர், நாம் கொண்டவொரு கருத்தோ, அதைவிளக்கவெழுந்த உதாரணமோ உண்மைக்கு விருத்தமானது தன்னிற்றானே முரண்படுவது என்று நம்மறிவிற்கு நன்கு புலனுமாறும், நாம் மறுத்துப்பேச இடமில்லாமலும் நமக்கே எடுத்துக் காட்டுங்கால், உடனே அவனைநோக்கி நாம், ஓ! ஓ!! உமக்கு இன்னும் பக்குவம் வரவில்லை நாஞ்சொல்லுமுண்மை அனுபவத்தாலுணரத்தக்கது என்று பகர்வது தத்துவ விசாரணையாகாதென்றல் நிச்சயம்; வேறெதுவாயிருப்பினு மிருக்கலாம். இன்னுமொரு குறிப்பை ஈண்டுக் காட்டி மேற்செல்வாம்: ஆங்கில தத்துவநூல்களிற் சிறிது பழக்கமுடைய நந்நாட்டு முதியோரிற் பலர், நமது வாலிபகாலத்திற் பிரபல தத்துவ ஞானிகளென விளங்கிய ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) முதலியோரும் அவரது கருத்து மேம்பாட்டிற்குக் காரணராயிருந்த காண்ட் (Kant) ஸ்பைநோஜா (Spinoza) முதலிய பழைய ஆசிரியர்களுங் கொண்ட கொள்கைகளையே இக்காலத்து ஐரோப்பிய மேதாவியரும் பின் பற்றுகின்றனர் எனத்தோன்றுமாறு பேசுவர். நடந்த 20 - வருடங்களுள், உலகப்பொருள்களைப் பற்றியும் உயிரிலக்கணத்தைப்பற்றியும் பல அரிய உண்மைகள் மேனாட்டாரது நுண்ணறிவின் துணையாற் கண்டுபிடிக்கப்பட்டன வாதலின் "தொன்மையவா மெனுமெவையு நன்றாகா இன்று, தோன்றியநூ லெனுமெவையுந் தீதாகா" என்றபடியுணர்ந்து உண்மை யொன்றிற்கே கட்டுப்பட ஒருப்படும் அந்நன்மக்களிற் பலர், மேற்குறித்த ஸ்பென்ஸர் (Spencer) காண்ட் (Kant) முதலியோர் தேர்ந்தெடுத்த முடிபுகள் பல இப்போது கொள்ளத் தக்கனவல்லவென்று தள்ளி அம்முன்னோர் ஆராய்ச்சியில் வெளியாய கருத்துக்களில் உண்மைக்கு விருத்தமாகாத சில பகுதிகளையே போற்றி வருகின்றனர். வார்ட் (Dr. Ward), ஜேம்ஸ் (William James), ஷில்லர் (Dr. Shiller), ஸேத் (James Seth), ட்ரம்மண்ட் (Henry Drummond), லாட்ஜ் (Sir Oliver Lodge) முதலிய பெரிய ஆசிரியர்கள் இப்போது நன்கு நாட்டிவருவன உண்மைச் சைவசித்தாந்த முடிபுகளேயன்றி வேறல்ல வென்பது அவருடைய நூல்களை வாசிப்போர்க்கு எளிது புலனும். நிற்க. இது

காறுங் கண்டிக்கப்பட்ட கொள்கையிலுள்ள உண்மை யமிசத்தை மட்டுங் கிரகிக்கமாட்டாச் சாமானியர் வாய்கூசாது, தாமும் பிறரும் நுகருஞ் சுகதுக்கங்களையும் அவற்றின் காரணமாக ஆன்றோர் கூறும் புண்ணிய பாவங்களையும், பந்த முத்திகளையும் அறவே பொய்யெனக் கூறி உலகத்தைக் கெடுக்குங் கொடுமையையும் அறியாதே புரிவர். விரிப்பிற் பெருகும்.

சுவாமிகள் இக்கொள்கையின ரல்லர். பரிபூரணானந்தபோதத்தில் உலகு உயிர் கடவுள் என்னும் மூன்றும் உள்பொருள்களே எனற்கு வேதாகமங்களின் சம்மதத்தைக் காட்டி யுள்ளமையும், தகராலயரகசியத்தில் "ஆபாசப்பட்ட சித்தே சிதாபாசன், அவனே மனம்" என்று மனத்தத்துவஞ் சாதிக்கப் புகுந்தாரை நியாய வாயிலாக மறுத்து, "சீவான்மாவைப் பொய்ப்படுத்தே பரான்மாவே சாதிக்கத்துணிதல் சுருதி விரோதமுமாம்" என்று முடிபுகாட்டியுள்ளமையும் இதனை நன்கு விளக்கும். பிரமசூத்திரத்தி லிருந்தும், முண்டக சுவேதாச்வதர சாரீரகாதி உபநிடதங்களி லிருந்தும் இருநூல்களிலுங் காட்டப்பட்டுள்ள மேற்கோள்கள் பெரிதுங் கவனிக்கத் தக்கன. உண்மைக்கு வேறான ஏகான்மவாதத்தை மேற்காட்டிய படியே யன்றி இன்னும் பலவிடங்களிற் சுருதி யுக்தி அனுபவ வாயிலாகச் சுவாமிகள் மறுத்திருப்பதுகொண்டு அவரைத் துவிதவாதி யென்பது கூடாது; துவித சைவத்தையும் நன்கு கண்டித்து ஒதுக்கியிருத்தலின். மற்றவர்தந் தத்துவவிசாரணை முடிபுதா னென்னையோ? எனின், அஃது "அத்துவிதம்" என்னுஞ்சொற்பொருள் என்னலாம். ஆகவே சுவாமிகளை "அத்துவிதி," "சுத்தாத்துவிதி," "வைதிக சைவர்," "வைதிகசைவ சித்தாந்தி," "உண்மை வேதாந்தி" என்னல் சரதம்.

"சுத்தாத்துவிதம்" என்னுஞ் சொல்லின் பொருளைச் சுருதி வாயிலாக இனிது விளக்குநூலே பரிபூரணானந்தபோதம். அதன்கட் சிறப்பாக முற்படலத்துத் கூகூ - ன் உரையாயுள்ளது அனைவரும் நடுநிலைநிற்கு நெஞ்சோ டாழ்ந்தாராய்ந்து பாராட்டத்தக்கது. உள் பொருள் ஒன்றோ? இரண்டோ? மூன்றோ? ஒன்றுமின்றோ? என்பார்க்குச் சுவாமிகள் அருளிச்செய்வது: "உண்மைப்பதமாய சோற்றினைக் காணாதார் துவித அரிசியினையும், ஏகக் குழைகூழினையுமே காண்கின்றனர். உண்மைஞானமே வியவகார நெருப்பாற்றின் மயிர்ப்

பாலமாகவும், ஏகமுந் தானிதமுமே அப்பாலத்தின் இருமருங்குமாகவு நிச்சயிக்கப்படூஉ மாற்றானே அப்பாலத்தினடந்து முத்திக்கரைசேரச் சாமர்த்தியமிலார் அப்பாலமறும்படி நடைதந்தேனும், மருங்கிரண்டனுள் ஒன்றிற் காலிடுதலாற் றவறுண்டேனும் அவ்வாற்றில் வீழ்குந ராவர். அன்னோர் எம்முடைய சுத்தாத்துவித வைதிகசைவசித்தாந்த நூலுரைகளினுட்ப மறிதற்குத் தகுதியுடையாரல்லர்." என்பதாம். இதனோடு தகராலயரகசியத்தில் கஎ௫ - ஆம் பக்கம் முதல் கஅசு-ஆம் பக்கங்காறுந் தீட்டப்பட்டுள்ள அரிய விரிவுரையின்கண், முத்திநிலை, சொல்லிற் கெட்டியதன்றெனற்கு வேண்டிய பலபெரிய பிரமாணங்களை எடுத்துக்காட்டி "அற்றாகலினன்றே கல்லாலநிழற்கண் ணெழுந்தருளியிருந்த பரமாசாரியனும் எல்லாமாய் அல்லவுமாயிருந்த அந்நிலை வாக்காற் சொல்லிமுடிவதன்று; அவ்வழி அது பெறப்படுவதுமன்றென்னுங் கருத்திற் சின்முத்திரையாற் றெரித்தருளினன் சனகாதி முனிவர்க்கு. - - - - இவ்வாறு சொல்லொண்ணாததை யாதானுமொரு முடிவின்பாற்படுத் தோதுதலும் ஒருபுடை யியைபுநோக்கியே யென்பாம்." என ஆசிரியர் அறிவுறுத்திச் சேறலும், தகராலயரகசியத்தின் ஈற்றுச்செய்யுளுரையில் "வாதமுஞ் சமய பேதமுங் கடந்த மனோலய இன்பசாகரமே— ஏதுமொன் றறியேன் யாதுநின் செயலே இறைவனே ஏகநாயகனே" என்னும் பெரியார் திருவாக்கை நனி வியந்து பாராட்டியிருப்பதுஞ் சரதம்விடுத்துச் சமயவெறி பிடித்தாடுவோர்க்குச் சாந்தியுறப்பெய்யுந் தண்ணீர்போன் றுள்ளன.

இனி, சுவாமிகள் பிரமம் என்னுஞ் சிவபரம்பொருளைப்பற்றி விளக்குங்கால் அது, சீகண்டர் முதலிய பலபேர்படைத்த குணருத்திரரால் வணங்கப்படுஞ் சதுர்த்தப்பொருள் என்பதைப் பெரிதும் வற்புறுத்தியுள்ளார். தைத்திரீயாருணசாகை நாராயண வசனத்திற் காட்டியுள்ளபடி உமாபதியும், பசுபதியும், உருத்திரனும், விசுவரூபமுடைய நெற்றிக்கண்ணனுமாகிய ஒருவனே சந்திபவசனத்திற் சத்திபமாயுள்ள பரப்பிரமம் என்பதைப் பலமுதுநூல் வாயிலாக விளக்கியுள்ளார். குணருத்திரரே பரமசிவன், அவர் பத்தினியே உமாதேவி, அவருடைய புதல்வனே சுப்பிரமணியன் என்று அந்தரங்கத்திற் கொண்டுள்ளோர் கோட்பாடு தகராலயரகசிய இரண்டாங்காண்டத்து சச - ஞ் செய்யுளின் அகலவுரையிற் செவ்வனே விசாரிக்கப்பட்டுள்ளது. இதுவும் "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்— மெய்ப்பொருள் காண்ப தறிவு." என்னும் நன்னேக்க முடை

யோரால் அமைதியொடு துரபிமானமின்றிக் கருதிக்கொள்ளத்தக்கதே. சுப்பிரமணியதத்தைக்குறித்த விபாசத்தை வாசித்தலும் உண்மை தெளிதற்கு உதவும்.

இந்நூலுரைகளில் இறைவனைப்பற்றிப் பேசுமிடங்கள் பலவற்றுள்ளும் "குஹன்," "ஸுப்ரஹ்மண்யன்," "குமாரன்" என்னும் பெயர்களே அடுத்தடுத்து வருகின்றன. "துப்புரவு நாடுமிரே சுப்பிரமண்யத்தின்மேல்—எப்பிரம முள்ள தியம்பு." என்றும் ஆசிரியர் பிறிதொரு நூலில் வினவியுள்ளார். இதுகொண்டே அவரைக் கௌமார சமயத்தவர் எனல் சிறிதும் பொருந்தாது. என்னை? சிவபெருமானினுஞ் சுப்பிரமணியன் உயர்ந்தோனென்று பேதப்படுத்திக் கூறுங்கூற்றைக் கண்டிப்பது,

"சிவஞ்சத்திக் கன்னியமாய்ச சேயை யுரைப்போர்
பவம்பற்றிப் பாசறைகொள் வார்."

என்று அருளிச் செய்துள்ளாராகலின் என்க. பரம்பொருளது மூர்த்திநிலையிற் பரமாசாரியனாகிய முருகப்பெருமானது வழிபாட்டினைச் சிறப்பித்துக் கூறினுஞ் சொரூபநிலை வழிபாட்டிற் சிவகுஹ பேதஞ் சிறிதுங் காட்டாது சென்றுள்ளார். இன்னும், சமயச் சண்டைகள் ஒதுக்கற்பாலன என்பதை,

"பன்னிறப்பசுக்களிற்கறந்தபாலின்பான்மையே
என்னமூர்த்திபேதந்தானனந்தமுள்ளவெனினும்
வின்னமற்றவுண்மையால்விகற்பமின்றெனத்தெளிந்
தென்னையாளுமீசனன்பதனைநாடுவார்நல்லோர்."

என்னும் போதகசெய்யுள் போதிக்கும்.

"எம்மார்க்க மெவ்வா றியம்பினுஞ் சிவனுன்றற்
செயமாக்கு மென்பதென்றன் றீர்வை பராஞ்சோதீ."

என்று அவர் தமது பாடலிற் பாடியிருத்தலும் அவரது துணிபினை விளக்கும். "ஒதுசமயங்கள் பொருளுணருநூல்கள் ஒன்றோடொன்றொவ்வாமல் உளபலவும், இவற்றுள் யாதுசமயம்? பொருள்? நூல் யாதிங்கென்னின் இதுவாகும், அதுவல்லதெனும்பிணக்கதின்றி நீதியினாலிவையெல்லாமோரிடத்தேகாண நின்றதியாது, ஒரு சமயம், அதுசமயம் பொருள், நூல்" எனவரூஉஞ் சிவஞானசித்தித் திருவிருத்தமும், "எடுத்தவெர் மதமு நூல்கள் யாவையுந் தமவாக் கொண்டு—வடித்தநற் பொருளே தேர்ந்து வளம்பட மகிழ்வ தல்லாற்—

படித்தொரு பொருளைப் பற்றிப் பாங்கினி லதிலொ துங்கிப்— பிடித்ததே பிடித்துக் காதும் பேதைமை பெரியோர்க் கின்றே." எனவெழுமிச்செய்யுளும் இவண் நினைவிற்கு வருகின்றன. ஆராய்ச்சிசெய்தல் அவசியமே. அங்ஙனம் வாணாள் முழுவதும் பேசிப்பேசி, எண்ணியெண்ணி, எண்ணங்களாலே மண்டையை வீங்கவைத்துக்கொண்டான்மட்டும் போதுங்கொலோ? ஆராய்ச்சியின்பயன் அனுபவமன்றோ? அஃதில்வழியுள்ள கொள்கைகள் இருந்தென்? போயென்? சாத்திர ஆராய்ச்சியிற் றமக்கு மிக்காரின்றி வாழும் எத்தனையோ பெரியர்கள், இரக்கமில்லா வன்கண்ணராய்க் கூடாவொழுக்கமுடையராய்த் திரியக் காண்கின்றோம்! மேற்காட்டியபடி ஆராய்ச்சிக்களவில்லையாதலால் அவசியமான ஆராய்ச்சியைச்செய்து யாதானுமொரு நன்முடிவைக் கைப்பற்றி அதன்வழி நடந்து வாணாள் வாழ்க்கையை நடாத்தவேண்டும். இவ்வொழுக்கமாகிய பாறையின்மேல் ஊன்றி நின்றுகொண்டு, முடிவின்றி எழுந்து மோதும் ஐயம் ஆராய்ச்சி என்னும் அலைகளோடு போராடல் இழுக்காகாது. தத்துவவிசாரணை வாயிலாக வந்ததுநிச்சயஞ் செய்வதோ டமைதலை "இச்செனு மொழியைத் தானே யிரும்பஞ்ச நாரை யொன்று— நக்கிய நினைவை"ப் போன்றதென்று சுவாமிகளும் இழித்துக் கூறியுள்ளார். ஆராய்ச்சியிற்போந்த முழுமுதற்கடவுளை அனுபூதிமுகத்தா லுணர்ந்து வீடுபேறெய்துதற்குரிய உபாயங்கள் இந்நூல்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பொதுவாக, மேனாட்டுத் தத்துவநூல்களில் இத்தகைய அனுபவ ஞானத்திற்குரிய உபாயங்கள் கூறப்படவில்லை. பரதகண்டமாகிய இந்நாட்டிலேயே "பிரமானுபவப் பிரமஞானவிசாரப்பெரியோர்" அதிகமாகத்தோன்றுவர்; தோன்றித் தம்மனுபவத்தை "நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்" என்னுங் கண்ணளிகொண்டு நூன்முகமாகவும் உபதேசவாயிலாகவும் உலகினர்க்குப் பயன்படுத்தியுள்ளார். நம் சுவாமிகளுடைய நூல்களிலும் அத்தகைய உபாயங்களும், அனுபவ முறைகளும் இனிது வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றுள், பதித்தலைமைவிசாரம், யதார்த்தபாவனை, குகேசநாம (ஷடக்ஷர பஞ்சாக்ஷர ஓங்கார) மந்திரசெபம், குருதெய்வ அடியவர் வழிபாடு, பரமனந்தோன்றுங்காறும் இருதயதாமரையிற் குருவைத் தியானித்தல் என்பன தெளிவாய் விவரிக்கப்பட்டுள்ளன. இந்நூல்களுட் சதானந்தசாகரம், வாரி இரைக்கும் ஞான முத்தங்களுள் ஒன்றைப்பெறுதலும் பண்டு அருமையாயிருந்ததென்று கணிக்கவு

மிடமுண்டு. அந்தத்துறவு பெற்றபின்னர், ஆன்மலிங்கார்ச்சன மென்னுந் தாரணத்தால் மனவிருத்தி ஒடுக்கமும், அதனாற் போதாகாசத் தோற்றமும், அருளிலொடுங்கி நிற்றலால் அப்போதாகாச ஒடுக்கமும், ஆன்ம தரிசனமும், அருட்டரிசனமும், இவற்றாற் பரையோகமும், அதன்மேற்செல்லு மனுபவத்திற் பரைபோகமும், அதன் நீக்கத்திற் சுகாதீதமும் நிகழும் என்று தகராலயரகசியங் கூறும். "அகத்திற் கண்கொண்டுபார்ப்பதே யானந்தம்", "யதியாயுள்ளோன் மறுபிறப் பெய்தாதிருக்குமாறு தனது இருதயார்ச்சனத்தையே செய்தல்வேண்டும்" என்பனபோன்ற பெரியோர் மொழிவழிநடத்தல் மக்களுட் பெரும்பாலார்க்கு ஒரு பிறப்பிலேயே இயலுவதன்று என்பதுகணித்தே மூர்த்தி தல தீர்த்த வழிபாடுகளு மேற்படுத்தப்பட்டன. சுவாமிகளும், இவைபற்றை யாவர்க்கும் பயனற்றனவெனக் கழித்தாரல்லர்; ஞானத்தின் உயர்வொப்பில்லாமையை விளக்கியபின், "மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் — வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே." என்னும் அமுதமொழியைத் தழுவியே சரிதை, கிரிதை, யோக மென்பவற்றால் நல்லாசிரியன் வாய்க்குமாறும் பதமுத்திகள் கிடைக்குமாறும் நன்கு விளக்கியுள்ளார். அங்ஙனமே, முத்திவிருப்புடையோன் மூச்சடக்கும் யோகவழிச்சென்று இடர்ப்படாவண்ணம் ஆன்மலிங்க வழிபாட்டிலே தியானயோகம் விதித்துள்ளார்.

இவ்வான்மலிங்க வழிபாட்டைச் செய்தற்குரியார் யாவரென்பதைப்பற்றிச் சுவாமிகள் கூறுவன உன்னிப்பார்க்கத்தக்கவை. இவ்வழிபாட்டை முட்டின்றி இனிது முடிக்கவிழைவோர் ஐம்பெரும் பாதகங்களினின்று நீங்கித் துறவுபூணல் வேண்டும் என்றார். அகத்துறவொன்று சாலாதோ? எனின், "கண்ணன், சனகன் முதலியோரைப்போல முக்குற்றங்களு நீங்கிப் பிறந்தோர்க்குப் புறத்துறவின்றியே அகததுறவு கைகூடும்; ஏனையோர்க்குப் புறத்துறவு இன்றியமையாததே" என்று நியாயங் கூறியுள்ளார். இல்லறத்திருந்தே ஞானியாய் விளங்கலாகாதோ? என்பார்க்கு, "இல்லறத்து ஞானமது இரும்பில் (பதித்த) மணியாம்," "ஏர்க்கரம் வளார்வசி (= வாள்) பரிதவர்கள் கொல்லாரென்பதில்லை" என்னும் விடையிறுத்துள்ளார். இவண், "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற், புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்?" என்ற திருவள்ளுவர் திருவாக்கையும், "என்விடுதலே உலகத்தைத் துறத்தலிலில்லை. பல்வகைய இனிய பங்

தங்களிற் பங்கீக்கத்தை யுணர்கின்றேன் ---- என் புலன்களாகிய வாயில்களை ஒருநாளும் அடைக்க ஒருப்படேன். காண்டல் கேட்டல் தொடுதல்களால் விளையுமின்பம் நினதின்பத்தைத் தாங்கக்கூடியதே. ஆம், யானனுபவிக்கும் பொய்த்தோற்றங்களியாவும் இன்ப அறிவாய்ப் பிரகாசிக்கும்; என்னுடைய விருப்பங்களெல்லாம் அன்பெனும் பழமாய்க்கனியும்" என்று கீதாஞ்சலியிற்பாடிய (**Sri Rabindra nath Tagore**) ஸ்ரீ ரவீந்திரநாத் டாகோருடைய போக்கையும் "அறந்தானியற்று மவனிலுங் கோடி யதிகமில்லம்— துறந்தானவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்" என்ற பெரியார் கருத்தொடு பொருத்திப்பார்த்து அவைகளைக்கொள்ளுமாறு கொள்ளல் முறைமை. இனி, புறத்துறவை எக்காலத்து மேற்கொள்வது? என்னும் வினாவிற்கு நம் ஆசிரியர் "எந்தநாளில் விரத்திதோன்றிற்றோ அந்நாளிற்றானே துறவறங்கொள்க" என்னும் சுருதிவசனத்தை எடுத்துக் காட்டி விடையளித்துள்ளார். நான்காம் வருணத்தா ரெனப்படுவார் சன்னியாசிகளாதற் குரியரல்லர் எனவெழுங் கூற்றுச் சாதியபிமானந் தானிடைக்காலத்தெழுந்த தாமுழுமென்று யுக்திபுக்திகளைக்கொண்டே நாட்டினார்.

தகரோபாசனைக்கதிகாரிகளாவார் பட்டுறவும் முத்திவிருப்பும் பெற்ற ஆண்மக்கள் பெண்மக்களனைவருமே என்பதையும், பிறந்த தேசம், சாதி முதலியவற்றாலேயே இவ்வுபாசனைக்கு எவரும் தகுதியிலராக மாட்டார்களென்பதையும் ஆசிரியர் மறுக்கற்பாலா ஏதுக்களால் விளக்கியருளியுள்ளார். "தள்ளப் பாலது சாதி விகற்பமே" எனவெழுந் தகராலயரகசியப் பாயிரத்தின் ௩-ஆஞ் செய்யுளும் உரையும், நூலின் ஈற்றுச் செய்யுளும் உரையும், பரிபூரணானந்த போதத்துத் துறவறவிளக்கப்படலத்தின் ௩௧-ஆஞ் செய்யுளுரையும் "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும்" என்பதைமறந்து, சிவத்தைப் பணி செய்தியிலுங் கோத்திரமுங் குலமுஞ் சிரேட்டமெனக் கொண்டாடிச் சாத்திரம் பலபேசுஞ் சாமிகட்கு நல்லறிவு போதிக்கவெழுந்துள்ளன. சத்ததர்மமண்டலத்தாரென்பார் இப்போது வெளியிட்டு வரு நூல்களு மிவண் கருதத்தக்கன. ஞானத்திலேறுதற்கு ஒன்றற்கொன்று சோபானமாயுள்ள சரியை முதலிய மூன்றில் "யாதொரு சோபானத்தில் ஒவ்வொருவரும் ஆயுள்காறும் நிற்கவேண்டுமென்னு நியதியை யேற்படுத்திக்கொண்டக்கால், ஒருவரும் ஒருசன்மத்தும் உயர்கதி யடைவதின்றென லேற்படுதலின் அந்நியதி கூடாது; என்

னையும் என் முதலையும் அறியவேண்டும்; மேலிருங்கதி யுறுதல்வேண்டு மெனுந் துணிபு பிறந்துளார் யாவரும் இப் பிறப்பிற்றானே மேனிலை பற்றலாம்" என்று ஆசிரியர் கூறியிருப்பதும் ஈண்டு நனிவிழைந்து நோக்கற்பாலது.

சைவர்கள் சிறப்புவகையான்வழிபடுஞ் சிவபரம்பொருளைச் சைவ சமய குரவர்களே "முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்", "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" எனத் துதித்திருத்தலால், நம்மனோர் இருமொழிகளில் ஒன்றற்கு உயர்வும் மற்றதற்குத் தாழ் வுங் கற்பித்துக் களிகூர்தல் முறைமையாகாது. வடமொழிப்பற்று மிகுந்துள்ளோர் ஆரியருழைத் தமிழர் ஞானங் கற்றார்களென்பர். ரிச்சர்ட் கார்ப் (Prof. Richard Garbe) முதலியோர் பிராமணவகுப் பைச் சேராத இராஜன்யர்பால் பிராமணர் பிரமவித்தையை உணர்ந் தனர் என்றுரைப்பர். ஒருவர்பாலொருவர் கற்றதின்று, இருகூட்டத்தா ரும் இறைவனருளாலே தனித்தனி உண்மையுணர்த்தப் பெற்றார் எனச் சிலர் சொல்லுவர்போலும். சரித்திரவாராய்ச்சிக் கெட்டியமட்டில், ஆரியர் திராவிடர் எனத் தனித்தனி இருவேறு கூட்டத்தார் இந்நாட்டி லெக்காலத்தேனும் இருந்ததுண்டோவென் றையுறுவர் மற்றும் பலர். இவ்விருகூட்டத்தாரு மிவ்வாறிருந்தார்களெனக்கொண்டு "திராவிடர் களது கற்பனை வன்மையும், அழகு, இன்னிசை, அன்பென்பவற்றால் நெகிழுநெஞ்சும், ஆரியர்களது சுத்த ஞானமுங் கலந்ததன்மையே இந்துக்களின் சமயவுயர்விற்குக் காரணம்" என்பர் ஸ்ரீ ரவீந்திரநாத் டாகோர் (Sri Rabindranath Tagore). இக்காலத்தே இவைகளில் எக்கருத்தைச் சரியென்று உறுதியாகச் சொல்ல முடியும்? (முடியா தென்பதே ஏற்படும்போலும்.) இனி, வடமொழி தென்மொழிகளின் தோற்றத்தை விவகரிக்கப்புகுந்து, வடமொழியே உலகிலுள்ள எல்லா மொழிகட்குந் தாய் என்று சிலர் வடமொழி மதம்பிடித்துக் கூத் தாடாநிற்ப, இதற்கு விடையிறுக்குமுகத்தாற் சிலர் "செந்திறத்த தமிழோசை வடசொல்" ஆயிற்றென்றும், (Lemuria) லெமூரியா (= குமரி) நாடிருந்தகாலத்து மேருவும் வடவிந்தியாவுங் கடற்கீழ்க் கிடப்ப, இவ்வுலகின்கண் மக்கள் முதன்முதற்றோன்றி வாழ்ந்தது தமிழகமாகிய அக்குமரிநாட்டிலேயே யாகலின் தமிழ்தான் மற்றெல் லாமொழிகட்குந் தாயென்றுஞ் செறுக்குடன் செப்புவர். இவ்வி சாரத்தில் நாம் நிச்சயமாய்ச் சொல்லக்கூடியது அதிகமன்று. தகரா லயரகசியவுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள,

" மாதிபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
அந்தகர்க்கெளியேனலேன் திருவாலவாயரனிற்கவே "

என்னுந் தமிழ்வேதப்பகுதியை உய்த்துணரின், இருமொழிகளு மிருகண்கள் போன்றவையென்பதும், அவையிரண்டுமில்லோர் குருடர்போல்வர் என்பதும், ஒன்றேயுடையோர் ஒற்றைக்கண்ணரை நிகர்ப்பர் என்பதும் ஞானசம்பந்தப் பெருமானது திருவுளக்கிடக்கை என்று நன்கு விளங்கும். இருமொழிகளும் பண்டைப் பெருமொழிகளே. அவை வெவ்வேறு பாடைகளென்றே துணிவு கூறலாம்.

ஆன்மலாபத்திற்குரிய ஆராய்ச்சியைச்செய்ய முற்பட்டோர்க்கு இவ் விவாதங்கள் வேண்டற்பாலன வல்ல. " 'அறி' என்னும் அருத்தந்தருமொரு வடமொழித் தாதுவினடியாகப் பிறந்த 'வேதம்' என்னுஞ் சொல், இந்துக்களுடைய (வடமொழி நூல்களின்) பிரதம உரையாசிரியர் கருத்தின்படி, இன்றுகாறும் வெளியிடப்பட்டதும், இனி வெளிப்படுவதுமாகிய ஐம்புலன்கட்கெட்டா அறிவு என்று பொருள்படும். இவ்வறிவைப் பேணிவந்த நூல்களுக்கு வேதங்கள் என்னும் பெயர் பிற்காலத்திற் கொடுக்கப்பட்டது. இஞ்ஞானம் இந்துக்களுக்குமட்டுமன்று, ஏனையோர்க்குங் கிடைக்கக்கூடியதொன்றே; இவர்தம் மனுபவங்களையும் வேதங்கள் என்றே கருதல்வேண்டுமென்று மேற்குறித்த (உரையாசிரியராய) வேதபாஷ்யகாரர் பின்னுங் கூறிச் செல்லுகின்றார்." என்பர் சுவாமி - சாரதானந்தர் (Swami Saradananda). உண்மை இஃதாயின் வேதங்கள் எம்மொழியிலிருந்தாலென்னை? பலமொழிகளிலுமுள்ள நல்லகருத்துக்களை விரும்பிப்போற்றலே நம்மனோர் கடமையாம். ஆங்கிலத்திலுள்ள "The Sacred Books of the East" என்னும் புத்தகங்கள் எவ்வாறு வெளியாயின என்பதையும் நோக்குவோமாக.

மேற்கூறியவாற்றால், நம் தமிழ்நாட்டுச் சைவ நன்மக்கள் தமிழையும் ஆகமங்களையுங் கற்றன்மாத்திரையே நில்லாமல் வடமொழிக்கணுள்ள ஏனைய உபநூல்களையும் இயன்றவளவும் பயிலவேண்டுமென்பதும், அவ்வாறே வடமொழிகற்றோர் தம்மாலியன்றவரையுந் தமிழ்மொழிக்கண் விளங்கும் அரிய நூல்களையுங் கற்றல்வேண்டுமென்பதும் வலியுறுத்தப்பட்டன. இவ்வாறுசெய்வதால் அறிவு விசாலமும், தெளிவும், இந்துக்களுக்குள் ஒற்றுமையும் பிறக்கும். இக்காலத்து மேனாட்டு ஆசிரியருட் பலருடைய பரந்த கல்வி கேள்வி

களும், உண்மை தெளியுமாற்றலும், ஒருமொழியே கற்றுத்தேர்ந்த நந்நாட்டு வித்துவ சிரோமணிகள் பலருடைய குறுகிய அறிவும், குழப்பமும் பலர்க்குந் தெரிந்தவையே. வடமொழி தென்மொழிகளிலுள்ள நல்ல ஞானநூல்களனைத்தையுங் கற்க விருப்பமிருந்தும் ஆற்றலும் ஏற்புடையுதவிகளுமில்லாது வருந்துவோர்க்கு நம்முடைய சுவாமிகள் அருளிச்செய்துள்ள நூல்கள் பெரும்பயன் தருவனவாம். தமிழிலுள்ள சிறந்த ஞானநூல்களைத் திருவாய்மலர்ந்தருளிய பெரியோர் வேதாகமாதி சாத்திரங்களையு முணர்ந்தவரென்பது மலையிலக்கே. ஆயினும், "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்" என்னுமுண்மையை இனிதெடுத்து விரிவாகவுந் தெளிவாகவும் விளக்குவன சுவாமிகளுடைய நூல்களேயன்றி, அப்பண்டைத் தமிழ்நூல்களினுமுரைகளிலும் பலவிருப்பனவாகத் தெரியவில்லை. அச்சியந்திரம் நமதுநாட்டினை யெய்துமுன்னரே, தமிழ்நூல் செய்யப்புக்கோர் வேதவசனங்களை மிகவுமெடுத்தாளாது விடுத்தமைக்குப் போதிய காரணங்கள் முன்னிருந்தனவாகலாம். சுவாமிகளுடைய நூல்கள் வேதத்திற் சைவர்கட்கிருக்கு முரிமையை இனிது புலப்படுத்தியதுபோலவே தமிழ்நன்குணரா வடமொழிவாணர்க்குத் தமிழ்நாட்டு ஞானிகளதனுபவமும் உபநிடதமோதிய பெரியாரதனுபவமும் ஒன்றேயென்றறிவுறுத்துமாற்றானே தமிழ் முதுமக்களின் பெருமையையு முணர்த்துந் திறத்தனவாம். இதுவேயுமன்றிச் சுவாமிகளுடைய வுரைகள் இருமொழிகளிலுமுள்ள ஞானசாத்திரங்களைக் கற்குங்கால் மனத்தெழூஉம் பலதிறப்பட்ட ஐயங்களென்னும் பனித்திரள்களை யோட்டுஞ் சூரியனாகவும், அத்திற ஐயமொருவியவிடத்தே பெருகு நித்திய வின்பக் கடலாகவு மிருக்குமென்பதில் ஆசங்கையில்லை. இக்காலத்துப் பலராலுந் திரிபுறக்கொள்ளப்படும் உபநிடத உபமானங்களை உண்மை புலப்படவிளக்கினமையும், திருவாசக இருதய சுலோகத்திற்கும், "சோதியே, சுடரே, சூழொளி விளக்கே" என்னும் விளிகட்கும், "மரத்தை மறைத்தது" "பொன்னை மறைத்தது" எனவரு மந்திரங்கட்கும் விரிவுரை செய்துள்ளமையும், சிவசம்பந்தத்திற்கு இருவித அக்கினி உவமை கூறினமையும், அடிபார்பூசையி னுண்மை யீதென விளக்கினமையும், இன்னோரன்னபிறவும் ஆசிரியருடைய மதிநுட்பத்தினையும் நூலாராய்ச்சியினையு மினிது விளக்குவனவாம். சுவாமிகள் இவ்வாறு சைவசித்தாந்தத்திற் காதாரமான பிரபலச்சுருதிகளை அதிகமாகவெடுத்துதவிப் பிரமசூத்திரமும் நீலகண்டபாடியமுஞ் சைவசமயக் கோட்

பாடுகளுக்கு முரண்செய்யா தரண்செய்வனவே எனப் பிரமாணவாயிலாகச் சாதித்தருளியதற்காகத் தமிழ்நாட்டுச் சைவநலங்கிளர்ந்தார் யாவரும் சுவாமிகள்பால் நன்றி பெரிதும்பாராட்டக் கடமைப்பட்டுள்ளாரே. "நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்ல தன்றே மறப்பது நன்று." என்பது விதியன்றோ.

இனி, தற்கால நாகரிகத்திற்குப் பொருத்தமில்லாததுபோலத் தோன்றுஞ் சமயசம்பந்தமான இரண்டொருவிடயங்களைக் குறிப்பிட்டு இம் முன்னுரையை முடிப்போமாக:

(க) மேனாட்டுத் தத்துவநூல்களை யாராய்வோர்க்கு நந்தேயத்திலே தத்துவவிசாரணையும் சமயமும் உலகவாழ்க்கையும் ஒன்றிலொன்று புகுந்து நிற்பனவாய்க் காணப்படுதலும், உரைமனங் கடந்துதோன்றும் உயர்வொப்பில்லாப் பிரமானுபவம் ஒன்றுண்டென்பது பெரிதும் வற்புறுத்தப்படுதலும் நன்கு தெரியவரும். இவ்வாக்கு மனங் கழியநின்ற அனுபவ உண்மை மேனாட்டு விவேகிகளுட் பெரும்பாலாரால் ஒத்துக்கொள்ளப்பட்ட தொன்றன்று; இதற்கு "மிஸ்டிஸிஸம்" (Mysticism= மனிதரது இயற்கை யறிவாராய்ச்சிக் கெட்டாத அனுபவமொன்றிருப்பதெனுங் கொள்கை) எனப் பெயரிட்டுத் தத்துவவிசாரணையிற் புறக்கணித்தே பேசுவர். டாக்டர் மாக்ஸ் நார்டௌ (Dr. Max Nordoux) முதலியோர், இவ்வனுபவம் ஒருவகை மனோவியாதியா லேற்பட்டதாமென இழித்துக் கூறுவர். அனுபவஞானம் இற்றெனவனுபவித்தறியார் குழுமிய அந்நாட்டிற்றோன்றிய அன்னோர்க்குப் பிரமானுபூதி நிட்டை ஒருவகைப் பித்தமெனத் தோன்றுதலியல்பே. ஆயினும், அங்கும் இத்தகைய (ஞானப்) பித்தர்கள் சிலர் உளர். அனுபவஞானிகள் நோயாளிகளல்லர், நினைத்தது முடிக்கும் பேராற்றலும், எல்லையில்லா அறிவுமுதிர்ச்சியுந் தண்ணளியுமுடைய பெருமக்கள் என்பது இன்றும் நந்நாட்டிற் காணக்கூடியதே.

(உ) இதுவேயுமன்றி, நம்முடைய ஞானநூல்கள்பலவும் முப்பொருளியல்பை முழக்கி, நிலையாமைகளை நிகழ்த்தி, "ஊன்கெட்டு, உயிர்கெட்டு, உணர்வுகெட்டு, என் உள்ளமும்போய், நான்கெட்ட" நிலையென்பதே யாவரும் நண்ணற்பாலதென நவிலும். இன்னணமொவ்வோரான்மாவும் 'அந்தமிலின்பத் தழிவில்வீடெய்தி' ஆனந்தப் பிழம்பாய்த் திகழ்தலை முற்குறியாகக் கொள்ளவேண்டுமென்னில்,

அதுவு மொருவகைத் தற்பயன்நாடுந் தாழ்குணமே என்பர் தற்கால வாராய்ச்சிமுடிபிற் றலைநிற்பார் சிலர் பலர். அகத்தும் புறத்துந் தூய்மையுடையராய்த் "தாமக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்" என்றுங்கு நிற்பதே முத்தர்களதிலக்கணமென்பது அவர் துணிபாகும்.

இவ்விருதிறமுந் தம்முண் முரணுவென்னு முடிபே எமது கருத்திற் பொருந்துகின்றது: கடவுளிடத்தன்பும் உயிர்களிடத்தன்பும் முற்றிலும் வெவ்வேறுய குணங்களாகா; ஒன்றைவிட் டொன்றுநில்லா நெருக்கமுடையனவே. கீதாரஹஸ்யத்தில் ஸ்ரீ பாலகங்காதர திலகர் பெரிதும் வற்புறுத்தியுள்ள கருமயோகவுண்மையும், திருவாசகத்துக் குழைத்தபத்தில் விளக்கப்பட்டுள்ள ஆன்மநிவேதனத்தியல்பும், "இறைபணி நிற்றல்," "பராபரசன் பணியல தொன்றிலா"மை என்பவற்றின் உண்மைக்கருத்தும் மேற்காட்டப்பட்டதோ டியைபுடையன. "எனதன்பை மன்னுயிர்க் கிதஞ்செய்யதற்குப் பயன் படுத்திக்கொள்ளும் ஆற்றலை அடியேற்குத் தந்தருளும்; - - - - எனது சக்தியைத் தேவரீரது திருவுளக்கிடக்கையின்வழி அன்பொடு சமர்ப்பிக்கும் திடந்தை நல்கியருளும்" என்று ஸ்ரீ ரவீந்திரநாத் டாகோர் (Rabindranath Tagore) செய்துள்ள தெய்வப்பிரார்த்தனை புதுவதன்று.

"சில நூல்கள் சுவைபார்த்தற்குரியன, சில விழுங்கத்தக்கவை, மற்றுஞ்சில மென்றுதின்று ஜீரணஞ்செய்துகொளற் கேற்புடையன." என்றுர் பேகன் (Bacon). நம் ஆசிரியரது போதமும் இரகசியமும் ஈற்றிற் கூறியபடி கசடறக் கற்கவேண்டிய உண்மை நூல்களே. வடமொழி தென்மொழி வேதம் முதலிய பிரபலப் பிரமாணங்களின் ஆதாரமும் அநுபவமுங் கொண்டொளிர்தரு மிந்நூல்களின் முக்கிய இலக்ஷியஞ் சரியானதென்றுணர்ந்த நன்மக்களெவரும் தாமுணர்ந்தவாற்றல் அவ்விலக்ஷியத்தை யடைதற்குரிய நல்லாற்றி னிலைநின்று உய்திபெற முயல்வது கடன். அங்ஙனஞ் சேறல் தவிர்ந்து, பாற்கடல்வாழு மீனேபோல் தாம் பாராட்டற்குப் பழிகிடைக்குமோவெனத் தேடித்திரிகுநரு முளராயின் அவர்தஞ் சிறுசெய்கை பெரியோராற் பாராட்டப்படாதொழியும். என்னே? "அவமதிப்புமான்ற மதிப்பு மிரண்டு மிகைமக்களால் மதிக்கற்பால" என்னு முதுமொழிப்பொருளை அப்பெரியா ரோர்ந்துளோராதலானும், அவரது செய்கை, தற்பயன் சிறிதும் விரும்பாது இறைவன் றிருவருள்வழி

நிகழ்ந்ததொன் றாதலானும், அவர் மில்ட்டன்— (Milton) "முதிர்ந்த ஆன்மாக்களைக் கடைசியாய்விட்டு நீங்கும் பிணியாகிய புகழ்விருப்பு" எனப்படுவதைக் கீழ்ப்படுத்து மேனிலை நிற்போராதலானு மென்க.

"உலகினர்க்குப் பெருநன்மை செய்தவர்களுள் எவனது கருத்தையும் மனிதர்கள் உள்ளபடி அறிந்துகொண்டது மில்லை, அவனைப்பற்றி உள்ளவாறு பிறர்க்குத் தெரிவித்தது மில்லை."

என்று இங்கிலாந்திற்குப் பேருபகாரஞ் செய்து பெரும்புகழ் படைத்த கிளாட்ஸ்டன் (Gladstone) என்னும் மந்திரி கூறிய வுறுதிமொழியையும் இவண் ஞாபகப்படுத்திக்கோடல் ஏற்புடைத்து.

பரிபூரணானந்தபோதச் செய்யுள்களின் மாண்பிற்குத் தகராலய ரகசியத் திருப்பாட்டுக்களின் செம்மை பின்வாங்குவதன்று. அப்போதச்செய்யுட் டிறங்களை அந்நூன்முகவுரை கூறுவதுகொண் டுணரலாம். இத்திற நூல்களுக்குப் பொழிப்புரை யியற்றினோர், விருத்தாசலம் - தியாகராஜகவிராயர் குமாரராகிய ஸ்ரீமான் - வி. கலியாணசுந்தரம்பிள்ளையவர்கள், B. A. சுவாமிக ளருளிச்செய்த 'ஜீவபாதனு விபாசப்' என்னும் வேறொரு நூலுக்குப் பொழிப்புரை செய்தது மிவரே. இவ்வுரைக் கண்ணுறுவோர்க்கு அவருடைய கல்வி கேள்விகளின் மாண்பும், சித்தாந்த நூலாராய்ச்சித் திறனும், சைவசமயப்பற்றும் இனிது விளங்கும். இவர், நூலாக்கியோர் செய்யுட்களமைந்த கருத்துக்களை மிகக் கவினுற வுரைநடைப்படுத்துள்ளார். இவரது பொழிப்புரை, பதவுரையின் முழுப்பாங்கையுங் கொண்டியங்குகிறது. சொல்லானும் பொருளானு முயர்வுடையனவாகச் சுவாமிகளருளிச்செய்த இருபேருரைகளும் நந்தாய்மொழியி னாற்றலைக் காண விரும்புவோரைக் களிக்கவுஞ் செய்வன.

இஞ்ஞானநூல்கள், வைதிகசைவ சமயிகளுக்குள்ளும் வேறு சமய விவேகிகளுக்குள்ளும் ஒற்றுமைநயத்தை யோங்கச்செய்து, எம்மனோரது ஆன்ம அறிவைப் பெருக்கி, உயரிய அனுபவ விழுப் பயனை விளைவிக்குந் தன்மையவா மென்னுமொரு முடிபே யிங்ஙனங் கூறத்தக்கதாகலின், இவைபோன்ற நல்ல நூல்களெவையு நலிவுறாது நின்று நாடோறு நன்மை பெருக்குமாறும், அத்தகைய நூல்கள் நந்தமிழ்மொழியி லொன்று பலவாய்ப் பல்குமாறும், வேண்டுவார்

வேண்டுவதே யீயும் விமலனும் முருகப்பெருமான் வியனருள் புரிவானாக.

"பன்னிரு தடந்தோ ளெந்தை பாதமென கமலம் வாழ்க
தென்னவிர் திருவ தேவ சேனையாங் குறமின் வாழ்க
மின்னயி னவிரம் வாழ்க வியனரு ணகிரி வாழ்க
பன்னருட் குரவர் வாழ்க பரிவுடைச சீடர் வாழ்க."

இராயப்பேட்டை,
சென்னை.
*19-11-16.*

இங்ஙனம் :
**ச. சச்சிதாநந்தன்.**

இம் முன்னுரை யியற்றினோர் — சென்னை - வெஸ்லிகாலேஜில் தர்க்க போதகராயிருந்த ஸ்ரீமான் - S. சச்சிதாநந்தம்பிள்ளையவர்கள் B.A., L.T.

இங்ஙனம் ·
ஸ்ரீமத் - சுவாமிகளுடைய
சீடர்களிலொருவனாகிய
குமாரமூர்த்தி.

திருவல்லிக்கேணி,
சென்னை.
*9-12-1916.*

ஓம்

குமாரகுருப்யோநம:

# நூலாசிரியரதுரைப்பாயிரம்.

" போனகான் முயலே பெரிதெனப் பேசிப்
புலம்புதல் போலமுன் னாளில்
மானமின் றெழுதி வைத்தபுத் தகங்கோ
மான்களே பெரியரென் றுயர்த்தி
எனைவல் லவரை யிகழுமிந் நாளி
லேழையே னறைகடோன் னூலில்
தேனென வினிக்கு முடிபென வுணர்கே
தெரியுமென் சிதம்பர சிவமே." [திருப்பா ௧௦. ௫.]

தசகாரியரகசியமென்னும் பெரிய நூலின் மூலத்திற்கு உரையாயுள்ள சதானந்தசாகரத்தே தொடக்கந்தோறும் பெரியவெழுத்தா லிடப்பெற்ற பொழிப்புரையின் அடியிலுள்ள விசேடவுரை நூலாசிரியராய எம்மாலேயே செய்யப்பட்டது. நன்னூலுக்குத் தகுமுறை செய்தோன் என்னும் பொருளிலே "தகுமுறைகாரன்" எனவரும் விதியினைத் தழுவுதற்கும், நவில்வோர்க்கினிமை பயக்குமாறு மூலத்தை விரிந்து விளங்க வேண்டுழி வேண்டுழி அமைவுறவிளக்குதற்குமே அவ்வுரை, பிறரொருவராற் செய்யப்பட்டதுபோல நிகழ்த்தப் படுவதாயிற்று. தன்னைத்தானே பிறன்போற் கூறிக்கோட லென்னு மொரு நியாயமும் —

" அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவனறன்னை
ஒருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே."

எனவரூஉம் திருஞானசம்பந்தப்பெருமானது திருவாக்காகிய திருமறைநெறித்தாம். திவாகரர் முதலாயினோரும் இந்நியாயங் கொண்டுளாரே. மூலஞ் செய்தோனே யுரையுஞ் செய்தல் வட நூலார் வழக்

காம். இதனை, "வடநூலார் தாமே பதிகமு முரையுஞ்செய்வார்" எனப் பிரயோகவிவேக நூலுடையார் கூறுதல்கொண்டு மறியலாம். (பதிகம்=பாயிரம்.)

பாயிரத்து உ - ன் உரையிற் பணித்தவாறு வித்தை பதினெட்டினும் வேதமே சிறப்புடைப் பிரமாணமென்றல் பரதகண்டத்துப் பண்டைநூலறிவுடையார் யாவரு மொப்புமொரு முடிபினை யேன்று கொள்ளும் எம்மாலும் அச்சிறப்புடைப் பிரமாணங்களே இந்நூலுரைகளிற் கொன்னும் பிரமாணிக்கப்பட்டன. ஞானமென்பது தகராகாச ஆன்ம அறிவாயிருத்தலின், அதன்வழியே அனுபவப் பிரமஞானமடையத்தக்கதென்னும் உண்மையை உபாசனை முதலிய பலவுபாயங்களாலும் விதிக்கும் (வேதத்தின் ஞானகாண்டமாகிய) நூற்றெட்டுபநிடதங்களும் பிரமஞானிகளுடைய திருவாக்குகட்கியைய மனேயையமொன்றே அங்ஙன் வேண்டற்பாலதென் றொருங்குகூறநின்ற சாதிக்கு மவைகளினும் பெருநூல் பிறிதொன்றின்றென்பதூஉம் அறிவிலக்கண முணர்ந்தாரெல்லா மறியக்கிடப்பதொன்றாம். சைவருள், இப்பிரமாண மொரம்பு புலங்கொளவறியாச் சிலர் பலர், வேதம் யஞ்ஞவாயிலாக உயிர்வதைசெய்து ஊனுங் கள்ளு முண்ணுமாறோதும்; ஆகமம் அவ்வாறோதாதென்றும், வேதம் பலதேவ வழிபாடுகளைப் பகரும்; ஆகமம் ஒருதேவவழிபாடாய சிவாராதனையையே யுரைக்குமென்றும் பிரசங்கிக்கும்வழி வேதத்தை யிழித்துக்கூறுமொரு கொள்கையினையே தொழிலாகவுடையாரென்பது இத்திராவிடதேயத்தார் பலருமறிந்ததேயாம். இன்னோர், காமிகாகமம்—

(
[illegible]
[illegible]

சாமுத்ரம் ப்ருங்கராஜாய
மத்ஸ்யம்மத்ஸ்யோதநம் ம்ருகே, தத்யாத்)

"பிருங்கராஜனுக்குச் சமுத்திரத்து மீனையும், மிருகர்க்கு மீனோடுகூடிய அன்னத்தையுஞ் சமர்ப்பிக்கவேண்டும்"

(
[illegible] - - - - - - - - - - -
[illegible]

ருத்ராயமாம்ஸமந்நம்ஸ்யாத் - - - - - - - - - - -
ஆபாயமத்ஸ்யம்மாம்ஸஞ்ச சாபவத்ஸாயதாபவேத்।)

" உருத்திரனுக்கு மாமிசமும் அன்னமுமாம். ஆபருக்கு மீனையும், ஆபவற்சருக்கு மாமிசத்தையுஞ் சமர்ப்பிக்கவேண்டும் "

(வ்ரு தம்ஶாம்ஸம்சரக்யைச ஶூலஸ்தாயைஶிவாஶ்ரிதாঃ ।

க்ருதம்மாம்ஸஞ்சரக்யைச சூலஸ்தாயைசிவாச்ரிதாঃ ।)

" சிவனையடுத்திருப்போர் (= சிவபக்தர்), சூலத்திலுள்ள சரகிக்காக நெய்யையும், மாமிசத்தையுங் கொடுத்தல்வேண்டும் "

(ஶாம்ஸாந்நம்ஸ்யாத் க்ருஹேஷு

மாம்ஸாந்நம்ஸ்யாத் க்ருஹேஷு ।)

" வீடுகளில் மாமிசஅன்னமாம் "

(அஷ்டாநாம்பாஹ்யதேவாநாம் ஶாம்ஸாந்நம்பலிருச்யதே ।

அஷ்டாநாம்பாஹ்யதேவாநாம் மாம்ஸாந்நம்பலிருச்யதே ।)

" பாகிய தேவதைகளாய எண்மருக்கும் மாமிசஅன்னம் பலியாகப் பகரப்படுகின்றது "

(ஹவிஷ்யம்தேவபவநே ஶாம்ஸாந்நம் ராஜமந்திரே ।
மத்யம்ஶூத்ரக்ருஹேப்ரோக்தமந்யத்ரமதுகல்பயேத் ॥

ஹவிஷ்யம்தேவபவநே மாம்ஸாந்நம் ராஜமந்திரே ।
மத்யம்சூத்ரக்ருஹேப்ரோக்தமந்யத்ரமதுகல்பயேத் ॥)

" தேவக்கிருகத்தில் அவிசும், இராசக்கிருகத்தில் மாமிச அன்னமும், சூத்திரக்கிருகத்திற் கள்ளுங் கொடுக்கும்படி கூறப்பட்டது. ஏனையிடத்திலே தேன்சேர்த்துக் கொள்ளலாம் " என வாஸ்துதேவ பலிபடலத்திலும்,

(லலாடபாஹ்வோர்ஹ்ருந்நாபி பஞ்சஸந்திஷுவாபவேத் ।
ஶிவேஶருத்ரக்ருஷ்ணாத்மபுவாஞ்சப்ரீதிஸித்தயே ॥

லலாடபாஹ்வோர்ஹ்ருந்நாபி பஞ்சஸந்திஷுவாபவேத் ।
சிவேசருத்ரக்ருஷ்ணாத்மபுவாஞ்சப்ரீதிஸித்தயே ॥)

" சிவன், ஈசன், உருத்திரன், கிருட்டிணன், (ஆத்மபுவா =) பிரமன் என்னும் இன்னோரது பிரீதி சித்திக்கும்பொருட்டு நெற்றி, கைகள், இருதயம், நாபி ஆகிய இவ்வைந்து சந்திகளிலும் பஸ்மதாரணஞ் செய்தல்வேண்டும் " என ஸ்நாநவிதிபடலத்திலும்,

(கணபம்பாரதீமூர்த்வே நந்திநம்ஜாஹ்நவீயுதம் ।
மஹாகாளேநயமுநாம் ஸவ்யேஸவ்யேஸமர்ச்சயேத் ॥
கணபம்பாரதீமூர்த்வே நந்திநம்ஜாஹ்நவீயுதம் |
மஹாகாளேநயமுநாம் ஸவ்யேஸவ்யேஸமர்ச்சயேத் ||)

"மேலிடத்தே கணபதியையும், சரசுவதியையும்; சானவியோடு கூடிய நந்தியையும், மகாகாளனுடன் யமுனையையும் வலப்பக்கத்தும் இடப்பக்கத்தும் அருச்சித்தல்வேண்டும்"

(மண்டலத்ரயமர்க்கேந்து வஹ்நயாக்யம்ஸ்வஸ்வரூபத: ।
தளாந்தம்கேசராந்தஞ்ச கர்ணிகாந்தம்ப்ரகல்பயேத் ।
ப்ரஹ்மாவிஷ்ணுச்சருத்ரச்ச மண்டலத்ரயதேவதா: ॥
மண்டலத்ரயமர்க்கேந்து வஹ்நயாக்யம்ஸ்வஸ்வரூபத: |
தளாந்தம்கேசராந்தஞ்ச கர்ணிகாந்தம்ப்ரகல்பயேத் |
ப்ரஹ்மாவிஷ்ணுச்சருத்ரச்ச மண்டலத்ரயதேவதா ||)

"சூரியன் சந்திரன் அக்கினி யெனப்பட்ட மும்மண்டலங் களையுந் சுவசுவரூபத்தோடு இதழீறாகவும், கேசரமீறாகவும், கர்ணிகையீறாகவும் (ப்ரகல்பயேத் =) தியானித்தல்வேண்டும். பிரமனும், விட்டுணுவும், உருத்திரனும் (அந்த) மும்மண்டல தேவதைகள்"

(ப்ரஹ்மாணம் - - - - த்யாத்வாபத்ரேஷுவிந்யஸ்ய
ஸர்வகில்பிஷநாசநம்
ப்ரஹ்மாணம் - - - - த்யாத்வாபத்ரேஷுவிந்யஸ்ய
ஸர்வகில்பிஷநாசநம்)

"எல்லாப்பாவங்களையுங் களைபவனுமுள்ள பிரமதேவனைப் பத்திரங்களின் விந்யஸித்துத் தியானிக்கவேண்டும்"

(யஜேதிந்த்ரம் - - - - ஈசாநம் — யஜேதிந்த்ரம் - - - - ஈசாநம்)

"இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானனென்னும் திக்குப்பாலகர்களைப் பூஜித்தல்வேண்டும்"

(சக்ரபாணிநம், ப்ரஹ்மாணம் - - - - - - - -
ஸம்யஜேத்ப்ராஜ்ஞ: ஸ்வஸ்வநாமாதிசாக்ஷரை:
சக்ரபாணிநம், ப்ரஹ்மாணம் - - - - - - - - - - -
ஸம்யஜேத்ப்ராஜ்ஞ: ஸ்வஸ்வநாமாதிசாக்ஷரை:)

"புத்தியுடையோன், விட்டுணுவையும் பிரமனையும் அவரவர் பெயர்முதலிய அக்கரங்களாலே (ஸம்யஜேத் =) பூஜித்தல்வேண்டும்"

(𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑍇 𑌯𑌜𑍇𑌦𑍍𑌵𑌜𑍍𑌰𑌂 𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌂 𑌷𑌡𑌶𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌅𑌗𑍍𑌨𑍌 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌸𑌰𑌕𑍍𑌤𑌾𑌭𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 ॥
𑌨𑌿𑌰𑍃𑌤𑍌 𑌨𑍀𑌲𑌖𑌡𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌶𑍍𑌵𑍇𑌤𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌤𑍁 𑌵𑌾𑌰𑍁𑌣𑍇 ।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌧𑍍𑌵𑌜𑌂 𑌤𑍁 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌾𑌂 𑌹𑍇𑌮𑌾𑌭𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍇 𑌗𑌦𑌾𑌮𑍍 ॥

பூர்வபாகேயஜேத்வஜ்ரம் பீதவர்ணம்ஷடச்ரகம் |
அக்நௌசக்திம்ஸரக்தாபாம் க்ருஷ்ணந்தண்டந்து தக்ஷிணே ||
நிருதௌநீலகட்கந்து சவேதம்பாசந்துவாருணே |
சித்ரத்வஜந்துவாயவ்யாம் ஹேமாபாமுத்தரேகதாம் ||)

"பூர்வதிக்கில் மஞ்சணிறமும் அறுகோணமுமாயுள்ள வச்சிராயுதத்தைப் பூஜித்தல்வேண்டும். அக்கினிதிக்கில் மிக்க செந்நிறச் சத்தியையும், தக்கிணதிக்கிற் கருநிறத் தண்டத்தையும், நிருதிதிக்கிற் கருநிறக் கட்கத்தையும், வருணதிக்கில் வெண்ணிறப்பாசத்தையும், வாயுதிக்கிற் சித்திரத்துவசத்தையும், உத்தரதிக்கிற் பொன்னிறக் கதையையும் பூஜித்தல்வேண்டும்." என அர்ச்சநவிதிபடலத்திலுங் கூறிய முறைமைகளானே ஊனுங் கள்ளு முண்ணுமாறோதலும், பலதேவ வழிபாடுகளை விதித்தலும் ஆகமத்திற்கு முடம்பாடேயென்பதையும், வேதம் ஆகமமென்னும் இவ்விருதிற நூல்களின் கன்மகாண்டங்கள் ஊன்முதலியன வுண்டற்குரிய கன்மங்களையும் கன்மசம்பந்தமான பலதேவவழிபாடுகளையும் விதிக்கினும் ஞானகாண்டங்கள் அவ்வாறு விதியாவென்பதையும், நான் முதலாங்காண்டத்து ௩௬-ன் உரையகத்து விளக்கியபடி யாஞ்ஞபதாத்தங்களுஞ் செயல்களும் ஞானயோக அங்கரியாகத் தமைகின்றன வென்பதையும் இனியேனு மறிந்து வேதநிந்தை புரியாதிருத்தல் நலனாம். என்னை!

"ஒப்பிலி யனாதி முதற் சேதிய வேத மாதிக்
கொப்புயர் வுரைப்பார் நிந்தை யுரைப்பவ ருன்னு வாரும்
வெப்பெரி நிரயந் தன்னுள் வீழ்ந்துவெந் துருகி வீயா
தெப்பொழு தேறு வாமென் றிளைதிளைத் தேகு வாரே."

"என்றோதுமாற்றானே சிவதருமோத்தராகமமானது வேதநிந்தையாளர்க்கு எரிவாய் நரகானுபவம் விதிக்கின்றதாகலின். இங்ஙனம், ஆகமம் பலதேவ வழிபாடுகள் பகரினும் பரமசிவனையே முதற்

கடவுளர்கக் கோடல்கூறு மென்பார்க்கு, பிரமம், சிவம், சம்பு, ஈசன், உருத்திரனென்பன முதலிய வாசகங்கட்கு வாச்சியமாயுள்ள பெரிய கடவுளையே சருவதேவர்கட்குந் தலைமைத்தெய்வமாக வேதம் விளம்பு மென்பதை,

(𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍇
𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌹𑌭𑍂𑌤𑍈𑌰𑍍𑌨𑌕𑌾𑌰𑌣𑌂
𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌾𑌂𑌧𑍍𑌯𑌾𑌤𑌾𑌕𑌾𑌰𑌣𑌂𑌤𑍁 𑌧𑍍𑌯𑍇𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯
𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌶𑌂𑌭𑍁 𑌰𑌾𑌕𑌾𑌶𑌮𑌧𑍍𑌯𑍇)

*ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே*
*ஸர்வாணிசேந்த்ரியாணி ஸஹபூதைர்நகாரணம்*
*காரணாநாம்த்யாதாகாரணந்து த்யேயஸ்ஸர்வைச்வர்ய*
*ஸம்பந்நஸ்ஸர்வேச்வரச்சம்பு ராகாசமத்யே)*

"பிரமன், விட்டுணு, உருத்திரன், இந்திரனாகிய இவரெல்லாம் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்களெல்லாம் பூதங்களோடு பிறப்பிக்கப்படுகின்றன. ஆகலின், அன்னோரும் அவைகளுங் காரணமாதல் இல்லை. தியாதாக்களாய அன்னோராற் றியானிக்கப்படுந் தியேயனுஞ் சருவைசுவரிய சம்பன்னனுஞ் சருவேசுவரனுஞ் சம்புவும் பரமாகாசமத்தியி லிருப்பவனுமான சிவனே காரணன்." என்று வேத முடிவிலுள்ள அதர்வசிகோபநிஷதம் அறைதரு மாற்றங்களிலறியலாம். பந்தவிடுதலை நிமித்தம் "அன்னியமான யாவையும் விட்டுச் சிவபரம் பொருளொன்றே தியானிக்கற்பாற்று" எனவும், "எல்லாத் தருமங்களையும் விட்டுப் பிரமமொன்றனையே சரணமாகவடை" எனவும் பொருள்செய்தற்காஞ் சுருதிவாக்கியங்களும் நூன் முதலாங்காண்டத்து ௬ - ன் உரையுழியும், இரண்டாங்காண்டத்து ௩அ - ன் உரையுழியும் வந்துள்ளன. இன்னன பிரமாணங்களும் பலப்பலவாமே. சிவனுடைய ஐம்முகங்களுண் மேலான ஈசானமுகத்திற் காமிகாதி ஆகமங்கள் தோன்றின; ஆகலின் அவை மேம்பாடுடையனவென்பது சிவனது திருவுருவம் பலபேத விகாரமுடைத்தெனல் காட்டுமேயன்றி அவிரோதநயங் காட்டாது. (𑌰𑍌𑌰𑌵𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌮𑍇𑌵) "ரௌரவம் ச்ரோத்ரமேவ" எனக் காமிகாகம தந்த்ராவதாரபடலஞ் சாற்றுகின்றபடி செவிகளாயுள்ள ரௌரவாகமம்— அச் செவிகட்கு மேனிலைக்களங்களாயுள்ள ஆகமங்கட்குக் கீழ்ப்பாட் டிழிவெய்துமாகலின் இவ்வழிபிடித்தும் வேதத்தை யிழித்துக்கூறல் கூடாது. மேலே

பிரமாணிக்கப்பட்ட சிவதருமோத்தராகம மறிவுடையாளர், "வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற — வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே" எனத் திருமந்திரந் தெரிக்குமாறும், அன்ன பிறவுங் கருதுக. அக்காமிகாகம அக்நிகார்யவிதிப்படலம்—(ப்ரஹ்மாவிஷ்ணுஸ்சலோகேசா) "ப்ரஹ்மாவிஷ்ணுச்சலோகேசா" எனத் தோற்றுவாய்செய்து (வ்யாஸ ஸம்க்ஷேபகாரிணஃ) "வ்யாஸஸம்க்ஷேபகாரிணஃ" என முடிக்குமிடத்தே "பிரமனும், விட்டுணுவும், உலோகேசர்களும், எனைத்தேவர்களாயிருப்போரும், (வ்யாஸஃ) வியாசர் போன்றவர் ஆக்கம்பர் ஆகவலாயனர் சத்தியாசாடபொன்றுவோரும், மறையையும் மமமார்ந்தமான (வேதாங்கா) வேதங்களையும் ஏனைய சாத்திரங்களையும், புராணங்களையும், ஸ்மிருதியையும் எம்பாற்கேட்டு (அவற்றைச்) சுருக்கிச் சுருக்கால் வியாசிக்குமிடத்தும் விரிவு சுருங்கச் செய்தவர்கள்" என்று சிவன் கூறினனெனக் கூறுமாற்றானே மேற்கூறிய சாத்திரங்களுஞ் சிவனுடைய திருவாக்குக்க ளல்லாத இருடிகள் வாக்குக்களேயென்பது பெறக் கிடக்கின்றது. உபநிஷத்து வாக்கியங்களுட் பலவுஞ் சிலவுஞ் சிவபெருமானுடைய திருவாக்குக்களே யென்பதற்குரிய அறிகுறிகளும் இந்நூலுள்ளுரைக்கப் போந்தமையின் அவைகளு மிங்கு நன்கு கருதிக்கொள்ளத்தக்கனவே. வியாசர் முதலிய இருடிகளையும் அவர்களியற்றிய நூல்களையும் பிரதம ஆகமமான காமிகமெடுத்துக் கூறியதாகுப் (பௌத்தார்ஹதம்) பௌத்தம் ஆர்ஹதமென்னும் மதங்களையும் அது கூறுகின்றமையால் எல்லா வாகமங்களும் — அவ்விருடிகளுரைநூல்களையுள்ள அனைத்துக்கும், அப்பௌத்த ஆர்ஹத ஆகமங்கட்கும் பின்னர்த் தோன்றியுள்ளனவென்றுணிதல் மேற்படுவதாகின்றது. இது பற்றி இங்கு விரிவாக விசாரிப்பது அநாவசியமாதலின் அது விடுக்கப்படும்.

யாதானுமொரு நூல், முன்னர்த் தோன்றியிருப்பினும், பின்னர்த் தோன்றியிருப்பினும், அஃது ஈசன்வாக்குத் தேவர்வாக்கு முனிவர்வாக்கென்பவற்று ளொன்றாக வெழுதப்பட்டிருப்பினும், எழுதப் படாதிருப்பினும் அதன்கணுள்ளனவெல்லாம் — வஞ்சகமற்ற நடுவு நிலைமையி லொருசிறிதும் வழுவாதியைய காலந்தோறு மேம்பட்டு வந்த நல்லாசாரமான தன்ம கன்மங்களை விதிப்பனவாய் நவைதபு ஞானயோகங்களை அனுபவ வாயிலாக விளக்குவனவாயிருப்பினும், அவற்றுட் சில பல அன்னணமிருப்பினும் அவையற்றை அறிவு

படைத்த அனைவருங் கொள்ளுநரைகளெனக் கொள்ளலா மென்பதற்கே எமது சிந்தை இனிது விழைகின்றது. என்னை? நோயொழித்தற் குரிய நறுமருந்தை அனுபவவாயிலாக வறிந்துகொண்ட மருந்துவர், அம்மருந்து பலர்க்கும் பயன்படுமா றுரைக்கு முரையினை, இஃது ஈசன்வாக்கன்று, தொன்மையன்று, இப் பரதகண்டவாசிவாக்கன் றெனத் தள்ளிவிடுவார் யாரும் யாண்டுமிராராகலின். இனிதோன்று நூல்களிலும் அங் நல்லன காணப்படின் அவைபற்றைக் கோடலும், அல்லன காணப்படின் அவைபற்றை நீக்கலும் உயர்நெறி யவாவுநர்க் கெல்லா முடம்பாடேயாம். சிவப்பிரகாசத்தில் —

"தொன்மையவா மெனுமெவையு நன்றாகா வின்று
தோன்றியநூ லெனுமெவையுந் தீதாகா"

எனவருவதும் இவ்வுடம்பா டேற்புடைத்தெனச் சாதிக்க வுள தன்றோ.

இந்நூலுட் கூறப்பட்ட தகரவித்தையினை யாம், பிரப்பை யென்னுமொரு கேத்திரத் தொருசாராகிய காட்டின்கண் அகழப்பட்ட குழிக்கட் பங்குனித்திங்களி லுற்ற ஒரு சனிவாரந் தொடக்கமாக ௯௫ - நாள்காறுந் தனியிட்டை சாதித்திருந்த ஞான்று கௌபீனதாரி யாய் வெளிப்பட்ட இறைவன், எமக் கொருமொழியி னுணர்த்தியருளி மறைந்தனனென்பது *எம்முடைய பாடல்களிற் பல செய்யுள்களகத் தும் வந்திருப்பினும் ௧௧௦௧ - திருப்பாட்டுக்க ளடங்கியுள்ள திருப்பா வென்னு நூலுட் பராபரமென்னும் பதிகமாய் —

"பூமிசை யஃறிணை யாதனைப் போற்புரி யாதுயர் நோக்கமுடை
மாமனு வாய்வகுத் துள்ளநற் காத்திரம் வெளவியு மெந்நெறிக்கும்
ஓமெனுஞ் சைவசித் தாந்தசன் மார்க்கமுற் றுன்னினை வேபோந்தும்
ஏமுற லின்றெனி னென்னுறழ் தோஷமற் றேவர் பராபரமே.

நின்பரி வானுனக் கஞ்சு விவேகமென் னெஞ்சி லமர்ந்தமுதன்
மன்பதை பல்வகை யாக விறைஞ்சுதெய் வங்க ளெலாமுதலாம்
உன்பரி பூரணத் துள்ளவென் றேயுனை யுள்கெளி யேனையிந்நாள்
அன்பொடு நீயளி யாவிடி னார்துணை யாவர் பராபரமே.

பாரி மகாருற வாசர மாதிய பந்தமெல் லாமுயிர்த்துன்
பேரரு ளேதுணை யென்று திரிந்திடு பெற்றி யுளேனையணைத்
தோரரு ணீபுரி கில்லை யெனிற்புரி வோரெட னுளங்கருதி
ஆரரு ணல்குவ ரார்துணை யாகுவ ரைய பராபரமே.

* பரிபூரணானந்தபோதத்துப் பிற்படலத்துத் ௯௪ - ன் உரைகாண்க.

தூங்கி விழித்திட லொத்த வுலப்பொடு தோற்ற வுக்கெளியேன்
நீங்கி நிரந்தர மொன்றொடு தோய்ந்துய நித்த முனைக்கருதன்
பாங்குணர் வாரெவர் பண்டை வினைக்கடை மைதவி னின்றுமெனைத்
தாங்குந ராருனை யன்றி யருட்பிர காச பராபரமே.

ஒன்று மறிந்தில னுக்குமெய் லாமறிந் தோர்க்கு மனைத்தையுழை
நன்றிது தீதிது வென்றுணர் நன்மைமெய் ஞான்றுமின் றுன்னடி யாம்
என்றுனு ஞானிலை யாதலி னுன்னரு ளின்றியெவ் வண்ணமுய் வேன்
அன்றறை யங்கவ ணர்புரி யென்னறி வாய பராபரமே.

நீயெனை யாண்முறை யாயளி காட்டியென் னெஞ்சை யுமன்னிய மாய்
ஈயவி லித்திது காறு மனைகளெல் லென்னை யுறந்ததருல்
நாயவ னலனிவன் றீயவ னென்று துறந்தனை யோவெனவிங்
கேய நைந்தாக லயகுகின் றேன்புக லேது பராபரமே.

இப்படி மற்றுரு வப்பொருள் கட்கெலா மெப்படி யாதாரமோ
அப்படி யெப்பொரு ளுக்குமா தார வாமதி லின்புறா
முப்படி விட்டருள் பெற்றனை வார்க்கெலா முக்கிய வாதாரமாய்
எப்பொழு துங்கிளர் நீயெனை நீங்குவ தென்னை பராபரமே.

இத்தரு ணத்தெனை யாண்டருள் செய்திலை யேன்மன மிக்குலைவாய்
எத்துணை யுஞ்சுக மின்றி யழுங்கிட வெய்துய நோடெனையே
ஒத்தவ ரும்பினி டுப்படி யாவையு மோவகை சிறந்தருளாம்
மத்த முறும்படி செய்சிவ சுப்பிர மணிய பராபரமே.

கேட்ட வினைத்து மெளிந்திட லென்பன சீணமின் ஞானமதை
ஈட்டிடு மார்க்கமன் றுகு மலாலுநப் பென்ப தகற்றிடுமோ
தூட்டிக விட்டையி னுல நகன்றிடல் சத்திய மாதலினுல்
வாட்டமி லங்கிலை தன்னில்லை சுப்பிர மணிய பராபரமே.

நிட்டை நிமித்தமா தாகமு மற்றவென் னீர்மைபோல் லாநுபவ
நட்ட நடுநதக மாலய மானத் தொட்ட மிடும்படிநீ
இட்ட வனம்பணி நானுயய நல்லரு ளென்பதை யீதியருள
வட்டை விளக்கு புகழ்க்கவி நன்னிரு வாண பராபரமே.”

எனவருவது படித்தறிதல் நெறியுடைத்தாகும். யாம், துறவறநிலைபுக்க வாண்டிற் கடுத்தது மாண்டிற்றனே ஸ்ரீ சிதம்பர மஹாக்ஷேத்ர எல்லைப்பாட்டிலுள்ள குபவன்பேட்டையிலே (அளியார்ந்த செல்வச்சிரஞ்சீவி கு. வே. இராஜா முத்துக்கிருஷ்ண நாயுடுவின் நல்லுபசரிப்பினை பெற்றுச்) சில திங்கள்களாக வாசஞ்செய்து வருநாளன்று திருவருட் சகாயத்தினைக்கொண்டு யாஞ்செய்த நூல்க ணான்கு. அவை— பரிபூரணானந்தபோதம், தகராலயரகசியம், கந்தரொலியலங்

தாகி, குகப்பிரமமாட்பத்து என்பன. இவற்றான், தகராலயரகசியமே இந்நூலின் முதலதாம். இம்மூல முடிவுக்குக் கலியுகம் (௪௯௯௮) நாலாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டென்பதற்கு நேராய சாலிவாகனசகாப்தம் ௧௮௧௮-ல், துர்முகிவருடத்து மார்கழித்திங்கள் ௧௬-ல் (30 - 12 - 1896) ஏய்ந்த புதவாரமே பெற்றிய காலமாம்.

இந்நூலுரையாய தமிழில், ஒப்புடைமை கருதி வடமொழி வழக்கிற்கியைபவும் தென்மொழி வழக்கிற் கியைபவுஞ் சில வடசொற்கள் செறிக்கப்பட்டுள.

இம் மெய்ந்நூலைப் பதிப்போரும் படித்துரைப்போர்க்கு எம்மை ஆண்டருள் குகப்பிரமம் எல்லாநலனும் பயந்தருளுக.

ஸுப்ரஹ்மண்யோம்.

இங்ஙனம்.

புதுப்பாக்கம்,
சென்னை.
16-10-1916.

குமரகுருதாசசுவாமிகள்;
பாம்பன்.

உ

சிவமயம்.

குஹப்ரஹ்மணே நம:

திருச்சிற்றம்பலம்.

# தகராலயரகசியமூலமும்,

## சதானந்தசாகரமெனுமுரையும்.

---

### பாயிரம்.

முன்னோன் றுதி.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

பூவார்செஞ் சென்னியுடைப் புங்கவருந் தாபதரும்
புகழ்ந்து போற்றுந்
தேவாகி யடியவருக் கனுதினமு மருள்கூர்ந்து
சிறுகொன் றில்லா
மாவாழ்வு நல்குகுகப் பெருமானுக் கொருதுணையா
வளர்முன் னோனை
நாவார வேவாழ்த்தி யிந்நூலன் முடிவுறுவா
னயந்து கொள்வாம்.

### உரை.

பூக்களா லமைக்கப்பட்ட மாலைகளைச் சூடியுள்ள செவ்விய திருமுடியையுடைய தேவர்களும், தவத்தினரும் (தாங்கள் மேற்கொள்ளுங் கருமங்கள் இனிது முடியும்வண்ணம்) புகழ்ந்து வணக்கஞ்செய்யுங் கடவுளாகி, (அன்னோர் முதலிய) அடியாரெவர்க்கும் எந்நாளுங் கருணையைப்பெருக்கி எவ்வாற்றானுங் குறைவுறாத பெருவாழ்வைக் கொடுத்தருளுகின்ற குகப்பெருமானுக்கு ஒப்பற்ற துணையாய் விளங்கியுள்ள முன்னவனாகிய விநாயகமூர்த்தியை, (தொடங்கிய) இந்நூல் இடையூறின்றி முற்றுப்பெறுமாறு (யாம்) வாய்நிரம்ப வாழ்த்தி விநயத்துடன் அக்கடவுளின் சகாயத்தைத் தேடிக்கொள்ளக் கடவோமாக.

அந்தமி லின்பத் தழிவில்வீட்டிற்குச் சாதனமாந் தகராலய ரகசியந்தெரிப்பா னெடுத்துக்கொண்ட இந்நூ லினிதுமுற்றுவான் விக்கினங்க டீர்க்கும் முன்னோனெனும் பெயருடைக்கடவுளைக் காப்பாகக்கொண்ட திது. இவ்வாறுகொள்வது வைதிக சைவாசாரமாம். பெருமானையென நிற்கத்தக்கது வேற்றுமை மயக்கத்தாற் பெருமானுக்கு என நிற்பதாயிற்றெனக்கொண்டு 'குகப்பெருமானை, ஒப்பற்ற வுயிர்த்துணையாய் விளங்கியுள்ள முதல்வனை' எனும் பொருள்செய்து சுப்பிரமணியப்பெருமானையே காப்பாகக்கொண்ட திதுவெனக் கூறுவது மொன்று. ஈங்கு, ஒருபொருண்மீது குகப்பெருமானை, ஒரு துணையாவனா முன்னோனையெனப் பல்பெயர் வந்தவாறு "பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" எனத் (திருநாவுக்கரசுகள்) தேவாரத்தும் வருதல் காண்க. இதற்குவிதி "ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்." என்னுஞ் சூத்திரமாம்.

பூவார்செஞ் சென்னியுடைப் புங்கவர் = பூக்களாலமைக்கப்பட்ட மாலைகள் புனைந்துள்ள செவ்விய திருமுடியினையுடைய தேவர். பொலிவுநிறைந்த செவ்விய முதன்மையுடைய தேவர் என்பது மொன்று. புங்கவர் = அமரரென்னுந் தேவர்; "அமரர் புங்கவரைய ரிமேலகர்" என்றேனும் பிங்கலநிகண்டு. புங்கம் = மேன்மையாகலின் அதனையுடைய தேவர்க் கிப்பெயர் போந்தது. 'பூவார் செஞ் சென்னி' என்றதைத் தாபதர்க்கும் ஆக்குங்கால் அழகார்ந்த செவ்விய சடைமுடியையுடைய தாபதர் என்க. பூ = அழகு; மேலை நிகண்டு காண்க. தாபதர் = தவநிலையுடையோர். தவமென்பது சரியை கிரியா யோகங்களை; சிவஞானபோதம்—"தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த" என்றேதியவாற்று னறிக.

போற்றல் = வணங்கல்; பிங்கல நிகண்டு காண்க. கூர்ந்து - கூர் என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம்; கூர்தல் = உள்ளது சிறத்தல்; "கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்" என்பது தொல்காப்பிய விதி. சிறுகு = சிறுமை; பண்புப்பெயர். 'துணையா' என்றதில் ஆ - ஆக என்பதன் விகாரம். நூல் - உவம ஆகுபெயர். உறுவான் - வினையெச்சம். "எவ்வகைப் பெயரும்" எனனுந் தொல்காப்பிய விதிப்படி 'யாம்' என்னும் எழுவாய் தொக்குநின்றது. வருவனவற்றிற்கும் இவ்விதி கோடற்பாற்று. நான்முக முதற்கட் பூ - என்னும் மங்கலச்சொல் பொருந்த இந்நூல் தொடங்கப்பட்டது. (௧)

## ஆறுமுகச் சிவபிரான் றுதி.

*கலிவிருத்தம்.*

ஏம நாயக னேர்மறை நாயகன்
சேம நாயகன் றேவர்க ணாயகன்
ஆமெந் நாயக னாறு முகச்சிவன்
பூம லர்ச்சரண் போற்றிப் பழிச்சுவாம்.

(உயிர்கள் யாவற்றையுங்) காக்குந் தொழிலையுடைய தலைவனும், சகல லட்சணங்களு மமைந்துள்ள வேதங்கள் நான்கினையும் (சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய சீவர்கள் விதி நிஷேதங்களை யுய்த்துணர்ந்து கடைத்தேறும்வண்ணங்) கூறியருளிய தலைவனும், தேவர்களுக்குத் தலைவனும், (இப்பொழுது) எளியேங்கள் வழிபடற்குரிய தலைவனுமாகிய ஆறுமுகமுள்ள சிவனது அழகிய அம்போருக மலரொத்த இருபாதங்களையுந் தொழுது துதிப்பாம்.

ஏமம்=காவல்; "ஏமமே சேமங் காவல்" என்றோதும் மகரவேதுகை. காவல் விட்டுணுவுக்குரு தேறேனுக்கி, அவரை நீக்குவான் மறைநாயகன், சேமநாயகன், தேவர்கள் நாயகன் என விதந்தோதி "எம் நாயகன் ஆறுமுகச்சிவன்" என்றுங் கூறினர். விட்டுணு முதலியவர்களே தேவர்கள். இதனை, (விஷ்ணவாதிகாநுஸுராநு) "விஷ்ணவாதிகாந்ஸுராந்" என்னும் அதர்வணவேத சரபோபநிஷத்வசனத்தா னுணர்க. யஜுர்வேத தேஜோபிந்தூபநிஷதம் (விஷ்ணவாதிஸுரைரஜஸ்ரம்) "விஷ்ணவாதிஸுரைரஜஸ்ரம்" என்று கூறுதலும் அது. ஸுரர்=தேவர். இத்தேவர்களுடைய இருதயகமல குகைதோறுங் குகனென அறுதியேயிருக்கின்றன னாகலின், தேவர்களுடைய துயர்துடைத்து அவ்வவர் பதவியளித்து * "மேலவர்க்கிறைவன்" "தேவசேனாபதி" மென்னுஞ் சிறப்புப்பெயர்களும் பெற்றுளோனாகலின் "தேவர்கணாயகன்" என்றாரென்க. (வித்யாக்யேதாஸ்சதுர்தச) "வித்யாக்யேதாச் சதுர்த்தச" என மஹாபாரதங் கூறுமாறு கணக்கிடப்பட்ட வித்தை பதினான்கினிலும் மறை உயர்வுடைமையின் அஃது "ஏர்மறை" எனப்பட்டது. பதினான்காவன:—இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வம், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம், புராணம், நியாயம்,

* சேந்தன்றிவாகர வாக்கியம்.

மீமாஞ்சை, மிருதி யென்பன. இவற்றோடு ஆயுள்வேதம், வில் வேதம், காந்தருவவேதம், அருத்தவேதமென்னு நான்கனையுங் கூட்டி (𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 - அஷ்டாதசாநாம்வித்யாநாம்=) "வித்தை பதினெட்டு" என்னும் சைவமஹாபுராணத்து வாயுசங் கிதை. மறைந்த பொருளையுடைய வேதம் மறை எனப்பட்டது. இக்காரணம்— (𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑌗𑍁𑌹𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌗𑍂𑌢𑌂) "தத்வேத குஹ்யோபநிஷத்ஸுகூடம்" என்னும் வேதவாக்கியங்கொண்டே அறியக் கிடக்கின்றது. யஜுர்வேத சுவேதாச்வதரோபநிஷத வாக் கியமாகிய இதன்பொருள் :— "வேதங்களில் மறைபொருளாயிருக் கும் உபநிஷதங்களில் அவன் மறைந்திருக்கின்றனன்" எனவாம். இப்பொருளறியாமே முதன்மூன்று வருணப்பெண்களும், சூத்திர குலத்திருபாலாரும் ஓதலாகாதென மறுக்கப்பட்டமையின் மறை யெனும் பெயர்த்தென்பார் கூற்றையும், சைவத்தை மறுத்தமையின் அல்லது மறைத்தமையின் மறையெனும் பெயர்த்தென்னும் வைண வர் கூற்றையும் வேத முரணெனக் களைக. வேதநெறியே சைவ மென்பதை இந்நூலாசிரியருடைய சைவசமயசரபம் முதலிய பெரு நூல்களி லெடுத்துக்காட்டப்பட்ட வேதவாக்கியங்களாலேயே தெற் றென வறியலாம். மறைநாயகன் சிவனென்பதற்குரிய சுருதியாதி பிரமாணங்களையும் அச் சரபத்திற்றானே "சிவபெருமானே வேதங் களை யருளிச்செய்தவன்." என்னும் அத்தியாயத்திற் கண்ணுறலாம். க்ஷேமம் என்னும் வடசொல் சேமம் என்றாயிற்றென்ப. சேமமெனப் பொதுவகையாற் கிளத்தலானே இகம் பரமென்னும் இருதிறவின்ப மும் பெறப்படும். சேமம்=இன்பமெனப்படுதலை, "சேமமே காவ லின்பம்" என்னும் மகரவேதுகைக் கூற்றுழைக் காண்க. ஆசிரியர் இந்நூலினை உலகருய்பு நிமித்தம் ஓதவந்தாராகலின் அவரையும் உளப்படுத்தி "எம் நாயகன்" என்றார். ஆறுமுகம் முதலிய தடத்த லக்கணத்தானும் (ஆன்ம) சொரூபலக்கணத்தானும் ஆறுமுகன் சிவனே; சிவனே ஆறுமுகனென்பது இந்நூற்றுணிபு முண்மையு மாகலின் அபேதப்பொருளென வுணர்த்துவான் "ஆறுமுகச்சிவன்" என்பது பிரயோகிக்கப்பட்டது. போந்த தேஜோபிந்தூபநிஷத்தின் உ - ஆம் அத்தியாயத்தில் (𑌕𑍁𑌮𑌾𑌰𑌶𑍍𑌶𑌿𑌵𑌂) "குமாரச்சிவம்" என வருவதூஉம் இவ்விதப் பிரயோகமேயென்க. குமாரன் ஆறுமுகனே. ஆறுமுகன் சிவனேயென்பது— "மகேசுரனுமவர், உமையுமவர், விநாயகனுமவர், கந்தனுமவர்" என்னும் அருத்தத்திலே (𑌯𑌶𑍍𑌚

ஹேஶ்வர: । யா ஸோமா । யச்ச விநாயக: । யச்ச ஸ்கந்த: ।) "யச்ச மஹேச்வர: । யாசோமா । யச்சவிநாயக: । யச்சஸ்கந்த: ।" என்று அதர்வசிரோபநிஷதமும், "தூவி மாமயி லூர்பவன் சுடர்மதி யணிந்தோன்—தேவ யானையே திருந்திழை யுமையவ ளாமால்" என்று இலிங்கபுராணமும்,

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ."

என்று கந்தபுராணமுங் கூறுதலிற் பெறப்படும். இன்னும் உரிய பிரமாணங்கள் பலவும் பரிபூரணானந்தபோத வுரையாகிய சிவசூரியப்பிரகாசத்தே (பாயிரத்தில்) எடுத்துக்காட்டினமாகலின் ஆண்டுக்காண்க. இப் பிரமாணங்களையெல்லாம் உய்த்துணராத்தன்மையாற் சைவத்திற்கு வேறாகும் கௌமாரசமயமென்று பேதம்பேசுவார் கதியும்—குகப்பிரமவருட்பத்தில் "முருகனு மயேசனு மொருபொரு ளாநதவன் - - - - முடிவுடை மகாபதம் பெறுவதிலை" என இந்நூலாசிரியர் கூறியவாற்றானு மறியக்கிடக்கின்றது. ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதமென்னும் ஐந்துமுகங்களுள்ள சிவனுக்கு அதோமுகமென்பதொன்று இரகசியமாயுள்ளதாகலின் அச்சிவனும் ஆறுமுகனே, அவ்வாறுமுகனே அந்த இரகசியமுகமும் வெளிப்பட விளங்கிநிற்குந் தன்மையாற் குமாரனெனப்பட்டனன். இக்கிரமத்தில் அவ் வாறுமுகங்களை யுணர்வதோடு உமாபதி உமாதேவி முன்னிலையி லோதிய செய்தியாக "நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமே கந்தன்—தன்முக மாகி யுற்ற" என்று மேலைக் கந்தபுராணங் கூறுதலுமறிக. ஸ்காந்தமஹாபுராண ஸம்பவகாண்டத்து கரு - ஆம் அத்தியாயத்து அ - ஆஞ் சுலோகத்தில்—

(த்வந்மயோ மந்மயோ யஸ்மாத் ஷட்வக்த்ர: பரிகீர்த்தித: ।

த்வந்மயோமந்மயோயஸ்மாத் ஷட்வக்த்ர: பரிகீர்த்தித:।)

"நங் குமாரன் உனது சுவரூபத்தையும் எமது சுவரூபத்தையுங் கொண்டுளோனாகலின் ஆறுமுகனெனப்படுகின்றனன்" என்று கிரிகுமாரி முன்னிலைக்கட் கிரிவில்லியாகிய பரமன் கிளத்தினன் என்பது காணப்படுதலின் அவ்வதோமுகமுஞ் சிவசத்தி முகமெனு

நிச்சயத் துறுகின்றது. அதுதானே "ஒமெ னப்படுங் குடிலேயே யொப்பிலா முருகன்—மாமு கத்துளொன் ருமவன் றன்மையார் வகுப்பார்" எனவும், "முகத்தி லொன்றதா வவ்வெழுத் துடைய தோர் முருகன்" எனவும் அக் கந்தபுராணங் கழறுகின்றபடி ஒரெ ழுத்தாங் குடிலையென்னும் பிரணவாகாரமாமென்பது மறியக்கிடக் கின்றது.

௧. மகாசாதாக்கியம்,
௨. சாதாக்கியம்,
௩. அமூர்த்திசாதாக்கியம்,
௪. மூர்த்திசாதாக்கியம்,
௫. கர்த்திருசாதாக்கியம்,
௬. கன்மசாதாக்கியம்

என்னுந் தத்துவங்களையும்; (௧) கீழ், (௨) மேல், (௩) மேற்கு, (௪) வடக்கு, (௫) தெற்கு, (௬) கிழக்கென்னுந் திசைநோக்கங்களையும் அந்த (௧) அதம், (௨) ஈசானம், (௩) சத்தியோசாதம், (௪) வாம தேவம், (௫) அகோரம், (௬) தற்புருடமென்னும் முகங்கள் முறையே கொண்டுளவென்பதுஞ் சாத்திரசம்மதமாகலின் திசைகளாய எவ் விடத்து மிருப்போனே ஆறுமுகனென்பதூஉம், அவனே யெம்முகத் தும் வணங்கப்படுவோனென்பதூஉ மறியக்கிடக்கின்றன. இங்ஙன மே சுருதியும்—

(𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌧𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌮𑌧𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।)

"ஊர்த்வபூர்ணமத: பூர்ணம் மத்யபூர்ணம்சிவாத்மகம் ।"

என்று கூறுவதாயிற்று. யஜுர்வேத முக்திகோபநிஷத் வசன மாகிய இதன்பொருள் :—"மேலும் பூரணமாய்க் கீழும் பூரண மாய் நடுவும் பூரணமாயுள்ளது சிவசொரூபம்" எனவாம். (மத்யம்=) நடுவென்பதில் மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கென்னு நாற்றிசை களு மடங்கியுள. யஜுர்வேத தைத்திரீயாருணசாகை நாராயணம்— ருத்ரகாயத்ரீ கூறுமிடத்தே (𑌦𑌿𑌶𑍋𑌦𑌶 - திசோதச=) "பத்துத் திசை" என்றோதுதலின் மூலைத்திசை நான்கனையு நாற்பெருந்திசை களி லடக்குமிடத்து அந்த ஆறுமே யேற்படும். இவ் வேதசாகை தானே (𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌾𑌮𑌿) "ஸத்யோஜாதம்ப்ரபத்யாமி" என்றும், (𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃) "வாமதேவாயநம:" என்றும், (𑌅𑌘𑍋𑌰𑍇𑌭𑍍𑌯𑌃) "அகோரேப்ய:" என்றும், (𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯) "தத்புரு

ஷாய” என்றும், (𑌈𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍) “ஈசாநஸ்ஸர்வ வித்யாநாம்” என்றும் ஓதுமாற்றானே மேலே விளம்பியுள்ள சிவனுடைய ஈசானம் முதலிய ஐம்முகங்களையு முணர்த்துவதாயுளது. யஜுர்வேத பஞ்சப்ரஹ்மோபநிஷத்திலும் இவ்விவரமறியலாம். இங்குக் கூறியவாறே ஆறுதிசை நோக்கங்களும், முகங்களும் இந்நூலின் உ - ஆங் காண்டத்து நச - லுங் கூறப்பட்டன.

“தேவர்கள்” கள் - விகுதிமேல் விகுதி. பழிச்சல் = துதித்தல்; சூடாமணி நிகண்டு காண்க. மலர்ச்சரண் - உவமத்தொகை. நாயகன் என்னுஞ்சொல் அடுத்தடுத்து வருதலான் இது சொற்பின்வருநிலையணி. ‘ஆம் எம் நாயகன்’ என்பதை எம் நாயகன் ஆம் என வியைத்துப் பொருள் கொள்க. (உ)

தள்ளற் பாலது சாதி விகற்பமே
எள்ளற் பால தெய்யாமையர் செய்கையே
உள்ளற் பால துறங்குமொ ரின்புநாங்
கொள்ளற் பாலது கொள்குகன் பாதமே.

(மானுடப் பிறவியைப்பெற்ற நாம் உய்யுமாறு) ஒழித்தற்குரியது சாதிவேறுபாடேயாம்: இகழுந் தன்மையது அறிவில்லாதவரது செய்கையேயாம்: விரும்பும் பகுதியது “ஓங்கருளி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத் தூங்கும்” ஒரு தூக்கமேயாம்: (இவ் வநீதானுபவமெய்தும்வண்ணம்) கொள்ளுதற்குரியது (அடியவரை ஆண்டு) கொள்ளுந் தன்மையுடைய (தகர குகையின்கண்ணே யிருக்கும் மேன்மையாற்) குகனெனப்படும் அபிதானமுடையான் சீ பாதங்களேயாம்.

சாதிப் பெருமை சிறுமைகள் பாராட்டுதலானுறும் அகங்காரமும் அசட்டையும்—(𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌧𑌰𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑍋 𑌬𑌨𑍍𑌧𑌃 = வர்ணாச்ரமதர்மகர்மஸங்கல்போபந்தஃ=) “வருண ஆச்சிரம தருமகருமசங்கற்பம் பந்தம்” என்று யஜுர்வேத நிராலம்போபநிஷதங் கூறுகின்றபடி வீடுபேற்றிற்கு விக்கினமாகலின் “தள்ளற்பாலது சாதிவிகற்பமே” என்றார். அவ்விகற்பம்.—பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், அநுலோமர், பிரதிலோமர் முதலிய பலதிற வேறுபாடுகளாம். இங்ஙனமே, வேதமுடிவுகளிற் போதருந் தகராலயரகசியத்தைக் கேட்டலும் அறிதலும் எல்லாச் சாதியார்க்கும் பொருந்தாவென மறுப்பார் மாற்றத்தை மறுத்துப் பக்குவமுடையா

ரெம்மரபினராயினும் உரியாரென நிறுவியவாறென்று பொருள் கோடலுமொன்று; உரிய சுருதிமுதலிய பிரமாணங்கள் சிவசூரியப் பிரகாசத்தி லுள. எல்லாரும் வீடுபே றடையவேண்டுமென்னும் ஒரு கருணைப்பாடே இப்பொருட் கருத் தாகலின், இக் கருணையுடையாரே நூலாசிரிய ரென்றோர்ந் திதனை வலியுறுத்தற்கு கஉஅக - செய்யுள்களடங்கிய அவரது பாடற்புத்தக மொன்றில்—

"கல்லா மனதைக் கனியப் பணிமா
வல்லோ னெனையாண் மயிலூ ரிறைதாள்
எல்லோ ருயிறைஞ் சியெலா நலனும்
அல்லோ பெறவென் னகவா தரமே."

என்பதூஉ முளது. எய்யாமையென்னும் உரிச்சொல் அறிவின் மைப்பொருட்டாகலின் அறிவிலிகள் "எய்யாமையர்" எனப்பட்டனர். "எய்யாமையே அறியாமையே" என்பது தொல்காப்பியம். இருள் வயப்படா தருள்வயப்பட்டு நிற்குஞ் சிவயோகநித்திரையே "உறங்குமோ ரின்பு" எனப்பட்டது. இவ்வுறக்கத்தைச் சிவயோக நித்திரையெனவே கோடல்வேண்டுமென்பதை, (𑌶𑌿𑌵𑌯𑍋𑌗𑌨𑌿𑌦𑍍𑌰𑌾) "சிவயோகநித்ரா" என்னும் வாக்கியத்தால் ருக்வேத நிர்வாணோபநிஷதம் உணர்த்துகின்றது. இந்நித்திரை தூங்காமற் றூங்குவ தெனப்படுமென்பதும்—

(𑌯𑍋 𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿 𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌜𑌾𑌗𑍍𑌰𑌨𑍍𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌸𑌨𑍋 𑌬𑍋𑌧𑌸𑍍 𑌸𑌜𑍀𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥)

"யோஜாகர்திஸுஷுப்திஸ்தோ யஸ்யஜாக்ரந்நவித்யதே ।
யஸ்யநிர்வாஸநோபோதஸ் ஸஜீவந்முக்தஉச்யதே ॥"

என்னும் யஜுர்வேத வராஹோபநிஷத்தின் ச - ஆம் அத்தியாய வசனத் தறியப்படுகின்றது. தமிழ்:—"எவனுக்கு விழிப்பில்லையோ, சுழுத்தியுறக்கத்துள்ளவன் அவ்வுறக்கத்தினீங்கி (விழியா) விழிப்பிலிருக்கின்றனனோ, எவனது போதம் வாசனையற்றதாகவிருக்கின்றதோ அன்னோன் சீவன் முத்தனென்று சொல்லப்படுகின்றனன்" எனவாம். குகன் = குகையிலிருப்பவன், இரகசியப்பொருளாயுள்ளோன். குகையென்பது—

(க) (𑌅𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌨𑍍 𑌮𑌹𑌤𑍋 𑌮𑌹𑍀𑌯𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌾
𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌤𑍋𑌃 ।)

"அணோரணீயாந்மஹதோமஹீயாநாத்மா
குஹாயாந்நிஹிதோஸ்யஜந்தோ: ।"

எனத் தைத்திரீயாருணசாகை நாராயணத்திலும், அதர்வண வேத நாரதபரிவ்ராஜகம், சரபம், யஜுர்வேத கடம், சுவேதாச்வதரமெனும் உபநிஷத்துக்களிலும்,

(உ) (𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌰𑍂𑌪𑌂 𑌗𑍁𑌹𑌾𑌶𑌯𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌮𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑍍)

"பரமாத்மரூபம் குஹாசயம் நிஷ்களமத்விதீயம்"

என யஜுர்வேத கைவல்யோபநிஷத்திலும்,

(௩) (𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋 𑌵𑍇𑌦𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍 ।)

"ப்ரஹ்மயோவேதநிஹிதம் குஹாயாம்பரமேவ்யோமந் ।"

என யஜுர்வேத தைத்திரீயோபநிஷத் ஆநந்தவல்லியிலும் வருவசனங்களால் ஆன்மாக்களின் இருதய குகையேயாமென்பதேற்படுகின்றது. அக் குகையிலிருக்கும் பரம்பொருள்—

(𑌗𑍁𑌹𑍇𑌤𑌿 𑌦𑌹𑌰𑌾𑌕𑌾𑌶𑍋 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌉𑌹𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌯𑌂 𑌗𑍁𑌹𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌹𑍃𑌤𑍍𑌕𑌮𑌲𑌾𑌶𑌯𑌃 ॥

குஹேதிதஹராகாசோ வேதாந்தேஷுஹ்யுச்யதே ।
தந்நிஷ்டோயம்குஹ:ப்ரோக்தஸ் ஸர்வஹ்ருத்கமலாஸ்ய: ॥)

"வேத வேதாந்தங்களிலே தஹராகாசமானது குஹையென்று கூறப்படுமன்றோ: சகலப்பிராணிகளின் இருதயகமலங்களாகிய அக்குஹைகளில் வசித்திருப்போன் நின்மகனாகலின் அவன் (𑌗𑍁𑌹𑌃) குஹனெனப்படுகின்றனன்" என்று உமாகாந்தன் உமாதேவியை நோக்கி நுவன்றனன் எனுந்தமிழைத்தரூஉம் ஸ்காந்தமஹாபுராண சம்பவகாண்டத்து ௩௫ - ஆம் அத்தியாய வசனத்தால் ஆறுமுகச் சிவனாகிய குமாரக்கடவுளே யென்பதூஉம் அறியக்கிடக்கின்றதன்றோ. இந்நூற் புலம் விரிப்பானெடுத்துக்கொண்ட பொருளுமிதுவே. மேலே காட்டப்பட்ட வேதோபநிஷத வசனங்கள்—(௧) "அணுவினு மணுவாய்ப் பெரிதினும் பெரிதாயுள்ள (பரம) ஆன்மா இச் செந்துவினது இருதயகுகையி லுளது" எனவும், (உ) "இருதயகுகையிலுளதும் நிட்களமும் அத்துவிதீயமுமான பரமான்மரூபம்" எனவும், (௩) "இருதயகுகையின் பரமாகாசத்திலுள்ள அந்தப் பிரமத்தை யெவனறிகின்றனனோ" எனவுந் தமி

மூரக்கப்படும். 'ஆத்மாகுஹாயாந் நிஹிதோஸ்ய ஜந்தோ:' எனப்பட்டது தானே அந்தச் சுவேதாச்வதரமல்லாத வேனைய ௯ - உபநிஷத்துக்களிலும் "ஆத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோகுஹாயாம்" என நிலைமாறி வருகின்றது.

'ஓரின்பு' ஓரின்பு - எனக் குறுக்கல்விகாரப்பட்டு நின்றது. பாலது - பான்மையெனும் பண்படியாகப்பிறந்த குறிப்புவினை முற்று. (௯)

## ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் துதி.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருவமொரு நான்காகி யுருவமொரு
நான்காகி யறையி ரண்டும்
மருவியுள வுருவருவ மொன்றாகி
மூத்திறமும் வழுத்த வொண்ணுப்
பெருவெளிக்கு மப்பாலா யுள்ளபொரு
ளீதெனவே பெரிதுஞ் சேயோன்
ஒருவனையே புகழ்ந்தவரு ளருணகிரி
சேவடிப்போ துளத்துள் வைப்பாம்.

அருவத்திருமேனி நான்காகியும், உருவத்திருமேனி நான்காகியும், சொல்லப்பட்ட இருதிறமும் பொருந்தியுள்ள அருவுருவத்திருமேனி யொன்றாகியும், (தடத்தலக்கணத்துள்ள) இம்மூவகையினுள் (ஒன்றாக) வைத்துத் துதித்தற் கியலாத பரவெளிக்கும் (சொரூபலக்கணத்தால்) அப்பாற்பட்டு விளங்குவதாகியுமுள்ள பரம்பொருள் இதுவேயென்று மிகுதியுங் குகக்கடவு ளொருவனையே புகழ்ந்து பாடி, அவனருளையடைந்த அருணகிரிநாததேசிக மூர்த்தியுடைய செம்மை முதலிய அழகுகள்வாய்ந்த திருப்பாதமலர்களை (எமது) உள்ளத்தினுள்ளே நிலைபெற வைத்துக்கொள்ளாநின்றேம்.

சிவம், சத்தி, நாதம், விந்து என்பனவே அருவம் நான்கு. மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன் என்பனவே உருவம் நான்கு. சதாசிவன் என்பதே உருவருவம் ஒன்று. பரம்பொருளின் காரியார்த்தத்திலுள்ள இவ்வொன்பதும் அப்பொருட்குத் திருமேனியாகலின் "அருவமொரு நான்காகி யுருவமொருநான்காகி" "உருவருவமொன்றாகி" என்றார். இந்நிச்சயம்—ஸாமவேத மைத்ராயண்யுபநிஷத்தின் ச - ஆம் பிரபாடகத்தில்—

(𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌕𑌾𑌲𑍋𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌨𑍍𑌨𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑍇𑌨𑍍𑌯𑌂 - - - -
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌵𑌾𑌵𑍈𑌤𑌾 𑌅𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌨𑌵𑌃
𑌪𑌰𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌾 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯)

"அக்நிர்வாயுராதித்ய: காலோய: ப்ராணோந்நம்
ப்ரஹ்மாருத்ரோவிஷ்ணுரித்யேகேம்யம் - - - -
ப்ரஹ்மணோவாவைதா அக்ர்யாஸ்தநவ:
பரஸ்யாம்ருதஸ்யா சரீரஸ்ய"

என வருவாக்கியங்கள் "அக்கினி, வாயு, சூரியன், பிராணகாலம், அன்னம், பிரமா, உருத்திரன், விட்டுணு முதலினோராகிய இவர்கள் பரமாய் நாசமிலதாய்ச் சரீரமிலதாயிருக்கின்ற பிரமத்திற்கு முக்கியமான தனுக்கள் (= தேகங்கள்)" எனும்பொருளைப் பயக்குமாற்றானும் பெறப்படுகின்றது. தனுக்களென்னுஞ் சொல் அவர்களுடைய உடம்பைக்குறியாது; உயிரையே குறிக்கும். இத்திருமேனியைக் கடந்துளதே, உடன் உரைக்கட் போந்தவோர் சுருதி கூறுகின்றபடி, "சிவாத்மகம்" என்னும் பரம்பொருளது சொரூபலக்கணமாகலின், "அப்பாலா யுள்ளபொருள்" என்று அதனைக் குறிப்பாராயினர். இச் சித்தாந்தத்தை,

"சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீசன்
உவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னொன்றி னொன்றாப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்றாம்
நவந்தரு பேத மாக நாதனே நடிப்ப னென்பர்." என்றும்,

"எய்துதத் துவங்க ளேயு மொன்றுமின் றெம்மி றைக்கே"

என்றுஞ் சிவஞானசித்தியார் கூறுமாற்றானு முணர்க. அருவம் நிட்களமெனவும், உருவம் சகளமெனவும், உருவருவம் நிட்களசகளமெனவுங் கூறப்படும். இவை முறையே இலயம், அதிகாரம், போகமெனப்படுந் தானங்களாம். சிவதத்துவ காரணமாங் குடிலைப் பரமாகாசமே 'பெருவெளி' எனப்பட்டது; அஃது அந்த இலயம் அதிகாரம் போகமென்னும் மூன்றற்குமிடமாய்ப் பரிக்கிரகசத்தியாய் நிற்றலின் ஒரு வடிவிற்றுணியப்படாதென்பார் "வழுத்தவொண்ணப் பெருவெளி" என்றார். "குமரனுஞ் செவ்வாய்க் கோளுஞ் சிவப்புஞ்—சிறுவனு நீளமுஞ் சேயென லாகும்." என்று பிங்கலநிகண்டோதுதலின், செம்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் முதனீண்டு முன்னின்ற மகரமெய் யகரமாத் திரிந்தசொல்லே 'சேய்'

ஆகலின், 'சேயோன்' என்றதற்குச் செந்நிறமுடையான், கட்டிளமையோன், அரன்மகனென்னு மருத்தங்கள் கொள்ளப்படும். மகன் என்பதே சிறுவனெனப்பட்டது. செந்நிறமுடையானெனும் அருத்தத்திலேயே செவ்வேள், செக்கர்வேள், சேந்தனென்னு நாமங்களுங் கொளக்கிடக்கின்றன. "செக்கர் சேந்து" என்னுஞ் சொற்களைச் சிவப்பின் பெயரில்வைத்துச் சே - திவாகரந் தெரிக்கின்றது. சேயோன் என்பது தானே திருமுருகாற்றுப்படையிலே "சேஎய்" எனக் கூறப்பட்டது. இங்ஙனமுறு செந்நிறம் செஞ்ஞாயிறு போன்ற பரஞ்சோதி சொரூபத்தைக் குறிப்பதாகலின், அஃதும்—

(𑌅𑌥 𑌏𑌷 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍋𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌾𑌤𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌾𑌯
𑌪𑌰𑌂𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍁𑌪𑌸𑌂𑌪𑌦𑍍𑌯 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌭𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌦𑍍𑌯𑌤)

"அதஏஷஸம்ப்ரஸாதோஸ்மாச்சரீராத்ஸமுத்தாய
பரம்ஜ்யோதிருபஸம்பத்யஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யத"

எனச் சாமவேத சாந்தோக்யோபநிஷத்தின் அ - ஆம் பிரபாடகத்து ௩ - ஆங் கண்டத்தே நிகழ்வசனத்தும்,

"பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம் - - - -
புள்ளிருக்கும் வேளூரே"

எனத் திருஞானசம்பந்தனாரது தமிழ்மறையிலும்,

"இன்றெனக் கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின் றன்மை"

என மாணிக்கவாசகனாரது தமிழ்மறையிலும் நிகழ் கூற்றுக்களகத்தும் பெறப்படுமால். அற்றாகலினன்றே—

"சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
கூடரோளிய தாய்நின்ற நிட்கள சொரூபமுதல்— ஒருவாழ்வே"

என அவ்வருணகிரிநாதப் பெருந்தகை பாடியருளிய பழநித் திருப்புகழொன்றும், "உலக முவப்ப வலனேர்பு திரிதரு—பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்—கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி" என அத் திருமுருகாற்றுப்படையும் ஓதுவ வாயின. மேலே பிரமாணிக்கப்பட்ட உபநிஷத் வசனத்தின்றமிழ்:—"இவ்வாறறிந்த சம்பிரசாதனாகிய ஆன்மா இச் சரீரத்தினின்றும் பரஞ்

சோதியையடைந்து சுவரூபமாய்ப் பிரகாசிக்கின்றனன்" எனவாம். விநாயகமூர்த்தி, சிவபெருமான், உமாபிராட்டி, திருமால் என்பவரைப் பாட்டுடைத்தலைவன் சுற்றமாகக்கொண்டு ஒரு சிறிதே புகழ்ந்து பெரிதுங் குகக்கடவுளையே அருணகிரிநாதப் பெருந்தகை வழுத்தினமையின் "பெரிதுஞ்சேயோ னொருவனையே புகழ்ந்தவரு ளருணகிரி" என்றார். அவ்வாறு பாடப்பட்ட திருப்புகழ்த்துக்கு—

"அருணகிரி நாதர்பதி னாறா யிரமென்
றுரைசெய் திருப்புகழை யோதீர்—பரகதிக்கோர்
ஏணி யருட்கடற்கோ ரேற்ற மனத்தளர்ச்சிக்
காணி பிறவிக் கரம்."

என அடிப்பட்ட ஆன்றோர்வாக்காகக் காணப்படும் இவ்வெண்பாவானும், "எம்மருண கிரிநாத ரோதுபதி னாறா யிரந்திருப் புகழமுதமே" எனவரு திருவிரிஞ்சைமுருகன் பிள்ளைத்தமிழ் மாற்றங்களானும் (கசூ000) பதினாறாயிரமென்று கணிக்கப்படூஉ மென்ப. (ஸயொஹவைத தூரஹம் ப்ரஹ்மவேதப்ரஹ்மைவபவதி - ஸயோ ஹவைதத்பரமம் ப்ரஹ்மவேதப்ரஹ்மைவபவதி=) "எவன் பிரமத்தை யறிகின்றனனோ அவன் பிரமமேயாகின்றனன்" என அதர்வணவேத முண்டகோபநிஷத்தும், "மாலற நேய மலிந்தவர் வேடமும்—ஆலயந் தானு மரனெனத் தொழுமே" எனச் சிவஞானபோதத்துப் கஉ - ஆஞ் சூத்திரமும், "அறிவரியான்" என்றற்றொடக்கத்துச் செய்யுளிலே "குறியதனை விதயத்தே யரனைக் கூடுங் கொள்கையினா லரனவர் குறிபொடுதா மழியும்—நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவ ரென்றோ னேசத்தாற் றொழுதிடுநீ" எனச் சிவஞானசித்தியாருங் கூறுகின்றபடி குகப்பிரமத்தின தருளாற் சர்வஞ்ஞத்துவம், சுவப்பிரகாசத்துவம், வியாபகத்துவம் முதலிய திவ்விய குணங்களையடைந்த அப்பெருந்தகையினையுங் குகப்பிரமமென வணங்குமியல்பினராகலின் அவர்க்கு வணக்கங் கூறினர். அவர் அத்திறப் பேறுபெற்றவரேயென்பது— அவர் திருவாய்மலர்ந்தருளிய *கந்தரனுபூதியில்—

* சிலர் இந்நூற்கு இயந்திரங்களும் மந்திரங்களு மிருப்பனவாகப் பலவாறெழுதி வெளியிட்டிருப்பன அங்கீகரிக்கப்படுவனவல்ல. வீடுபேறெய்திய கண்ணப்ப நாயனாரே நக்கீரராய்ப் பிறந்தார், அவர் பொய்யாமொழிப்புலவராய் வந்தார், அவரே அருணகிரிநாதனாரென்பனவாதி பல ஒவ்வாச் செய்திகளை யுட்கொண்டதாய் அருணகிரிநாதர் புராணமெனும் பெயர்த்தா யுள்ள புத்தகமும் அங்கீகரிக்கப்படுவதன்று.

"'பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே.' எனவும்,

'ஆறா றையுநீ த்ததன் மேனிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே.' எனவும்,

'ஆணா கியவேற் கையிலே ந்தலே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.' எனவும்,

'குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.' எனவும்,

'நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே.*'"

எனவும் வருவனவற்றானும் வலியுறுத்தப்படும். "கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன—எந்தைபரு ளாடி யிருக்குநா ளெந்நாளோ." எனத் தாயுமானசுவாமிகள் பாடியருளியதையு மிங்ஙனுய்த்துணர்க. 'அம்மா பொருளொன் றுமறிந்திலனே' என்பது "யாண்டும் பரசொரூபமே காணப்படுகின்றதே, இஃதாச்சரியம்" எனும்பொருளைப் பயக்கும். 'தனிவேல் ஐ'=ஒப்பற்ற வேற்படைக் கடவுள்; ஐ=கடவுள்; யகரவேதுகை காண்க. ஆறுமுகச் சிவனருள்பெற்று ளவிலா ருளரேனும் அவரெல்லாம் அருணகிரிநாதப் பெருமான்போன்று அவனொருவனையே புகழ்ந்துநிற்றலும், அங்ஙனம் அனுபவஞானமுடையராய் "நேசா முருகா நினதன்பரு ளால்"—"பேசாவனுபூதி பிறந்தது" என்பதன் வாய்மைப்பொருளை யாதொரு பிரபந்தவாயிலாக அறிவுறுத்தி நிற்றலுமில்லாப் பெற்றியினராகலின் ஆசிரியர் ஈங்கவரை நீத்தன ரென்க.

அறை இரண்டு - வினைத்தொகை. ஒன்னு - ஒன்றுதவென்பதன் மரூஉ. வெளி - உபசாரவழக்கு. 'அப்பால்' என்றதன்கண் ணுள்ள சுட்டு மேற்பொருட்டில் வந்தது. இது என்னுஞ் சுட்டுப்பெயர் 'ஈது' என நீட்டல் விகாரப்பட்டு நின்றது. (௪)

## நூலின் பெயர்.

வஞ்சிவிருத்தம்.

**அகமானதை யடுநல வகநடபமாம்**
**பகவாவொடு பரம்விரி பகர்வரிதாந்**

---

* கந்தரனுபூதிக்கு இதுவே யிறுதிச்செய்யுளாதல்வேண்டும்.

தகராலய ரகசியந் தனை நுவலீ
துகமீதந்தப் பெயருட னுலவுமரோ.

(சீவசுதந்திரமென்னும்) நானென்பதை யழிக்கு நலம்வாய்ந்த இருதயபுண்டரீகத் துள்ளிருக்கின்ற சிதாகாசமாகிய குகக்கடவுளோடு முன்னர் விரித்துக் கூறப்பட்ட சொல்லற்கரிதாகிய தகராலயத்தின் இரகசியார்த்தத்தைக் கூறும் இந் நூலானது, அத் தகராலயரகசியமென்னும் பெயரோடு இவ்வுலகத்தில் உலாவிவரும்.

அகம் - அஹமென்னும் வடசொல்லின் விகாரம்; நான் என்னும் பொருளுடைத்து; இஃதே அகங்காரம், தற்போதமெனவும் படும்; விவரம் பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்து கககக - ன் உரையிற் காணலாம். ஞானம், ஐசுவரியம், திரு, வீரியம், வைராக்கியம், புகழ் ஆகிய ஆறும் 'பகம்' எனப்படும். இதனையுடையானே பகவான். இப்பெயருக்குரியோன் குகக்கடவுளென்பது (஭ગவாந் ગுஹ:) "பகவான்குஹ:" என ருக்வேத அக்ஷமாலிகோபநிஷதங் கூறுதல்கொண் டறியப்படும். இன்னும் இப்பெயர் சிவபெருமானுக்கே யுரித்தென்பது—

(ஸவ்ராநநஶிரோग்ரீவ ஸ்வ்ஹுગுஹாஶய: ।
ஸவ்வ்யாபீஸ஭ગவாந் ஸ்மாத்ஸவ்ગதஶ்ஶிவ: ॥)

"ஸர்வாநநசிரோக்ரீவஸ் ஸர்வபூதகுஹாசய: ।
ஸர்வவ்யாபீஸபகவாந் தஸ்மாத்ஸர்வகதச்சிவ: ॥"

என்னுஞ் சுருதிகொண்டு வற்புறுத்தப்படும். சுவேதாச்வதரோபநிஷத மந்திரமாகிய இஃது—"எங்கும் முகமுடையனுஞ் சிரமுடையனுங் கழுத்துடையனும் எல்லா ஆன்மாக்களின் இரகசிய குகைகளி லிருக்கின்றவனுஞ் சர்வவியாபியுமாயுள்ளான் அந்தப் பகவான்; ஆகலிற் சிவனே சர்வவியாபி" எனுந்தமிழைத் தரும்.

(ஹரஸ்ஸவ்வஸ்ய ஹரணா த்விஷ்ணுருச்யதே ।
஭ગவாந்ஸவ்விஜ்ஞாநா ஦வநாதொமிதிஸ்ம்ருத: ॥)

"ஹரஸ்ஸர்வஸ்யஹரணாத் விபுத்வாத்விஷ்ணுருச்யதே ।
பகவாந்ஸர்வவிஜ்ஞாநா தவநாதோமிதிஸ்ம்ருத: ॥"

என்னுங் கூர்ம மஹாபுராணச் சுலோகம் "அனைத்தையும் அழித்தொடுக்குபவனாதலின் அரன் எனவும், வியாபகனாதலின் விட்டுணு எனவும், சர்வஞ்ஞனாதலிற் பகவான் எனவும், காப்பவனாத

வின் ஓம் எனவுஞ் சிவனுக்குப் பெயர்கள் விளங்குவனவாயின" எனும்பொருளைப் பயக்குமாற்றானும்; இதன்கட் பகவானென்பதற்குச் சொல்லப்பட்ட காரணமே—அதர்வசிரோபநிஷத்தில் (அத கஸ்மாதுச்யதே பகவாந் - அதகஸ்மாதுச்யதே பகவாந்=) "பின்பு சிவன் எதுபற்றிப் பகவா னெனப்படுகின்றனன்" எனவெழுந்த வினாவிற்கும் முக்கிய ஏதுவெனக்கொண்டு விடையிறுத்தல் காணப் படுமாற்றானும் அவ்வுரிமை பெரிதும் மதுகையுறுகின்றது. இது பற்றிய வேறு பிரமாணங்கள் சைவசமயசரபத்துக் கைவல்லிய காண்டத்து ச - ஆம் அத்தியாயத்திற் காட்டப்பட்டன. வடமொழி மறை இவ்வாறு கூறுதலின்றன் தென்மொழிமறையில் "பாகந் தோய் பகவா பலியேற்றுழல் பண்டரங்கா - - - - சிற்றம்பல மன்னனாய்" எனத் திருஞானசம்பந்தப்பெருமானது திருவாக்கு மெழுந்துளது. விட்டுணுவுக்கும் இப் பகவானெனும்பெயர் செல்லும், அஃதவருக்கேயுரியதென்று வைணவபுராணமுங் கூறுமென்னின்,—அவ்விதக் கூற்றுக்களுளவேற் புராணம் முதலியன சுருதி போல வலியுடையனவல்ல; சுருதிக்கு விரோதமாகக்கூறுதல் அவற்றின் கடமையுமன்றென அவை மறுக்கப்படும். அதர்வவேத பிருஹஜ்ஜாபாலோபநிஷதம் "சிவபிரான் கட்டளையிட்டருளியபடி விட்டுணுவானவருந் தியானஞ்செய்து சிவத்தைக் கண்டேன் கண்டேனென்று சிவத்தையணுகி ஆனந்தமுற்றனர்" எனும்பொருளிலே—

(ஹரிர்முக்த்வா ஹர: ஸ்வஹ்ருதி த்யாத்வா த்ருஷ்டோ த்ருஷ்ட இதி சிவம்)

"ஹரிமுக்த்வாஹர:ஸ்வஹ்ருதித்யாத்வா த்ருஷ்டோத்ருஷ்ட இதிசிவம்"

என்று கூறிச்சேறலின் விட்டுணுவானவர் சுவானுபூதி வாயிலாகப் பந்தவிடுதலைபெற்ற ஞானியென்பதறியப்படுமாற்றானே அவரைப் பகவானென்பது கௌணவிருத்தி யாமேயன்றி, முக்கியவிருத்தி யாவதின்றென்பதும் இங்ஙனங் கருதத்தக்கதே. சிங்கத்தையே சிங்கமென்பது முக்கியவிருத்தி. சிங்கத்தின் வீரம் முதலிய குணங்களை யொருவன்பாற் காணுமிடத்து அவனைச் சிங்கமென்பது கௌணவிருத்தி. இத்திற ஏதுக்களானே குகக்கடவுளைப் "பகவான்" என்றது சால்பிற்றாதல் காண்க. திருவள்ளுவதேவரது குறளுரை முதற்செய்யுட்கட்போந்த 'பகவன்' என்பதற்கும் வைதிகநான்மறையிற் பொருள்கொள்ளுஞான்று இங்குக்கூறிய பொருளே சிறக்கும். சாந்தோக்யோபநிஷத்தின் அ - ஆம் பிரபாடகத்தில்—

(𑌅𑌥 𑌯𑌦𑌿𑌦𑌮𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌦𑌹𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌵𑍇𑌶𑍍𑌮)
"அதயதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம"

எனவரு வாக்கியங்கள்—"பிரமபுரமென்னும் இதிலே தகர புண்டரீகவீடுள்ளது" எனுந்தமிழைத் தருதலின், தகரபுண்டரீக வீடுதானே இங்கே 'தகராலயம்' எனவெடுத்துக்கொள்ளப்படுவதாயிற்று. (𑌵𑍇𑌶𑍍𑌮) வேச்மங் என்பதும் ஆலயம் என்பதும் வீடென்னுந் தமிழைத் தரத்தக்க ஒருபொருட் கிளவிகளை யென்பதை (𑌵𑍇𑌶𑍍𑌮 𑌸𑌦𑍍𑌮 𑌨𑌿𑌕𑍇𑌤𑌨𑌂 ---- 𑌆𑌲𑌯𑌃) "வேச்மஸத்மநிகேதநம் ---- ஆலய꞉" என நிகண்டு - அமர ஸிம்ஹம் கூறுதல்கொண் டறிக. தஹர + ஆலயம் = தஹராலயம் எனச்சந்தியாம்; இது தீர்க்கசந்தி யெனப்படும். இதன்கண் ணுள்ள ஹ - க ஆகத் திரிந்ததும், ரஹஸ்யம் என்னும் வடசொல் ரகசியம் என விகாரப்பட்டதுந் தமிழ்நூன் முடிபு. ரஹஸ்யம் = அந்தரங்கம். பிண்டத்தும் அண்டத்துமுள்ள தகராலயங்களின் உண்மைகளும், அவற்றுள் விளங்கும் ஆகாசங்களினியல்புகளுமே அந்த இரகசியமாதலின் அவற்றை யெடுத்துக்கூறுமிந்நூல் **தகராலயரகசியம்** எனும் பெயர்த்தாயிற்றென்க. "தகரம்" என்பதன் பொருள் ௧ - ஆங் காண்டத்து ௬ - ன் உரையில் விளக்கப்படும்.

'அகநபம்' எனவே புறநபமும் உண்டென்ப துணர நிற்றலின் அது பிறிதினியைபு நீக்கிய விசேடண மொழியாம். நபம் = ஆகாசம். அகநபம் = உள்ளாகாசம். பரம் = முன்; பிங்கலநிகண்டு காண்க. பரம்விரி = முன் விரித்துச் சொல்லப்பட்ட. "அகமானதை யடுநலவகம்" என்றதே முன் விரித்துச் சொல்லப்பட்டது. உலவும் - உலாவுமென்பதன் விகாரம். ஈது - நீட்டல்விகாரம். உகம் - உலகமென்பதன் மரூஉ; "உகம்பார் தரணியுலோகந் தாரணி" என்று மேலைநிகண்டுங் கூறிற்று. அந்த - அகரச்சுட்டின் மரூஉ. அரோ - அசை. (௫)

## அவையடக்கம்.

*கலிநிலைத்துறை.*

**தேவர் காதையைப் பாடியத் தேவரைக் கடுப்ப**
**மேவு வேடமிட் டாடுந ராட்டையும் விரும்பிப்**
**பூவி னன்கென மதிப்பது போலித னையுமேன்**
**பாவ லோருமுள் ளுவந்துகொள் வார்பழி பகரார்.**

தேவர்களுடைய சரித்திரங்களைப் பாடல்களாகப் பாடிக்கொண்டு, அத்தேவர்களைப்போலப் பொருந்துகின்ற வேடந்தரித்து

நடிப்போரின் கூத்தையும் இவ்வுலகின்கண் விரும்பி நல்லதென்று (உலகர்) பாராட்டுவதுபோல இந்நூலையுஞ் சிறந்த பாவில் வல்ல புலவர்களும் மனமகிழ்ச்சிகொண்டு அங்கீகரிப்பர்களே யன்றிக் குற்றங் கூறார்.

காதை = கதையையுடையது. பொருளொடு புணராப் பொய்ம் மொழியால் நாட்டப்பட்டு வரூஉங் கதைபோலாது நல்லிசைப் புலவரால் நாடகவுறுப்பும் நாடகமுந் தழீஇ, உள்ளோன் றலைவனாகவுள்ள தொரு பொருண்மேற் சித்திரிக்கப்பட் டியலுமதுபோல் இஃதும் நடக்குமென்பது பெறுவான் கதையென்னாது காதையென்றார்.

கடுப்ப - உவமவுருபிடைச்சொல். மேல் - 'மேண்' எனத் திரிந்தது; "நன்பால்" என்புழிப்போல (திருவள்ளுவர் அதி - ௯00); "உணரக் கூறிய புணரியன் மருங்கிற்—கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே." என்ற தொல்காப்பியத்துப் புள்ளிமயங்கியல்விதியான் முடிக்க. பா - என்றதனானே அவையற்றின் இனங்களும் பெறுதும். (சு)

## ஆக்கியோ னுக்குவயம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விறலோங்கு மரக்கிருட் படல மெல்லாம்
 வீயவொரு விண்மணியி னுதித்த மாலின்
அறலோங்கு வாரிவளை சேது நாப்ப
 ணமரிரா மேசனுறை நகரின் மேல்பால்
மிறலோங்கு நிலவளஞ்சேர் பாம்ப னென்று
 விளங்குமொரு பதிவசித்து வெற்றி வேற்கைத்
திறலோனுக் காளடிமைப் பட்ட வன்றுள்
 சேர்குமர குருதாசன் றெரித்தான் மன்னோ.

வலிமை மிக்க இராக்கதராகிய இருட்டொகுதி யாவும் அழிய ஒருசூரியனைப்போலத் தோன்றிய இராமனாற் செய்யப்பட்ட, நீரோங்கியிருக்குஞ் சமுத்திரஞ்சூழ்ந்த சேதுவின் மத்தியப்பிரதேசத்தி லுள்ள இராமநாதமூர்த்தி வீற்றிருந்தருளாநின்ற தேவையம்பதி யெனப்படுந் திருவிராமேச்சுரத்திற்கு மேற்குத்திசையில், பெருண்மையா லுயர்ந்த நிலவளம்பொருந்திய பாம்பனென்னும் பெயரினதாய் மிக்க புகழ்பெற்று விளங்கும் பதியின்கண்ணே வசித்திருந்து, வெற்றிவேல்பிடித்த கையையுடைய கொற்றநீள் குமரநாயகனுக்கு

மீளாவடிமையாகி, (உலகவின்பங்களைக் கான்ற சோறெனக் கைவிட்டு) அந் நாயகன்றாளே தஞ்சமெனச் சார்ந்த குமரகுருதாசசுவாமிகளென்னுந் திவ்விய சிறப்புப்பெயருடையாரே இந்நூலினை யருளிச்செய்தனர் (எனவறிக).

விறலோங்கும் அரக்கர் இருட்படலம் விண்மணி உதித்தமால் என்ற தொடர்கள் சூரியனுக்கும் இராமனுக்குஞ் சிலேடையாய் நின்றன. விண்மணி=சூரியன். உதித்த=உதயஞ்செய்த. மால்=பெருமை; பண்பாகுபெயராய் அதனையுடையவனுக் காயிற்று. மாலெனும் பெயரிய விட்டுணுவி னவதாரம் இராமனாகலின் மால் என்றனரென்பதுமாம். இராமேசன் = இராமனாற் பூசிக்கப்பட்ட ஈசன். இச்செய்தி சைவமஹாபுராணத்திற் கூறப்படுகின்றது; ஸேது மாஹாத்ம்யத்தில் விரிவாகக் கூறப்படுகின்றது.

"தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல்செய் தவிரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கடம் மேல்வினை வீடுமே."

என்று திருஞானசம்பந்தப் பெருமானும்,

"செங்கண்மால் செய்த கோயி றிருவிரா மேச்சு ரத்தைத்
தங்கண்ணா லெய்த வல்லார் தாழ்வராந் தலைவன் பாலே."

என்று திருநாவுக்கரசுகளுந் திருமுறையி லருளிச்செய்ததுமோர்க. மகாதேவனெனுஞ் சிவனை வணங்கி அம் மகாதேவப்பிரசாதம் பெற்றவனே இராமனெனுஞ் செய்தியும் (அத்ர பூர்வம் மஹாதேவ: ப்ரஸாதமகரோத்விபு: - அத்ரபூர்வம்மஹாதேவ: ப்ரஸாதமகரோத்ப்ரபு: =) "எனக்கு இவ்விடத்திற் பிரபுவாகிய மஹாதேவன் முன்னே பிரசாதம்புரிந்தருளினன்" எனும் ராமாயணக் கூற்றினறியக்கிடக்கின்றது. இதன்மீதுண்டாஞ் சங்கை உத்தரமெல்லாஞ் சைவசமயசரபத்துக் கைவல்லியகாண்டத்துப் ௬௨-ஆம் அத்தியாயம் முதலியவற்றிற் கண்டு தெளிக. நிலவளம் எனவே நீர்வளம் நிழல்வளமென்பனவும் இனம்பற்றிக்கொள்க. திருவிராமேச்சுரத்தின் மேல்சாராய் இஞ்ஞான்று வடகடலாயுள்ளவோரிடத்தே பாம்பணையிற் பள்ளிகொண்ட திருமால்கோயிலொன் றிருந்தது காரணமாக, அவ்விடஞ்சார்ந்த வூராய "பாம்பணை" என்பதே பாம்பன் என மருவி வழங்கப்படுவ தாயிற்றென்ப. 'வசித்து' என்றதனானே ஆசிரிய

ரது சனனபூமி பாம்பன் அன்று, அத் திருவிராமேச்சுரமே என்க. இதனை, “யான்பிறந்த வூரா மிராமேச் சுரம்” என்று காசியாத்திரை கூகூ - ல் அவர் கூறியிருத்தல் கொண்டு மறிக. வேல்=வெல்லுதற்குக் கருவியாயுள்ளது. ஸ்காந்தமஹாபுராண ஸம்பவகாண்டத்து ௩எ - ம் அத்தியாயத்துப் க0, கக - ஆஞ் சுலோகங்களிலுள்ளபடி குமாரக்கடவுளுடைய திருக்கரங்களில் எறிபடை, பெரியவாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, மழு, பங்கயம், வில் முதலாய படைகளிருப்பவும் வேலினை விதந்தது—மணிகண்டனாகிய சிவபிரானது திருக்கரத்தே இச்சை ஞானம் கிரியையென்னும் முச்சத்திகளை யுணர்த்தும் வடிவிற்றாய் மூவிலைச்சூல மிருப்பது கடுப்ப அச்சத்திகள் அவ்வித பேதங்காட்டாமே ஏகாகாரமாய் இறைவனது திருக்கரத்தே சத்தியெனவிருத்தலானும், படைக்கலநாயகமாதலானும், துரிதம்புரி கிரியினையுஞ் சூரபன்மனையும் அழித்த விறற்பாட்டதாதலானுமென்க. இவ்விவரத்தை— ஸ்காந்தமஹாபுராண ஆசுர காண்டத்து ௩ - ஆம் அத்தியாயத்து உஉ - ஆஞ் சுலோகத்தில் “எமதழிவற்ற சத்தியாலன்றி எவரானும் நீ கொல்லப்படாய்” என வரு செய்தியைச் சூரபன்மனுக்குச் சிவபிரான் றெரித்தருளினனென்பதனானும், “இச்சாஜ்ஞாநக்ரியாசக்திரூப சக்திதரம்பஜே!” என்னுங் குமாரதந்த்ரமெனும் ஆகமவசனத்தில் “இச்சா ஞானக் கிரியாசத்தி ரூபமாகவுள்ள சத்தியெனும் வேலைத் தரித்துளன் சத்திதர சுவாமியெனும் பெயரிய முருகன்” என்பதும், நிகண்டு - அமரஸிம்ஹத்தில் (ஶக்திதரஃ குமாரஃ) “சக்திதரஃ குமாரஃ” என்பதும் வெளிப்படுமாற்றானும் அறிக. அற்றாகலினன்றே “சத்தியே யுமை வேல் கான்றல் குடைவலி துவசந் தானும்” என்று சூடாமணிநிகண்டினருந் தகரவெதுகையிற் கூறினர். இவ்வேதுக்களானே மற்றையாயுதங்கட்குச் சத்தியெனும்பெயர் செல்லாதென்பது மோர்க. திறல்=வீரமாகலின் அதனையுடையோனே “திறலோன்” என்க. இதனில் னகரவீற்றயல் ஆகாரம் ஓகாரமாயதிரிவு “பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்—ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.” என்ற விதியா னமைக்க. (தேவஸேநாபதி ஶூரஃ) “தேவ ஸேநாபதிச்சூரஃ” என்னும் மேலை அமரஸிம்ஹத்தின் கூற்றகத்தே குமாரக்கடவுளது திருப்பெயர் சூரன் எனவருதலின் அஃதே திறலோனெனப்பட்ட தென்க.

“அண்டருக்கு முனிவருக்கு மகிலநிரை படைப்பவற்கு மையார் சீவை
குண்டனுக்கும் வாழ்வேதவ் வசுரருயிர் நீவந்து குடியா விட்டால்”

என இந்நூலாசிரியர் திருத்தொடையல் என்னுமொரு நூலிற் கூறிய வாற்றானே அத்திறலை யறிக. ஆளலாவது அவநெறிச்செல்ல விடாது நன்னெறிக் குய்த்தருளினமை. "ஆயிர முகத்தா னகன்ற தாயினும்—பாயிர மில்லது பனுவ லன்றே." என்பவாகலின் ஆக்கு வயம் (=பெயர்) உரைத்தனர். "தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினுந்—தான்றற் புகழ்த றகுதி யன்றே." என்பது விதியா யிருப்பவும், ஆசிரியர் தாமே பாயிரம்பகர்தல் அமைவுடைத்தாங்கொ லென்னின்,—வடநூல் விதிபற்றியும், சமயாசாரியர் சந்தானாசாரியர் பிரயோக விவேகத்தார் கந்தபுராணத்தார் திவாகரத்தார் முதலிய ஆசிரியர்கள் கூறினமைகண்டுஞ் செய்தனராகலின் முரணன்றென்க. இங்ஙனம் பாயிரமுறை வந்தமை காண்க.

"விண்மணியின்" என்றதில் இன் - ஒப்புப்பொருளில் வந்த ஐந்தாவதன் உருபு. வாரி=நீர்; கடலுக்கிலக்கணை. சேது=அணை. இராமேசன் - வடநூன்முடிபிலுள்ளது. 'மீறல்' மிறல் - என எதுகைநோக்கிக் குறுக்கல் விகாரப்பட்டது; அதிகரித்தலெனு மருத்தந்தரூஉம் இஃதிங்கே பெருமையெனும் பொருட்டு. மன், ஒ - அசைகள். (எ)

பாயிரமுற்றிற்று.

உ

குஹப்ரஹ்மணே நம:

திருச்சிற்றம்பலம்.

# முதலாங்காண்டம்.

## க. நூல்வரலாற்றியல்.

(காண்ட) காண்டம் என்னும் வடசொல் கூட்டமெனப்படும். இப்பொதுப்பெயர் இங்கே, இந்நூலின் பிரதமபாகத்தை யுணர்த்துஞ் செய்யுள்களின் கூட்டமென்றாயினும், நூல் வரலாற்றியன் முதலிய மூன்றின் கூட்டமென்றாயினுஞ் சிறப்பாகக் கொள்ளக்கிடத்தலின் முதலாங்காண்ட மெனப்பட்டது. இவ்விலக்கணமே இரண்டாங் காண்ட மென்பதற்குங் கோடற்பாற்று. இயல் என்பது ஓத்தெனப் படும். அவ்வோத்து— "நேரின மணியை நிரல்பட வைத்தாங்—கோரினப் பொருளை யொருவழி வைப்ப—தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்." என்னுந் தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரத்தின்படி ஓரினமாயுள்ள பொருள்களை யொருவழிப்பட வோதுவ தென்க.

இவ்வோத்து நூல்வரலா றுணர்த்துதலின் நூல்வரலாற்றிய லென்னும் பெயர்த்தாயிற்று.

**மனசனுகிய சீடன் அறிஞனுகிய குருவைத்தரிசித்துத் தகர வித்தையை விளக்கியருள்கவென வேண்டல்.**

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

சீர்சி றந்துள விமய வோங்கலின்
றென்பு றத்தமிழ் நாட்டிலுய்
நார்சி றந்துள மனச னென்பவன்
ஞான வாழ்வுறு வான்கலைக்
கீர்சி றந்துள வறிஞ னென்னுமொர்
கேடி றீர்த்தனைக் கண்டையா
ஆர்சி றந்துள தகர வித்தையை
யறைதி யென்றடி பரவினன்.

## உரை.

சிறப்பு மிகுந்துள்ள இமயமலைக்குத் தட்சிண பாகத்தே தமிழ் வழங்கு நாட்டின்கண் வாழாநின்ற அன்பு மிக்குள்ள மனசனென்பானொருவன் சிவஞானப் பெருவாழ்வை யடையும்பொருட்டுச் சகல சாத்திர வாக்குவல்லமை வாய்ந்த அறிஞனென்று சொல்லப்படுகின்ற ஒரு சதாசாரியரைத் தரிசித்து ஐயனே! நிறைவு சிறந்து விளங்குந் தகரவித்தையி னியலை (அடியேனுக்கு) உபதேசித்தருள்வாயாகவென்று அவ் வாசாரியருடைய திருவடிகளைத் துதித்து வணங்கினன்.

இறைவியை மகளாகப்பெறலும், திருமணப்போழ்து உலகத்தையும் உலகத்துக் காதாரமாய இறைவனையுந் தன்னகத் தடக்குதலும், மலைகளுட் பெரிதாய் மலைபரசெனவிருத்தலும், பரதகண்டத்திற் கெல்லையாதலும் இமயத்திற்குச் சிறப்பாகுமாகலின், " சீர்சிறந்துள இமயவோங்கல் " என்றார். இமயம்=பனிதோன்றுதற் கிடமாயுள்ளது. ஓங்கல்=உயர்ந்திருத்தல்; ஆகுபெயராய் மலைக்காயிற்று. செந்தமிழ் நிலம் வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாமென்பாரும் பாண்டி நாடென்பாருஞ் சோழநாடென்பாரு முளராகலிற் 'செந்தமிழ்' என அடைகொடாமே " தமிழ்நாடு " என்றும், தமிழ் இமயமலை அண்ணப்பரந்து கிடத்தலின் அதன் எல்லையுங் காலந்தோறும் வேறுபட்டு வரல் கருதி " வடவேங்கடந் தென்குமரி " என்றாற்போல எல்லை குறிக்காது " இமயவோங்கலின் றென்புறத்தமிழ்நாடு " என்றுங் கூறினர். தமிழ் என்பதன்பொருள் 'இனிமை' என்றுணருமாறு " இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும் " என்று பிங்கலநிகண்டும், " தமிழென்பதினிமை நீர்மை " என்று மகரவெதுகையும் வழங்குகின்றன. காலவேறுபாட்டில் வேங்கடத்திற்கு வடபால் ஆரியம் அதிகமாக நிகழ்வுழி அது வடமொழியெனப்பட்ட வன்றே தென்பால் அதிகமாக நிகழ் தமிழுந் தென்மொழி யெனப்படுவதாயிற்று. அற்புதத் திருவாக்குடைத் திருஞானசம்பந்தப் பெருமானது திருமுறையில்—

" மந்திபோற்றிரிந்தாரியத்தொடு செந்தமிழ்ப்பயனறிகிலா
அந்தகர்க்கெளியேனலேன்றிரு வாலவாயரனிற்கவே "

எனவும், அத்திறவாக்குடைத் திருநாவுக்கரசுகளது திருமுறையில் " ஆரியந்தமி ழோடிசை யானவன் " எனவும் வருவாக்கியங்

கள் இருதிறப்பாடைகளுங் கொள்ளத்தக்கன வென்பதாக அவற்றை யிணைத் தறிவுறுத்தவாறும் இங்ஙனுணரத் தக்கதன்றோ. இவற்றை யும், ஏனைய சாத்திரசம்பிரதாயங்களையும் உய்த்து நோக்கியே—

“ ‘எப்பொழுது தென்னு டெனுமொன் றுண் டாயினதோ
அப்பொழுதே யம்மொழியு மாயதென்றல்—முப்பொழுதும்
ஓர்ந்தார்க்கு மொப்பா மொருமுருகை யேத்துமெனச்
சேர்ந்தார்க்கு மொப்பாந் தெளி.’

‘வடமொழியைத் தேர்ந்தோர் வடமொழிதா யென்னிற்
றிடமொழியாந் தென்மொழியைத் தேர்ந்தோர்—புடவிதனில்
அத்தென் மொழிதந்தை யாமெனலுங் கூடுமெனல்
சுத்தனை யேத்தென் றுணிபு.’ ”

என்று காசியாத்திரையில் இந் நூலாசிரியரும் பாடியுள்ளார். இந்நோக்கின்றி, ஆரியமொன்றே கற்றுத் தமிழையிகழ்தலும், தமி ழொன்றே கற்று ஆரியத்தையிகழ்தலும் அடாச் செய்கையேயா மென்க. தகரவித்தை கேட்டற்குரியார் தலையன்புடைய தீவிரதர பக்குவிகளென்பார் “ நார் சிறந்துள மனசன் ” என்றுரைத்தனர். நார் = அன்பு.

“ தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மனையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேற்
றெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்.”

என்று முதல்வன்புராணம் மொழிகின்றபடி அன்பானது அற வொழுக்கத்தின் காரியமாகியும், அருள் தவமென்பவற்றின் காரண மாகியு நிற்றலின் அதன் மேம்பா டறியக்கிடக்கின்றது. அற்றாகவி னன்றே—

(நமஸ்தேஸ்து நமஸ்தேஸ்து த்வாமஹம் ஶரணம் கத꞉ ।
த்வத்பாதயுகளே ஶம்போ பக்திரஸ்து ஸதா மம ॥)

“ நமஸ்தேஸ்துநமஸ்தேஸ்து த்வாமஹம்சரணம்கத꞉ ।
த்வத்பாதயுகளேசம்போ பக்திரஸ்துஸதாமம ॥ ”

என்று வடமொழிமறைப் பிருஹஜ்ஜாபாலோபநிஷத்தும், “பத்தி வலையிற் படுவோன் காண்க” என்று தென்மொழிமறைத் திருவாசக மும், “ அன்பினுள் ளாகி யமரு மரும்பொருள்—அன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே” என்று திருமந்திரமுங் கூறுவனவாயின.

வடமொழிகளின் பொருள்:—“நமற்காரம், நமற்காரம்: நான் உன்னைச் சரணமடைந்தேன்: சம்புவே! உன்னுடைய திருவடியிரண்டினும் எனக்கெப்பொழுதும் பத்தியிருத்தல்வேண்டும்” என் விட்டுணுமூர்த்தி வேண்டுதல் செய்தனர் எனவாம். சம்பு=சிவபெருமான். அன்பு பத்தியெனவும்படும். ‘மநஸ்’ என்னும் வடசொல் ‘மனசு’ என வழங்கப்படும்; தபஸ் - தபசெனப்படுமாறு. மனசன்=மனசுடையோன் எனவும், அறிஞன்=அறிவுடையோன் எனவுங் காரணம் விரிக்க. ஞானபோதகஞ்செய்வார் உலகர் எளிதினுணருமாறு கடா விடையாக இனிதுணர்த்திச்சேறல் தொன்னெறி வழக்காகலின் இவ்வாசிரியரும் அதுநோக்கி மனசனென்பானொருவனை முன்னிலையாக்கி மாணவதானத் துறுத்துக் கூறினமை தெளிக. ஈண்டு, மனசையே மனசனெனவும், அறிவையே அறிஞனெனவுமெடுத்துக்கொண்டா ரெனினுமாம். தீர்த்தன்=குரு; வேதாகம சாத்திரம் தீர்த்தமெனப்படுமாகலின் அவ்வுணர்ச்சியு முண்மையறிவு முள்ளோனுக்கு இப்பெயர் போந்ததென்க. ஆகலினன்றே “கலைக் கீர்சிறந்துள அறிஞனென்னுமோர் கேடில் தீர்த்தன்” என்றுங் கூறுவாராயினர். கலை என்றது வேதாகம சத்திய சாத்திரங்களை; என்னை? அத்துவித ஞானச்செல்வத்தினைப் பயப்பன வவையேயாகலின். கிர்=சொல், வாக்கு; சூடாமணிநிகண்டு காண்க. ஐகாரச்சாரியை பெறிற் ‘கிரை’ எனவாம். சுருதி கூறுகின்றபடி உற்கீதவித்தை, பிராணவித்தை, சாண்டில்லியவித்தை, வியாகிருதிவித்தை, மண்டலவித்தை, புருடவித்தை, பஞ்சாக்கினிவித்தை, உபகோசலவித்தை, சத்துவித்தை, ககோளவித்தை, வைசுவாநரவித்தை முதலிய பரவித்தைகள் பலவிருத்தலின் இந்நூலி னுணர்த்தத்தக்க பரவித்தை ‘தகரவித்தை’ எனக் குறிக்கப்பட்டது. அப் பரவித்தைகள் பலவற்றுள்ளும் இடையறநிற்கும் இத் தகரவித்தையொன்றே சிரேட்டமாகலின் அது—“ஆர் சிறந்துள” என விசேடிக்கப்பட்டது. இவ்வித விசேடங் கூறுதலை ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர் (காமாதயஸ்தத்ரதத்ராயதநாதிப்ய:) “காமாதயஸ் தத்ரதத்ர சாய தநாதிப்ய:” எனும் (பிரஹ்ம) ஸூத்ரத்திற்குச் செய்த பாஷ்யத்திலுங் காணப்படுகின்றது. ஆர் - முதனிலைத் தொழிற்பெயர்; ஆர்தல்=நிறைதல்; “ஆர்வுங் கூர்மையு மாத்தியு மாரேனல்.” என்று பிங்கலநிகண்டுங் கூறிற்று.

இமயவோங்கல் = இமயமாகிய மலை; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ‘உறுவான்’ என்றதில் வான் - எதிர்கால வினையெச்சவிகுதி.

'அறிஞன்' ஞ் - பெயரிடைநிலை. ஓர் - ஒரு என்பது உகரம்பெறுமனின்றது; ஒன்றென்பது ஈறுகெட்டு, ன் - ர் ஆயவழி உகரம்பெறுவதே 'ஒரு'. ஐயா = ஐயனே! என்னும் விளி. குருவெனும் பொருளைத்தருஉம் (சூ-ருஅ) அர்யன் என்னும் வடசொல்லின் விகாரமே 'ஐயன்' எனவுஞ் சிலர் கூறுப; அது கோடற்பாலதன்று. என்னை? "ஐயும் ஒப்பும் - - - - அழகின் பெயரலங் கார மாகும்" என்று அப் பிங்கலநிகண்டு கூறுதலின் ஐ - அழகுப் பொருட்டாம்; அதனோடு ஆண்பா லிறுதிநிலையாய அன் புணரும்போது யகரவுடம்படுமெய் தோன்றி 'ஐயன்' எனவாகுமாகலின். அவ்வழகு அறிவு முதிர்ச்சியெனப்படுமாற்றானே ஐயனென்பது சிறந்தோன்மேற் றெனவே கொள்ளப்படும்: அங்ஙனமே குருவிற்கு மாமென்க. அறைதி - ஏவலொருமை முற்று; அறை - பகுதி, இ - விகுதி, த் - எழுத்துப்பேறு. பாவினன் என்றமையால் வணக்கமுங் கொள்க. பரவல் = துதித்தல். (க)

மனசனது வேண்டுகோ ளங்கீகரித்த அறிஞனர், வழிபடு கடவுளை வாழ்த்திக் கூறுவனகூறத் தொடங்கல்.

அன்பு மீக்கொளு மனச வன்னண
மறைகு வேமென வறிஞனுந்
தன்க ளிப்புமல் கிறையை நோக்கியென்
சரத மாயவிர் குருபரா
இன்ப மாமழை பொழியும் வானென
வென்னுண் மேவு குகேசுரா
உன்பொ ருட்டிற மோத நல்லரு
ளுதவெ னப்பணிந் தோதுமால்.

(அதுகண்ட) அறிஞனும் அன்பினை மிகுதியாகவுடைய மனச! அவ்வாறே யாம் உபதேசிக்கின்றோமென் றொருப்பட்டு, தமது இன்பத்தினிறைந்து விளங்கும் வழிபடுகடவுளைக் கருதி, என்னுடைய உண்மைப்பொருளாகித் துலங்குங் குருபரனே! இன்பமாகிய பெரிய மழையைப்பெய்யும் மேகமெனும்படி, என திருதயத்திற் குடிகொண்ட குகேசனே! நின்னுடைய தகரவித்தையின் கூறுபாடுகளை (யான்) கூறும்வண்ணம் (நீ) நல்லருள் புரிவாயாக வென்று வணங்கிக் கூறுவான் றொடங்கினர்.

அன்பின் மேம்பாடும், மேற்கோளும் மேலைச்செய்யுளுரைக் கண்ணேயே விளக்கிக் காட்டினும். மாணவகனது பக்குவ முணர்தற்கு அவ்வன்பே கருவியாயிற்று. குடத்துள் விளக்குந் தடற்றுள் வாளும்போல மறைந்துள்ளிருக்கும் அன்பு காரியப்பாட்டாற் றெளி

யப்பட்டது. மந்ததரன், மந்தன், தீவிரன், தீவிரதரனென்று நாற்றிறத்தவருள் மனசன் தீவிரதரனென்று குறிப்பார் "அன்புமீக்கொளும் மனச" என்றும், அத் தீவிரதர பக்குவமுடையார்க்கு ஒரு காலங்குறிப்பிட் டோதவேண்டாவாகலின் உடனேயோத வொருப்பட்டா ரறிஞனெனும் ஆசிரியரென்பார் "அன்னணம் அறைகுவேம்" என்று மியம்பினர். குருவிற்கும் மேலானவன்; குருவாகிய மேலவன் என்னும் பொருளிற் "குருபரன்" என்பது பிரயோகிக்கத்தக்க தொன்றாகலிற் சிவகுரு என்றாராயிற்று. இதன் விவரம் பரிபூரணானந்தபோதத்தின் பாயிரத்து ௬, ௧௩ - ன் உரைகளில் விளக்கப்பட்டுளதாகலின் அது கடைப்பிடிக்க. வானானது தற்பயன் கருதாது பெய்புமுரிமை தோன்றிற்பெய்து, உலகை நிலைபெறுத் தன்மானக் குகேசுரனும் விளங்குவானாகலின், வானை உவமைகூறினர். இவன் பெய்யும் இன்பமழை எஞ்ஞான்றுங் கேடு பயக்காமையின் "மாமழை" எனப்பட்டது. மா = பெருமை. குகேசுர நாட்டமுடையார்க்கே இருதய குகையாகிய தகராலயத்தின் இரகசியமும் வெளிப்படூஉ மென்பது தோன்ற "என்னுள் மேவு குகேசுரா" என்றார். குகேசுரன் - வடநூன்முடிபி னுளது.

> "சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி
> உரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
> விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
> கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
> கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப."

என்பது விதியாகலின் வழிபடு கடவுளை வாழ்த்தி அறிஞனெனும் ஆசிரியர் சொல்லத்தொடங்கின ரென்க. "குருபரா" என்றமையின், குருவணக்கமுங் கூறினரென்பதூஉங் கொளக்கிடக்கின்றது. என்னை? தைத்திரீயோபநிஷத்தின் சிக்ஷாவல்லி (ஆசார்ய தேவோபவ =) "ஆசாரியனைத் தெய்வமாகப் பாவித்திரு" என்றுங் கூறுகின்றதாகலின்.

'மனச' என்றது அண்மைவிளியென்பதை "அண்மைச் சொல்லிற் ககர மாகும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தா னமைக்க. அன்னணம் = அப்படி; அன்னவண்ணம் என்பதன் மரூஉ. "அறைகுவேம்" என்னுஞ் சொல் ஒருவனைச் சொல்லும் வழக்கினாகிய வுயர்சொற் கிளவி; "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்—ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்—வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தா னமைக்க; கு - சாரியை. "அவிர் குரு, மேவு குகேசுரா" என்

பன வினைத்தொகை. 'திறம்' என்ற விடத்து இரண்டனுருபு விரித்துரைக்க. 'ஓத' என்பதற்கு எழுவாயாகிய யான் என்பதூஉம், 'நல்லருளுதவு' என்பதற்கு எழுவாயாகிய நீ என்பதூஉம் வருவித்துரைக்க. அறிஞனும் ஓதும் - செய்யுமென்னும் முற்று ஆண்பாலுக்கு வந்தது. ஆல் - அசை. (உ)

தகரவித்தை யித்தன்மைத்தென்பது.

ஓல வாரண நான்கி னுங்கய
　முற்ற சாம முணர்த்துமச்
சீல பூரண தகர வித்தை
　தெரிக்கி லண்ட களேபர
மூல கார்ண மாயி ருக்குமம்
　முறைமை தன்னி லிரண்டுமாங்
கோல மாக விளக்கி னன்குறு
　குடில மென்பெயர் தோன்றுமே.

ஓலமிடுகின்ற நான்கு வேதங்களுள்ளும் பெருமை பொருந்திய சாமவேதமுந் தெரிக்கின்ற அந்த இயற்கை வியாபகமாயுள்ள தகர வித்தையைச் சொல்லுமிடத்து, அண்ட பிண்டங்களின் மூலகாரணமாக விருக்கும். அக்காரணத்தினல் இரண்டு வகையுமாம். நன்ருக வுணர்த்துங்கால், திவ்வியமாகிய ஆகாயமென்னும் பெயர் தோன்றி நிற்கும்.

வேதங்கள் சிவபரம்பொருளைத் தேடியிளைத்தலின் ஓலமிட்டனவென்றதாம். இக்கருத்தே பற்றி, "வேதங்கள் ஐயா வென வோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே" எனத் திருவாசகமுந் தெரிக்கின்றதன்றே. ஐயாவென=ஐயனேயென்று துதிக்க. வேதம் ஆரண்யகத்தை யுடைமையால் ஆரணமெனும் பெயர்த்து. ஆரண்யகமாவது வானப்பிரத்த சன்னியாச ஆச்சிரமங்களை யடைந்து ஆரணியம் புக்கமர்ந்து பசுபதியின்றிருவருளிற் பாடப்படும் பாட்டுக்களே. அவை ஐதரேயாரண்யகம், தைத்திரீயாரண்யகம், பிருஹதாரண்யகம் முதலியனவாம். இனி, அருணசம்பந்தமும், அருண மண்டலாந்தர்க்கத சிவசூரியசம்பந்தமுமாகிய தோத்திரங்களுண்மையால் ஆரணமென்பாருமுளர். "மூன்று வேதங்களும் வாக்காதிகளே: வாக்கே இருக்குவேதம்: மனமே யசுர்வேதம்: பிராணனே சாமவேதம்" எனும்பொருள் பயக்கத்தக்கதாய் "த்ரயோ வேதாஏதஏவ வாகேவருக்வேதோ மநோயஜுர்வேத 8 ப்ராணஸ்

ஸாமவேத ஃ।" என்று சொல்லப்படுவதாயுள்ள வசனம் யஜுர் வேத காண்வசாகைப் பிருஹதாரண்யகோபநிஷத்தின் ௩ - ஆம் அத்தியாயத்திருக்கின்றமையின், அவ் வாக்கினும் மனசினும் பிராணன் சிரேட்டமாந்தன்மையின், இருக்கு உக - சாகை, யசு ௧0௧ - சாகை, அதர்வணம் ௯ - சாகையென் றோதவிருப்ப; அச் சாமம் ஆயிரஞ் சாகை யுடைமையின் "ஆரணம் நான்கினுங்கயம் உற்ற சாமம்" என்றுரைத்தார். கயம்=பெருமை; "களிறும் பெருமையு மேன்மையுங் கயமெனல்" என்பது பிங்கலநிகண்டு. "சாமமுமுணர்த்தும்" என்னும் உம்மை விகாரத்தாற் றொக்கது. பெருமைவாய்ந்த சாமவேதமுமுணர்த்துமென்றமைபால் ஏனைய வேதங்களும் அத்தகரவித்தையை யுணர்த்துமென்ப தறியக்கிடக்கின்றது. அவ்வாறுணர்த்தினமை—

(௧) (Grantha text)

"ஹ்ருதபத்மமத்யேஸர்வம்தத்ப்ரஜ்ஞாநேத்ரம் ப்ரஜ்ஞாநேப்ரதிஷ்டிதம் ப்ரஜ்ஞாநேத்ரோலோகஃ ப்ரஜ்ஞாப்ரதிஷ்டா ப்ரஜ்ஞாநம்ப்ராஹ்ம"

என்னும் ருக்வேத ஆத்மபோதோபநிஷத் வசனத்தையும்,

(௨) (Grantha text)

"யஏஷோந்தர்ஹ்ருதய ஆகாசஸ்தஸ்மிஞ்சேதே ஸர்வஸ்யவசீ ஸர்வஸ்யேசாநஃ ஸர்வஸ்யாதிபதிஃ"

என்னும் யஜுர்வேத பிருஹதாரண்யகோபநிஷத்தின் ௬ - ஆம் அத்தியாய வசனத்தையும்,

(௩) (Grantha text) "ஆவிஸ்ஸந்நிஹிதம் குஹாசரம்"

என்னும் அதர்வணவேத முண்டகோபநிஷத் வசனத்தையுங் கொண்டறியலாம். (௧) ஆவது—இருதயகமல மத்தியிற சர்வம் என்பதுளது: பிரஞ்ஞையைக் கண்ணாகவுடைய அது பிரஞ்ஞானத்திலிருக்கின்றது: உலகத்திற்குப் பிரஞ்ஞானமே கண்: பிரஞ்ஞையே யிருப்பிடம்: (அந்தப்) பிரஞ்ஞானம் பிரமம். எனுந் தமிழைத் தரும். "ப்ரஜ்ஞாநம்" என்பது மேலான அறிவெனப்படுமாகலின், அவ்வறிவாகிய சிற்சத்தியை யுடம்பாகக் கொண்டுளது பிரமமென்பதே 'பிரஞ்ஞானத்தி லிருக்கின்றது' என்பதன் பொருளாகும்.

(ஹ்ருதஉயெ) "ஹ்ருத்பத்மமத்யே" என்பது நீங்கலாக எனைச் சொல்லனைத்தும் ருக்வேத ஐதரேயாரண்யகோபநிஷத்தின் இறுதிப் பாகத்துமுள்ளன. (உ) ஆவது—யாது உள்ளிருதயாகாசமாயிருக்கின்றதோ அதனில் அனைத்தையும் வசீகரிப்பவனும், அனைத்திற்கும் அதிபதியும், சருவசுதந்திரனுமான ஈசானனமர்ந்தனன். எனுந் தமிழைத்தரும். ஈசானன் என்னும்பெயர் சிவனுக்கே யுரியது. இதனை, (ஈஶாநஶ்சங்கர ஶ்சந்த்ரஶேகர:) "ஈசாநச்சங்கரச் சந்த்ரசேகர:" எனும் அமரஸிம்ஹ மொழிகளானறிக. "யஏஷோந்தர்ஹ்ருதய ஆகாச:" என்னும் இந்த உபநிஷத் வசனத்தையே தொடர்ந்து (தஸ்மிந்நயம் புருஷோ மநோமய: । அம்ருதோ ஹிரண்மய: ॥) "தஸ்மிந்நயம் புருஷோ மநோமய: । அம்ருதோ ஹிரண்மய: ॥" என்று யஜுர்வேத தைத்திரீயோபநிஷத்தின் சிக்ஷாவல்லியுந் தெரிக்கின்றது. பொருள் :—"இந்த இருதயத்திற்குள்ளே எந்த ஆகாசமுள்ளதோ அதன்கண் ஞானத்தினு லறியக்கூடிய புருடனும் பொன்வண்ணனுமான அமிர்தனுளன்" எனவாம். இந்த அமிர்தனென்னும்பெயர் சிவனுக்கே யுரியதென்பது—"பிரமசாரிகள் யாஞ்ஞவற்கியரை நோக்கி எதனைச் செபித்தால் அமிர்தத்துவமெய்துமெனு வினைய வினாவிற்கு அவர், சதருத்ரீயத்தைச் செபித்தாலெய்துமென்றும், இச் சதருத்ரீயத்தி லடங்கியவை அமிர்தத்தின் பெயர்களென்றும் விடையிறுத்தனர்" என்னும் பொருளை யஜுர்வேத ஜாபாலோபநிஷதம் (அதஹைநம் ப்ரஹ்மசாரிண ஊசு:।) "அதஹைநம் ப்ரஹ்மசாரிண ஊசு: ।" என்றற்றொடக்கத்து வாக்கியங்களாற் பகருமாற்றானே சித்திக்கின்றது. இச் செய்தி, சைவ சமயசரபத்துக் கைவல்லிய காண்டத்துப் ௩௩ - ஆம் அத்தியாயத்தே நன்குணரத் தக்கது. (௩) ஆவது—விளக்கமுள்ளதும், இருதய குகையிலிருக்கிறதும், நெருங்கிநிற்பதும் (அப்பொருளே). எனுந் தமிழைத்தரும். இந்த அதர்வணவேதத்தைச் சார்ந்ததாய்ப் பிரமதேவரது திருவாக்காயுள்ள சரபோபநிஷதம் (அணோரணீயாந்மஹதோமஹீயாநாத்மா குஹாயாந்நிஹிதோஸ்ய ஜந்தோ: । தமக்ரதும்பஶ்யதிவீதஶோகோ தாதுஃப்ரஸாதாந்மஹிமாநமீஶம் ॥) "அணோரணீயாந்மஹதோமஹீயாநாத்மா குஹாயாந் நிஹிதோஸ்ய ஜந்தோ: । தமக்ரதும்பச்யதிவீதசோகோ தாது: ப்ரஸாதாந்மஹிமாநமீசம் ॥" என்றோதுதலும் இங்ஙனங் கருதத்தக்கதே. தமிழ்:—"அணுவினு மணுவாய்ப் பெரிதினும் பெரிதாயுள்ள (பரம) ஆன்மா

இந்தச் செந்துவினது இருதய குகையிலுள்ளது: தன்னுடைய மகிமைக்கு ஏதுவாயுள்ள அதனைக் கன்மநீக்கமுள்ளோன் தனக்காதாரமான ஈசனது பிரசாதத்தினாற் சோகமில்லாதவனாய்க் காண்கின்றனன்" எனவாம். இச் சரபோபநிஷத் வசனந்தானே நாரதபரிவ்ராஜகம், சுவேதாச்வதரம், கடம் என்னும் உபநிஷதங்களிலும், தைத்திரீயாருணசாகை நாராயணத்திலுங் கூறப்பட்டுள தென்பதைப் பாயிரத்து ௬ - ன் உரைக்கண்ணேயே யுரைத்தாம். சாமவேத முணர்த்தினமை—

(𑌅𑌥 𑌯𑌦𑌿𑌦𑌮𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌦𑌹𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂
𑌵𑍇𑌶𑍍𑌮 𑌦𑌹𑌰𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌨𑍍𑌤𑌰𑌾𑌕𑌾𑌶𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑌨𑍍𑌵𑍇
𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌾𑌵 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌂)

"அதயதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம்
வேச்மதஹரோஸ்மிந்நந்தராகாசஸ் தஸ்மிந்யதந்தஸ்ததந்வேஷ்
டவ்யம் தத்வாவ விஜிஜ்ஞாஸிதவ்யம்"

என்னும் வாக்கியங்களிற் றெளியற்பாற்று. ஸாமவேத சாந்தோக்யோபநிஷத்தின் அ - ஆம் பிரபாடகத்திலுள்ள இவ் வாக்கியங்களின் றமிழ் :—"பிரமபுரமென்னும் இதிலே தகரபுண்டரீக வீடுள்ளது: இதிலே தகராகாசமுள்ளது: இந்த ஆகாசத்திற் குள்ளே யுள்ளது நாடற்பாற்று: அறியற்பாற்று" எனவாம். இவ்வாறு நான்கு வேதங்களுந் தகரவித்தையைக் கூறினும், முக்திகோபநிஷதம் (𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑌮𑍇𑌕𑌮𑍇𑌵𑌾𑌲𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍂𑌣𑌾𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇 - மாண்டூக்யமேகமேவாலம் முமுக்ஷூணும் விமுக்தயே=) "முத்திவிருப்புள்ளோர்க்கு முத்திநிமித்தம் மாண்டூக்யோபநிஷதமொன்றே சாலும்" என்றுரைக்கின்றபடி அதர்வணவேத மாண்டூக்யம் அதனைக் கூறியதுண்டுகொலோ வென்னின்,—உண்டென்பது—

(𑌅𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌃
𑌶𑌿𑌵𑍋𑌽𑌦𑍍𑌵𑍈𑌤 𑌏𑌵𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌸𑌂𑌵𑌿𑌶𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮
𑌨𑌾𑌽𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦 ॥)

"அமாத்ரச்சதுர்த்தோவ்யவஹார்ய: ப்ரபஞ்சோபசமச்
சிவோத்வைதஏவமோங்கார ஆத்மைவஸம்விசத்யாத்ம
நாத்மாநம் யஏவம்வேத யஏவம்வேத ||"

என்னும் அம் மாண்டூக்யத்தின் இறுதிக் கண்டத்து இறுதி வாக்கியங்களுழை யுணரக் கிடக்கின்றது. பொருள் :— "மேலே

கூறிப்போந்த (அகார உகார மகாரங்களென்னும்) மாத்திரையளவுக ளில்லாதவனுய், பிரபஞ்சோபசாந்தனுய், அத்வைதனுய், (பிரம விட் டுணு உருத்திரர்கட்கு அதீதப்பட்ட) நான்காவது தெய்வமாய், (பரம) ஆன்மாவாயுள்ள சிவன் ஓங்காரமேயாகின்றனன் (=ஓங்கார வாச்சியனுகின்றனன்) : இவ்வாறறிபவன் பரமான்மாவி னனுக்கிர கத்தினுற் பரமான்மாவை யடைகின்றனன்" எனவாம். இதன்கட் போந்த ஓங்கார மென்னும் அக்ஷரமானது இருதய குகையிலுள்ள ஆகாசத்தின்சுவரூபம என்பதாக மைத்ராயண்யுபநிஷத்தின் ௭ - ஆம் பிரபாடகம் (தத்ஸ்வரூபம் நபஸ꞉ கேऽந்தர்பூதஸ்ய யத்தேஜஸ்தத் த்ர்யக்ஷரம்) "தத்ஸ்வரூபம் நபஸ꞉ கேந்தர்பூதஸ்ய யதோமித்யே தத க்ஷரம்" என்று கூறிச்சேறலானும், ௬ - ஆம் பிரபாடகம் ௩ - ல் (த்ர்யக்ஷரம் புந꞉ பஞ்சதா ஜ்ஞேயம் நிஹிதம் குஹாயாம் - த்ர்ய க்ஷரம் புநபஞ்சதாஜ்ஞேயம் நிஹிதம் குஹாயாம்=) "மூன்றக்ஷர முடையதும் ஐந்துவகையா யறிதற்குரியதுமாயுள்ளது இருதய குகை யில் வைக்கப்பட்டுளது" என்று கூறுகின்றமையானும் அம் மாண் டூக்யமுந் தகரவித்தையே கூறிற்றென்பது வலியுறுகின்றதன்றே. மூன்றக்ஷரம்=அகாரம், உகாரம், மகாரம். இம் மாண்டூக்யமானது நான்கு ரூபமுடைய நாராயணனை மண்டூகரூபியான வருணன் றுதி த்த துதியேயாம்; இதனைப் பாத்மபுராணஞ் சொல்லுமென்பதாக மத்துவபாடியத்தி லெழுதப்பட்டமை கோடற்பாலதன்று. என்னை? அதன்கண் நான்காந்தெய்வப்பெயர் சிவ சத்தமாயிருத்தலானும், அப் பெயர் விட்டுணுமூர்த்திக் கின்மையானும், இவ் வுபநிடதப் பொருளை விளக்குவதாயுள்ள அதர்வசிகை கூறிய முடிவு—

(ஸர்வகரணாநி மநஸி ஸம்ப்ரதிஷ்டாப்ய த்யாநம் விஷ்ணு꞉ ।
ப்ராணம் மநஸி ஸஹ கரணை꞉ ஸம்ப்ரதிஷ்டாப்ய த்யாதா
ருத்ர꞉ । ப்ராணம் மநஸி ஸஹ கரணைர் நாதாந்தே பரமாத்மநி ஸம்ப்ரதிஷ்டாப்ய த்யாயீதேசாநம் ப்ரத்யாயிதவ்யம்

ஸர்வகரணானிமநஸிஸம்ப்ரதிஷ்டாப்ய த்யாநம்விஷ்ணுঃ ।
ப்ராணம்மநஸிஸஹகரணைஸ் ஸம்ப்ரதிஷ்டாப்யதயாதாருத்ரঃ ।
ப்ராணம்மநஸிஸஹகரணைர் நாதாந்தேபரமாத்மநிஸம்ப்ரதிஷ்
டாப்ய த்யாயீதேசாநம் ப்ரத்யாயிதவ்யம்)

"எல்லாக் கரணங்களும் மனத்திற் பிரதிட்டிக்கப்பட்டுளவாக வின் அம் மனமாயிருக்கின்ற விட்டுணு தியானமாவன் : அம் மனம்

பிராணனிற் பிரதிட்டிக்கப்பட்டுளதாகலின் அந்தப் பிராணனுயிருக்கின்ற உருத்திரன் தியாதா (= தியானிப்போன்) ஆவன்: காணம், மனம், பிராணனென்பன நாதாந்த பரமான்மாவிற் பிரதிட்டிக்கப்பட்டுளவாகலின் அப் பரமான்மாவாயிருக்கின்ற மிகவுந் தியானிக்கற்பாலனுகிய ஈசானனைத் தியானித்திடுக" எனவிருத்தலானும், இவ் வதர்வசிகை பஞ்சருத்ரோபநிஷத்துக்களில் ஒன்றெனவழங்கப்படுதலானும், அதர்வணவேத பஸ்மஜாபாலோபநிஷத்—

([illegible]
[illegible])

"அத்வைதம்சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணுருத்ராதீத
மேகமாசாஸ்யம் பகவந்தக் சிவம்"

என்னும் வசனத்தால் அந்த அத்துவித வத்துவாகிய நான்காந்தெய்வம் பிரமன் விட்டுணு உருத்திரனென்னும் மூவர்க்கும் மேலாய சிவமென விளக்குகின்றமையானும், இத்திறச் சுருதிகட்கு மாறுகோளாக ஒரு புராணங் கூறுமாயின் அது மாண்டூக்யத்தின் மாண்புணர்ந்துகொண்ட சிவசமய விரோதியினது செய்கையின்பாற்படுமென்னு நியாயவாற்றானும் அது மறுக்கப்படுமாகலின். ஈண்டொன்று கூறுதும்—

([illegible]
[illegible])

வ்யாஸோபதிஷ்டஸூத்ராணும் த்வைதவாக்யாத்மநாம் சிவே!
அத்வைதமேவஸூத்ரார்த்தம் ப்ராமாண்யேநகரிஷ்யதி ||)

"சிவையே! வியாசர்செய்த சீவான்மா பரமான்மாவென்னுந் துவிதவாக்கிய சூத்திரங்கட்கு அத்வைதமே சூத்திரார்த்தமெனச் சங்கராசாரியர் பிரமாணமாகத்தக்க பாடியத்தைச் செய்வர்" என்று (அந்தப் பாத்மபுராணத்து முள்ள) சிவனே கூறினனென்பதாகச் சிவரஹஸ்யத்தில் வருஞ்செய்தியை இப்பாடியகாரர் ஏன்றுகொள்ளின், இவரது துவிதவாத (மத்துவமத)மும், அவ்வாதச் சார்பிற் செய்யப்பட்ட பிரஹ்மஸூத்ரபாஷ்யமும் அப்ரமாணமாய் அடியோடொழியுமாகலிற் புராணக்கூற்றுக்கள் பயன்படுமாறே பயன்படுவனவென்னுந் துணிபுரை அவருங் கோடற்பாலதேயாம். சதுர்த்த சப்தத்தில் நாராயணநாம மெதுவுஞ் சுருதியில் யாண்டும் படிக்கப்

பட்டதின்றென்பது முதலிய நியாயமெல்லாஞ் சைவசமயசரபத்திற் காணலாம்.

இங்ஙனம் பிரமாணிக்கப்பட்ட ஆத்மபோதம், பிருஹதாரண்யகம், முண்டகம், ஐதரேயம், தைத்திரீயம், சரபம், நாரதபரிவ்ராஜகம், சுவேதாச்வதரம், கடம், சாந்தோக்யம், மாண்டூக்யம், மைத்ராயணி, அதர்வசிகையென்னும் உபநிஷதங்களிலும், தைத்திரீயாருண சாகை நாராயணத்திலும், பாயிரத்து ௫-ன் உரையிற் காட்டப்பட்ட கைவல்யோபநிஷத்திலும், பிரச்நம், பஞ்சப்ரஹ்மம், மண்டலப்ராஹ்மணம், ஸுபாலம், சாண்டில்யம், ஸௌபாக்யலக்ஷ்மி, யோகசிகை, யோககுண்டலி, பைங்கலம், மைத்ரேயம் முதலிய உபநிஷதங்களிலும் இத் தகரவித்தையின் இயல்புகளும், உபாசனைக் கிரமங்களுந் தொகுத்தும் விரித்துங் கூறப்பட்ட மாண்புடையனவே. இவ்வித்தை அண்டத்திலுள்ளதும் பிண்டத்திலுள்ளதுமென இருதிறப்பட்டு அவ்வண்டபிண்டங்கட்கும் ஆதாரமாயிருத்தலின் "அண்டகளேபர மூலகாரணமாயிருக்கும்; அம்முறைமைதன்னி லிரண்டுமாம்" என்றார். களேபரம் = தேகமாகிய பிண்டம்; அமரஸிம்ஹங் காண்க. உயிரிலதாயின் உடம்பு நில்லாதெனல் கண்டவாறு பரமான்மப்பொருளிலதாயின் உலகங்களாயுள்ள அண்டமு நில்லாதென்பதறியப்படுதலின், தகரவித்தையை அவற்றின் மூலகாரணமென்ற தேற்புடைத்தேயாம். பொருள்கட்கெல்லாம் இடங்கொடுத்து நிற்றலின் அவ் வித்தை ஆகாயமாம். வித்தை = ஞானம். ஆகாயமே "குடிலம்" எனப்பட்டது; சூடாமணிநிகண்டு காண்க. தூல சூக்கும வுடம்புகளின் இதயத்தானங்கட் கப்பாற்பட்டுள்ள காரணதேகத்தின் நடுநிலைக்களமே அவ் வாகாய பிண்டத்தலமாம்.

(ஸ்ரீஶ்ரம் ஷஹாவெ) "சீலம் ஸ்வபாவே" என்று அமரஸிம்ஹம் நாநார்த்தவர்க்கத்திற் கூறுமாறு சீலமென்பது இயற்கையாதலின் அது பொருந்தக்கூறுவார் "சீலபூரண தகரவித்தை" என்றார். (ஸ்ரீஶ்ரம்) ஸ்ரீலம் என்னும் வடசொல் சீலமென விகாரப்பட்டதெனக் கொளிற் பூரண சம்பத்துள்ள தகரவித்தை யென்பது பொருளென்க. 'வித்தையை' என்னும் இரண்டனுருபு விகாரத்தாற்றொக்கது. 'நன்கு' என்றதில் கு - பண்புப் பெயர் விகுதி. என் பெயர் - வினைத்தொகை. (௫)

நூல் வரலாற்றியன் முற்றிற்று.

---

## உ. பிண்டதகரவித்தையியல்.

---

இருதய புண்டரீகபுட்பத் துள்ளிடத்தே பராசத்தியை
நீங்காப் பரம்பொருள் சூக்குமமாயும், அகண்
டாகாசமாயு முளதென்பது.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

பிண்ட மாமுரு விற்கு நாநிலை
பேச வுள்ளவு ளிதயமாம்
புண்ட ரீக மலர்க்கு ளேயருள்
புரிப ரைப்பொரு ளாயிரு
அண்ட ருந்தெரி வரிய சூக்கும
மாய கண்ட வியோமமொன்
றுண்ட தைச்சிவம் பிரம மென்றுறழ்
வுடைய பாவல ரறைவரே.

பிண்டமாகிய தேகத்திற்கு மத்திய நிலையாகச் சொல்லுதற் குள்ள உள்ளிடத்து இருதயமென்னும் புண்டரீகப் பூவின்கண், சரா சரமனைத்தும் புரந்தருள் தயாசிந்துவாகிய பராசத்தியை நீங்காப் பொருளாய்ச் சாகாத் தேவர்களாலு மறிதற்கரிய சூக்குமமாயுள்ள அகண்டாகாச மொன்றுள்ளது. அதனையே சிவமென்றும், பிரம மென்றும் அறிவுடைய புலவர்கள் கூறுவர்.

* பிண்டமென்பது ஒரு முதலெனப்படும்; அண்டுக் கருதிக்கிளந் தது பஞ்சபூதம் முதலியன பரிணமித்துத் திரண்ட வுடம்பையே; "முதலினை சினையினை யெனவே றுளவிலை—உரைப்போர் குறிப்பி னவற்றே பிண்டமும்." என்னுஞ் சூத்திரத்தான் அது போதரும். (அதாத꞉ ப்ருதிவ்யாதி மஹாபூதாநாம் ஸமவாயம் ஶரீரம் - அதாத꞉ ப்ருதிவ்யாதி மஹாபூதாநாம் ஸமவாயம் சரீரம்=) "பிருதிவிமுதலிய மகாபூதங்களின் சேர்க்கைதான் சரீரம்" என்று யஜுர்வேத சாரீரகோபநிஷதங் கூறுதலும் அது. இவ்வுபநிஷத்தில்—ஞானேந்திரியங்க ளெனப்படுஞ் செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகிய ரு - ம் முறையே ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவியென்னும் ஐந்தின்கூறென்பதூஉம்; இவற்றின் விடயங்கள் சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தமென்பனவென்பதூஉம்; கன் மேந்திரியங்க ளெனப்படும் வாக்கு, கை, கால், பாயு, உபத்தம்

ஆகிய ரு - ம் முறையே ஆகாயம் முதலிய ஐந்தின்கூறென்பதூஉம்; இவற்றின் விடயங்கள் பேசுதல், பற்றுதல், நடத்தல், மலசலங் கழித்தல், ஆனந்தித்தலென்பன வென்பதூஉம்; என்பு, தோல், நாடி, மயிர், மாமிசமெனும ரு - ம் பிருதிவியின்கூறென்பதூஉம்; மூத்திரம், கபம், இரத்தம், சுக்கிலம், வியர்வெனும் ரு - ம் அப்பு வின்கூறென்பதூஉம்; நடத்தல், கீறுதல், கண்களை மூடுதல், திறத் தன் முதலியன வாயுவின் கூறென்பதூஉம்; காமம் (= ஆசை), குரோதம், உலோபம், மோகம் (= அதிகவிசுவாசம்), பயமென்பன ஆகாயத்தின் கூறென்பதூஉம்; கண்டத்திற் சங்கற்ப விகற்பங்க ளைச் செய்யும் மனமும், முகத்தில் நிச்சயத்தைப்புரியும் புத்தியும், இருதயத்தில் அபிமானத்தை யுண்டுபண்ணும் அகங்காரமும், நாபி யில் முன்னிழைத்த காரியத்தைச் சிந்திப்பிதனும் அவதாரணத்தை யிழைக்குஞ் சித்தமு முள்ளன; மனம் முதலிய இந் நான்குமே அந் தக்கரணமெனப்படுமென்பதூஉம்; இந் நான்கோடுங் கூடிநிற்றல் சொப்பனம், இவைகளும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களுமாகிய பதினுன்கோடுங் கூடிநிற்றல் சாக்கிரம், சித்தத்தோடு கூடிநிற்றல் சுழுத்தி, சீவன் (= புருடதத்துவம்) என்பதனோடு கூடிநிற்றல் துரிய மாமென்பதூஉம்; ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், (பிராணன் அபானன் வியானன் உதானன் சமானனெனும்) பிராணவாயுக்க ளும், மனமும், புத்தியுமாகிய கள - ம் சூக்குமமெனும் இலிங்கதேக மெனப்படுமென்பதூஉம்; சாத்துவிகம், இராசதம், தாமதமென்பன குணங்களாமென்பதூஉம்; இத்திறச் சரீரத்திலுள்ள (ஜீவபரமாத்ம நோர்மத்யே ஜீவாத்மா க்ஷேத்ரஜ்ஞ:=) சீவ பரமான்மாக்கட்குள் ளே சீவான்மா க்ஷேத்திரஞ்ஞனென்பதூஉஞ் சொல்லப்பட்டுள. (க்ஷேத்ரஜ்ஞஸ்வரூபயோ:) "க்ஷேத்ரஜ்ஞஸ் ஸபரஸ்தயோ" என்று மிருகேந்த்ராகம பசுலக்ஷணப்ரகரணமுஞ் சொல்லிற்று. க்ஷேத்ரம்= சரீரம்.

சிவ தாதான்மிய சிற்சத்தியையே 'பரை' என்றார். மகத்தா யுள்ள விழிமுதலிய புறக்கருவிகளும், மனம் முதலிய அகக்கருவிக ளும் அதனை யடையமாட்டா வென்பார் "அண்டருந தெரிவரிய சூக்குமம்" என்றார். அண்டரும் என்னும் உம்மை உயர்வுசிறப்பு. அண்டர்=தேவர். தேவ ரறியகில்லாரென்பது—

(மாயயா ஶோஷிதஸ்வஸ்வா ஸூக்ஷ்மாஞ்சைவஜ்ஞாநஸ்ய ।
நஜாநந்தி ஸுராஸ்ஸர்வே ஸர்வகாரணகாரணம் ॥)

"மாயயாமோஹிதச்சம்போர் மஹாதேவம்ஜகத்குரும் ।
நஜாநந்திஸுராஸ்ஸர்வே ஸர்வகாரணகாரணம் ॥"

என்னுஞ் சுருதிகொண்டு வலியுறுத்தப்படும். பஞ்சப்ரஹ்மோபநிஷத்தி லுள்ள இதன்றமிழ் :—"தேவர்யாவருஞ் சம்புவின் மாயையான் மோகமுற்று உலககுருவுஞ் சருவகாரண காரணனுமான மகாதேவனை (அனுபூதி வாயிலாக) அறியா ராயினர்" என வரும். (𑌶𑌿𑌵𑌂) சிவமென்பது மங்களம், இன்பமெனப் பொருள்படும்; அத்தன்மையுடைப் பரம்பொருள் சிவமெனப்பட்டதென்ப. "மனிதர்க்கு இன்பஞ்செய்ய விரும்பி எப்பொருள்களுக்கும் நித்தியமாய் உபக்கிரமமாயுள்ளதை விருத்தி செய்தலினால் அந்தத் தேவன் சிவனெனப்படுவன்" என இச் சிவசப்தம் வியாக்கியானஞ் செய்யப்பட்டிருப்பதை,

(𑌸𑌮𑍇𑌧𑌯𑌤𑌿 𑌯𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌕𑍍𑌰𑌮𑌂 ।
𑌶𑌿𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍇𑌵𑌃 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥)

"ஸமேதயதியந்நித்யம் ஸர்வார்த்தாநாமுபக்ரமம் ।
சிவமிச்சந்மநுஷ்யாணாம் தஸ்மாத்தேவச்சிவஃ ஸ்ம்ருதஃ ॥"

என்னும் மஹாபாரத துரோணபர்வச் சுலோகத்தானறியலாம். (𑌶𑌿𑌵 𑌏𑌕𑍋 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌶𑌿𑌵𑌙𑍍𑌕𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯) "சிவ ஏகோ த்யேயச்சிவங்கரஸ் ஸர்வமந்யத்பரித்யஜ்ய" என்று அதர்வசிகோபநிஷத்துங் கூறிற்று. பொருள் :—"அன்னியமான யாவையும் விட்டுச் சிவமெனும் பெற்றியால் மங்களத்தைச்செய்யுஞ் சிவனொருவனே தியானிக்கற்பாலன்" எனவாம். அற்றாகலினன்றே—

(𑌧𑌿𑌗𑌶𑌿𑌵𑌾𑌰𑍍𑌚𑌕𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌧𑌿𑌗𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌶𑌿𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌂 ।)

"திகசீசார்ச்சகம்ஜந்ம திக்வித்யாமசிவாச்ரயாம் ।"

என்று பிருஹஜ்ஜாபாலோபநிஷதமும் விளம்பிற்று. தமிழ் :—"சிவார்ச்சனை யிலாதவனது சன்மத்திலே நிந்தை வை : சிவனை ஆச்சிரயிக்காத சாத்திரத்தை யெரித்துவிடு" எனவாம். சிவத்துரோகமாக வெழுதப்பட்ட புத்தகங்கட்கெல்லாம் இச் சுருதி இயமனுயுள்ளதென்பதுணர்க. எப்பொருட்கும் பெரிதாயிருத்தலின் அச் சிவபரம்பொருள் "பிரமம்" எனப்படுவதாயிற்று; இதற்குரிய வேதாகமப் பிரமாணங்களும் பிற ஏதுக்களும் பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்து ௩ - ன் உரைக்கண்ணும், சைவசமயசரபத்துக் கைவல்லியகாண்டதது அ - ஆம் அததியாயத்துங் காட்டப்பட்டன

வாகலின் ஆயிடைக் காண்க. இங்ஙனம் வேதாகமாதி வடநூல்கள் சிவம் பிரமமெனவோதிநிற்கு முடம்பாடு சமயாசாரியரது தமிழ் மறைக்கு முண்டுகொலோவெனின்,—நன்று கடாயினாய். "மாதிவர் பாகன்" என்றற்றொடக்கத்துத் திருவாசகத்தில்—

"ஆதிப் பிரமம் வெளிப்படுத்த வருளறிவா ரெம்பிரா னாவாரே"

என வருதலி னஃதறிக வென்க. (ஸ்ரீ) ப்ராஹ்மம் - என்னும் வடசொல்லின் விகாரமே பிரமம்.

நாநிலே= நடுநிலே. நா= நடு; பிங்கலநிகண்டு காண்க. இடம் - இடன் எனப்போலி. 'சூக்குமமாய்' என்புழி உள்ள - என்பது சொல்லெழிபு. உறழ்வு=உணர்வெனும் அறிவு; "உறழ்வே யிடையீடு முணர்வும்" என்று சே - திவாகரங் கூறுமாற்றானறிக. பாவலர்=பாடல்வல்லார்; வழுவின்மை, சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, விழுமியதுபயத்தல் என்றிவை முதலாய குணங்களான் மேம்பட்ட பாவன்மையே அவ் வன்மை. (ச)

தகராலய வெளி, உள் நாம விவரம்.

பிரம மென்னுமொர் சிவமி ருந்தொளி
பெருக லிற்புதை சிவபுரம்
பிரம மாபுர மென்று மாசறு
பேழும் போருக முண்மையால்
நரல லற்றொளிர் புண்ட ரீகபு
ரமென வுஞ்சொன விண்டையைப்
பரவு மப்புர மென்று மோதுவர்
பழியி லாவறி வாளரே.

குற்றமில்லா அறிவுடைச் சான்றோர்—பிரமமென்னும் ஒப்பற்ற சிவமிருந்து (தீர்க்கதரிசிகட்கு நாளுக்குநாள்) அதிகரிக்கும் பிரகாசத்துடன் (வெளிப்பட்டு) நிற்றலாற் (பிண்டமாகிய இச்) சரீரத்தைச் சிவபுரமெனவும், பிரம மகாபுரமெனவும், குற்றமற்ற மேன்மைத்தாகிய (இருதய) தாமரை மல ரிருத்தலால் ஒலித்தலின்றி விளங்கும் புண்டரீக புரமெனவும், சொல்லப்பட்ட தாமரைமலரை, (அணைவருந்) துதித்து வழிபடத்தக்க அந்தச் சிவபுரம், பிரமபுரம், புண்டரீகபுரமெனவுஞ் சொல்லுவர்.

தகராலயத்தி னுள்ளிடம் நாதாதீதமாதலின் அது "நரலலற்றொளிர் புண்டரீகபுரம்" எனப்பட்டது. நரலல்=உள்ளோசையாகிய

நாதம். நாதாதீதமென்பதை, (𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌨𑌾𑌦𑌕𑌲𑌾𑌤𑍀𑌤𑌂) "பிந்துநாதகளாதீதம்" என்னும் ஸாமவேத தியாநபிந்தூபநிஷத வாக்கியத்தினும், (𑌨𑌾𑌦𑌾𑌨𑍍𑌤𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿) "நாதாந்தபரமாத்மநி" என்னும் அதர்வசிகோபநிஷத வாக்கியத்தினு மறிக. "நாதாந்த நாடகத்தை நன்கு வருள்செய்தீர்" எனத் திருவதிகை - மனவாசகங்கடந்தார் (உண்மைவிளக்கத்தில்) உரைத்ததூஉம் அது. அந் நாலல்—சிணிதி, சிணிசிணிதி, கண்டாநாதம், சங்கநாதம், தந்திரிநாதம், தாளநாதம், வேணுநாதம், பேரிநாதம், மிருதங்கநாதம், மேகநாதமெனப் பத்து வகையாகப் பகுக்கப்பட்டுள தென்பதை யஜுர்வேத ஹம்ஸோபநிஷதம்—

(𑌚𑌿𑌣𑍀𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 । 𑌚𑌿𑌣𑍀𑌚𑌿𑌣𑍀𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 ।
𑌘𑌂𑌟𑌾𑌨𑌾𑌦𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 । 𑌶𑌂𑌖𑌨𑌾𑌦𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 ।
𑌪𑌞𑍍𑌚𑌮𑌸𑍍𑌤𑌂𑌤𑍍𑌰𑍀𑌨𑌾𑌦𑌃 । 𑌷𑌷𑍍𑌠𑌸𑍍𑌤𑌾𑌲𑌨𑌾𑌦𑌃 ।
𑌸𑌪𑍍𑌤𑌮𑍋 𑌵𑍇𑌣𑍁𑌨𑌾𑌦𑌃 । 𑌅𑌷𑍍𑌟𑌮𑍋 𑌭𑍇𑌰𑍀𑌨𑌾𑌦𑌃 ।
𑌨𑌵𑌮𑍋 𑌮𑍃𑌦𑌂𑌗𑌨𑌾𑌦𑌃 । 𑌦𑌶𑌮𑍋 𑌮𑍇𑌘𑌨𑌾𑌦𑌃 ॥)

"சிணிதிப்ரதம: । சிணிசிணிதித்விதீய: ।
கண்டாநாதஸ்த்ருதீய: । சங்கநாதச்சதுர்த்த: ।
பஞ்சமஸ்தந்த்ரீநாத: । ஷஷ்டஸ்தாளநாத: ।
ஸப்தமோவேணுநாத: । அஷ்டமோபேரீநாத: ।
நவமோம்ருதங்கநாத: । தசமோமேகநாத: ॥"

என்றோதுமாற்றா னுணர்க. இவை தகராலயத்தின் முற்புலத்தேயுள. மேலைச்செய்யுளிற் 'பாவலர்' என்ற ஆசிரியர் ஈண்டுப் "பழியிலா அறிவாளர்" என்றது பாவன்மையேயன்றிச் செயலு நன்றாகவேண்டும் அறிவினர்க்கென அமைத்தல் நோக்கியேயென்க. பழியிலா அறிவாளர்=குற்றமில்லாத அறிவினர். பிறராற் பழிக்கப்படவில்லாத அறிவினரெனினுமாம்.

இதனால், தகராலயத்தின் வெளியிடமாகிய சரீரமும், உள்ளிடமாகிய தாமரை நடுவணுஞ் சிவபுரம், பிரமபுரம், புண்டரீகபுரமெனப் பெயரொய்தினமை தெரித்தவாறு.

புதை=உடம்பு; சூடாமணி நிகண்டு காண்க. அம்போருகம், இண்டையென்பன தாமரையின் பரியாயப்பெயர்கள்; மேலை நிகண்டு காண்க. இப்பெயர்கள் பொருளாகு பெயராய் மலரையுணர்த்தி நின்றன. ஏ - ஈற்றசை. (௫)

அவ்வம் போருக முண்ணி லாவி
டகண்ட வம்பர ஞானமாத்
தவ்வ லின்றதி நுண்மை மாண்பொடு
தானி ருத்தலி னுலதைச்
செவ்வி தாய சிதம்ப ரம்பர
தேசு றுந்தக ராலயம்
எவ்வ நூறுபொ னம்ப லங்குக
னெந்தை யாடரங் கென்னலாம்.

அத்தகைய இருதயதாமரை மலர்க்குள், பிரகாசிக்கும் அகண்டாகாசமானது சித்து வடிவாக எத்திறக்குறைவுமின்றி அதிசூக்குமத்தோடும் மாட்சியோடு மிருக்குங் காரணத்தினால் அதனை, நலமுடைத்தாய சிதமென்றும், பரமென்றும், பரதேசென்றும், உள் உற்ற தகராலய மென்றும், துக்கத்தை யறவேயொழிக்கும் பொன்னம்பலமென்றும், குகதேவனாகிய எம்முடைய பிதா திருநடனஞ் செய்யும் அரங்கென்றுங் கூறலாம்.

நிலாவிடகண்ட வம்பரம்=பிரகாசிக்கும் அகண்டாகாசம். இத்தொடரை நிலா+விடகண்ட+அம்பரம் எனப் பிரித்துக்கொண்டு 'நிலவும், கறைக்கண்டமு முடைய ஆகாயம்' எனப் பொருள்கோடலுமாம். என்னை ? (ஆகாஶமயவிக்ரஹம்) "ஆகாசமயவிக்ரஹம்" என்று பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், (ஆகாஶஶரீரம் ப்ரஹ்ம) "ஆகாச சரீரம் ப்ரஹ்ம" என்று தைத்திரீயோபநிஷத்தின் சிக்ஷாவல்லியும், (ஆகாஶோऽர்த்தாந்தரத்வாதி வ்யபதேஶாத்) "ஆகாசோர்த்தாந்தரத்வா திவ்யபதேசாத்" என்று பிரஹ்மஸூத்ரமுங் கூறுகின்றனவாகலின். இங்ஙனம், ஆகாசமயப் பிரணவசரீரி சிவனென்க. ஸூத்ரத்தின்பொருள்:—"பிரமம் (=சிவம்) ஆகாச வாச்சிய வத்து; பிற பொருண் முதலியவற்றிற்கு வேறாகச் சொல்லப்படலான்" என்றவாறு. இப்படிப் பொருள்கொள்ளுங்கால் நியாயநிமித்தம் ஆன்மாக்கட்குச் சுகதுக்கங்களை நல்குங் கர்த்திருத்துவ சமத்துவமுணர்த்து தற்பொருட்டு அமிர்தகலை நிலவையும், நஞ்சாம்விடத்தையும் உடன் கூறினரெனும்பொருளும் இரட்டுறமொழிதலென்னும் உத்தியாற் கொளக் கிடக்கின்றதென்க. அந்த அகண்டாகாசம் ஞானமாயிருத்தலாற் சிதம் எனவும், பிரணவாகார மாட்சியாயிருத்தலாற் பரம், பரதேசு, பொன்னம்பலம், அரங்கு எனவும், அதிநுட்பமாயிருத்த

லால் தகராலயம் எனவுஞ் சொல்லப்பட்டதென்க. ஓங்காரம், குடிலை, குண்டலி, பேரொளி, பிரமம், பரம், சிவம், மகாமாயை, (சுத்த) மாயை, மாயேயம், நாதம், விந்து, வைந்தவமென்பனவாதி பிரணவப்பெயர்களில் இந்தப் பரம், பரதேசு (=பேரொளி) என்பனவுமிருத்தல் காண்க. 'தஹரம்' என்னும் வடசொல் சிறுமையெனும் பொருட்டு. ஆலயமென்றதன் காரணமும், தகராலயமென்பதில் வய்ந்த எழுத்துத்திரிபு விகாரமென்பன தமிழ்நான்முடிபென்பதும் பாயிரத்து ரு - ற்றுனே விளக்கியுள்ளாம். அங்ஙனுணர்த்தப்பட்ட (வேஶ்ம) வேச்மந் என்னும் வீடுதானே சபையெனப்படுமென்பது—

(ப்ரஹ்ம தத³ம்ருதꣳ ஸ ஆத்மா ப்ரஜாபதேஸ்ஸபா⁴ம் வேஶ்ம ப்ரபத்³யே)

ப்ரஹ்ம ததம்ருதக்ஸஆத்மா ப்ராஜாபதேஸ்ஸபாம் வேச்மப்ரபத்யே)

"பிரமமாகிய அவன் அமிர்தம், ஆன்மா, பிரஜாபதி, அவனது சபையாகிய வீட்டினை யடைகின்றேன்" என்று சாந்தோக்யோபநிஷத்தின் அ - ஆம் பிரபாடக மியம்பு மதுகொண்டறியலாம். பசுபதியென்பதே பிரஜாபதியெனப்பட்டது. (ப்ரஜா) ப்ரஜா=பிரஜைகளாகிய பசுக்கள். இச் சபை அம்பலமெனப்படும். இதனை, "பொதியின் மன்றம் பொதுசபை யம்பலம்" என்னும் பிங்கலநிகண்டுச் சூத்திரத்தா னறிக. இவ்வேதுக்களாலேயே தகராலயமானது 'சிற்றம்பலம்' என வழங்கப்படுகின்றது. "சிற்றம் பலமுஞ் சிவனு மருகிருக்க—வெற்றம் பலந்தேடி விட்டோமே" என்றார் பட்டினத்தடிகளும். சிற்றம்பலமென்பது சிறுமை யென்பதன் ஈறுகிய மை விகுதிபோய்த் தன்னொற் றிரட்டின சொல்லேயாம். இதனோடு, மேன்மையுடைப் பொருட்கெல்லாம் விசேடணமொழியாந் 'திரு' என்னும் பலபொருளொருசொற் சேர்வுழி அது 'திருச்சிற்றம்பலம்' எனப்படும். பிண்ட தகராலயஞ் சிற்றம்பலமெனப்படும் வழி அண்ட தகராலயம் 'பேரம்பலம்' எனப்படுமென்பதும், இரண்டுந் தகராலயமெனப்படு ஞான்று தகரமென்பது சிறுமையெனும் அதிசூக்குமத்தைக் குறித்தலின் இரண்டுந் திருச்சிற்றம்பலமெனப்படுமென்பதும், இவ்விரண்டனுள் ஒன்றிலே தொடங்கி யொன்றிலே முடித்துக்கொள்க; இரண்டுமொன்றே; அது மேலுங் கீழும் வியாபித்துளதென்பதை அறிவுறுத்தும்பொருட்டே திருஞானசம்பந்தப் பெருந்தகை முதலினோ ரருளிச்செய்த தமிழ்மறைப் பதிகங்களின் முதற்கண்ணுங் கடைக்கண்ணும் அத் திருச்சிற்றம்பலமென்பது தீட்

டப்பட்டுளதென்பதும் ஈண்டறியக் கிடக்கின்றன. இவ்வா றறியப் படுமாற்றான் "ஓரெழுத்தொருமொழி" என்னுந் தொடக்கத்துத் தொல்காப்பியச் சூத்திரவுரையுழை அகத்தியனார் என்பதனை ஐயெழுத்தொருமொழி யெனக்காட்டிய நச்சினார்க்கினியர் திருச்சிற்றம்பலமென்னுந் தொடர்மொழியை ஆறெழுத்தொருமொழியென்றமை கோடற்பாலதன்றே. "அதி நுண்மை" எனச் செய்யுட்கட் பிரயோகிக்கப்பட்டது பிடித்து இங்குணர்த்தியுள்ள தகராலயமென்பதன் பொருளும், அங்ஙனம் "மாண்பொடு தானிருத்தல்" என்றதும்—

"அணுவிலும் அணுவாய்ப் பெரிதிலும் பெரிதாயுள்ள
பரமான்மா இச்செந்துவினது இருதயகுகையி லுளது"

என்று சுருதிகள் கூறு நெறியானே எறுழுறுமாறுமோர்க. இத்தமிழுக்குரிய வடமொழிகள் பாயிரத்து ௩-ன் உரையிற் காட்டப்பட்டன. "நுண்ணியான் மிகப்பெரியான் - - - - கணபதீச்சுரத்தானே" என ஞானசம்பந்தபெருமானது தமிழ்மறை நவிற லும் அஃதென்க. இவ்விரகசியமறிதற்குரிய புண்ணியமில்லாதார் மலச் சீவான்மாவிடத்தும் பரமான்மாவிருக்குமோ? என்றுழிதரல் ஊங்குப் பெரிதேயாமென்பது இந்நூலினு மினிதுணரலாம். "அரங்குபோ ரிடம்வட்டாடு மிடஞ்சபை" என்று ரகரவேதுகை நவில்கின்றபடி அரங்கென்பதுஞ் சுருதிசொற்ற அச்சபையின் பரியாய நாமங்களி லொன்றேயாம். "ஆட விடமும் வட்டா டிடமு மரங்கம்" என்னும் பிங்கலநிகண்டுச் சூத்திரத்தின்படி அரங்கென்பது ஆடவிடமாகலின் அஃது 'ஆடரங்கு' எனப்பட்டது. அவ்வரங்காவது— பள்ளி, புட்சேக்கை, புற்று, யானைக்கூடம், குதிரைப்பந்தி, செருக்களம், சேரியென்பன நீக்கி, எலும்பும் உமியும் கல்லும் பரலுஞ் சேர்ந்த நிலம், களித்தரை, உவர்த்தரை, ஈரத்தரை, சாம்பற்றரை, பொடித்தரையென்பன வொழித்து, ஊரின் நடுவணே தேரோடுந் தெருக்க ளெதிர்முகமாய நிலத்தினே இருபத்துநான்கு விரலளவுடைக் கோல்கொண்டு ஏழ்கோல் அகலமும், எண்கோல் நீளமுமாக வளந்து அதன்கண் ஒருகோல் உயரமுறு குறடமைத்து, அதன்கண் வாயிலிரண்டும் கரந்துபோக்கிடனும் பொருந்த வியற்றப்பட்டநிலைக் களத்தே நிலைவிளக்கும், சித்திரவிதானமும், திரையும், மன்னர் மாந்தரோடிருக்கும் அவையும், அதுசுற்றிப் புவிநிறை மாநதர் பொருந்து கோட்டியும் விளங்கவிருப்பதாம். இவ்விலக்கணங்களை முந்தையாய நாடகத்தமிழ்நூல்களி னுணர்க. இத்திறவரங்கு அண்ட தகராலயமெனப்படுஞ் சிதம்பர மஹாக்ஷேத்ரத்திருத்தலின் அது,

பிண்டதகராலயக் கடவுளதாகவுங் கூறலாமென்பார் "எந்தையாடரங்கென்னலாம்" என்றார். என்னை? அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் பிரதான நாயகனொருவனேயாகலின். இறைவனுதவிய வுடம்பினையேற்ற ஆன்மா அவனுடைய பரமைசுவரியம் முழுதுஞ் சுதந்திரமாக வனுபவிக்குஞ் சித்தாக விளங்கத்தக்க தொன்றாகலின் அக்குகனை 'எந்தை' என்றது ஏற்புடைத்தேயாம். "எந்தையாயெம்பி ரான்மற்று மியாவர்க்குந்—தந்தை தாய் தம்பிரான் றனக்கொன்றிலான்" என்றார் ஸ்ரீமந் மாணிக்கவாசகனாரும். யாம் என்னும் பகுதி எம் என விகாரப்பட்டுழி, முறைப்பெயர் விகுதியாய 'தை' புணர்ந்த சொல்லே எந்தை; அன்றி, 'எம்தந்தை' 'என்தந்தை' என்னுஞ்சொற்களின் மரூஉவே எந்தை என்றும் மொழிப. பிண்ட அரங்கத்தில் ஆடுமாட்டம் கஉ - ஆஞ் செய்யுள் தொடக்கமாகக் கூறப்படுதலின் அங்ஙனமே அதன் விவரமும், உரை மேற்கோள்களுங் கண்டுகொளற்பாலன. "பொன்னம்பலம்" என்பதன் பொருள் அ - ஆஞ் செய்யுளாக விருத்தலின் அதுபற்றி யீண்டொன்றுங் கூறிற்றிலம். சிதம்=ஞானம்; "சிதம்விண்மீன் ஞானம் வெள்ளை" என்று தகரவெதுகையுஞ் சாற்றுகின்றது. (வி.தம்) சிதம்=வியாபகம் எனப் பர்யாயார்ணவம் என்னும் வடமொழி நிகண்டு கூறுகின்றதும் அப்பொருட்டாம். இவ்வாறு பிரித்துப் பொருள்கொள்ளாது அம்பரம் ஞானமாயிருத்தலாற் "சிதம்பரம்" எனப்பட்டதென்று கொளின், இதனடுத்த செய்யுளில் அச் சிதம்பரப்பெயர் காரணத்தோடு சொல்லப்பட்டமை கூறியதுகூறலென்னுங் குற்றமாம் ஆதலின், அது கோடற்பாற்றன்று. அந்த ஆகாசம் ஞானமெனவும், பரமெனவுஞ் சொல்லப்படுதலை,

> "அத்தன்பர தத்துவ னித்தனடத் தமரும்பொது வின்பெயர் மன்றமலஞ்
> சத்தும்பரி ரண்மய கோசமகத் தனிபுண்டரி கந்துகை வண்ககனஞ்
> சுத்தம்பர மற்புத மெய்ப்பதமச் சுழுநாவழி ஞானசு கோதயநற்
> சித்தம்பர முத்தி பரப்பிரமந் திகழுஞ்சபை சத்தி சிவாலயமே."

என்னுங் கோயிற்புராணத் திருவிருத்தத்தானு மறிக. இந்த கூ-ஆஞ் செய்யுளால் அவ்வுள்ளிடத்து ஆகாயம் ஞானமெனப் பரமெனப் பரதேசெனத் தகராலயமெனப் பொன்னம்பலமென அரங்கெனப் பெயரெய்தினமையுந் தெரித்தவாறு. இங்குரைக்கப்பட்ட ஆகாயம் ங, ச - ற் சொல்லப்பட்ட ஞானுகாசமாயுள்ள சிவத்தினை ஆதாரமாகக்கொண்டு விளங்காநிற்கும் பிரணவமே.

"மஃகான் புள்ளிமு னத்தே சாரியை." என்னும் தொல்காப்பியச் சூத்திரத்ின்படி "அம்பொருகத்துள்" என நிற்கத்தக்கது அத்துச்சாரியை பெறுமனின்றது; "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்" என்றார் அத் தொல்காப்பியனாரும். ஞானமா - ஞானமாகவென்பதன் சிதைவு. தவல்= குறைபாடு; "தவலு மீனமுங் குறைபாடென் றியம்பல் வேண்டும்" என்பது பிங்கலநிகண்டு; தவ்வல் - விரித்தல் விகாரம். நுண்மை மாண்பு - செவ் வெண். தான் - சாரியை. 'அதை' என்புழி அன் சாரியை விகாரத்தாற் றொக்கது. எவ்வம்= துக்கம்; மேலே நிகண்டு காண்க. நூறு பொன்னம் பலம் - வினைத்தொகை. (ஃ)

சித்தெ னும்பத ஞான மென்று
திராவி டத்தி னும் வருதலிற்
சுத்த நித்த சிதம்ப ரஞ்சிவ
சோதி ஞானவிண் ணென் னுநல்
அத்த மேகொளு மாத றொட்டதை
யகல்வு றுநிச மானதே
நித்த லுஞ்சுக நிர்த்த னம்புரி
நிலய மம்பல மாமரோ.

சித்தென்னும் பதம் ஞானமென்பதை யுணர்த்துமென்று தென் மொழியிலுள்ள சூடாமணிநிகண்டு முதலிய நூல்களிலும் வருதலி னால் அவ்வாகாசம் பரிசுத்தமும் நித்தியத்துவமுமுள்ள சிதம்பரம், சிவசோதி மயமான சிதாகாசம் என்னும் நல்ல அர்த்தத்தையே யுடையதாகவிருக்கும். அக் காரணத்தால் அதை விட்டு நீங்காச் சத்தான கடவுள் நாடோறும் ஆனந்தநிர்த்தனத்தைச் செய்தருளுங் கோயில் அம்பலமென்று சொல்லப்படும்.

'சித்' என்னும் வடசொல்—"சித்தென்ப சயமே ஞானம்" என்று தகரவேதுகையிலும், வேறு சில தமிழ்நூல்களிலும் வருதலி னால் "சித்தெனும்பதம் ஞானமென்று திராவிடத்தினும் வருத லின்" என்றார். திராவிடம்= தமிழ். இந்தச் 'சித்' என்பதனோடு அம்பரமென்னும் வடமொழி புணர்ந்துளதே சிதம்பரம். அம்பர மென்னும் எழுவாய் மேலேச்செய்யுளினின்றும் வருவித்துக்கொள்க. சித்= ஞானம், அம்பரம்= விண் எனப்படுமாற்றானே 'ஞானவிண்' என்பது போதாலிற் சிதம்பரம், ஞானவிண்ணென்னும் அத்தமே கொள்ளும் என்றார். இஞ் ஞானவிண் வடமொழியிற் சிதாகாச மெனப்படும். இதுவும், சிதம்பரமென்பதும் வேதத்திற் சொல்லப்

பட்டனவென்பதை (𑌏𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌚𑌿𑌦𑌾𑌕𑌾𑌶𑌂) "ஏகம்ப்ரஹ்ம சிதாகாசம்" என்னும் ஸாமவேத மஹோபநிஷத்தின் ௫ - ஆம் அத்தியாய வாக்கியத்தானும், (𑌚𑌿𑌦𑌮𑍍𑌬𑌰𑌂 𑌹𑍃𑌦𑌯𑌮𑍍) "சிதம்பரந்து ஹ்ருந்யத்யே" (=இருதயமத்தி சிதம்பரம்) என்னும் ஸாமவேத தர்சநோபநிஷத்தின் ௪ - ஆங் கண்டத்து வாக்கியத்தானு மறிக. இதுவே வேதாகமங்களின் றுணிபென்பார் "நல்லத்தமே" எனத் தேற்றேகாரம்வைத் துரைத்தனர். அத்தம் - அர்த்தமென்பதன் மரூஉ. சுத்த நித்த சிதம்பரம் எனவே ஏனையவெளிகள் அசுத்தமாதல், சடமாதல், இலயமாதலென்னும் பெற்றியவெனப்படும். சிற்சத்தி வடிவம் பிரணவமாகலின் அந்தப் பிரணவவெளி சடமெனப்படாது; சைதன்னியமெனப்படுமென்பது பரிபூரணானந்த போதத்தின் முற்படலத்துப் ௧௨ - ன் உரையிற் பிரமாணங்களோடு விளக்கப்பட்டமை நனிபெரிதே. பிரணவ மகாமாயை பிரேரகமாயிருப்பதேயன்றி ஆன்மாவுக்குடம்பாயிருப்பதின்று. போந்த ௯ - ன் உரைக்கட் காட்டப்பட்ட சுருதியிலுள்ள சபையானது பாயிரத்து ௫ - ன் உரையிலும் நூல் ௩ - ன் உரையிலுங் காட்டப்பட்ட இருதயபுண்டரீக ('வேச்மங்' என்னும்) வீடாயிருத்தலினானும், அச்சபையின் பரியாயப்பெயரிலுள்ள அரங்கு ஆடலிடமாமென்பதூஉம் சபை அம்பலமெனப்படுமென்பதூஉம் மேலே ௭ - ன் உரையிற் காட்டப்பட்ட பிங்கலநிகண்டுச் சூத்திரங்களி லிருத்தலினானும் "நிர்த்தனம்புரி நிலயமம்பலம்" என்றதுஞ் சுருதிமுடிபி லுளதேயாயிற்று. நிர்த்தனம்= ஆடல். "நிலயங் கோட்டம் - - - - தேவர் கோயில்" எனச் சூடாமணிநிகண்டு கூறு நெறியானே நிலயமென்பது 'கோயில்' எனப்படும். இதன்கண்ணுள்ள இல்=வீடெனப்படுதலின், அது சுருதிகூறிய 'வேச்மங்' எனப்படுதலிற் கோயிலென்னும் பெயராற் றகராலயம் விளங்குதலும், அது கூறும்புராணங் கோயிற்புராணமெனப்பட்டதுஞ் சுருதிமுடிபே யென்க. கோ - என்பது மேன்மையைக் குறிக்கும். தகராலயம்—சன்மார்க்க ஆன்மாக்களெல்லாந் தரிசித்துய்யும் பொதுவிடமாய்ப் பஞ்சகிருத்திய வாயிலாகச் சர்வான்மாக்கட்கும் நியாயங்கொடுக்குந் தானமாயிருத்தலின் அது சபையெனவும், அம்பலமெனவுஞ் சொல்லப்பட்டது.

இதனால், அவ்வுள்ளிடத்து ஆகாயம் சிதம்பரமெனவுஞ் சிதாகாசமெனவும் அவ்விடம் அம்பலமெனவும் பெயர்பெறுமென்பதும், அப்பெயர்களின் காரணமுங் கூறப்பட்டன.

'திராவிடத்தினும்' உம் - இறந்தது தழீஇய எச்சம். தே = கடவுள். நித்தம் - நித்தலெனப் போலி; "சிந்தை செய்த மலர்க ணித்தலுஞ் சேரவே" என்றார் ஸ்ரீமத் - சுந்தரமூர்த்திசுவாமிகளுந் திருக்கழுக்குன்றத்துப் பதிகத்தில். அரோ - அசை. (எ)

**பொன்னம்பலமென்னும் பெயர்க் காரணம்.**

அந்த ஞானவி ணருளெ னும்பரை
　　யான்மண் விண்ணினும் விபுலமாய்
நிந்தை யில்பல வண்ட கோடிக
　　ணிறுவி வைக்கவொர் துறையதாய்
எந்த மானமு மற்ற பொன்மய
　　மென்ற சோதி சொரூபமாய்ச்
சந்த தத்தினு முண்மை யாலது
　　தங்க வம்பல மாகுமே.

அந்தச் சிதாகாசமானது அருளென்னும் பராசத்தியினுற் பூமி ஆகாசமெங்கணும் பழிப்பில்லாத வியாபக வத்துவாகி, பல்லாயிரகோடி அண்டமெல்லாம் நிறுத்திவைத்தற்கு ஓரிடமாகி, எவ்வித உவமானத்திற்கு மிடந்தராத இரண்மயமென்று (சுருதியிற்) சொல்லப்பட்ட சோதிசொரூபமாகி யென்ஞான்று மிருக்கின்றமையின் அது, பொன்னம்பலமென்னும் பெயரினையும் பெறும்.

பொன்னம்பலம் என்பது தங்கவம்பலமெனப்பட்டது. தங்கம் = பொன்; "தங்கச் சினகரம்" என்றார் சேந்தினிரோட்டகத்தாரும். இது, (ஹிரண்மயெவரெகொஸெ ---- தஷுூஂ ஜெ்யாதிஷாஂ ஜெ்யாதிஃ) "ஹிரண்மயே பரேகோசே ---- தச்சுப்ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஃ" என்று முண்டகோபநிஷத்திலுங் கூறப்பட்டதே. பொருள்:—"பொன்மயமான பரமஸ்தானம்: அது சுத்தம், சோதிக்குச் சோதி" என வரும். பல அண்டகோடிகள் என்றது (ஃநெகஃ கொடி ஸ்ஹூாஂஃஂ) "அநேககோடி ப்ரஹ்மாண்டம்" என்னுஞ் சுருதி நிச்சயத்திலுளது. இது, தேஜோபிந்தூபநிஷத்தின் ரு - ஆம் அத்தியாய வாக்கியம். இவ்வண்டகோடிகள் நிறுத்திவைக்கப்பட்ட துறையே தகராகாசமென்பது—

(அ) (ஃயயகூூாஸவெஸதஂவிபூயாதிரெஷாஂ
　　ஔாகாநா ஃஷஂஹெஷாய)

" அதயஆத்மாஸஸேதுர்வித்ருதிரேஷாம்
லோகாநா மஸம்பேதாய "

என்னுஞ் சாந்தோக்யோபநிஷத்தின் அ - ஆம் பிரபாடக வசனத்தும்,

(ஆ) (ஊ௫தஞூஹவஹவிஷ்ுவெதுாவக்ஷத ஆகாஶெ
தஔதஞவெுாதஂவெதி - - - - தஷக்ஷரஂ)

" பூதஞ்சபவச்சபவிஷ்யச்சேத்யாசக்ஷத ஆகாசே
ததோதஞ்ச ப்ரோதஞ்சேதி - - - - ததக்ஷரம் "

என்னும் பிருஹதாரண்யகோபநிஷத்தின் ரு - ஆம் அத்தியாயத்து அ - ஆம் பிராஹ்மண வசனத்தும்,

(இ) (யூெதஶ ஊஹிஜெ ாஸ௱ாஸிஜ-வலஶெூஃ)

" த்ருதேச்ச மஹிம்நோஸ்யாஸ்மிந்நுபலப்தே: "

என்னும் பிரஹ்மஸூத்ர தஹராதிகரணஸூத்ரத்தும் பெறப்படுகின்றது. இன்னும் பலவுள. பொருள்:—(அ) பின்னர் இவ்வுலகங்கள் பேதியாதிருக்கும்படி அந்த (ப்பரம) ஆன்மா அணையும் ஆதாரமுமாம். (ஆ) அளவில்லா தெங்கணுமுள்ள அந்த அக்ஷரத்தை (=பிரமத்தை) ஆதாரமாகக் கொண்டுள்ள ஆகாயத்திற் பூதபவிஷ்ய வர்த்தமான வுலகெல்லாங் கோக்கப்பட் டிருக்கின்றன. (இ) இதன்கண்ணே(=தகராகாசத்தில்), (பிரபஞ்சத்தைத்) தாங்குதலாகிய அவனது மகிமையுங் காணப்படலால். எனவாம். ப்ரோதம்= கோத்தல். பிண்ட தகராகாசமாகிய உட்சிதாகாசமும், அதன் புறச்சிதாகாசமுஞ் சுவானுபூதிமான்கட்கு ஒன்றாகவே காணப்படு முண்மையாயிருத்தலின், அச் சிதாகாசத்திற் கோக்கப்பட்டுள்ள அண்டகோடிகள் பிண்டதகரவித்தையின்பாற் படுத்துங் கூறப்பட்டன. அவைகள் ஒன்றோடொன்று மோதுண்டு கேடடையாது நிகழும் வண்ணம் வரையறைசெய்துளதா மிறைவன் சத்தியென்பார் "நிறுவி வைக்க" என்றார். இவ்வாறு பல அண்டங்கள் நிறுவி வைக்கப்பட்டன வென்றற்குந் தூலமான அண்டங்களைச் சூக்கும ஆகாயந் தாங்கிநிற்கு மென்றற்குங் காட்சியளவை யுண்டுகொல்? எனின்,— உண்டென்க. என்னை? ஒளிவடிவாய் விண்ணிடைக் காணப்படுகின்ற பல விண்மீன்களுங் கிரகங்களு முள்ளனவாகலின். இப்பூமியும் அன்னணம் விண்ணிடை நிறுவப்பட்ட ஒளியுள்ள ஒருண்டையேயாம். "அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்" எனவெழுந்த

திருவாதவூரடிகளது திருவாக்குமோர்க. பிருதிவி அப்புவாகிய இரண்டுமே தூலவிழிக்குப் புலப்படுவனவாகவும், தேயு பிருதிவிப்பொருள்களிற் பற்றிக்கொண்டசெவ்வி அவ்வாறு புலப்படுவதாகவும், வாயு ஆகாயமாகிய இரண்டும் புலப்படாதனவாகவு மிருத்தலின் விண்ணிடைக் காணப்படுவனவெல்லாம் அவ்வாயு ஆகாயமெனப் படாப் பொருள்களேயாம். அவ்வாயுவும், ஆகாயமும் பிருதிவி முதலியவற்றுட் சூக்குமமாயுள்ள சடபதார்த்தங்களாம். இவ்வாயு ஆகாயங்களினு மேம்பட்ட இரகசிய தத்துவங்களுள் எதுவுந் தூல விழிக்குப் புலப்படாதென்பதூஉம் இங்குணர்ந்து கொள்க. பரமான்மாவெனும் ஆகாசத்தோடு சமவாயமாயுள்ளது சிற்சத்தியெனு ஞானாகாசம்; அதனை நீங்காது அதனுதாரத்திலுள்ளது பிரணவ ஒளிவெளி; இவ்வாறிருப்பது தகரவித்தையாகலின் அண்டகோடிகளைத் தாங்கியுள்ளது ஆன்மா, ஆகாசம் எனப் பிரமாணங்களில் வருவனவற்றிற்குக் கூறியவற் றெதனைக்கொள்ளினும் பொருந்தும்; முரணில்லை. இப்படி ஆதாரதெய்வ முளதென்பதை பொருசிறிதுமுணராது அரற்று நாத்திக வாதத்திற்குக் கண்டனமாயும், பொன்னம்பலமென்னும் பெயர்க்காரணம் புகல்வதாயும் இச்செய்யுளுளது.

ஈண்டும், சர்வாதார சிவதாதான்மிய சிற்சத்தியையே பரையென்றனர். இது, பஞ்சருத்ரோபநிஷதங்களி லொன்றாய சுவேதாச்வதரத்தின் சு - ஆம் அத்தியாயத்திலே (ஶ்ரவஸ்யஸக்தி:) "பராஸ்ய சக்தி:" எனவருதல் காண்க.

அந்த - அகரச்சுட்டின் மரூஉ; இது பண்டறிசுட்டு. 'சிந்தையில் விபுலமாய்' என மாறுக. விபுலம்=விரிவு; சூடாமணிநிகண்டு காண்க. அண்டமென்னும் வடமொழி தமிழில் முட்டையெனப்படும். புவனங்கள் முட்டை போறலின் அண்டம் - உவமையாகுபெயர். 'துறையதாய்' என்பதில் அது - பகுதிப்பொருள் விகுதி. (அ)

**பரம்பொருட்குக் குகனென்னும் பெயர்**
**போந்ததற்குக் காரணங் கழறல்.**

இதய பங்கய குகர மேகுகை
யென்ப தாரிய பாடையில்
அதனு ளாய சிதம்ப ரத்துளி
யமல ஞானவிண் மெய்யனுச்
சதத முஞ்சுக நடன மேபுரி
தம்பி ரானையோர் குகனெனுக்

**கதறு மாமறை யவனை யன்றொரு**
**கடவு ளுமறி யோமரோ.**

வடமொழியிற் குகையென்று கூறுவது இருதயதாமரை மல ரின் றாளைப்புலமே. அக்குகையுட் பொருந்திய சிதம்பரத்தினி டத்தே நின்மலமாகிய சிதாகாச சொரூபனாக நின்று எக்காலும் பேரின்ப நாடகஞ்செய்தருளுந் தம்பிரானையே ஒப்பற்ற குகனென்று பெரியவேதங்கள் ஓலமிடாநிற்கும். அந்தப் பரமபுருடனை யன்றிப் பரத்துவத்திற்குரிய கடவுளாக வேறொருவனையும் (சாத்திர வாயி லாகவேனும் ஆன்றோர் வாயிலாகவேனும்) யாம் உணர்ந்தோ மல்லேலாம்.

"முடுக்கர் கந்தரம் பிலங்குகை குகரம்" எனப் பிங்கலநிகண் டில் வரு குகரமே வடமொழியிற் (குஹா) குகையெனப்படுஞ் சொல்லாயிருக்கின்ற தென்பார் "குகரமேகுகை யென்ப தாரிய பாடையில்" என்று சொல்லினர். இக் குகையின்கண் இருப்பவன் குகனென்றவாறு. இதற்குரிய பிரமாணம் முதலியன பாயிரத்து ௩ - ன் உரைக்கண்ணேயே வந்துள்ளன. தம்பிரான் = தமக்குத் தாமே பிரான்; ஆன்மாக்களை நீங்காதிருப்போன் என்றலுமொன்று. "அவனையன்றொரு கடவுள் நாமறியோம்" என்றதில்—அக்குகனை யன்றிப் பரத்துவ நிச்சயத்திற்குப் பிறிதொரு கடவுளுண்டென் பதை எவ்வாற்றானும் யாங் கண்டிலமென்று அறிஞனென்னும் ஆசி ரியர் கூறினரென்னும் பொருளும், அருணகிரிநாதப் பெருந்தகை போலக் குகனையன்றி வேறு தெய்வங்கொள்ளாப் பெற்றியுடையராய நூலாசிரியரது சாதநிச்சயத்தையே அந்த அறிஞனுருங் கூறியரு ளினரென்னும் பொருளும் இரட்டுறமொழிதலென்னும் உத்தியாற் கொளக் கிடக்கின்றன. அறிஞனர் வழிபடுகடவுளுங் குகனென்பது தானே உ - ஆஞ் செய்யுளிற் பெறப்பட்டது. நூலாசிரியர் அப் பெற்றியுடையாரென்பதனைத் திருவலங்கற்றிரட்டின் முதலாங் கண் டத்தில்—

"சூடே னின்னடியை யன்றித் துதித்து நானெதையும்
பாடே னெம்மானே பர மார்த்த சன்யாசீ
வாடா விண்மலரே யெனை வாவென் றேயழையாய்
சேடார் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே."

எனவும், குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதியில்—

"திருவா ரெந்தத் தலமுற் றாலுந் தெய்வந் தொழுதாலும்
பெருவா ரிபடிந் தாலுந் தெய்வப் பெயர்கள் சொற்றாலும்
மருவா ரளிநக் கடம்பார் மார்பா மங்கா வொளியாமுன்
உருவா ன்றிலே படியா விடினென் னுள்ளம் படியாதே."

எனவும் அவர் பாடியிருப்பனகொண்டும், மற்றும் அவர் பாடியுள்ளன வெல்லாம் அக் குகமயமான சிவமய மாகவே யிருத்தல் கொண்டு மறியலாம். இளமையிற்றானே இவருக்குப் பாடுந்திறன் அக் குகப்பிரமத்தின் கிருபைப்பாட்டிலேயே யெய்திற்றென்பது—

"நின்னைமிகப் பொச்சாந்து நீளுலகி னில்லாமற்
றென்னிளமை யிற்றானே சேரவந்த பாக்கியநீ
யென்னையிது நாண்மறக்க ஞாயமிலை யெங்கனுமாய்
மன்னுமதி தாராய் மயிலமலை வாழ்குகனே."

என மேலைக் கண்டத்திலும்,

"ஒளிவுரு வைத்தெரிவா னன்றேட்டை யாராய்ந்த
இவ்வறிவி லிக்கா யிரக்கணக்காத்—தெவ்விறமிழ்
பாடவுயர் நூலுணர வேபணிய பாதவருள்
கூடவரு ளாதுகொல்கு கா."

எனக் காசியாத்திரையிலும் வரு செய்யுள்களிற் பெறப்படுதலின் அது பிடித்துக் குகனை சிவனெனக்கொண்டனர்; அதனால் அவன் கருணையிருந்தவாறு—

"'* துப்புரவு நாயெிரே சுப்பிரமண் யத்தின்மேல்
எப்பிரம முள்ள தியம்பு.'

'சிவஞ்சத்திக் கன்னியமாச் சேயை யுரைப்போர்
பவம்பற்றிப் பாசறைகொள் வார்.'"

என்றுங் கூறினர் திருவலங்கற்றிரட்டின் உ - ஆங் கண்டத்தினென்க. "அவனை யன்றொரு கடவுள் நாமறியோம்" என்றதன் கருத்து:—குகன்றான் உண்மையிற் கடவுளெனும் பெயர்க்குரியோன் என்பதாம். ஆன்மாக்களின் உள்ளக் குகைதோறுமிருந்து இச்சை ஞானம் கிரியை யென்பவற்றை யியக்கிச் செலுத்துகின்ற உள்ளமாயுள்ள பிரமம் கடவுளெனப்பட்டதென்க. கடவு + உள் = கடவுள்; கடவுதல் = செலுத்துதல்; பிங்கலநிகண்டு காண்க. இன்னும் இது பற்றிக்கூறப்படு சங்கை சமாதானங்களெல்லாம் பரிபூரணானந்தபோ

* துப்புரவு = அநுபவிக்கப்படும் பொருள்; "துப்புர வில்லார் துவரத் துறவாமை" என்றார் திருவள்ளுவதேவரும்.

தத்து முற்படலத்து ௩ - ன் உரையிலோர்க. ஆயுள்வேதம் முதலிய உபவேதங்களிருத்தலின் மூலவேதம் "மா மறை" எனப்பட்டது.

'ஆரியபாடையில் குகையென்பது' எனவியைக்க. உளி - ஏழனுருபு. மெய்யனு - மெய்யனுகவென்பதன் சிதைவு. எனு=என்று; ஆவீற்றுடன் பாட்டு வினையெச்சம். 'மாமறை கதறும்' என மாறுக. அன்றி என்னும் வினையெச்சம் உகர ஈறுய்நின்றது செய்யுளாகலின். "அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந்—தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே." என்பது சூத்திரம். (௯)

குகேசனுடைய சொரூபலக்கணம்.

குலமு நாமமுங் குறிகு ணங்களுங்
குறிக்கொ ணுவதி சூக்கமாய்ப்
புலர்தன் மாறுதல் வருத லேகுதல்
புதுமை தொன்மை யிலாததாய்
மலமி லாதந லமல மாயொளி
மயம தாம்வெளி மயமதாய்
இலகு மேசொன வினிய சிற்சுக
மென்று முள்ள குகேசனே.

மேலே சொல்லப்பட்ட நன்மையாகிய ஞானனந்தத்தை யெக்காலத்துமுடைய குகேசன்— சாதியும் பெயரும் அடையாளமுங் குணமுங்குறித்து வழங்கற்குக் கூடாத அதி சூக்கும வத்துவாகியும், வாடுதலும் வேறுபடுதலும் பிறத்தலும் இறத்தலும் புதுத்தன்மையும் பழமைத்தன்மையு மில்லாததாகியும், பாசமில்லாத நல்ல பரிசுத்த சொரூபமாகியும், சோதிமயமாகிய பரவெளிமயமாகியும் விளங்குவான்.

குலமாவன.—பிராமணசாதி யென்பது முதலாயின. நாமமாவன.—செவ்வேள், சம்பு முதலாயின. குலமென்றதனுற் குடியும், நாமமென்றதனுல் இயற்பெயர் சிறப்புப்பெயர்களுங் கொள்ளப்படும். குறி.—ஆண், பெண், அலியென்பன. குணம்.—சாத்துவிகம், இராசதம், தாமதமென்பன. இக் குலம் நாமம் குறி குணமென்பன பெரிதும் உருவத்தையே பற்றியுள்ளனவாகலின் அவ்வுருவம், அருவம், உருவருவமென்னும் முத்திறமேனியு மின்றித் தத்துவாதீதமாய் நிற்றலின், அவன் குறிக்கப்படானென்பதாம். அருவம் - ஆகாயம்போல்வது. உருவருவம் - காற்றுப்போல்வது. சமானரகித சர்வவியா

பகத்துவ முண்மையாற் புலர்தலும் மாறுதலு மிலவாயின. மலாகி தத்தால் வருதல் ஏகுதல் இல்லையாயின. ஆதியந்தங்க ளின்மையாற் புதுமைதொன்மை யில்லையென்க. சுவானுபூதியாளர்க்குச் சோதிமய சிதாகாசமாயக் காணப்படலால் " ஒளிமயமதாம் வெளிமயமதாய் " என்றார். இதனை,

" ஊரி லான்குண மொ குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரி லானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான். "

என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத்தாற் றெளிக. போந்த இலக்கணம்பற்றிக் கூறுஞ் சுருதிகளாவன :—ஆத்மபோதோபநிஷத்தில்—

(க) (𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌂𑌕𑍁𑌲𑌗𑍋𑌤𑍍𑌰𑍇𑌚 𑌨𑌾𑌮𑌸𑍌𑌨𑍍𑌦𑌰𑍍𑌯𑌜𑌾𑌤𑌯𑌃 ।
𑌸𑍍𑌥𑍂𑌲𑌦𑍇𑌹𑌗𑌤𑌾𑌏𑌤𑍇 𑌹𑍍𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥)

" ப்ராஹ்மண்யம்குலகோத்ரேச நாமஸௌந்தர்யஜாதய: ।
ஸ்தூலதேஹகதாஏதேஹ்ய லிங்கஸ்யநவித்யதே ॥ "

எனவும், மைத்ராயண்யுபநிஷத்தின் எ - ஆம் பிரபாடகத்தில்—

(உ) (𑌏𑌷𑌹𑌿𑌖𑌲𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑍇𑌽𑌣𑍀𑌯𑌾𑌨𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃)

(𑌏𑌷𑌆𑌤𑍍𑌮𑌾𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌜𑌰𑍋𑌵𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍋𑌕𑍋
𑌵𑌿𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑍋𑌽𑌵𑌿𑌪𑌾𑌶𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌏𑌷
𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌏𑌷𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌃)

" ' ஏஷஹிகல்வாத்மாந்தர் ஹ்ருதயேணீயாநித்தோக்நி: '

' ஏஷஆத்மாபஹதபாப்மா விஜரோவிம்ருத்யுர்விசோகோ
விசிகித்ஸோவிபாச: ஸத்யஸங்கல்ப:ஸத்யகாமஏஷ
பரமேச்வர ஏஷபூதாதிபதி: ' "

எனவும், முண்டகோபநிஷத்தின் உ - ஆம் முண்டகத்தில்—

(௩) (𑌦𑌿𑌵𑍍𑌯𑍋𑌹𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑍁𑌷𑌃𑌸𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍋𑌹𑍍𑌯𑌜𑌃 ।
𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌹𑍍𑌯𑌮𑌨𑌾𑌃𑌶𑍁𑌭𑍍𑌰𑍋𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌃𑌪𑌰𑌃 ॥)

" திவ்யோஹ்யமூர்த்த: புருஷஸ்ஸபாஹ்யாப்யந்தரோஹ்யஜ: ।
அப்ராணோஹ்யமநாச் சுப்ரோஹ்யக்ஷராத்பரத:பர: ॥ "

எனவும், பஞ்சருத்ரத்தி லொன்றாயுள்ள சுவேதாச்வதரோபநிஷத்தின் ௬ - ஆம் அத்தியாயத்தில்—

(ச) (நதஸ்ய கஶ்சித் பதிரஸ்தி லோகே நசேஶிதா நைவ தஸ்ய லிங்கம் ।
ஸகாரணம் கரணாதிபாதிபோ நசாஸ்ய கஶ்சிஜ்ஜநிதா நசாதிப: ॥)

"நதஸ்யகச்சித்பதிரஸ்திலோகே நசேசிதாநைவதஸயலிங்கம் ।
ஸகாரணம்கரணாதிபாதிபோ நசாஸ்யகச்சிஜ்ஜநிதாநசாதிப: ॥"

எனவும் வருவனவும், பிறவுமாம். பொருள்:—(க) "பிராமணியம், குலம், கோத்திரம், பெயர், அழகு, சாதி ஆகிய இவைகள் தூலித்த வுடம்பினைச்சேர்ந்தவை; அடையாளமிலாவெனக்கு (பரமான்மாவுக்கு) இல" (உ) "இவனே இருதயத்திருக்கின்ற (பரம) ஆன்மா: சூக்குமன்: அக்கினியைப்போல ஒளி செய்துகொண்டிருப்பவன்" "இவ்வான்மா பாவமிலான், சரையிலான், இறப்பிலான், சோகமிலான், சிகிச்சையிலான், பாசமிலான், சத்திய சங்கற்பன், சத்தியகாமன், இவனே பரமேசுவரன், இவனே பூதாதிபதி (=பசுபதி)" (௩) "சிறந்த ஆகாயத்திருப்பவனும் உடம்பிலியாய்ப் புருடனும் உள்ளும் புறத்து முள்ளவனும் பிறப்பிலியாய்ப் பிராணனல்லாதவனும் மனசல்லாதவனுமச் சுத்தனுமுள்ள அவன் அக்ஷரத்தினும் (=மாயையினும்) மேலான சீவனினுஞ் சிறந்தவன் (=பரமன்)" (ச) "அவ்வுருத்திரனுக்கு மேலான பதியுமில்லை: இரக்ஷகனுமில்லை: உற்பத்தித் தானமு மில்லை: அவனே காரணன்: காரணாதிபதிகட்கும் அதிபன்: அவனைப் பிறப்பிக்கின்றவனும் அவனுக்கதிபனுமில்லை" எனவாம். (ஶிவம் பராத்பரம் ஸூக்ஷ்மம் நித்யம் ஸர்வகதாவ்யயம் ।) "சிவம்பராத்பரம்ஸூக்ஷ்மம் நித்யம்ஸர்வகதாவ்யயம்।" என வாதுளோத்தர சுத்தாக்யங் கூறினமையும் ஈண்டெடுத்துக் கொண்ட பொருளிற் பொருந்துகின்றதன்றே. பெயரிலாப்பொருளைச் சிவம் என்பதுமுதலிய பெயர்களாற் குறிப்பது உண்மையை யுணர்வார்க்கு உணர்த்துதற்பொருட்டேயாம். அதர்வணவேத நிருஸிம்ஹோத்தரதாபிந்யுபநிஷத்தில் — (அஸத்வமஜஸ்க மதமஸ்கமமாயமபயம்) "அஸத்வமஜஸ்கமதமஸ்கமமாயமபயம்" எனவும், யஜுர்வேத சுகரஹஸ்யோபநிஷத்தில்—(பாவாதீதம் த்ரிகுணரஹிதம்) "பாவாதீதம் த்ரிகுணரகிதம்" எனவும், மேலைச் சுவேதாச்வதரோபநிஷத்

தில்— (ஸர்வபூதாதிவாஸ ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச) "ஸர்வ பூதாதிவாஸஸ் ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்க்குணச்ச" எனவும் வருவனவற்றால் சாத்துவிகம் முதலிய குணநீக்க முணர்க. இம் முக்குணங்களும் பிரகிருதி மாயையவாகலின் இச்சம்பந்தமுள்ள சீவான்மாக்கட்கே அவை யுரியனவாம். இவற்றொன்று மில்லாதது பரமான்மாவாகலின் அது, நிர்க்குணப்பொருளெனப் படுமென்க. அற்றாகலினன்றே "ஆதிகுண மொன்று மில்லா னந்தமிலான் வரக்கூவாய்" எனத் தமிழ்மறையுஞ் சாற்றுவதாயிற்று. இவ்வா றிருதிறமறையும் மொழிந்தாங்கு (ஸாத்ருபம் நிர்குணம் ஶாந்தம் தத்வாதீதம் நிரஞ்ஜநம்।) "ஸாத்ருப்தம் நிர்க்குணம் சாந்தம் தத்வாதீதம் நிரஞ்ஜநம்।" என்று ஸர்வஜ்ஞானோத்தராகமங் கூறியுளது நோக்க. அங்ஙனமாயின், அப்பொருளின் குணந்தான் யாது? எனின்,— "ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம" என்ற சுருதியின்படி ஞானமே குணமென்க. இஞ்ஞானந்தானே சித்தெனப்படுதல் முற்போந்த செய்யுளிலும், இச்செய்யுளிலும், உரைப்பிரமாணங்களிலும் வந்துளதால். யாதொரு குணமில்லாதது யாதொரு பொருளா யிருத்தலின்று; குணமுந் தனியேயிராதாகலிற் குணியுங்குணமுந் தாதான்மியமே யென்க. தாதான்மியம்=நித்தியசம்பந்தம்; கதிருங் கதிரொளியும் போல்வது. குணி=குணத்தையுடையது. மேற்காட்டப்பட்ட சுவேதாச்வதர மந்திரம்—"சருவபூதங்களிடத்தும், சாக்ஷியாயிருப்போனாய்க் கேவலம் சேதனனாய் (=சுத்தஞான சொரூபனாய்) உள்ள நிர்க்குணன்" எனு மொண்பொருளைப் பயக்குமாற்றானும் இந்நிச்சயம் பெறப்படுமாயினும் அச் சுவேதாச்வதரந்தானே—

(காலகாலோ குணீ ஸர்வவித்ய: ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதி:)
"காலகாலோகுணீஸர்வவித்ய: ப்ரதாநக்ஷேத்ராஜ்ஞபதி:"

என்று கூறுதலின் இனிது பெறுக. தமிழ்:—"(அவன்) காலகாலன்: குணி: சருவவித்தியன்: பிரதானத்துக்கும் க்ஷேத்திரஞ்ஞனுக்கும் பதி" எனவாம். பிரதானம்=பிரகிருதிமாயை. இத்தாதான்மிய குணந்தான் சத்தியெனப்படுவது. (மாத்ரா ஸஹ ஸம்பந்தம் ஸஹதேஹோ ஜாயதே - மாத்ராஸஹதக ஸம்பந்தம் ஸஹதேகஸஹஜாயதே=) "மாதாவுடனே சம்பந்தமானது (இத்தேகம்)" என்று ஸாமவேத மைத்ரேயோபநிஷதஞ் சாற்றுமாறு அணுத்துவமடைந்து மானுட மகடூஉவின் கர்ப்பவாசமுற்றுப் பிறக்

கும் பிறப்பே "வருதல்" எனவும், அங்ஙனம் அந்த உபநிஷதம்—(ஜீவஸ்ய ம்ருதகஜம் ஜென்ம - ம்ருதஸ்ய ம்ருதகஜம் தேஹம்=) "மரண சூதகத்தோடு உற்பத்தியானது (இத்தேகம்)" என்றபடி சூதகங் கொண்டாடுமா றிறக்குமிறப்பே "ஏகுதல்" எனவுங் கிளக்கப்பட்டன. "இலாததாய்" எனக் கிளந்தமையின் இத்திறச் சனனமும், மரணமுமே பந்தலக்கணம்; சீவான்மாவுக்கேயுரிய இவ்விலக்கணத்தை யுறுந்தேகி பரத்துவப்பொருளா யிரானென்பதும் பெறுதும். "பெம்மான் முருகன் பிறவா னிறவான்" என்றார் அருணகிரிநாதரும். இத்திறப் பிறப்புடைச் சீவான்மா மாந்தர் வியக்கும்படியான அற்புதங்களைச்செய்யினும் அவ்வான்மா, இயவுளை நாடிய பிரசாத யோகசித்தியுடைத்தெனப் படுமேயன்றிப் பரத்துவப்பொருளெனப் படாதென்றுந் துணிவுரை செய்க. "சிற்சுகம்" என்பதிற் சித்தும் ஆனந்தமும், "என்றும்" என்பதில் நித்தியத்துவ சத்துத்தன்மையும் பெறப்படுதலிற் சச்சிதானந்தலக்கணமுள்ள குகேசனெனும் பொருளும், ஞானானந்தத்தை யெக்காலத்துமுடைக் குகேசனெனும் பொருளும் "சிற்சுக மென்றுமுள்ள குகேசன்" என்பதிற் கொளக் கிடக்கின்றன வென்க.

இது, குகேசனது சொரூபலக்கண முணர்த்திற்று.

சூக்கம் - சூக்குமமென்பதன் சிதைவு. ஒளிமயமதாம் வெளிமயமதாய் என்பதிலுள்ள 'அது' இரண்டும் பகுதிப்பொருள் விகுதி. இலகும் - செய்யுமென்னு முற்று ஆண்பாற்கு வந்தது. 'நலமலம்' 'சொன' என்பன விகாரம். நல்ல பரிசுத்த சொரூபம் எனும்பொருளிற் பிரயோகிக்கப்பட்ட 'நல் அமலம்' என்றதில் 'நல்' என்பது இயற்கை யடைமொழியாகக் கொள்ளப்படும்; வெண்ணிலாவென்பதில் 'வெள்' என்பது கொள்ளப்படுமாறு. என்னை? செந்நிலா, கருநிலா இல்லையாகலின். அற்பசித்தெனனுஞ் சீவனது சுகமுமிருத்தலின் அகணித சிற்சுகம் 'இனிய' என்னும் விசேடணம் புணர்த்துரைக்கப்பட்டது. இவ்வா றின்னும் வருவனவுளவேல் அவற்றிற்கும் இவ்விலக்கணம் அமைக்க. (௪0)

குகேசனுகிய பிரமத்தை, வேதம் வியோமவடி வென்றதற்குக் காரணங் கழறல்.

கலிவிருத்தம்.

அற்றமில் குகேசுரன் வெளிக்குள்வெளி யாக
நிற்றலின லாரண நிறைந்தபிர மந்தான்
குற்றமில் வியோமவடி வென்றுறுதி கூறு
முற்றினையு நன்மனச முன்னியுண ரிங்கே.

குறைவில்லாத குகேசன் இருதயகுகைப் பிரணவாகாயத்துட் பரமாகாயமாயிருத்தலால் நல்ல வேதங்கள் சர்வவியாபியாயுள்ள பிரமம், களங்கமில்லாத ஆகாய வடிவென்று நிச்சயமாக வெடுத்துக் கூறு முடிவினையும் நற்குணமுடைய மனச! இவ்விடத்துச் சிந்தித் துணர்வாயாக.

வெளிக்குள் வெளியாக நிற்றல்— மேலைச் செய்யுளுரைப் பிரமாணங்களுள் "சிறந்த ஆகாயத்திருப்பவனும் உடம்பிலியாயுள்ள அவன்" என்பதற்காய முண்டகோபநிஷத் வசனத்தும், ௩ - ன் உரைப் பிரமாணங்களுள் "அனைத்திற்கும் அதிபதியான ஈசானன் இருதயாகாசத்தி லமர்ந்தனன்" என்பதற்காய பிருஹதாரண்யகோபநிஷத் வசனத்தும், "இந்த இருதயத்திற்குள் எந்த ஆகாசமுள்ளதோ அதனில் ஞானத்தாலறியக்கூடிய புருடனுளன்" என்பதற்காய தைத்திரீயோபநிஷத் வசனத்தும், "பிரமபுரமென்னும் இதிலே தகரபுண்டரீக வீடுள்ளது: இதிலே தகராகாசமுள்ளது: இந்த ஆகாசத்திற் குள்ளேயுள்ளது நாடற்பாற்று" என்பதற்காய சாந்தோக்யோபநிஷத் வசனத்தும், "ஓங்காரமென்னும் அக்ஷரமானது இருதய குகையிலுள்ள ஆகாயத்தின் சுவரூபம்" என்பதற்காய மைத்ராயண்யுபநிஷத் வசனத்தும், திருநாவுக்கரசுகளது தமிழ்மறையில் "ஓங்காரத் தொருவன்கா ணுணர்மெய்ஞ் ஞானம், விரித்தவன் காண்" எனவரு மாற்றத்தும், ௬ - ன் உரைப் பிரமாணங்களுள் "ஆகாச சரீரம் பிரமம்" என்பதற்காய தைத்திரீயோபநிஷத் வசனத்தும், "பிரமம் ஆகாச வாச்சியவத்து; பிறபொருண் முதலியவற்றிற்கு வேறாகச் சொல்லப்படலான்" என்பதற்காய பிரஹ்மஸூத்ர சூத்திரத்தும், பிருஹதாரண்யகோபநிஷத்தின் எ - ஆம் அத்தியாயத்தில்— (ஆகாசம் பிரமம் =कं ब्रह्म -) "கம் ப்ரஹ்ம" எனவரு வசனத்தும், சாந்தோக்யோபநிஷத்தின் ௩ - ஆம் பிரபாடகத்துப் கஉ - ஆங் கண்டத்தில்— (இருதயத்திற் குள்ளேயுள்ள ஆகாசம் அது பூரணம் = अन्तर्हृदय आकाशस्तदेतत्पूर्णं -) "அந்தர் ஹ்ருதயஆகாசஸ் ததேதத்பூர்ணம்" எனவரு வசனத்தினும், பிறவற்றினும் பெறலாம். பூரணப்பொருள் ஆகாசமாகத்தா னிருத்தல் வேண்டுமெனச் சுருதி யறிவுறுத்தினமை, "நிறைந்த பிரமந்தான் வியோம வடிவு" என்றதிற் பெறுக.

இச்செய்யுள், ௩ - ற் குடிலமெனவும், ச - ற் பாவலர்பகரும் வியோமமெனவும் ஆகாசார்த்தத்திற் சொல்லப்பட்ட பிரமத்தை

அந்த ஆகாச சத்தத்தால் வேதமுங் கூறியதற்குக் காரணங் கழ றிற்று.

தான் - அசை. உறுதி - 'தி' விகுதிபெற்ற தொழிற்பெயர். (கக)

**சிதாகாசம் சீவனதறிவுக் கறிவேன்பதும், அங்கு நிகழ்கூத்து உயிர்க்கூத் தென்பதும்.**

என்றுமில கவ்வெளியை யிம்மண்முத லைந்துள்
ஒன்றென வலித்திட வொண்ணுதருள் விண்ணுநேர்
இன்றியுணர் விற்குணர்வ தாயொளிர்வ தென்றே
நன்றறிதி யங்குநிகழ் நட்டமுயிர்க் கூத்தே.

எக்காலத்தும் விளங்காநிற்கும் அவ்வெளியை இந்தப் பிருதிவி முதலிய பஞ்சபூதங்களு ளொன்றாகிய பூதாகாசமேயென நினைத்தல் கூடாது. (பராசத்தியெனும்) அருள்வெளியாய் ஆன்ம அறிவுக்கறி வாய் ஒப்பின்றிப் பிரகாசிக்கும் பரம்பொருளென்றே நன்றாக அறி வாயாக. அவ்வாகாசத்தின்கண் நிகழு நடனம் உயிர்க்கூத் தாகும்.

சிதாகாசம் போலவே பூதாகாசமுங் கண்ணிற்குப் புலப்படாப் பொருளா யிருத்தலின் அவ்வாகாசத்தையே சிதாகாசமெனக்கொள் ளா திருக்குமாறு "இம்மண்முத லைந்துள் ஒன்றென வலித்திட வொண்ணாது" என்றார். இவ்வாறு கூறியது இன்னதல்ல திதுவென மொழிதலென்னும் உத்தி. இவ்வாகாசத்திற்குஞ் சிதாகாசமே ஆதாரமாம். இவ்வாகாசமே யஜுர்வேத மண்டலப்ராஹ்மணோப நிஷத்தின் ச - ஆம் பிராஹ்மணத்திற் பரமாகாசமென வருமொன் றற்கும் இடமாயிருக்கின்றது. அதனை,

"பாஹ்யாப்யந்தர மந்தகாரமயமாகாசம் |
பாஹ்யாப்யந்தரே காலாநல ஸத்ருசம்பராகாசம் |
ஸபாஹ்யாப்யந்தரே பரிமிதத்யுதிநிபம் தத்வமஹாகாசம் |
ஸபாஹ்யாப்யந்தரே ஸூர்யநிபம் ஸூர்யாகாசம் |
அநிர்வசநீயஜ்யோதிஸ் ஸர்வவ்யாபகம் |
நிரதிசயாநந்தலக்ஷணம் பரமாகாசம் ||"

என்னும் அவ்வுபநிஷத் வசனங்களா னறிக. பொருள் :— (க) புறத்துமகத்தும் அந்தகாரமயமாயுள்ளது ஆகாசம் : (உ) புறத்து மகத்துங் காலாக்கினிபோன் றுள்ளது பராகாசம் : (ந) புறத்துமகத் தும் அபரிமித வொளிபோன்ற தத்துவமாயுள்ளது மகாகாசம் : (ச) புறத்துமகத்துஞ் சூரியன் போன்றுள்ளது சூரியாகாசம் :

(௫) அநிர்வசநீயச் சோதியாய்ச் சர்வ வியாபகமாய் நிரதிசயானந்த லட்சணமாயுள்ளது பரமாகாசம்; என்க. நூலாசிரியர் இற்றைப் போதிற்குப் பத்து வருடங்கட்கு முன்னஞ் சென்னை - வைத்திய நாதமுதலியார் தெருவின்கண்ணுள்ள ஒருவீட்டின் மேன்மாடத்தில் ஏழு திங்கள்காறுந் தனிமையிருந்துகொண்டு நிட்டைசாதித்து வருஞான்றுற்ற தமதனுபவத்தைக் குமரவேள்பதிற்றுப்பத்தந்தாதியில்—

> "உணரு மென்ற னெஞ்ச மான துள்ள கத்தொ டுங்குகால்
> கணவு லோக மில்லை வேறு கண்ட நானு மில்லைநா
> அணைவு வான மோன்றி ருந்த தற்றி யாது ரைத்தருள்
> மணம ருத பாத நாத மல்கு பொற்சி லம்பனே."

என்றியம்பினதூஉம் ஈங்குக் கருதிக்கொள்ளத் தக்கதேயாம்.

இன்னும் சிதாகாசம், நீலாகாசம், தூமாகாசம், அமலாகாசம், மின்னாகாசம், செவ்வாகாசம், வெள்ளாகாசம், தெள்ளாகாசமென்னும் அட்ட ககனம் முதலியனவாகச் சொல்லப்படும் ஆகாசமனைத்துக்கும் அச்சிதாகாசப் பெருவெளியே ஆதாரமாகும். பிண்ட நாசியிற் காணப்படூஉம் வாயுவுக்கு அண்ட ஆகாயவாயு ஆதாரமெனக் கண்டவாறு பிண்டத்தில் ஆகாயம்போன்றுள்ள ஆன்மஅறிவுக்குப் பிண்டத்தும் மற்றெவ்விடத்துமுள்ள பரமான்மஅறிவு ஆதாரமென வுணரலுறுவா ருணருமாறு அவ்வாகாசத்தை "உணர்விற் குணர்வதா யொளிர்வது" என்றாரென்க. சிதாகாச நடனம் உயிர்க்கூத்தென்பது—

> "எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே
> நட்டம் புதல்வா நவிலக்கேள்"

என்னும் உண்மைவிளக்க மொழிகளினும் பெறப்படும். எட்டுமிரண்டும்= யகரமாகிய ஆன்மா. நட்டம்=கூத்து; "நட்டம் பயினுமது வென்னேடி" என்றார் ஸ்ரீமந் மாணிக்கவாசகனாரும். கடோபநிஷதம் ௩ - ஆம் வல்லியில் "அந்தப்பிரமம் ஆதியந்த மிலதாய் மஹானெனு சீவனினுஞ் சிறந்ததாய் அசைவற்றதா யுளது" எனுமருத்தந்தோன்ற ([illegible]) "அநாத்யந்தம் மஹத: பரம் த்ருவம்" என்பதை யுரைத்தலினானும், சுகரஹஸ்யோபநிஷதம் ([illegible]) "ஏகம் நித்யம் விமலமசலம்" என்றோது வாக்கியங்களில் அசலமென்பது பரம்பொருள் அசைவிலாததென்பதைக் காட்டுதலினானும் அப்பொருட்கு அசைவான நடனம் இங்ஙனமியம்புதன் முரண்கொல்? எனின்,—முர

ணன்றென மொழிவது அடியிற் காட்டப்படுநியாயத்தால் விளங்கும். சிவாதாரத்திருக்கின்ற ஆன்மாவானது தனது இயங்காவுடம்பினைத் தன்சத்தியா லியக்கிக்கொண்டு நிற்றல்போலவே பரமான்மாவுந் தன துடம்பினை யியக்கிக்கொண்டு நிற்றலே அந்நடனமென்பதும், அவ் வுடம்பு சிவசத்தியுஞ் சிவசத்தியை ஆச்சிரயித்துள்ள ஆன்மாவுமா மென்பதும், அச்சத்தி சிவமென்னும் இரண்டனையும் ஏகமெனக் கொள்ளு முடிபில் ஆன்மா சிவனது மூர்த்தமாகும்; அது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மாவெனும் அட்டமூர்த்தங்களுண் மேம்பட்ட சின்மூர்த்தமென்பதும் உணரக் கிடக்குமோ ருண்மையினே அசைவுக்குரியதாய் நின்றது அப்பொ ருளின துடம்பேயல்லால் அப்பொரு ளன்றென்பதும் பெறப்படும். அற்றாகலினன்றே—

(அ) (ஆத்மாநமந்தரோயமயதி) "ஆத்மாநமந்தரோயமயதி"

என்று மத்தியந்தின சாகையும்,

(ஆ) (யஸ்யாதித்யஶ்ஶரீரம் யஆதித்யமந்தரோயமயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ)

"யஸ்யாதித்யச்சரீரம் யஆதித்யமந்தரோயமயத்யேஷத ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ"

என்று பிருஹதாரண்யகோபநிஷத்தின் ரு - ஆம் அத்தியாயமுங் கூறுவனவாயின. பொருள் :— (அ) "உள்வயினிருந்துகொண்டு ஆன்மாவை யியக்குகின்றனன்." (ஆ) "அவனுக்குச் சூரியனுடம்பு: உள்ளிடத்திருந்துகொண்டு சூரியனை யியக்குகின்றனன்: இவனே ஆன்மாவின் அந்தரியாமி: அமிர்தன்" எனவாம். அந்தர்யாமி= உள்ளேயிருப்போன். அமிருதன் சிவனென்பது ௩ - ன் உரையிற் றானே சுருதிவாயிலாக விளக்கினும். இச்செயல் பராசத்திவழியே நிகழ்வதாகலின் அஃது இயங்குதலாகவும், இயக்குதலாகவு மியம்பப் படுவதே. இயங்குந் தன்மையின் அப்பொருள் உப்புநீ ருறைமீன் உப்பேறாதிருத்தல் போலவும், உடம்பிருந்தும் இல்லாதிருக்கும் ஞானிபோலவு மிருக்குமாகலின் விகாரமுறாது. உயிரிற்குயிராயுள்ள அப்பொருள் உணர்விற்குணர்வா யிருத்தன்மான அசைவிற்கசை வாயு மிருத்தலே அவ்வியங்குதல். அஃதிலதாயின் ஒருயிரு மியங் காதென்ப துணரநிற்றலின் அவ்வசைவாகிய நடனம் பரம்பொருண் மாட் டுளதென்பதேற்புடைத்தேயாம். "அவனன்றி யோரணுவு

மசையாது" என்பதூஉம் அது வன்றே. அணு=ஆணவத்திற் கட்டுண்ட வுயிர்.

(க) (𑌸𑌰𑍍𑌵𑍋 𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌅𑌸𑍍𑌤𑍁 ।)

"ஸர்வோவைருத்ரஸ் தஸ்மைருத்ராயநமோஸ்து ।"

எனத் தைத்திரீயாருணசாகை நாராயணத்திலும்,

(உ) (𑌅𑌹𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍)

"அகமேவஸர்வம்மயிஸர்வம் ப்ரதிஷ்டிதம்"

எனப் பஸ்மஜாபாலோபநிஷத்திலும்,

(ங) (𑌸 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌯𑌚𑍍𑌚 𑌭𑌵𑍍𑌯𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।)

"ஸஏவஸர்வம்யத்பூதம் யச்சபவ்யம்ஸநாதநம் ।"

எனக் கைவல்யோபநிஷத்திலும்,

(ச) (𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑍇𑌮𑌗𑍋𑌚𑌰𑌮𑍍 ।)

"ஸாக்ஷிணம்புத்திந்ருத்தஸ்ய பரமப்ரேமகோசரம் ।"

என மைத்ரேயோபநிஷத்தின் க - ஆம் அத்தியாயத்திலும்,

(ரு) (𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌹𑍀𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌿) "ஸர்வாஸர்வவிஹீநோஸ்மி"

என ங - ஆம் அத்தியாயத்திலும் வரு வாக்கியங்களும் அப்பொருட்டில் வந்தனவே. தமிழ்:— (க) "எல்லாம் உருத்திரனே: அத்திறவுருத்திரனுக்கு நமற்காரம்" எனவும், (உ) "நானே யாவுமாயுள்ளேன்: என்னிடத்திலேயே யாவுமிருக்கின்றன" எனவும், (ங) "இன்றுகாறுமுண்டானதும் இனியுண்டாவதுமாகிய எல்லாம் அவரே: என்றுமுள்ளவரும் அவரே" எனவும், (ச) "(பரமேசுவரன்) புத்தியின் நடனத்திற்குச் சாக்ஷியாயும் மிக்கபிரீதிக்கு விஷயமாயுமுள்ளோன்" எனவும், (ரு) "சர்வனுமிருக்கின்றேன்: சர்வனல்லாதவனுமிருக்கின்றேன்" எனவுமாம். இவற்றுள் ங - பிதாமகனென்னும் பெயரிய பிரமனுரைத்த திவ்விய வாக்காயுள்ளது. ச - பிருஹத்ரதனென்னும் பெயரிய அரசனுக்குச் சாகாயன்னியரென்னும் பெயரிய மாமுனிவர் சாற்றிய சத்தியவாக்காயுள்ளது. உ, ரு - சிவபிரான் திருவாக்காயுள்ளன. இக்காரியம்—எளிதாகச் செய்யப்படுதலின் இலீலையெனற்கும், சங்கற்பமாத்திரையே நிகழ்வதெனற்கும், சிவசத்திகாரியமெனப்படுமாற்றாற் சூரியசன்னிதானத்திற் றாமரைமுகைகள் விகசித்தல்போலச் சன்னிதான விசேடமாய்

நிகழ்வதெனற்கும் பொருந்தும். இங்ஙனம் யாவுஞ் சிவச்செயலென்பதேற்படுதலிற் சீவச்செயலு முளதெனக்கொண்டு நன்று தீதென்பவற்றிற்குரிய நியாய மளித்தல் யாங்ஙனங் கூடும்? எனின்,— சீவசுதந்திர தற்போதம் அநாதியான சீவனுக்கிருத்தலின் அது சிவனறிவா லசைவாற் காரியப்பட்டுழிச் சிவனையுஞ் சிவனதுபகாரத்தையும் மறந்து நான் எனதென்னும் அபிமானியாகிச் செய்யும் வினைவழியே அக்கடவுளது நியாயஞ் செவ்வனே நிகழுமென்பது அக்கடாவுக்கு விடையாமென்பதை,

" நினைக்கு நினைப்புங் கருவி யியக்கமு நின்னனவங்
நினைப்பு மியக்கமு மென்னிற் கலக்குமோர் நீர்மையினி
லெனக்கொர் சுதந்திர முண்டாகிச் செய்த விருவினையாம்
வனத்திடை நின்று மயங்குகின் றேன்சிகி வாகனனே.

அறிவற்ற கன்மமு மென்றனைத் தேடி யடைவதின்று
பொறிகெட்ட நானு மதுகண்டு கோடற்குப் போவதின்று
குறிதிட்டங் கண்டதைக் கூட்டிப் புசிக்கக் குயிற்றுவது
வறிதற்ற நின்னருள் வல்லமை யேசிகி வாகனனே."

என இந்நூலாசிரியரது பாடற்கண்ணும்,

" செஞ்சுட ரொளியைப் போலாஞ் சிவசசெய லொளியா னேக்கம்
விஞ்சுகண் போலாஞ் சீவச் செயலிதே மனவி ருத்தி
சஞ்சித பிராரத் தங்க ளாதலு மிதுவே சார்பில்
அஞ்சிவச் செயருன் சொற்ற வடைவினோர் நிறைவே யாகும்.

ஆதவ னுல்வி ழிப்புண் டாகிய விருவர் தாமோர்
பாதையிற் போங்கா லாடை பக்கலிற் களையோர் பெண்ணை
மாதரி னொருவ னேக்க மற்றவ னேக்கா னாக
ஆதவன் செய்யான் செய்வ தவர்மன விருத்தி யேயாம்.

இன்னணஞ் செயலி ரண்டு மிகலறத் தேர வல்லார்
அன்னவ னூட்ட வாடு மசேதன மாஞ்ச டத்திற்
குன்னிடு மனவி ருத்தி யின்மையா லுபய கன்ம
மென்னசை யிலையாள் வோற்கு மிலநசை யுயிர்க்கா மென்பார்."

என இந்நூலாசிரியரது சேக்கர்வேள்செம்மாப்பின் க - ஆங் காண்டத்தும் வரூஉந் தூக்குக்களி னுணர்க.

'ஐந்துள்' என்புழி அன்சாரியை தொக்கது. வலித்தல் = நினைத்தல்; பிங்கலநிகண்டு காண்க. அறிதி - ஏவலொருமைமுற்று; அறி - பகுதி, இ - விகுதி, த் - எழுத்துப்பேறு. 'உணர்விற் குணர்வதாய் நேரின்றி யொளிர்வது' என இயையும். (கஉ)

பஞ்சகிருத்தியக்கூத்து இன்னகாரணம்பற்றி
நிகழ்கின்றதென்பது.

சிட்டிதிதி நாசமறை வோடருளல் செப்புஞ்
சட்டவினை யைந்துநிகழ் சந்தத வணுத்தன்
கட்டமல முற்றுவகை காணவென வாற்று
நட்டமி லிரக்கமுடை நட்டமது மன்றே.

சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்று கூறப்படும் ஒழுங்காகிய ஐந்து காரியங்களும் இயங்கியற்பொருளாயுள்ள நித்திய ஆன்மாக்கள் பந்தத்தையும் பரிசுத்தத்தையும் பொருந்தி, இச்சித்த இன்பத்தை யெய்தவேண்டுமென்று செய்யுங் கேடற்ற காருண்ணியத்தையுடைய நடனமே அக்கூத்து.

ஆன்மாக்கள் முன்னர்த் தம்பந்தத்தையும், பின்னர்ப் பரிசுத்தத்தையும் பொருந்திநின்று, வேட்ட இன்பத்தை யெய்தவேண்டுமெனச் செய்யுங் காருண்ணிய நடனமே அக்கூத்தென்பார் "கட்டு அமல முற்று உவகை காணவென வாற்றும் இரக்கமுடை நட்டம் அது" என்றார்.

"வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே"

எனத் திருநாவுக்கரைய தமிழ்மறையி லெழுந்ததும் இதனை வலியுறுத்தும். இன்னுமுரிய வேதாகமப் பிரமாணங்களைப் பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்து ௪௨ - ன் உரையுழைக் காணலாம். அறிவிழந்து சுழுத்தியிலாழ்ந்து கிடக்குமுயிரைச் சூக்கும தூலவுடம்புகளிற் செலுத்துங்காரியம் சிருட்டியெனவும், அங்ஙனம் வினையளவாய் நிறுத்துங்காரியம் திதியெனவும், பெயர்த்துஞ் சுழுத்தியி லாழ்ந்து கிடக்குமாறு செய்யுங்காரியம் சங்காரமெனவும், இருவினைப்பயனும் அளவாக அனுபவமாமாறு சீவனையுஞ் சிவனையுங் காணவொட்டாது மறைத்துநிற்கும் ஆதிசத்தி காரியம் திரோதானமெனவும், அத்திரோதானத்தை நீக்குமளவாக நீக்குங்காரியம் அனுக்கிரகமெனவு நிகழ்த்தப்படும். நிலையியற்பொருளிருத்தலின் அதற்கு வேறாகும் இயங்கியற்பொருளாகிய சீவனென்பதை "நிகழ் சந்தத அணு" என்பதுணர்த்தி நிற்பதாயிற்று.

சாந்தோக்யோபநிஷத்தின் ௬ - ஆம் பிரபாடகத்துப் ௧௧ - ஆங் கண்டம்— (நஜீவோ ம்ரியத=) "ஜீவன் அழிவற்றது" என்றோது கின்றபடி நித்தியப்பொருளாயுள்ள ஜீவான்மாவே "சந்தத அணு" எனப்பட்டது. அம்நதணுவெனப்படல் "ஏஷோரணுராத்மா" என்னும் முண்டகோபநிஷத் வசனத்தும், "ஜீவாத்மஸ்வரூபம் ஜ்யோதிரூப மணுமாத்ரம் வர்த்ததே" என்னுந் தியாநபிந்தூபநிஷத் வசனத்தும், 'உடம்பினுள் அணுவிருக்கின்றது' என்னும் பொருளில்— "அஸ்த்யணுஸ்தநௌ" எனச் சிவஞ்ஞானபோதத்து ௩ - ஆம் ஸூத்ரத்தில் வருமொழிகளினும் பெறப்படுகின்றது. இது பற்றிய வேறு பிரமாணங்களைப் பரிபூரணனந்தபோதத்தின் முற்படலத்து ௬௨ - ன் உரையிலறியலாம். இவ்வணுவானது சார்ந்ததன் வண்ணமாய் நிற்கத்தக்கதென்பது மசகத்தின் கருவிற்புக்கு மசகமாகவும், மத கயத்தின் கருவிற்புக்கு மத கயமாகவு மிருக்குமென்பதனுனே வலியுறும். அங்ஙனமே சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தமென்பனவும் ஏற்றபெற்றியா யமையுமென்னுநிச்சயத்திற் றேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்னும் எழுவகைப் பிறப்புக்களையும் அவ்வணு வெய்துமென்பது கொளக்கிடக்கின்றது. ஆகவினன்றே—

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"

என ஸ்ரீமந் மணிவாசகனுருங் கூறியருளினர். அணுவாகக் கணிக்கப்படூஉஞ் சீவன் அநாதி காரண தேகத்தோ டுள்ளதேயாம். அத்திறவணுக்கள் எண்ணிலடங்காதனவாய் இப்பூமிக்குச் சமீப சம்பந்த வெள்ளிடையாய விரிநிலைக்களத்தின்கண் ஊங்குச் செறிந்து கிடக்குமென்பதும், அவற்றுட் சிற்சிலவே பற்பலவே காற்றின் கதி வழியாய்க் காற்றோடு சிவணிய நீரின் வழியாய் இப்பூமியிற்போந்து யாண்டுங் குழுமுகின்றனவென்பதும், அவை கருத்தாவாற் சிருட்டிக்கப்பட்ட கருக்களை ஓடதி நீர் வழியாகவடைந்து அவ்வக் கருக்களின் வடிவாகின்றன வென்பதும், அவற்றுட் சிலச்சில பலப்பல மனிதராய் நிற்கின்றனவென்பதுந் தக்க வேதுக்களா லறியப்படுகின்றன. மனிதனுடைய சீவன் மூர்ச்சையினும் மிகு நித்திரையினும் மரணத்

தினும் பண்டை யணுவெனவேபாகின்றது. ஆகலினன்றே அங்ங
னம் யாதொரு தொழிலும் எண்ணமும் அதன்கண் இல்லனவாயின.
செயலிறந்த அந் நித்திரைபோல்வதே மரணமாயிருத்தலினன்றோ
அவ்விரண்டும் "துஞ்சல்" என்னும் பெயரானும் வழங்கப்படுகின்
றன. அநியாயமாய்க்கொல்வான் வந்த மனிதனோடு எயிறு தின்று
போராடியே யிறந்துவிட்ட யாவனொருவன் உடனே அக்கொடியோ
னைப் பற்றிக்கொள்ளாமலும், அவனோடு எத்திறப் போராட்டமும்
புரியாமலும், நிகழ்ந்த கொடுஞ்செய்கையினைத் தன் னுற்றார்பால்
வேட்டார்பாற் சொன்மாத்திரையாயேனுஞ் சொல்லாமலும், கொலை
ஞன் நியாயாதிபதி முன்னம் யான் கோறல்புரிய வில்லை யென்புழி
யும் என்னையிவனே கொன்றானென் றசரீரியாய் நின்றேனுங் கூறி
நியாயம்பெற வின்மையானும் அணுவாய் விட்டனனென்னும் இச்
செய்தி யுறுதியுறும். உடம்பினுள்ள உகிர்களினும் மயிர்களினும் எயி
றுகளினும் உயிர் பரவி நிற்றற்குரிய வதுப்பொருளின்மையால் அவ்
விடங்களிற்சென்று நில்லாவஃது உரிய கருவினை யடைந்தாலன்றிக்
கட்புலனாகா நுண்ணிய அணுவாகவே யிருக்குமென்பாம். கண்ணில்
லாவுயிர் காணமாட்டாது: கண்ணுள்ளவுயிரே காணுமென்பதூஉம்,
சிற்றுடம்போடும் பேருடம்போடும் உயிர்கள் கூடி நிற்கின்றன வென்
பதூஉங் கண்டவழி உபகாரமாயுள்ளவுடம்பளவாக வியாபித்துநிற்கு
மியல்பிற்றே அவ்வுயிரெனல் சித்திக்கின்றதாகலின் உயிராகிய அணு
வியாபகப்பொருளென்பதும், அதனால் அஃதான்மாவெனப்படு மென்
பதும் பெறுதும். அணுத்தன்மைக்கு மறப்பு மோரடையாளமாயிருந்
தாங்கு வியாபகத்தன்மைக்கு நினைப்பு மோரடையாளமாயிருக்கின்
றது. இவ்வியாபகம் முதல்வனது உருவசமத்துவ சாரூபகதியினை
பாவிநிற்றற்குரிய வதுப்பொருளுடை அவ்வுருவளவாகவு நிற்குமென்
பதுந் தடைதணந்த சரதமாம். அவ்வண்ண நிற்கினும் அவ்வான்மா
அணுத்தன்மையி னுளதேயாமெனற்கு "அணு சதாசிவன்" என்னும்
பெயரே சான்றாக வுளது. விஞ்ஞானகலரினுள்ள அச் சதாசிவன்
ஆணவமல மொன்றுமே யுடையானென்பது ஆகமத்திற் பெறப்படு
தலின் அம்மலந்தான் அத்துணை மேம்பாடுடைய அவனையும் அணு
வெனும்படி பந்தித்து நிற்கின்ற தென்பதூஉம், இவ்வணுத்தன்மை
நீங்கியோரே சிவசாரூபகதியினும் மேம்பட்ட சொரூப சிவசமத்துவ
சாயுச்சியமென்னும் பூரணவியாபக கதியை யெய்துவ ரென்பதூஉம்,
அணுவானது (பற்பல பிறவிகளிற்) பற்பல சீவனாயுழிதாற்கும் ஒரு
சிவமாய் நிலைபெறற்கும் எயா நிலையில் ஆண் பெண் அலியெனப்

படாததாய் எவ்வாற்றானும் ஊறு கூறு செய்யப்படாததாய் நிற்குமென்பதூஉம், அதனால் அது சீவான்மாவெனற்கேனும் பரமான்மாவெனற்கேனு மமையாது கேவலம் " ஆன்மா " எனற்கே அமைவதாய்ச் சுருதிகளினும் அவ்வாறே ஆங்காங்குப் படிக்கப்படுவதாய்ப் பாச லக்கணத்தாற் பசுவெனப்படுவதா யுளதென்பதூஉம், புருடதத்துவம் பற்றுக்கோடாகத் தூலசூக்கும சீவநாடி பற்றுக்கோடாகச் சீவத்தன்மையுறற்குரிய நீர்மையின் அது சீவனெனவும் உயிரெனவும் பகரப்படுமென்பதூஉம் பெறுதும்.

இவ்வணுவிற்குச் சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தமென்னும் பூததன்மாத்திரைகள் ஐந்தானும், மனம், புத்தி, அகங்காரமென்னு மூன்றானும் படைப்புக்காலத்தில் ஆக்கப்பட்ட வுடம்பு புரியட்டகமெனப்படும். இவ்வெட்டும் பிரகிருதிகளெனப்படுமென்று சுருதி கூறுகின்றது. கூறுதலை,

(𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 𑌖𑌾𑌨𑌿𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌜𑌲𑌾𑌨𑌿𑌭𑍂𑌃 ।
𑌏𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑍌)

" மனோபுத்திரஹங்கார꞉ காநிலாக்நிஜலாநிபூ꞉ ।
ஏதா꞉ ப்ரக்ருதயஸ்த்வஷ்டௌ "

என்னுஞ் சாரீரகோபநிஷத வாக்கியங்களா னுணர்க. இப்புரியட்டகம் சூக்குமசரீரமெனவும்படும். தூலந்தணந்த பின்றை, இச்சரீரத்தோடுமுள்ள ஆன்மாவுக்குப் புண்ணிய மிகுதிப்பாட்டால் அச்சரீரத்தினின்றே பூதசார சரீரமெனப்படூஉந் தேவசரீரமுண்டாம், அஞ்ஞான்று அது மேலுலகங்களிற் புக்குய்யுமென்பதும்; பாவமிகுதிப்பாட்டால் அச் சரீரத்தினின்றே யாதனாசரீரமுண்டாம், அஞ்ஞான்று அது கீழுலகங்களிற் புக்கு வருந்துமென்பதும்; அஃது அப் புண்ணிய பாவங்க ளனுபவித்துத் தொலைந்தவழி அவ்வுடம்புகண் மறையப் பண்டைச் சூக்கும சரீரத்தோடு கன்மசேட வழியே கருவி னுழையுமென்பதும் நூல்களிற் பெறப்படுமாற்றானே அச்சூக்குமமும் விழிப்புலனாகாத அணுத்துவமெனவே கொள்ளக்கிடக்கின்றது. " உள்ளதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றுமனந் ---- தள்ள விழுங்கருவிற் றான் " எனச் சிவஞானபோதத்தும் இஃதியம்பப்பட்டது; காண்க. முன்னர்க் கூறப்பட்ட காரணதேகந்தானே மாயையென்னும் ஏகதத்துவமாயுள்ள மாயாதனுவெனவும், பஞ்சகஞ்சுக சரீரமெனவும், அவ்வியத்த குணசரீர மெனவும் மூவகைப்படுமென்ப. கலை, நியதி, காலம், வித்தை, அராகமென்பனவே அந்தப்

பஞ்சகஞ்சுகம். இக் காரணவுடம்புகளுட் பஞ்சகஞ்சுக மென்னும் ஐந்தும் ஒருங்குற்ற ஞாங்கர்த் தோன்றும் புருடதத்துவ மின்மையானும், அப்புருடன் இன்பமுந் துன்பமும் நுகருமாறு புல்லற்குரிய ஏனைக்கருவிக ளின்மையானும் இங்ஙன், எச்செயலுமின்றி நிற்கு நிலையே ஆணவாதி மும்மலமுடைய அணுக்கட்குரித் தென்பாம். நிற்க. சீவன் மரணத்தில் அணுவெளவாமெனின், மாணமாய சிலர் அலகையாவரென்ப தெவன்? எனின்,— கூறுதும். மேலே கிளக்கப்பட்ட புரியட்டகமென்னுஞ் சூக்கும தேகத்தினின்றே யாதானுமொரு வினையாற் சில தினங்கள் சென்றபின்றைக் காற்றினையொத்த அவ்வலகையுரு வுண்டாதல் கூடுமென்றும், அஃதியாவர்க்குமாமெனல் கூடாதென்றும், அவ்வுருவுணர்வு சொப்பனவத்தையையொத்த மயக்கத்ததாய்ப் பசி தாக சோகங்களானும் வருந்துவதா யுளதென்றும், அதனலது மனிதரா யுள்ளாரது உடம்பினைப் பற்றிநின்று அவரா லனுபவிக்கப்படுவனவற்றை யனுபவித்துக்கொண்டு அவ்வுடம்பளவில் வியாபியாய்ச் சாக்கிரத்தெளிவு முற்றிருக்குமென்றும், அவ்வலகையாற் பற்றப்பட்ட மனிதர்க்கு முன்னிருந்த வியாபகவுணர்ச்சி அவ்வலகை அணுத்தன்மைப்பட் டுறங்கிக்கிடக்குமேல்வையும் நீங்கிநிற்குமேல்வையுமே யுண்டாமென்றும் மொழிப. ஆமேல், மனிதனது மாமிசவுடலுழை நுண்ணிய புழுவினம் பல செறிந்திருந்தாங்கு அலகை பல வணுத்தன்மைப்பட் டாண்டிருக்குமெனற்கு மோரயிர்ப்பின் றென்னலாம். அலகையாதலும் ஒருகதியாமென்பதும், அக்கதியுலகு குய்யகவுலகிற்கும் இப்பூவுலகிற்கும் இடையிலுள தென்பதும் ஒல்லைநூல்களி னுணரக்கிடக்கின்றன. நிற்க. எமக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியரொருவர் பாதாள அஞ்சனமென்னும் ஒரு திற மையை இமையை யசைக்காதிருந்து பார்க்குங்கால், ஆங்குத் தோன்றிநின்ற வானரவடிவுடைத் தேவதையானது ஆவயிற் படைக்கப்பட்ட பண்டங்களெல்லாந் தானுண்டு களிப்பதாகக் காட்டுபு, சோதனை நிமித்தம் வாயிற்படியின் கீழ்ப்புடை யகழ்ந்த குழிக்கண் வைக்கப்பட்ட பொருள்களை யெடுத்துக்காட்டுமாறு அவ்விடத்தையடைந்து, மண்ணைத்தோண்டி யெடுத்துவிட்டு, அக்குழிக்கண் மடித்து வைக்கப்பட்டுள்ள ஒரு கருங்கம்பளியினை யெடுத்து விரித்துக்காட்டிய பின்னர், அதன்கீழ் வைக்கப்பட்டுள்ள பசிய இளநீர் மட்டையையுமெடுத்துக் காட்டக்கண்டவுடன் அவர் அச்சோதனைப்பொருள்கள் வைத்தாரோடு அவட்போந்து நோக்கலும், அவ்விடந் தோண்டப்படா திருந்ததையும், உடனிற்குமவர் அது

தோண்டிப் யாங்கள் வைத்தவாறே அவ்விரண்டு மீங்கிருக்கின்றன வென் றெடுத்துக்காட்டிய வுண்மையையுங்கண் டதிசயித்தனர். இதனால், யாதொரு தேவதையுடைய தேகமும், புசிப்பும், செயலும், அவற்றோடுங்கூடிய உலகமும் பூத சாரத்தின் கண்ணதாய ஒருதிறச் சூக்குமமென்பதூஉம், தூலத்தோடு கூடி நிற்குமுயிர் தூலபதார்த்தமே புசிக்கின்ற தென்பதூஉம் உணரக்கிடக்கின்றன.

அணுத்தன்மைப்பட்டிருக்கும் ஆன்மாவே மிகச்சிறிதென்பதூஉம், அதன் அகம் புறம் வியாபித்துநிற்கும் பரமான்மாவே மிகப் பெரிதென்பதூஉம், சித்தாயுள்ள இவ்விருதிறப் பொருள்களுள் ஒன்றுமல்லாச் சட அணுக்களும் அவற்றுட் சில பல திரண்டு பெருத்த பொருள்களும் அவையெல்லாந் தன்மாட்டடங்க நிற்கும் மாயையாகிய மகாசடமும் அத்துணைச் சிறிதும் பெரிதுமல்லாதன வென்பதூஉம் இவ்வணுவிசாரத்திற் பெறலாமன்றோ. 'பரமாணு' என்னும் வியவகாரம் இங்குச் செல்லுவதன்று. என்னை? சுருதி முதலிய பிரபலப் பிரமாணங்களில் 'அணு' எனவே யிருத்தலின்.

இற்றைச் செவ்விக்கு மூந்நூறு வருடங்கட்கு முன்னர் ஐரோப்பாக் கண்டத்தின் கண்ணதாய ஹாலண்டென்னுந் தேயத்திற் சணனூற்புடைவை வர்த்தகராயிருந்தா ரொருவர் தம்மால் நவீனமாக அரிதிற் செப்பப்பட்ட கண்ணுடி வாயிலாக நீரிலும் பிராணிகளின் குடர்களிலும் பல்லாயிர அணுக்களைக்கண்டன ரென்பதூஉம், வாய் நீரிலும் உமிழ்நீரிலுமுள்ள அவ்வித அணுக்களை அங்ஙனம் முன்னும் பின்னும் புறங்களிலுமாக நீந்திக்கொண்டிருக்கும் நுண் கிருமிகளென்றும் அவர் நோக்கினரென்பதூஉம், இற்றைக்கு நூற்றைம்பது வருடங்கட்கு முன்னர் இடாலி என்னுந் தேயத்தின்கட் கிறிஸ்துமத குருவாயிருந்தாரொருவர் காற்றில்லாவிடத்தே சீவ அணுக்கள் பிரவேசியா வென்பதை யறிந்தனரென்பதூஉம், பின்றைப் பிரான்சு என்னுந்தேயத்து இரசாயன சாஸ்திரியாய லூயி பாஸ்ட்யூர் என்பவர் கட்புலனுகாது காற்றகத்துலாவு நுண்டுகள்களைக் கிரகித்துச் சோதித்த ஞான்று அவற்றின்கண் அச்சீவ அணுக்களைக்கண்ணுற்றனரென்பதூஉம், அவ்வணுக்கள் குடிகொண்டுள்ள ஒருலகமுமிருக்கின்றது; அவ்வணுக்களின் பிரவேசந்தான் பல் பொருள்களும் அழுகி யொழிதற்குக் காரணமெனப் பலர்க்கும் அவர் நிரூபித்தன ரென்பதூஉம், ஒன்றனை ஐந்நூறு ஆயிரமளவை பெரிதாகக் காட்டத்தக்க கண்ணுடி வாயிலாக அச்சீவ அணுக்களின் வடிவுகள் வட்

டமாகவும் ஒரு தலை நுனித்த நீளமாகவும் பன்முறை சுருண்ட வளை விற்றாகவும் மயிரொத்த கவடுகள் பல நுனிக்கண்ணும் இடைக் கண்ணு முள்ளனவாகவும் நூல் போல்வதாகவும் அறியப்பட்ட செவ்வி அவையற்றிற் சிலவற்றிற்குத் தாவரவருக்கவியல்புஞ் சிலவற் றிற்குச் சஞ்சரிக்குஞ் சீவவருக்கவியல்புங் காணப்பட்டன வென் பதூஉ மெழுதியுள்ள இலிகிதங்களும் மேமேல கூறப்பட்ட அநுவி னுண்மையை ஆதரிக்கவேயுள கண்ணுடிவாயிலாகக் காணத்தக்க அணுக்களினும் அதிநுண்ணியவாகும் மேமேல கருதிக்கிடந்த ஆன்ம அணுக்களென்க. கெடாத வித்திலே கிழங்கிலே தண்ணீர் சம்பந் தப்படுஞ் செவ்வி தாவர அணுக்க ளுழையும்: நுழைந்தவுடன் அவை முளைத்து நிமிர்தல் போலவே மரம், செடி, கொடி யென்ப வற்றுட் சிலவற்றைத் துண்டு துண்டாக விடுவாய்செய் தெடுத்து நிலத்தினட்டு நீர்விடுஞ் செவ்வி உரிய தாவர அணுக்கள் புகுத லும் அவையற்றுள் ஒரோவொன்றுந் தளிர்த்திடு மென்க.

சிட்டி - சிருட்டி என்பதன் விகாரம்; "சிட்டி செய்வதித் தன்மைய தோவெனுச் செவ்வேள்—குட்டி ஞயன் நான்குமா முடிகளுங் குலுங்க" என்றார் கந்தபுராணத்தாரும். ஒடு - எண்ணின்கண் வந்தது. 'என்று' என் பது சொல்லொழிபு. 'சட்ட' என்றது செப்பமுணர்த்தி நிற்குமோ ரகர வீற்றுச்சொல். இது, சட்டமெனவும் வழங்கப்படுகின்றது. "சட்டவினி யுளது" என்றார் சிவஞானபோதாசாரியரும். கட்டினையும், அமலத்தையும் என இரண்டனுருபுஞ் சாரியையும் உம்மையும் விரித்துரைக்க. உவகை= களிப்பு, இன்பம்; கைவிகுதிபெற்ற தொழிற்பெயர். உடை - உடைய வென்பதன் விகாரம். மன், ஓ - அசைகள். (கடு)

சத்தாவரண விவரம் முதலியன.

பூவுதக மாரனுயிர் புட்கர வியோமம்
ஓவலின் மகத்துவ மகந்தையெனு மோரேழ்
ஆவரண மெய்ந்நடு வலங்குறழ்வு மன்றிற்
கூவியனன் மாநடை குகேசனிடு வானல்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, நிறைவுள்ள ஆகாயம், குறை வில்லாத மகத் தத்துவம், அகங்காரமென்னும் ஏழாவரணத்துடன் கூடிய தத்துவத்துட் பிரகாசிக்கின்ற ஞானசபையில் உலகநடன மும், அதின்மேம்பட்ட நடனமுமாம் மகாநடனத்தைக் குகேசன் செய்தருளுவன்.

தைசச அகங்காரமுஞ் சாத்துவிகமுங் கூடியவிடத்தே தோன் றுஞ் செவி, உடம்பு, கண், நா, மூக்கென்னு ஞானேந்திரியம் டு - ம்;

வைகாரிக அகங்காரமும், இராசசமுங் கூடியவிடத்தே தோன்றும் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமென்னுங் கன்மேந்திரியம் ௫-ம்; பூதாதி அகங்காரமுந் தாமசமுங் கூடியவிடத்தே தோன்றுஞ் சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தமென்னும் பூததன்மாத்திரை ௫-ம்; இத்தன்மாத்திரைகளினின்று தோன்றும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் பூதம் ௫-ம்; தைசச அகங்காரமுஞ் சாத்துவிகமுங் கூடியவிடத்துத் தோன்றும் மனம், சாத்துவிகம் மிக்கவிடத்துத் தோன்றும் புத்தி, முக்குணமுஞ் சமப்பட்டவிடத்துத் தோன்றுஞ் சித்தம், புத்தியிற்றோன்றி மூன்றாகப் பகுக்கப்பட்ட அவ்வகங்காரம் ஆகிய அந்தக்கரணம் ௪-ம்; பூதாதி அகங்காரத்திற்கு ஆதாரமான முக்குண அவ்வியத்தப் பிரகிருதிக்குங் காரணமாயுள்ள கலையும், இக் கலையுடன் நியதி, காலம், வித்தை, அராகமென்று நான்கு மொன்றுபட்டவிடத்தே தோன்றும் உள்ளந்தக்கரணமாகிய புருடதத்துவமும், அக் கலையின் காரணமான மாயையும், இம் மாயைக்கு ஆதாரமாய் மகத்தாயுள்ள சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், விந்து, நாதமென்னும் ஐந்து சுத்ததத்துவங்களுஞ் சகத்து (=பிருதிவி) முதல் மகத்து இறுவாய்க்கிடந்த ஏழினு மடங்குதலின் அவை பூ, உதகம், ஆரல், உயிர், வியோமம், அகந்தை, மகத்துவமென்னும் ஆவரணங்களாகக் கூறப்பட்டன. பூ என்பது முதல் வியோமமென்ப திறுவாய்க்கிடந்த ஐந்தும் முறையே பிருதிவியாதி ஐம்பெரும் பூதங்களேயாம். அகங்காரமே அகந்தையெனப்பட்டது. மகத் தத்துவமே மகத்துவமெனப்பட்டது. "பூத தன்மாத்திரை ஐந்தும், அகங்காரம் மகத்தென்னும் இரண்டுமாகிய ஏழுகிரந்திகட்கு ஆதாரமாயுள்ள குணதத்துவ காரணத்தை" எனப் பொருள்படுத்தத்தக்கதும், (ஸப்தக்ரந்திதாநஸ்ய யத்தத் கௌணஸ்ய காரணம் ।) "ஸப்தக்ரந்திதாநஸ்ய யத்தத்கௌணஸ்ய காரணம் !" என வருவதுமான மிருகேந்த்ராகம கலாதிப்ரகரண வசனம் இச் சத்தாவரண விவரத்தை யுணர்த்துவதாயிருத்தலுங் காண்க. 'க்ரந்தி' என்னும் வடசொல் முடிச்சு, வளைவு, குடிலத்துவமென்னும் பலபொருளுடைத்து. இஃது ஆவரணமெனவும்படும். செவிமுதல் அந்தக்கரணங்காறுமுள்ள ௨௪-ம் ஆன்மதத்துவமெனவும், கலை முதல் மாயைவரையினு முள்ள ௭-ம் வித்தியாதத்துவமெனவும், சுத்தவித்தைமுதல் நாதம் ஈறாகவுள்ள ௫-ஞ் சிவதத்துவமெனவும் பெயர்பெறும். பெறுமாற்றானே நாதாந்தத்திலேயே நடனமென்ப தோரக்கிடக்கின்றது: ஆகலினன்றே "நாதாந்த

நாடகத்தை நன்று வருள்செய்தீர்" என மனவாசகங்கடந்தாரும் உண்மைவிளக்கத்தி னுரைத்தருளினார். இஃதும், உரிய சுருதிகளும் ஏற்புடைமை கருதி ௫ - ன் உரைக்கண்ணுங் காட்டப்பட்டனவே. நாதம் தத்துவ சிரேட்டமாகலின் அது மகத்தென்னும் பெயர்பெற்றுளது. இதன் காரணமாயுள்ள சுத்த மாயையும் அவ்வியத்தமென்னும் பெயருடைத்து. இக் கிரமத்தையும், இதன் மேலுறு பரம்பொருளிருக்குந் தன்மையையும்—

(𑌮𑌹𑌤𑌃 𑌪𑌰𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤 𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌃 ।
𑌪𑌰𑍁𑌷𑌾𑌨𑍍𑌨 𑌪𑌰𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌸𑌾 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾 𑌸𑌾 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃 ॥
𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑍋𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 ।
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑍍𑌯𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌯𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 ॥)

"மஹதஃபரமவ்யக்த மவ்யக்தாத்புருஷஃபரஃ ।
புருஷாந்நபரம்கிஞ்சித் ஸாகாஷ்டாஸாபராகதிஃ ॥
ஏஷஸர்வேஷுபூதேஷு கூடோத்மாநப்ரகாசதே ।
த்ருச்யதேத்வக்ர்யயாபுத்த்யா ஸூக்ஷ்மயாஸூக்ஷ்மதர்சிபிஃ ॥"

எனக் கடோபநிஷதம் நிகழ்த்துதல் காண்க. "பொருள் :— மகத்தினும் அவ்வியத்த முயர்வுடைத்து: அவ்வியத்தத்தினும் புருடன் மேலானவன்: புருடனினும் உயர்வுடைப்பொருளொன்று மின்று: அவன் யாவற்றினுஞ் சிறந்தவன்: அவன் மேலானகதியாயிருக்கின்றனன்: இவன் எல்லாப்பூதங்களகத்தும் மறைந்து பிரகாசியாதிருக்கின்றனன்: கூர்த்தபுத்திகொண்டறிபவர்களாற் றரிசிக்கப்படுகின்றனன்" என்பதாம். சரீரமாகிய புரத்திலிருத்தலிற் குகேசனைப் புருடனென்று இச்சுருதி பயம்பிற்றென்க. ஆன்மதத்துவம் ௨௪ - என்றற் றொடக்கத்தனவாகக் கூறப்பட்ட ௯௬ - தத்துவங்களும் வேதாகமபுராணங்களில் விளக்கப்பட்டன வென்பதற்குரிய மேற்கோள்களைப் பரிபூரணானந்தபோதத்துப் பிற்படலத்து ௭௮ - ன் உரையிலும், சைவசமயசரபத்துக் கைவல்லியகாண்டத்திலுங் கண்டு கொள்ளலாம். பூதலய காலத்தில் மரணமாந்தேவர்க்கு மரணமில்லாரென்னும் அருத்தத்தினுள்ள அமரரென்னும் பெயர் ஏற்பட்டாங்குக் காரியக்கேடுடைக் கருவிகட்கும் உண்மையென்னும் பொருளுடைத் தத்துவமென்னும் பெயரேற்பட்டுளது. இதுவே 'மெய்' எனச் செய்யுளில் வந்துளது. அங்ஙனம் "ஏழாவரண மெய்ந்நடு" என்றதற்குச் சத்தாவரணமாயுள்ள தத்துவங்களின் நடுவான உன்னதத்தி லெனும்பொருள் கொள்க. ஆவரணம் மறைவெனும் அருத்த

முடைத்து. அதுவே திரையெனவும்படும். இத்திரையினுள்ளேயே பரமான்மாவிருக்கின்றன னென்பது—

(ஜீதஸுகஃஹுணமயெநவடெநாத்மாந ஜந்தயாயாவஸ்திதா ஜதி)

"ருதபுக்குணமயேநபடேநாத்மாந
மந்தர்தாயாவஸ்திதா இதி"

என்னும் மைத்ராயண்யுபநிஷத்தின் உ - ஆம் பிரபாடக வசனத்தறியலாம். தமிழ்:—"சத்தியசங்கற்பன் குணசொரூபமான திரைச்சீலையினாற் றன்னை மறைத்துக்கொண்டு கன்மபலனை யனுபவிப்பவன் போலிருக்கின்றனன்" எனவாம். "இவன் எல்லாப் பூதங்களகத்தும் மறைந்து பிரகாசியா திருக்கின்றனன்" எனும்பொருளின் மேற்போந்த கடோபநிஷத் வசனமும் இத்திரையைக் காட்டுகின்றது. மறைவனைத்தும் மேலைச்செய்யுளுரைக்கட் சொல்லப்பட்ட திரோதானசத்தி காரியமாயிருத்தலின் ஆவரணம் அதுவே யெனுமொரு முடிபுஞ் செய்யலாம். இத்திற மறைவிடத்திருப்போன் யாண்டும் பூரணனென்ப தெவ்வாற்றாற் காணப்படும்? என்னும் ஆசங்கையீண்டு நிகழ்தல்கூடும். (ஸபாஹ்யாப்யந்தரேऽபரிமிதத்யுதி நிபம் தத்வமஹாகாசம் ।) "ஸபாஹ்யாப் யந்தரேபரிமிதத்யுதி நிபம் தத்வமஹாகாசம்!" என மண்டலப்ராஹ்மணோபநிஷதம் ஓதுகின்றபடி 'உள்ளும் புறம்புமுள்ள மகாகாசம்' போல அவன் வியாபித்திருக்கின்றனன்; மறைவினைக் கடந்துநின்று அவனைத் தரிசித்தெய்தும் அத்துவிதானுபவத்தில் அப் பூரணங் காணப்படுமென அவ்வாசங்கையை யொழித்துக்கொள்க. உதிரத்திற் சம்பந்தப்பட்ட யாதோருட்டிணசத்தி யௌடதம் அவ்வுதிரமிருக்கு மெல்லையளவும் பரந்து நிற்பதையொக்கும் இவ்வனுபவமென்பதும், அந்த ஔடதம் உதிரத்திற் சம்பந்தப்படா தெங்குச் சம்பந்தப்படினும் வேறு கிடப்பினும் பரந்து நில்லாதவாறே குகப்பிரமாகாசத்தைக் காணுதற்கு மும்மருந் திரைகளிடைத் தடையுண்டுகிடக்கு மென்பதுந் தெற்றெனவோர்க. இவ் வுண்மையையே இப் பிண்டதகரவித்தை யியலுங் கூறிமுடிவதா யுளது.

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

என்னுந் திருநாவுக்கரசுகளது திருவாக்கினையு மிங்ஙனுணர்ந்து கொள்க. இவ்வுண்மை பிடித்தன்றே திருமந்திரமும்—

"பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணந்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாந்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே."

என்றோதுவதாயிற்று. பொருள் :—"மரத்தின் சார்பிற் சில பொருள்களைக்கொண்டு யானையென அலங்கரிக்கப்பட்ட வுருவம் அம் மரத்தின் சொரூபத்தை மறைத்துத் தனது வடிவையே காட்டிக்கொண் டிருத்தல்போலப் பரத்தினாதாரத்திற் பிரகிருதிப் பொருள்கள்கொண் டலங்கரிக்கப்பட்ட பௌதிகப்பிரபஞ்சமும் அப் பரசொரூபத்தை மறைத்துத் தன் வடிவையே காட்டி நிற்பதாயிற்று. அவ் யானைவடிவின் ஆதாரம் யாதெனவுய்த்துணர்ந்த வழி அம் மரமொன்றே யறியக்கிடந்தவாறு பிரம விசாரத்துஞ் சருவாதாரப் பிரமமொன்றே யறியக்கிடத்தலின், அனுபூதியிற் பிரபஞ்சமானது மறைய; அந்தப் பிரமமொன்றே மேலிட்டு நிற்கும்" எனவாம். இங்ஙனம் "பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்" என்ற வுவமானத்திற்குத் "தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்" என்றது உவமேயமாயிருத்தலிற் பொன்னாகிய ஆன்மாவே பூடணமாகிய தனுகரணங்களாயிருக்கின்ற தென்ப தேற்படுகின்றதே, இதற்கு வேறாக மரம், யானை; பரம், பிரபஞ்சமென்னும் உவமான வுவமேயங்கள் பொருள்படுமோ? எனின்,— நன்று கடாயினாய்; ஆன்மாவே தனு கரணங்களாயுமிருக்குமென்னின் உயிரானது தந்தை தாயருடைய சுக்கில சோணிதங்களிற்புக்கு உடம்படாது தன்சொரூபத்திருந்தே அது தோன்றுமாறு செய்துகோடல்வேண்டும். அவ்வாறின்மையால் அது கோடற்பாலதன்று. மண்ணே குடமாயிற்றென்பது போன்ற பரிணாமோபாதானகாரணத்தையேனும், கயிறே பாம்பாகக்காணப்படுமென்பது போன்ற விவர்த்தோபாதானகாரணத்தையேனும் விளக்கற் கிவ் வுவமான மெழுந்ததுமன்று. மற்றென்கொலோ அதன்பொருள்?

10

எனின்,—விகாரமான பூடணத்தில் அதனுதார சுயம்புவாம்பொன் மறைந்துகிடப்பதுபோலத் தனு கரணங்களிலும் அவற்றினுதார ஆன்மா மறைந்துகிடக்குமென்பதை யுணர்த்தற் கெழுந்ததென்பதே சாலும். இப்பொருள் காரணம்போலவே காரியமு மிருத்தல்வேண்டு மென்னு நியாயத்திற்கும் விரோதப்படாது. அதனை,

(कारणाभिन्नरूपेण कार्यं कारणमेव हि ।
तद्रूपेण सदा सत्यं भेदेनोक्तिर्मृषा खलु ॥)

"காரணாபிந்நரூபேண கார்யம்காரணமேவஹி ।
தத்ரூபேணஸதாஸத்யம் பேதேநோக்திர்ம்ருஷாகலு ||"

என்னும் பஞ்சப்ரஹ்மோபநிஷத் வசனத்தினறிக. பொருள் :— "காரணம் காரியத்தினின்றும் வேறன்று : காரியம் அதன்காரண ரூபத்தில் எஞ்ஞான்றும் நிலைபேறுறுகின்றது : இதற்கு வேறு கூறுதல் தவறே" என்பதாம். இங்ஙனம் சித்தாகிய ஆன்மாவிலிருந்து அசித்தாகியவுடம்பு தோன்றும், சித்தே அசித்தாகக் காணப்படு மென்பனவற்று ளொதனைக்கூறினுங் காரண காரிய விரோதமேயா மென்க; சருவ விகாரமுமேற்படுமென்க. 'தன்னை மறைத்தது தன் கரணங்கள்' என்றதனுல் முற்பட்டசெய்யுள் சீவான்மாவைப்பற்றி யெழுந்த தென்பதும், 'பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்' என்றதனுற் பிற்பட்டசெய்யுள் பரமான்மாவைப்பற்றி யெழுந்த தென்பதும் அறியக்கிடத்தலிற் பரமென்பதைமட்டும் பரப்பிரகிருதி யெனக்கொண்டு காரணகாரிய வொற்றுமை கூறிவிடத் துணிதல் பொருந்துவதன்று. பிருதிவிமுதலிய நான்கு பூதங்களிலும் ஆகாயம் நிறைந்திருத்தலிற் "புட்கர வியோமம்" என்றார். புட்கரம் = நிறைவு; டகரவேதுகை காண்க. பஞ்சகிருத்திய மகாநடனம் உலக நடனமும், அதின் மேம்பட்ட நடனமுமாகவிருத்தலிற் "கூவிய னன்மாநடை" என்றார். கூ = பூமி; "கூநின் றளந்தகுறள்" என்றார் பொன்முடியாரும்; ஈண்டு உலகத்தின்மேற்று. வியன் = பெருமை யெனும் பொருடருமோ ருரிச்சொல்; சே - திவாகரங் காண்க; "வியனுண்மீ னெறியொழுக" என்றார் (மதுரைக்காஞ்சியில்) மாங்குடிமருதனுரும். நடை = கூத்து; "நடையு நட்டணமு மப்பேர்" என்பது சூடாமணி நிகண்டு.

அகந்தை ஒவலின் மகத்துவம் என மாறுக. மன்று = சபை; அம்முச் சாரியை பெறின் மன்றம் எனவாம். இது நிகண்டிலு முளதென்பதை சூ - ன் உரையி லறிக. (கச)

### பஞ்சகிருத்தியக்கூத்து இத்தன்மைத்தென்பது.

அம்மனை யருந்துவது செம்மலுரு வாமா
தம்மனை யனுக்கிரக சத்திகளி கூரச்
செம்மலிடு மாட்டம துயிர்க்கசைவு செய்யும்
அம்முறையி லைந்துதொழி லாயது நிலாவும்.

தாயருந்து மாகாரமானது அவளது கருப்பத்திலுள்ள கான் முளையி னுடம்புக்கும் பயன்பட்டு நிற்றல்போலச் சருவலோக மாதாவாகிய அனுக்கிரகசத்தி திருத்திகொள்ளும்படி முதல்வன்செய்யு நடனமும் (அச்சத்தியின் வியாபகத்துட்பட்ட) சீவர்கட்கு அசைவையுண்டுபண்ணும். அவ்வொழுங்கில் அந் நடனம் பஞ்சகிருத்தியங்களாய் நிரம்பிநிற்கும்.

மேலே யுயிர்க்கூத்தெனவும், அது சிருட்டி திதிமுதலிய ஐந்து கருணைத் தொழிலெனவுங் கூறிய ஆசிரியர் அது பராசத்தி வாயிலாகவே நிகழத்தக்கதென்பதை உவமானமுகத்தான் இங்ஙனம் விளக்கினரென்பதும், இவ்வாறு விளக்காவிடிற் சத்திமுன்னிலையாக அத்தொழில் நிகழுமென்பதென்னையென்னும் ஓராசங்கை தோன்றிநிற்குமென்பது மோர்க. பராசத்தி சருவலோகமாதாவென்பதை— (ஸைவஜகதண்டமஸ்ருஜத - ஸைவஜகதண்டமஸ்ருஜத=) "அந்தத் தேவியே சகத்தாகிய அண்டங்களை யீன்றவள்" என்று ருக்வேத பஹ்வ்ருசோபநிஷதம் பகருமாற்றானு மறிக.

அம்மனை = ஈன்றவள்; சூடாமணிநிகண்டு காண்க. உருவிற்கு எனக்குவ்வுருபு விரித்துரைக்க. 'ஆமா' என்பதில் ஆ - ஆறு என்பதன் விகாரம்; "கங்காள மாமா கேள்" என்றார் ஸ்ரீமந் மாணிக்கவாசகனாரும். "அம்மையன்னையாய் அவ்வை தம்மனை" என்று பிங்கலநிகண்டு கூறுகின்றபடி தம்மனை = தாய்; ஈண்டே சருவலோக மாதாவின்மேற்று. தம்மனை யனுக்கிரக சத்தி - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. "செம்மலிடு மாட்டம்" என்றதிற் செம்மலென்பது பெருமையிற் சிறந்தோன், எப்பொருட்கு மிறைவனென்னும் பொருளுடைத்து; ஆகுபெயர். (௧௫)

### சிதம்பரநடனங் காணுங் கண்ணினையும், அதிகாரியினையும் விளக்கல்.

ஆவரண மானதிரை யேழையு மகற்றிப்
பாவனமெய்ஞ் ஞானமிகு பார்வையுடை யார்கண்

**கோவுயர் சிதம்பர குகேசனடை காணுங்**
**கேவல முளார்விழி கெழீஇயறி யாவால்.**

(முன்னர்க் கூறப்பட்ட) ஆவரணங்களாகிய ஏழு திரைகளையு நீக்கித் தூய்மை மிகுந்த மெய்ஞ்ஞானப் பார்வை கெடாதாருடைய ஞானநேத்திரமே ஆகாசங்களின் மேம்பட்ட சிதம்பர குகேசனது நடனத்தைத் தரிசிக்கும். ஆணவவிருளின் மறைப்புண்டு கிடப்பாருடைய கண்கள் அவ்வாகாசத்துடன் கலந்துநின்று காணுந்தன்மைய வல்ல.

இச்செய்யுள்—

(𑌪𑌰𑌾𑌞𑍍𑌚𑌿𑌖𑌾𑌨𑌿𑌵𑍍𑌯𑌤𑍃𑌣𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍂𑌸𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿
𑌨𑌾𑌂𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 । 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑍀𑌰𑌃𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍈𑌕𑍍𑌷𑌦𑌾
𑌵𑍃𑌤𑍍𑌤𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍 ॥ )

“ பராஞ்சிகாநிவ்யத்ருணத்ஸ்வயம்பூஸ் தஸ்மாத்பராங்பச்யதி
நாந்தராத்மந் । கச்சித்தீரஃப்ரத்யகாத்மாநமைக்ஷதா
வ்ருத்தசக்ஷுரம்ருதத்வமிச்சந் || ”

என்னுங் கடோபநிஷத் வசனார்த்தத்தை யுட்கொண்டுளது. அருத்தம் :—“ சுயம்புவானவன் இந்திரியங்களை ஆன்மாவுக்கு அன்னியமானவற்றையே யறியுமாறு சிருட்டித்தானாகலின் அவை அன்னியமானவற்றையே காண்கின்றன : அந்தரான்மாவை யறிகின்றில : தீரனுள்ளோன் இந்திரியங்களைத் திருப்பிக்கொண்டு அமிர்தத்துவத்தை விரும்பினவனாய்ப் பிரத்தியகான்மாவைப் பார்க்கிறான் ” எனவாம். கேவலமென்பது சகலாவத்தையெனும் விழிப்பொழிதலும் ஆண்டாணவமலத் தழுந்திநிற்குந் தனிநிலை. இஃதுறக்கமெனப்படும். இதனையுடையா ரறியாரென்பதற்குரிய வராஹோபநிஷத் வசனம் பாயிரத்து ௩-ம் உரையில் வந்துளது. “ இராப்பக லற்ற விடத்தே யிருந்து— பராக்கற வானந்தத் தேறல் பருகி ” எனத் திருமந்திரத்தில் வருவதும் அப்பொருட்டு. திரைவிவரம் முன்னர்க் கூறியாயிற்று.

‘ பாவனம் மிகு மெய்ஞ்ஞானப் பார்வையுடையார்கண் ’ எனவியையும். பாவனம்=சுத்தம் ; சூடாமணிநிகண்டு காண்க. ‘ கண்ணே ’ எனப் பிரிநிலை ஏகாரம் விரிக்க. கோ=ஆகாயம் ; வகாரவேதுகை காண்க. ‘ கேவல முளார் ’ என்பது கேவலமுடையவர் என்னும் பொருளில் வந்தது ; திருஞான

சம்பந்தசுவாமிகளது தமிழ்மறையில் "இயலுளோர் தொழுதெழு மின்னம்பர் மேவிய - - - - அயனுமா லறிவரி யீருமவ டிதொழு— மயலுளார் மறுபிறப்பிலரே" எனவும், மாணிக்கவாசகசுவாமிகளது தமிழ்மறைச் சிவபுராணத்தில் "இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே" எனவும் வருவன போல் வருவன பல. கெழீஇ - சொல்லிசை நிறைக்கும் அளபெடை. (கசு)

அளப்பிலய னங்களி லயர்ந்தபுணி யத்தால்
விளக்கமிகு சற்பதி விளக்குமொழி யொன்றால்
உளத்தெளி வுதித்தவ ருலப்புறுமுன் ஞானத்
துளக்குமுள ஞானசவை சூழ்ந்துதரி சிப்பார்.

அளவிறந்த சன்மங்களி லீட்டப்பட்ட புண்ணியத்தின் பயனாக ஞானப்பிரகாசம் மேலிட்ட சதாசாரியன் விளக்கிக்காட்டும் பொருட்குரிய ஒருமொழியால் உள்ளத்தெளிவு பிறந்துளாரே, தேகவியோகத்திற்கு முன், ஒளியுடைய ஞானசபையை யாராய்ந்து தரிசிப்பார்கள்.

மண்டலப்ராஹ்மணோபநிஷதம்— (அநேகஜந்மார்ஜிதபுண்யபுஞ்ஜபக்வஸ்ய கைவல்யபலம்) "அநேகஜந்மார்ஜிதபுண்ய புஞ்ஜபக்வ கைவல்யபலம்" என்று கூறுதலின் "அளப்பில் அயனங்களி லயர்ந்த புண்ணியத்தால்" என்றார். அயனம்=சன்மம். மைத்ரேயோபநிஷத்தில் (ஏகமேவாத்விதீயம் யத்குரோர்வாக்யேந நிஶ்சிதம் । ஏததேகாந்தம்) "ஏகமேவாத்விதீயம் யத்குரோர்வாக்யேந நிச்சிதம் । ஏததேகாந்தம்" என வருவசனம் "குரு வாக்கியத்தினால் அத்விதீயமாகவுள்ளபொருள் ஒன்றேயென எது நிச்சயப்பட்டுளதோ அதுதான் ஏகாந்தம்" என்னும் பொருளைப் பயத்தலிற் "சற்பதி விளக்குமொழி யொன்று" என்றார். பதி=குரு; பிங்கலநிகண்டு காண்க.

மேலைச்செய்யுளிற் சொல்லப்பட்ட ஞானக்கண்ணினை, இங்குச் சொல்லப்பட்ட அதிகாரியாவாரே தேகவியோகத்திற்கு முன்னெய்தப்பெற்று அச்சபையைத் தரிசிப்பரென்பது இங்ஙனம் பெறப்பட்டது.

புணியம் - தொகுத்தல். துளங்கல்=ஒளிர்தல்; பிங்கலநிகண்டு காண்க. "தூலத் தடுத்த பளிங்கின் றுளக்கமென" என்றார் உய்யவந்ததேவரும் திருக்களிற்றுப்படியாரில். சூழல்= மனமொருங்கி யாராய்தல்; "சூழலே யிடம் விசாரம்" என்பது வகரவேதுகை. விசாரம்=ஆராய்தல். (கஎ)

**ஆனுடலி னல்லவ ரருந்தமிழ் திருக்குந்
தானமென மெய்ப்பரதர் சாருள ததிற்சேர்
மானுடரு ளுற்றவுரு மாத்திர முளாரவ்
வானவ னலங்குமணி மன்றுள்வெளி காண்பார்.**

பசுவினதுடம்பில் ஆகாரநியமமுள்ள பெரியோ ரருந்தத்தக்க பாலிருக்குமொரு மடியைப்போல (இப்பெரிய பூமியில்) வாய்மையுடைய பரதனாது கண்டமென ஒரு சிறுபாகம் விசேடமாகவுள்ளது. அதன்கட் சனிக்கும் மாந்தர்களுள் இனி யுடம்பெடாமல் எடுத்தவுடம்பொன்றுமேயுள்ளார் அவ் வாகாச சொரூபமாகிய குகேசனது ஒளிசெய்கின்ற மணிமன்றின் உள்வெளியைக் கண்ணுறுவர்.

பசுவினதுடம்பெங்கும் இரத்தமே நிறைந்திருப்பினும் நல்லவ ரருந்தற்குரிய பாலானது அதன் பிற்புறத்து அடியிலுள்ள சிறு மடியின்கண்ணேயே காணப்படுமாறு, பல சீவான்மாக்களும் வசித்தற்கிடனுயுள்ள இப் பெரியபூமியி னொருசார்பாய்ச் சிறிய இடமாயுள்ள பரதகண்டத்திலேயே பிரமானுபவப் பிரமஞானவிசாரப் பெரியோர் அதிகமாகத் தோன்றுவர்; அதனைக் குறுகிநிற்பர்; அன்னோருள்ளும் பெபர்த்துமோருடம்பி னுழைபா விடுதலை வாய்ந்துளாரே சிதம்பரநடனங் காண்பரென்பதனை இச்செய்யு ளுணர்த்துவதாயிற்று. இச்செய்யுளி னுண்மையெனற்கு இப் பரதகண்டத்துள்ள ஞானசாத்திரங்களும், அவற்றின் ஆசிரியன்மார்களும், அவ்வழிநின்ற எண்ணிலடங்கா அற்புத அனுபூதிமான்களுமே பெருஞ்சான்றாகவுள்ளாரென்க. இங் கண்டத்திற் பிறப்போரும், பிற கண்டங்களிற் பிறந்து இக் கண்டத்தினை யடைவோரும் அவ் விசாரத்திற்குரியாரென்னும் பொதுநியமந் தோன்றவே "அதிற்சேர் மானுடருள்" என்றார். புண்ணியலோகமாகிய சுவர்க்கத்திற்கும், பாவலோகமாகிய நரகத்திற்கும் இடையேயுள்ள இப்பூவுலகிற்கு வருவோர் பாவமும் புண்ணியமுமாகிய இரண்டுங் கலந்த கன்மசேட முள்ளவர்களேயென்பது சுருதி நிச்சயமாகலின் ஆசிரியர் அவ்வாறு கூறியது வாய்ப்புடைத்தேயாகும். அச்சுருதி —

([illegible] ।)

"அதைகயோர்த்வஉதாந: புண்யேந புண்யம்லோகம்நயதி
பாபேநபாபமுபாப்யாமேவ மநுஷ்யலோகம் ।"

எனவரு அதர்வவேத பிரச்நோபநிஷத் வசனமே. பொருள் :— "மேன்முகமாயுள்ள உதானவாயுவானது ஒருநாடி (=சுழுமுனை) வழியாலே புண்ணிய வாயிலாகப் புண்ணியலோகத்தையும், பாவ வாயிலாகப் பாவலோகத்தையும், பாவமும் புண்ணியமுமாகிய இரண்டின்வாயிலாக மானுடவுலகத்தையுஞ் சீவற்குச் சேர்ப்பிக்கின்றது" எனவாம். பரதகண்ட விசேடம் —

"கர்மபூமிரியம்ப்ரஹ்மந் பலபூமிரிதஃபரா ।
இஹயத்க்ரியதேகர்ம தத்பரத்ரோபயுஜ்யதே ॥"

என்னும் மிருகேந்த்ராகம அத்வப்ரகரணச் சுலோகத்தி லறியக் கிடக்கின்றது. பொருள் :— "பரதகண்டமாகிய இதுதான் கரும பூமி: மற்றெல்லாம் பலபூமி: இங்கேசெய்யப்படுங் கருமம் ஏனையிடங்களிற் பலன்கொடுத்தற் கேதுவாம்" எனவரும். இதன்கருத்து இக்கருமபூமியல்லாத சுவர்க்கங்களிலும் ஆன்மலாப முயற்சிக் கிடனின்றென்றவாறே. இது, "புவனியிற் போய்ப்பிற வாமையி னாணாம் போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி— சிவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்னுந் திருவாசகத்துங் கூறப்பட்டதெனக் கோடும். ஆறு= இடம். பலபூமி யென்றது நல்வினைப் பயனையேயேனுந் தீவினைப் பயனையேயேனு மனுபவித்திருத்தற்குரிய சுவர்க்க நரகங்களையே. போந்த கண்டமானது மனு வமிசத்திற் றோன்றிச் சம்புத்தீவை யாண்ட அக்கினீத்திரனென்னும் பெயரிய அரசனுடைய மக்களிற் பரதனென்பார் பெயராற் பாரதவருஷம் (பரதகண்டம்) எனப்பட்டதென்பது மேலைப்பிரகரணத்து (சுழ்நூபெ௱ நா௨) "அக்நீத்ரோநாம" என்றற்றொடக்கத்துச் சுலோகத்திற் பெறப்படுகின்றது.

அலங்கல்=ஒளிசெய்தல் ; "அலங்க நயங்க லவிர்த னிலவல்" என்பது பிங்கலநிகண்டு. (கஅ)

### சிதம்பரநடனங் காண்டற்கதிகாரியாவா நுறுபயன்.

அச்சிவ சபாபதியை யாசினைய னத்தான்
மெச்சலொடு கண்டவர் மிழற்றரிய வீட்டை
நிச்சலன மாயடைத னிச்சய மலாலோ
ரெச்சமென வாவதிலெ யெந்தவுயி ருக்கும்.

அத்தகைய சிவபரஞ்சுடராகிய சபாபதியைத் துதித்தலுடன் களங்கமற்ற ஞானக்கண்ணாற் கண்டவர் சொல்லுதற்கரிய முத்தியை

யடைதல் உறுதியேயன்றி, யாதோருயிருக்கு மகவென்று சொல்லும் படி பிறப்பதில்லை.

(தஸ்மாத்யதிஸ்ஸ்வஹ்ருதயார்ச்சநமேவகுர்யாத்

பாஹ்யார்ச்சநம் பரிஹரேதபுநர்பவாய ।)

" தஸ்மாத்யதிஸ்ஸ்வஹ்ருதயார்ச்சநமேவகுர்யாத்
பாஹ்யார்ச்சநம் பரிஹரேதபுநர்பவாய । "

என்னும் மைத்ரேயோபநிஷத் வசன தாற்பரியத்தை இச்செய்யுள் கொண்டுளது. தமிழ் :— " ஆதலின் யதியானவன் மறுபிறப்பெய்தாதிருக்குமாறு தனது இருதயார்ச்சனத்தையே செய்தல் வேண்டும் : வெளிமுக அர்ச்சனத்தை யொழித்தல்வேண்டும் " எனவாம். இது, மைத்திரேயருக்குக் கைலாசபதி திருவாய்மலர்ந்தருளியதாக வுள்ளது. வெளிமுக அர்ச்சனமே செய்வோர்க்கு இதயாம்பரந் தரிசனமாதலின்றாகலின் அவ்வர்ச்சனத்தை யொழித்தல் வேண்டுமென்ப துணர்த்தப்பட்டது. தரிசனம் அவசியமென்பது வரூஉஞ்செய்யுளுரையிற் காட்டப்படு கடோபநிஷத் வசனத்திற் றெளிக. மேலைச்செய்யுளில் " மானுடருள் உற்றவுரு மாத்திரமுள்ளார் உள்வெளி காண்பர் " என்றது— எடுத்திருக்கும் மானுடதேக மட்டுமேயுள்ளோர் சிதம்பரத்தைத் தரிசிப்பர் எனு மருத்தமும் பயத்தலின், அத்தேக நீங்கியவுடன் மானுடதேகமல்லாத பிறவுடம்புகளினும் அவர் புகுவரோவெனும் ஆசங்கை யெழாதிருக்குமாறு (தரிசித்த அவர் மேல்முத்தியடைவதேயன்றி) " எச்சமெனவாவதில்லை யெந்தவுயி ருக்கும் " என்றிங்ஙனம் வரைசெய்து கூறினர் ; இது, விளங்கவைத்தலென்னும் எழில். எச்சமென்பது மகன், மகளென்னும் இருபாற்கும் பொதுப்பெயர்.

மிழற்றல்=சொல்லல் ; சூடாமணிநிகண்டு காண்க. வீடு - விடு என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். வெளியிடத்தே வேலையிழைத் திளைத்தவன் அதனைவிட் டடையுமிடம் இங்கே வீடெனப்பட்டவாறே இவ்வுலககாரியமனைத்தையும்விட் டடையும் பரமதத்துவமும் வீடெனப்பட்டது. இவ்வீடென்பதற்கே 'முக்தி' என்னும் வடசொல் சமபதம் ; என்னை ? அப்பொருளுடைத்தாகலின். 'மெச்சலொடு ஆசில் நயனத்தாற் கண்டவர்' எனவும், 'நிச்சலனமாய் மிழற்றரிய வீட்டையடைதல் நிச்சயம்' எனவுமியைக்க. (௧௧)

சிதம்பரநடனங் காண்டற்கதிகாரியல்லாதார் நுறுபயன்.

பூரண குகேசனுறை பொற்பொதியை நோக்கார்
ஆரெனினு மொண்மையரு ளாகுமென வேத்துஞ்
சீரண வருபமன சீவகதி நண்ணார்
ஆரண வரும்பரம முத்தியையு மண்ணார்.

சர்வ வியாபகனாகிய குகேசனமர்ந்துள்ள கனகசபையைக் காணும் பாக்கியமற்றோர் எத்தகைய மேன்மையுடையோராயினும் (இது) நல்லதிருவருளாகுமென்று (உலகம்) துதிக்கும்படியான சிறப்புப்பொருந்திய அருபமனநிலைச் சீவன்முக்தியைப் பெய்தார். (அதன்மேல்) பரிபூரணம்பொருந்தும் அரிய பரமுக்தியையு மடையார்.

இச்செய்யுட்பொருள்— "(ஈசானனாகிய) அவனை எத்தீரர்கள் ஆன்மாவிலிருப்பவனாக அறிகின்றார்களோ அவர்கட்கு நித்தியமான சுகமுண்டு: ஏனையோர்க்கின்று" எனுந்தமிழைத் தருஉம்—

(தமாத்மஸ்தம் யேநுபச்யந்தி தீராஸ்தேஷாம்
ஸுகம் சாச்வதந்நேதரேஷாம் ।)

"தமாத்மஸ்தம்யேநுபச்யந்திதீராஸ்தேஷாம்
ஸுகம்சாச்வதந்நேதரேஷாம் ।"

என்னுங் கடோபநிஷத்தின் ரு - ஆம் வல்லிவசன நிச்சயத்தி னுளது. இந்நிச்சயந்தானே திருநாவுக்கரசுகளது தமிழ்மறைக்கண்—

"தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை யறியிற் றலைப்படும்
தன்னிற் றன்னை யறிவில னாயிடில்
தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே."

என வருகின்றது. சீவன்முத்தியே சீவகதியெனப்பட்டது. அஃது "அருபமன சீவகதி" எனப்பட்டமையின் அதன்மேனுறு பரமுத்தி அம்மனமு நசித்த நிலையென்பது இனம்பற்றிக் கொளக் கிடக்கின்றது. இவ்வுண்மை அனுபவமேயாயினும் பிரமாணவாக்கியங்கள் முக்திகோபநிஷத்தி னுள. * அவைபற்றைப் பரிபூரணனந்த

* சுட்டெழுத்தினை முதலாகவுடைய 'அவை' என்னும் ஐகாரவீற்றுச் சொன்முன் வற்றுச்சாரியை வந்துழி, அச்சாரியையினது வகரவொற்றுக் கெட, ஆண்டே அகர நிற்குமென்னும் விதிவழி "அவையற்றை" என்பது வந்ததென்க. அவ்விதி— "வஃகான் மெய்கெடச் சுட்டுமுத லைம்முன்— அஃகா னிற்ற லாகிய பண்பே." என்னுந் தொல்காப்பியத்துப் புணரியற்

போதத்தின் மூற்படலத்துத் கூக - ன் உரைக்கட் காட்டினும். ஆண்டுக் காண்க.

பொற்சபையினைத் தரிசியாதார் உருவமனத்தோடுங்கூடிய பெத்தராகவே யிருப்பரென்பது இச்செய்யுட் கருத்தென்க.

பொது என்பது உகரந்திரிந்து "பொதி" என வாயிற்று. "மன்றமும் போதியிலுங் கந்துடை நிலையிலும்" என்றார் (திருமுருகாற்றுப்படையில்) நக்கீரனாரும். விதி— "கிளந்த வல்ல செய்யுளுட் டிரிநவும்" எனவெழீஇய தொல்காப்பியத்துப் புறனடைச் சூத்திரத்தானமைக்க. பொது = அம்பலம். "ஆரெனினும்" என்பது எஞ்சாப்பொருண்மை யுணர்த்திநிற்பதாயிற்று. ஆர் - யார் என்பதன் மரூஉ. "ஆரணவு அரும்பரம முத்தி" என்பதிலுள்ள 'ஆர்' நிறைவெனும்பொருளதெனற்குரிய விதி க - ஆஞ் செய்யுளுரையிலேயே கூறியாயிற்று. இத்தொடரை ஆரண அரும்பரம முத்தி எனப் பிரித்து ஆரணத்திற்சொல்லப்பட்ட அரிய பரம முத்தியெனப் பொருள் கூறுவது மொன்று. (உ0)

பிண்ட தகரவித்தையியன் முற்றிற்று.

---

## ங. அண்டதகரவித்தையியல்.

### அண்ட தகராலய நாமாதி விவரம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

தரிசித்திட முத்தியெ னும்பொறியார்
 சவையிப்படி யென்றுமொ ழிந்தவணங்
கரிசற்றிவ ணோர்முறை யீதிறையாங்
 கடநற்பெயர் கொண்டதகரவித்தை
தெரிமற்றைய வண்டதகரவித்தைத்
 தெளிவைப்பகர் கின்றன மென்றுரியோன்
பரிவுற்றுள நன்மன சன்முகமாம்
 பதுமத்தினை நோக்கிமி ழற்றுவனால்.

தரிசிக்கமுத்தி என்று சாத்திரங்கள் கூறுந் திருநிறைந்த சிற்சபையானது இத்தகைமைத்தென்று (யாம்) கூறியவாறு (நீ) சந்தேக

---

சூத்திரமே. 'அஃகா னிற்ற லாகிய பண்பே' என்றதனால் "அவையிற்றை" என வருதற்குத் தொல்காப்பியத்தில் விதியின்றென்பதும் பெற்றாம். அவையிற்றை எனவரைதலும் வழக்கத்துளது. "வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே." என்னு நன்னூற் சூத்திரம் இதற்கு வேறும் முடிபிலுளது.

விபரீதங்களென்னுங் குறைவினீங்கி இங்ஙனம் ஒருமொழுங்கில் இது, சிறியவுடம்பென்னும் பெயரைக்கொண்ட நல்ல (பிண்ட) தகர வித்தையாகும்; தெரிவாயாக. எஞ்சிநின்ற அண்டதகரவித்தையின் றுணிவை (இனி) எடுத்துரைக்கின்றனமென்று ஆசிரிய இலக்கணங்க ளமைந்த குருமணியானவர் அன்புபொருந்திய மனசனது முக மாகிய தாமரையை நோக்கிக் கூறுவான்றொடங்கினர்.

தரிசிக்க முத்தியென்று சாத்திரங்கள் கூறுநிலை மேலைச்செய் யுளுரைக்கண்ணே காட்டினும். இன்னுஞ்சில காட்டுநாம்—

(யதாபஶ்ய꞉ பஶ்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீஶம்
புருஷம் ப்ரஹ்மயோநிம் । ததா வித்வாந் புண்யபாபே
விதூய நிரஞ்ஜந꞉ பரமம் ஸாம்யமுபைதி ॥)

"யதாபச்யஃபச்யதே ருக்மவர்ணம்கர்த்தாரமீசம்
புருஷம்ப்ரஹ்மயோநிம் । ததாவித்வாந்புண்யபாபே
விதூயநிரஞ்ஜநஃ பரமம்ஸாம்யமுபைதி ॥"

என்று முண்டகோபநிஷதமும், "நாடரு ஞான நாட்டம், பெற் றவர் காண்பர் காணப் பெறாதவர் பிறப்ப ரன்றே" என்று கோயிற் புராணத்துப் பதஞ்சலிச்சருக்கமும், "ஆங்காரம், அற்றா ரறிவரணி யம்பலத்தா னுடலிது—பெற்றார் பிறப்பற்றார் பின்" என்று உண்மை விளக்கமுங் கூறுதல்காண்க. வடமொழிகளின்றமிழ்:—"(பசயஃ=) பசுவானவன் (= சீவன்) பொன்வண்ணனுைக் கருத்தாவாய்ப் புருட னுைத் தோற்றங்கட்கெல்லாங் காரணமாயுள்ள ஈசனை எஞ்ஞான்று தரிசிக்கின்றனனோ அஞ்ஞான்று சீவன்முத்தனாகியஅவன் களங்க மிலாதவனுைப் புண்ணிய பாவங்களை நீங்கினவனுைச் சிவசாமியத் தினை யெய்துகின்றனன்" எனவாம். சாமியம்=சமம்.

கரிசு=குற்றம், குறைவு; "நிறுத்திலன் மறுத்தில னெனிற் கரிச னேசம்—அறுத்தவனை மாய்க்கைகரி சல்லவற மாமே" எனச் சிவதருமோத் தரத்திலும், "கார்த்தவீ ரியனும் வேந்துங் கரிசறு நலத்தி னேறு" என அணி யிலக்கணக் காட்டுச்செய்யுளிலும் இக் கிளவி வருதல்காண்க. 'ஈது இறை கடப்பெயர் கொண்டநல் தகரவித்தை ஆம் தெரி' எனவியையும். இறை= சிறுமை; "இறையே கடனு மில்லி னிறப்புஞ்— சிறுமையுந் தங்கலு முயர்ந் தோருஞ் சிறக்கும்." என்பது சே - திவாகரம். கடம்=உடம்பு. 'யாம்' 'நீ' என்னுமெழுவாய்கள் தொக்குநின்றன. கனி விளம் விளங்காய், கனி விளம் விளங்காய் என்னும் வாய்பாடுகளைக்கொண்ட வடியுடை இச்செய்யுள் தொடக்கமாகவுள்ள ௧0 - ச் செய்யுள்களும் மாஞ்சீர்களாகவே பிரிக்கப்படின் எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தமுமாம். (௨௧)

பிரமம்பரி பூரண மாதலினுற்
பெரிதென்றறை யண்டம தற்குளுமே
கரவம்பர மாயசி தம்பரவான்
கரையின்றுள தாகலின் முன்சொனசெம்
புரமன்றுள பேர்களு மிங்ஙனமே
புகலண்டம தற்குள வேநல்விராட்
புருடன்றன தாகம தாமதிலே
புருடன்பதி நள்ளித யச்சுமமே.

பரப்பிரமப்பொருள் பூரணத்தன்மையுடையதொன் ருதலினுற் பெரிதென்று சொல்லப்படும் அண்டத்திற்குள்ளும் ஒளிபொருந்திய ஆகாசமாகிய சிதம்பரவானம் எல்லையின்றியுளதாகலின், முன்னே சொல்லிய பிரமபுரமென்னும் பெயரும், மற்றுள்ளபெயர்களும் இங்குச் சொல்லப்படும் அண்டத்துக்கு முள்ளன. நல்ல விராட்புருடனது தேகமாகிய அவ்வண்டத்திலே பரமபுருட னுறைவிடம் அந்த விராட்புருடனது நடுவான இருதயதாமரை மலரேயாம்.

விராட்டாகிய புருடனுடைய தேகமென்பது பிருதிவிமுதல் நாதம் ஈருய்க்கிடந்த ௩௬ - தத்துவ புவனங்க ளடங்கிய விசுவம் (அண்டம்)ஆம். இது—

(க) (ருதம்ஸத்யம்பரம்ப்ரஹ்ம புருஷம்க்ருஷ்ணபிங்கலம் ।
ஊர்த்வரேதம்விரூபாக்ஷம் விச்வரூபாயவைநம: ॥)

“ருதம்ஸத்யம்பரம்ப்ரஹ்ம புருஷம்க்ருஷ்ணபிங்கலம் ।
ஊர்த்த்வரேதம்விரூபாக்ஷம் விச்வரூபாயவைநம: ॥”

எனவரு தைத்திரீயாருணசாகை நாராயண வசனத்திலும்,

(உ) (தஸ்மாத்விராடபூதம்பவ்யம்பவிஷ்யத்பவத்யநச்வரஸ்வரூபம் ।)

“தஸ்மாத்விராடபூதம்பவ்யம்பவிஷ்யத்பவத்யநச்வரஸ்வரூபம் ।”

எனவரு நாரதபரிவ்ராஜகோபநிஷத்தின் ௬ - ஆம் உபதேச வசனத்திலும், வேறு சில பிரமாணங்களிலு மறியக்கிடக்கின்றது. தமிழ்:— (க) “சத்தியவசனத்திற் சத்தியமாயுள்ள பரப்பிரமமும், கிருட்டிண பிங்கல நிறத்தோடு கூடிய (= அர்த்தநாரீசுர வடிவுடையனுய) புருடனும், ஊர்த்துவரேதசையுடையவனும், விசுவரூபமுடையவனுமான நெற்றிக்கண்ணனுக்கு நமற்காரம்” எனவும், (உ) “ஆதலின் விராட்டானது இறப்பு நிகழ்வு எதிர்வென்னுங்

காலமாயும் நாசமில்லாத சுவரூபமாயு மிருக்கின்றது'' எனவுமாம். யாதொருபொருள் தோன்றுமளவிற்றோன்றி யிருக்குமளவிலிருந்து அழியுமளவிலழியுமேயன்றி ஆன்மாக்கள் வேண்டியவாறாகாமையின் அவற்றிற்குரிய காலமுமுண்டெனக் கோடல்வேண்டுமென்பதைச் சுருதி யறிவுறுத்திற்று. இங்ஙன் இறப்பு எதிர்வென்னுமிரண்டுமே சூரியகதி வாயிலாக வறியப்படுவன; இருக்கின்ற பொருள்களும் இவ்விரண்டின்பாற படுவனவே யாகலின் நிகழ்வெனுங்காலம் யாங்ஙனமறியப்படு மெனின்,— யாதொருபொருளில் நடு வென்பதொன்று குறிக்கப்படாதாயின் ஆதி அந்த மென்பனவும், ஆதி அந்த மென்பவற்றொன்று குறிக்கப்படாதாயின் ஏனையவிரண்டு மில்லனவாம். அவ்வாறே, நிகழ்காலமென்பதொன்று குறிக்கப்படாதாயின் இறப்பு எதிர்வென்னுங் காலங்களும், இவ்விரண்டனுளொன்று குறிக்கப்படாதாயின் மற்றிரு காலங்களு மில்லனவாமாகலின் இஃதிறப்பு இஃதெதிர்வென வரையறைசெய்யுமா றிடையேநிற்கு நிகழ்காலமொன் றுள்ளதேயாம். அது, நில்லாது செல்லு நிகழ்வுடைத்தென்க. அவ் விசுவவடிவம் சிவபிரானுடைய தென்பதை, (𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌦𑍇𑌹𑌾) "ப்ரஹ்மாண்ட வ்யாப்ததேஹா" என்று கூறிச் செல்லும் யஜுர்வேத ருத்ரநமகமு மறிவுறுக்கின்றதன்றே. இவ் விசுவவடிவத்தின் மத்தியாய இதயத்தானத்திருக்குஞ் சூக்கும பரமபுருடனே யாண்டும் வியாபித்திருப்பதோடு, அவ்வடிவத்தின் சென்னிமிசை விளங்கும் பரமாகாசத்துள்ள சிவலோகத்துந் திவ்விய காசரஞ்ஞதி அவயவம் பிரகாசிக்குமா றிருக்கின்றனன். (𑌵𑌿𑌶𑍍𑌵𑌂) விச்வம் என்னும் வடசொல் எல்லாமெனும் பொருளுடைத்து.

(𑌪𑍁𑌰𑌾𑌮𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍂𑌕𑍍𑌤𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌰𑌹𑌸𑍍𑌯
𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌾𑌕𑌾𑌰𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌿𑌨𑌾 𑌵𑌿𑌰𑌾𑌟𑍍𑌪𑍁𑌰𑍁
𑌷𑍇𑌣𑍋𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌵𑌿𑌵𑌿𑌚𑍍𑌯𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ।

*புராமத்புத்ர புருஷஸூக்தோபநிஷத் ரஹஸ்ய*
*ப்ரகார நிரதிசயாகாராவலம்பிநா விராட்புரு*
*ஷேணோபதிஷ்டம் ரஹஸ்யந்தே விவிசயோச்யதே ।)*

"என்னுடைய புத்திரனே! முற்காலத்தே புருஷஸூக்தோபநிஷத்தின்படி நிரதிசயாகாரமுற்ற விராட்புருடனா லுபதேசிக்கப்பட்ட இரகசியம் (இஞ்ஞான்று) உனக்கோதப்படுகிறது" எனப் பிரமதேவன் நாரதருக்குச் சொல்லியருளினனென்று நாரதபரிவ்ராஜ

கோபநிஷத்தின் உ - ஆம் உபதேசங் கிளக்குமாற்றானும் விராட்புரு டன் அந்தப் பரமபுருடனென்பதும், புருஷஸூக்தமும் அவனையே பிரதிபாதிக்கின்றதென்பது மறியக்கிடக்கின்றன. ஐதரேயாரண்ய கோபநிஷதம் அறையுமாறு உலகினைச் சிருட்டிக்கவேண்டுமென்று கருதித் திவமென்னும் உலகிற்கு மேலுள்ள அம்பம் முதலிய வுலகங்க ளைப்படைத்த (பரம) ஆன்மாவினால் நீரினுள்ளிருந்ததை யெடுத்துச் சேர்த்துச் செய்யப்பட்ட புருடனும், அவ்வான்ம சங்கற்பத்தினால் அதிட்டான தேவர்கள் பிறத்தற்குரிய அவயவங்களை யுடையவனும், ஓடதிகளெல்லா முண்டாதற்கிடனும் உடம்பு மயிர்களை யுடையவனு முள்ள (விராட்) புருடனும் அந்தப் பரமபுருடனுக்கு வேறுபட்டு நிற்பானல்லன். கோயிற்புராணம் " இடையெனு நாடி இலங்கைக்கு நேரே போம்: பிங்கலையெனு நாடி இமயமலைக்கு நேரேபோம்: சுழு முனை நாடி அவ்விரண்டிற்கு நடுவேபோம்: அந் நடுநாடி தில்லை வனத்திற்கு நேரேபோய்க்கூடும். அஃதுண்மையாகவே இப்பூமிக்கு இதயத்தானமாயிருக்கும்: இதன்கண் யாம் தங்குதல் உடம்புட்டங் கிய வுயிரிலே யாம் தங்குதலையொக்கும்" என்று சிவபிரான் திரு வாய் மலர்ந்தருளின வெனும்பொருளை—

"'இலங்கைநே ரிடைபோ மற்றை யிலங்குபிங் கலையா நாடி
நலங்கிள ரிமய நேர்போ நடுவுபோஞ் சுழுனை நாடி'

'நாடரு நடுவி னாடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடும்'

'- - - - - - - - சத்தமர் ஞாலத் தகலாது
தானுட லுட்பட் டிடுமுயி ரிற்றங் குதல்போல்வோம்'"

என்னுங் கூற்றுக்கள் வாயிலாகப பயத்தல் இங்ஙனம் பொருந் துங்கொலோ? எனின்,— (ஶதகோடி ப்ரவிஸ்தீர்ண இதி ப்ரஹ்மாண்ட கோளகம்=) "இவ்வாறு பிரமாண்ட கோளத்தினுயரம் நூறு கோடி யோஜனை" என்று மிருகேந்த்ராகம அத்வப்ரகரணமானது பிருதிவிதத்துவ சம்பந்தப் பிரமாண்டத்திலுள்ள புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனோலோகம், தபோலோகம், சத்திய லோகம், விட்டுணுத்தானம், சிவத்தானமெனும் பெயரிய மேலுல கங்கட்கும்; ஆபாஸம், பாதாளாக்யம், ஙிதலம், கபஸ்திமத், மஹாத லம், ரஸாதலம், பாதாளமெனும் பெயரிய கீழுலகங்கட்கும் மத்தியிற் பூலோகமாகிய பூமியைக்கூறி; அதன் மத்தியிற் சம்புத்தீவும், அதன்

மத்தியின் மேருவும், அதன்றெற்கில் இமயமலையும் பாரதவருடமு முளவெனப்பேசுதலின் அது பொருந்துமென்க. இதயத்திலுள்ள கOக - நாடிகளுட் சுழுமுனையுமொன்றென்பதையு மிங்ஙனங் கருதிக் கொள்க; உரிய சுருதி பரிபூரணானந்தபோதத்தின் பிற்படலத்து க - ன் உரையிற் கண்டுகொளலாம்.

'அறை' என்றவிடத்தும், 'புகல்' என்ற விடத்தும் படுசொற்கள் தொக்கன. கரம் = ஒளி; ரகரவேதுகை காண்க. இன்றியென்னும் வினையெச்சம் 'கரையின்று' என உகரவீறாய் நின்றது. முன்சொன = ரு, சு - ஆஞ் செய்யுள்களிற் கூறப்பட்ட. மற்றுள என்பது 'மன்றுள' என ஓசை நயங்கருதி மெலிக்கப்பட்டது. 'அண்ட மதற்குமுள' என உம்மை கூட்டி யுரைக்க. நள் = நடு. சுமம் = மலர்; "சுமந்துணை ரலரி யாலநண் மலர்ப் பெயர்" என்பது பிங்கலநிகண்டு. (உஉ)

முனமேசொன பிண்டமு றைப்படியே
மொழியண்ட வபேதசி தம்பரவான்
எனுமோர்சவை தன்னினு மேழ்திரையோ
டியைபான வெலாமுள பேருருவோன்
தனதேரக வாரிச மவ்விணையுச்
சாற்றுந்தெளி ருக்கர விந்தநபத்
தினையேயது வென்னுமி ரண்டதர்வந்
திகழும்பொனி ரண்மய கோசமெனும்.

முன்னர்க்கூறிய பிண்டதகராகாச முறைப்படியே (இங்கே) சொல்லப்பட்ட அண்ட சிதம்பர அபேதாகாசமென்னும் ஒரு சபையி லும் ஏழுதிரைகளுடனியைந்த பரவியோமப்பொருண் முதலிய யாவு முள்ளன. விராட்டாகிய புருடனது அழகிய இருதயாம்போருகமே அந்தச் சிதாகாசமென்று நல்ல இருக்குவேதஞ் சொல்லும். அந்த அம்போருகத் துள்ளாகாசமே அஃதென்று யசுர்வேதங் கூறும். அதர்வணவேதமானது பிரகாசிக்கும் பொன்போன்ற இரண்மய கோசமென் றியம்பும்.

இதயதாமரை நடுவைத்தானே பரம்பொரு ணடம்புரி சிதாகாசமென்று இருக்குவேதஞ் சொல்லுமென்றது ஙு - ன் உரைக்கட் காட்டப்பட்ட ஆத்மபோதோபநிஷத் வசனத்தும், அத் தாமரை நடு வெளியையே அவ்வாகாசமென்று யசுர்வேதம் ஓதுமென்றது ஆண் டுக் காட்டப்பட்ட தைத்திரீயோபநிஷத் வசனத்தும், இரண்மயகோச

மென்று அதர்வவேதம் அறையுமென்றது அ - ன் உரைக்கட் காட்டப்பட்ட முண்டகோபநிஷத் வசனத்து மறியக்கிடக்கின்றன.

தகரவித்தையைத் தூலாருந்ததி நியாயமாக வேதஞ் சுட்டிச் சுட்டி யுணர்த்து மொழுங்கினையும் இச்செய்யு ளியம்பிற்றென்க.

'அண்டசிதம்பர அபேதவான்' எனவினையையும். தெள் + இருக்கு= தெள்ளிருக்கு; தெளிருக்கு - தொகுத்தல். 'வாரிச அகம்' என மாறுக. அகம்= உள்; ஏண்டு, வாரிச நடுமேற்று. வாரிசம்= தாமரை. இரண்டாம் வேதமாகிய யசுவே இரண்டெனப்பட்டது. இரண்மயகோசம் - ஹிரண்மய கோசம் என்பதன் விகாரம். (உ௩)

அங்கிங்கென லென்பதி லாதுநிரம்
பத்தற்றெழு வார்தரி சித்துயுமா
றெங்கும்புகழ் ஞானவி னோதவனை
யின்பங்கொள வாமம ருங்கினிலே
துங்கங்கொளு ருபம ருபமுமே
சுடருந்திரு மேனிய னொளியோன்
தங்குந்திற மென்னவொ ளம்பலமுட்
டாளுடுமெ லாவுயி ருங்கொளுளோன்.

அங்குள்ளது, இங்குள்ளதெனக் கூறப்படுங் கண்டப்பொருள்களி னிலக்கணமொன்று மில்லாமல், யாண்டும் நிறைந்துள்ள சர்வலோக பிதாவைச் சகளருபத்தில் வணங்கும் அதிகாரிகளுந் தரிசித்து வாழும்படி, எவ்வுலகுந் தொழத்தக்க வினோத ஞானருப சிவகாமி அம்மையாகிய சர்வலோகமாதா இடப்புறத்தே நின்று (கண்டு) ஆனந்திக்கப் பரிசுத்தமுடைய உருவமும் அருவமுமாகப் பிரகாசிக்குந் திருமேனியுடையவனாகி விண்ணிடைச் சூரியன் தங்குந் திறம்போல ஞானசபையிற் றங்கி நடித்தருளுவன்; பஞ்சகிருத்திய வாயிலாக எல்லாவுயிர்களையும் ஆண்டுகொள்ளுந் திருவுள்ளப்பாட்டினையுடையோன்.

சருவலோகமாதா களிகூர்ந்தாற்றான் அவளது வியாபக கருப்பத்தடங்கிக்கிடக்கு முயிர்களின் விருப்பமுங் கைகூடுமாகலின் "ஞானவினோதஅன்னை இன்பங்கொள" என்று கூறினரென்க. இதற்கேற்புடைய உவமையும் (பிண்டதகரவித்தையியல்) கரு - ற் கூறப்பட்டதன்றோ. இறைவனது வாமமருங்கில் அவள் நிற்றல்— "எத்திற நின்றா னீச னத்திற மவளு நிற்பள்" என்னும் பிரிவின்மையை

யும், இடப்பாகம் பெண்ணென்பதையுங் காட்டிற்று. சூரியன் விண்ணிடை யிருந்துகொண்டு தனது கிரணவாயிலாக வுலகினை விளக்கி நிற்குந்தன்மை யேய்ப்ப இறைவனும் அண்டதகராகாசத்தினின்று கொண்டு தனது பிரகாச சத்திவாயிலாக ஆன்மகோடிகட்குத் திருத்திசெய்யுங்காரிய மிழைக்கின்றனனாகலின் "ஒளிபோன் றங்குந் திறமென்ன" என்றார். ஆணுருக்களுண்மையின் அவற்றின் மூலஞ் சிவவடிவென்பதும், பெண்ணுருக்களுண்மையின் அவற்றின் மூலஞ் சிவைவடிவென்பதுஞ் சாதிக்கப்படுவனவே.

(पुंल्लिङ्गं सर्वमीशानं स्त्रीलिङ्गं भगवत्युमा ।
புல்லிங்கக் ஸர்வமீசானம் ஸ்த்ரீலிங்கம் பகவத்யுமா।)

"ஆணுடையாளமெல்லாம் ஈசானன், பெண்ணுடையாளமெல்லாம் பகவதியாகிய உமை" என்று யஜுர்வேத ருத்ரஹ்ருதயோபநிஷதம் ஓதலுமது. ஒண்மை = அறிவாகலின் ஞானசபை "ஒள் அம்பலம்" எனப்பட்டது.

'தொழுவாரும்' என உம்மை கூட்டியுரைக்க. மருங்கு = இடம். அருபமும் என்றதிலுள்ள உம்மையை உருபமென்பதனோடுங் கூட்டுக. என்ன = போல; உவமவுருபு. ஆடும் - செய்யுமென்னு முற்று ஆண்பாலுக்கு வந்தது; "மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்" என்றாற்போல (திருவள்ளுவதேவர்). கொளுளோன் = கொள்ளுந் திருவுள்ளத்தினையுடையோன்; உள் = உள்ளம். கொளுளோன் - தொகுத்தல் விகாரம். கொள்ளவுளோன் என்பது 'கொளுளோன்' என விகாரப்பட்டதெனினுமாம். (௨௪)

நடேசன் றிறம்.

இயல்பார்நடன் ராசச முற்றயனு
யேனாக முண்ணிமிர் தாமதமோ
டுயர்வாகிய சத்துவ மும்வெளியே
யோவாதுறு சீதர னுயகமுண்
ணயமாகிய சத்துவ மும்வெளியே
ஞாட்பாரொரு தாமத முங்கிளர்மாச்
செயலாரர னுமொரு மூவினையுஞ்
செய்தேயவர் கட்குமே லேயுளனே.

அப்பிராகிருத குணங்களெனப்படுந் தன்வயத்தனாதன் முதலிய மங்கலகுணங்க ணிரம்பியுள்ள நடேசப்பெருமானை (உள்ளும்

புறம்பும்) இராசசகுணம்பொருந்திய பிரமனுமாய், வலியார்ந்த உட்புறத்தில் ஓங்கிய தாமதகுணமும் வெளிப்புறத்திற் சத்துவகுணமும் ஒழியாதுபொருந்திய விட்டுணுவுமாய், உட்புறத்தில் நல்ல சத்துவ குணமும் வெளிப்புறத்தில் உக்கிரமாகிய தாமதகுணமும் பிரகாசிக்கின்ற மகத்துவ சங்காரகிருத்திய மார்ந்த உருத்திரமூர்த்தியுமாய் அவர்களுடைய முத்தொழில்களையுஞ்செய்து, அவர்கட்கும் பரனுயிருக்கின்றனன்.

பாயிரத்து ச - ன் உரையிலுள்ள பிரமாணங்களின்படி பிரம விட்டுணு உருத்திரர்கள் இறைவனுடைய தனுக்களாயிருக்கின்றமையின் "அயனுய்", "சீதரனுய்", "அரனுய்" என்முர். அங்ஙனமே அவர்களுடைய படைப்பு, காப்பு, அழிப்பெனப்படுவனவும் அவ் விறைவன் ரொழில்களேயாமென்பதையும், அவ்விறைவன் அவர் கட்கு மேலான நான்காவது தெய்வமெனப்படுவனென்பதையு மறிவுறுத்துமாறு "ஒருமூவினையுஞ் செய்தே யவர்கட்கு மேலேயுளன்" என்றுங் கூறினர். இச்செய்திக்குரிய சுருதி இக் காண்டத்து ந - ஆஞ் செய்யுளுரையில் (அமாத்ரச்சதுர்த்தோவ்யவஹார்ய:) "அமாத்ரச்சதுர்த்தோவ்யவஹார்ய:" என்றற் ரொடக்கத்ததாய்க் காட்டப்பட்ட மாண்டூக்யோபநிஷத வாக்கியங்களாம். இன்னுமுள்ள சுருதிவாக்கியங்களைச் சைவசமயசரபத்துக் கைவல்லியகாண்டத்து அ - ஆம் அத்தியாயம் முதலியவற்றி லறியலாம். திரிமூர்த்திகளின் ரொழில்களை அவர்களுடைய முதல்வன்ரொழில்களாக மொழிக லென்னையெனின்,—ஆன்மாவானது கை வாயிலாக ஈதலும் ஏற்றலு மிழைத்தல்போல அம்முதல்வனும் அம்மூர்த்திகள் தவங்கிடந்து விரும்பியவா றன்னோர்வாயிலாக அத்தொழில்கள் புரிகின்றமையின் அவ்வாறு மொழியலாமென்க. உருத்திரமூர்த்தியினது தாமதகுணம் ஏனையிருவருடைய குணம்போன்றதன்று; கௌரவமுடையது; சங்காராதி சநுவ வெற்றிப்பாட்டிற்கும் அதுவே யுரியதாகலின் "ஞாட்பாரொரு தாமதம்" என்முர். இவ்விடயம் மேலைக் கைவல்லியகாண்டத்தின் கூ - ஆம் அத்தியாயத்தில் ஊங்குணர்த்தப்பட்டுளது. ஞாட்பு - "ஞாட்பமர் பாரங் கூட்டம்" எனக் ககரவேதுகை கூறுமாறு யுத்தம், பாரம், கூட்டமெனப் பலபொருளொருசொல் லாம். இங்கே சங்காரகாரிய உக்கிர குணப்பொருட்டு. சங்காரம் படைப்பையுங் காப்பையு மொடுக்குமொரு பெருந்தொழிலாகலின் அது 'மாச்செயல்' எனப்பட்டது.

"ராசசமுற்ற" என்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தாற்றொக்கது; "புகழ்புரிந்தில்" என்றார் திருவள்ளுவதேவரும். ராசசம் - முதற்குறை விகாரம்; வடநூன்முடி பெனினுமாம். எண் = வலி. 'வெளியே உயர்வாகிய சத்துவமும்' என வினையும். மெலே - மேலே; குறுக்கல் விகாரம்; "இயேன்" என்புழிப்போல. (உ௫)

மேலாயுள மெய்யரு ளேவடிவாய்
மீயாந்தக ராலய மன்றிடைமா
மாலாய்விளை யாணவ மாமலமாம்
வாளேந்திய வோர்குறண் மேனியன்வெந்
பாலேவல வங்கிரி யூன்றியிடப்
பாதாம்புய மானதை யேதூக்கிக்
கோலாகல மாயதி தாண்டவஞ்செய்
கோனும்பர னேகுக னென்பவனே.

எவற்றினு மேலானதாயிருக்கும் உண்மையருளே திருமேனியாய்ப் பொருந்த; பரவெளியாகிய தகராலய சபையினிடத்தே (தன் சொரூபம் சிவசொரூபம் முதலியவற்றை ஆன்மாக்க ளறியா திருக்குமாறு) மா மயக்க மயமாய் விருத்தியாகும் ஆணவ மகாமல மாகிய வாளேந்திய வொரு பூதரூப முடையோனது முதுகின் கண்ணே வலப்பாதத்தையூன்றி, இடப்பாதமாகிய தாமரையை யுயர வெடுத்துச் சம்பிரமமாக மகாநடனத்தைச் செய்கின்ற பரமபதியே குகனெனப்படுவோன்.

போந்த உ௪ - ல் "உருபமு மருபமுமே சுடருந்திருமேனி" என்றார். அம்மேனி யாதோவென் றையுறுவண்ணம் ஈண்டு "மேலாயுள மெய்யருளே வடிவு" என்றார். முயலகன் பூதவடிவாய குறுடம்புடையா னாகலிற் "குறள் மேனியன்" என்றார். அவன் ஆணவமலகாரண மெனப்படுதலும், அவனது முதுகிற் பரமனது திருவடி யூன்றப்பட்டதென்பதும்—

"நயநட னுந்தகு மங்கவர் நவைவெவை யுந்தொக வந்திருள்
முயலக னென்றுக வென்றதன் முதுகதி ரும்படி நின்றனன்"

என்று கோயிற்புராணங் கூறுமாற்றானு மறியப் படுகின்றன. பொருள்:— "இன்பந்தருகின்ற நடேசனும் அங்குத் தரிசிக்குந் தகுதிவாய்ந்தோருடைய ஆணவமலசத்தியெல்லா மொருங்குற வந்து ஆணவமாய முயலகனைப்பொருந்துகவென் றருளிச்செய்து அம்மலத்

தினது முதுகு நெரியுமாறு நின்றருளினன்” எனவாம். இருள் என்றதே ஆணவமலம். இஃது ஆன்மாவைப் பற்றியுள்ள மலங்களெவற்றினும் வலிதாகலின் “மாமலம்” எனப்பட்டது. இதன் பிரபாவங்கள் பரிபூரணானந்தபோதத் தறியற்பாலன. ஆன்ம அறிவை மறைத்துநிற்கும் இம்மலமானது தகராலயத்து மிருக்குந்தன்மை யெவ்வாறெனின்,— அதனைப் பிரேரிக்கும் ஆதிசத்தி திரோதானமாகலின், மறைவனைத்தும் அச் சத்திகாரியமெனவும் கசு - ன் உரையி லுரைத்தாமாகலின் அது மறைவெனுந் திரையோடிருக்கு மென்பதும், அது திருவருணடனத்தே மேலிடா தடங்கிக்கிடக்குமாறே இறைவனது திருவடி அதனை மிதித்து நிற்கு மென்பதும் விடையாமென்க. “ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதம்” என உண்மை விளக்கங் கூறுவதூஉ மது. “அதி தாண்டவஞ் செய்கோன்” என்பது அமரஸிம்ஹம் சிவநாமத்தொகுதி தெரிக்குமிடத்தே (மஹாநட:) “மஹாநடன்” என்ற பெயர்க்கு நேராயிருக்கின்றது. அதி - மிகுதிப்பொருடருமோர் வடமொழி யிடைச்சொல். அநுக்கிரகார்த்தமாயுள்ள மகேசுர மூர்த்தம் இருபத்தைந்தையுமெடுத்துக் கூறுகின்ற வாதுளோத்தர சுத்தாக்ய தத்வபேத படலம் (சதுர்த்தம் ந்ருத்தரூபகம்) “சதுர்த்தம் ந்ருத்தரூபகம்” என்னும் வாக்கியத்தானே நடேச மூர்த்தத்தை நான்காமெண்ணினைத் தோதுவதாயிற்று.

“வடிவாய்” “மாலாய்” “கோலாகலமாய்” என்பவற்றிலுள்ள ஆய் - ஆகவென்பதன் றிரிபு. மீ = ஆகாயம். வெந் = முதுகு. “அங்கிரியை” “தாண்டவத்தை” என ஐயுருபு விரித்துரைக்க. பாதாம்புயமானது என்பதில் ஆனது - பகுதிப்பொருள் விகுதி. என்பவன் = எனப்படுபவன்; இதனில் அகரச்சாரியையும், படு விகுதியுந் தொக்கனவெனலாம். (உசு)

**சிதம்பரத்தை, முன்னரிவ்வழியாய்த் தரிசிப்பரென்பது.**

அஞ்சாகுகி ருத்திய மங்குளதா
லதிரேகவ ஞரத வாதிசதா
எஞ்சாதும றைத்துள தாதலிஞெ
லெச்சம்புரி தானசு சீலமுடன்
துஞ்சாவிர தாதியி ழைக்குநருந்
தூய்தாயகு கேசனை யேயறியார்

முஞ்சாதமு துக்குறை வுள்ளவரே
மூடாவிழி யாலறி வாரறியே.

ஐவகைப்படும் ஈசுரகிருத்தியம் அந்தத் தகராலயத்தி லிருத்தலால் நித்திய அதிசயரூப ஆதிசத்தி குறைவில்லாமல் எக்காலத்தும் மறைத்துளது. ஆதலினால், யாகம் தானம் (என்பவற்றைச்) செய்யுஞ் சதாசாரத்துடன் குறைவுபடாத விரதாதிகளைச் செய்பவர்களும் அனாதி மலமுத்த சைதன்னியவத்துவாகிய குகேசனை அறியுந்தரமுடையாரல்லர். அழியாத பேரறிவுடையோரே மூடப்படாத ஞானநேத்திரத்தால் (அக் குகேசனை) அறிவார். (இதனைநீ) அறிந்து கொள்வாயாக.

ஆதிசத்தியாகிய திரோதானம் ஈசனைநாடார்க் கிருளாகவும், நாடுநர்க் கருளொளியாகவு மிருத்தலின் "அதிரேகஆதி" என்றார். அதிரேகம்=அதிசயம். இதனை,

(பரிணாமயதி தாஸ்ச ரோதாம்ஸ்காரக சித்த்விஷா ।
யதோந்மீலநமாதத்தே ததாநுக்ராஹிகோச்யதே ॥)

"பரிணமயதிதாச்ச ரோதாங்தம்கார்கசித்த்விஷா ।
யதோங்மீலநமாதத்தே ததாநுக்ராஹிகோச்யதே ॥"

என்னும் மிருகேந்த்ராகம பாசலக்ஷணப்ரகரணச் சுலோகத்தானுமறியலாம். பொருள்:— "ஈசுரசத்தியானது திரோதானாதிகார பரியந்தம் அம் மலசத்தியைப் பரிணமிக்குமாறு செய்துகொண்டு சிற்பிரகாசத்தினால் எஞ்ஞான் றான்மாக்கட்கு ஞானவிகாசத்தைச் செய்யுமோ அஞ்ஞான் றனுக்கிரகசத்தியென்று சொல்லப்படும்" என்பதாம். மலசத்திநீர்மை யித்தன்மைத்தா யிருத்தலினன்றே—

"பாசம் பகலோன் முனரே திமிரம்
நாசம் பெறல்போ னயவா லருண்முன்
பாசங் கையிலா தழியா தழிவுற்
றீசன் றருமின் பெனநின் றிடுமே."

என்று பரிபூரணானந்தபோதத்தும் பகர்ந்தா ராசிரியர். தமருகந் தாங்கிய திருக்கரத்திற் சிருட்டியும், அமைப்புடைத் திருக்கரத்திற் றிதியும், அக்கினியேந்திய திருக்கரத்திற் சங்காரமும், ஊன்றிய திருவடியிற் றிரோதானமும், தூக்கிய திருவடியி லனுக்கிரகமு முண்மையால் "அஞ்சாகு கிருத்திய மங்குளது" என்றோதினார். இவ் விவரம்—

"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

என்னும் உண்மைவிளக்கத் தூக்கினு மறியற்பாற்றே. "அரன் றுடி தோற்ற மமைத்த றிதியாம்— அரனங்கி தன்னி லறையிற்சங் காரம்—அரனூற் றணைப்பி லமருந் திரோதாயி—அரனடி யென்று மனுக்கிரக மென்னே." என்று திருமந்திரமுங் கிளத்திற்று. இதன் கண்ணே ஊன்றிய திருவடியே அணைப்பெனப்பட்டதென்புழி மேலே உண்மைவிளக்க விவரம் விரோதப்படாது. மேன் மிழற்றப்பட்ட ஐந்து திருவுறுப்புக்களுள்— (க) தமருகந்தாங்கு திருக்கையிற் சிகாரமும், (உ) வீசு திருக்கையில் வகாரமும், (ங) அபயகரத்தில் யகாரமும், (ச) அக்கினியேந்து திருக்கையில் நகாரமும், (ரு) முயலகன் முதுகிடையூன்று திருவடியின் மகாரமு முள்ளனவென்று அந்த உண்மைவிளக்கம்—

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகர மபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்."

என்றோதுகின்றது. இக் கிரமம்— "திருந்துநற் சீயென் றுதறிய கையும்— அருந்தவ வாவென் றணைத்த கையும்— பொருந்தி யிமைப்பிலி யவ்வென்ற பொற்கையுந்— திருந்தத் தீயாந் திருநிலை மவ்வே." என்று திருமந்திரத்திற் கூறப்பட்டதெனப்படும். ச - ற் சொல்லப்பட்டதே 'தீ' எனப்பட்டது. ரு - ற் சொல்லப்பட்டதே 'திருநிலை' எனப்பட்டது. இன்னும் இவ் வக்கரங்களுள் நகாரந் திருவடியிலும், மகாரந் திருவுதரத்திலும், சிகாரந் திருத்தோளிலும், வகாரந் திருமுகத்திலும், யகாரந் திருவடியிலுமாக நிற்குமென்பது— "ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே— நாடுந் திருவடியி லேநகரம்— கூடு— மகர முதரம் வளர்தோள் சிகரம்— பகருமுகம் வாமுடியப் பார்." என்னும் உண்மைவிளக்கத் தொடர்பினறியலாம். இவ் வேதுவாலே தகராலயநடனம் பஞ்சாக்கரநடனமெனவும் படுமென்க. சொற்ற சிருட்டி முதலிய ஐந்தொழில்களுஞ் சிவபெருமாற்கே யுரியனவென்பதற்காம் வேதாகமப் பிரமாணங்கள் பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்து சசு - ன் உரையுழிக் காட்டினும்; ஆவயிற் காண்க. கடோபநிஷத்தின் ரு - ஆம் வல்லி—

(𑌨𑍈𑌵 𑌵𑌾𑌚𑌾 𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑍋 𑌨 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 ।
𑌅𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑌥𑌂 𑌤𑌦𑍁𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ॥
நைவவாசாநமநஸாப்ராப்தும் சக்யோநசக்ஷுஷா ।
அஸ்தீதிப்ருவதோ'ந்யத்ரகதம் ததுபலப்யதே ||)

"வாக்கினாலும், மனத்தினாலும், விழியினாலும் அடையக்கூடியதன்று: உளதென்றுரைப்பவனினும் வேறானவனால் (=சுவானுபவ ஞானமுள்ளவனால்) அஃதறியப்படும்" என்பவும், நிராலம்போபநிஷதம்—

(𑌯𑌜𑍍𑌞𑌵𑍍𑌰𑌤𑌤𑌪𑍋𑌦𑌾𑌨𑌵𑌿𑌧𑌿 𑌵𑌿𑌧𑌾𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑍋 𑌬𑌨𑍍𑌧𑌃 ।
யஜ்ஞவ்ரததபோதாநவிதி விதாநஜ்ஞாநஸங்கல்போபந்த: ।)

"யஞ்ஞம், விரதம், தவம் தானமென்பனவற்றின் விதியையறிதலும், நடத்தலுமாய மனோவியாபாரம் பந்தம்" என்றுங் கூறுதலின் "எச்சம்புரி தான சுசீலமுடன் அஞ்சாவிரதாதி யிறைக்குநருந் தூய்தாப குசேசனையேயறியார்" என்றார். மூடிவிழிக்குந் தன்மைத்தாய தூலநேத்திரம்போலாது நன்கு பிரகாசிப்பது ஞானநேத்திரமாதலின் அதற்கு 'மூடா' என்னும் அடைகொடுத்தோதினார். மூடா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

முதுக்குறைவு= பேரறிவு; "முதுக்குறைவு பேரறிவு முகரிமையாகும்" என்றோதும் பிங்கலநிகண்டு. 'அஞாத அதிரோக ஆதி எஞ்சாது சதாமறைத்துள தாதலினால் எச்சம் தானம்புரி சுசீலமுடன்' எனவியையும். (௨௭)

சிதமாகிய வண்டநன் மன்றமதைத்
தெளிவானனி கண்ணுற வெம்பெருமான்
இதமாகிய பேரரு ளாலுடலா
மிதயாம்பர நோக்கம தாமுகுரம்
அதையேபெற வேண்டுமெ னுந்துணிபே
யறையுந்திரு வாரண மாகமமாய்ந்
துதியா நிலை வேறிலை வேறிலையென்
றெளியாது மொழிந்தது மன்னணமே.

அண்டதகராலயமாகிய சர்வோத்தம ஞானசபையை ஞானத்தால் நன்கு தரிசிக்க, எம்முடைய ஆன்மநாயகனது இதமாகிய பெரிய திருவருளாற் பிண்டதகராலயமாகிய இதயாம்பரத்திலுள்ள

ஞானதிருட்டியாகிய கண்ணாடியையே பெறல்வேண்டுமென்னு முடிவினைச் சிறந்த வேதங் கூறும். ஆகமமானது மாண்டுபிறவா துய்யுநிலை வேறில்லை வேறில்லையென் றுண்மையுரைத்ததும் அவ்வேதங் கூறியவாறே.

கைவல்யோபநிஷதம்— ([illegible] - தஸ்மாதேவம்விதித்வைநம் கைவல்யப்பத மச்நுதே=) "ஆதலின் இவனையறிந்து கைவல்லியபத மடைகின்றனன்" என்றும், வராஹோபநிஷதம்—

([illegible] ।
[illegible] ।
[illegible] ॥
த்வமஹம்சப்தலக்ஷ்யார்த்த மஸக்தம்ஸர்வதோஷதஃ ।
ஸர்வகம்ஸச்சிதாநந்தம் ஜ்ஞாநசக்ஷுர்நிரீக்ஷ்யதே ।
அஜ்ஞாநசக்ஷுர்நேக்ஷ்யேத பாஸ்வந்தம்பாநுமந்தவத் ॥ )

"நீ நானென்னும் பதங்கட்கு இலக்ஷியார்த்தமாய்ச் சருவதோட நீக்கமுளதாய்ச் சச்சிதானந்தமாயிருக்கும் வத்துவை ஞானநேத்திரமுள்ளவன் காண்கின்றனன்: ஒளிசெய்து கொண்டிருக்குஞ் சூரியனைக் குருடன் காணாதவாறுபோல அஞ்ஞானி (அவ்வத்துவைக்) காண்பதின்று" என்றுமோதுதலின் "உடலா மிதயாம்பரநோக்கமதாம் முகுரம் அதையே பெற வேண்டுமெனுந் துணிபே யறையுந் திருவாரணம்" என்றார். இங்ஙனம், தனக்கெதிரிலுள்ள பொருள்களை நோக்கியறியுங் கண்ணானது தனதுருவை நோக்கியறியாது: அறியவேண்டுமாயிற் கண்ணாடிவாயிலாக வறியும். அவ்வாறே பரமான்மாவுக்குத் தான் உடம்பாயிருந்துந் தன்னை யறியாதிருக்கின்ற ஆன்மாவும் ஞானக்கண்ணாடி வாயிலாக வறியுமென்பதை யறிவுறுத்துவார் "நோக்கமதாம் முகுரமதையேபெறவேண்டும்" என்றார்; இஃதுருவகம். முகுரம் = கண்ணாடி; சூடாமணி நிகண்டு காண்க. ஆன்மஞானத்தையும், அதனையறிதற்குரிய (ஸோஹம்பாவனைபாகிய) உபாயத்தையும், அறிந்தானது பெருமையையும் விரித்துக்கூறுகின்ற ஸர்வஜ்ஞானோத்தரமென்னும் ஆகமம்— "தனதுண்மையையுணர்ந்து உறுமுபாயங்களைச் செய்வோன் சீவன்முத்தனாய் உள்ளும் புறத்தும் வியாபித்துச் சருவஞ்ஞதை, திருத்தி, அநாதிபோதம், சுவதந்திரத்துவம், அலுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயத்துவம், விசுத்ததேகமென்னும் எண்குணங்களாகிய ([illegible])

தத்தர்மத்தையுடைய கர்மியாப்ச் சிவத்துவத்தைப்பெறுவன்: சத்தியஞ் சத்தியஞ் சத்தியம்; முக்காலுஞ் சத்தியம்: இதற்குமேலறியற்பாலன ஒரு சாத்திரத்தினுமில்" என்று கூறுகலின் "தூயமாய்ந் துதியாநிலே வேறிலே வேறிலேயென் றெளியாது மொழிந்ததும் அன்னணமே" என்றார். இப்பொருளை,

"'ஸர்வத்ரகாமீபவதீஹமுக்தஸ் தததர்தாமீ ஹிராகாரஸ்தஃ।
ஸர்வஜ்ஞதாத்ருப்திராநாதிபோதஃ ஸ்வதந்த்ரதாநித்யமலுப்தசக்திஃ।
அநந்தசக்திச்சநிராமயாதமா விசுத்ததேஹஃ ஸசிவதவமேதி ॥'

'ஸத்யம் ஸத்யம்புநஃ ஸத்யம் த்ரிஃ ஸத்யம்சபதஃ க்ருதஃ।
அதஃ பாதரம்நாஸ்தி விஜ்ஞேயம் குத்ராசிதகுஹ ॥'"

என நிகழ் அவ் வாகம வசனங்களி னறிக. இவ்வுண்மை உலகமுணர்ந் துய்யும்பொருட்டு முருகபெருமான் முன்னிலைக்கட் சிவபெருமான் றிருவாய்மலர்ந்தருளியதெனக் கொளவுளது.

மேலைச் செய்யுளில் "மூடாவிழியா லறிவார்" என்றறிவுறுத்த வாசிரியர், அவ்விழியே பெறல்வேண்டுமென்னுந் துணிபு வேதாகமங்களிலுங் கூறப்பட்டதென ஈண்டு மேற்கோள் சாதித்தாரென்க.

'அண்டமாகிய நல் சிதமன்றமதை' எனவியைக்க. சிதம்=ஞானம். தெளிவு= அறிவு; "போதமே தெளிவு புந்தி புலனறிவு" என்பது சூடாமணிநிகண்டு. 'அதையே' என்பதிலுள்ள ஏகாரந் தேற்றம். மற்ற ஏகாரங்கள் அசை. உதியாநிலே= உதியாமலுய்யு நிலே; உதியா - உதியாமலென்பதன் ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்; உய்யும் - என்பது சொல்லொழிபு. வேறிலே வேறிலே - அடுக்கு; தேற்றம்பற்றியது. இத் தேற்றம் மேற் காட்டப்பட்ட ஆகமவசனத்துமிருத்தலின் அது நோக்கியே யெழுந்தது (உஅ)

கண்ணுனதி லாதவன் வெள்ளிடையுங்
காணுனது மானவி ராட்டுருவோன்
தண்ணுரித யாம்பர மன்றமதைத்
தம்வாளித யாம்பர மன்றினையே
உண்ணுடிந லோர்விழி தானடையா
ரோர்போதுமெய் யாயறி யாரறிவாம்
விண்ணுயக மாயவி ரெம்பெருமான்
வீயாவரு ளாலதை யேயறியே.

பிறவியந்தகன் (உலகெங்குமுள்ள) பூதவெளியையுங் காணுந்தாமுடைய னல்லன். அதுபோலத் தங்களுடைய ஒளியார்ந்த இத

யாகாச மன்றத்தையே யுட்புலத்தில் விரும்பிச் சிறந்த ஞானநேத்திரத்தைப் பெறாதார் விராட்புருடனது குளிர்ச்சிபொருந்திய இதயாகாச மன்றத்தை ஒருகாலும் நிச தரிசனமாகக் காணப்பெறார். ஞானமாகிய விண்ணிற்கு நாயகனைப் பிரகாசிக்கின்ற எம்பெருமானது அழியாத்தன்மையுடைய திருவருளால் அதனை யறிவாயாக.

"கண்ணுனதிலாதவன் வெள்ளிடையுங் காணுனதுமான விராட்டுருவோன் தண்ணு ரிதயாம்பர மன்றமதை ---- நல்ஓர்விழி தானடையா ரோர்போதும் மெய்யாயறியார்" என்றது—மேலைச்செய்யுளுரையுழை "ஒளிசெய்துகொண்டிருக்குஞ் சூரியனைக் குருடன் காணாத வாறுபோல அஞ்ஞானி (அவ்வத்துவைக்) காண்பதின்று" எனக் காட்டப்பட்ட வராஹோபநிஷத் வசன நிச்சயத்துளது. வெள்ளிடை= வெளி. தூலநேத்திரம்போல ஞானநேத்திரமும் இரண்டாயிருக்குமோவென மலையாமைப்பொருட்டு "நல் ஓர்விழி" என்றார். எனவே அவ்விழி சமானரகிதமென்பதூஉம் போதருமால். ௫-ன் உரையில் "அணோரணீயாந்" என்றற்றொடக்கத்தனவாய்க் காட்டப்பட்ட சுருதிகளின் வசனங்கள்—"அணுவினுமணுவாய்ப் பெரிதினும் பெரிதாயுள்ள (பரம) ஆன்மா இச் செந்துவினது இருதய குகையினுளது: தனது மகிமைக்கு ஏதுவாயுள்ள அதனைக் கன்மநீக்கமுடையோன் தனக்காதாரமான ஈசனது பிரசாதத்தினாற் சோகமிலாதவனாய்க் காண்கின்றனன்" எனும்பொருளைத் தருதலின் "எம்பெருமான் வியாவருளா லதையேயறி" என்றனர். இப் பிரசாதத்தைக் குறிக்கின்ற வேறு பிரமாணங்களையும் பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்து ௨௱-ன் உரையகத் துணரலாம். சுருதிகள்—பரமான்மா 'அணுவினுமணு' என்றது பெரிதினும்பெரிதாயுள்ள அஃது ஆகாயமனைய அதி சூக்குமப்பொருளா யுள்ளதென்ப துணர்த்தற்கெழுந்ததேயன்றிச் சென்றுசென்று தேய்ந்துதேய்ந்துபோம்பொருளென்பதுணர்த்தற் கெழுந்ததன்று. என்னை? அது, தேசபரிச்சேத காலபரிச்சேதங்களில்லா வொருபடித்தாய பூரணப்பொருளாகலின். பிரமாண்டமே பெரிது; அத்திறத்த பலவுமுள்ளடங்கப் பிறங்கிநிற்பது பரமான்மாவாகலின் அது, பெரிதினும்பெரிதெனப்பட்டதென்க.

மேலைச்செய்யுளின் ஞானநேத்திர நிமித்தம் மேற்கோள் சாதித்த ஆசிரியர் அந் நேத்திரமிலான் குருடனைப்போலுளானென் றுவமானமுகத்தானு மறிவுறுத்து, அது திருவருளே; அதனாலதனை யறியென்றும் ஈண்டுக் கூறியருளினரென்பதூஉம, பிண்டதகரவித்தை

வாயிலாகவே அண்டதகரவித்தை பறியப்படுமென்பதும் இங்ஙனம் பெற்றும். இக் கிரமத்தாலன்றோ இந் நூற்புலம் பிண்டதகரவித்தை யியல் முன்னரும், அண்டதகரவித்தையியல் பின்னருமாக வைக்கப் பட்டன.

'அதுமான, தம்வாள் இதயாம்பர மன்றினையே யுண்ணுடி நல் ஓர் விழி தானடையார் விராட்டுருவோன் தண்ணுர் இதயாம்பர மன்றமதை ஓர்போ தும் மெய்யாயறியார்' எனவியையும். மான - உவமவுருபிடைச்சொல். 'வெள்ளிடையை' 'விழியை' என இரண்டனுருபுகளும், 'உருவோனது' 'தம்முடைய' என ஆறனுருபுகளும் விரித்துரைகக. வாள் = ஒளி. (உகூ)

அண்டபிண்டவடக்கஇரகசியமும், அதனையறிய நடேசனைத் தொழ வென்பதும்.

இந்நேர்மையி லண்டமு ளேசிறுபிண்
　டமுமேயத னுள்ளிறை யண்டமுமே
எந்நாளிலு முண்டிவி ராசியநே
　ரேநீயறி தற்குந டேசனையென்
மன்னுகிரு பாகர வானவனே
　மாதேவகு கேசப ராபரனே
தன்னேரிலி யேயடி யார்நலனே
　தாதாவடி யென்றுதொ ழாய்தினமே.

இவ் வுடன்பாட்டில் அண்டத்தினுள்ளே சிறிய பிண்டமும், அப் பிண்டத்தினுள்ளே பெரிய அண்டமும் எக்காலத்திலுமுண்டு. இவ் விரகசியத்தை நேரே நீயறிய நடேசப்பெருமானை நாடோறும் என்னரசனே! கிருபைக்குறைவிடமாயுள்ளவனே! பரமாகாசத்திரு ப்பவனே! மகாதேவனே! குகேசனே! பராபரனே! சமானரகி தனே! அடியார்களுடைய செல்வமே! உன்றிருவடியை (அடியே னுக்குத்) தருவாயாக தருவாயாகவென்று சொல்லித் (= துதித்து) தொழுவாயாக.

அண்டம்போலப் பிண்டமும், பிண்டம்போல அண்டமுமிருத் தலின் "அண்டமுளே சிறுபிண்டமும் அதனுள் இறையண்டமும் எந் நாளிலுமுண்டு" என்றனர். இவ்வுண்மை— "வலங்கைமான் மழுவோன் போற்றும் வாளரவரசை நோக்கி— அலைந்திடும் பிண்ட மண்ட மவைசம மாதலாலே" எனக் கோயிற்புராணத்துங் கூறப்பட் டது. யஜுர்வேத யோககுண்டல்யுபநிஷதம்—

(ப்ரஹ்மாண்டஞ்சைவபிண்டாண்டம் லோகாபூராதயக்ரமாத்।)

"ப்ரஹ்மாண்டஞ்சைவபிண்டாண்டம் லோகாபூராதயக்ரமாத்।"

என்றோதலு மதுபற்றியே யென்க. அந்தச் சமவிவரம்:— அதர்வணவேத சாண்டில்யோபநிஷத்தின் ௧-ஆம் அத்தியாயம் (பாதாதோபாகேஸம்யமாத் ஸகலலோகஜ்ஞாநம்।) "பாதாதோபா கேஸம்யமா தலலோகஜ்ஞாநம்।" என்று கூறிச்செல்லுமிடத்தே—

(௧) அகப்பாதம் அதலம்,
(௨) புறப்பாதம் விதலம்,
(௩) பரடு நிதலம்,
(௪) கணைக்கால் சுதலம்,
(௫) முழங்கால் மகாதலம்,
(௬) தொடை இரசாதலம்,
(௭) இடை தலாதலம்,
(௮) நாபி பூலோகம்,
(௯) வயிறு புவர்லோகம்,
(௧0) இருதயம் சுவர்லோகம்,
(௧௧) தோள் மகர்லோகம்,
(௧௨) கண்டம் ஜனோலோகம்,
(௧௩) புருவமத்தி தபோலோகம்,
(௧௪) சிரசு சத்தியலோகம்

எனவும்; தர்சநோபநிஷத்தின் ௪-ஆங் கண்டம்— ஆதாரம் (மூலாதாரம்) கமலாலயம், இருதய சரோருகம் பிரயாகை, இருதய மத்தி சிதம்பரம், குசம் (கூர்ச்சம்) குருக்ஷேத்திரம், புருவமத்தி காசி (வாராணஸீ), நெற்றி கேதாரம், சிரசு சீசைலம், பிராணவாயு சூரியனெனும் பிங்கலைநாடியினின்று சந்திரனெனும் இடைநாடியிற் பொருந்துதல் உத்தராயணம், பிராணவாயு இடைநாடியினின்று பிங்கலைநாடியிற் பொருந்துதல் தக்ஷிணாயனம், பிராணவாயு பிங்கலை நாடிக்கும் இடைநாடிக்கும் இடையிலே (= அக்கினியெனுஞ் சுழு முனையிலே) பொருந்துதல் அமாவாசியை, நிசுவாசத்தோடு சுவாச நாடி ஒன்றினின்று பிறிதொன்றிற் பொருந்துதல் மாச சங்கிரமம், பிராணவாயு இடைநாடியினின்று குண்டலித்தானத்திற் பொரு ந்துதல் சந்திரக்கிரகணம், பிராணவாயு பிங்கலைநாடியினின்று குண்டலித்தானத்திற் பொருந்துதல் சூரியக்கிரகணமெனவும்;

யஜுர்வேத கர்ப்போபநிஷதம்— *இருதயத்திலே தக்ஷிணாக்கினி (தக்ஷிணாக்நிஃ), உதாத்திலே காருகபத்தியம் (காஹஃபத்யஃ), முகத்தில் ஆகவனீயம் (ஆஹவநீயஃ) எனவும் விளம்புமாற்றானறியலாம். ச - ன் உரைக்கட் சாரீரகோபநிஷத்திற் சொல்லப்பட்டனவாகக் காட்டப்பட்ட யாவையும் ஈண்டுக் கருதிக்கோடல்வேண்டும். திரிகோணமாக வளர்க்கப்படுவது தக்ஷிணாக்கினியெனவும், வில்வடிவாக வளர்க்கப்படுவது காருகபத்தியமெனவும், சதுரமாக வளர்க்கப்படுவது ஆகவனீயமெனவும் பெயர்பெறுமென்ப. கண்ணிற்சூரியனும், செவியிற்றிசையும், நாசியிற்பிருதிவியும், நாவில்வருணனும், துவக்கில்வாயுவும், மனத்திற்சந்திரனும், புத்தியிற்பிரமாவும், அகங்காரத்தில் உருத்திரனும், சித்தத்தில் க்ஷேத்திரஞ்ஞனும், வாக்கில் அக்கினியும், அத்தத்தில் இந்திரனும், பாதத்தில் விட்டுணுவும், பாயுவில் மிருத்தியுவும், உபத்தத்திற் பிரஜாபதியும் அபிமானதேவதைகளாக விருக்கின்றனவென்று யஜுர்வேத ஸுபாலோபநிஷதம் ரு - ஆங் கண்டத்தி னவிறனும் இங்ஙனங் கருதுதல்வேண்டும். இவ்விவாங் கூறுகின்ற யஜுர்வேத பைங்கலோபநிஷத்துழை நாசியில் அச்சுவினி தேவதைகளும், பாதத்தில் உபேந்திரனும், சித்தத்திற் பிரமனுமுளாரெனுமாறு படிக்கப்படுகின்றது. இவ் வேறுபாடு பிரதிபேதமாகலாம். மேமேல விளந்த கச - உலகப்பெயர்க ளொழுங்கிற் சில பேதப்படவும், அவைபற்றிற்குரிய தானங்களுட் சில மாறுறவுங் காருடமென்னும்புராணம் முதலியன கூறுமாயினும் இங்கே பிரபலச் சுருதி கூறுமாறே யாங் காட்டினும். மிருகேந்த்ராகமம் விளம்புமாறு உஉ - ன் உரையிற் காட்டப்பட்ட கீழுலகப்பெயர்களுட் சில, ஈங்குக் காட்டப்பட்ட வுலகப்பெயர்கட்கு வேறுபடுவனவேயாயினும் விரோதப் படுவனவல்ல. விரைய உருட்டிவிடப்பட்ட பந்து செல்லுமாறு ஆகாயத்திலே தன்னைத்தானே சுற்றிக்கொண்டும் ஓடிக்கொண்டுமிருப்பதால், (இரவு கூ0 - கடிகையில் அச்சுவினியாதி உஎ - நாண்மீன்களையும் ஏனைய விண்மீன்களையும் மேலுங்கீழுமாக அவை நிலைபெற்ற விசும்பினையுங் காணத்தக்க) மானுடர்க்கும் ஏனை யஃறிணை யுயிர்கட்கும் இருக்கையாயுள்ள இப்பூமியாகிய உண்டையின் தக்ஷிண துருவத்திற்கு நேராய வெளியிலே கீழுலகமாம் பாதாளங்களும், நரகங்களு மிருக்கின்றனவென்றே கோடல்வேண்டும்; பூமியிலுள்ளன வென்று கோடலொண்ணாது. என்னை? ஆடகேசுர

* இருதயம் காருகபத்தியம், மனம் அந்வாஹார்யாக்நி என்றுரைக்குஞ் சாந்தோக்யோபநிஷத்தின் ரு - ஆம் பிரபாடகத்துப் கஅ - ஆங் கண்டம்.

புவனத்திற்கு மேலுள்ள வெளியில் இப்பூமி யுளதென்பதாகக் கந்த புராண அண்டகோசபடலங் கூறுகின்றதாகலின். இச்செய்திபற்றிப் பல புத்தகங்கள் பலவாறு பகரினும் இங்குப்பகர்ந்ததே யேற்புடைத் தாகும். இப் பூமியின் நடுநிலைக்களமாகக் கணிக்கப்பட்ட சம்புத் தீவின்கண் மேருகிரி மிக்குயர்ந்தும் இப் பூமியிலுற்ற வேறுதீவுகளிற் பாற்கடன்முதலிய கடல்கள் சூழ்ந்து முள்ளனவென்று நூல்க ளுவலுநுவற்சிகளில் ஐயப்பாடுடையார், மூலாதார முக்கோணத்தில் மேருவும்; தசையிற் குசை, நரம்பிற் கிரௌஞ்சம், மச்சையிற் சாகம், தோலிற் சான்மலி, கேசத்திற் பிலக்ஷம், நகத்திற் புஷ்கரமெனுந் தீவுகளும்; சுக்கிலத்திற் பால், மச்சையினெய், உதிரத்திற் றயிர், சிலேட்டுமத்தின் மது, இரசத்திற் கருப்பஞ்சாறு, மூத்திரத்தி லுவர் நீர், நாவி னன்னீரெனுங் கடல்களு மறியப்படுமெனஅக் காருடமேன் னும்புராணம் புகலுமாற்றினையும், பிண்டமும் அண்டமுஞ் சமமென் றற்குரிய ஏதுக்களையும் உய்த்துணருநரன்று அன்னோர்— பிண்டத் துள்ள யாவும் அண்டத்துமிருத்தல்கூடுமென்னு நிச்சயமுஞ்செய்வர் அவ்வாற்றானும், "இடைபிங் கலையிம வாமேனு டிலங்கை— நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை" எனத் திருமந்திரந் தெரிக்குநெறியான் ஆறு தாரத்தை யூடுருவி நடுநிற்கின்ற சுழுமுனைத் தம்பமே மூலாதார முக்கோணத்து மேருவெனக் கொளக்கிடத்தலின் அந் நாடியினை யறியுந் தரமுடையாரெவரோ அவரே பூமத்தியிலுள்ள மேருவையு மறிவரெனத் துணிபுரைக்குமாற்றானும், இன்னன பலவுமாமென மேலொருமுடிபு கிளக்குமாற்றானுந் தெளிவுடையராவர். மேற் கிள ந்த கச - உலகப்பெயர்களுள் (பூலோகத்தின்மேல்) கூ - ஆம் எண்ணி லுள்ள புவர்லோகமே அலகையுலகம், குய்யகவுலகம், கந்தருவ வுலகம், விஞ்சையருலகம், தேவதாசிகளுலகம், சூரியனுலகம், சந்திர னுலகம், தாரகையுலகம், புதன் சுக்கிரன் செவ்வாய் வியாழன் சனி யென்பாருலகங்கள், சத்தவிருடிகளுலகம், துருவனுலகமென்பவற் றைத் தன்னகத்தே கொண்டுளதெனவும், கO - ஆம் எண்ணிலுள்ள சுவர்லோகமே இந்திரனுலகமெனவும் ஸ்காந்தமஹாபுராண தக்ஷ காண்டஞ் சாற்றுகின்றது. இவை, காலிகிதப்பிரதிபேதங்களானும், வேறு திறங்களானும் பலபுத்தகங்களிற் பலவாறு பேதப்படலுங் கூடுமாயினும் உண்மையொழிந்துபோகா தென்க. சூரியன்மீது வீழத்தக்க சந்திரனது சாயையும், சந்திரன்மீது வீழத்தக்க பூமி யினது சாயையுமே இராகு கேதுவென்னுங் கரும்பாம்பு செம்பாம் பென்றுங் கழறுப. அங்ஙனமே கிரகணங்களுங் கூறுப. முருகப்

பெருமான் அண்டகோடிகளெல்லாந் தனது பேருருவிலடங்கிற்கும் விவரத்தைப் பரிபூரணனைந்தபோதப் பாயிரவுரையுழைக் கண்டுகொள்வதோடு, ஆசிரியர்—

"உருநிலையிற் குழவிவடி வுடனி ருந்தே
யுயர்தருகைக் கோம்பொருள்சொன் னதுவி யப்பே
அருநிலையி லுயிர்தோறு மிருந்து மந்த
வாவிகட்கெட் டாதிருத்த லதிவி யப்பே
பெருநிலையி லரியனுமான் வீர வாகுப்
பெயருடையான் கொண்டவுருக் களைக்க டந்து
கரசிரங்கள் பலவோங்க நின்ற நீர்மை
கணிப்பவரார் திருப்புகழ்சொன் னவனுண் மன்னே."

என்று திருவலங்கற்றிரட்டின் க - ஆங் கண்டத்திற் கூறியிருக்கும் வியப்பினையுமோர்க. இத்திறவிறைவன் அணுவாய ஆன்மவிதயத்தடங்கியிருத்தல் பிண்டத்துள் அண்ட மடங்கியுளதென்றுரைக்கப்படுமன்றே. இவ் வண்டபிண்டவடக்க இரகசியம்— "அணுவுளவனு மவனு ளணுவுங்— கணுவற நின்ற கலப்ப துணரார்" என்னுந் திருமந்திரக் கூற்றகத்துங் கூறப்பட்டதென்க.

சீவனுபுள்ளோன் சரீரத்திற் சஞ்சரிக்கு ஞான்று இதய தாமரையின்—

(க) கிழக்குத்தளத்திற் புண்ணியவிருத்தியும்,
(உ) (அக்கினிதிக்காய) தென்கீழ்த்தளத்தில் ஆலசியமும் நித்திரையும்,
(ங) தெற்குத்தளத்திற் குரூரபுத்தியும்,
(ச) தென்மேற்றளத்திற் பாவபுத்தியும்,
(ரு) மேற்குத்தளத்திற் கிரீடைப்பிரீதியும்,
(சு) வடமேற்றளத்திற் கமனபுத்தியும்,
(எ) வடக்குத்தளத்திற் சாந்தியும்,
(அ) வடகீழ்த்தளத்தின் ஞானமும்,
(கூ) கர்ணிகை (பூவின்கொட்டை)யில் வைராக்கியமும்,
(கO) கேசரம் (பூந்தாது) என்பதில் ஆன்மசிந்தையும்

உண்டாகின்றனவென்று நாரதபரிவ்ராஜகோபநிஷதம் சு - ஆம் உபதேசத்தே (ப்ராக்தலே புண்ய வ்ருத்திஃ) "ப்ராக்தளே புண்ய வ்ருத்திஃ)" என்றற்றொடக்கத்த வாக்கியங்களா னுணர்த்துகின்றது. இவ்விவரம் ஹம்ஸோபநிஷத்திலுஞ் சில பேதமாகப் படிக்கப்படுகின்றது. பார்வை பிறத்தற்கு விழி யிடனுயிருப்பது புரைய அவ்வவ்

வெண்ணந் தோன்றற்கு இத்தளங்களு மிடங்களாயிருக்கு மென்க. முகத்திற்கு நேராயுள்ள தளத்தையே கிழக்குத்தளமாகக் கொள்ள லாம். சிந்தை வியாபாரம் இவ்வாறிருக்கின்றமையின், சிந்தையைப் புடைபெயர விடாது தன்னகநிறுவித் தகரோபாசனையிலிருப்பார்க்கு அவ்வியாபார மின்றென்பதூஉ மிங்ஙனம் பெறுக. அந்தக் கர்ணி கையிற் சூரியனும், சூரியனுக்கு நடுவணிற் சந்திரனும், சந்திரனுக்கு மத்தியில் அக்கினியும், அக்கினி நடுவின் மகேசனும், சதாசிவனும், சிவனுமுளரென்று நிசுவாசகாரிகை கூறுமென்பதை—

"இதயதாமரைக்கருணிகைதன்னிலினனுமவ்வினனடுவணின்மதியும்
மதியினுப்பணிற்கனலுமக்கனலுண்மகேசன்றூயசதாசிவன்சிவனுங்
கதழ்வொடேயுளரெனுநிசுவாசகாரிகைச்சொலின்முடிவினிற்கின்ற
பதியெனுஞ்சிவனேகுகனென்றோர்பவர்க்கும்பிறப்புளதோபசுபதியே."

என்று ஆசிரியர் ௧௧0௧ - திருப்பாட்டுக்களார்ந்த தமது திருப்பா வெனுமொரு நூலுழைப் பாடினதுகொண்டு முணர்ந்திடுக. தைத் திரீயாருணசாகை நாராயணம்— (பத்மகோஶப்ரதீகாஶம் - பத்ம கோசப்ரதீகாசம் =) "தாமரை முகையை யொத்த" என்றியம்பு மாற்றான் இதயகமலத்தினைக் குறிப்பாக வெடுத்துரைத்தபின்னர், (தஸ்யமத்யே வஹ்நிஶிகா - தஸ்யமத்யேவஹ்நிசிகா =) "அதன்மத் தியில் அக்கினிசிகை" என்றோதுதலும்,

(நீவாரஶூகவத்தந்வீ பீதாபாஸ்வத்யணூபமா ।
தஸ்யாஃ ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித꞉ ॥
நீவாரசூகவத்தந்வீ பீதாபாஸ்வத்யணூபமா ।
தஸ்யாச்சிகாயாமத்த்யே பரமாத்மாவ்யவஸ்திதஃ ||)

"நீவார தானியத்தின் (காட்டு நெல்) நுனைபோ னுண்ணிதும் மஞ்சள் (பொன்) நிறத்ததுமாய ஒளியொன்றுண்டு: அவ்வொளிச் சிகையின் மத்தியிற் பரமான்மா விருக்கின்றனன்" என்று கூறு தலும் அந் நிச்சயமேயாம். இங்ஙனம் அதி நுட்பமாகக் குறிக்கப் பட்ட பொருள் ஆணவமலத்தி லணுவெனக் கட்டுப்பட்டுப் பர மான்மாவுக் குடம்பாயுள்ள சீவான்மாவேயாம். பிரஹ்மஸூத்ரம் (குஹாம் ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி தத்தர்ஶநாத்) "குஹாம்ப்ரவிஷ் டாவாத்மாநௌஹி தத்தர்சநாத்" என்றோதுதலின் இஃதெது மூறும். தமிழ் :— "குகையின்கட் பிரவேசித்தவை யிரண்டான் மாக்களே; அங்ஙனங் காணப்படலான்" எனவாம். இப்பொருளையே

முன்னர்க்காட்டப்பட்ட "அணுவு ளவனு மவனு ளணுவும்— கணு வற நின்றகலப்பு" என்னுந் திருமந்திரக் கிளவிகளுங் கொண்டிருக்கின்றன.

(த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி
அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி ॥)

"த்வாஸுபர்ணாஸயுஜாஸகாயா
ஸமாநம்வ்ருக்ஷம்பரிஷஸ்வஜாதே ।
தயோரந்ய꞉பிப்பலம்ஸ்வாத்வத்த்
யநச்நந்நந்யோபிசாகசீதி ||"

என முண்டகோபநிஷத்திலும், சுவேதாச்வதரோபநிஷத்திலும் வருமந்திரமு மதுவன்றே. பதப்பொருள்:— "த்வௌ = (ஜீவான்மாவும் பரமான்மாவுமாகிய) இரண்டும், ஸுபர்ணௌ = பறவைகள் (போல), ஸயுஜௌ = பிரியாதஒற்றுமையாய், ஸகாயௌ = கூடியிருப்பன: ஸமாநம்வ்ருக்ஷம் = விருக்ஷம்போன்ற (சரீரத்)தை, பரிஷஸ்வஜாதே = அடைந்துள்ளன: தயோ = அவற்றுள், அந்யபிப்பலம் ஸ்வாது = ஒன்று கன்மமென்னுங் கனியை, அத்தி = புசிக்கின்றது: அந்ய꞉ = மற்றொன்று, அநச்நந் = புசியாததாய், அபிசாகசீதி = பார்த்துக்கொண்டிருக்கின்றது" எனவரும். அந்தச் சாரீரகோபநிஷதம் 'சீவ பரமான்மாக்கள்' என்றோதினதூஉம் இம்முடிபினுளதன்றே. இங்ஙனம், மனமே சீவான்மா வெனப்பட்டது: அது நசித்தவிடமே சமாதி: அதனை விருப்பது ஓரான்மாவே யென்னின்,— அச் சாரீரகச் சுருதியிற் சூக்குமதேகமெனும் இலிங்கசரீர கருவிகளில் மனமுமொன்றென்பதூஉம், அம் மனத்திற்கு வேறாகப் பரமான்மாவோடுள்ள சீவான்மா வுளன், அவனே க்ஷேத்திரஞ்ஞனென்பதூஉங் கிளக்கப்பட்டனவாகலின் ஓரான்ம வியவகாரம் ஈண்டைக்குச் சாலாது. ஆபாசப்பட்ட சித்தே சிதாபாசன், அவனே மனமென்று மனத்தத்துவஞ்சாதிக்கப் புகினும், மனமெனுங் கருவியொடு கூடுபு நினைப்புறு சீவன் சிதாபாசனெனப்படுவனேயன்றி அக் கருவியே அவனெனப்படானென்பதூஉம், ஆபாசப்படுத்தற்கு ஆபாசப்பொருளொன் றுண்டென்பதூஉம், அவ்வாபாசஞ் சித்தென்னவாவது சுத்தசித்தான பிரமத்தை அஃதாபாசப் படுத்துமென்னவாவது ஏற்புடை நியாயம் பிறப்பதின்றென்பதூஉம், அக்கடவுளை

ஆன்மாவி லறிகுநர்கட்கு நித்தியமான சுகமுளதென்று சுருதிகள் சொல்லுகின்றமையின் அச் சுகத்தினை நுகர்ந்திருத்தற்குரிய முத்தான்மாவும் நித்தியவத்துவாகவே யிருத்தல்வேண்டுமென்பதூஉம் பெறப்படு நெறியானே சீவான்மாவைப் பொய்ப்படுத் தோரான்மாவே சாதிக்கத்துணிதல் சுருதிவிரோதமுமாம். நித்திய சுகஞ்சொல் சுருதிவாக்கியங்களைப் பரிபூரணானந்தபோதத்து முற்படலத்து க0சு - ன் உரையிற் கண்ணுறலாம். ஒன்றென்னு மிக்கோட்பாடுபற்றி நிகழ்சங்கை சமாதானங்கள் பலப்பலவாமாகலின் அவையெல்லாம் அந்நூலகத்தே யறியற்பாலனவாம். சீவான்மா அணுவாயிருக்குமென்பது இக்காண்டத்துப் கரு - ன் உரைக்கட் சுருதி முதலியன கொண்டும், ஏனை யேதுக்கள் கொண்டுஞ் சாதித்துள்ளோம். இச் சாதிப்பிற்குச் "சருவ சரீரோபாதியின்றி ஆன்ம சைதன்னியப் பிரமமாய் அவித்தியோபாதிக் குட்பட்டதாய்த் துவம்பதார்த்தப்பொருளாயுள்ள பிரத்தியகான்மா" என்னும்பொரு டோன்றும்படி—

(ஸவ௱ஶரீரோபாயிவிநிமுக்தம் - - - -
ஆத்மசைதந்யம் ப்ரஹ்மதவபாஸதே
தவித்யோபாதிகம் தவம்பதார்த்தஸ்ஸப்ரத்யகாத்மா ।)

" ஸர்வசரீரோபாதிவிநிர்முக்தம் - - - -
ஆத்மசைதந்யம்ப்ரஹ்மயதவபாஸதே
ததவித்யோபாதிகம் தவம்பதார்த்தஸ்ஸப்ரத்யகாத்மா ।"

என்று யஜுர்வேத ஸர்வஸாரோபநிஷத்தும், "உடம்பு காரணரூபத்துவத்தை யெய்தி, அதற்குக் காரணம் (= ஆதாரம்) ஆயுள்ள பிரத்தியகான்மாவாகிய கூடத்தன்கண் இலயிக்கின்றது" என்னும் பொருடோன்றும்படி—

(காரணரூபத்வமாஸாத்ய தத்காரணம்
கூடஸ்தே ப்ரத்யகாத்மநி விலீயதே)

" காரணரூபத்வமாஸாத்யதத்காரணம்
கூடஸ்தேப்ரத்யகாத்மநிவிலீயதே "

என்று பைங்கலோபநிஷத்தின் ௩ - ஆம் அத்தியாயமும், "இதயத்தே தீபம்போன் மிளிர்ந்துகொண்டிருக்கிற ஆன்மாவின் கிரணங்கள் அனந்தம்" என்னும்பொருடோன்றும்படி—

(அநந்தா ரஶ்மயஸ்தஸ்ய தீபவத்யः ஸ்தி தோ ஹ்ருதி ।) "அநந்தாரச்மயஸ்தஸ்யதீபவத்யஃ ஸ்திதோ ஹ்ருதி ।" என்று மைத்ராயண்

யுபநிஷத்தின் ௬ - ஆம் பிரபாடகமும் மொழிதரு மொழிகண் முரணுமோ? எனின்,— முரணு; என்னை? கேவலநிலையிற் சருவசரீரோபாதியில்லாத அந்தப் பிரத்தியகான்மாவாகிய கூடத்தன் அவித்தியோபாதிக் குட்பட்டவனெனப்பட்டமையின் அவ னணுவெனப் படுவனென்பதும், அவன் விடுதலைப்படுஞான்று காரணதேகம் அவன் மாட்டு வியாப்பியமாய்ச் செயலற்றுக் கிடந்துவிடுமென்பதும், அவ்வாறு கிடக்குமுன்னர் அவ னணுவாயிருப்பனென்பதும், அவன தொளி வடிவை தீபத்தைப்போன் மிளிர்ந்துகொண் டிருப்பதெனக் குறிக்கப்படுவதாயிற் றென்பதும், அங்ஙனம் இடைமுதலிய நாடிகளை கிரணங்களனந்தமெனப்பட்டனவென்பதும் பெறப்படுதலின். இந் நிச்சயம்— போந்த ஸர்வஸாரோபநிஷத்திற்றுனே—

([illegible]
[illegible]
[illegible] ॥)

"ப்ரஹ்மாதிபிபீலிகாந்த ஸர்வப்ராணிபுத்திஷ்
வவிசிஷ்டதயோபலப்யமாநஸ் ஸர்வப்ராணிபுத்தி
ஸாக்ஷ்யதிஷ்டாநாத்மாஸ்திபாஸதேச ஸகூடஸ்தஃ।"

என வருவசனம் "பிரமாமுதல் எறும்பீறுய்க்கிடந்த எல்லாப் பிராணிகளின் புத்திகளில் அவிசிஷ்டமாய் (= உயர்வுதாழ்வின்றி) க் காணப்படுகின்றவனும் எல்லாப் பிராணி புத்தி சாக்ஷிகட் கிருப்பிட ஆன்மாவாயிருந்துகொண்டு விளங்குவோனெவனே அவனே கூடத்தன்" எனும்பொருளைப் பயக்குமாற்றானும் வலியுறும். என்னை? "நுண்ணுடம்பினையுடைய எறும்பின்கண்ணும் அக்கூடத்த னிருக்கின்றனன்; எல்லாவுயிர்கண்மாட்டும் அவன் ஓரளவினனுப்க் காணப் படுகின்றனன்" எனும்பொருள் பெறப்படுதலின். இக் கூடத்தனது வடிவு—

([illegible]
[illegible]
[illegible] ॥

த்யாத்வாமத்யஸ்தமாத்மாநம் கலசாந்தரதீபவத்।
அங்குஷ்டமாத்ரமாத்மாந மதூமஜ்யோதிரூபகம்।
ப்ரகாசயந்தமந்தஸ்தம் த்யாயேத்கூடஸ்தமவ்யயம் ॥)

"கலசத்திலுள்ள தீபம்போலத் தேகமத்தியிலிருக்கின்ற ஆன்மாவைத் தியானித்தல்வேண்டும்: அங்குட்ட மாத்திரனாய் (= பெருவிர லளவினனாய்), புகையில்லாத வொளிவடிவினனாய், உட்புலத்திருந்து விளக்கம்புரிபவனாய், நாசமிலியாயிருக்கின்ற ஆன்மாவாய கூடத்தனைத் தியானித்தல் வேண்டும்" என்று பைங்கலோபநிஷத்தின் ௩ - ஆம் அத்தியாய முறைக்குமுறைகள் அங்குட்ட வளவையெனக் காட்டுவவாயின. அவனதொளிவடிவு தீபம்போறலின் அவ்வளவை கூறப்பட்டதென்ப நியைபு. இந்த (நிகம) நிச்சயமேபிடித்து ஆசிரியர்—

"நீடத்து வஞ்சொன் னிகமமங் குட்டவொளி
கூடத்த னென்றே குயிலும் பராஞ்சோதீ.

அந்தவொளி தான்மலத்தி னார்ப்புண் டிருத்தலினாற்
பந்தவுயி ராமே பரமா பராஞ்சோதீ.

அவ்வுயிரி னுக்குயிரா யார்ப்பி லகண்டமதாய்
எவ்வுயிரு மாணீ யெனைக்கொள் பராஞ்சோதீ."

என்று காசியாத்திரையி லுரைத்தவாறு மோர்க. இங்ஙனமே கூடத்தனைத் தியானித்தல்வேண்டுமென்று சுருதி சொன்னமையானும், தைத்திரீயாருணசாகை நாராயணம்—

(𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌂 𑌚 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌈𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌪𑍍𑌰𑍀𑌣𑌾𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑌭𑍁𑌕𑍍 ॥
அங்குஷ்டமாத்ர: புருஷோங்குஷ்டஞ்சஸமாச்ரித: ।
ஈசஸ்ஸர்வஸ்யஜகத: ப்ரபு:ப்ரீணாதிவிச்வபுக் ॥ )

"அங்குட்ட வளவினனாயபுருடன் அங்குட்டத்தினையும் ஆச்சிரயித்தனன்: ஈசனும் அனைத்துலகுக்கும் பிரபுவும் விசுவத்தினைக் கவளீகரிப்பவனுமாயுள்ள இவன் பிரியமுறுகின்றனன்" என்றோதுகின்றமையானும் அவ்வங்குட்டபுருடன் சிவபிரானெனுமொரு நிச்சயமுங் கோடலொண்ணாதுகொ லெனின்,— சீவான்மா சிவபரம்பொருட்கொரு சிறந்த மூர்த்தமாயிருத்தலின், அம்மூர்த்தமும் அங்குட்ட வளவிற்றாய சோதிமய சுயம்புலிங்கமாயிருத்தலின் அதனை, சிவனென்னு நிச்சயங்கோடலுந் தியானித்துநிற்றலுங் கூடும்; இக்கிரமம் வேதசம்மதமேயாமென்க. ஆகலினன்றே பகிர்முக சிவாலயங்களின் மத்தியப்பிரதேசங்கடோறும் அவ்விலிங்காகாரங்கள் பிரதிட்டிக்கப்பட் டுள. "சிவாயநம: । சிவலிங்காயநம: ।" என்றோதுகின்ற அந்த ஆருணசாகை நாராயணந்தானே "ஆத்மாயநம: । ஆத்ம

லிங்காயநம:।" என்றோதுமாற்றானும், திருமந்திரம் "தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்" என்றுரைக்குமாற்றானும் மேலைச்செய்தி யுறுதியுறுகின்றது. அத் திருமந்திரத்தே "சீவ னெனச் சிவ னென்னவே றில்லை— சீவ னார்சிவ னாரை யறிகிலர்" எனவரு மாற்றங்களும் அதுபற்றியே யெழுந்துள்ளன. சுருதி அங்குட்ட மென்றது கூடத்தனாகிய சீவனையே. அவ்வாவின் மூர்த்தங்கொண்டு ளோன் பரமனாகலின் அவனை, அங்குட்டவளவுடைப் புருடனென்று மதுகூறிற்று.

(𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌂
𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍂𑌪𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌰𑍇 ।
𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌗𑌂
𑌪𑌞𑍍𑌚𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌂
𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑍇 ॥

புத்திகுஹாயாம்ஸர்வாங்கஸுந்தரம்
புருஷரூபமந்தர்லக்ஷ்யமித்யபரே ।
சீர்ஷாந்தர்க்கதமண்டலமத்யகம்
பஞ்சவக்த்ரமுமாஸஹாயம்நீலகண்டம்
ப்ரசாந்தமந்தர்லக்ஷ்யமிதிகேசித் ।
அங்குஷ்டமாத்ர:புருஷோந்தர்லக்ஷ்யமித்யேகே ॥ )

"புத்திகுகையின்கண்ணே சருவாங்க சுந்தரமுள்ள புருடரூபம் அந்தர்லட்சியமென அபரரும், சிரசினுள்ளிடத்து மண்டலமத்தியிற் பஞ்சமுகமும் நீலகண்டமும் மிக்க சாந்தத்தன்மையும் விளங்குமா றிருக்கின்ற உமாசகாயன் அந்தர்லட்சியமெனச் சிலரும், அங்குட்ட வளவினனாப புருடன் அந்தர்லட்சியமென வொருவரு முரைக்கின் றனர்" என்று (க - ஆம் பிராஹ்மணத்தில்) ஓதிய மண்டலப்ராஹ் மணோபநிஷத்தும் (உக்தவிகல்பம் ஸர்வமாத்மைவ=) "ஈங்குச் சொ ற்ற இலட்சிய விகற்பமெல்லாம் ஆன்மாவே" என்றங்ஙனம் முடிவுரை கூறி நின்றதூம் இம் முடிவுபற்றியேயாம். ஆன்மா= முற்றறிவும் முற்றுத்தொழிலுமுடைய பரசிவம்; பரிபூரணானந்தபோதத்து முற் படலத்து ௬-ன் உரை காண்க. 'ஆத்மலிங்காயநம:।' என்பது ஆன்ம லிங்கத்துக்கு நமற்காரமெனும்பொருள் பயத்தலின் அவ் விலிங் காராதனத்தையு முணர்த்துமாறே வேதம் அவ்வாறோதிற்றெனக. "கலசத்திலுள்ள தீபம்போலத் தேகமத்தியிலிருக்கின்ற ஆன்மா

வைத் தியானித்தல்வேண்டும்" என்று வடமொழிமறை கூறினமை யிற் "சோதியே சுடரே சூழொளி விளக்கே" என்று திருவாதவூரடிக ளது தென்மொழிமறையுங் கூறுவதாயிற்று. இதன்கட் 'சூழொளி விளக்கு' எனப்பட்டதுதான் அந்தத் தீபம். யாண்டுஞ் சோதிமய சைதன்னியமா யிருக்கின்ற சொரூபமே 'சோதி' எனவும், சூரியன் சந்திரன் அக்கினியாகிய சிவமூர்த்தம் மூன்றுஞ் சுடரெனப்படுத லின் அவைகளே 'சுடர்' எனவுஞ் சொல்லப்பட்டனவென்க. சுடர் விவரம் "திங்கள் வெய்யோன் அக்கினி யென்றிவை— மூன்றுஞ் சுடரென மொழிகுவர் புலவர்." என்னும் பிங்கலநிகண்டுச் சூத்திரத் தானுமறிக. இவ் வுண்மைப்பொருள் புலங்கொள வுணரமாட்டாதார் தத்தமக் கேற்றவாறெல்லாஞ் சாற்றுவர்; அவை கொள்ளப்படுவன வல்ல.

(യദിയോന്യാഃപ്രമുച്യേയം പ്രപദ്യേ പരമേശ്വരം ।
ഭർഗ്ഗം പശുപതിം രുദ്രം മഹാദേവം ജഗദ്ഗുരും ॥

யதியோந்யா:ப்ரமுச்யேயம் ப்ரபத்யேபரமேச்வரம் ।
பர்க்கம்பசுபதிம்ருத்ரம் மஹாதேவம்ஜகத்குரும் ||)

"யோனியைவிட்டு வெளிவருவேனாயிற் பரமேசுவரனும், பர்க் கனும், பசுபதியும், உருத்திரனும், சகற்குருவுமான மகாதேவனைச் சரணமாகவடைவேன்" என்று சீவான்மா நிச்சயித்தது எனக் கர்ப்போபநிஷதங் கழறு மாற்றங்களில், கருப்பத்திலிருக்குஞ் சிசுவுக் கும் "மகாதேவனைச் சரணமாகவடைவல்" என்னு முணர்ச்சியுண் டாதல் பெறப்படுதலின் ஈண்டது விடத்தக்கதன்றேயென்பது கருதி "மாதேவ" என விளிக்குமா றறிவுறுத்தா ரறிஞரென்க. நடேசன் உயிர்க்குயிராயிருத்தலின் அவனைக் கிருபாகரா! மாதேவ! குகேச! என அண்மை விளியிலும், அவ்வாறிருந்து மறிவரும் பொருளாயிருத்தலின் மன்ன! வானவனே! பராபரனே! தன்னே ரிலியே! அடியார் நலனே! எனச் சேய்மை விளியிலும் வைத் துத் துதித்துத் தொழுவாயாகவென்று சீடற்குரைத்தன ராசிரிய ரென்க. பராபரன் என்பது பராசத்தியின்றலைவன்; அர்த்தரூப வாக்குக்குத் தலைவன்; பிரணவமாத்திரைகளிற் கரு - ஆவதாக வுயர்ந்துள்ள 'பரா' என்பதற்கும் மேலானவன்; தன்னுண்மை யால் உலகிற்கு அன்னியமாகவும் வியாபகத்தன்மையா லதற்கு அனன்னியமாகவு மிருப்போன் எனும்பொருள்களைப் பயக்குமொரு வடமொழிப் பெயர்.

'உண்டு' என்பது பிண்டமும் அண்டமுமென்பவற்றோடு தனித்தனி சென்றியையும். பெரியஅண்டம் 'இறையண்டம்' எனப்பட்டது. இறை= பெருமை; பிங்கலநிகண்டு காண்க. இராசியம் - இரகசியமென்பதன் விகாரம். இராசியத்தை என இரண்டனுருபு விரிக்க. அடி என்றது திருவருளை; உரியநியாயம் பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்து ககசு-ன் உரையிலோர்க. என்று= என்றுசொல்லி; சொலவெலச்சம. தொழாய் - உடன்பாட்டு ஏவலொருமை முற்று. (ரு0)

பொன்னம்பலத்தைப புகலாதலும், விழையா
ஏனையவு மின்னனவா மென்பது.

கலிவிருத்தம்.

இச்சவை யைக்குறி யாநூ லிழைநூல்
மச்சுறு தண்டா மரைநூன் மயிர்நூல்
நச்சுளர் நச்சி டுலண்டா டிடுநூல்
பச்சிலை வாழைப் பலநூ லெனவாம்.

இந்தச் சபையைக் குறிப்பாகவெடுத்துச் சொல்லாத நூலானது இழைக்கப்பட்ட பருத்திநூல், அழகிய தாமரைநூல், கம்பளிமயிர்நூல், ஆடைகளி லாசையுள்ளோரா விரும்புங் கோற்புழுவாலிழைக்கப்பட்ட பட்டுநூல், பசுமை நிறமுள்ள இலைகளிலும் வாழைக்கிழங்கிலுமுள்ள நூல்கள் எனவாகும்.

"இச்சவையைக் குறியாநூல்" எனவே குறிக்குநூல்களை ("மரத்தின்— கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்— மனக்கோட்டந் தீர்க்கு நூன் மாண்பு" என்றபடி) நூல்களென்பதூஉம் பெறுதும். அந் நூல்கள் ரு-ன் உரையகத்தே காட்டப்பட்டவாறு நான்கு வேதங்களுமாயிருத்தலின் அங்ஙனம் ஆகமமுங் கூறுமென்பது—

(ஹ்ருத்ஸரோருஹமத்⁴யே ச ஸம்ஸ்தி²தம் ஸர்வகாரணம் ।
ஆத்மப்ரஸாத³மேவோக்தம் ஜீவப்ரஸாத³ உச்யதே ॥)

" ஹ்ருத்ஸரோருஹமத்யேச ஸம்ஸ்திதம்ஸர்வகாரணம் ।
ஆத்மப்ராஸாதமேவோக்தம் ஜீவப்ராஸாதஉச்யதே ||"

என்னும் வாதுளோத்தர சுத்தாக்ய மந்த்ரபேதபடலச் சுலோகத்தி னறியக்கிடக்கின்றது. இன்னும் இது— "குகையின்கட் பிரவேசித்தவை யிரண்டான்மாக்களே; அங்ஙனங் காணப்படலான்" எனவரு பிரஹ்மஸூத்ரத்தினும், தமிழ்மறையினுள்—

"'புந்தியாய் புண்டரிகத் துள்ளாய் போற்றி'

'கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகி நின்று தேடினே னாடிக் கண்டேன்
உள்குவா ருள்கிற் றெல்லா முடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட் டேனே.'"

எனவரு திருநாவுக்கரசுகளின் றிருவாக்கினும்,

"'மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன் மாமலர் மேயசோதி'

'உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தா
ருணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
யெனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே'

'இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை'"

எனவரு மாணிக்கவாசகனர் திருவாக்கினும்,

"'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்'

'முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்'"

எனவரு திருமூலநாயனர் திருவாக்கினும், பாயிரத்து ச - ற் "சுருதிமுடி மோனஞ்சொல்" என்றற்றொடக்கத்ததாய்க் காட்டப் பட்ட திருப்புகழிற்றானே

"துரியநிலை யேகண்ட முத்தரித யாகமல
மதனில்விளை யாநின்ற வற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபதம்"

எனவரு அருணகிரிநாதர் திருவாக்கினும்,

"மண்முத லைமலர் வித்தை கலாரூபம்
எண்ணிய வீசர் சதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணும்
நிலையதிலா மச்சிவன்று னோர்."

எனத் தமிழ்ச் சித்தாந்தநூல் பதினான்கனுள்ளுந் தலையாய சிவ ஞானபோதத்தில் வரு வெண்பாவினுங் கூறப்பட்டமையின் வைதிக சைவநூல்கட்கெல்லாம் இவ்வித்தை வுடம்பாடேயென்று கூறுதல் சால்புடைத்தே. ஈங்குக் காட்டப்பட்ட நூல்களேயன்றி வேறு நூல்களினும் இவ்வித்தை கூறப்பட்டிருப்பின் அவைகளும் அந்த

வைதிகசைவமுடிபி னுளவேயாமென்க. பிரஹ்மஸூத்ரத் தமிழுக்குரிய வடமொழி மேலைச் செய்யுளுரைக்கண் வந்துளது. வெண்பாவின்பொருள் :— "அவ்விதயகமலத்தினை தியல்பை யறியப்புகிற் பிருதிவியாதி ஆன்மதத்துவம் உச - ம் நாளம் (= தண்டு) ஆம் : வித்தியாதத்துவம் எ - ஞ் சுத்தவித்தையும் எட்டிதழ் மலராம் : ஈசம் சாதாக்கியமெனுந் தத்துவம் உ - ங் கலாரூபமாம் : சத்திதத்துவங் கலையுருவாம் : சிவதத்துவம் அதன்கண்ணுமாகலின் அவ்வியல்பினதாகிய இதயகமலத்தின் ௩௬ - தத்துவமும் பீடமாகவுடைய அச் சிவனதருட்சத்தி நிலைபெறும் : அதனையடைவாயாக" என வுரைக்கப்படும்.

மஞ்சு எனற்பாலது 'மச்சு' என எதுகை நோக்கி வலித்தவாறு. மஞ்சு= அழகு. நச்சுளர்= ஆசையுடையார் ; நச்சு = ஆசை. உலண்டாடிநூல்= சோற்புழுவா லிழைக்கப்பட்ட பட்டுநூல். உலண்டு= சோற்புழு. ஆடல்= செய்தல் ; "புரிதலு மாடலுஞ் செய்த லாகும்" என்பது பிங்கலநிகண்டு ; "அயிருருப் புற்ற ஆடமை விசயம்" என்றார் (மதுரைக் காஞ்சியில்) மாங்குடி மருதனாரும். 'நூல்' என்பதைப் 'பச்சிலை' என்பதனோடுங் கூட்டுக. பச்சிலைநூல்= தண்டுக்கீரை, அரம்பையிலை முதலிய பாசடைகளிலுள்ள நூல்கள். பலம்= கிழங்கு ; லகாரவேதுகை காண்க. (௩௧)

பொன்னவை யைப்புக ழாவாய் புழுவே
துன்னுடல் சூர்விடு வாய்செய் திடாவாய்
இந்நில மீதிழி வாய்வா யினராற்
பன்னுபல் வாய்பழி வாய்வா யெனவாம்.

பொற்சபையைப் புகழாத வாயானது புழுக்கள் செறியுடம்பு துன்ப மென்பவற்றை யொழித்துக்கொள்ளாத வாய், (இன்னும்) இந்நிலவுலகின்மிசை யிழிவாக வாக்கு வலியினரால் சொல்லப்படும் பல்வாய் (=பலவிடங்கள்), பழிச்சொல் பகரும்வாய் எனவாகும்.

அவை = சபை. ஏ - அசை. சூர் = துன்பம். வாயினர் = வாக்கு வல்லார். பழிவாய் = பழிசசொல், பரிவாதம் (௩௨)

நிருத்தனை யுள்கிந னீர்சொரி யாக்கண்
குருட்டழி கண்ணிழி கண்கோ மடியார்
கருக்கணி டுக்கண் ணுகிர்க்கண் மயிர்க்கண்
பெருக்குநுங் கின்கண் பீலியின் கண்ணே.

நடேசனை நினைந்து உருகுந்தன்மையால் நல்ல கண்ணீரைச் சொரியாத கண் குருட்டுத்தன்மையுடைய அழிகண், இழிகண், பெருத்த பசுவின் சுரைக்கண்ணுள்ள கண், இடுக்கண், நகக்கண், மயிர்க்கண், பெருக்கும் பெற்றியுடைய நுங்குக்கண், மயிற்பீலியி லுள்ள கண் எனப்படும்.

பந்த தசையிற் றந்தை தாயர் மனைவி மக்கண் முதலினோரை நினைந்துருகி யுகுக்கப்படுங் கண்ணீர் நறியபயன் பயவாதொழிதல் போல முத்தி தசையில் இறைவனருளை நினைந்துருகி யுகுக்கப்படுங் கண்ணீரு நறியபயன் பயவாதொழிதலின்றாகலின் அது "நன்னீர்" எனப்பட்டது. நனீர் - தொகுத்தல். இந் நிச்சயம் திருஞானசம் பந்தனாரது தமிழ்மறைக்கண்ணும் "காத லாகிக் கசிந்துகண் ணீர் மல்கி— ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்" என்றும், "வண ங்கி நைபவர்க் கல்லால் வந்துகை கூடுவதன்றால் - - - - நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே" என்றுங் கூறப்பட்டிருத்தல் காண்க. கண் ஞானேந்திரியங்களு ளொன்றேயாயினும் நீருகுக்கும் விட யத்தே யொரு கன்மேந்திரிய தாரகமாகவு மிருக்கின்றதென்பது கொளக்கிடக்கின்றது.

'கருங் கோமடியார்கண்' என வியையும். கருங்கண் எனப்படுவது 'கருக்கண்' என எதுகைநோக்கி வலித்தல்விகாரப்பட்டது. கருமை= பெருமை, வன்மை; "கருந்தொழிற் கலிமாக்கள்" என்றார் (பட்டினப் பாலையில்) கடியலூர் உருத்திரங்கண்ணனாரும். உகிர்க்கண்=நகக்கண். (௯௯)

தாண்டவ னைக்கரு தாதுள சிந்தை
மாண்டலின் மாடடை மந்தை யகந்தை
காண்டக மாவில் கறங்கு பிறந்தை
நீண்டுள நிந்தை யரந்தை யுடந்தை.

நடேசப்பெருமானை நினையாதுள்ள சிந்தையானது மாட்சிமை யில்லாத மாடுகள் அடையும் மந்தை, அகந்தை, காட்டு விலங்குகள் வசிக்குமிடம், சுழல்கின்றபிறப்பு, பெருத்தநிந்தை, துன்பவுடந்தை எனப்படும்.

தாண்டவேசனைக் கருதாதுள்ள சிந்தையானது அகங்கார சொரூபமாயிருக்குமாகலின் அதனை "அகந்தை" என்றார். அது பல்பிறவிகட்கும் ஏதுவாகலிற் "கறங்கு பிறந்தை" என்றார். அது

நிந்தைக்குரித்தா யிருத்தலின் "நிந்தை" என்றார் அது துன்பத் திற்குரித்தா யிருத்தலின் "அரந்தை உடந்தை" என்றார். உடந் தை=உரித்து; "உடந்தையுடனே நின்று" என்றார் (திருவுந்தியா ரில்) உய்யவந்ததேவரும் பிறந்தை=பிறப்பு.

௫௧ - ஆறு செய்யுண்முதல் இச் செய்யுள்காறுங் கூறப்பட்ட இழைநூன்முதலிய நூல்களும், பலவகைப்பட்ட வாய்களும், குருட்டுழிகண் முதலிய கண்களும், "மாடடைமந்தை" என்றதும இழித் துரைத்தற்கண் வந்தன இடுக்கண் துன்பமாதலின் அஃது அப் பொருட்டில் வந்ததாகும்.

மாண்டல்= மாட்சிமை; சூடாமணிநிகண்டு காணக் காண்டக மா இல்= காட்டுவிலங்குகள் வசிக்குமிடம் காண்டகம்=காடு, பிங்கலநிகண்டு, சே - திவாகர மென்பவற்றிலறிக சூடாமணிநிகண்டுழைக் கண்டகம் என வருகின்றது. (௫௪)

நடேசனைநீத்த நோன்பு முதலியன
பயன்படா வென்பது

அண்டமன் றுய வரும்பொதி யுள்ளும்
பிண்டமன் றுய பெரும்பொதி யுள்ளுங்
கண்டவர் துன்பு கடிந்துய வாடுஞ்
சண்டனை நீத்த தவங்களு முளவோ.

அண்ட தகராலயமாகிய அரிய சபையிலும், பிண்ட தகராலய மாகிய பெரிய சபையிலுந் தன்னைத் தரிசித்தோர் துக்கநிவாரத்தி யெய்தி ஆனந்தமேய்ப் றடைந்து பிழைக்குமவண்ணம் நிர்த்தனஞ் செய்யுஞ் சிவசூரியனைக் கைவிட்டுச்செய்யுந் தவங்களும் உள்ள னவோ.

௫௦ - ன் மொழிந்தவாறு பிண்டத்துழை அண்ட மடங்கி யிருத்தலிற் "பிண்டமன்றுய பெரும்பொதி" என்றார் சண்டன்= சூரியன்; "சண்ட னருக்கன் றபன ஞெகவன்" என்பது பிங்கலநிக ண்டு இங்கே சூரியமண்டல மத்தியிலுள்ள சிவசூரியன் இது—

(க) (யஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ
த்ருஶ்யதே ஹிரண்ய ஶ்மஶ்ரு ஹிரண்யகேஶ
ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: தஸ்ய யதா
கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ)

" யஏஷோந்தராதித்யே ஹிரண்மயஃ புருஷோ
த்ருச்யதேஹிரண்ய ச்மச்ருர்ஹிரண்யகேச
ஆப்ரணகாத்ஸர்வஏவ ஸுவர்ணஸ்தஸ்யயதா
கப்யாஸம்புண்டரீக மேவமக்ஷிணீ "

என்னுஞ் சாந்தோக்யோபநிஷத்தின் ௧ - ஆம் பிரபாடகத்தின் ௬ - ஆங் கண்டத்து வாக்கியங்களினும்,

(௨) (𑌨𑌮𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌬𑌾𑌹𑌵𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌾𑌯
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌰𑍂𑌪𑌾𑌯 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌪𑌤𑌯𑍇𑌽𑌮𑍍𑌬𑌿𑌕𑌾𑌪𑌤𑌯
𑌉𑌮𑌾𑌪𑌤𑌯𑍇 𑌪𑌶𑍁𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।)

" நமோஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய
ஹிரண்யரூபாய ஹிரண்யபதயேம்பிகாபதய
உமாபதயே பசுபதயே நமோ நமஃ । "

என்னுந் தைத்திரீயாருணசாகை நாராயண வாக்கியங்களினும்,

(௩) (𑌯 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌨 𑌵𑍇𑌦
𑌯𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌶𑍍𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿
𑌏𑌷 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃 ।)

" யஆதித்யேதிஷ்டந்நாதித்யாதந்தரோயமாதித்யோநவேத
யஸ்யாதித்யச்சரீரம்யஆதித்யமந்தரோயமயதி
ஏஷதஆத்மாந்தர்யாம்யம்ருதஃ । "

என்னும் பிருஹதாரண்யகோபநிஷத்தின் ௫ - ஆம் அத்தியாயத்து ௭ - ஆம் பிராஹ்மண வாக்கியங்களினும் பெறலாம். தமிழ்:— (௧) " பொற்றாடியும், பொற்கேசமும், நகமாதியாக முழுதுமுள்ள பொன்வண்ணமும், (கம் என்று நீரைக்கிரகிக்குந் தன்மையாற் கபியெனப்படுஞ்) சூரியனால் அலர்த்தப்பட்ட புண்டரீக புட்பம்போன்ற இரு விழிகளுமுடையோன் இச்சூரியன் மத்தியிலுள்ள இரண்மய புருடன் " எனவும், (௨) " பொற்றோளற்குப் பொன்வண்ணற்குப் பொன்வடிவற்குப் பொன்னுக்கிறைவற்கு அம்பிகாபதிக்கு உமாபதிக்குப் பசுபதிக்கு நமற்காரம், நமற்காரம் " எனவும், (௩) " எவன் சூரியற்கு வேறானவனுய்ச் சூரியற்குள்ளேயுள்ளான் ; எவனைச்சூரியனறிந்திலனோ, எவற்குச் சூரியன் சரீரமோ, எவன் சூரியற்குள்ளேயிருந்துகொண்டு அவனை யியக்குகின்றனனோ, அவனே ஆன்மாவின் அந்தரியாமி, அமிருதன் " எனவுமாம். அமிருதன் சிவனெனற்கும், இருதயாகாசத்துள்ளானே பொன்வண்ணனெனற்கு முரிய பிரமா

ணம் ௬ - ன் உரைக்கட் காட்டியாயிற்று. இங்ஙனம் வடமொழி மறை கூறியாங்குத் தென்மொழிமறையுங் கூறுமென்பது—

"பொன்னேர்தருமேனியனேபுரியும்
மின்னேர்சடையாய்விரைகாவிரியின்
நன்னீர்வயனூகேச்சரநகரின்
மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே."

எனத் திருஞானசம்பந்தனாரது திருவாக்கினும், "பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து—மின்னார் செஞ்சடை மேன் மிளிர் கொன்றை யணிந்தவனே" எனவரு சுந்தரமூர்த்திகளது திருவாக்கினும், "மின்னொளிகொண்ட பொன்னொளி திகழ" எனவரு மாணிக்கவாசகனாரது திருவாக்கினு மறியப்படும். இன்னன பல. பொன்னிறச்சடை யுண்மையின், பொன்னிறத்தாடியு முண்டென்க. அந் நிறஞ் சோதிசொரூபத்தினையே விளக்கிநிற்குமென்க. சிவனது நெற்றிக்கண் மூடப்பட்டும், மற்றிருகண்களுந் தாமரை மலர்போன் மலர்ந்து முள்ளனவாகலின் 'அலர்த்தப்பட்ட புண்டரீகபுட்பம் போன்ற இருவிழிகளுமுடையோன்' என்று சுருதி கூறுவதாயிற்று. சிவனுடைய அட்டமூர்த்தங்களுட் சூரியனு மொன்றாகலிற் சூரியனுட் சிவனிருக்கின்றன னென்பது வாய்ப்புடைத்தே. (ஸூர்ய்ஸ்த்ர்யம்பக:) "பர்க்கஸ்த்ர்யம்பக:" என்று நிகண்டு - அமரஸிம்ஹ மியம்புமாற்றாற் சிவநாமமாகிய பர்க்கசத்தமானது விளக்கின்பெயர் அதன்றண்டிற்கு மாயவாறு சூரியனுக்குமாயிற்றெனல் கொள்ளக்கிடத்தலின் அவ்வாய்ப்புடைமை வலியுறுகின்றது. இன்னுமிது—

(ஸர்காவ்யாஸாஹிஸ்ர்கிரஸ்ய ஹீதி ஸர்காஸஜய தீதி
வைஷஸர்கா இதி ருத்ரோப்ரஹ்மவாதிந:

பர்காக்யோபாபிர்கதிரஸ்யஹீதிபர்கோ பர்ஜயதீதி
வைஷபர்கா இதி ருத்ரோப்ரஹ்மவாதிந:)

"கிரணங்களினாற் பிரவிருத்தியுள்ளோ னெவனோ அன்னோன் பர்க்கன் : (பர்ஜயதி=) வறுக்கும் (=சங்கரிக்கும்) தொழிலாற் பர்க்கன் உருத்திரனென்று பிரமவாதிகள் சொல்லுவர்" என்று மைத்ராயண்யுபநிஷதம் ௬ - ம் பிரபாடகத் தோதுமாற்றான் மதுகையுறுகின்றது. ௩0 - ன் உரைக்கட் பிரமாணிக்கப்பட்ட கர்ப்போபநிஷத் வசனத்துஞ் சிவனே பர்க்கனெனவிருக்கின்றனன். ஆகலினன்றே—

" அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
அருக்க னாவா னரனுரு வல்லனோ
இருக்கு நான்மறை யீசனை யேதொழுங்
கருத்தி னைநினை யார்கன் மனவரே."

எனத் திருநாவுக்கரசுகளது தென்மொழிமறையுந் தெரிப்ப தாயிற்று.

(பஇதிபாஸயதீமாங்லோகாந் ரஇதிரம்ஜயதீமாநிபூதாநி கஇதிகச்சந்த்யஸ்மிந்நாகச்சந்த்யஸ்மாதிமாః ப்ரஜாஸ்தஸ்மாத் பரகத்வாத்பர்க்கః)

" பஇதிபாஸயதீமாங்லோகாந் ரஇதிரம்ஜயதீமாநிபூதாநி கஇதிகச்சந்த்யஸ்மிந்நாகச்சந்த்யஸ்மாதிமாః ப்ரஜாஸ்தஸ்மாத் பரகத்வாத்பர்க்கః"

என அந்தப் பர்க்கசத்தம் மேலே கூ - ஆம் பிரபாடகத்திற்றனே அக்கரப்பிரிவு படுத்தியும் அருத்தஞ்செய்யப்பட் டுளது. தமிழ்:— "(ப) ப= உலகங்களை விளக்கிநிற்போன்: (ர) ர= எல்லாவுயிர்கட்கும் பிரீதி விளைப்போன்: (க) க= எல்லாவுயிர்களும் (சங்காரகாலத்தில்) இவனை யடைகின்றன: பின்னர் (சிருட்டிகாலத்தில்) வெளிப்படுகின்றன: ஆதலிற் பர்க்கனெனப் படுகின்றனன்" எனவாம். இவ் வேதுக்களால் (ஓம்தத்ஸவிதுர்வரேண்யம் । பர்கோதேவஸ்யதீமஹி । தியோயோநப்ரசோதயாத் ।) " ஓம்தத்ஸவிதுர்வரேண்யம் । பர்க்கோதேவஸ்யதீமஹி । தியோயோநப்ரசோ தயாத் ।" எனத் தைத்திரீயாருணசாகை நாராயணத்தில் வெளிப்படுகின்ற காயத்திரி மந்திரப்பொருளுஞ் சிவனேயாயின னென்க. இங்ஙனங் கரியமேனியுடைய விட்டுணுமூர்த்தியை வைணவர் பொருட்படுத்த நுதலல் வாய்ப்புடைத்தன்று; என்னை? பொற்றிருமேனி, பொற்றுடி, பொற்கேசமெனச் சுருதிசொற்ற அடையாளங்களும், அம்மூர்த்திக்கு அபகரிடஞ் சாதிப்பனவாய் முன்னுரைகளிற்போந்தனவாயுள்ள சுருதிகளும் மறுக்குமாகலின்.

(யாஜ்ஞவல்க்யாஹஸவேஹோ்ஸோதேவநதிரதாத்யோகம் ஜமாதஸோதித்யம் நகாஹோஸ்மவந்தாதித்யாதுதக உதேஷ்வதிஷ்டிதி ஸவேஹாவாவநாராயணः ।

யாஜ்ஞவல்க்யோஹவைமஹாமுநி ராதித்யலோகம்
ஜகாமதமாதித்யம் நத்வாபோபகவந்நாதித்யாத்மதத்வ
மநுப்ரூஹீதி ஸஹோவாச நாராயண: । )

"யாஞ்ஞவற்கிய மகாமுனிவர் ஆதித்தியலோகம் புக்கார்: அவ்வாதித்தியனை அவர் வணங்கிப் பகவனே! ஆதித்தியனே! ஆன்மதத்துவத்தைக் கூறுதியென; (சூரிய) நாராயணன் கூறுகின்றனன்" என மண்டலப்ராஹ்மணோபநிஷத்தில் வரூஉம் நாராயணசத்த வாச்சியன் ஆதித்திய மண்டலாபிமானியாகிய சூரியனேயன்றி, வைகுண்டவாச நாராயணனல்லனென்பது வெளிப்படை. நரர்தொழுதி நாரம்; அதன்கண்ணிருக்குங் காரணங்கருதி அச்சூரியனை நாராயணனெனவுஞ் சுருதி சொல்லிற்றெனச் சொல்லலாம். (ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ:। அயநம் தஸ்ய தா யஸ்மாத் தேந நாராயண: ஸ்ம்ருத: - ஆபோநாரா இதிப்ரோக்தா ஆபோவை நரஸூநவ:। அயநந்தஸ்யதாயஸ்மாத் தேநோநாராயண ஸ்ம்ருத:) "அப்புக்கள் நரன் (உருத்திரன்) இடத்தினின்று தோன்றினமையின் நாரமெனப்படும்: பிறப்பிடம் அஃதாகலின் அவன் நாராயணனெனப்படுகின்றனன்" என மநுஸ்ம்ருதி கூறுமாறு இந்நாராயணநாமம் யோகம் (=காரணம்) எனப்படுமேயன்றி ரூடி (=இடுகுறி) எனப்படாது. நாராயணநாமம் ரூடியெனவே வாதிப்போர்க்கு அஃதொன்றேயன்றெனப் புத்திகற்பிக்க இம் மநுஸ்ம்ருதிச்சுலோக முள்ளது. நரர்தொழுதியினுஞ் சூரியற்கிருக்கை யுண்டென்பது ௩0 - ன் உரைக்கட் காட்டப்பட்ட காட்டுக்களுள்ளு முணரலாம். இன்னு மிதுபற்றிய நியாயங்களெல்லாஞ் சைவசமயசரபத்திற் பரக்கக் கண்டுகொளலாம். இங்ஙனஞ் சூரியாந்தரியாமி சிவனென்பது சித்தித்தமையிற் சூரிய வழிபாடுஞ் சிவமூர்த்த வழிபாடேயாம். அங்ஙனஞ் சிவவுருவெனக்கொண் டுபாசிப்பவரே விசேடபலனெய்துவரென்க. சூரியமண்டலாபிமான சூரியனாகிய தேவனு மறியொணுத் தேவனை அந்தச் சிவனென்பது— மேலே ௩ - ஆம் எண்ணிற் பிரமாணிக்கப்பட்ட பிருஹதாரண்யகோபநிஷத வாக்கியங்களில் "எவனைச் சூரியனறிந்திலனோ" என்பதே யுணர்த்தும். ஸ்காந்தமஹாபுராண யுத்தகாண்டத்து உ௫ - ஆம் அத்தியாயத்தில் இச்சூரியன், முருகப்பெருமானுக்குத் தாளக்குடை பிடிப்பவனாகவும் படிக்கப்பட்டனன்.

அரும்பொதி = அருமையாகிய பொதி; பண்புத்தொகை. சண்டன் = உக்கிரகுணமுடையோன். "தவங்களு முளவோ" என்றது, சிவனை நாடிய

வழி நற்பலன் றரத்தக்க தவங்களெல்லாம் அஃதில்வழி இலவென எதிர்மறைப் பொருள் பயந்து நிற்பதாயிற்று. (ங௫)

கரிசறு நூற்பல கற்கினு மதுபோற்
றிரிபற வோது திடம்பெறி னுங்கார்
சொரியுறை போற்கவி சொல்லினும் வெந்நோய்
அரிகுக னைப்பர வாவிடி லவமே.

குற்றமற்ற பல நூல்களைத் திரிபின்றிக் கற்றாலும், கற்றவாறே பிறர்க்கோதுந் திடத்தைப் பெற்றாலும், காளமேகம் பொழிகின்ற மழையென அநாயாசமாகவும் விரைவாகவும் அபரிமிதமாகவும் நூதன கவிகளைக்கூறும் ஆற்றலெய்தினும் கொடிய சனன மரண ரோகத்தைச் சங்கரிக்குங் குகேசனைத் துதித்து வணங்காவிடின் மேற்கூறியவனைத்தும் (விழலுக்கிறைத்த முத்துலையென) வீணாகும்.

இம்பர்க் "கரிசறு நூற்பல" என்றது ௩க - ன் மொழியப்பட்ட கனக சபையைக் குறிப்பாக வெடுத்துக்கூறு நூல்களையே. அந்நூல்களைக் கற்றன்மாத்திரையே, பிறர்க்கோதன்மாத்திரையே, கற்றலு மோதலுமாய் நிற்றன்மாத்திரையே அவையற்றின்கட் குறிக்கப்பட்ட பயனெய்துவதின்றென்பதை யறிவுறுத்துவார் "குகனைப் பரவாவிடி லவமே" என்றார். இது, சிவஞானசித்தியார்— "பரஞானத்தால்" என்றற்றொடக்கத்துச் செய்யுளில் "வாச்சிய வாசகஞானம் வயிந்தவத்தின் கலக்கம்" என்றுரைத்தபடி சாத்திரபடன ஞானத்தைக் கண்டித்தவாறு. இதனை,

(𑌬𑌹𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌥𑌾𑌕𑌨𑍍𑌥𑌾 𑌰𑍋𑌮𑌨𑍍𑌥𑍇𑌨𑌵𑍃𑌥𑍈𑌵𑌕𑌿𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌮𑌾𑌰𑍁𑌤𑍇𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ॥)

"பஹுசாஸ்த்ரகதாகந்தா ரோமந்தேநவ்ருதைவகிம் ,
அந்வேஷ்டவ்யம்ப்ரயத்நேந மாருதேஜ்யோதிராந்தரம் ||"

என்னுஞ்சுருதி யாதரிப்பதாயுளது. முக்திகோபநிஷதச் சுலோகமாகிய விதன்றமிழ் :— "மாருதீ ! மிக்க சாத்திரகதையாகிய கந்தையைப் பெயர்த்தும் பெயர்த்தும் மெல்லுவதனால் (= மீட்டும் மீட்டும் படிப்பதனால்) யாதுபயன் ? உள்ளேயுள்ள சோதியை முயற்சியாற் றேடிக்கோடல் வேண்டும்" எனவாம். "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்— நற்றா டொழாஅ ரெனின்." எனத் திருவள்ளுவதேவர் கூறினதூஉம் இப்பொருளையே பயப்பதாயிற்று.

'கரிசறுநூற்பல கிரிபறக் கற்கினும் அதுபோலோது திடம்பெறி னும்' என வியைக்க. திடம் = உறுதி; (𑌦𑍃𑌢) த்ருடம் என்னும் வட சொல்லின் விகாரம். உறை = தலைப்பெய் மழை; பிங்கலநிகண்டு காண்க. அரி குகன் - வினைத்தொகை. அவம் = பயனின்மை; "அவமாய தேவ ரவ கதியி லழுந்தாமே" என்றார். ஸ்ரீமந் மணிவாசகப்பெருமானாரும். (கசு)

பூவலஞ் செய்யினும் பூவுத கங்கொண்
டாவலொ டர்ச்சனை செய்யினு மசபா
மாவல மந்திர மோதினு மன்றார்
தேவனை யினிதெண் ணுமை யசிவமே.

பூப்பிரதக்ஷிணஞ் செய்யினும், திவ்வியோதக புட்பங்களுடன் பத்திபுரசரமாகப் பற்பல தேவதார்ச்சனைகளைச் செய்யினும், மகாபல மந்திரமாகிய அஜபாகாயத்திரியை அப்பியசிக்கினுங் கனகசபையி லுள்ள மகாதேவனை நன்றாகத் தியானித்த விலதாயின் இப் பெருங் காரியங்களும் அமங்கலமாகவே முடியும்.

இதன்கட் கிளக்கப்பட்ட அசபாமந்திரமென்னும் 'அஜபாநாம காயத்ரீ' ஆனது ஸாமவேத யோகசூடாமண்யுபநிஷதம்—

(𑌅𑌜𑌪𑌾 𑌨𑌾𑌮 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌾 𑌸𑌦𑌾 ।)

"அஜபாநாமகாயத்ரீ யோகிநாம்மோக்ஷதாஸதா ।"

என வோதுழி யறியக்கிடக்கின்றது. அஃதினைத்தென்பது முத லிய விவரமும் ஆண்டே யுணரலாம். (கஎ)

தூயந னீரிடைத் தோயினு மங்ஙன்
ஆயபஃ றான மளிப்பினு மார்வம்
ஏயுயர் விரத மிழைப்பினு ஞானக்
காயம தைக்குறு காவிடில் வறிதே.

கங்கையாதி பரிசுத்தமாகிய திவ்விய நதிகளில் மூழ்கினும், அந்நதி தீரங்களிலே தங்கருத்தினுய கோதான முதலிய பலதானங் களை நல்கினும், ஆசைவழிப் பொருந்தும் மேம்பட்ட விரதங்களை யனுட்டிக்கினும் சிதாகாசமாகிய பரம்பொருளை யடையாவிடில், இத்தகைய காரியங்களும் பயனற்றனவேயாம்.

தானமெனப்படுவது தலைப்படு தானம், இடைப்படு தானம், கடைப்படுதானமெனப் பாகுபாடு செய்யப்படுதலின்; அவை—அறத்

தானீட்டிய பொருளை முக்குற்றமற்ற நற்றவத்தோரைக் கொள் கெனப்பணிந்து, குறையிரந்து, மனமகிழ்ந்து, அவர்வயிற் கொடுத் தலே தலைப்படுதானமெனவும் ; வறுமையான் இரப்போர்க்கும் உறுப் புக்குறை வுடையோர்க்குங் கொடுத்தலே இடைப்படுதானமெனவும்; அன்பு, புகழ், அச்சம், கைம்மாறு, பிறர்செய்தல்கண்டு செய்யுங் கடப்பாடு (=முறைமை), பிறிதுகாரணம் என்னு மிவைபற்றிக் கொடுத்தலே கடைப்படுதானமெனவும் விளக்கப்படுதலின் இச்செய் யுட்கட் போதருந் தானம் தலைப்படுதானமல்லாத ஏனையிரண்டுமே யென்பது புலப்படுத்துவான் " ஆய பஃறானம் " என்றார். என்னை ? ஞானாகாசமாகிய பரம்பொருளைக் குறுகி நில்லாதார்க்கு அத் தலைப் படுதானங் கருத்திற்பொருந்த விடனின்றாகலின். ஆயபஃறானமென் பது தங்கருத்தினைய பலவகைப்பட்ட தானங்களெனும் பொருளு டைத்து. தலைப்படுதானந் தொடக்கமாய மூன்றும் முறையே உத்த மம், மத்திமம், அதமமெனவும்படும். அதமமல்லாத ஏனையிரண்டற் கும் பலன் அறக்கடவுளே நல்கக் கடமைப்பட்டுளதாகலின் அவை கள், அதிரகசியமாகவே செயப்படல்வேண்டும். அன்றெனின் அவை களும் புகழ் இடம்பம் முதலிய பிறிதுகாரணம்பற்றி நிகழ்ந்த அதம தானமாய் விடும். ஆயினும் அவற்றிற்குப் பலனென்று மின்றோ வெனின்,—

(யதாகாரீயதாசாரீ ததாபவதி - யதாகாரீயதாசாரீ ததாபவதி)

" யாரெப்படிச் செய்கின்றனரோ, யாரெப்படி யாசரிக்கின்ற னரோ, அவரப்படியாகின்றனர் " எனும் பிருஹதாரண்யகோபநிஷத் தின் ரு - ஆம் அத்தியாய வாக்கியத்தின்படி எதுகருதி யெதுசெய் யப்பட்டதோ அது, செய்தோன் செவி கேட்டவழியுங் கண் கண்ட வழியு மனுபவித்தாயிற்றாகலின் அக் கடவுள்பால் இனிப்பெறவிருப்ப தொன்றுமின்றேயெனல் துணிபென்க. போந்த இரகசியத்தையே தருமரகசியமென்ப. இது—

(பரோக்ஷப்ரியாஇவஹிதேவாம் ப்ரத்யக்ஷத்விஷ꞉)

" பரோக்ஷப்ரியா இவஹிதேவாம் ப்ரத்யக்ஷத்விஷ꞉ "

என்னுஞ் சுருதிவசனத்தும் பெறப்படும். பிருஹதாரண்யகோப நிஷத்தின் ரு - ஆம் அத்தியாயத்து உ - ஆம் பிராஹ்மணத்திலுள்ள இதன்பொருள் :—" தேவர்கண் மறைத்து வழங்குதலிற் பிரியமுள் ளவர்கள் : வெளிப்படையாக வழங்குதலிற் பிரியமில்லாதவர்கள் "

எனவாம். இச்சுருதி வசனத்துள்ள "பரோக்ஷப்பிரியா இவஹி தேவாஃ" (=தேவர்கண் மறைத்து வழங்குதலிற் பிரியமுடையோர்) என்பது ஐதரேயாரண்யகத்தின் ச - ஆம் அத்தியாய ஈற்றிலும் வருகின்றது. இவ்விரகசியநெறி நில்லாதமாந்தர் ஈசனுளனெனவுங் கூறிக்கொண் டெவ்வறமிழைப்பினும் அன்னோர், அவ்வீசன்விடயத்தும், மறுமைப்பயன் விடயத்தும் ஐயப்பா டுடையோரும், அவநெறி நிற்போரும், தமக்குத் தாமே கேடிழைத் திருப்போருமேயாவர். இக்காலத்தில் இந்நீரவரே மிக்கிருக்கின்றனரென்பது— வழுவாக வேனும் பல்பிரகடன பத்திரிகையின்றித் தானம் விரதம் முதலிய வற்று ளொருசிறுநலம் புரிதலும் அவர்மாட் டிலதென்பதுகொடே யறியப்படும். அத் தருமரகசிய நெறிநிற்கும் புண்ணியரே அறக் கடவுளைத் தமக்குக் கடனிறுக்குங் கடவுளெனவாக்கும் ஆற்றலுடைய ராவர். அவர் பெருமையே பெருமை. அவ்விரகசியம் அகங்கார வொழிவின்பாற்படுதலின் அதற்குத் தேவர்கள் பிரியமுறலும், அதனைச் சுருதிகளெடுத்து மொழிதலும் ஏற்புடையனவென்பது முணர்க. நூலாசிரியரும் இது பேணினரென்பது—

"'என்னா யகவே லிறையே யுலகத் தெச்சித் தியுமில்லா
என்னா னயமின் றென்றே யகன்றா ரென்னைத தெரிந்தாரும்
ஒன்னார் புரைநா னுண்ணாப் பில்லா வுணவே யளிப்பாரும்
இந்நா னானுகுற் றனர்கா சென்கை யிடினுங் கொள்வேனே.'

'நல்ல பொன்மயி லூரு மென்னொரு நாத னேயினி வாதநூல்
வல்ல னென்று மதிக்கு மாறுரை மல்கு சங்கம் விரும்பிலேன்
இல்ல மேய சிறந்த மானவ ரென்பர் நேயமு நம்பிலேன்
அல்ல றீர்மட மால யங்க ளமைத்து வாழவு மெண்ணிலேன்.'

'எண்ணு வாரக நண்ணி யேவரு மெம்பி ரானின தின்பமாம்
விண்ணு லானினை வாயி ருந்து விரைந்து சுற்றொரு பம்பரம்
மண்ணு ளேயசை வற்று வீழ்வது மான நானயி லீசநின்
தண்ணு லாமடி வீழ வெண்ணிய சாத முன்னுள மறியுமே.'"

எனக் குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதியிலும்,

"வீணவாப் பாவி வெருக்கொள வெய்தருட்கே
வேணவா வுற்றேன் விமலா பரஞ்சோதீ."

எனக் காசியாத்திரையிலும் அவர் பாடியுள்ள பாக்களினறியப் படுகின்றது. 'உரைமல்கு சங்கம் விரும்பிலேன்' என்பது பேச்சு மலிந்த பிரசங்கத்தையும் விரும்பமாட்டேன் எனும்பொருளிற் பிர

யோகிக்கப்பட் டிருத்தலின் ஆசிரியர்—தாம் பிரசங்கித்து வருமொரு காரியமும் அமனஸ்க விரோத சமயசம்பந்தமான ஒருவித மோக வியாபாரமாமெனக் கருதி அதினின்றும் விலகுவோராயினர் : அது பற்றியே சபைத்தாபனமொன்றும் அவர் செய்யாதவராயினர் : சில சபைகளில் அவற்றினையாக்கியோர் விரும்பியவாறு தலைமை பொறுத்துக் கொள்ளவேனும் ஓரங்கத்தினராக விருந்துகொள்ள வேனும் உடம்படாதவராயினர் என்பனவும் அங்ஙனம் பெறுக. பரிபூரணானந்தபோதத்துத் துறவறவிளக்கப்படலத்தினைக் கூர்ந்து நோக்குவார்க்கும் இவை நன்கு புலப்படும்.

நன்னீர் என்பது 'நனீர்' எனத் தொகுத்தல்விகாரப்பட்டது. அங்ஙனம் என்னுந் தொடர்மொழி 'அஙஙன்' எனப்பொருந்திற்று; அகரச்சுட்டாகிய இடைச்சொல்லின் பின் இடத்தினையுந் தன்மையினையு முணர்த்தும் பலபொருளொரு சொல்லாய் வரு 'ஙனம்' ஈண்டு இடப்பொருள் பயந்து நின்றது. எய் உயர்விரதம் - வினைத்தொகை. ஞானகாயம் - ஜ்ஞானாகாசம் என்பதன் விகாரம். வறிது = வீண். (௩௮)

இட்டி யனந்த மிழைக்கினும் பள்ளி
கட்டினு மானமில் கற்பம துண்டோர்
திட்டம தாய்மெய் திருத்தினு மோவா
நட்டனை யுள்ளு ணணுவிடில் வறிதே.

இஷ்டபூர்த்திசெய்யும்படியான அனேக யாகங்களைச்செய்யினும், வித்தியாசாலைகளை யமைக்கினும், அளவற்ற காயகற்பங்களையுட்கொண்டு நரை திரை நோய் தோன்றா வொருநிலைமைத்தாகத் தேகத்தைச் செவ்வைப்படுத்திக்கொள்ளினும் அனவரத தாண்டவேசனை இதயாம்பரத்தே தியானியாவிடில், இச்சிறந்த காரியங்களும் பயன்றருவன வாகா.

அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உக்தியம், சோடசி, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம்; அக்கினியாதானம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி; அட்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆசுவயுசி முதலிய யாகங்களிருத்தலின் "இட்டி அனந்தம்" என்றார். இட்டி = யாகம்; இஷ்டி என்னும் வடசொல்லின் விகாரம். அக்கினிட்டோம முதல் அப்தோரியாம மிறுதியாகவுள்ள ஏழுஞ் சோமலதைகொண்டு செய்யப்படுவனவாகலிற் சோமயாகமெனவும், அக்

கினியாதானமுதற் சௌத்திராமணி யிறுதியாகவுள்ள ஏழும் (அவிசு) அவிகொண்டு செய்யப்படுவனவாகலின் அவியாகமெனவும், அட்டகைமுதல் ஆசுவயுசி யிறுதியாகவுள்ள ஏழும் யாகாக்கினிகொண்டு செய்யப்படுவனவாகலிற் பாகயாகமெனவும் பகரப்படுமென்ப. அன்றியும் யாகாக்கினியான் முடிக்குஞ் சிறிய யாகமாகலிற் பாகயாகமெனப் படுமென்றுஞ் சிலர்கூறுப. வேதியர் பன்னிரு தினங்களில் உ௲ - மேடங்கள்கொண்டு செய்வது வாசபேயமெனவும், ஐந்து தினங்களில் உ - மேடங்கள்கொண்டு செப்வது சோடசிகமெனவும், எல்லா அரசர்களையும் வென்று அவர்கள் தமதேவல்வழி நிற்க ரு, எ, கூ, கஉ - தினங்களில் ச - மேடங்கள்கொண்டு அரசர்செய்வது இராசசூயமெனவுமா மென்ப.

தைத்திரீயாருணசாகை நாராயணம்—(தஸ்யைவம்விது³ஷோ யஜ்ஞஸ்யாத்மா யஜமாநஶ்ஶ்ரத்³தா⁴ பத்நீ) "தஸ்யைவம்விதுஷோ யஜ்ஞஸ்யாத்மா யஜமாநச்சிரத்தாபத்நீ" என்றெழுவாய்செய்து (ப்ரவர்க்ய:) "ப்ரவர்க்ய:" என்று முடிக்கு மிடத்தில் யஞ்ஞத்திற்கு ஆன்மா இயமானன்; சிரத்தை பத்தினி; சரீரம் விறகு; நெஞ்சு ஓமகுண்டம்; உடம்பு மயிர்கள் (பர்ஹி=) தருப்பை; சிகை வேதம்; இருதயம் யூபத்தம்பம்; ஆசை நெய்; (மந்யு:=) துக்கம் அல்லது கோபம் பசு; தபம் அக்கினி; அனுகூலமெனுமுணர்ச்சி தக்ஷிணை; வாக்கு ஹோதா; பிராணன் (சாமகான) உத்காதா; விழி அத்வர்யு; மனம் பிரமா; செவி அக்கினீத்தென்னும் உருத்துவிக்கு; உயிரோடிருக்குமிருப்பு எவ்வளவிற்றோ அது தீக்ஷை; தின்னப்படுவது யாதோ பருகப்படுவது யாதோ அவை சோமபானம்; விளையாட்டென்னப்படுவது யாதோ அஃது உபசத்து; செல்கின்றனன், இருக்கின்றனன், எழுகின்றனனென்பன வெவைவையோ அவை பிரவர்க்கியம் என்னும் விவர மறியலாம. இவ் விவரமும், பிரச்நோபநிஷதம்— பிராணன் ஆகவனீயம்; அபானன் காருகபத்தியம்; வியானன் அந்வாஹார்யபசநம்; உட்புகுவதும் வெளிச்செல்வதுமாஞ் சுவாசமிரண்டும் இரண்டாகுதிகள்; இவ்விரண்டனையுஞ் சமப்படுத்தும் ஹோதா (=உருத்துவிக்கு) சமானன்; இயமானன் மனம்; யாகபலன் உதானன்; இவ்வுதானவாயுவே யஞ்ஞபல னனுபவிக்கும் இயமானனைப் பிரமத்தை யடையும்படி செய்கின்றதென்று ச - ஆம் பிரச்நத்தின் ௲, ச - ற் கிளக்குங் கிரமமும் ஞானயோக அந்தரியாகமாயிருத்தலின் இந்தயாகம் ஈண்டு "இட்டி அனந்தம்" எனவெடுத்துக்கொண்ட கூற்

றிற் சேரற்பாற் றன்றென்க. இந்த அந்தரியாகக் கிரமங்களுட் சிற் சில மிக்குந் தொக்கும் பலவேறுபாடுகளோடு யஜுர்வேத பிராணாக்நிஹோத்ரம், கர்ப்பமென்னும் உபநிஷதாதிகளிலும் வரக்காணலாம். இவ்வுண்மை யுணராதார் உயிர்வதை யாகமே யாகமென்ப.

அனந்தம் என்பது பள்ளியென்பதனோடு மியையும். பள்ளி=ஒதுங்கும் பள்ளி; "அறப்புற மோதும் பள்ளி யாகும்" என்பது சே - திவாகரம். ஊர், சிற்றூர் என்பனவும் பள்ளியெனப்படும். கற்பம்=காயகற்பமெனும் மருந்து. இது, சுண்ணம் உப்பு முதலியனவாகப் பலதிறப்படுமாகலின் "மானமில் கற்பம்" என்றார். ஒவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நடன் என்னும் வடசொல் 'நட்டன்' என விகாரப்பட்டது. (௩௧)

மெய்யை வெறுத்து விரத்தி யடைந்து
கையை விரித்தொரு கட்டைய தென்ன
மையடர் கானி லிருப்பினு மன்று
டையனை நாடி யுறுவிடி லவமே.

தேகாபிமானத்தை முனிந்து, சார்பறுத்தலையெய்தி, (முடக்கிய முழங்கால்கண்மீது வைக்கப்பட்ட) இரு கரங்களையும் விரித்து ஒரு காட்டம்போல இருளார்ந்த கானகத்தில் அசையாமலிருக்கினும் ஞானசபையினின்று நடனம்புரியுஞ் சர்வலோக நாயகனை விரும்பித் தியானியாவிடிற் செயற்கரிய இஃதும் விருதாவே யாம்.

ஈங்கெடுத்துக்கொண்ட விடயமானது நெற்றிக் கண்ணினையுடைய சிவனைச் சிந்தித்தலே சருவகன்மாரம்பங்களிலுஞ் செய்யத் தக்கதெனுஞ் செய்தியினைச் சாமவேதப் பிரதமமந்திரம் (தவஶ்ஶதே ஜவஶ்ஶதே) "தபச்சதே ஜபச்சதே" என்று தொடங்கி, (கர்மாதிபதயே நம:) "கர்மாதிபதயேநம:" என்று நன்கு பிரத்தாபித்து, (தத்ரவிரூபாக்ஷோஸி) "தத்ரவிரூபாக்ஷோஸி" என்றோதுமாற்றானும், சுவேதாச்வதரோபநிஷத்—

(யதா₂சர்மவதா₃காஶம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா: ।
ததா₂ஶிவமவிஜ்ஞாய து₃:க₂ஸ்யாந்தோ ப₄விஷ்யதி ॥

யதாசர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்திமாநவா: ।
ததாசிவமவிஜ்ஞாய துக்கஸ்யாந்தோபவிஷ்யதி ॥)

"எப்பொழுது மனிதர்கள் ஆகாயத்தைத் தோலாகவெடுத்துப் போர்த்துக்கொள்வார்களோ, அப்பொழுதுதான் சிவசேவையின்றித்

துக்கநிவிர்த்தியை யெய்துவார்கள்" என வரையறைசெய் துரைக்குமாற்றானும், ச - ன் உரையுழைப் பிரமாணிக்கப்பட்ட வடமொழி வாயிலாகப் பிருஹஜ்ஜாபாலோபநிஷத்—

"சிவார்ச்சனை யிலானது சன்மத்திலே நீயைவை :
சிவனை ஆச்சிரயிக்காத சாத்திரத்தை எரித்துவிடு"

எனக் கட்டளைபுரியுமாற்றானும் வலியுறும். திருநாவுக்கரையரது திருவாக்காகிய தமிழ்மறையில்—

"'எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரி யானை யயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே.'

'கான நாடு கலந்து திரியிலென்
ஈன மின்றி யிருந்தவஞ் செய்யிலென்
ஊனை யுண்ட லொழித்துவா னோக்கிலென்
ஞான னென்பவர்க் கன்றிநன் றில்லையே.

வேத மோதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈச னையுள்கு வார்க்கன்றி யில்லையே.

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலு மரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே.

கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க் கல்லாற்பய னில்லையே.'"

எனவும், திருமந்திரத்தில்—

"அவனை யொழிய வமரரு மில்லை
அவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவனன்றி மூவரா லாவதொன் றில்லை
அவனன்றி யூர்புகு மாறறி யேனே."

எனவும் வருவன இங்ஙனங் கருதத்தக்கனவே. மேனுவன்றவாறு சிவனை முன்னிட்டுச் செய்யப்படாத வைதிக கன்மம் பயன்

படாதென்றற்குத் தக்ஷயஜ்ஞநாசம் பெருஞ் சான்றேயாம். ௨௭ - ற் சொல்லப்பட்ட எச்சம் (=யாகம்) முதலியவற்றிற்கு இங்ஙனஞ் சொல்லப்பட்ட தவம் முதலியன வேறு முடிபி னுள்ளன.

மெய் = உடம்பு; இதனுண்மைப்பொருள் பரிபூரணானந்தபோதத்து க - ஆம் படலத்து ௪௮ - ன் உரையிலுரைத்தாம். என்ன - உவமவுருபு. விரத்தியை என இரண்டாவது விரித்துரைக்க. (௪௰)

## அண்டதகரவித்தையியன் முற்றிற்று.

## முதலாங்காண்ட முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

குஹப்ரஹ்மணேநம :

திருச்சிற்றம்பலம்.

# இரண்டாங்காண்டம்.

## க. ஐயமறுத்தருளியல்.

**இனி, அந் நடேசனை யறிந்துய்யுமாற்றினை விளக்கி யருள்கவென வேண்டிநிற்குஞ் சீடனுக்கு ஆசிரியர் கூறுவன கூறியருளல்.**

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

என்றறிஞ ரோதிடலு மேதமினன் மானச
　　னிதந்தர வுணர்ந்துசிதவான்
மன்றுழி நடம்புரி பரம்பொரு ளிருந்தநிலை
　　மாண்பினை யுணர்த்தினைமைபோல்
நன்றறி விலங்குமரு ளாளவினி யந்நய
　　நடேசனை யறிந்துமதிபோற்
சென்றுவரல்போயொளிரொழுங்கையருள்கென்னவது
　　செப்புமிறை செப்பமுடனால்.

### உரை.

இவ்விதமாக அறிஞனர் கூறியிடலும்; குற்றமற்ற நல்ல மனசனென்பான் தனக்கு இதம்பிறக்குமாறு அவற்றை யாராய்ந்தறிந்து, நன்னடையும் ஞானமும் பிரகாசிக்கின்ற அருளாளனே! சிறப்புடைய ஞானகாச சபையின்கண் நடனஞ்செய்யும் பரமபதியாவானிருந்தநிலையின் மாண்பிலக்கணத்தை இங்ஙனமெற் குபதேசித்தருளியபடியே இனி, அந்நயப்பாடுடைய கூத்தப்பெருமானைத் தரிசித்து, மதியைப்போலச் சென்றுவருந் தன்மையினீங்கி யொருபடித்தாய்ப் பிரகாசிக்கும் மார்க்கத்தினையு முபதேசித்தருள்க வென்று விண்ணப்பிக்க; அறிஞனாகிய ஆசிரியர் அதனை யொழுங்குடன் உபதேசிப்பா ராயினர்.

மதி என்பது சந்திரனுக்கும், மனத்திற்கும் பெயராயுள்ள வொரு கிளவி. இங்ஙனஞ் சந்திரனைக் கொள்வுழிப் பூமியினைச் சுற்றிவரு வாம்பினை மீமிசைச் சேறலும் இழிதலுமே கதியா யொரு நிலைபேறின்றி நிற்றலும், பதினைந்து நாள்காறும் வளர்பிறை யென வருத்தலும், மேலும் அத்துணை நாள்காறுந் தேய்பிறை யெனவிருத்தலும், இடையிடையே மேகங்களிற் சிறுவரையாகப் பெருவரையாக மறைப்புண்டு கிடத்தலும் அச்சந்திரற்குரியனவாக லின் அவ்வாறே கருவிகளோடு சிவணி மேலாலவத்தையுறலுங் கீழாலவத்தையுறலுமே கதியாய் நிலையின்மைப்பட்டு நிற்றலும் ஒவ் வொருநாளும் நினைப்பு மறப்புக்களைப் பொருந்தியிருத்தலுஞ் சிறு வரை பெருவரையாகத் துன்பத்தமிழ்ந்து கிடத்தலும் ஆன்மாவுக் குரியனவென்று கூறலாமாதலானும், மனமாகக் கொள்வுழி உலகி னுழிதருஞ் சுகதுக்க வடிவாய மறப்புநினைப்புக்களையே அதன்மாட் டேற்றியிடலாமாதலானும் இவ்விருதிற வுவமானத்தும் பொருந்து கின்ற சேறலும் வரலுமில்லா நடுநிலைக்கண்ணே சுத்தாவத்தையிற் கூடி யொருபடித்தாய்ப் பிரகாசித்திருக்கும் மார்க்கமானது "மதி போற் சென்றுவரல்போய் ஒளிரொழுங்கு" என வெடுத்துக்கொள் ளப் படுவதாயிற்று. பூதாகாய சந்திரன் பூதவிருளகத்தும் (மன மாய்நிகழ்) போதசந்திரன் அஞ்ஞானவிருளகத்தும் ஒளிசெய்து கொண்டிருக்கும் ஒற்றுமையானும், மேலெகிளந்த வொற்றுமையா னும், மனத்திற்கு அபிமானதேவதை சந்திரனென்று ஸுபாலோப நிஷதம் முதலியன சொல்லுமுண்மையானும் மதியெனும்பெயர் அச் சந்திரற்கு மெய்தியதுபோலும். இவ்விருதிற மந்தவொளியெல்லாம் அச் சுத்தாவத்தையி லுதயமாகு ஞானசூரியப் பேரொளியி லடங் கிடுமாகலின் மனத்தின் மந்தவொளியினைப் பேரறிவாகு ஞானமென் றெண்ணி யிறுமாந்திருப்பார் பெற்றி யிழிவினுமிழிவிற் றென்பது தெள்ளிதென்பதூஉ மிங்ஙனுணரக்கிடக்கின்றது.

ஓதிடலும் - 'உம்' விகுதிபெற்ற இறந்தகால வினையெச்சம்; பிற பொருளோடு விரைவையுங் குறிக்கும். மனசன் 'மானசன்' என நீண்டது. அனுசிதமென்னுந் தகுதியின்மை நீத்துளதே ஞானகாசசபை யென்பதனை "உசிதவான்மன்று" என்பதுணர்த்தி நிற்பதாயிற்று. நன்று அறிவு = நன் னடையும், ஞானமும்; அஃறிணை உம்மைத்தொகை. நன்று - பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையா லணையும்பெயர். அருளாளன் = அருளை யாள்பவன். அருள் = கருணை. ஒழுங்கையும் என எச்சவும்மை கூட்டி யுரைக்க. அருள்கென்ன - வியங்கோளீறு தொகுத்தல்; 'அருள்க வென்று

சொல்ல' என்பது பொருள். 'அதனை' என இரண்டனுருபு விரித்துரைக்க. செப்பம்= ஒழுங்கு; இக்கிளவி 'செவ்விய வழி' என்னும் பொருளினே "சேந்த செயலைச் செப்பம் போகி" என மலைபடுகடாத்திற் பிரயோகிக் கப்பட்டுளது. அப்பொருளு மிப்பொருட்கு வேறுறு து. 'நன்றறிவிலங்கு மருளாள உசிதவான்மன் றுழி நடம்புரி பரம்பொரு ளிருந்தநிலை மாண்பினை யுணர்த்தினமைபோல்' என மாறுக. 'இறை அது செப்பமுடன் செப்பும்' என வியைக்க. ஆல் - அசை.

அடிதோறும் ஈற்றிற் கனிச்சீரினைக்கொண்ட இது முதலாகவுள்ள கம - ச் செய்யுள்களும் அச்சீர், இரண்டு மாஞ்சீர்களாகப் பிரிக்கப்படுஞான்று எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தமுமாம்; ஆயினும் இவ்வோசையி லேயே "ஆனந்த நிர்த்தன மிடுங்குமா குருவென்னு மரசென்னை யாளத் தனே" எனத் திருவலங்கற்றிரட்டின் உ - ஆங் கண்டத்து ஆசிரியவியல் ருO - ல் வருஉம் ஈற்றடியீறு நேர் + நேர் + நிரை = தேமாங்கனி என விருத்தல் கருதி இஃதிரண்டு மாஞ்சீர்களாகப் பிரித்தற்கொண்ணுதென்னு நியாயம் ஆண்டு வரைந்திருத்தலின் இவ்வோசைச் செய்யுளினை அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தமென வழங்குதலே யுசிதமெனக. (க)

பாதகமொ ரைந்தையு நணுதுகுரு லிங்கமதி
பத்தருயர் பத்திதனினின்
றேதமுடை யேடணையொர் மூன்றெுடுற வென்பது
மிகழ்ந்துபுற நீப்பையணவி
வாதைதரு நானெனும்வ லாணவமு மென்னதெனு
மாயையொடு நானலனெனும்
பேதமுள கன்மமு மடங்கவுனு முட்டுறவு
பேணிலருண் மன்றடையலாம்.

மாபாதகம் ஐந்தையும்பொருந்தாமல், குரு லிங்கம் சங்கம ரென்னும் மூவிடத்தும்வழிபடும் உத்தம பத்திமார்க்கத்தி லொழுகி, குற்றம்பொருந்திய பெண் மண் பொன்னென்னும் மூவேடணையோடு சுற்றமென்பதன்கண் வைத்த பிரியத்தையும் இகழ்ந்து, புறத்துறவை யடைந்து, துன்பந் தரவுள்ள நானென்னும் வலிய ஆணவமலமும், எனதென்னும் மாயாமலத்தோடு நான் நல்லவனென்னும் பேதபுத் தியை விளைக்குங் கன்மமலமும் ஒடுக்கமுறும்படி தியானமாகிய அகத்துறவு கைவருமாறு செய்துகொள்ளிற் றிருவருட்சபையை யெய்தலாம்.

பாதகமோரைந்தும் இந்நூற்கட் "பஞ்சமாபாதக விவரம்" என்னுமிடத்தில் விளங்கக்கூறியிருத்தல் ஊங்குப்பெரிதாகலின் அவற்றை யீண்டு விளக்காதுவிட்டாம். ஏடணை மூன்றென்பது "மூவேடணை யென்று முடிந்திடுமோ" என்னும் அருணகிரிநாதரது திருவாக்கினும் பெறுதும். ஏடணை = விருப்பம். ஏடணை மூன்றையும், சுற்றப்பிரியத்தையும் இகழ்ந்து நிற்குநிலை புறத்துறவாகலின் அது "புறநீப்பு" எனப்பட்டது. 'நீப்பு' பு - விகுதிபெற்ற தொழிற்பெயர். இத்துறவின்மீதும் வாதமெழுமாயின் அதனை நிவர்த்தித்துக் கொள்ளும்வழி—

"ஆசில் பரிபூர ணானந்த போதத்தின்
ஏசி றுறவிற்சிற் றின்பிழிவைப்—பேசினேன்
வாதுளதே லவ்விளக்கம் வாசித்துத் தீர்ந்துருகன்
போதடிசேர் மின்களளி பூத்து."

எனக் காசியாத்திரையி னறிவுறுக்கப்பட்டது. அது கடைப்பிடிக்க. நானென்னும் அகங்காரமே மனத்திற்கு மூலமென்னுந் தற்போதமாகிய சிவசுதந்திரமெனப்படும். இது, யான் எனதென வியாபிக்கும்வழி யானென்னும் வியாபகமானது தானல்லாத தனுகரணங்களை யானென்றபிமானிக்கும்படி யுஞற்றும் வலிவாய்ந் திருத்தலானும், ஆணவமலம் வித்தியாதத்துவங்களி லேறுமிடத்து அம்மல காரியமாய்ச் சொல்லப்படுமூம்—

(க) அரிஷம்,
(௨) சோஷம்,
(௩) ராகம்,
(௪) விஷாதம்,
(௫) மதம்,
(௬) மோஹம்,
(௭) வைசித்திரியம்

என்னும் ஏழுந் (தற்போதமெனுந்) தனது காரியமெனும்படி நிற்றலானும் "நானெனும் வல் ஆணவம்" எனக்கிளந்தார். அரிஷம் முதலிய ஏழும் நிரலே— (க) மனைமுதலிய வளங்களைக் கண்ணுற்று இ எமக்கினி யாதுகுறையெனப் புளகித்தற் கேதுவாதலும், (௨) மனக் கவலையான் உணவையுமொழித்து உடம்புலர நிற்றற் கேதுவாதலும், (௩) அறநூ லுணராத் தன்மையாற் சிவதிரவியத்தையு மபகரிக்கும் எண்ணம்பிறத்தற் கேதுவாதலும், (௪) புல்லியமகளிரைப் பிரிந்த

போதமுழுது உளம்புண்படற் கேதுவாதலும், (ரு) விலைமாதரைப் புவியரசியரென மதித்து நிற்றற் கேதுவாதலும், (௬) குருநெறிநீத்து அதிபாதகம்புரிதற் கேதுவாதலும், (௭) இருவினைவழியே யிறைவனது ஆணை பலனளிக்கு மென்மகிமறந்து நான்செய்தேன் பிறர் செய்தாரென் றுழிதரூஉ மிழிமதிக் கேதுவாதலுமாம். அம்மலத்தின் எனதென்னும் வியாபகமானது எனதென்னும் உணர்வல்லாத கை, கால், வீடு, மாடு முதலியவற்றை எனதெனக்கொண்டுநிற்கும் அபிமானமேயாம். இஃதிருக்குங் காறும் மாயாமல முளதென்பார் "எனதென்னு மாயை" என்றார். ஈண்டு, 'எனும்' எனத் தொகுத்து 'என்னது' என விரித்தமை ஓசைநயங் கருதியே. தற்கிழமையினும் பிறிதின்கிழமையினுமுள்ள உடம்பும், உலகும் மாயாமல காரியமாம். அவன் நீயவனென்னுங் கருத்தானே நான் நல்லவனென்று சொல்லிக்கொள்ளும் அபிமான பேதபுத்தியுண்மையின், அவ்வின்பமுந் துன்பமுமே கன்மமலகாரியமென்ப தேற்புடைமையாதலின், இஃதில்லையாயிற் புத்திதத்துவத்தை ஆச்சிரயித்துள்ள கன்மமலமு மில்லையென்பார் "நான் நல்லனெனும் பேதமுள்ள கன்மம்" என்றார். பேதபுத்தியடங்குமாயிற் கன்மமலமும், எனதென்பதடங்குமாயின் மாயாமலமும், நானென்பதடங்குமாயின் ஆணவமலமு மடங்குமென்பதூஉம் இங்ஙனம் பெற்றாம். ஆயின் நான், எனது, பேதபுத்தி ஆகிய இம்மூன்றும் எங்ஙனமடங்குமெனின்,— அகத்துறவின்கண் என்பது செய்யுளிலேயே தெரிக்கப்பட்டுளது; பொச்சாந்து கடாவற்க வென்க. கருவிகளைக் கடந்துநின்று தியானித்தலே அவ் வகத்துறவாயிருத்தலின் அதனை "உன்னும் உட்டுறவு" என்றுரைத்தார். இச்செய்தி தெளிவின்பொருட்டு வருஞ் செய்யுட்கண்ணும் அனுவதித்துக் கூறப்படுதலின் எறுழுறுகின்றது. உன்னல்= நினைத்தல்; ஈண்டுத் தியானித்தன்மேற்று. உனும் - தொகுத்தல் விகாரம்.

முன்னையவிருக்கை துறந்து முதல்வனைப்பற்றிநிற்குஞ் சிறப்புடையாரைக் கேவலம் பத்தரென்னாது அதிபத்தரெனக் கிளந்தது சால்புடைமையேயாம். அத் தகைமையோர் சிவவேட முடையராய சங்கமரே. அவ்வேடம் மகிமையுடைய விபூதி உருத்திராக்க காடாய தாரணமும், இயற்கை வார்சடையுடைமையுமாம். காடாயம் சிவ சொரூபஞ் சோதியென்பதை யுணர்த்தவுளது. இவ்வேடத்தினரை வழிபடூஉம் வழிபாடு ஆன்ம சொரூபலக்கணத்தாற் சிவ வழிபாட்

டினுஞ் சிறந்ததாய்ச் சிவனுக்குத் திருத்தியைச் செய்வதாயுளது. இதனை,

"இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"

என்னும் ஔவையார் வாக்கினும்,

"சிறந்த பரம சிவனுருவந் தெருண்ட பரம சிவஞானி
உறைந்த வெல்லை விற்கோடி யளவும் பாவ மொழிந்துவிடும்
நிறைந்த கங்கை நிகழிடத்து ணீங்கு மயுத மாறளவும்
அறைந்த வளவி னருத்தத்து ளகலும் பாவ மான்புரிக்கே."

என்னுஞ் சிவதருமோத்தராகமச் செய்யுளினும்,

"படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே."

என்னுந் திருமந்திரச் செய்யுளினும் பெறுக. சேதனத்தும் அசேதனத்தும் வியாபகசிவ னிருப்பினும் அவனைத் தியானித்திருக்குஞ் செல்வர்பாலேயே அவன் இனிது விளங்கியிருப்பன்: அவர் மகிழின் அவன் மகிழ்வன்: அவர் வருந்தின் அவன் வருந்துவன்: அவர் மகிழ்வே ஒருவனை யொல்லையிலுய்விக்கு மாதலிற் றொண்டர் பெருமையே பெருமை யெனப்பட்டது. சிவஞானி வதிதருமிடன், கங்காநதி, சிவாலயம் ஆகிய விவற்றிற்கு முறையே கோடி விற்கிடை, அறுபதினாயிரம் விற்கிடை, முப்பதினாயிரம் விற்கிடை யளவும் பாவமணவாதகலுமென்பதே ஆகமச் செய்யுளினுள்ள பொருள். நடந்து திரிகின்ற சங்கமராகிய மாகேசுவரரென நவில வேண்டியதையே 'நடமாடக் கோயில் நம்பர்' என மந்திரச் செய்யுள் வழங்கிற்று. மாகேசுவரர் = மகேசுவர சம்பந்த முடையார். இம் மாகேசுவர ரெனப்படாராய்ப் பிறப்பாற் பிராமணரெனப்படுவோரா யுள்ளார்க் கீதன் முதலியன பயனிற் சிறந்தனவல்ல வென்பதூஉம்—

"அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரின் றென்பது நிச்சயந் தானே.

ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனி லோர்பிடி பேறது வாகுமே."

என்னுந் திருமந்திரத் தூக்குக்களிற் பெறலாம். இது, வஞ்சக மற்ற வாய்மையின்கட் பிறந்த வாக்கேயென வாய்மையாளரெல்லா மொப்புமொரு முடிபாம். ஈங் குரைக்கப்பட்ட சங்கம வழிபாடு இற்றெனவறியாச் சிலர் பெரியபுராணத்துட் கூறப்பட்ட அறுபான் மும்மை நாயன்மாரைக் கொண்டாடுங் காரியமே அவ்வழிபாடெனக் கொண்டு நிற்கின்றனர். ஸ்ரீமந் மாணிக்கவாசகனாரது தமிழ்வேதம் "சிவமான வாபாடி" என்றும், ஸ்ரீமத் - ஞானசம்பந்தனாரது தமிழ் வேதம் "விதியா லேத்தப் — பதியா வாரே" என்றுங் கூறுகின்ற வாறே முற்போந்த செய்யுளுரைகளிலும் வந்த வடமொழிவேதம் முதலிய காட்டுக்களின்படியே அந்நாயன்மார் சிவமெனப் பதியெனப் பிரமமென வாகிவிட்டமையானும், வழிபடுவோராற் செய்யப்படுவன வற்றை அன்னோர் நேராக வேன்றுகொண்டு மகிழாமையானும், செய்யப்படுவனவற் றுண்டற்குரியனவற்றைச்செய்யுந் தாமுந் தம் மைச் சார்ந்தாருமே யுண்கின்றமையானும் அது சங்கமவழிபா டாவ தன்று. இதுவேயுமன்றி, பரிவார தேவதைகளை அருச்சித்தல் சங் கம வழிபாடெனக் குறிக்கப்படாமை யுணர்ந்துளோர்க்குச் சிவமாயி னாரை அருச்சித்தலை அச் சங்கமவழிபாடெனக் கொண்டுநிற்றலா னெ யாங்ஙனங் கூடும்? கூடாதென்பதே துணிபு. அந் நாயன்மாருட் பல் லோரும் அவர்கள் காலத்தேயிருந்த அடியவரைப்பூசித் தருங்கதிக் குரியராயினமையேய்ப்ப இக்காலத்துள்ளோரும் இக்காலத்துள்ள அடியவரைப்பூசித் தக்கதிக்குரியராய் நிற்றலே தகுதியாம். இங்ஙு னம் அப்பெரியபுராணம் திருத்தொண்டர்புராணமெனவும் வழங்கப் படுதலின் அவ்வறுபான்மும்மை நாயன்மாரே சங்கமபூசையை யேன்று கொள்ளத்தக்க சங்கமரென்ப தறியக்கிடக்கின்ற தென்னின்,— கேட்டி; அன்னோர் சீவன்முத்த தசையைச்சிவணித் தொண்டி மைக்குந் தொண்டராய் இவ்வுலகிலிருந்த ஞான்று நிகழ்ந்த சரிதங் களை விளக்குந்தன்மையின் அது திருத்தொண்டர்புராண மெனும் பெயர்த்தாயிற்று. அதுகொண்டே அவர்களை இஞ்ஞான்றும் இனி எஞ்ஞான்றுந் தொண்டர், அடிமைகள், சங்கமரென்று கூறுதல் சால் பிற்றாகாது. சிவசமத்துவர், முத்தர், பரமுத்தர், முத்தான்மாக்க ளென்று கூறலாம். அனுபவத்திற் சாரப்பட்ட சிவத்தைமாத்திர

மறிந்து அம்மயமாகிப் பிறிதொன்றுமறியாது நிற்குந் தன்மையானும் அன்னோர் அடிமையெனப்படார்; என்னை ? சிவகரணங்கெட்டவழிச் சிவகரணமெய்தினோராகலின். அவர்களுடைய வியனிலையைக் கீழ் நிலைப் படுத்திக்கொண்டு ஈங்குப் பூசனைபுரிவதும்— (நயோநாயெ) "நயோ நாயே" என்னும் அமரஸிம்ஹ ஸங்கீர்ணவர்க்க வாக்கியத் தின்படி நயத்தின்சம்பந்தம் நாயம், நலனுடைத்து எனப்படுமாற் றானே அதனையுடையான் நாயனெனப்படுவனென்பதும், அகத்திய னெனும் பெயர்க்கண் ஆரைக்கிளவியாய 'ஆர்' புணர்ந்தவழி அஃது அகத்தியனார் என வழங்கப்படுமாறே நாயன் என்பதும் அக்கிளவி புணர்ந்தவழி "நாயனார்" என வழங்கப்படுமென்பதும் அறியாதார் அதனைத் தமிழ்வழக்கின் நாய் + அனார் எனப் பிரித்துக்கொண்டு நாயைப்போன்றாரென்பது இதன் பொருளென்றும், அங்ஙனம் அப் பெரியார் எற்றால் நாய்போன்றாரென்னுங் கடாவினையுந் தாமேயெழுப் பிக்கொண்டு அவர் சிவசன்னிதியில் நாய்போற் காத்துக்கிடக்குந்தன் மையின் அவ்வாறு புகலப்படுவரென்றும் பொறித்துவைத்த பெற்றி யினைப் பொருவும். சைவசமயாசாரியருளொருவராய ஸ்ரீமத் - சுந் தரமூர்த்திகளே (அப்பெரியபுராணத்தின் முதனூலெனவுள்ள) திருத் தொண்டத்தொகையுழிப் "பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன் பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்— சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்" என வருளிச்செய்ததையும் உய்த்துணர்க. அவ்வறுபத்துமும்மை நாயன்மார்கட்கு வேறாகவே பத்தராய்ப் பணிவார்கண் முதலாயினார் கூறப்பட்டமையானும், அவ ரும் 'பணிவார்' 'பாடுவார்' எனப்பட்டமையின் இனிவந்து பணி தொண்டரும் பாடுதொண்டருமெனக் கொளக்கிடக்கின்றமையானும், "தொடைகொண்ட வார்சடை யம்பலத் தான்றொண்டர்க் கேவல் செய்து— கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு வாழ்தல் களிப் புடைத்தே" என்னும் பட்டினத்தடிகளது திருவாக்குக் கோயினான் மணிமாலையிற் காணப்படுகின்றமையானும், இன்ன பிறவாற்றானும் அவர்களை (=அறுபத்துமூவரே) சங்கமபூசையை என்றுகொள்ளத் தக்கவரென்பது சழக்குரையாமேயன்றி வழக்குரையாகாதென்க. இன்னும், அடியவர்தொகை அறுபத்துமூன்றோடு முடிந்துவிட்டது ; பின்னைக் காணப்படுவோரெல்லாம் அபலரே எனக் கூறிநிற்பா ரனை வரும்— போந்த பிரமாணங்களையுணரா வூனத்தாரும், சிவவேடங் காணப்படினும் நம்போன்ற மனிதரையோ நாம் நேரிற்பூசிப்பதென் னுங் கருவம்படைத்து விக்கிரகமே தொழுதுநிற்கும் மானத்தாரும்,

உலோபகுணமொன்றே மீக்கொள வீற்றிருக்கும் சனத்தாரும், ஈட்டிய தீமைகட்குக் கழுவாய்காணுங் கருத்துடையாரும், நாமும் இனிச் சிவனடியாராகி உய்திபெறலாமென் றெண்ணு மெண்ணமு மில்லா இதய சிரேட்டரும், அறுபத்துமூவரோடு சைவசமயப் பெருவாழ் வினை முடித்தொழிக்கவந்த முதியோரும், தங்காலத்துள்ள பெரியாரையிகழ்ந்து பெரும்பீடை தேடிக்கொள்ளுநம் பெரியாரு மாவர். அப் பீடையை,

> " ஈச னடியா ரிதயங் கலங்கிடத்
> தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
> வாசவன் பீடமு மாமன்னர் பீடமும்
> நாசம தாகுமே நந்நந்தி யாணையே."

எனத் திருமந்திரமுனிவரால் ஆணைதந் துரைக்கப்பட்ட திருவாக்கானு மறியலாம். ஈண்டு, சமயாசாரியரை யான அற்புதச் செயல்களை இக்காலத்தடியவர் செய்யாதிருத்தலென்னை? அச்செய்யாமை அவர் வீடுபே றடையாரென்பதற் கறிகுறியாய் நில்லாதோ? எனின்,— "ஞானத்தால் வீடு" என்று சிவஞானசித்தியார் ஓதுகின்றபடி அது ஞானத்தா லெய்துவதேயன்றி அற்புதச்செயல்களா லெய்துவதன்று.

(𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌤𑍍𑌯𑍇𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇 ।
ஜ்ஞாத்வாதம் ம்ருத்யுமத்யேதி நாந்யஃபந்தாவிமுக்தயே ।)

" அவரையறிந்து (மிருத்தியுவை=) ஆணவமலத்தைக் கடப்பன்: இஞ்ஞானமின்றி வீடுபேறெய்த வேறு வழியில்லை" எனக் கைவல்யோபநிஷத்தும்,

(𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌪𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌜𑌾𑌲𑌾𑌨𑌿 𑌵𑌾𑌞𑍍𑌛𑌤𑌿 ।
அநாத்மவிதமுக்தோபி ஸித்திஜாலாநிவாஞ்சதி ।)

" ஆன்மஞானமில்லாதவனும், முத்தனல்லாதவனுஞ் சித்திகளை விரும்புகிறார்கள்" என வராஹோபநிஷத்துங் கூறுதல் அப்பொருட்டன்றோ. பூருவம் விரும்பிச்செய்துள்ள தபோபலமாகவும், அன்பர் வேண்டுகோள்களைப் பூர்த்திசெய்வ தவசியமாயிருந்தக்கால் அங்ஙனமே திருவருட்காரியமாகவுஞ் சில சித்திகள் ஞானிகளிடத்து முண்டாதல்கூடும். அவை அவரால் விரும்பப்பட்டன வெனப்படா; நியாயவழியே நிகழும். இம் முடிபு—

"கண்ணுள்ளார் காண்பார்நற் காதுள்ளார் கேட்பாரின்
பண்ணுள்ளார் பாடுவரிப் பண்பேபோல்—விண்ணருளிற்
பாழ்வெளி மீச்செல் பலமுள்ள வான்மாவும்
ஊழ்வழி யேவிளையா டும்."

என்னுங் காசியாத்திரை யாப்பினும் இனிது பெறப்படுகின்றது. இதனோடு, சுரர்வலி மீக்கொண்டஞான்று அசுரரும், அசுரர்வலி மீக்கொண்டஞான்று சுரரும் அடங்கியிருந்த சரிதங்கள் பனுவல்களிற் காணப்படுமாறு மனிதர்வலி மீக்கொண்டதாகக் கருதப்படூஉம் இஞ்ஞான்று முனிவர் புணர்தினத்தே பேறு, யஞ்ஞ சிருட்டி, சாவு நீக்கம்புரி காயகற்பம், இலக்ஷியத்திற்செல்லுமம்பு மீட்டுந் தூணியடைதன் முதலிய தெய்வத்தன்மைகள், சித்திகள் அடங்கிப்போயினவென்னுங் காலவியல்பு முணரக்கிடக்கின்றது. சித்திகளை விரும்பாதார்க்கெய்தும் ஆன்மலாபம் இக்காலவியல்பில் அடங்கிநிற்பதன்று. இதுகிடக்க; அவ்வறுபத்துமும்மை நாயன்மாருள்ளும் பலர் அற்புதச்செய விலராயிருந்தனரென்பது அவரவர் புராணங்களிற் செம்மையே யறியக்கிடக்கின்றது. அக்காரணத்தால் அவர் வீடுபேறடைய கில்லாரென்பது கூடுவ தன்றே. அன்றியும், சுவானுபூதிமானாயிருந்த ஸ்ரீமத் - தாயுமானசுவாமிகள் இறந்தாரொருவரையு மெழுப்பினாரல்ல ரென்பதுகொடே அவரதுநிலைக் கோரிழிவுங் கூறல்கூடுமோ? இவற்றையெல்லா முய்த்துணரும் புத்திமான்கள் மேலை வியவகாரங்களைத் தொடங்காரென்பது தெள்ளிதாம். இம்பர், யாங்கூறுமொரு நுட்பம் நன்கு கவனிக்கத்தக்கது. யாதெனின்,— அந் நாயன்மார்களைப் பூசிக்கவேண்டாவென்பதனை யாங்கூறவந்திலம்; சிவமான அவரைப்பூசித்தல் சிவவழிபாட்டிற் சேரற்பாலதாமேயன்றிச் சங்கம வழிபாடாகாதென்பதே. இதுபற்றிப் பரிபூரணானந்தபோதத்தின் பிற படலத்துத் கூஈ - ன் உரையினு முரைக்குமளவே யுரைத்தாம். அதனைப் படித்துப்பார்த்த சைவத்திருவினரொருவர் அறுபத்துமூவரருச்சனை இந்நூற் கங்கீகாரமில்லைபோலுமென் றுரைத்தது எஞ் செவிப்புலமாயதனால் இங்ஙனம் அது விரிவாகவுங் குறிப்பாகவு முரைக்கப்படுவ தாயிற்று. சங்கமவழிபா டின்றாயிற் குரு லிங்கவழிபாடுகளுஞ் சிறக்கமாட்டாவென்பது தெள்ளியோர்க்குப் புலனாவ தொன்றாம். அதனைச் சிவஞானசித்தியாரில்—

"ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லா
ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன் பில்லார்
பேசுவதென்"

என வருவதுகொண்டு முணர்க. அடியவர்க்கன்பில்லார் ஈசனுக்கன்பில்லார் எனக் கூட்டுக. இது, யாற்றுநீர்ப் பொருள்கோட்கேலாது கோத்துக்கிடக்குஞ் சொற்களுடைக் கொண்டுகூட்டுப் பொருள்கோளது. சைவசமயப் பெருவாழ்வினை அறுபத்து மூவரோடு முடித்தொழிக்க முன்னுநர் போலவே திருஞானசம்பந்தப் பெருந்தகை முதலிய சமயாசாரியராற் பாடப்படாச் சிவாலயங்களை நாம் வழிபடுதலுங்கூடாத காரியமேயென்று கூறிநிற்பாரையுமிக்குவலயத்தே கண்ணுறலாம். அக்காரியம் எவ்வியவுள் கட்டளையாற் பெறப்பட்டதோ வறிகிலம்; அஃதவர்க்கே புலப்பட்டிருப்பதொன்றுபோலும். சிவாலயப்பிரதிட்டை செய்தல் சிவபுண்ணியமென்றும், அவ்வாலயம் இன்னபடியாக வமைக்கப்படல்வேண்டுமென்றும் பெரிதுமுணர்த்தற் கேற்பட்ட ஆகமங்களிருக்குங்காறும் அவ்வரையறைக்காரர் கருத்து முற்றுப்பெறுமென்பது தெள்ளிதிற்றெள்ளிதே. இதுவேயுமன்றி நூதன சிவாலயங்கள் நிருமிக்கக்கூடாதென்றல் சிவத்துரோகமுமாம். பாடல்பெறீஇய சிவாலயங்கள் சிலமுறுது காக்கும்புண்ணியங் கைவந்தோர்க்குத்தாம் இத் துரோக சிந்தையுதிக்க இடனுண்டா? அந்தோ! அந்தோ!! கொடிது; கொடிது. பிருஹஜ்ஜாபாலோபநிஷதம் ([illegible] - இக்க்ராமமசிவாலயம்=) "சிவாலயமில்லாத கிராமத்தை யெரித்துவிடு" எனவும், திருநாவுக்கரையனுர் தமிழ்வேதம் "திருக்கோயி லில்லாத திருவி லூரும் - - - - அடவி காடே" எனவுங் கிளக்குநியதியானே பழையதாகவோ புதுவதாகவோ வுள்ள ஒவ்வொரு கிராமத்துஞ் சிவாலய மமைத்திடல்வேண்டுமென்ப தேற்படுதலையும் இவர் உய்த்துணரவேண்டுமே. அவ்வாசிரியன்மார் தெரிந்துகொள்ளலாய ஆலயங்கடோறுஞ் சென்று திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு வந்ததையுணர்ந்த இவருந் தங்காலத்துள்ள சிவாலயங்கடோறுஞ் சென்று பாடி வழிபட்டு வருஉங் கிரமத்தைக் கொள்ளாமே அவற்றுட் சிலவற்றை நவீனமெனவிழித்துரைத்து ஒதுங்கிநிற்பதுதானென்னேயோ! அவ்வாசிரியன்மாருள் ஞானசம்பந்தப்பெருமான் "பாடுவார்க்கருளு மெந்தை" என்றும், வாகீசப்பெருமான் "தமிழோடிசை பாடன் மறந்தறியேன்" "ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்— பாட லாளர்க் கல்லாற்பய னில்லையே" என்றும், சுந்தரப்பெருமான் "பரமனையே பாடுவா ரெல்லார்க்கு மடியேன்" "பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்"

என்றும், மணிவாசகப்பெருமான் "என்புருகிப் பாடுகின்றிலை" என்றும், அருணகிரிநாதப்பெருமான் (கந்தரலங்காரத்தில்) "முத்தமிழால் வைதாரையுமங்கு வாழவைப்போன்" என்றும் பாடியருளிய திறங்களுங் காணப்படுகின்றனவே. இவரறுட் 'பொய்ம்மையாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின்' எனக் கட்டளைதந் துரைத்தது இனிது கருதத்தக்கதன்றோ. பொய்ம்மையாளரையும் பாடுவார் இக்கட்டளை ஒரீஇய அசைவப்புலவரே யென்றற் கிழுக்கென்னை? அவ்வாசிரியன்மாருடைய திருவாக்குக்களின் வெளிப்பட்ட ஆலயங்களே வழிபடற்குரியன வென்று கூறிக்கொள்வது போல அவ்வாக்குக்களே தோத்திரமாகப் பாடற்குமுரியன வென்பாரது கோட்பாடும் அழுக்காறு முதலிய துர்க்குணங்களால் ஏனைப் பெரியாரை யிகழ்ந்து இரும்பிணை தேடிக்கோடற் குரியதேயாம். "அர்ச்சனை பாட்டேயாகும்" எனப் பெரியபுராணத்தும், "கத்யபத்யப்ரியன்" எனச் சண்முக சகச்சிரநாமத்தும் வருவனவற்றையும் அவர் உய்த்துணர்வதோடு சிவாராதனையில் வேதாத்தியயனத்தையேனும், வேறுய சாத்திரபாடாதிகளையேனும், கௌடபாஷாகானம் நிர்த்தனத்தோடு கூடிய திராவிட பாஷாங்ககானம் ஸம்ஸ்க்ருத நாநா விதஸ்வரம் என்பனவற்றையேனுஞ் செய்தல்வேண்டுமெனக் கூறிய காமிகாகமத்து அர்ச்சநவிதிபடலமானது அங்ஙனமே—

(யஷ்டாஷஶஹாஷொதும் ஶாநம்வாவஸிகல்யெத் ।

யதஷ்டாதசபாஷோக்தம் காநம்வாபரிகல்பயேத் ।)

"பதினெண்பாடைகளி லேற்பட்ட கானத்தையேனுஞ் செய்தல்வேண்டும்" என விதிக்கின்றதையு முணர்வாராக. சிவாராதனைக்குப் பலபாடைக் கானங்களுமாமென விதிக்கின்ற இச் சிவாகம விதியினால் அவ்வாசிரியன்மாருடைய திராவிட வாக்குக்கண் மாத்திரமே தோத்திரமாகப் பாடற்குமுரியனவென்பது ஈங்கு மறுக்கப்பட்டொழிகின்றதன்றோ. இப்படியெல்லாம் பேசத்துணிவோர், அவ்வாசிரியன்மார் சமயாசாரியரென வழங்கப்படுதல்கொண்டு இனிச் சமயசாத்திர விசாரமும், சமயதீக்கையும், அன்னபிறவும் அவர் மாட்டே பெறல்வேண்டும், இக்காலத்தெவர்மாட்டும் பெறலொண்ணுதென்னும் வரையறையுஞ்செய்து வாழ்வர்போலும்! அச் சமயாசாரியாராற் றனிப்பதிகம் பாடப்பெறுதுள்ள ஸ்ரீகாசி விசுவநாதப்பெருமானது ஆலயத்தையும் ஈங்குத்தரிசித் துய்யொண்ணு தென்பர் போலும்!! இவைகளும் அவர்பா லில்லாதொழிய நியாயமின்றே.

மகனுக்கு முடிசூட்டிப்பார்க்க மன்னனைக்கொல்லும் வனிதை போல்வாராய்த் தமிழ்ச சிவஞானபோத மொன்றனையே யுயர்த்திக் கூறுமாசை உச்சிமீக்கொண்டோரா யிருந்த வெவரோவொருவர்— "வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வர்— ஓதுந் தமிழதனி னுள்ளுறுநெய்— போதமிகு— நெய்யி னுறுசுவையாம் நீள்வெண் ணெய் மெய்கண்டான்— செய்ததமிழ் நூலின் றிறம்." எனச்சொல்லி யிட்ட வெண்பாட்டில வேதம, ஆகமம், தேவாரம், திருவாசகமென் பன இழித்துரைக்கபபட்டன. இப்பாட்டினையு மங்கீகரித்துப்போதுந சைவரு முளரே. இவரது அங்கீகாரம் சமயாசாரியர் பாடற்கண் ணேயே அபிமானமுள்ள அச்சைவரால் அங்கீகரிக்கப்படுமோ? படா தென்பது தேற்றம். சிவாலயங்க ளிருக்கின்ற தேசங்கடோறுஞ சென்று தெய்வவழிபா டுஞற்ற லாதார்க்கு அவரிருக்குந தேசத் துள்ள ஆலயத்தின்கண்ணேயே அவ்வழிபா டுஞற்றும்படி கற்பித் தல் எவ்வாறு ஏனைய சிவாலயங்களை அசாரமெனககழித்திடல் காட டாதோ அவ்வாறே, அடங்கன் முறைத் தேவாரம முழுதும் பாராய ணஞ்செய்ய வலாச் சிவாலயமுனிவர்க்கு அவரது திறநோக்கியவாறு அகத்தியமாமுனிவர் பதிகங்களைத் திரட்டிக்கொடுத்தது ஏனைய பதி கங்களை அசாரமெனக் காட்டுவதன்றென்பதை யறிந்துகொள்ளமாட் டாமே, அத் தேவாரத்துள்ளும் அகத்தியத்திரட்டாகிய இருபத் தைந்து பதிகங்களே சாரம்; அவைகளே பாராயணத்திற்குரியன வென்று பகருஞ்சைவரு முளரே. எவரைத் திருத்திசெய்யும்பொருட் டுச் சிவபெருமான் றனது அருமைத் திருக்கரத்தாற் றிருவாசகத் தினை யெழுதியருளினனென்பதை யுணருமூற்றமின்றி அவ்வெழுதிய காரியமே பிடித்து அந்நூலொன்றனையே யுயர்த்திப்பேசும் பெற்றி யாற் றேவாரம் முதலிய மெய்ந்நூல்களை யிழிவின்பாற்படுத்துஞ் சைவரு முளரே. இனி, அவ் வெண்பாட்டார் முடிப்பினையு மாராய் வாம்.— "ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்ல வாகமஞ் சொல்ல அல்லவா மென்னும்— ஊனத்தார்" எனச் சிவ ஞானசித்தியார் கூறுமாறு ஊனத்தாரும், "வேதமோ டாகம மெய் யாமிறைவனூல்----நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்—பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே" எனத திருமந்திரங் கூறுமாறு பெரியோ ரல்லாதாருமேயாவார் அப்பாட்டார். வேதத்தை யிழித் துக்கூறல் நிரய ஏதுவாமென்பதூஉஞ் சிவதருமோத்தரமெனும் ஆக மத்து மறிவுறுத்தப்பட்டது; சிவசூரியப்பிரகாசங் காண்க. இங்ஙனம் 'வேதம் பசு' என்றதனுற் பாலும், நெய்யும், சுவையும் அதன்கண்

இலவெனப்படாவே ; இழிவு யாங்ஙனம் ? எனின்,— அங்ஙனமாயின், வேதமாகிய பசுவின்மாட்டே அம்மூன்றும் உளவென்றன்றோ கூறல் வேண்டும் ; கூறினும் ஒன்றற்கொன் றுயர்வு இனைத்தால் இனைத்தா லென ஏற்புடைநியாயம் வைத்துமன்றோ வியம்பல்வேண்டும். அவ் வாறன்மையின் இழிவு ஏற்படுகின்றது. சூத்திரமும் பாடியமும் போல ஒன்றற்கொன்று தெளிவென்பதைப் பசுமுதலியனவுணர்த்து மெனக் கூறிக்கொள்வுழியும் சூத்திரம்போலச் சுருங்கிநிற்கும்வேதத் தைத் தூலித்த பசுவாகவும், பாடியம்போல விரிந்துநிற்கும் ஆகமத் தைச் சிறுவரைப் பாலாகவுங் கூறல் பொருந்தாது. அவ்வாறே ஒன் றற்கொன்று பெரிதாயில்லாத வனையிரண்டின் செய்தியும் பொருந் தாது. வடமொழிவேதமும், தென்மொழிவேதமாகிய பாடலும் ஒன் றெனக்கூறு மொழுங்கினே இரண்டும் பசுவெனப்படாமல் ஒன்று பசு வெனவும், ஒனறு நெய்யெனவுஞ் சொல்லப்பட்டமையிற் சூத்திர வியைபும், பாடியவியைபும் பொருந்துமாறின்று. சிவஞானபோதம் மிக்க தெளிவெனல் சால்புடைத்தாகாதென்பதை அதன்வழிநூல் புடைநூலாயுள்ள சிவஞானசித்தியாரும், சிவப்பிரகாசமும், அவற் றின் உரைகளும், சிவஞானபோதவுரைகளுமே காட்டிக்கொண்டு தாமே தெளிவினுந் தெளிவென நிற்கின்றன. அவைகளுஞ் சுவை யினு ளடங்குமெனின்,— அங்ஙனமே, வடமொழி தென்மொழிவேத மாகிய நெய்யினைநீங்காச் சுவையாகிய ஆகமத்திற் சிவஞானபோதாதி நூல்களு முரைகளு மடங்குமென்னுங் கருத்தானே ஆகமத்தையே சுவையெனச் சொல்லாததென்கொல் ? நால்வர்பாடலும், சிவஞான போதமும் வெவ்வேறு புத்தகங்களாயிருக்கின்றபடி நெய்யுஞ் சுவை யும் வேறுவேறு யிருக்கின்றனவா ? ஈண்டியாதும் பொருந்துமா றின்றே. அற்றன்று ; ஒன்றிலிருந்தொன்று வந்ததென்பது இந்நிர லென்றும், அதனுல் ஒன்றற்கொன் றுதாரமென்பது கருத்தென்றுங் கூறிக்கொள்வழியும் பாலெல்லாங் கறந்துகொண்டு விடப்பட்ட பசு வின்கண் இனிப் பாலும், நெய்யெல்லா மெடுத்துக்கொள்ளப்பட்ட பாலின்கண் இனி நெய்யும் அதனேடுள்ள சுவையுங் காணுண்ணு வென்ப தேற்படுதலினுலும், சுவையென்னுஞ் சாரச்சொல்லானது உயிருதாரம் உடம்பென்பதுபோன்ற இழிவாதாரத்தினை நெய், பால், பசுவென்பனவற்றிற்கு நிரலே தரீஇ நிற்குந்தகைத் தாதலினு லும் வேதம், ஆகமம், நால்வர்பாடலெல்லாம் இழித்துரைக்கப்பட் டனவென்பதே தெளியப்படும். அப்படிச் சுவையிழந் திருப்பன தாமோ அவ் வேதாகமங்களும் பாடல்களும் ? இறும்பூதே ! இறும்

பூதே!! ஒவ்வொரு தேமாங்கனியினும் இன்சுவை காணப்படுமாறு வேதாகமாதி யொவ்வொருத்தம நூலினும் இன்சுவை யுளதென்பது பரிபூரணானந்தபோதத்தின் பிற்படலத்து ௨௭-ன் உரையகத்தும், இந்நூலுரையகத்தும் இனிதுணரக் கிடக்கின்றதன்றோ. ஒன்றை யொன்று கீழாக்கி யுரைத்தற்கேயுரிய அப் பசுமுதலிய வுவமானங்களைச் சன்மார்க்க சாத்திரங்களின் ஒற்றுமைநயம்பேணு மெம்மனோரு மெடுத்தாள்வரோ? ஆண்டதையுங் கொள்வரோ? கொண்டோருங் கொள்வோரும் இனிச் சாரத்தின் மிக்கது அதிசாரம், மதுரத்தின் மிக்கது அதிமதுரமென்னும் வழக்கினைத்தழீஇ அச் சுவைக்கு மேலாக அதிசுவை, நன்சுவை யென்பனவற் றொன்றனையேற்றி, அதன்கட் டமதபிமானத்துள்ள யாதொரு சைவநூலினைவைத்து, ஒருவரொரு பாட்டினை இனிப்பாடின் அதனையு மங்கீகரித்துக்கொள் வர்போலும். அங்ஙனமாயின், வேதம் முதலியவற்றை யிழித்துக் கூறல் கருதி இஞ்ஞான்று வியசனிக்கின்ற யாம் சிவஞானபோதத்தை அவ்வாறு கூறல்கருதியும் வியசனியாதிருக்க நியாயமின்று.

செய்யுளிலுள்ள சங்கமரைப்பற்றியும் இலிங்கத்தைப்பற்றியுங் கூறிவருமிங்ஙனே பாடுதல்பற்றியும், நூனிலைபற்றியுங் கூறுதல் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றமாமோ? எனின்,— ஒப்பின் முடித்தலென்னும் உத்தியாற் கூறுவதனால் அக் குற்றமின்மை தெளிக.

"சூத்திரத் துப்பொரு ளன்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே."

என்னுந் தொல்காப்பிய மரபியற் சூத்திரத்தையுங் கருதிக் கொள்க. எத்திறஆலயத்தும், எவ்விடத்தும் அடியவர் நம்புதலோடு புரிகின்ற எந்நற் கைங்கரியத்துக்கும், அவ்வழியே எப்பெரியாராற் பாடப்பட்ட தோத்திரங்களையேனும் இயற்று சுய தோத்திரங்களை யேனும் பாடுதற்கும் உரியபலன் பெறலாமென்பதை யனுபவத்திற் றெரிந்துகொண்ட யாம், மேலே குறிப்பிடப்பட்ட விபரீதமுடை யாரது கோட்பாடுகணித் தெடுத்துரைத்த நியாயங்களை இவ்வளவில் விடுத்து இனிக் கூறுவன கூறுதும். குருவைக்குறித் தறியவேண்டிய செய்திகளுஞ் சுருதியாதி மேற்கோள்களும் பரிபூரணானந்தபோதத் துப் பிற்படலத்துக் ௯௯-ஆஞ் செய்யுட்கண்ணும் உரைக்கண்ணுங் காட்டப்பட்டன; ஆவயிற் கண்டுகொள்க. ஆயிடையேயே சங்கம

பத்தி, இலிங்கபத்தி யென்பனபற்றி இன்னுமுணரவேண்டிய மேற்கோண் முதலியனவு முணரலாம்.

இலிங்கமென்னாது 'லிங்கம்' என்றது வடநூன்முடிபு; தலைக்குறையெனினுமாம்; "உற்றுசான் லிங்க முயர்வேடம்" என்றார் திருவதிகை-மனவாசகங் கடந்தாரும். உடை - உடைய என்பதன் விகாரம். நல்லன் - பண்படியாப்பிறந்தபெயர்; "நக்கர்தந்நாம நமச்சிவாயவென்பார் நல்லரே" என்றுரைத்தார் (திருவீழிமிழலைத் தேவாரத்தில்) ஸ்ரீ ஞானபோனகனும். நலன் - தொகுத்தல் விகாரம். (உ)

உட்டுறவு தத்துவ நிரோதனம தாமங்
ஞொடுங்குநிரை கண்டமனமாஞ்
சட்டகமில் வாயுவொ டதற்குரிய போதவெளி
தன்னையு மடக்குமுறைகேள்
நட்டவிறை நட்டமிடு மத்தியி னினைப்பையொரு
நாட்டமுடன் வைக்கிலவணின்
றெட்டியெழு மானச மெழாதயரு மவ்வுழி
யிருக்குமன விண்டெரியுமால்.

அகத்துறவாவது தத்துவச்சேட்டைகளை யொழித்திருத்தலாம். (அங்ஙனம்) தத்துவங்கள் ஒன்றின்பின்னொன்றாக வொடுங்குமொழுங்கினை யறிந்த (சலனப்படுந் தன்மையால்) வடிவமில் வாயுவினையொத்த மனத்தையும், அது பிறத்தற்கேதுவாயுள்ள போதாகாசத்தையும் அடக்குமொழுங்கினைக் கேட்பாயாக. நடனப்பெருமான் நடனஞ்செய்யும் நாப்பட் டலமாகிய சிற்சபையிலே நினைப்பினை ஏகாக்கிர சித்தத்துடன் தாரணைசெய்யில், அங்கிருந்து விரைந்தெழு மனசின்றோற்றமெல்லாம் வெளிவராமல் ஒய்ந்துவிடும். அச் சமயத்தில் அவ்விடத்திருக்கின்ற (அப்) போதாகாசங் காணப்படும்.

தகராலயத்தின் நடுவணே "நட்டவிறை நட்டமிடு மத்தி" எனப்பட்டது. அதனிலுள்ள சிவபரம்பொருளைத் தியானிக்குமாறு அங்குச் சிந்தையினை வைக்கவேண்டுமென் றாசிரியர் அறிவுறுத்தியதை,

(க) (𑌹𑍃𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑌧𑍍𑌯𑍇𑌤𑍁 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 । )

"ஹ்ருத்புண்டரீகமத்யே து பாவயேத்பரமேச்வரம் ।"

என மைத்ரேயோபநிஷத்தின் க - ஆம் அத்தியாயத்தும்,

(உ) (𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌵𑍇𑌶𑍍𑌮 𑌦𑌹𑌰𑌂 𑌯𑌦𑌿𑌦𑌂 𑌮𑍁𑌨𑍇 ।
𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂 𑌤𑍁 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌆𑌕𑌾𑌶𑍋 𑌦𑌹𑌰𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍 ।
𑌸 𑌶𑌿𑌵𑌃 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌃 𑌸𑍋𑌽𑌨𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑍋 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃 ॥)

"அஸ்மிந்ப்ரஹ்மபுரேவேச்ம தஹரம்யதிதம்முநே ।
புண்டரீகந்துதந்மத்யே ஆகாசோதஹரோஸ்திதத் ।
ஸசிவஸ்ஸச்சிதாநந்தஸ் ஸோந்வேஷ்டவ்யோமுமுக்ஷுபிஃ ॥"

எனப் பஞ்சப்ரஹ்மோபநிஷத்தின் இறுதியிலும் வரு வசனங்களின் முடிபெனவே கோடும். தமிழ் :— (க) இருதயகமலநடுவிற் பரமேசுவரனைப் பாவித்தல் (= தியானித்தல்) வேண்டும். (உ) முனிவனே! பிரமபுரத்திலே தாமரைமலரனைய ஒரு சிறுவீடுளது: அதன் நடுவிலே தகராகாசமிருக்கின்றது: அது சச்சிதானந்த சிவன்: அவன் முமுக்ஷுக்களால் நாடப்பட்டவன். என்க. "பிரமபுரமென்னும் இதன்கண்ணே தகரபுண்டரீக வீடுள்ளது: இதிலே தகராகாசமுள்ளது: இவ்வாகாசத்திற் குள்ளேயுள்ளது நாடற்பாற்று: அறியற்பாற்று" என்னுந் தமிழுக்குரிய (முற்காண்டத்து ரு - ற் காட்டப்பட்ட) சாந்தோக்யோபநிஷத வாக்கியங்களும் இச்சுருதிகளின் பொருளேயே யுடையன. "மறுபிறப் பெய்தாதிருக்குமாறு தனது இருதயார்ச்சனத்தையே செய்தல்வேண்டும்: வெளிமுக அர்ச்சனத்தை யொழித்தல்வேண்டும்" என மேலே மைத்ரேயோபநிஷதங் கூறுங் கூற்றை முற்காண்டத்துப் கஎ • ன் உரையிற் காட்டினும்; அஃது மிங்குக் கருதத்தக்கதே.

'சட்டகமில் வாயுவாம் மனம்' என வினைத்துறைசெய்க; ஆம் - உவமவுருபு. சட்டகம் = வடிவம்; சூடாமணிநிகண்டு காண்க. மனசின்றோற்றம் மானசமெனப்பட்டது. (ரு)

அந்தவி ணடங்கவெனி னன்கருளி னீமறை
யளாவஙன முன்னையறிவாய்
இந்தவித மென்றுனறி விற்கறிவு செய்தவரு
ளென்பதையு மங்கணறிவாய்
சிந்தைசிறி துஞ்சலன மற்றபரை யோகது
திளைக்குமதன் மேலதுவிடுத்
துந்துநிலை யிற்கருணை யானபரை போகமஃ
தொழிந்திடல் சுகாதீதமே.

அப் போதாகாசம் அடங்கவேண்டுமாயின் அருளிலே நீ நன்றாகவொடுங்கி நில். அந் நிலையிற்றானே அனுதியாகவே சிவத்தோடத்துவிதமாகக் கலந்துள்ள உன்னைக் கண்டுகொள்வாய். அங்ஙனமே உனது உண்மை யிவ்விதமாகுமென்று உனதறிவுக் கறிவித்த (அந்த) அருளையுந் தரிசிப்பாய். அதன்மேல் மனஅசைவு ஒருசிறிதுமில்லாத பரையோகமானது பெருகும். அதனைக்கடந்து மேலே செல்லு மனுபவத்திற் றயாநிதியாகிய பரைபோகமாம். அப்போகம் நீங்குதல் சுகாதீதமாம்.

அருளி லுறைந்துநிற்றலும் நீங்கிநிற்றலு மில்லா நடுநிலையே பரையோகமெனவும், அந்த யோகப்பயனு யுதிக்கு நாத சுகானுபவமே பரைபோகமெனவும் பகரப்படுமென்பது—

" அருளினி லுறைவது நெகிழ்வதுமின் றந்தர மமர்வது பரையோகம்
துரிதமி லதனெரு பயனுன சுகவொலி யனுபவம் பரைபோகம் "

என்னுந் திருப்பாக் கூற்றுக்களி னறியக்கிடக்கின்றது. சுகானுபவமாயுள்ள அருட்பரைபோகம் நீங்குநிலைக்கட் சிவானந்தமேலீடென்னும் பரிபூரணமாகலின் அந்நிலையே சுகாதீத மெனப்பட்டது. இதனை, " மெய்யருளாந்— தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்— தேயு மதேநிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே " என்னும் பட்டினத்தடிகளது திருவாக்கினும் பெறுதும்.

' அருளில் நீ நன்குமறை ' எனவியையும். ' நன்கு ' என்றதில் கு - பண்புப்பெயர் விகுதி. அளாவல்=கலத்தல்; சே - திவாகரங் காண்க. அங்கண்= அவ்விடம். ' அதன்மேல் சிந்தைசிறிதுஞ் சலனமற்ற பரையோகது திளைக்கும் ' என மாறுக. பரையோகம் என்பது ' பரையோகு ' என விகாரப்பட்டது; " பிறப்பறுத் திடுமி யோகு " என்றார் (சிவஞானசித்தியார் ௪ - ஆஞ் சூத்திரத்தில்) அருணந்தி சிவாசாரியரும். திளைத்தல்= நிறைதல், பெருகுதல். ' அதனைவிடுத்து ' என இரண்டனுருபு விரித்துரைக்க. உந்துதல்= ஏறுதல். (௪)

அச்சுக வதீத நிலை யானது சிதம்பர
சிதாகாச தெய்வமதையே
மச்சறு வியோமமத னிற்பவன மொன்றுவது
மானவொரு மைய்யிருமையும்
மிச்சையு முரைக்கவிசை யாவண மளாவிடுதல்
வீடென விசைப்பர்முதியோர்

நிச்சயம தாகவிது வேதமுட னாகம
நிகழ்த்தமல வத்துவிதமே.

அச் சுகாதீத நிலையே சிதம்பர சிதாகாச தெய்வமாம். அதனையே களங்கமற்ற வானத்தில் வாயு அசைவின்றிக் கூடிநிற்றல்போல ஏகமெனவுந் துவிதமெனவும் எதுவுமில்லையெனவும வரையறை செய்து கூறலாகாவண்ணம், அனுபவத்தி னீங்காது நிற்றல் வீடு பேறென முதியோர் மொழிவர். உண்மையாகவே இவ் வீடுபேறு வேதமும், ஆகமமும் வெளியிடுகின்ற அத்தாத்துவிதமாம்.

சிதாகாசமே திவ்விய தெய்வமாயிருத்தலானும், அதனை நீங்காது நிற்குஞ் சீவான்மா பிராணவாயுவேயெனும்படி நிகழ்ச்சியுற்று நிற்கு நீர்மையினீங்கின் அசைவற்ற அவ் வாகாயமேயென அறிவரும்பொருளாயிருக்குமாதலானும் அந் நிலையினை "வியோமமாதனிற் பவனமொன்றுவதுமான" என வுவமைசெய் தோதினாசிரியர். பவனம்= காற்று. இவ் வுவமையினைப்பது முடிவு—

(ஜீவந்முக்தபதந்த்யக்த்வா ஸ்வதேஹே காலஸாத்க்ருதே ।
விஶத்யதேஹமுக்தத்வம் பவநோஸ்பந்ததாமிவ ॥)

"ஜீவந்முக்தபதம்தயக்த்வா ஸ்வதேஹேகாலஸாத்கருதே ।
விசத்யதேஹமுக்தத்வம் பவநோஸ்பந்ததாமிவ ॥"

என்னுஞ் சுருதிவசனத் தறியக்கிடக்கின்றது. பைங்கலோபநிஷத்திலும், முக்திகோபநிஷத்திலுமுள்ள இச் சுலோகத்தின்றமிழ்:— "காற்று அசைவற்ற தன்மையையடைதல்போலத் தனதுடம்பு காலவயப்பட்டவுடன் சீவன்முத்தி தசையைநீங்கி விதேகமுத்தித்துவத்தை யெய்துகின்றனன்" என்க. அசைவற்ற காற்று ஆகாயமயமாய் நிற்குஞ்செவ்வி ஆகாயமொன்றுமே யிருக்கின்றதென்றேனும், ஆகாயமுங் காற்றும் வேறுவேறென இரண்டாயிருக்கின்றனவென்றேனும், அவ்வாகாயங் காற்றென்பவற்றுளொன்றுவும் விழிப்புலமாகாமையின் அவையில்லை (=மிச்சை=பொய்) என்றேனுங் கூறுதல் கூடாதவாறுகவே சிதாகாச ஆன்மசம்பந்த வீட்டுநிலையுமிருத்தலின் "ஒருமையும் இருமையும் மிச்சையும் உரைக்க இசையாவண்ணம் அளாவிடுதல் வீடென இசைப்பர்" என்றவாசிரியர் அவ்வாறிசைக்கு முரிமையுள்ளாரே அந்நிலையறிதலின் முதிர்ந்திருக்குஞ் சீவன்முத்தர்கள் என வறிவுறுத்துவான் "முதியோர்" என்றும் மொழிந்தார். சத்தியமாகவே யுள்ள அச் சம்பந்தம் மேற்கிளந்த வாறு

(ஒன்று=) ஏகம் அன்று, (இரண்டு=) துவிதம் அன்றென்னும் அன்மைப்பொருளினை அத்துவித மென்னுமொரு சொல் வேதாகமங்களிற் சொல்லப்பட்டது; ஈங்கது மலரகித முத்தியிற் பிரயோகிக்கப் படுமாற்றுற் சுத்தாத்துவித மெனவுஞ் சொல்லப்படுகின்றதெனக் கட்டுரை கூறுவார் "நிச்சயமதாகவிது வேதமுடனாகமம் நிகழ்த்தமல அத்துவிதமே" எனத் தேற்றேகாரமும் வைத்துரைத்தார். அமலம்= சுத்தம். வேதாகமங்கள் கூறுதல் ஸர்வஸாரோபநிஷத்தில்—

(க) (𑌅𑌮𑍍𑌭𑌸𑌾𑌮𑌰𑍍𑌣𑌵 𑌇𑌵𑌾𑌸𑍍𑌯𑍈𑌵𑌚𑍇𑌤𑌨𑌾𑌨𑌾𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌨𑌿𑌤𑍍𑌯
𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌖𑌣𑍍𑌡𑌾𑌦𑍍𑌵𑍈𑌤 𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑍈𑌕𑌰𑌸𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑍍।)

"அம்பஸாமர்ணவஇவஸ்யைசேதநாநாமதிஷ்டாநநித்ய
சுத்தாகண்டாத்வைத சிதாநந்தைகரஸமாநந்தம்।"

எனவும், ஸர்வஜ்ஞாநோத்தராகமத்தில்—

(உ) (𑌶𑌿𑌵𑍋𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌹𑌮𑍇𑌵𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑌂𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍।
𑌯𑌚𑍍𑌛𑌿𑌵𑌸𑍍𑌸𑍋𑌹𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌂𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍𑌸𑌦𑌾॥)

"சிவோந்யஸ்த்வஹமேவாந்ய: ப்ருதக்பாவம்விவர்ஜ்ஜயேத்।
யச்சிவஸ்ஸோஹமேவேதி அத்வைதம்பாவயேத்ஸதா॥"

எனவும் வரு வசனங்கள்கொண் டறியப்படும். தமிழ்:— (க) "புனல்கட்குக் கடல்போலச் சுகசேதனங்கட்கு ஆதாரமாய் நித்த சுத்த அகண்ட அத்துவித சிதானந்த ஏகரசமாயுள்ளதுதான் ஆனந்தம்" எனவும், (உ) "சிவன்வேறு தான்வேறென்னுந் துவிதபாவனையை நீக்கிச் சிவனே நானென்னும் அத்துவித பாவனையை எஞ்ஞான்றும் பயில்க" எனவுமாம். முற்பட்ட சுருதிவசனம் (கிமாநந்தம்=) ஆனந்தம்யாது? என்று முனிகணங்கள் கடாய கடாவிற்கு அதிருசியவாணி இனிதிறுத்த விடையென வுளது. திருப்புகழில் அருணகிரிநாதப் பெருமான்—

"- - - - - - - - - - - - - - - - - அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்கள சொரூபமுதல்—ஒருவாழ்வே"

எனக் கூறியருளினது பாயிரத்து ச-ன் உரைக்கட் காட்டினுமாகலின் அப்பெருமான் நின்றநிலையும் வேதாகமங்களிற் போதரும் அத்துவிதமென்பது கண்டாமன்றே. இதனுல் அப்பெருமானருளிய திருப்புகழும் வேதமே யாயிற்றென்க. சுத்தமென்னும் விசேடண மொழியோடும் அத்துவிதகதி சொல்லப்பட்டதை,

(𑌤𑌨𑍍𑌮𑌨𑍋𑌵𑌿𑌲𑌯𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 । 𑌤𑌲𑍍𑌲𑌯𑌾𑌚𑍍𑌛𑍁𑌦𑍍𑌧𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 । 𑌭𑍇𑌦𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌏𑌤𑌦𑍇𑌵 𑌪𑌰𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

தன்மனோவிலயம்யாதி தத்விஷ்ணோ: பரமம்பதம் | தல்லயாச் சுத்தாத்வைதஸித்தி: | பேதாபாவாத | ஏததேவ பரமதத்வம் ||)

“அம் மனோலயம் விட்டுணுவின் பரமபதமாம். அப் பரமபத லயத்தினாற் சுத்தாத்துவித சித்தி; பேதமின்மையால். அதுவே பரம தத்துவம்” என மண்டலப்ராஹ்மணோபநிஷதம் வழங்குதல்கொண் டறியலாம். மேற்போந்த ஸர்வஸாரச்சுருதியில் அகண்டாத்வைத மென்பதற்கு முன்னே “சுத்தம்” என வருவதூஉம் உய்த்துணரத் தக்கது. இந்த அத்துவிதத்தின் மீதெழுஞ்சங்கை சமாதானங்கள் பலப்பலவாமாகலின் அவற்றையெல்லாஞ் சிவசூரியப்பிரகாசத்திற் கண்டுகொள்க.

சுகாதீதத்தைச் ‘சுகவதீதம்’ என்றது தமிழ்நூன்முடிபு. ஆனது - பகுதிப்பொருள்விகுதி; எழுவாய்ச்சொல்லுருபெனினுமாம். சிதம்பர சிதாகாசம் - செவிக்குச் சொல்லின்பந் தோன்றநிற்கும் ஒருபொருட் பன்மொழி; ‘புனிற்றிளங் கன்று’ என்பதொக்கும். மஞ்சு எனற்பாலது ‘மச்சு’ என எதுகைநோக்கி வலித்தவாறு. மஞ்சு = மேகம்; ஈண்டுக் களங்கத்தின்மேற்று. அதனாற் களங்கமற்றவானம் ‘மச்சறுவியோமம்’ எனப்பட்டதென்க. ‘ஒருமைய்யிருமை’ என்றதில் யகரவொற்று விரித்தல்விகாரம். இருமையும் என்பதிலுள்ள உம்மையை ஒருமை என்பதனோடுங் கூட்டுக. ‘அமலாத்வைதம்’ என்னும் வடமொழி ‘அமலஅத்துவிதம்’ எனத் தமிழ்நூன்முடிபுகொண்டது; “பரம வத்துவித சைவமெய்ஞ் ஞானி” எனச் சூதசங்கிதையில் வருதலுங் காண்க. (ரு)

தகராலய தாரணையே சிரேட்டம்.

மூக்குநுதி நாபிநுதன் மத்திகள முச்சிவிழி
மூலநிலை நாட்டிமனசை
ஊக்கமொடு நிற்கவென வோதுமுறை மேலென
வுரைப்பினு முனக்கினுணறை
ஆக்கைநடு வாயுள மலர்த்தல சிதாகாச
மானவிது முக்கியமெனுத்
தூக்கியறி யோர்மனுட னென்று சுட்டுநிலை
தொக்கிலதை யன்றியிலையால்.

*நாசிகாக்கிரம், நாபி, புருவமத்தி, கண்டம், பிரமரந்திரம், நேத்திரம், மூலாதாரம் ஆகிய இவ்விடங்களில் மனசைத் தாரணை செய்து ஊக்கத்துடன் நிற்கவேண்டுமெனக் கூறும் புத்தகங்கள் இந் தத் தாரணைகளை மேலானவையெனச் சொல்லினும், உனக்கு இங் ஙன முபதேசிக்கப்படுகின்ற தேகமத்தியிலுள்ள சிதாகாச பதுமத்தல மாகிய இது, (தாரணைக்கு) முக்கியமாமென்று நிறுத்தறிவாயாக. ஒரு மனிதன் தன்னைக் கரத்தாற் சுட்டிக்காட்டுமிடம் தேகத்தில் அத்தலமேயன்றி வேறோரிடமன்று.*

*"நானென்று சுட்டுநிலை தொக்கில் அதையன்றியிலை" என்றது தேகமத்தியான இதயபத்மானமே ஆன்மாவென்பா னிருக்குமிட னென்பதைக் காட்சியளவையானும் இனிது புலப்படுத்தி நிற்பதா யிற்று. இது பிருஹதாரண்யகோபநிஷத்தின் ச - ஆம் அத்தியாயத்து க - ஆம் பிராஹ்மணத்தில்—*

(𑌯𑌤𑍍𑌰𑍈𑌷 𑌏𑌤𑌤𑍍𑌸𑍁𑌪𑍍𑌤𑍋𑌽𑌭𑍂𑌦𑍍𑌯 𑌏𑌷 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑍍𑌵𑍈𑌷 𑌤𑌦𑌾𑌭𑍂𑌤𑍍 𑌕𑍁𑌤 𑌏𑌤𑌦𑌾𑌗𑌾𑌤𑍍

*யத்ரைஷஏதத்ஸுப்தோ பூத்யஏஷவிஜ்ஞாநமய ஃ
புருஷஃ க்வைஷததாபூத்குத ஏததாகாத்)*

*"இவன் எவ்விடத்தே தூங்கினன்? விஞ்ஞானமய புருடன் எவ்விடத்திருந்தனன்? அவன் யாண்டிருந்து மீண்டு வந்தனன்?" எனவரு கடாக்கட்கு,*

(𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌞𑍍𑌛𑍇𑌤𑍇

*யஏஷோந்தர்ஹ்ருதய ஆகாசஸ்தஸமிஞ்சேதே)*

*"எது உள் இருதயாகாசமாயிருக்கின்றதோ அதனிற் றூங்கிக் கிடக்கின்றனன்" என்பது விடையெனக் கொளக்கிடக்கும் உரை யளவைகொண்டும் வற்புறுத்தப்படும். இதுவேயுமன்றி, "யஏஷோந் தர்ஹ்ருதய" என்றற்றொடக்கத்ததாய் இங்கே காட்டப்பட்டதும், முற்காண்டத்து ௬ - ல் எடுத்துப் பிரமாணிக்கப்பட்டதுமான வச னந்தானே பிருஹதாரண்யகோபநிஷத்தின் ரு - ஆம் அத்தியாயத்து ச - ஆம் பிராஹ்மணத்தும்வந்து அஃது, அந்த இருதயாகாசத்தில் ஈசானனமர்ந்துள னெனும்பொருளுந் தருதலினாலும், மேலைக் காண் டத்துப் கக - ற் காட்டப்பட்ட சுருதிகள் "அவன் ஆகாசம்: அது பூரணம்" எனும் அருத்தம் பயத்தலினாலும் ஆன்மா வுறங்கிக்கிடக்*

கும் இருதயாகாசம் அந்தப் பரமான்மாவேயென்பது சித்திக்கின்ற தாதலின் அந்தரியாமியாய் அப் பரமான்மாவிற் குடம்பாயுள்ள சீவான்மாவுக்குமிருக்கை இருதயத்தானமேயென்பது வாய்ப்புடைத் தாகின்றது. அனுவிஅத்துவித சம்பந்தமாய் உடம்பு முயிருமெனும் படியாயிருக்கும் இவ்வுண்மைப்பொருணிலை இருதயமாகலினன்றே கல்லாலந் தண்ணிழற்கி ழெழுந்தருளியிருந்த பரமாசாரியன்—

"- - - - - - - - - - - - - உரத்திற் சேர்கொள்
கரதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
ஒருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றான்."

எனக் கந்தபுராணங் கழறுமாறு தனது சின்முத்திரை வலக்க ரம் இருதயத்தானஞ் சாருமாறு வைத்துணர்த்தினன். இதனையே ஆசிரியர் இக் காண்டத்து உ0 - ஆஞ் செய்யுட்கண் "ஒரு சுக தேசிக கரநேறி" என்றுங் கூறுவாராயினர். இங்ஙனம் இருதிற ஆன்மாவும், அவற்றின் சத்திகளும் எவ்வாறிருக்குமென்னுஞ் சங் கையொன் றெழுமாயின் அதனை,

" சீவசத்தி யெனுமதற்கு மும்மலமுந் தூலஞ்
செறியவற்றிற் கதுசூக்க முயிர்க்கதுவுந் தூலஞ்
சீவசத்திக் குயிர்சூக்க மவ்வுயிருங் குகனுந்
தேவனது சத்தியினுக் கேதூல மதுவுஞ்
சீவனுக்குச் சூக்கமது வுங்குகற்குத் தூலந்
திகழ்குகனவ் வரியசத்திக் கேசூக்க மெனவோர்
சீவரவ னுகவெனிற் சீவசுதந் திரத்தைச்
சேரிறைவற் களித்திடுவார் தெள்ளுணர்வி னூலே."

என்னுந் திருவலங்கற்றிரட்டின் உ - ஆங் கண்டத்துச் செய் யுளை நன்குணர்ந்து இதுவே சித்தாந்தமென்று தீர்த்துக்கொள்க.

'மனசை நாட்டி' என மாறுக. 'இவை மேல்' என வையீற்றுப் பல வின்பெயர் வருவிக்க. அறை என்புழிப் படுசொற் றொக்குநின்றது. என்பு, நரம்பு முதலியகொண்டு யாக்கப்பட்ட வுடம்பு யாக்கை எனப்பட்டது; யாத்தல்= கட்டுதல்; ஆக்கை என்பது மரூஉ. தொக்கு= உடம்பு; பிங் கலநிகண்டு காண்க. ஆல் - அசை. (சு)

சொற்றதல முன்னுமன சிற்கிடன தாயரிய
சுத்ததக ராலயமதாய்க்
குற்றமறு சந்திநடை நட்டமலி காளிநடை
கோடபு மகாநடையெனும்

வெற்றிநட மூன்றையு மிழைத்தருக ளுடல்புரி
மேதையவை யாயிலகலான்
உற்றவொரு நாட்டமிட வத்தல மூரித்தெனு
வுரைத்தவுரை கட்டுரையரோ.

மேற்கூறிய பதுமத்தலமானது சங்கற்பத்தைச்செய்யும் மனத் திற் கிடமாயும், அருமையுந் தூய்மையும் வாய்ந்த தகராலயமாயும், குற்றமற்ற சந்தியாநிர்த்தனம் நடனமலிந்த காளிதாண்டவம் சேத னம் அசேதனமென்னும் இருகிறப பிரபஞ்சமும் இளைப்புற்றபோது அவ் விளைப்பினை யொழிப்பான் செய்யப்படு மகாசங்கார நடனமென் னும் மூன்று வெற்றிநடனங்களையும் புரிந்தருளிய குகேசன் அன வரத தாண்டவத்தைச் செய்தருளும் ஞானசபையாயும் பிரகாசித்த லால் ஆசிரியன தனுக்கிரகத்தாற் றனதகத்தே பொருந்திய ஒரு நோக்கத்தைப் புரிதற்கு அத்தலமே யுரியதெனு மேலே யாங்கூறிய மொழி உறுதிமொழியே யாம்.

சிவபிரான் பாற்கடலிடைப்பிறந்த மகாவிடத்தைக் கண்டத்தி ருத்தித் திருமால் முதலிய தேவர்களைக் காத்தருளியஞான்று திர யோதசியிலே பிரதோடகாலத்திலே உமாதேவி முன்னிலேக்கட் சூலஞ் சுழல விழைத்தநடம் (ஸந்த்யாந்ருத்தம்) சந்தியாநிருத்தமெனப்படும். அஃதே இங்குச் சந்திநடையெனப்பட்டது. வரலாறு ஆகமாதிகளி லறியலாம். நடை= நடம். சிவபிரான் வைரவ மூர்த்தங்கொண்டு பழையனூரென்னு நகரத்தையுடைய திருவாலங்காட்டிற்றங்கியுள்ள காளியினது (கொடுமை=) சண்டத்தினை யடக்குமாறு ஆங்குச் செய்த ஊர்த்துவ நடனமே காளிநடையெனப்பட்டது. இது, சண்ட தாண்டவமென்றுஞ் சொல்லப்படும். உமாதேவி கோபங்கொண்ட ஞான்று அத்தேவியின் றிருத்தோளினின்றுந் தோன்றினவளே காளி. வரலாறு அத் தலபுராணத்தறியலாம். அங்குள்ள சபையினை இரத்தினசபை யென்ப. திருச்சிற்றம்பலத்தானுகிய இறைவன் திரு வாலங்காட்டிற்புகுந்து அத்திறநடனஞ் செய்திலனேல் உலகம் முழு துங் காளிக்குணவாய்விடுமென்பதை ஊமைப்பெண் புத்தனுக்கெடுத் துரைத்தனளெனும் பொருளில்—

“தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ.”

எனவெழுந்த திருவாசகத்தும் அக் காளியினதுகொடுமை யறியக்கிடக்கின்றது. பிருதிவி முதல் ஆகாயங்காறுமுள்ள பூதமைந்தும் ஒன்றிலொன்று யொடுங்கிய பின்றை அவ்வாகாயம் அகங்காரத்திலும், அது குணத்திலுமொடுங்கும். (𑌗𑍁𑌣𑌕𑌾𑌰𑌣𑌂, 𑌕𑌲𑌾 𑌚𑍈𑌵 𑌕𑌲𑌾𑌜𑌾𑌯𑌾) "குணகாரணம், கலாமேலே கலாம்மாயா" எனமிருகேந்த்ராகம அத்வப்ரகரணங் கூறிச்செல்லுமாற்றானே அக் குணகாரணமான அவ்வியத்தங் கலையிலும், அக்கலை மாயையிலு மொடுங்கும். பின்றை—

(𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌦𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍍𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌰𑍍𑌵𑍈𑌨𑍍𑌦𑌵𑌂 𑌧𑍍𑌵𑌨𑌿𑌃 ।
𑌨𑌾𑌦𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌹𑌰𑌃 ॥)

"வித்யாமத்திஸதாதத்வம் தத்பிந்துர்வைந்தவம் த்வநி꞉ ।
நாதமத்தி பராசக்திச் சக்திமத்தி ஸ்வயம்ஹார꞉ ||"

என மேலைப் பிரகரணங் கூறுகின்றபடி அம்மாயைக்கும் மேலாதாரத்துள்ள சுத்தவித்தை சதாசிவ தத்துவத்திலும், அது விந்துவிலும், அது நாதத்திலும், அது பராசத்தியிலும், (கலையின்வியாபாரமெல்லா மொடுக்கிக்கொண்ட) அச்சத்தி அரனிடத்திலு மொடுங்குஞான்று அந்த அரனொருவனே மாயாகாரியமாக மகாமயானத்திற் சேடித்துநின்றுசெய்யுந் திருநடனமே மகாநடனமெனப்பட்டது.

"கடல்விட நுகர்ந்த தொல்லைக் கடவுள்பின் னழிக்குங் காலை
உடலுயி ரகிலம் யாவு மொடுங்கிய விடம தன்றோ
சுடலைய தாகு மந்தச் சுடலைகா ணனைய சோதி
நடநவில் கின்ற வெல்லை நாடருந் தகைமைத் தஃதே."

என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத்தானும் இந் நடனத்தையுணரலாம். இதனைப் பிரதம மகாசங்கார தாண்டவமென்றும் மொழிப. இத் தாண்டவகாலத்தில் ஆன்மகோடிகள் உறங்கிக்கிடப்பார்போல அவ் வம் மாயாகாரணத்தில் அடங்கிக்கிடக்கும் இயைந்தவாறு. அயனது சிருட்டியையும் அரியது திதியையுஞ் சங்காரகாரியகுணருத்திரமூர்த்தி வாயிலாக வடக்கிக்கொண்டு அம்மூர்த்தியுந் தன்மாட் டடங்கநிற்குந் தலைவனது காரியம் பேரிறுதித்தொழிலாமாதலின் அதற்குரிய நடமும் மகாநடன மெனப்பட்டது. அதனால், இந் நடத்து ளடங்காநட மின்றென்க. கூறிப்போந்த முத்திறநடமும் வெற்றிப்பாடாயிருத்தலின் அவற்றை வெற்றிநடமென்றது கொன்னும் பொருத்தமன்றோ. இந் நடநாயகன் குகனென்றது ஆன்மஅந்

தரியாமியே யாண்டுமிருக்கும் பரமான்மாவென்பதை யுணர்த்துவ தாயிற்று. குகனென்பது இந் நூலகத்தே அடுத்தடுத்து வருமாறு இங்கும் வந்தமையின் இது, தன்குறிவழக்க மிகவெடுத் துரைத்த லென்னும் உத்தியுமாம். " குகன் ஆடல்புரி மேதை அவை" என்பது முற்காண்டத்துப் ௬௩ - ன் உரையில் விளக்கப்பட்டபடி பிண்டத்திலே சிருட்டி முதலிய ஐந்தொழிற்கூத்தென்னும் அனவரத தாண்டவஞ் செய்யப்படு ஞானசபையென்பதை யுணர்த்தி நிற்பதாயிற்று. இத் தாண்டவத்தினை,

" ஆமே பொன்னம்பல மற்புத மானந்தம்— ஆமே திருக்கூத்தனவரத தாண்டவம்" என்று திருமந்திரம் ௪ - ஆந் தந்திரத்தே நவிறலுங் காண்க. மேலேகூறிய ஏதுக்களால் ஒருநாட்டமிடற்கு இத் தலமே யுரித்தென்னுஞ் செய்யுணிச்சயம்— இக்காண்டத்து ௩ - ன் உரைக்கட் பிரமாணிக்கப்பட்ட மைத்ரேயம், பஞ்சப்ரஹ்மம், சாந்தோக்யமென்னும் உபநிஷதவாக்கியங்களானும் மதுகையுறுமாயினும் இங்ஙனங் காட்டப்படுமொன்றானும் வலியுறுகின்றது. அது :—

(𑌦𑌹𑌰𑌂𑌵𑌿𑌪𑌾𑌪𑌂𑌪𑌰𑌵𑌶𑍍𑌮𑌭𑍂𑌤𑌂
𑌯𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌂𑌪𑍁𑌰𑌮𑌧𑍍𑌯𑌸𑌂𑌸𑍍𑌥𑌂 ।
𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿𑌦𑌹𑌰𑌂𑌗𑌗𑌨𑌂𑌵𑌿𑌶𑍋𑌕𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍
𑌯𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 ॥
தஹரம்விபாப்மம்பரவேசமபூதம்
யத்புண்டரீகம்புரமத்த்யஸம்ஸ்தம்|
தத்ராபிதஹரம்ககநம்விசோகஸ்தஸ்மிந்
யதந்தஸ்ததுபாஸிதவ்யம் ||)

" புரமத்தியிலே (=சரீரநடுவில்) (தஹரம்=) சிறிதாயும், பாவமிலதாயும், (பரம) ஆன்மாவிற்குச் சிறந்தவீடாயுமிருக்கின்ற இதய கமலம் எதுவோ, அதனிற் சோகமிலதாய தகராகாசமுளது; அதன் உள்ளுளது உபாசிக்கத்தக்கது" என்று தைத்திரீயாருணசாகை நாராயணங் கூறுதலேயாம். இச்சுருதியிலே (𑌦𑌹𑍍𑌰𑌂𑌵𑌿𑌪𑌾𑌪𑌂) " தஹ்ரம்விபாபம்" எனப் பாடபேதமு முண்டு. சாரீரகோபநிஷதம் மனத்திற்குறைவிடங் கண்டமென்று கூறினதற்கு மாறாக இங்ஙனம் இதயமென்ப தென்கொல்? எனின்,— அம்மனம் இதயத்துள்ள அகங்காரத்திற் பிறந்தமையின் அவ்விடமும் அதற்குறைவிடமென்பது சாலும், அது தெளிவுநிமித்தமெடுத் தோதப்பட்டதென்க.

கோள் = இடையூறு; ஈண்டிஃளப்பின்மேற்று மேதை = ஞானம். அவை = சபை. கட்டுரை = உறுதிச்சொல். அம்ரா - அசை. (எ)

புலியூ ரின்னவிட னென்பது.

பூருநடு வைக்கொடு வரிச்சரணன் வந்தனைசெய்
புலியூ ரெனப்படுமொரு
பேருறு சிதம்பரம தென்றுசில ரேடுறுதி
பேசுமது பாவனையினற்
சீருடைய வத்தல மெனப்படுவ தன்றறை
சிறந்தமறை சொற்றதிலைநாம்
ஆரமுதன் வைகுமக மேபுலியி னூரென
வதிர்க்குமறை சத்தியமரோ.

புருவமத்தியினை வியாக்கிரபாதர் வழிபட்ட பெரும்பற்றப் புலியூ ரெனப்படுமொரு பெயரோடுங்கூடிய சிதம்பரமென்று சிலர் செய்த சாத்திரங்கள் உறுதியுரைக்கும். நடேசமூர்த்தியை அங்குப் பாவிக்கும் பாவனையினல் அப் புருவமத்தி அவ்வாறு சொல்லப் படுவதேயல்லாற் பிரமாண நூல்களிற் சிறந்த வேதம் அப்படிச் சொன்னதில்லை. (அதனுல்) அரும்பொருளான அமுதன் றங்கியுள்ள இதயத்தானமே பெரும்பற்றப்புலியூரென்று யாமிங்கே கூறுங்கூறறே வாய்மையாம்.

* "பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த — வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற — ஏராரு மணிமன்று ளெடுத்த திருவடி" என்றபடி வியாக்கிரபாதர் பதஞ்சலியென்னும் பெயரிய மாமுனிவ ரிருவருங்கண்டு கழிபெருங்காதல்கூர்ந்து களிப்புறு பாக்கு இறைவன் நடனம்புரிந்த மகாக்ஷேத்திரமாகிய சிதம்பரமானது அந்த வியாக்கிரபாதர் வழிபடூஉந் தெய்வத்தலமாயிருந்த காரணத்தானே பெரும்பற்றப்புலியூரென்னும் பெயரும் பெற்றது. அது கருதியே புலியூரென்று மதனைக்கூறுபவாகலிற் "கொடுவரிசசரணன் வந்தனைசெய் புலியூர்" என வியம்பினர் ஆசிரியர். கொடுவரிச்சரணன், வியாக்கிரபாதன், புலிக்காலன் என்பன வொருபொருட் கிளவிகள். கொடுவரி = புலி. இப்புலியூர் அண்டபிண்டங்களிற் புருவமத்தியன்று; பிரமாணங்களிற் சிறந்த வேதங்கூறுமாறு

---

* சேக்கிழார் புராணம்.

இருதயமத்தியே யென்பது இச் செய்யுட்கட் போதரும்பொருள். அத்திற வேதக்கூற்றுக்களும் முற்காண்டத்து ௩-ன் உரையிலும், வேறுபல செய்யுள்களினுரைகளினும் வந்துள்ளனவாகலின் இப் பொருளேற்புடைத்தேயாம். வந்தனவற்றுள் ([illegible] - சிதம்பரந்து ஹ்ருந்மத்யே=) "இருதயமத்தி சிதம்பரம்" எனத் தர்சனோபநிஷதஞ் சாற்றினது இனிது கருதத்தக்கதே. "அமுதன்" என்றது அந்த ௩-ன் உரையுழி "யஏஷோந்தர்ஹ்ருதய ஆகாசஃ" என்றற்றொடக்கத்ததாய்க் காட்டப்பட்ட தைத்திரீய வசனத்தில் "அம்ருதோ ஹிரண்மயஃ।" எனவரு சுருதிமொழியாகவேயுளது. நிற்க.

எவ்வாற்றாலேனும் இன்பளிக்கவல்லான் கூறிப் போந்தவாறு கழிபெருங்காதல்கூர்ந்து களிப்புறு பாக்கு நடனம்புரிந்தனனென்பதென்கொல்? எனின்,—

"புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
அளிக்கு மருட்கண்ணீர் சோரநெஞ் சுருகும்
ஒளிக்குளா னந்தவமு தூறுமுள் ளத்தே."

எனத் திருமந்திரமுனிவர் கூறியவாறு புளியைக் கண்டார்க்கு வாய்நீரூறுதல்போல ஆனந்தக்கண்ணீர் சொரிய வுளமுருகுதல், உளத்தே ஆனந்தவமுதூறலென்பன அந்நடனங்காண்பார்பானிகழுமாகலின், அஃது இறைவனுடைய சால்புடைக் காரியங்களிலொன்றாகவேயுளது; விழைந்து நிற்பார்க்கே அதனையுமவன் காட்டியருள்வனென்க.

பூரு=புருவம்; சூடாமணிநிகண்டு காண்க. இதனை, ([illegible]) 'ப்ரூஃ' என்னும் வடசொல்லின் விகாரமென்றும் வழங்குப. 'அன்றி' என்னும் வினையெச்சத்து இகரம் உகரமாய்த் திரிந்துநின்றது. அறை= சொல்; சொல்லாலாகிய நூலை ஆகுபெயரால் 'அறை' என்றார். "அறையிற் சிறந்த மறை" என வுயர்வுடை யெல்லைப்பொருளைத் தரூஉம் ஐந்தனுருபு விரித்துரைக்க. 'நாம் அதிர்க்குமறை' எனக் கூட்டுக. அதிர்த்தல்=சொல்லுதல்; "பறைதல் செப்ப லதிர்த்தல் பணித்தல்" என்பது பிங்கலநிகண்டு. (அ)

ஆரணத்தினு மாகமத்தினு முள்ளமுடி
போன்றே யென்பது.

## சிற்பர சிதாகாச முத்தியடை மார்க்கமொரு
## தீர்வையற வேபனுவல்கள்

பற்பல விசைத்திடினு நற்பரன் விதித்தமறை
பன்னுவண மாழையதனை
ஒற்கமற நிற்குமொ ரகந்தையினை யாகம
முரைத்தபடி போதமதனை
அற்பமு மிலாதற வடக்கன்முடி வென்பதிலொ
ரையமிலை யையமிலையே.

ஞான சிரேட்ட சிதாகாசமுத்தியை யடையும்படியான மார்க்கம் ஒருமுடிபிலில்லாமற் பலப்பலவாகப் பலநூல்கள் கூறினும், கருணாநிதியாகிய பரமேசுவரன் விதித்தருளிய வேதமானது பிரதிபாதிக்கும்வண்ணம் அஞ்ஞானத்தை, (அல்லது) குறைவறநிற்கின்ற அகங்காரத்தைச் சிறிதுந் தலையெடாதபடி யடங்கச்செய்தலே முடிவு, அப் பரமேசுவரன் விதித்தருளிய ஆகமமான தோதியவாறு சிவபோதத்தை அவ்வாறு செய்தலே முடிவு என்பதில் ஒருசந்தேகமும் இன்று; இன்று.

மாழை=அறிவின்மை=அஞ்ஞானம்; "மாழையொன் றுலோகக் கட்டி மடமை" என்பது ழகரவெதுகை. அகங்காரம் அகந்தையெனப்பட்டது. இவ் வஞ்ஞானத்தை, அகங்காரத்தைச் சிறுவரையுந் தலையெடாதவா றடங்கச்செய்தலே (முத்தியென்னும்) முடிவெனமறைபன்னு மென்பதை,

(𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌘𑌨𑌾𑌕𑌾𑌰𑌾 𑌘𑌨𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌶𑌾𑌲𑌿𑌨𑍀 ।
𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍀 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌲𑌿𑌨𑌾𑌵𑌾𑌸𑌨𑌾 𑌬𑍁𑌧𑍈𑌃 ॥

அஜ்ஞாநஸங்கநாகாரா கநாஹங்காரசாலிநீ ।
புநர்ஜந்மகரீப்ரோக்தா மலிநாவாஸநாபுதைஃ ॥)

"மனத்தின் மலினவாசனையானது அஞ்ஞான கனாகாரமுடைத்து; மகா அகங்காரமுடைத்து; புனர்சன்மத்தைத் தருவது என்பது அறிந்தவர்களால் இயம்பப்படுகிறது" என முக்திகோபநிஷதம் மொழியுமாற்றானு மறியலாம். (𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌬𑍋𑌧𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 - புத்திர் போதநிமித்தம்=) "போதத்திற்குப் புத்திதத்துவமே நிமித்தம்" என்றோதிய மிருகேந்த்ராகமப்ரத்யபாதிப்ரகரணந்தானே—

(𑌅𑌥𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌭𑍁𑌕𑍍𑌤𑌕𑌾𑌰𑌣𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।

அதவ்யக்தாந்தராத்புத்தேர் சர்வோபூத்காரணம்சிதஃ ।)

“ முயற்சியுண்டாகப் புத்தியிலிருந்து (கர்வமாகிய) அகங்கார கரணம் பிறக்கின்றது ” எனவு மோதுதலிற் போதமென்பதும் அகங்காரமென்பதும் ஒன்றெனல் சித்திக்கின்றமையானும், இதுவே மனத்தின் வேறுபாடனைத்துமாக நிற்றலானும், “ இதற்கு மேலாக வியம்பற்பாலது சிறிதுமிலதாகலான் மனோவிகற்பங்களை யொழித்து ஆன்மவுண்மையினை யிங்ஙனமறிந்து சோகம்பாவனையெனும் உபாசனையாய வுபாயத்தை யுஞற்றுவோன் சீவன் முத்தனாய்ச் சிவத்துவ மெய்துவன் ” எனும்பொருள்— ஸர்வஜ்ஞானோத்தராகமம்—

“ பரங்நாங்யதிஹாஸ்திகிஞ்சித் ஜ்ஞாத்வைவஸம்த்யஜ்யமனோவிகல்பம்,
விஜ்ஞாநமேவம் ஸமுபாஸ்யவித்வாந் நியம்யகாயம்ஸததம் நியுக்தஃ ।”

என்று கூறிச்செல்லுமிடத்தே பெறப்படுமாற்றானும் ஆகம முரைத்தபடி போதத்தை யறவடக்கலே முடிவென்பதை யறியலாம்.

“ இந்நிலை தன்னின் மன்னி யெய்திடுங் கலாதி போதந்
தன்னள வறிந்து நிற்குந் தகவிலா மலங்க ணீத்த
அந்நிலை கரண மாகா வகையதி லறிவ டங்கி
மன்னிட வியாபி யாய வான்பயன் றோன்று மாறே.”

எனச் சிவப்பிரகாசத்தில் வருதலுமிங்ஙனங் கருதிக்கொள்ளத் தக்கதே. இதன்பொருள் :— “ இங்கோதப்பட்ட நெறியி னிலை பெற்று, ஆணவமலத்தை நீக்குதல்காரணமாகப் பொருந்திய கலாதி களா னெழுப்பப்பட்ட இச்சை கிரியை ஞானங்களையும், உயிராகிய தனதுண்மையினையும், சால்பிலாதுநிற்கின்ற மலங்களின் பெற்றியை யுங்கண்டு நீத்த அந்நிலையிலே தன்னுடைய கரணங்களோடுங் கூடாத வாறடங்கி அருளி னிலைபெற்றிட; அஞ்ஞான்றே யாண்டும் நிறைந்து நிற்கும் பெரியபயன் றோன்றும் ” எனவாம். ஆணவமலத்தின் அணுவென யாப்புண்டு கிடக்கும் ஆன்மாவின் கிரியாசத்தியைக் கலாதத்துவமானது அம் மலத்தினைச் சிறிதகற்றி யெழுப்புஞான்று வித்தியா தத்துவத்தா லெழுப்பப்படூஉம் ஆன்மாவின் ஞானசத்தியே இப் போதமாகும். இது கருதியே பரிபூரணானந்தபோதத்து முற்படலத்து கககக - ன் உரையில் “ அக் கருவிகளி னிற்கத்தக்க ஆன்ம போதமே அப் பெயர்ப்பொருளெனக் கோடல்வேண்டும் ” என்றுங் கூறினும். இப் போதம் அதன் சிறுதொழிலிற்கேற்பச் சிற்றறிவாக வே நிகழுஞ் சுட்டறிவாயிருக்கும். அக் கலாதத்துவமும் வித்தை யும் காலம், நியதி, (இச்சாசத்தியை யெழுப்பிநிற்கும்) அராகமென் பவற்றோடுங் கூடிய ஞான்றே சுக துக்கங்களை நுகர் புருடதத்துவ

மென்பது தோன்றுமாகலின் அப்போதகம் புருடதத்துவ மெனவும் படும். அதனால் அஃது ஆவி, ஆன்மா, சீவத்துவம், பசுத்துவம், சிவசுதந்திரம், சிவபோதம, சிவகரணம், தற்போதம், ஞாதிரு, சிற்றறி வென்பன முதலிய பெயர்களானுங் கூறப்படும். அறிவும், (அறிவில்லாத) சடமுங் கலந்துள்ள இத்தத்துவம் புருடனெனவும், புருடதத்துவமெனவும் புகலப்படுமாறு 'சிதசித்து' எனவிருத்தலின் அருணந்தி சிவாசாரியர் "தத்துவ முப்பத் தாறுஞ் சைதன்னி யங்க ளைந்து" என்றதன்பின் "சித்தசித் தான்மா வொன்று முப்பத மசித்தே செப்பில்" என்றுங் கூறினாராயிற்று. இத்தத்துவம் பிரகிருதியிலுள்ள மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய நான்கு அந்தக்கரணங்களோடுங் கூடி முறையே ஐயத்தோடு நினைத்தலும், யாதொன்றனை நிச்சயித்தலும், முன்னிழைத்த காரியங்களை நினைந்து கோடலும், நானென்னும் அபிமானங் கூர்தலுஞ்செய்து நிற்குமாகலின் அஃது உள்ளந்தக்கரணமே யாமென்க. இப்பெயர் கலாதிதத்துவங்கட்கு மாமென்க. இக்கிரமத்தால் மனமெனினும், புத்தியெனினும், சித்தமெனினும், அகங்காரமெனினும் போதமெனவே பொருள்படுமென்ப துணரக்கிடக்கின்றதன்றோ? அஃதுண்மையே. இப்போதஞ் சுத்தமாயையில் வசிப்பார்க்குச் சுத்தமாகவும், பிரகிருதியாகிய அசுத்தமாயையில் வசிப்பார்க்கு அசுத்தமாகவும், இம்மாயைக்கு மூலமாய் இருதிறமாயைக்கு மிடையிலுள்ளதாயிருக்குஞ் சுத்தாசுத்த மாயையில் வசிப்பார்க்குச் சுத்தாசுத்தமாகவு நிகழுந் தகைத்து. சிவகரணமாய இது, கேடுறு நிலைக்களமே சும்மாவிருத்தலாம். அங்ஙனமே சிவகரணமாம்; அஃதே முடிவென்க. இதுதானே திருமந்திரநூலில் ஆறந்த மென்புழிப் "போதாந்தம்" எனவும் புகலப்பட்டது. அகங்காரமென்பது நானெனப்படுமென்பதும், அதன் வியாபகம் இன்னனவாமென்பதும் இக் காண்டத்து உ-ன் உரையில் உரைத்திட்டாம்.

எச்சாத்திர மெவ்வா றுரைப்பினும அகங்காரமும் போதமு மொன்றே; அஃதடக்கன் முடிவென்ப தறியப்படுமாற்றானே வேதமுடிவும், ஆகமமுடிவு மொன்றே யென்பதை இச்செய்யு ளுணர்த்திற்று.

பன்னல் = சொல்லுதல்; பிங்கலநிகண்டு காண்க. ஒற்கம் = சிறுமை, குறைவு. 'நற்பரன் விதித்த' என்பதை ஆகம மென்பதனோடும், 'அற்பமு மிலாதற வடக்கன் முடிவு' என்பதை அகந்தையினை யென்பதனோடுங் கூட்டுக. 'ஐயமிலை ஐயமிலை' என்னும் அடுக்குத் தேற்றம் பற்றிற்று. (௧)

போதத்தினதுதயமு மொடுக்கமும் இருதயதாமரை யின்கண் ணென்பதும், அஃதெங்கணு முள்ள சிதாகாச மென்பதும்.

போதமல தாங்கார மென்றதெழ நின்றவொர்
புலம்புருட னின்றதலமே
ஆதலி னடங்குமிட னங்ஙன மலாதுபுற
ணுவதிலை யந்தவிதய
சீதமல ரின்வெளி சிதம்பரம தாயிடை
சொலாவண நிறைந்தொளிர்தலால்
யாதொரு தலஞ்சொலினு மங்குமது வாகுமத
ணுலிதய மேநிலயமே.

சீவபோதம் அல்லது அகங்காரம் என மேலே சொல்லப்பட்டது தோன்றவிருக்கின்ற ஓரிடம் புருடனிற்கின்ற இதயகமலமாகிய தலமேயாகலின், அஃதடங்கு மிடமும் அவ்விடமே யல்லாது வேறாக விருப்பதில்லை. இதயத்துள்ள அக் குளிர்ந்த கமலமலரின் வெளியானது சிதாகாசமாய்ப் பிறிதோரிடமுண்டெனக் கூறாதபடி எங்கும் பிரகாசித்திருத்தலால், அவ்வாகாசத்தினிருப்பு இருதயத்திற்கு வேறுமோரிடமென்று யாதொரு சாத்திரங்கூறினும் அவ்விடத்து மதுவே யிருப்பதாகுமாகலின் இதயகமலமே தகராலயமாம்.

முற்காண்டத்து ௩O - ன் உரைக்கண் அகப்பாதம் எழுவாயாகச் சிரசு இறுவாயாகக் கூறப்பட்ட விடங்கட்குரிய அதலமுதற் சத்தியலோகங்காறு முள்ள கச - உலகங்களும், ஆதார மூலாதாரம், குய்ய சுவாதிட்டானம், நாபி மணிபூரகம், நெஞ்சு அனாகதம், கண்ட விசுத்தி, புருவமத்திய ஆஞ்ஞை யென்னும் ௬ - ஆதாரங்களும், சென்னி நடுவணுள்ள பிரமரந்திரமும், இதற்குமேற் பன்னீரங்குலத்தின்மீ தோதப்படு துவாதசாந்தமும், வேறு பலவிடங்களுமுண்மையின் அவற்றிலெல்லாம் அநுஸ்நித்தியமாயுள்ள அச் சிதாகாசமுள்ளதென்பார் "யாதொரு தலஞ்சொலினும் அங்குமதுவாகும்" என்றார். அவ்வாறுள தென்பதற்குரிய சுருதிமுதலிய பிரமாணங்களும் போந்தவுரைகளில் அதிகமும் வந்துள்ளன.

"எங்குஞ் சிதம்பர மெங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்குந்
தங்குஞ் சிவனருள்"

எனத் திருமந்திரத்து ௬ - ஆந் தந்திரத்தே நிகழ்மொழிகளும் அதுபற்றியே யெழுந்துள்ளன. அவ்வாதாரம் ஆறனுள் மூலாதாரந் திருவாரூர், நாபி திருவானைக்கா, மணிபூரகந் திருவண்ணாமலை, நெஞ்சஞ் சிதம்பரம், கண்டந் திருக்காளத்தி, புருவமத்தியங் காசியெனவும் பன்னிய பின்னர்ப் பிரமரந்திரங் கயிலையென்றும், துவாதசாந்தத்தலம் மதுரையென்றுங் கூறுவதாயிற்றுத் திருவாலவாய்த் திருவிளையாடற்புராண மென்பதை,

> " திருவள ராரூர் மூலந் திருவானைக் காவே நாபி
> மருவளர் பொழில்சூ ழண்ணா மலைமணி பூர நீவிர்
> இருவருங் கண்ட மன்ற மிதயமாந் திருக்கா ளத்தி
> பொருவருங் கண்ட மாகும் புருவமத் தியமே காசி.
>
> பிறைதவழ் கயிலைக் குன்றம் பிரமரந் திரமாம் வேதம்
> அறைதரு துவாத சாந்த மதுரை "

என்னுங் கூற்றுக்களா னறியலாம். நாபியின் கீழுள்ள குய்யமே நாபி யெனப்பட்டது. இவ்வாதார விவரத்துள்ளே (கமலாலயம்=) திருவாரூரும், சிதம்பரமும், காசியுமே அந்த ௩0 - ன் உரைக்கட் காட்டப்பட்ட தர்சனோபநிஷத் நிச்சயத்தி லுள. ஏனையவிவரம் அங்ஙன மில்லை. நிற்க. சிதாகாசம் யாண்டுமிருப்பினும் நெஞ்சத்து அனாகதத்திற்கு மேலிடத்தே விசுத்தி, ஆஞ்ஞைமுதலிய தானங்களிருக்கின்றமையின் அவை தகராலயத்தினும் மேம்பாடுடையன வெனப்படாவோவெனின்,— பிராணனை மேலாகவும் அபானனைக் கீழாகவுங்கொண்டு நடுவிருக்கும் அங்குட்டவளவுடைப் புருடனினும் அந்தப்பிராணன் மேம்படு பொருளாதலின்று; அதுபோலவும், சூக்குமலிங்கம் இருக்கின்ற மூலத்தானத்திற்கு மேலே தூலலிங்கமாகிய தூபிவரையு மெழுப்பப்பட்டிருப்பன வெல்லாம் அத்தானத்தினு மேம்பாடுடையனவாய் மதிக்கப்படுவனல்ல; அவ்வாறாகவும் அவ்விசுத்தி முதலிய தானங்களும் அங்ஙனம் மேம்பாடுடையனவாய் மதிக்கப்படா. அங்ஙனமாயின், இதய சிதம்பரத்தினுந் துவாதசாந்த மதுரை மேம்பட்டதென்பதாக அப்புராணம்— " அறைதரு துவாதசாந்த மதுரையீ திதிகம்" என்றியம்புவதெவன்? எனின்,— உடம்பின் பகிர்முக வுறுப்புக்களுண் மேலிடத்திருக்குஞ் சிரசு சிரேட்டமெனப்படுமாறு பகிர்முகத்துள்ள அதுவு மவ்வாறு கூறப்பட்டதென்புழி அவ்வதிகம் பொருந்துமென்க. இருதயமத்தி சிதம்பரமென்னுந் தர்சனோபநிஷதம்— " இருதய சரோருகம் பிரயாகை "

என்றதனாலும் அந்நெஞ்சம் பகிர்முகத்ததென்பதூஉம், சிகைநுனியே துவாதசாந்த மெனப்படுமாற்றானும் மாந்தருடம்பின்மீது தூலமானபார்வைக்குப் புலப்படாத் தேசசாய்நிற்கும் யாதொரு சத்தியானது விரனுனிதோறும் ஓரங்குலத்திற் கதிகந்தோன்றி நிற்கின்றது போலச் சிரசின்மேற் பன்னீரங்குலங்காறும் மேனோக்கிநிற்கும் அச்சத்தித்தானமே துவாதசாந்த மெனப்படுமாற்றானும் அவ்வந்தம் பகிர்முகவுடம்பினைச் சார்ந்ததென்பதூஉஞ் சித்திக்கின்றன காண்க. இவ்வாறு அவ்வதிகத்திற்குப் பொருள்கொள்ளாக்கால் அந்தர்முக சூக்கும விசேடங் கருதாமே அத் தலத்தை யுயர்த்திக்கூறுவான் அப்புராணவாக்கிய மெழுப்பப்பட்டதென்பது தோன்றிநிற்கும். அத்தலத்திற்குரிய தமிழ்மறைப் பதிகங்களினும் முதற்கண்ணுங் கடைக்கண்ணுந் "திருச்சிற்றம்பலம்" என்பது நீட்டப்பட்டிருத்தலினாலும், "கோயில்" என்பது அச்சிற்றம்பல மொன்றற்கே வழங்கப்பட்டு வருதலினாலும் உண்மை யுய்த்துணரத் தக்கதே. பிறிதொரு படியும் விசாரிப்பாம். அந்த ௩௦ - ன் உரைக்கட் காட்டப்பட்டபடி பிரமாண்ட ரூப புருடனது சிரசு சத்தியலோகமா யிருத்தலின் அதன்மேலாகச் சொல்லப்படு மிடத்திலன்றோ துவாதசாந்தத்தல மிருத்தல்வேண்டும்? அவ்வா றில்வழியே பொருந்தத் திருவாரூர் முதற் றிருவண்ணாமலை வரையும் உத்தரநிரலிலே மூன்றுதலங்களை மொழிந்து மேல் இதயங்கூறுமிடம் அவ்வண்ணாமலைக்குத் தெற்கிலுள்ள தில்லைத்தலத்தைத் தெரித்தமையானும், மறித்தும் உத்தர நிரலிலே (பிரமரந்திரங்காறும்) மூன்றுதலங்களை மொழிந்து மேலே துவாதசாந்தஞ் சொல்லுமிடம் சொற்ற தலங்கட்கெல்லாந் தெற்கேயுள்ள மதுரையா யிருத்தலானும் அப்புராணத் துவாதசாந்தம் யதார்த்தத்திற் சொல்லப்பட்டதாகாது. மற்றியாதாமெனின்,— அத்தலமாக விதனை வழிபடுகவென்னு நிச்சயத்தில்வைத் தோதப்பட்டது; அதனாற் பிரதிநிலயமாகலா மென்க. இம் முடிபே காசி, கேதாரம், சீசைலமென்னுஞ் செய்திக்குமாமென்ப தேற்புடைத்து. சித்தம் போதசம்பந்தமா யிருத்தலாற் சித்தவுறையுளாம் நாபிப் பகிர்முக பூலோகமும், போதவுறையுளாம் இருதயப்பகிர்முக சுவர்லோகமுஞ் சம்பந்தத்தா லொற்றுமையுறும்; ஆறாதார நியதியினும் நாபி, இருதயமாகிய இவ்விரண்டுமே மத்தியி லுறுகின்றன ; நடுவொழிவதின்று.

முன்னர்த் தோன்றியவற்றிற்கெல்லாம் முன்னுளதாய தகரபுண்டரீக சிதாகாசதெய்வம் இங்ஙனங் கூறியவாறு எங்குமிருத்தலினாற்

சூனியமென வோரிடமுமின்றென்பது பெற்றாம். இதுகருதியன்றோ ஆசிரியர் —

" ஆனியின் றெங்கணுமென் னுதிநீ நிற்றலினுற்
சூனியமென் றெவ்விடத்தைச் சொல்லலாம் பூரணமே."

என்றுந் தமது பாடலிலே கூறினார். இதனாற் சூனியத்தினின்று இவ்வுலகங் கருத்தாவாற் சிருட்டிக்கப்பட்டதென்பாரது கோட்பாடு சால்புடைத்தாகா தென்பது மறியப்படுவ தாயிற்று. சூனியமென வோரிடந்தாபித்துக் கொள்ள வேண்டுமாயின், அவர் கூறுங் கருத்தாவிற்கு அபரிபூரணமெய்தும். எய்தி னென்னை? எனின்,— சிற்றிலிழைத்து விளையாடுஞ் சிறுமகார் நிச்சயித்த தெய்வம்போலாமாகலின் அது, பரிபூரண சித்தாந்தத்திற் கேலாமை யறிக. ஈண்டு, யாண்டும் அக்கருத்தா சூக்குமப்பொருளாயிருப்பன்; காணப்பட்ட இவ்வுலகம் முன்னில்லா திருந்தமையே சூனியமென் புழியும் அச்சூனியபதம் நிலைபேறாமற் பரிபூரணமாப் ஊர்ண நாபிப்பூச்சிபோன் றிருக்குந் தெய்வத்தின்கண்ணிருந்து நூல்போல வெளிப்பட்டதே நிலைஇய வுலகமென்பது சித்திக்கும். இவ்வுவமான வுவமேய வியாக்கியானம் பரிபூரணானந்தபோதத்து முற்படலத்துரை யில் இனிது செய்யப்பட்ட தாகலின் ஆண்டே கண்டுதெளிக. " உலகவ னுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரார் " எனச் சிவஞானசித்தியாரின் பரபக்கத்தில் வருவதூஉம் அப்பொருட்டென வறிக.

மேற்கிளந்த ஏதுக்களாற் சிதாகாச சிவபரஞ்சோதியை எவ் வெவ்விடத்து வழிபடினும் அது, தகராகாச தெய்வவழிபாடே யாமெனல் பெறப்படுவதாயிற்று வழிபடுவோர்க்குத் தகராலய தாரணையே சிரேட்டமாமென்பதற்குரிய நியாயத்தையும் போந்த சு - ஆஞ் செய்யுளு முறையும் விளக்குவனவா யுளவே.

**ஆங்காரம்** - அகங்காரம் என்பதன் விகாரம்; " ஒருரு வாயினை மானுங் காரத் தீரியல்பாய் " என்றார் திருஞானசம்பந்தப்பெருமானும். நிற்கின்ற என்னாது 'நின்ற' என இறந்தகாலத்தாற் கூறினது தெளிவுபற்றியே; " போகமாய்த்தான் விளைந்த பொற்பினன் " என்புழிப்போல (சிவஞான போதம்). இடம் என்பது இடன் எனவும், புறம் என்பது புறன் எனவும் போலியாயின. நிலயம் = ஆலயம்; ஈண்டுத் தகராலயமே; " நிலயாலயாঃ " என்பது அமரஸிம்ஹம்; நிலயம் என்பது வடமொழியன்று. (௪0)

**சிதம்பரத்தையடைவா னுரியவுபாய முணர்த்தல்.**

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

போதப் பொறிவெளி மறையிற் குகனுள
    பொதியைத் திரையிடு திரையேழும்
நாதத் துடன்விடு மலகிர்த் தியநட
    நணுகா தருணட மதுமேவும்
வாதப் படுபல சமயக் குழுவுள
    மறையா வெறுவெளி பொதுவேபோற்
கோதற் றுளவொரு கனகப் பொதிவெளி
    குறுகிற் பெருவெளி மயமேயாம்.

**போ**தமாகிய சிற்றறிவுவெளி மறைந்திடற குகேசனெழுந் தருளியிருக்குஞ் சபையை மறைவு செய்துள்ள ஏழு திரைகளும் நாததத்துவத்தோடு நீங்கும். மாயாமலபலனை விளக்கும் ஊனநடன மானது (ஆன்மாவை) அணுகாது. ஞான நடனமானது பொருந் தும். வாதத்தாற் பிணங்குஞ் சமயக்கூட்டங்களுள்ளும் மறைந்து போகாத பூதாகாசவெளி அனைவர்க்கும் பொதுவாக விருப்பது போலவே, எவருமொரு குற்றங்கூறுதபடி பொதுவாகவிருக்கின்ற கனகசபைச் சிதாகாசத்தை (ஆன்மா) எய்திடின் அப் பெருவெளி மயமேயாம்.

திரைவிவரம் முற்காண்டத்துப் கச - ஆஞ் செய்யு ளுரைகளிற் பன்னியாயிற்று. மாயாமல பலனை விளக்குநடனம் "மலகிர்த்திய நடம்" எனவும், பேரின்பவீட்டினையுதவு நடனம் "அருணடம்" எனவு மியம்பப்பட்டன. இவ்விரண்டும் நிரலே ஊன நடனமெனவும், ஞான நடனமெனவுஞ் சொல்லப்படுமென்பது திருவருட்பயனில்—

"ஊன நடன மொருபா லொருபாலா
ஞானநடந் தானடுவே நாடு."

எனவரு செய்யுளிற் பெறுதும். பூதாகாசத்தில் விழிப்புலமாவ தொன்றுமின்றுதலின் அது, வெறுவெளி யெனப்பட்டது.

'ஒரு கோதற்றுள கனகப்பொதி வெளி' எனவியையும். கோது = குற்றம்.    (கக)

சுத்தப் பிரம புரத்திற் குகனொரு
    சொருபா கலமது வுளதாகச்

சித்தத் துழைமு ளினைத்துக் குருவுட
றிகழும் படிமதி நனிபாவித்
தத்தற் குரிய வெழுத்தைப் பரவியு
ளலையா வணமனி யதன்மேலந்
நித்தப் பெருவெளி பொற்சிற் பரவொளி
நிகழுந் தரமென வவண்முன்னே.

சுத்தப் பிரமபுரத்திலே (= தகராலயத்தில்) குகனது ஒப்பற்ற சொரூபாகாசம் உள்ளதென மனதினாலே முன்னர் சிந்தித்துக் கொண்டு, (அங்ஙனம்) ஆசிரியனது வடிவமானது பிரகாசிக்கும்படி (அதனை) மனசினால் நன்றாகப் பாவித்து, குகசரணாதவனுக்கே சொந்தமான அக்ஷரத்தை மானசிகமாகச் செபித்து, மனமலையாவாறு நிலைபெறுத்தி, பின்னர் அந்த நித்தியப் பெருவெளியினைப் பொன்மய சிற்பரவொளி பிரகாசிக்கும் மேம்பாடுடையதென்று அங்குத் தியானிப்பாயாக.

மர + அடி = மராடி என மரீஇயினாற் போலச் சொரூப + அகலம் = சொரூபாகலம் என மரீஇயிற்று; விதி "அகர ஆகாரம் வரூஉங் காலை — ஈற்றுமிசை யகர நீடலு முரித்தே." என்னுந் தோல்காப்பியத்துச் சூத்திரமாம். சொரூபாகலமென்பது சொரூபமாகிய ஆகாசமென்னும் பொருளுடைத்து. அது கடவுளது தடத்தலக்கணமெனப்படும் பொதுவியல் பல்லாத சொரூபலக்கணமெனப்படுஞ் சிறப்பியல்பாம். அகலம் = ஆகாயம்; "அந்தர மகல மாகாயப் பெயரே" என்பது பிங்கலநிகண்டு. அநுக்கிரகார்த்தமாக முதல்வன்கொண்ட பலவடிவங்களிருப்பினும் அவற்றுளெல்லாம் ஆன்மலாப நிமித்தந் தனதெதிர்நின்றருள் வடிவமே முக்கியமென்பதும், மானுடவடிவிற் றனக்கனுக்கிரகம்புரி ஆசாரியவடிவமும் அப்பரமாசாரிய வடிவமாகவே பாவிக்கத்தக்கதென்பதும் "குருவுடல் திகழும்படி மதி நனிபாவித்து" என்றதிற் பெறுதும். இம்முக்கிய நோக்கியன்றே நூலாசிரியர் "குருவருளின்றி யருள்வரவின்றே." என்று ஞானவாக்கியத்தும் நவில்வாராயினர்.

சித்தத்துழை என்னுமேழனுருபு மூன்றனுருபாய் மயங்கிற்று. மதியால் என்னு மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது. எழுத்து - எழுதப்படுவதென்னும் பொருட்கண் எழுதென்னு முதனிலை முன்னர்ச் செயப்படுபொருண்மையுணர்த்தும் ஐ - விகுதி புணர்ந்து கெட்டவழியே தகரமிரட்டித்து முடிந்தசொல். பெருவெளியினை என விரண்டனுருபு விரிக்க. (௧௨)

இந்நெறி, விடயப்பிரியர்கட்கமைவ
தரி தென்பது.

சலனப் படுநினை வொழிவிற் பரவெளி
தனையுற் றிடுபர நினைவான
துலைவற் றெழுமது தனையிற் றெனவரு
ளுதவித் திறல்கொடு நனிகாணும்
மலமற் றுளவரு ளையுமிற் றெனவுணர்
மருவிப் பெருவெளி தனைமேவுஞ்
சொலுமித் தகைநெறி விடயத் தலைவுறு
துரிசர்க் கமைவது மரிதாமால்.

அசைவின்பாற்படு நினைவின் நீக்கத்திற் பராகாசத்தைப் பொருந்தும் உலைவற்ற பரநினைவானது தோன்றும். அது, தனதான்ம சொரூபத்தை இத்தன்மையுடையதென அருளின் சகாய வலிகொண்டு நன்கு கண்டுகொள்ளும். (பின்னர் ஞானமயமான அது) நின்மலமாயுள்ள அவ்வருளையும் இத்தன்மையுடையதென வறிந்தணைந்து அவ்வருளினது நாயகமாகிய சிதாகாசப் பெருவெளியை யெய்தும். இங்ஙனங்கூறப்பட்ட மேம்பாடான மார்க்கம் பஞ்சவிடயவழியிலே யலைந்துதிரியுந் துக்கமுடையார்க்கு வாய்ப்பது எளிதன்று.

வாசனையோடு கூடிய பந்தமனம் "சலனப்படு நினைவு" எனவும், அவ்வாசனையினின்று நீங்கிய முத்தமனம் "பரவெளிதனை யுற்றிடு பரநினைவு" எனவுஞ் சொல்லப்பட்டன. இத்திறம் —

(தஸ்மாத்வாஸனயாயுக்தம் மநோபத்தம்விதுர்புதா: ।
ஸம்யக்வாஸனயாத்யக்தம் முக்தமித்யபிதீயதே ॥)

" தஸ்மாத்வாஸநயாயுக்தம் மநோபத்தம்விதுர்புதா: ।
ஸம்யக்வாஸநயாத்யக்தம் முக்தமித்யபிதீயதே ॥"

என்னும் முக்திகோபநிஷதச் சுலோகத்தறியக் கிடக்கின்றது. பொருள் :— "வாசனையோடு கூடிய மனம் பந்தமாகுமென அறிஞரறிகின்றனர் : வாசனையினின்று நீங்கிய மனம் முத்தமென்று சொல்லப்படுகிறது" எனவாம். விடய சலனமொழிந்த விடத்தே ஆன்மவறிவு ஞானப்பிழம்பாமாகலின் அதுவே தனதுண்மையையும், தலைமைப்பொருள் அருள் என்பனவற்றையுங் கண்டணையுமென்பது ஈண்டுப்பெறுங் கருத்தாயிருக்கின்றது. வாசனையென்பது விடயப்பற்

ருகலின் அதன்வழி யலைந்துதிரி துக்கமுடையாரை "விடயத் தலைவுறு துரிசர்" என்றார். துரிசு = துக்கம்; "துரிசு மல்லல கண்டமுந் துராலும்" என்பது பிங்கலந்தைகண்டு.

௧௧ - ற் "கனகப் பொதுவெளி குறுகிற் பெருவெளி மயமேயாம்" எனச் சுருங்கச்சொல்லியதைப் ௧௨ - லும், ௧௩ - ஆகியவிதனிற் "பெருவெளி தனைமேவும்" என்பது வரையிலும் விளங்க வைத்தன ரென்க.

'உலைவற்ற' என்னும் பெயரெச்சத்து அகரம் விகாரத்தாற் றொக்கது. 'உலைவற்ற பரநிலை வானதெழும்' எனக் கூட்டுக. கொடு - கொண்டு என்ற மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபின் விகாரம். அவ்வருளையும் எனச் சுட்டு வருவிக்க. உணர்ந்து என்னும் வினையெச்சம் உணர் என நின்றது. விடயம் = (ஐம் பொறியினாலும்) பற்றப்படு பொருள். 'அமைவதும்' உம்மை - அசை; "ஆயிடு மதுவு மென்னின்" என்புழிப்போல (சிவஞானசித்தியார் ௪ - ௧௫). ஆல் - அசை. (௧௩)

இன்னருளை யடைதற் கிருக்கின்ற மனமே
சாலு மென்பது.

மனதிற் கரியது பிரமப் பொருளென
மறைகூ றியதுர முளதேனும்
நனவுற் றறிவிழி தனையுற் றறிநிலை
நலனுர் தெளிவுள விழியாடி
தனையுற் றறியும தெனநற் றிருவரு
டனையே பெறமன மதுசாலும்
பினையப் பரநிலை வதையுற் றருளொடு
பிரிவற் றுளநிலை பெறலாமால்.

பிரமப்பொருளானது மனதிற் கெட்டாததென்று வேதங்கூறியது நிராட்சேபமான வுண்மையாயினும், சாக்கிராவத்தையைப் பொருந்திப் பலபொருளையுமறியுங் கண்ணானது தன்னை யுற்றறியுநிலையிலே நலமார்ந்த வொரு தெளிவுள்ள கண்ணாடியைப் பொருந்தி நின்று காணும். அக் கண்ணாடிபோலத் தனதான்ம சொரூபத்தைக் காட்டுந் திருவருளைப் பெறுதற்கு இப்போ திருக்கின்ற மனமே சாலும். இதன்மேல் அப் பரநிலையையு மெய்தி அருளுடன் நீங்காதுநிற்கு நிலையையும் பெற்றுக்கொள்ளலாம்.

மனதிற் கரியது பிரமப் பொருளென மறைகூறியதை, முற்காண்டத்து உஎ - ன் உரையுழைக் காட்டப்பட்ட கடோபநிஷத வாக்கியத்தா னறியலாம். இச்செய்தி பல வுபநிடதங்களிலு முளது.

இருக்கின்ற மனம் பிரமந்தை நேரேயறியுந் தன்மைத் தன்றாயினும், அருட்டுணைகொண் டறியும்; அதனுன் முயலகவென்பது செய்யுட் கருத்து.

மனம் - மனதெனப்பட்டது; "நனவிலுங் கனவிலு நம்பா வுன்னை— மனதிலும் வழிபடன் மறவேன் - - - - ஆலவ துறையானே" என்றார் திருஞானசம்பந்தசுவாமிகளும். "மனதின் வண்ணம்" "பேய்மனதை யண்டிநான்" எனத் தாயுமானுர் ஓதியதுங் காண்க. விழியாடி=கண்ணுடி. 'அஃதென' என்பதனுள் ஆய்தவெழுத்து விகாரத்தாற் றொக்கது. 'மனமது' என்பதில் அது - பகுதிப்பொருள் விகுதி. 'கிலே' முன்னையது ஏழனுருபுத்தொகை; வினயது இரண்டனுருபுத் தொகை. (கச)

உருவமனம் இனையதற்தரித்து; அருவமனம் இனையதற்தரித் தென்பது.

விடயக் கறைமன முருவப் பொருளுணர்
விழியைக் கொடுதெரி யுருவாகுங்
கடமுற் றவிர்திரு வுருவைக் கருதுதல்
கடனக் கறைமன முளகாறும்
அடைநற் பரமன மருவப் பொருளுண
ரருளைக் கொடுதெரி யருவாகும்
அடமற் றொளிர்பெரு வெளியைக் கருதுத
லறையப் பரமன வியல்பாமே.

விடயப்பற்றோடுங் கூடிய மலினமனமானது உருவப்பொருள்களைக் காணுங் கண்ணைக்கொண்டு உருவங்களை யறியு முருவமனமாகும். அம் மலினமன மிருக்குந துணையும் உடம்பைப்பொருந்திப் பிரகாசிக்கும் ஈசனது திருமேனியைத் தியானித்திருத்தலே கடமையாகும். மேலெய்துஞ் சுத்தமான பரமனமானது அருவப்பொருள்களை யறியும் அருளைக்கொண்டு அருவங்களையறியும் அருவமனமாகும். வலிந்துபற்றுந்தன்மை யொழிந்து, பிரகாசிக்கும் பெருவெளியைத் தியானித்திருத்தலே சொல்லப்பட்ட பரமனத்தின் சுபாவமாம்.

பெருவெளியைக் கருதுதல் பரமனவியல்பாம் என்றதனால், அம்மனம் உருவங்கருது மியல்பிற்றன்றென்பதும், உருவமனம் அருவங் கருது மியல்பிற்றன்றென்பதும் பெறுதும். இம் மனங்களைப்பற்றி யுரைத்த செய்திகள் முற்காண்டத்து உ0 - ன் உரையிலு முளவாக வின் அவற்றினையு மீண்டுக் கருதிக்கோடல் வேண்டும். அடம் - (𑌹𑌠) ஹடம் என்னும் வடசொல்லின் விகாரம்; வலிந்துபற்ற லெனும் பொருளுடைத்து. அன்னணம் பற்றுதல் ஹடயோகமெனப் படும். இந்த யோகம் வராஹோபநிஷத்தில் —

(𑌯𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑌨𑌜𑌾𑌯𑌾𑌸𑌹𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 ।
𑌵𑌿𑌘𑍍𑌨𑌬𑌾𑌹𑍁𑌲𑍍𑌯𑌸𑌂𑌜𑌾𑌤 𑌅𑌣𑌿𑌮𑌾𑌦𑌿𑌵𑌶𑌾𑌦𑌿𑌹 ।
𑌅𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾𑌪𑌿𑌫𑌲𑌂𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌪𑍁𑌨𑌰𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌾𑌕𑍁𑌲𑍇 ॥)

"யமாத்யாஸநஜாயாஸ ஹடாப்யாஸாத்புந: புந: |
விக்நபாஹுள்யஸம்ஜாத அணிமாதிவசாதிஹ |
அலப்த்வாபிபலம்ஸம்யத் புநர்பூத்வாமஹாகுலே ||"

என இழித்துக்கூறப்பட்டதாதலானும், தியானயோக மனம் உபாதியோடுங்கூடிய விதனை ஆசரித்து நிற்றல் அனுவசிய மாதலானும் "அடமற்று" என அதனைக்கழித்தாரென்க. சுருதிவாக்கியங் களின் பொருள்:— "இயமம் முதலிய ஆசனங்களா லுண்டாகும் ஆயாச அடயோக அப்பியாசத்தினன் மீளமீள மிக்க விக்கினங்களிற் றோன்றும் அணிமாதி சித்திகட் குட்பட்டவன் நறியபலனை யடையாமே மீட்டும் நற்குலத்திற் பிறப்பன்" என்பதாம்.

கடன் என்பது சாத்தியமுணர்த்தி நின்றது. காறும் = வரையிலும்; காறு - எல்லைகுறிக்கு மோரிடைச்சொல். (கரு)

### மனத்தின் றிறம்.

உருவந் தெரிமன முருவந் தொழுபல
னுறவே யதுபர மனமாகுங்
கருதிந் தமனசை யலதிந் தமனுல
கதிலே யுரியவ ரெவராவர்
மருளென் றிடுநசை தனினின் றிடிலது
வலியார் பகைதுணி களையீயும்
அருளென் றிடுநசை தனினின் றிடிலது
வழியா நலமுழு வதுமீயும்.

உருவத்தைக் கிரகிக்கும் உருவமனமானது உருவமூர்த்தியாகிய சகளமூர்த்தியை உண்முகத்தே தியானிக்கின்ற பலனுனது பொருந்தியவளவிலே அம் மனந்தானே பரமனமாகும். யாதொன்றனைக் கருதிநிற்கும் இம்மனத்தையன்றி, ஆன்மாவுக்கு உரிமைப்பாடுடையார் இம் மண்ணுலகில் எவராயிருப்பர்? மருளென்று சொல்லப்படும் ஆசையினிற்குமாயின் அம்மனம், வலியுடன்கூடிய பகையையுந் துக்கத்தையுங் கொடுக்கும். அருளென்று சொல்லப்படும் அவாவினிற்குமாயின் அஃது அழியாத ஆன்மலாபம் எத்துணையுண்டோ? அத்துணையுந் தரும்.

அருளினையடைபத்தக்க பரமனம் எங்ஙனமுதிக்குமென்னும் ஆசங்கை நிகழாமைப்பொருட்டு இறைவனது திருவுருவைத் தியானிக்கவுள்ள மனமே அந்தத் தியானபலத்தால் அப் பரமனமாயிடுமென்பார் "உருவந் தொழுபல னுறவே யதுபர மனமாகும்" என்றார். மேற்போந்த கஅ - ஆஞ் செய்யுளிற் "சலனப்படுநினை வொழிவிற் பரநினைவான துலைவற்றெழும்" என்றதற்கு இது வேறோ? எனின்,— அற்றன்று; அந் நினைவொழிவு இங்குணர்த்தப்படு முருவத் தியானத்தா லெய்துமென் றோதியவாறே. சலன மனத்தினை ஆன்மலிங்க பாவனையி னிறுத்தினுல் (பரமனமாமாறு) அச் சலன மனத் தோற்றமொன்றும் எழாது ஒய்ந்துவிடும் என்னும் பொருளில் "மத்தியி னினைப்பையொரு நாட்டமுடன் வைக்கில் அவனின் றெட்டியெழு மானச மெழாதயரும்" என கஅ - ற் கிளந்ததும் இம் முடிபுக்கு வேறன்று. ஏற்புடைமை கருதி அங்ஙன மவ்வாறு கூறினர். அஃது துயர்பக்குவமுடையா ரனுட்டிக்கத் தக்கதாம்.

எவராவர் என்றதில் யாருமிலரென்னுந் தேற்றங் குறிப்பாகக் காணப்படுகின்றது. நசை = ஆசை. 'தன்' இரண்டுஞ் சாரியை. துனி = துக்கம். (கசு)

மனமே சனனமு மனமே மரணமு
மனமே யுலகும லதுமாகு
மனமே யபலமு மனமே சபலமு
மனமே மதியொடு விதியாகு
மனமே சமலமு மனமே நிமலமு
மனமே வளியொடு வெளியாகு
மனமே சிறுமையு மனமே பெருமையு
மனமே யிருமையு மொருமையுமே.

சனனம், மரணம், உலகம், உலகமல்லாதிருப்பது, பயனற்றது, பயனுள்ளது, மதி, விதி, மலத்துடன் கூடியது, மலமற்றது, வளி, வெளி, சிறுமை, பெருமை, இருதிறப்படுந் துவிதம், அதற்கு வேறுயுள்ள வொருதன்மை ஆகிய வனைத்தும் மனமேயாம்.

மனம் மருளினின்றக்காற் றுக்கமனைத்தும், அருளினின்றக்காற் சுகமனைத்துந் தருவதாகுமென்று அதன்செயலை யிருவகைப்படுத்துரைத்தார் மேலைச்செய்யுளில். இச்செய்யுளில் அவ்விரண்டின் வழியாயுறுவன இவை இவையெனவும், அவற்றிற்கெல்லாம் அம்மனமே காரணமெனவும் விரித்துக் கூறினார்; இனிது புலப்படவேண்டியென்க. மனத்தினைப்பற்றி யுரைக்கும் இச் செய்யுள் —

(𑌕𑌾𑌮𑌃𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑍋𑌵𑌿𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌸𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌽𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌧𑍃𑌤𑌿𑌰𑌧𑍃𑌤𑌿𑌰𑍍𑌹𑍍𑌰𑍀𑌰𑍍
𑌧𑍀𑌰𑍍𑌭𑍀𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂𑌮𑌨𑌏𑌵

காமஃஸங்கல்போவிசிகித்ஸா ச்ரததாச்ரத்தாத்ருதிரத்ருதிர்ஹ்ரீர்
தீர்பீரித்யேதத் ஸர்வம்மநஏவ)

"காமம், சங்கற்பம், சமுசயம், சிரத்தை, அசிரத்தை, தைரியம், அதைரியம், நாணம், புத்தி, பயம் ஆகிய இவையனைத்தும் மனமே" எனவும்,

(𑌅𑌪𑌾𑌮𑌾𑌪𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑌗𑍍𑌨𑍌𑌵𑌾 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌿𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑌲𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌂𑌯𑌸𑍍𑌯 𑌮𑌨𑌃𑌸𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌮𑌨𑌏𑌵𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂𑌬𑌨𑍍𑌧𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑍋𑌃 ॥

அபாமாபோகநிரக்நௌவா வ்யோம்நிவ்யோமலக்ஷயேத் ।
ஏவமந்தர்க்கதம்யஸ்ய மநஃஸபரிமுச்யதே ।
மநஏவமநுஷ்யாணும் காரணம்பந்தமோக்ஷயோஃ ||)

"நீர் நீருடனும், நெருப்பு நெருப்புடனும், ஆகாயம் ஆகாயத்துடனுங் கூடி வேறுபடாதிருப்பதுபோல எவனுடையமனம் உட்புலத்தே யடங்கிவிடுமோ அவன் நன்றாக விடுதலை யுறுகின்றனன்: மனுடர்க்குப் பந்த மோக்க காரணமாயுள்ளது மனமே" எனவும் வருகின்ற மைத்ராயண்யுபநிஷத்தின் சு - ஆம் பிரபாடக வாக்கியங்களின் முடிபினுளது. (மநஏவ மநுஷ்யாணும் காரணம் பந்தமோக்ஷயோஃ=) "மனுடர்க்குப் பந்தமோக்க காரணமா யுள்ளது மனமே" என்பது யஜுர்வேத அம்ருதபிந்தூபநிஷத்திலும் உளது. சுருதிமுடிபினுள்ள இச்செய்யுளினுறு மனத்தினுண்மை— "கெடுப்

பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே—யெடுப்பதூஉ மெல்லா மழை." எனத் திருவள்ளுவதேவர் கூறிய மழையின்றிற னொத்திருக்கின்றதன்றோ. ஆசிரியர், இன்னும் இம்மனத்தின் றிறஞ் செயல் பற்றி —

" கல்லினும் வலிதெரி கனலினும் பெரிததி
கடுமனக் கயவர்கள் வாயின்
சொல்லினுங் கொடிதுழி தருமுசு மனதிது
துணிவொடு துணையுறுங் காலம்
புல்லறி வொழித்தா னுணர்த்திநின் றிடுமுயர்
பொறையினில் வரையையும் வெல்லும்
நல்லரு ணிலைக்குமொ ருரியநட் பாமென
ஞாயவா திகள்விளக் குவரே."

என்றுந் தமதுபாடலிற் கூறியுள்ளார் காண்க. தியானயோக வழியாக மனமடங்கிடிற் பிராணவாயுவு மடங்கலானும், அது தோன்றியவழி அவ்வாயுவுந் தோன்றலானும், விழிப்புலமாகாத ஆகாயம் போல அம்மன மிருத்தலானும் "வளியொடு வெளியாகும்" என்றார். வளி = வாயு. சீவான்மாவானது புண்பட்ட கண்ணோடு கூடிய வழி வருத்தமும், அதனோடு கூடா துறங்கிக்கிடக்கும் வழி அவ் வருத்தமின்மையுங் கோடல்போலவே அவ் வான்மா பிரபஞ்ச வியாபார பந்த மனத்தோடுங்கூடித் துன்பப்படலும், அங்ஙனங் கூடாது பிரிந்து நிற்குநிலையிற் றுன்பப்படா திருத்தலு முண்மையின் மனத்தினுலெய்து துக்க மறியப்படுமால். மனவிருத்திகள் தோன்று நிலைக்களம் இதயகமல தளங்க ளென்பதூஉம் முற்காண்டத்து ௩0 - ன் உரையில் வந்துளது.

மனம் என்னும்பெயர்க்காரணம் பிருஹதாரண்யகோபநிஷத்தின் ௩ - ஆம் அத்தியாயத்து ௪ - ஆம பிராஹ்மணத்தில் (௨௲௭௩௨௩) "மங்வாநோமநஃ" எனச் சொல்லப்பட்டுளது. தமிழ் :— "நினைத்தலினுல் மனம்" என்பதாம்.

இஃது ஒற்றெழுத்திலாது யாக்கப்பட்ட ஒரு விசேடச்செய்யுள். (கள)

**தகராலயத்தில் அந்தர்முகத்தில்**
**உருற்று தொழில்.**

## இருளின் றிறமற வருமந் திரகுரு
## வெனுமோர் நிருமல பதிதானே

அருளென் றவுருவ முளவங் குகனென
வனுமா னமதற முனரேநாங்
கருதும் படிசொன நிலையின் புடையவர்
கழலே யனவரத முநாடுந்
தெருளொன் றினைமுன மடைபின் சொனபடி
திறமா கியநிலை பெறுவாயால்.

அஞ்ஞானத்தின் வலி கெடுமாறு (நின்முன்பாக) வருமந்திர மூர்த்தியாகிய குருவெனப்படும் ஒப்பற்ற நின்மலாசாரியனை அருளெனப்பட்ட திருமேனி கொண்டுள்ள அழகிய குகனென்று சந்தேகமறக் கருதிக்கொள்ளும்படி, முன்னை யாஞ்சொன்ன தகராலயத்தின்கண் அக்குருவின் திருவடியையே எக்காலுந் தியானிக்குந் தெளிவினை முன்னமே யடைவாயாக. பின்னமே (கரு - ல்) யாங் கூறியவாறு உறுதியான ஞானநிலையினை நீ பெறுவாய்.

"உட்புலத்தே குகனது சொரூபாகாசமுளதாக நினைவு செய்து கொண்டு, அங்ஙனமே குருவினது திருமேனி திகழும்படி மனத்தினாற் பாவித்து, அக்குருவினா லுபதேசிக்கப்பட்டதும் முதல்வனொருவனுக்கே யுரியதுமான எழுத்தை மானசிகமாகச் செபித்து, பின்பு எவ்விடத்துஞ் செல்லாதவாறு மனத்தினை உள்ளுநக்குள்ளே நிறுவி, அதன்பின்னே பெருவெளியினைப் பொன்மய சிற்பரவொளியென அவ்விடத்தே தியானி" என்னும் உபாசனையொழுங்கு தோன்றக் கூறியுள்ள கஉ - ற் பந்தமனம் அலையாவாறு நிலைபேறு செய்தபின்னைப் பெருவெளி பரவெளியென அவ்விடத்தே தியானி என வீற்றிற் சொற்றசெய்தி பரமன காரியமாயிருத்தலின், அது பிடித்துப் கரு - ஆஞ் செய்யுடொடக்கமாகக் கூறுவன கூறிவந்த ஆசிரியர், அந்தப் கஉ - ற் "குருவுடல் திகழும்படி தனிபாவித்து" என்றவொழுங்கினை விளக்குவான் ஈங்கதனை அறுவாதமுகத்தா னெடுத்துக் கொண்டு அக்காரியம் பரமனந் தோன்றுங்காறும் முன்னர்ச் செயத்தக்கதென்பதனை யுணர்த்துவா ராயினர். அச்செய்யுட்கண் (உள் அலையாவண்ணம் மன்னி=) "மனம் அலையாவாறு நிலைபெறுத்தி" என்றதே தகராலயத்தில் ஆசிரியவடிவைச் சதா தியானித்திருக்க வேண்டுமென்பதைக் குறிப்பா லுணர்த்தி நிற்பதாயிற்று. அச்செய்யுளிற் செபத்துக்குமுன்னே ஆசிரியவடிவை உள்ளிடத்தே பாவிக்க வெனப் பகர்ந்த செய்தியானது இப் கஅ - ற் சொல்லப்பட்ட ஆசா

ரியமூர்த்தித் தியானமல்லாத முதற்பாவனை வழிபாடாகும். இவ் வேதுக்களாற் கூறியதுகூறல், மாறுகொளக்கூற லென்னுங் குற்றங்க ளில.

உயிர்க்குத் தனு கரணங்களாயிருந்து அறிவைச்சிறிது விளக்கி நிற்றன் மாயையின் செய்கை; அவ்வறிவைத் தடுத்துக்கொண்டு நிற்றல் ஆணவமலத்தின் செய்கை. இங்ஙனம் சோமனொளியும் பூதவிருளுமேய்ப்ப இரண்டும் ஒருபடி நேசித்து நிற்பனவாகலான் 'இருள்' என்றதை மாயையென்று பொருள்படுத்தாது ஆணவமலமென்றே பொருள்படுத்தல் வேண்டும். இருளிற்றான் சோமனொளிசெய்வனாகலான் இரண்டும் பகைத்து நிற்பனவல்ல. பகைத்து நிற்பனவாகக் கோடல் அவசித்தாந்தமாம். இம் மலமாகிய சுவரிலே மற்றை மலமாகிய சித்திர மெழுதப்பட்டிருத்தலின் அச் சுவரொழிவே சித்திர வொழிவென்பது கருதி அவ்வொன்றுமே இங்குக் கூறினாராயிற்று.

'எனும்' என்புழிப் படுசொற்றொக்குநின்றது. 'பதிதானே என்பதில்' தான் - அசை; ஏ - தேற்றம் பற்றியது. பதி= குரு; "பட்டாரகன் பதி" என்பது பிங்கலநிகண்டு. 'அனுமான மதறக் கருதும்படி முனமே நாஞ்சொன நிலையின்புடை' எனவிசையும். புடை - எழனுருபு. (கஅ)

**பகிர்முகத்தினும், அந்தர்முகத்தினும் உளூற்றுதொழில்.**

இனமும் பகிர்முக மதினுந் தெரியுரு
வெதையுங் குருவடி வெனவேநீ
மனனஞ் செயுரிய மனமொன் றியபினர்
மதியின் புலமுறு சடரூப
கனமென் பவைகளை யருவென் றுணர்வுறு
கமனம் பணிநிறை விடுவாய
உனரும் பெருவெளி யிதுவென் றுனியதி
லுனையுங் கரையருண் மயமாவை.

இஃதன்றியும், பகிர்முகப்பட்டிருக்குங் காலத்தும் இந்திரிய வாயிலாக அறியப்பட்ட தூலபதார்த்தங்களனைத்தையுங் குருவின் வடிவமேயென்ன நீ பாவிப்பாயாக; (பந்த மனோலயஞ் சித்திக்கும்). அங்ஙனமாதற்குரிய மனோலயங் கைவந்த பின்னர்ப் புத்திதத்துவந் தொழிற்படுமிடமாகிய அந்தர்முகத்திற்றோற்றுஞ் சடரூப ஆகாச முதலியவற்றை அக் குருவினது அருவத்திருமேனியெனக்கொள்

பாவனையைச்செய்து (தியானித்து), அதன்மேல் அதனைத் தியானத்திற் கெட்டாத பரிபூரண சிதாகாசமாகிய பெருவெளி யிதுவாமென்று பாவித்து, அவ்வெளியில் உன்னையும் இலீனப்படுத்து; நீ அருண்மயமாவாய்.

உன்னையும் என்பது ரு-ன் உரைநடைபோந்த பசுத்துவத்தை. உனையும் - தொகுத்தல். அருண்மயமாதல் —

(யே பூர்வம் தேவா ருஷயஶ்ச தத்விதுஸ்தே
தந்மயா அம்ருதா வை பபூவு: ।)

"யேபூர்வம்தேவாருஷயச்ச தத்விதுஸ்தே
தந்மயா அம்ருதாவை பபூவு: ।"

என்னுஞ் சுவேதாச்வதரோபநிஷத மந்திரமுடியிலுளது. தமிழ்:— "அவனையறிந்த பண்டைத்தேவரும் இருடிகளும் அவன்மயமாய் விளங்கினர்: மரணத்தைக் கடந்தனர்" எனவாம். அருண்மயமாதலே முத்தியென்பது பலவேறு வகைப்பட்ட முத்திகளையெல்லாம் "பழிசேர்முத்தி" எனக் கூறியொழித்த சிவப்பிரகாசத்திலே "திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி திகழ்முத்தி" எனவரு மாற்றங்களினும் பெறப்படுகின்றது. இவ்வருள் சிவத்தினது சித்தாகலின் ஆன்மா சின்மயமாதலே முத்தியென்றவாறும். இது, "சிவ னருட்சித் திவனருளைச் சேருஞ் சித்து" எனச் சிவஞானசித்தியாரிலுந் தெரிக்கப்பட்டது. 'சேரும்' என்றதனால் அபரிபூரண ஐக்கியவாதமாம் பிறவெனின்,— ஆகாது; மனோலயத்தின் மீது அனுபவத்திலெய்துமென்பது பொருள்; பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்து ௧௦௯-ன் உரை காண்க. சிவஞானசித்தியார்— "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" எனப் பகருமாறு அவ்வருளனுபவத்தில் வெளிப்பட்டு நிற்கும்பொரு ளொன்றாகவேயிருத்தலின் ஏகான்மவாதமுடிவு நிலைபெறாதோ? எனின்,— விசாரிப்பாம்— பதி, பசு, பாசமென்னு நித்தியப்பொருண் மூன்றனுள் அனுபவிக்கும்பசு விருப்பதுபோலப் பாசமு மிருக்குமெனின்,— பசுவும் பண்டைமலப் பசுவாகவே யிருக்குமென்பது சித்திக்கும். ஆயின், அது சுவானுபூதிமானாதல் கூடாது. பாச அழிவே அனுபவம்; அங்ஙனஞ் சிவபூரணமொன்றே தரிசிக்கப்படூஉ மெனின்,— பாசம் நித்தியமென்னுஞ் சாத்திர விரோதமுண்டாம்; உள்ளது போகாதென்னு நியாயத்தால் அழிவும்

போலியாம்;' அஞுதியாகவுள்ளது காரியப்படுமென்னும் பொருட்குரிய சற்காரியவாதமும் இங்ஙனம் அமைதிபெறுத லரிது; பசுவிருக்குமென்பதற்கும் பழுதுண்டாம். என்னை? ஒன்றே தரிசிக்கப்படுமென்றலின். தரிசிக்கப்பட்டபொரு ளிருந்தாங்குத் தரிசித்தோனுமிருப்ப னாகலின் ஆன்மாவிருக்குமென்பது பழுதுபடாதெனின்,— தற்றரிசனத்திற் றரிசித்தவனை வேறுகூறலொண்ணாது; அவ்வாறே அங்ஙனந் தரிசித்தவன்செய்தியுமாதலின் அவனொரு தனிப்பொருளாயிரான்; அதுவே பாரமார்த்திக நிலையென் றுரைப்ப. அன்றியும், இருப்பனென்பதனாற் காண்பான், காட்சி, காட்சிப்பொருளென்னுந் திரிபுடியேற்படும்; அதனா லனுபவங் கூறலொண்ணாதென்ப. சீவன்முத்தி தசையிலே திரிபுடி யிருக்கலாமேயெனின்,— சீவற்குரிய சுட்டறிவொழிந்த நிமல நிட்டானுபவத்திற் றிரிபுடி யின்றென்னு நியாயமும், அனுபவமும் பழுதுபடு மென்ப. சிவப்பிரகாசத்தில் "அறிவினா லறிந்த யாவு மசத்தாத லறிதி" என வருவது கவனிக்க. காணுமாற்காண்பதெனின்,— அப்படிப்பட்ட காண்டல் உலகினுள்ள வொருவற்குப் புலப்படுமாறு புகறல் சாலாதாகலின் அது, வாளாகூறுவது போலாமென்ப. சுட்டியறியா தறிவதென்பதூஉம் இந் நியதியின்பாற் படுவதே. பாமே காணப்படுமனுபவத்திற் பாசமழியா தடங்கிக்கிடக்கும்; அப்பாசந் நீண்டாப் பசுவும் அத்தன்மைத்தே யெனின்,— முத்தியில் வியாபிக்குமென்னும் பசுவிலக்கணம் அடங்கிக்கிடக்கு மென்பதனாற் கெடும்; இன்பநுகர்ச்சியு மெய்தாதென்ப. நுகர்ச்சி யெய்துமெனின்,— அடங்கிக்கிடத்தலும், சீவகாணக்கேடு மிலவென்ப. நிற்க. பகர்ந்தவாறு பசுவைத் தீண்டாது நீங்கிய பாசமானது சார்ந்ததன் வண்ணமாய் நிற்குமான்மா மயிர்நுனையு நாட்டற் கிடனின்றிப் பூரணங்காறும் வியாபிக்குமென்புழித் தீண்டுமென்பது சித்திக்கும். ஆண்டு, ஒளிமுன் இருள் போல்வதே அடங்கிக்கிடப்ப தெனின்,— நீங்குமென்பது சாலாது. அஃதொழியினும், நீங்காது நிற்குநிலைக்களத்திலேயே அடங்கிக்கிடக்குமென்பது கூடுமேயெனின்,— (ஆகந்துகமாக)வந்து கூடிய வொளிக்குக் கூடுந்தன்மையினால் ஆதியேற்படுதலின் இனி, அந்தமுமேற்படுமென்னு மொருநியாயத்தாற் பெயர்த்தும் இருள் மேலிடல்கூடும்; அதனால், நித்தமுத்தி கூறொணாதென்ப. இவையேயுமன்றி, பூரணந் தரிசித்தாருள் யாவரேனும் தாமும், பாசமும் அடங்கிக்கிடக்கக் கண்டதாகக் கூறினாரல்லராகலின் அவ்விரண்டுமிருந்தனவல்லவென்பது தோன்றிநிற்கும். அடங்கிக்கிடக்கக் கண்

டாமென்று யாவரேனுங் கூறப்புகினும் அங்ஙனந் திரிபுடிதோன்றி நின்று அனுபூதியின்மையை யுணர்த்தும். ஈண்டு, "* எய்துமுயிர் தனைக்கண்டிங் கவ்வுயிர்க்கு மேலாம் ஒப்பிலருள் கண்டு சிவத் துண்மை கண்டு" என உமாபதிசிவாசாரியர் (உண்மைநெறிவிளக் கத்தில்) ஓதியருளியவாறு தலைமைப்பொருளைத் தரிசிக்குமுன்னர்த் தன்னைத் தரிசிக்குஞ்செய்தி சொல்லலாமன்றோ, அஃதியாது? எனின்,— தற்றரிசனத்தின் முன்னருள்ள தத்துவங்கள் அத்தரி சனத்தி லொழிந்தவாறே பரதரிசனத்துந் தனதுண்மையொழியும்; ஆகலினன்றே அது பரதரிசனத்திற் காணப்பட்டிலதென்றும், இழி நிலையனுபவமே தற்றரிசனமென்றுப, வியனிலையனுபவமே பரதரி சனமென்றுஞ் சாந்தி சாற்றுப. இங்ஙனமே, ஆன்மாவும் பாசமும் மறைந்துநிற்கும்; ஆகலின், அனுபவஞ்செய்வார் அவற்றினையறியார்; ஆகலின், அவையுளவெனக் கூறிற்றிலரென்று கூறத்துணிந்தக்கால், மறைந்துநிற்கு மான்மாவும், அனுபவஞ்செய்யு மான்மாவும் வேறு வேறெனப்பட்டு எடுத்துக்கொண்ட கோட்பாடு வழுவெய்துவது மன்றி அனுபவஆன்மா அருளாகிய பரஞானத்தாற் பரம்பொருள் காறும் வியாபியாய்நிற்ற லிலதென்பதெய்தும். அப்படிநிற்ற லில தென்பதெய்தி னென்கொல்? எனின்,— பரஞானங் குறைவுடைத்து; அனைத்து மொருங்கறிபெற்றி அதற்கிலதென்ப தேற்படும். மேல், அற்றன்று; குறைந்த வியாபகமாக ஆன்மாவை நிறுத்துமென்று லென்னை? எனின்,— அதுவுமொரு பாசமாமென்பது சித்திக்கும். மேல், அஃதவ்வாறு புரியாது; அவ்வருளால் விடுதலையுற்ற ஆன்ம வியாபகமானது பரம்பொருள் வியாபகத்திற்குக் குறைவாகலா மெனின்,— அந்தரியாமித்துவமும், யாண்டுமுள்ள சிதாகாசமு மொன்றெனப்படுதற்கியைய அந்தரியாமித்துவத் தழுந்து மனுபவ ஆன்மா ஆண்டுக் குறைவுறீஇ நிற்க நியாயமின்றென்பது தோன்றி நிற்கும். இங்ஙனம், ஏகபூரணங்கூறு மனுபவத்தார் தாம் குறைந்த வியாபகத்தி னிற்றல்கண்டு கூறினாரல்ல ரென்பதுகொண்டு அது மறுக்கவும்படும். "எண்குணத்துளோமே" என்று திருநாவுக்கரைய னார் தெரித்ததூஉம், "மன்னிடவியாபியாய வான்பயன் றோன்றும்"

* "நின்னைக் காணா மாந்தர்— தம்மையுங் காணாத் தன்மை யோரே" எனப் பட்டினத்தடிகள் (திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில்) அருளிச்செய்தது இவ்வுண்மைநெறிவிளக்கத்தோடு முரணும் பிறவெனின்,—முரணாது; என்னை? அருளாய ஞானவொளி தரிசிக்கப்பட்ட பின்னர்த்தான் றன்னைத்தரிசிப்பதுந் தலைவனைத்தரிசிப்பதுமாம், ஆகலின்.

என்று (சிவப்பிரகாசத்தில்) உமாபதிசிவாசாரிய ருரைத்ததூஉம் இங்குக் கவனிக்கத்தக்கன. இனி, ஏகபூரணமாக வியாபித்தேநிற்குமெனின்,— அவ்வனுபவத்தார் கண்டு வெளியிட்டதொன்று அம்முத்தான்மாத்தானோ? பரமான்மாவாகிய சிவமோ? என்னும் ஆசங்கை யெழும். இங்ஙனம், சிவமேயெனின்,— ஏகான்மவாதந் தோன்றியிடும். தோன்றின் எவன்? எனின்,— அது, முற்காண்டத்து ௬0 - ன் உரைக்கட் சுருதிமுடிவாகக் கூறியவாறு கடவுளை ஆன்மாவி லறிகுநர்கட்கெய்து நித்தியானந்த அனுபவத்திற்குரிய முத்தான்மாவும் நித்தியவத்துவாகவே யிருத்தல்வேண்டு மென்பதற்கு முரணும். யஜுர்வேத ஸ்கந்தோபநிஷதம் (கூ-ஶநாஶே ஸதா ஶிவ: - கர்மநாசே ஸதா சிவ:=) "கன்மநாசத்திற் சீவன் எப்போதுஞ் சிவனாய் விளங்குவன்" என் றோது சுருதியும் இங்ஙனங் கருதிக் கொள்ளத் தக்கதே. அந் நித்தியானந்தம்— "பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்றந்த— அந்தமிலா வானந்தம்" எனத் தமிழ் மறைக்கண்ணும் பெறப்படுகின்றது. இதுவேயுமன்றி, ஏகான்மவாத முடிவுபற்றி அவ்வுரையிற் கூறிய ஏதுவாற கடவுள் ஆபாசபதார்த்தமெனப்படூஉம் வழி ஆனு வழுவு மெய்தும். முத்தான்மாவே யெனின்,— ஈண்டும் ஏகான்மவாதந் தோன்றியிடும். அது, தனக் காதாரமான ஈசனது பிரசாதத்தினுற் சோகமிலாதவனைக் காண்கின்றனன் என்னும்பொருளினை முற்காண்டத்து உக - ன் உரைக்கட் காட்டப்பட்ட சுருதிக்கும், மேலை ௬0 - ன் உரையினை "குகையின்கட் பிரவேசித்தவை யிரண்டான்மாக்களே" எனவரு பிரஹ்ம ஸூத்ரத்திற்கும், இப்பொருள்களில்வரு வேறு பிரமாணங்கட்கும் விரோதமாம். இது கிடக்க; எந்த முத்தான்மாவாலும் விண்ணும் மண்ணுமென இருவேறு வகைப்பட்ட இப்பிரபஞ்சம் படைக்கப் பட்டதென்பதும், இஃததன் ஆணையிலிருந்தது இருக்கின்றதென்பதுங் காணப்படாமையின் அவ்வான்மா பிரபஞ்ச நாயகமாதல் கூடாதென்பது போதருமாற்றானும் அதற்கு வேறான ஒரு பரமான்மா விருத்தல்வேண்டு மெனல் சித்திக்கின்றது. இங்ஙனமே, உலகுசெய்தானும் பரமான்மாவென வொன்றும், அதனால் ஆளப்படுமான்மாவெனவொன்றுமாக அனைத்தான்மாக்களையு நிச்சயிக்கலாம்; அவை என்ஞான்றும் வேறுவே றாகவு மிருக்கலாமெனக் கோடுமெனின்,— வேறு வேறு கிளக்கும் இத்துவிதம் பரமான்மாவையுங் கண்டப் பொருளாக்கியிடு மாகலான், உடம்பினைத் தாங்கிநிற்கு முயிர்போ

னுள்ள இயல்புளது பூரண வியாபகவிலக்கணங் கெடுமாறு கிளத்துங் கீழுரை இஃதென்ப. இங்ஙனமே— கோடுடையது ஆவினென்னுந் தனது இலக்ஷியம் ஆடு எருமை முதலியவற்றினுஞ் சேறல்புரையக் கண்டமாமுருவமே முக்கியமென்பதேற்பட்டு அந்த இலக்ஷிய மிரண்டுபடுதலின் (அதிவ்யாப்தி:) அதிவியாத்தி தோடமும், ஆவினெல்லாங் கபிலவருண முடையனவெனுந் தனது இலக்ஷியம் சில ஆன்களில் இல்லாதுபோதல்புரையக் குறிப்பிடி பரமனது உருவ லக்ஷியத்தில் உருவமெலாங் காணப்படாதொழிதலின் (அவ்யாப்தி:) அவ்வியாத்தி தோடமும், குதிரை முதலியவற்றிற்குள்ள ஒற்றைக் குளம்பினை ஆனுக்குண்டெனக்கொள்ளும் இலக்ஷியமே போல்வது சேதன பூரணமில்லா உருவலக்ஷியத்திற் பூரணப்புகாமையாகலின் (அஸம்பவ:) அசம்பவ தோடமுமாம் எனவு முரைப்ப. இந் துவிதம் ஒருவித பத்திக் குரியதேயாயினும் "அத்துவித" சுவானுபவப் பிரதிட்டைக் குரியதன்று. இங்குக் கூறியவற்றுளடங்கா எண்ணாறு சங்கைகளின் றுமெழுமாகலிற் பிரமானுபவ முக்திமுடிவு ஒன்றென இரண்டென அன்றென ஆமென வரைசெய் தோதப்படாததாயுள்ளவொன்றும்; ரு - ஆஞ் செய்யுட்கண் "ஒருமையும் இருமையும் மிச்சையு முரைக்க இசையா வண்ணம் அளாவிடுதல் வீடு" என்றதும், ஆண்டோதிய வியோம பவன உவமானமுங் கருதுக. ஆதலிற் "பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமேயார்த் திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" என்னும் அச் சித்தியார் வாக்கியத்தில் ஏகமேனுந் துவித மேனும் பெறுதல் கூடாது. "அஹம் ப்ரஹ்மாஸ்மி" (= நான் பிரமமா யிருக்கிறேன்) என்னும் யஜுர்வேத (பிருஹதாரண்யகோப நிஷத்) மகாவாக்கியத்தையும், இதனைத் தழீஇ வருவனவற்றையுங் கேட்டவழி இரண்டான்மாவும் வேறுவேறாய கண்டப்பொருள்களா யிருக்கின்றனவோ? என் றையுறுவாரது ஐயம் நீக்குதற்பொருட்டு இரண்டல்லவென்பதையும், இரண்டுமொன்றுதானோ? என் றையுறு வாரது ஐயம் நீக்குதற்பொருட்டு ஒன்றன்றென்பதையும் வெளியிடு தற்காகவே —

(ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்)

"ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீ தேகமேவாத்விதீயம்"

என்னும் ஸாமவேத சாந்தோக்யோபநிஷத் வசனத்துழை (த்விதீயம்) அத்விதீயம் என்பதெழுந்துளது. இச்சொல் பலவுப

நிடதங்களிலுங் காணப்படும். வேத வசனப்பொருள் :— "சோமியனே! இதற்குமுன் (பிரபஞ்சசிருட்டிக்கு முன்னர்) அத்விதீயமாயுள்ளபொருள் ஒன்றேயிருந்தது: அதுசத்தே" எனவாம். அத்விதீயமாயுள்ளபொருள் ஒன்றேயென்பது ஒன்று இரண்டெனற்கியையாமே ஆன்மாவோ டனுதிசம்பந்தியாயிருக்குஞ் சிவம் ஒன்றேயெனும் பொருளுடைத்து. இவ்வத்துவிதத்தினைப் பந்தமுத்தி தசைகளிலும் பொருந்தக் கூறலாம். இதுபற்றிக் கூறலாவது கொன்னும் பெரிதாகலின் அஃது இக் காண்டத்து ரு - ன் உரையிலும், பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்துத் கூகூ - ன் உரையிலும் அறியற்பாலது. இவ்வத்துவித ஞானத்தின் மகிமை —

> "பத்தவிடர் சான்ற பசுவைப் பரமாக்கும்
> அத்துவித வித்தை யருளாய் பராஞ்சுடரே."

என நூலாசிரியரது பாடலிலும் படிக்கப்பட்டது. மேலே கூறிப்போந்த மகாவாக்கியங்களைக் கேட்டவழியுறும் ஐயம் நீக்குதற் பொருட்டே அத்துவித மெழுந்ததென்றது "தத்த்வமஸி - தத்த்வமஸி" (=அது நீ ஆகின்றனை) முதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழியுறு மதுநீக்குதற்பொருட்டே அஃதெழுந்த தென்னின் அது பொருந்தாது. என்னெனின்,— அச் சாந்தோக்யோபநிஷத்தின் கூ - ஆம் பிரபாடகத்து உ - ஆங் கண்டத்தில் அத்துவிதங் கூறப்பட்டது; இதற்கு மிக்க சேய்மைக்கண்ணதாய அ - முதற் கசு - வரையுமுள்ள கண்டங்களிலே "தத்த்வமஸி" கூ - முறை கூறப்பட்டதாகலின். இனி, சிவஞானசித்தியார் "கண்ணுதற னிறைவதனிற் கலந்து காயங் கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போ னிற்பன்" என்று கூறுமாறு இரண்டான்மாவுஞ் சேர்ந்துள திறமே அப்பூரணமென்புழியும் அஃது, அறிந்தவ னிருக்கவேண்டுமெனும் அனுமானத்தின்பாற் படுமேயன்றி ஞான நேத்திரப் பிரத்தியக்ஷத்தின்பாற் படாது; என்னை? திருவருள்காட்டக் காணுஞ் சுவானுபூதியிற் றன்னாற் றரிசிக்கப்பட்ட தானும், பரமான்மாவுமாகிய அவ்விரண்டுமோகக் காணப்படாமையின்; முன்னர் முத்தியடைந்த ஆன்மாக்களும் அங்ஙனங் காணப்படாமையின். இதனை, "சீவன்முத்தர் சிவமேகண்டிருப்பர்" என அச் சிவஞானசித்தியாரே தெளிவாகத் தெரித்தலிற் பெறலாம். ஈது, (அநுபவைகவேத்யம் - அநுபவைகவேத்யம்=) "அனுபவநிலையி லொன்றென வுணரப்படுவது" என்று ஸாமவேத வஜ்ரஸூசிகோபநிஷதம் ஓதுமொரு நிச்சயமுமாம். இது கருதியே திவாகரஞ்

செய்தாரும் "ஒன்றென் பதுவே வீடுபே றாகும்." எனச் சூத்திரஞ் செய்தனரென்றுங் கூறலாம். மேல், இரண்டான்மாவையும் அவ் வனுபூதியிற் பிரித்தறிதல் கூடாமையிற் "சிவமே கண்டிருப்பர்" என்றார்; அஃது "இரும்பைக் காந்தம்" என்றற் றொடக்கத்துச் செய்யுளிற் கருப்பஞ்சாறு, தேன், பால், கனியமுது, கற்கண்டு, சருக்கரைக்கட்டியாகிய இச் சுவைப்பொருள்கள் ஒன்றாகக் கலந்த விடத்துளதாய சுவை இத்தன்மைத்தெனப் பிரித்தறிய வாராமை யேய்ப்ப முதல்வனும் அப் பரமுத்தியினில் ஆனந்த சொருபமாய் ஆன்மாவோடு கலந்திருப்பன் என்னும்பொருளிற் "கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே" என வருவதனாற் பெறப்படுகின்ற தெனின்,— நன்றே கூறினாய்; அங்குப்பிரிந்தறிதல் கூடாதென்பதே யுறுதியாயின், அஃது அனுபூதிமான்கண் மாட்டு முளதேயாதல் வேண்டும்; ஆயின், அச்சித்தியாராசிரியா அவ்வாறறியக்கூடாத நிலையில் இரண்டும் பிரியாதிருக்கின்றன வென்பதை யெவ்வா றறிந் துரைத்தார்? என்னுங் கடாவெழும் இங்ஙம் அவ் வனுமான வளவையே சித்திக்கும். இத்திறச சங்கைகளுக்கு சமாதானங்களுக்கு நிரம் புமா றின்மைகருதியே சுருதியானது மைத்ராயண்யுபநிஷத்தின் சு - ஆம் பிரபாடகத்தில் —

(𑌏𑌷 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑍋𑌽𑌜𑍋𑌽𑌤𑌰𑍍𑌕𑍍𑌯𑍋𑌽𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌃)

"ஏஷபரமாத்மாபரிமிதோ ஜோதர்க்யோசிந்தய"

என நிகழ்வசனத்தால் "இப் பரமான்மா அளவையுட்படாத வன்: பிறப்பிலி: தருக்கத்தினால் இத்தன்மையனென நிச்சயிக்கப் படாதவன்: சிந்திப்புக் கெட்டாதவன்" என்னும் பொருளையும், நாரதபரிவ்ராஜகோபநிஷத்தின் ரு - ஆம் உபதேசத்தில் —

(𑌅𑌤𑌿𑌵𑌾𑌦𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍𑌤𑌰𑍍𑌕𑌾𑌨𑍍 𑌪𑌕𑍍𑌷𑌂 𑌕𑌞𑍍𑌚𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌤𑍍 ।)

"அதிவாதாம்ஸ்த்யஜேத்தர்க்கான் பக்ஷம்கஞ்சநாச்ரயேத்।"

எனவரு வசனத்தால் "அதிவாத தர்க்கங்களை விடல்வேண்டும்: ஒரு கக்ஷியினுஞ் சேர்தல் கூடாது" என்னும் பொருளையும், மாண்டூக்யோபநிஷத்தில் —

(𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌚𑌿𑌨𑍍𑌤
𑌮𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑍇𑌕𑌾𑌤𑍍𑌮 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌸𑌾𑌰𑌂
𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌪𑌶𑌮𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌶𑌿𑌵𑌂)

"அத்ருஷ்டமவ்யவஹார்ய மக்ராஹ்யமலக்ஷணமசிந்த
மவ்யபதேச்ய மைகாத்ம்ய ப்ரத்யயஸாரம்
ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவம்"

எனவரு வாக்கியத்தால் "விழிப்புலனாகாததும், வாக்குவியவ காரத்திற் கெட்டாததும், கைக்கெட்டாததும், அனுமானப் பிரமா ணத்தா லளக்கப்படாததும், சிந்திப்புக் கெட்டாததும், இத் திறத்த தென நிச்சயிக்க வொண்ணாததும், ஏகான்மானந்தமா யிருப்பதும், பிரபஞ்ச லபத்தானமாயுள்ளதும், சாந்தமாயிருப்பதுமாகிய சிவம்" என்னும் பொருளையும் பயக்கின்றது. இங்ஙனம், வடமொழிமறை கூறியாங்குத் தென்மொழிமறையுங் கூறுமென்பது— திருஞானசம் பந்த சுவாமிகளது பொதுத்தேவாரத்தில் "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதி மாண்பும்— கேட்பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா" எனவும், "ஏதுக்களாலு மெடுத்த மொழியாலு மிக் குச்— சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி" என வும் வருவனவற்றுட் பெறலாம். பிரம நிரூபணார்த்தங் கூறப்படு வன பிரமானுபூதிக்குமாம். இவ் வனுபூதிநிலை பகிர்முகத்தார்க்கு இன்னபடியென் றுரைக்கப்படாததாயுளதென விங்குத்துணிதல் — அருணகிரிநாதனாரின் திருவாக்குக்களில் "ஞான கரனே நவிலத் தகுமோ— யானாகியவென் னைவிழுங் கிவெறுந்— தானாய் நிலைநின் றதுதற் பரமே" எனவும், "சும்மா விருசொல் லறவென் றலுமே— அம்மா பொருளொன் றுமறிந் திலனே" எனவும், "ஒவ்வா தென வேயுணர்வித் ததுதான்— ஆவ்வா றறிவா ரறிகின் றதலால — எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே" எனவு நிகழ்வனவற்றுள் ளும் பெறப்படும். 'நவிலத் தகுமோ' 'சும்மாவிரு சொல்லற' 'எவ்வா றொருவர்க் கிசைவிப்பது' 'பேசா வனுபூதி பிறந்தது' என்பன கவனிக்க. பரம்பொருள தனுக்கிரகத்தாற் பரம்பொரு ளுண்மையைப் பரமானுபூதியிற் கண்டுகூறிய இந் நாதனாரது திரு வாக்கினை அப் பரம்பொருள் கூறியருளிய வேதமாகவே யாங் கோடும். சீரிய அறிஞர் யாவரும் அங்ஙனமே கொள்ளு நீராரே. திருநாவுக்கரையனாரது தமிழ்மறையில் "அவனருளே கண்ணாகக் காண்ப தல்லா லிப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே" என வருவதூஉம் இத்துணிதலி னுளதே. அற்றாகலினன்றே கல்லால நிழற்கண் ணெழுந்தருளி யிருந்த பரமாசாரியனும் எல்லாமாய் அல்லவுமாயிருந்த அந்நிலை வாக்காற் சொல்லி முடிவதன்று; அவ்வழி அது பெறப்படுவதுமன்

றென்னுங் கருத்திற் சின்முத்திரையாற் றெரிக்கருளினன் சனகாதி முனிவர்க்கு. இஃது அடுத்த செய்யுளினும் "ஏகதேசிக காரெறி" எனவுணர்த்தப்படுகின்றதன்றே. இவ்வாறு சொல்லொண்ணுதனை யாதானுமொரு முடிவின்பாற்படுத் தோதுதலும் ஒருபுடை யியையு நோக்கியே யென்பாம். ஏண்டு, இன்னபடியென் றுரைக்கப்படாத தென்பது இன்னும் விசேடம் விரும்புதலினால் (ஈநவஸ்தா) அநவஸ்தை (= முடிவுபெறாமை) யென்னுந் தோடத்துட் படாது கொல? எனின்,— அளவைக்கடங்காத் தெய்வவிபலவும், அஃதனைய பிறவு மல்லாத மற்றையவையே அத் தோடத்துட் படுவனவாகலின் அது கடா வன்றென்க. இன்னபடியென் றுரைக்கப்படாத தென்பதே முடிவுபெறுமாம். இங்ஙனமே கொள்ளுமா றறியாமையும், அத்துவிதவுண்மை தெரியாமையுந் தலைப்பட்டுள்ளோர் சித்தாந்த நூல்கட்கும், திருமுறைகட்கும், வேதோபநிடதங்கட்கும் பொருள் கூறல் ஏகவாதத்தையேனுந் துவிதவாதத்தையேனும் பொருந்தி யிடுமால். தாயுமானசுவாமிகள்பாடலின் உடல்பொய்யுறவிலே "சித்துஞ் சடமுஞ் சிவத்தை விடவில்லை" யென்னுங் கூற்றிற்கும், வேறு சில கூற்றுக்கட்கும் பருப்பொருள்கொண்டு, இப்பாடன்முறை நஞ் சைவசித்தாந்தமன்று; ஏகான்ம வாதக் "கலவை" (= கலப்பு) என்றோதி யொதுங்கினரு முளரே. சிலர் வரைந்துவைத்த இலிகிதங்களில் மேலே கிளந்த கடா விடை மறுப்புக்களி னுளப்படுவனவாய ஏகமுந் துவிதமும் ஆங்காங்குப் புக்கிருக்கின்றன; அங்ஙனந் துவிதமே மிகுதியென்பதையு மெம்மனோ ரோர்கின்றனர். உண்மைப் பதமாய சோற்றினைக் காணுதார் துவித அரிசியினையும், ஏகக் குழைகூழினையுமே காண்கின்றனர். உண்மை ஞானமே வியவகார நெருப்பாற்றின் மயிர்ப்பாலமாகவும், ஏகமுந் துவிதமுமே அப் பாலத்தின் இருமருங்குமாகவு நிச்சயிக்கப்படுமாற்றனே அப் பாலத்தி னடந்து முத்திக்கரைசேரச் சாமர்த்தியமிலார் அப்பால மறும்படி நடைதந்தேனும், மருங்கிரண்டனுள் ஒன்றிற்காலிடுதலாற் றவறுண்டேனும் அவ்வாற்றில் வீழ்குநராவர். அன்னோர் எம்முடைய சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்த நூலுரைகளி னுட்பமறிதற்குத் தகுதியுடையா ரல்லர். கற்பனு கௌரவ அதரவாய் நிற்பாரும், அழுக்கா றுடையாரும் பல பிதற்றுநரே யாவர். மேலே போந்த கடா விடைகளையும், மறுப்புக்களையுங் கற்பனுகௌரவம் பல்கப் பல மதாந்தரங்களாக வகுத்துக்கொண்டு கூறி மறுக்குமொரு செருக்கினை இங்ஙன மெமது நெஞ்சம் எத்துணையும் விரும்பாதாதலின்

அவ்வதர் புகாது உண்மையொன்றே யெடுத்துரைத்தாம். சொற்பிரபஞ்சமாம் பேச்சு மெழுத்தும் பிரமானுபூதி ஆவனவுமல்ல; அதனை, நேரே நல்குவனவு மல்ல; அறிக.

கடவுள் வியாபகப்பொருள், ஆன்மா வியாத்திப்பொருள், மலம் வியாப்பியப்பொருளெனவும்; வியாபகம் அதிகவிருத்தி, வியாப்பியம் நூனவிருத்தி, வியாத்தி துல்லியம் (= ஒத்தவியாபகம்) ஆமெனவும்; இருளுங் கண்ணு மேய்ந்து நிற்றல்போல மலமும் ஆன்மாவுஞ் சமமாய் விராய்நிற்றல் (அதிக விருத்தியு நூன விருத்தியுமல்லாத) துல்லியமாம், இதுவே கேவலநிலை யெனவும்; சந்திரனொளி இருளோடேய்ந்து நிற்றல்போல மலவிருள் நூனப்பட்டவிடத்து நிகழு மான்ம போதமானது அதனோடு விராய்நிற்றல் சகலநிலையெனவுஞ் சாற்றுவரால். இவ்விவரம் ஆசிரியரது சேக்கர்வேள்செம்மாப்பின் க - ஆங் காண்டத்தில் —

"'வெறியிலொன் றூன தெய்வம் வியாபகப் பொருளாங் காட்ட
அறியுயிர் வியாத்தி யாகு மதன்மலம் வியாப்பி யப்பேர்
உறுமுயர் தெய்வந் தான்பே ருணர்வுள துயிர்தா னற்ப
அறிவுள ததன்ம லந்தா னறிவிலாப் பொருள தாமால்.'

அல்லிரு ளதுவுங் கண்ணு மணையுமா றூண வப்பேர்
புல்லிரு ளதுவுஞ் சீவ போதமுங் கூடி நிற்றல்
வெல்லதி விருத்தி நூன விருத்தியெ னிரண்டு மில்லாத்
துல்லிய வியாத்தி யென்று சொல்லுவர் கலைதேர் வல்லார்.

அதிகமென் விருத்தி தான்வி யாபக மாகு நூனம்
பதியொரு விருத்தி தான்வி யாப்பியப் பனுவல் சாரும்
அதிகமு நூன மும்மில் லாச்சமந் துல்லி யந்தான்
பதியொரு வியாத்தி யாநூ னஙகுறை பாடா மன்றே.

கிளந்ததுல் லியவி யாத்தி கேவல நிலையா மான்ம
உளந்தனை விழுங்கு மாண வங்குறைந் துணர்வு சற்றே
விளங்குதல் சகல மென்னும் விழிப்புறு நிலையா மீது
வளர்ந்தவிர் மதியின் றேசு மலர்விழி நோக்கு மொக்கும்.'"

என வரூஉஞ் செய்யுள்களினும் பெறப்படுகின்றது. போந்த பதி, பசு, பாச சம்பந்தம் இவ்விவரத்தா னு மறிபப்படுகின்றதன்றோ. போந்த பசுத்துவவொழிவில் அவ்வருண்மபமாதல் சத்தாகிய சிவத்தினை நீங்காச் சித்தினைச் சேர்ந்திடுவதாகலின் அவ் வான்ம பாசம் அங்ஙனம் ஆனந்தமயமாய்விடும். அவ் வானந்தம் பரம்பொருளது.

அதுவே அவ்வாறு செய்வது. அவ்வாறு செய்வதற்காகவே சத்துச் சித்தோடஃதுள்ளது. இதுவே சச்சிதானந்த சிவசாயுச்சியமெனப் படுவது. இவ்விவரம் பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்தில்—

" சத்தே பதியச் சத்தம் பிரிவில்
சித்தே பசுவத் தினவின் பதுவே
மத்தா கியபா சமனப் பிமரஞ்
செத்தா லிவணந் திகழுந் தெளியே. "

எனவரு செய்யுளி லுளது. குணமாகிய சித்தை நீங்காக் குணியாகிய சத்திற்கொரு மூர்த்தமாயுள்ள ஆன்மாவானது— கூ - ன் உரை யெடுத்துக்காட்டில் " அவ்வுயிருங் குகனுங்தேவனது சத்தியினுக்கே தூலம்; அதுவுஞ் சிவனுக்குச் சூக்கம் " என வருமாறு அச்சித்திற்குத் தூலமாகவும், அத்தூலத்திற்கு அச்சித்துச் சூக்குமமாகவுமிருத்தலின் ஆன்மா அச் சின்மயமாதல் முத்தியென்பது திறம்பாத் தீர்வையாம். சத்தியென்றது சிவசித்தினையே. குணத்தினையடைதல் குணியினையடைதலாகவுங் கூறப்படும்; தாதான்மியமாகலின். முற்காண்டத்துப் கO - ன் உரை காண்க. இக் காண்டத்து ச - ன் உரைக்கண் நாதசுகானுபவத்தி னவிலப்பட்ட அருணிலைக்கு இது வேறுமுயர்வுடைத்து. இதயகமலத்தில் நீவார தானியத்தின் நுனைபோனுண்ணிதும் மஞ்சணிறத்ததுமாய ஒளியொன்றுண்டு: அவ்வொளிச் சிகையின் மத்தியிற் பரமான்மா விருக்கின்றனன் எனும்பொருளில் வரு சுருதி முற்காண்டத்து ௩O - ன் உரைக்கட் காட்டினும். அஃதும் அந்தக் குணகுணிக்குத்தூலமாய் ஆன்மாவிருக்கின்றதென்பதனையே சாதிக்கின்றது. ஆவயின் நிசுவாசகாரிகை கூறுமென்றறிவுறுத்தியது யாதோ? அதனையுங் கருதிக்கொள்க. அவ்வநுபூதியிற் பேரின்பமேயல்லாற் பிறிதொன்றின்றாகலின் ஆன்மபாசம் ஆனந்தமயமாய் விடுமென்பது ஏற்புடைத்தேயாம். அற்றாகலினன்றே " பெற்றசிற்றின்பமே பேரின்பமாமங்கே— முற்ற வரும்பரி சுந்தீபற முளையாது மாயை " எனத் திருவியலூர் - உய்யவந்ததேவநாயனாரும் ஓதினர். முற்காண்டத்து உள - ன் உரைக்கட் காட்டப்பட்ட ஆகமப்பிரமாணத்தில் மலத்தோடொருங்குநின்று அதனை நடாத்துந் திரோதான சத்தி சிவத்தை நாடார்க்கிருளாகவும், நாடுநர்க்கொளியாகவுமிருக்குமென்பது பெறப்படுமாற்றானும் இவ்வேற்புடைமை வலியுறுமே. " மிகையான பித்தும் வினையான வந்து நலியா— அப்படி நல்ல நல்ல வவை நல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே " எனத் தமிழ்மறையில் வருவதும் இதற்குத் துணைநிற்கும். இந்நிச்சயத்தைத் தானே "பாத்

தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்", "அம்மா பொருளொன்று மறிந்திலனே" என்பனவும், அன்ன பிறவு நிலைபெறுத்தும். (ஸ்வம்வெகரஸம்ஜகக) "அகண்டைக ரஸம்ஜகத்" (ஸ்வம்வெகரஸாவிஷூர) "அகண்டைகரஸாவித்யா" என்று தேஜோபிந்தூபநிஷதங் கூறுதலு மதுவன்றே. ரஸம் என்பது இன்சுவை, ஆனந்தமென்னு மருத்தத்தில் வந்தது. இதனை, (ஸவெஉ தவிஷாநவெதூகரஸாநந்தூ - அத்வைத சிதாநந்தைகரஸ மாநந்தம்=) "அத்துவித சிதானந்த ஏகரசமா யுள்ளதுதான் ஆனந்தம்" என்று ஸர்வஸாரோபநிஷதஞ் சாற்றுதலிற் பெறுக. அத்துவித சிதானந்த ஏகரசமென்றது முய்த்துணர்க. அந்தரியாமிக்கு மூர்த்தமாயிருக்கும் ஆன்மாவும், அதன்பாசமும் இருந்தநிலையிலேயே இவ்வாறாயிடு மென்னுது பிறிதுகூறல் ஐக்கவாதாதி விபரீத பரிபாடையாய் முடியும். ஈண்டு, தமது பாசம் ஆனந்த மயமேயாகத் தாஞ் சின்மயமே யாகப் பூரணமொன்றே தரிசித்துப் பாமுத்தி யெய்துவார தனுபவத்தில் அண்ட சேதனுசேதனமெல்லாம் அவ்வாறாகாயிருத்தலினால் அவ்வனுபவம் அவர தந்தரியாமித்துவத் தழுந்துதலினெய்துவ தென்பதும், ஒருவன துள்ளத்துளதை யுணருஞ்சத்தி ஞானிக்கிருத்தலினால் அவ்வனுபவத்தார்க்கு அண்டத்தில் வியாபகமின்றெனல் கூடாதென்பதும், அவ்வித வியாபகம் முற்காண்டத்துப் கசு - ன் உரைக்கட் சொல்லப்பட்ட உவமான வழியாகப் பூரணமெனப்படுமென்பதும் அறியலுறுவா ரறியக் கிடக்கின்றனவாகலின் இத்தீர்வை, நுனித்த மதியாள ருணரத்தக்க தொன்றாம்.

இச் செய்யுளிற் குருவழிபாடே சிறக்கக் கூறப்பட்டமையால் இக் காண்டத்து உ, கஉ, கஅ - ஆஞ் செய்யுள்களு முரைகளும் இங்குக் கருதிக்கொள்ளத் தக்கன. குருவழிபாடு உண்மையாகவே கல்லாலநிழலி லிருந்தருளிய பரமகுருவையும், குமாரகுருவையுமடையற்பாலதாகலின் ஆன்மலாபம் விழைவாரனைவரு மதனைப் பற்றுங் கடப்பா டுடையரே யாவரென்க.

'உனரும் நிறை விபுவாய பெருவெளி' என வியையும். உனரும் - உன்ன அரும் என்பதன் மரூஉ ; உன்னல் = நினைத்தல், தியானித்தல். (கஅ)

இவ்வதி சுலபமான முத்திமார்க்கத்தை மானுடர்
பாவத்தான் விட்டு வேறுமார்க்கத்
தலைவா ரென்பது.

ஒல்லைப் பசுவருள் புல்லற் குறுநெறி
யுகமீ தளவற வுளவேனும்

எல்லைக் கருவிக ளுள்ளுக் குளயர
விதுவே யதிசுல பமதாகுஞ்
சொல்லற் கரியவொர் சொல்லைத் தருமொரு
சுகதே சிககர நெறிகாணிங்
கல்லற் படுபவர் தொல்லைக் கொடுமற
மதனல் வரைகுவ ரலைவாரால்.

அநாதிமல பெத்தர்கள் (வாழ்வான்) அருளினை படைதற் குற்ற மார்க்கங்கள் உலகத்தில் எண்ணலளவையொழிய விருக்கினும் (அவற்றுள்) தத்துவாத்துவாவிலுள்ள கருவிகளனைத்தும் உள்ளுக் குள்ளேயே செயலற்று ஒடுங்குதற்கு மேற்கூறியதே அதி சுலபமான மார்க்கமாகும். (இம்மார்க்கமே) சொல்லுதற்கருமையாகிய ஒரு மொழியென்னும் உபதேசமொழியை நல்கியருளும் ஒப்பற்ற ஆனந்த ரூபியாகிய தேசிகனார் சின்முத்திரையாற் குறிக்கப்பட்ட நெறி; காண்பாயாக. இதனை, மானுடர் பழமையாய கொடும்பாவத்தால் நீக்குவர்; (வேறுவழிச்சென்று) அலைவர்.

ஆன்மாக்கள் அநாதிமல பெத்தர்களாதலின் 'ஒல்லைப்பசு' என்றார். ஒல்லை= பழமை; லகரவேறுமை காண்க. மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவாவென்னும் ஆறத்துவாக்களுள்ளே கருவிகள் தத்துவாத் துவாவி லுள்ளனவாகலின் அவை 'எல்லைக்கருவிகள்' எனப்பட் டன; விவரம் முற்காண்டத்துப் கசு - ன் உரையிற் சொல்லியா யிற்று. கரநெறி= சின்முத்திரையாற் குறிக்கப்பட்ட நெறி. இது பற்றி யறியவேண்டியவற்றை ரு - ன் உரையிலும், பரிபூரணானந்த போதத்துப் பாயிரத்தின் ரு, க0எ - இச்செய்யுள்களிலும், அவற்றி னுரைகளிலுங் கண்டுகொளலாம். "இங்கு அல்லற்படுபவர்" என் றது இப்பூவுலகினராய மானுடரென்பதைக் குறிக்கின்றது. "தொல் லைக்கொடுமற மதனல் வரைகுவர்" எனவே முன்னர்ச்செய்த புண் ணியமுடையாரே இச் செந்நெறி பற்றுவரென்பதும் விதிக்கப்பட்ட தாயிற்று. கொடுமறம்= கொடும்பாவம். வரைகுவர்= நீக்குவர்; கு - சாரியை.

உகம்= உலகம்; பாயிரத்து ரு - ன் உரைகாண்க. ஏனும்= ஆயினும்; எனினுமென்பதன் மரூஉ. 'இம்மார்க்கமே' என்பது வருவித்துரைக்க. 'காண்' என்ற ஏவலொருமை முற்று, இடைச்சொற்றன்மைப்பட்டுக் கட் டுரையாய்நின்றது. கட்டுரை தேற்றப்பொருளில் வருவது. (உ0)

**மூர்த்தி, தலம், தீர்த்தமென்னு மூன்றனும் மோக்கமாமென்ற தெத்தன்மைத்து? என்ற சீடனை, ஆசிரியர் நோக்கிக் கூறுவன கூறல்.**

*கலிநிலைத்துறை.*

என்று தேசிக னியம்பலு மேசகன் மனசன்
மன்று ஞானமின் றூர்கதி யின்றென வழுத்திற்
சென்று நீர்படிந் தாலயந் தொழுவது சிவமென்
றன்று மாதவ ரதிர்த்ததெற் றறைகென வறைவான்.

இவ்விதமாக ஆசிரியர் கூறியவளவிலே குற்றமற்ற சீடனாகிய மனசன், பிண்டதகராலய ஞானமில்லாமற் பரமுத்தி (எய்துவது) இல்லையென்று கூறின், புண்ணியத்தலங்களையடைந்து அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களின் மூழ்கித் தேவாலயவழிபாடு செய்வது முத்தியென்று முற்காலத்திருந்த மகாதவசிகள்கூறிய தெத்தன்மைத்து? கூறல்வேண்டுமென்ன; ஆசிரியர் கூறுவான்றொடங்கினர்.

ஆலயம்= யாவும் இலயமாதல். இந்த இலயத்தானம் பாயிரத்து ச - ன் உரையி னவின்றவாறு விந்து, நாதம், சத்தி, சிவமென்னு நிட்கள நிலையாம். இந் நிலைக்களத்திருப்போன் சிவனென்பதை ஆலய மென்னுஞ்சொல்லும், அச்சொற்குப் பொருளாயிருக்கும் பகிர்முகக் கோயில்களு முணர்த்துகின்றன வென்க. இலயத்தானஞ் சிவசுதந் திரமா யுளதென்பது கக - ன் உரையுழிக் காட்டப்பட்ட மாண்டூக் யோபநிஷத வாக்கியத்தும் பெறப்படுகின்றதென்க.

சேதனுசேதனப் பிரபஞ்சமாகிய யாவையும் இலயஞ்செய்து கொள்ளுஞ் சங்காரகர்த்தாவாய முதற்கடவுளிருக்கைக்கே ஆலய மென்னும்பெயர் சிறந்து நிற்றலினன்றோ அது, தகராலயமெனவும் இந்நூலிற் பன்னப்படுவதாயிற்று.

"வழுத்தல்" என்பது துதித்தலென நிகண்டுகளிற் பொருள்படுமாயினும் இங்ஙனஞ் சொல்லலெனும் பொருட்டு; பெரியபுராணத்திற் சாக்கியநாய னார்புராணத்து முதற்செய்யுளிலே "மறுவில்சரண் பெற்றதிற மறிந்தபடி வழுத்துவாம்" எனவும், சூதசங்கிதை முத்திநிலையுரைத்த அத்தியாயத்துப் கஅ - ஆம் பாட்டில் "மனத்திடை நினைத்ததென் வழுத்துவா யென்றான்" எனவும் வருவன காண்க. சிவம் =முத்தி; "அமுதம் பரஞ்சிவம் முத்தியு மாகும்" என்பது பிங்கலநிகண்டு. அதிர்த்தல்= சொல்லல். அறைகென - அறைகவென என்பதன் விகாரம். (உக)

ஆசி லாச்சிவ புண்ணிய வண்ணலி னுலோர்
மாசி லாச்சிவ ஞானமுண் டாமதை மண்மேல்
தாசர் பாலருண் மூர்த்தியுந் தீர்த்தமுந் தலமும்
ஈச னாணையி லேதர வுள்ளன வென்றும்.

குற்றமில்லாத சிவபுண்ணிய மேம்பாட்டினால் ஒரு களங்கமுமில்லாத சிவஞான முண்டாகும். அப் புண்ணியத்தை இம் மண்ணுலகில் அடியார்க்கருண் மூர்த்தியும், அஃதிருக்கின்ற புண்ணியத் தலமும், அத்தலத்துள்ள புண்ணியதீர்த்தமும் ஈசுவரனது ஆணை வழியே கொடுக்க எக்காலத்து முள்ளன.

([illegible])

அநேகஜந்மார்ஜிதபுண்யபும்ஜ
பக்வகைவல்யபலோகண்டாநந்தம்)

"அனேக சனனங்களில் ஈட்டப்பட்ட புண்ணிய சமூக பரிபக்குவ கைவல்லிய பல அகண்டானந்தம்" என மண்டலப்ராஹ்மணோபநிஷதம் ரு - ஆம் பிராஹ்மணத்தின் மொழிதலால் அச் சிவபுண்ணிய மேம்பா டறியக்கிடக்கின்றது. இப்புண்ணியம் மூர்த்தி முதலிய மூன்றானு மெய்துமென்பது— சைவசமயசரபத்துக் கைவல்லிய காண்டத்தின் ச - ஆம் அத்தியாயத்தில் —

(க) ([illegible]
[illegible] ।)

" தவச்ரியேமருதோமர்ஜயந்தருத்ர
யத்தேஜநிம சாருசித்ரம் । "

என வரூஉம் ருக்வேதத்தின் ரு - ஆம் மண்டல மந்திரத்திலும், பஸ்மஜாபாலோபநிஷத்தில் —

(உ) ([illegible]
[illegible]
- - - - [illegible])

" லிங்கரூபிணம்மாக்ஸம்பூஜ்யசிந்தயந்தியோகிநஸ்
ஷித்தாஸ்ஷித்திம் கதாயஜந்தியஜ்வாநோ
மாமேவஸ்துவந்தி - - - - காச்யாம் "

எனநிகழ் மந்திரத்திலும், வேறு பிரமாணங்களிலும் பெறலாம். பொருள் :— (க) "உருத்திர! மருத்துக்கள் (= தேவர்கள்) நினது செல்வத்தினை யெய்துமாறு நினது அழகிய சித்திரரூப இலிங்கமூர்த்தியினை அபிடேகாதி ஆராதனை புரிந்தனர்" - எனவும், (உ) "இலிங்கரூபியாகிய என்னைக் காசித்தலத்தில் நனிபூசித்து யோகிகளுஞ் சித்தர்களுஞ் சிந்தை செய்கிறார்கள் : சித்தியை யடைகிறார்கள் : தீக்ஷிதர்களும் என்னையே யஜனஞ்செய்கிறார்கள்" என்று சிவபிரான் றிருவாய்மலர்ந்தருளினன் எனவுமாம். போந்த ருக்வேத மந்திரத்திலே "ஜநிம" என விருப்பதுதான் இலிங்கம். இப்படியே பொருள்கோடல் வேண்டுமென்று பராசரபுராணம் —

(𑌰𑍌𑌦𑍍𑌰𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌮𑌹𑌾𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌶𑌿𑌲𑌾𑌮𑌯𑌮𑍍 ।
𑌚𑌾𑌰𑍁𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌲𑌬𑍍𑌧𑌵𑌾𑌨𑍍 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥)

"ரௌத்ரம்லிங்கம்மஹாவிஷ்ணுர் பக்த்யாசுத்தம்சிலாமயம் |
சாருசித்ரம்ஸமப்யர்ச்ய லப்தவாங்பரமம்பதம் ||"

என உபப்பிருங்கணஞ் செய்வதாயிற்று. பதப்பொருள் :— "மகாவிட்டுணுவானவர் பத்தியோடு சுத்தமும், சிலாமயமும், அழகிய சித்திர ரூபமுமாகிய சிவலிங்கத்தினை அருச்சித்துப் பரமபதத்தினை யடைந்தனர்" எனவாம். 'சாருசித்ரம் ஜநிம' என்று சுருதி கூறினதற்குச் 'சாருசித்ரம் ரௌத்ரம்லிங்கம்' என்று புராணம் பொருள்செய்ததை யிங்ஙன முணர்க. வேதத்தில் விக்கிரகாராதனை விதிக்கப்படவில்லையென்று சிலர் சொல்லுவது இவ்வாற்றான் நிரம்புவதா யில்லை.

மூர்த்தி முதலிய மூன்றானு மெய்துபுண்ணியம் ஞானம்போல நேரே முத்திசாதன மாகாதென்பது இச்செய்யுட்கருத்து. இதற்கே திருக்களிற்றுப்படியார்— "இங்குச் சொல்லும் பழம் (= சிவஞான சாயுச்சியம்) போதங் கரையும் அன்பன்றி, தீர்த்தமாடல் பகிர் முகசிந்தனை சிவார்ச்சனை முதலியசெய்கை அன்றே" என்னும் பொருள் பொருந்த —

அன்பன்றித்— தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்"

என்றோதுமாற்றா னிணங்குகின்றது. இந் நியதி "மேற் சரியா கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி

யல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்" என்று சிவஞானபோதங் கூறுமோ ரேதுவிலும் பெறப்படும். இது —

(𑌪𑌾𑌷𑌾𑌣𑌲𑍋𑌹𑌮𑌣𑌿𑌮𑍃𑌣𑍍𑌮𑌯𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌷𑍁
𑌪𑍂𑌜𑌾𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑌨𑌭𑍋𑌗𑌕𑌰𑍀𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍋𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌤𑌿𑌸𑍍𑌸𑍍𑌵𑌹𑍃𑌦𑌯𑌾𑌰𑍍𑌚𑌨𑌮𑍇𑌵𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍)

"பாஷாணலோஹமணிம்ருண்மயவிக்ரஹேஷு
பூஜாபுநர்ஜநநபோககரீமுமுக்ஷோ: ।
தஸ்மாத்யதிஸ்ஸ்வஹ்ருதயார்ச்சநமேவகுர்யாத்"

என்னுஞ் சுருதி நிச்சயமுமா மென்க. மைத்ரேயோபநிஷத்தி லுள்ள இதன்பொருள் :— "மோக்கவேட்கை யுள்ளோற்குப் பாடாணம், உலோகம், மணி, மண்ணென்பவற்றாலாய விக்கிரகங்களிற் புரியும் பூசை மறுபிறப்பினையும், போகத்தினையுந் தரத்தக்கது : ஆதலின் யதியாயுள்ளோன் மறுபிறப் பெய்தாதிருக்குமாறு தனது இருதயார்ச்சனத்தையே செய்தல்வேண்டும்" எனவாம். இது, மைத்திரேயருக்குக் கைலாசபதி திருவாய்மலர்ந்தருளியதாக வுளது. வீடுறுங்காறு மெய்தும் ஒவ்வொரு பிறப்பு மொன்றற்கொன் றுயர்தற்குக் காரணமாங் கன்மசேடத்தினையே அம் மண்டலப்ராஹ்மணம் 'அனேக சனனங்களில் ஈட்டப்பட்ட புண்ணிய சமூக பரிபக்குவம்' என்றியம்பிற் றென்க.

அண்ணல் = மேம்பாடு. 'தலமுந் தீர்த்தமும்' எனவும், 'என்றும் உள்ளன' எனவும் மாறுக. தாஸர் = அடியார் ; தாசர் - தமிழ்நூன் முடிபு. (உஉ)

காமி யார்த்தமுட் கருதுநர்க் கவைசுவர்க் காதி
பூமி மீதணை போகம துதவுமஞ் ஞான
பூமி நீங்குபு சிதம்பர சிவத்தினைப் புணரற்
கேமி குந்திழைப் பவர்க்கருட் குரவனை யீயும்.

மேற்குறித்தவற்றைக் காமியார்த்தமாக உள்ளத்தேகருதிப் புரிவோர்க்கு அவைகள், சுவர்க்காதி புவனங்களிலுள்ள போகங்களை நுகருமாறு கொடுக்கும். (அங்ஙனமின்றி) அஞ்ஞான பூமியை நீங்கிச் சிதம்பர சிவத்தினை யெய்தும்வண்ணம் பிரியத்தி லதிகரித்து, (காமியார்த்தமா யில்லாமல்) உஞற்றுபவர்க்கு (அவைகள்) அருட்பிரகாசமுடைய ஞானசாரியனை நல்கும்.

முற்காண்டத்து ௩0-ன் உரையிற் கூறியவாறு சுவர்லோகத்தின் மீது பல ஊர்த்துவலோகங்க ளிருத்தலாற் "சுவர்க்காதி பூமி" என்றார். சுவர்லோகஞ் சுவர்க்கமெனப்படும். காமியார்த்தமாகச் செய்யப்படு புண்ணியம் இச் சுவர்க்காதி போகங்களை யுதவுமென்பது மேலைச் செய்யுளுரையிற் பிரமாணிக்கப்பட்ட மைத்ரேயோபநிஷத் வசனத்தில் "மறுபிறப்பினையும், போகத்தினையுந் தரத்தக்கது" என வருபொருளிற் பெறப்படுகின்றது. மாயை அறிவற்ற சடபதார்த்தமாகலின் அதன் காரியப்பாட்டிலுள்ள உடம்பினையு முலகினையும் அஞ்ஞானபூமியென்று மென்றும், அப்பூமியினை "நீங்குபு" என்றதனால் ஞானபூமிவழிச்சேறல் வேண்டுமென் றறிவுறுத்தாரென்றும் இங்குப் பொருள்கோடலாம். அந்த ஞானபூமி வராஹோபநிஷத்தின் ச - ஆம் அத்தியாயத்திற் சுபேச்சையாதி ஏழாகப் பாகுபாடு செய்யப்பட்டுளது. அவை :—

(க) இன்னும் நான் மடவோனாயிருத்தல் கூடாது; சற் சாத்திரங்களானுஞ் சத்துக்களாயுள்ளவர்களானும் பரமானுக்கிரகமடையப் பார்க்கின்றே னெனுமாற்றான் வைராக்கிய பூர்வமாயுண்டாகும் இச்சை (ஶுபேச்சா) சுபேச்சை யெனப்படும்.

(உ) சாத்திர சத்துக்களது சார்பும், வைராக்கியாப்பியாச பூர்வகமான சதாசாரப் பிரவிருத்தியும் (விசாரணா) விசாரணை யெனப்படும்.

(௩) சுபேச்சை, விசாரணை ஆகியவிவற்றால் இந்திரிய விடயங்களில் எங்ஙனம் ஆசை குன்றுகின்றதோ? அங்ஙன்மே (தநுமாநஸீ) தனுமானசி சொல்லப்படும்.

அகாரத்தினது துரியாமிசமாம் இம்மூன்று பூமியும் சாக்கிரத்திற் காணுமாறுள்ள சகத்தினதுண்மையினை யுணர்தலென் றுணர்கவென்றும், —

(ச) போந்த மூன்று பூமிகளின் அப்பியாசத்தினால் விடய வைராக்கியமுண்டாயவிடத் தெய்து சுத்த சித்தமானது சத்தாகிய ஆன்மாவின்கண் ணிருத்தல் (ஸத்வாபத்திஃ) சத்துவாபத்தி யெனப்படும்.

உகாரத்தினது துரியாமிசமாம் இஃது அத்துவிதத்திலே திரபுத்தியுண்டாய்த் துவிதபாவனையடங்கி இச் சகத்தினைச் சொப்பனமாகக் காண்டலென் றுணர்கவென்றும்,—

(ரு) சேர்ந்த நான்கு பூமிகளின் அப்பியாசத்தினால் வேரூன்றியுள்ள சத்துவமேம்பாடு (ஸஂஸக்தி:) அசஞ்சத்தி யெனப்படும்.

மகாரத்தினது தூரியாமிசமாம் இதனிற் பிரிந்து பிரிந்து போய சரற்காலமேகம் நசிக்குமாறுபோலச் சகத்து நசிக்குமாதலிற் சத்துவமொன்றே யெஞ்சியிருக்கும்; இதனைச் சுழுத்திபதமொன்றுணர்கவென்றும்,—

(சு) சேர்ந்த ஐந்து பூமிகளின் அப்பியாசத்தினாலே தனதான்மாவின்கண் இரமித்துக்கொண்டு அகம்புறமென்னும் ஈரிடத்துமுள்ள பதார்த்தபாவனை யில்லாததும், பிறர் தூண்டுங்காரிய மாத்திரையே பிரவிருத்திப்படுதலுமாயுள்ள நிலை (பதாா்த்தாபாவநா) பதார்த்தபாவனை யெனப்படும்.

அர்த்தமாத்திரையினது தூரியாமிசமாம் இஃது எஞ்ஞான்றும் உண்முக நாட்டமுறு தன்மையினால் எஞ்ஞான்றும் வெளிமுக வியாபாரங்களி லிருப்பினும் இளைபபுற் றுறங்குதலொக்கு நிலையாமென்றுணர்கவென்றும்,—

(எ) சேர்ந்த ஆறு பூமிகளி னெடுங்கால அப்பியாசத்தினாற் பேதமொருவித் தனது ஆன்மபாவனையி னிலைத்திருத்தல் (துரீயா) துரியகை யெனப்படும்.

அர்த்தமாத்திரையினது தூரியாமிசத்தைக் கடந்துளதாம் இது தொன்மையும், (மூடஸுஷுப்தி) கூடசுபத்தியென்னும் பொருமோங்கவிருப்பதாம். கேவலம் க்ஷீண மனமுடைமையும், பயமின்மையுமுற்று நிற்றற்குரிய அத்துவிதநிலை ரதென்றுணர்கவென்றும் (அவ்வத்தியாயத்திற்)கூறப்பட்டுள. இவ்வத்தியாயம் ரிபுவென்பார் நிதாகருக்கு உபதேசிக்கு நெறியா யுளது.

சாந்தோக்யோபநிஷத்தின் ச - ஆம் பிரபாடகத்தில் "முத்திகருதி அநேகர்க்குத் திரவியம் முதலியன வளிப்பதிலும், எல்லாச் சாதியார்க்கும் எவ்விடத்தும் அன்னதானஞ் செய்விப்பதிலுந் தலைப்பட்டுவந்த (ஜாநஶ்ருதி: பௌத்ராயண:) சானச்சுருதி பௌத்திராயணனென்னும் பெயரிய அரசன், தெய்வ அன்னப்பறவை யோதிய வுரையுணர்ந்து (மஹாவ்ருஷம்) மகாவிருட தேசத்தில் (ரைக்வபர்ணம்) இரைக்குவ பருணமென்னு மிடத்தில் வசித்துவந்த

இரைக்குவரென்னும் பிரமஞானியாரைத் தரிசித்தும்பும் பேறுபெற்றனன்" என்னுஞ்செய்தியும், உஉ-ன் உரையிற் காட்டப்பட்ட மண்டலப்ராஹ்மணோபநிஷத் வசனத்தில் "அனேக சனனங்களில் ஈட்டப்பட்ட புண்ணிய சமூக பரிபக்குவம்" என்பதும் பெறப்படுமாற்றானும் முத்திமுன்னிச் செய்யப்படு புண்ணியங்கள் அருட்குரவனை யீயுமென்பது சுருதிநெறியே யாகும்.

நீங்குபு - செய்பு என்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம். ஏமமிருந்து என்பது 'ஏமிருந்து' எனத் தொகுத்தல் விகாரப்பட்டது. ஏமம் = இன்பம்; ஈண்டுப் பிரியமெனும்பொருள்பட நின்றது. குரவன் = குரு. (உங)

அந்த வாரிய னளக்கரின் மா னுட னாக
வந்து கூடினுங் கூடுவ னலதருண் மன்றுட்
குந்தி யாடிறை மா னுட வடிவினைக் கொண்டே
பந்த மாயெதி ரெய்தினு மெய்துமிப் பாரில்.

அவ்வாசாரியன் இவ்வுலகத்தில் ஒரு மனிதனாகவந்து சேரினுஞ் சேர்வன். அங்ஙனமன்றி, அருட்சபையிற் குஞ்சித பாதத்துடனின்று நடிக்கும் இறைவே மானுடத்திருமேனி தாங்கிப் பரிவுடன் இவ்வுலகில் எதிர்ப்படினும் எதிர்ப்படும்.

திருவருண்மன்றி னடித்தருளு மிறைவனே மானுடத் திருமேனிகொண்டு ஞானாசாரியனாக வருத லுண்டென்பது திருவாதவூரடிகட்கு அனுக்கிரகம் புரிவான் றிருப்பெருந்துறையி லெழுந்தருளியிருந்த பரமாசாரியரது வரலாற்றினும் பெறப்படும்.

அளக்கர் = பூமி. குந்தியாடிறை = குஞ்சித பாதத்துடனின்றாடு மிறைவன்; "குந்திய காலினை குஞ்சித்த லாகும்." என்பது சே - திவாகரம். ஆரியன் = அறிவுடையோன்; ஈண்டு, ஆசாரியன் மேற்று; "ஆரிய ருலகென — ஆய்ந்த வான்றோ ரறிவுடை யோரே" என்பது சே - திவாகரம். (உச)

போக பூமிக ளாந்துறக் கங்களின் போகந்
தேக நேர வழிந்தெழு தன்மையைச் சிவனும்
ஏக நாயக னெடுவதிந் திடுநய னிறவா
தாக லாலதற் குரியமெய்ஞ் ஞானமே யதிகம்.

(ஆன்மாக்கள் செய்த நல்வினைக்கீடாகப்) போக நுகருந் தானங்களாகுஞ் சுவர்க்கங்களிலுள்ள அமிர்தபானம், அரம்பையாதி மாதர் கலவி முதலிய போகங்கள் பூத தேகத்தைப்போலத் தோன்றி

யழியுந் தன்மையை யுடையனவாம். ஏக நாயகனேடு அனன்னிய மாக விருக்கும் ஆன்மலாபம் அழிதன்மாலைய தன்றுகலின், அதற்குக் காரணமாகிய மெய்ஞ்ஞான மெனப்படும் பதிஞானமே சிறந்ததாகும்.

"துறக்கங்களின் போகந் தேக மோர வழிந்தெழு தன்மையைச் சிவனும்" என்றது— உஉ-ன் உரையுழிப் "பாஷாண லோஹ மணிம்ருண்மய விக்ரஹேஷு" என்றற் றொடக்கத்ததாய்ப் பிரமா ணிக்கப்பட்ட மைத்ரேயோபநிஷத வாக்கியங்களினும்,

"- - - - - - - - - - - - - - மலர்க்கொன்றைத்
தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே"

எனச் சாய்க்காட்டுப் பதிகத்தில் மூத்தமிழ்விரகனர் மொழிந்தரு ளிய வாக்கியங்களினும் பெறப்படும். துறக்கம்= சுவர்க்கம். ஞானமே அதிகம்; அதனாலேயே வீடு என்பதற்குரிய பிரமாணங்கண் முன் னுரைகளிற் பலவிடத்தும் வந்துள்ளன.

இச் செய்யுட்பொருண்மாட்டே 'துறக்கவாழ்வை நல்கு புண் ணியத்தினும் ஞானமே சிறந்தது' எனவுறுவது பிரதிஞ்ஞை (=மேற் கோள்) ஆகும். 'அந்த ஞானத்தால் ஏகநாயகனேடு வதிந்திடு நய னிறவாதாகலின்' எனவுறுவது ஏது (= காரணம்) ஆகும். 'அத் துறக்க வாழ்வு தோன்றி யழிதலொக்கும்; தேகம்போல' என வுறுவது திருட்டாந்தம் (= உதாரணம்) ஆகும் என்க. இங்கு "மெய்ஞ்ஞானம்" என்றது வடமொழி நூல்களிலே "ஸம்யக் ஜ்ஞா நம்" எனப்படும். இதனை, (ஆத்மா ஸம்யக்ஜ்ஞாநேந) "ஆத்மா ஸம்யக் ஜ்ஞாநேந" என முண்டகோபநிஷதங் கூறுதலி னறிக. ஸம் யக்= உண்மை.

'அழிந்தெழு தன்மையை' என்றதை எழுந்தழி தன்மையை என வியைத்துரைக்க. ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. (உரு)

**மூர்த்தி யாதியோர் மூன்றினு மாயநல் வினையாற்**
**சாத்தி ரஞ்சொன சாயுச்ய மேதெனிற் றனையில்**
**காத்தி ரங்களி லம்முறை யிழைத்துள கதழ்வால்**
**நீத்த வாரிய னினிக்கிடைப் பானெனு நிலையாம்.**

மூர்த்தி முதலிய ஓர் மூன்றினும் ஏற்படும் புண்ணியமே சாயுச்சியத்திற்குச் சிறந்த காரணமென்று சாத்திரங்கள் கூறியது யாதெனின்,— அளவற்ற தேகங்களெடுத்து அந்தமுறையிற் செய்

யப்பட்ட புண்ணிய விசேடத்தாற் சருவசங்க பரித்தியாகஞ் செய்த ஒரு ஞானசாரியன் கிடைப்பானென்னு நிலையாம்.

வானம் நெல்லைப்பெய்யு மென்புழி அதற்குக் காரணமான மழையில் இலக்கணை கொள்ளக்கிடக்குமாறு மூர்த்தி முதலிய மூன்றானுஞ் சாயுச்சியமென்பது அதனை நல்கு ஞானசாரியனிற் கொள்ளக்கிடத்தலின் இஃதிலக்கணையா மென்ப.

மூன்றின் - மூன்றினால் என விரிக்க. சாயுச்யம் (ஸாயுஜ்யம்) - வடநூல் முடிபிலுளது. வினைப்பொருண்மையைத்தரும் யாது என்பது 'எது' என மரீஇயிற்று. தனையில்= அளவில்லாத. தனை= அளவு. காத்திரம்= உடம்பு. (உசு)

அபர ஞானம தாகுமம் மூவகை யாலே
அபர மாம்பத மோக்கம தொருதிற மாசான்
அபர மாயருள் புரிபர ஞானம தாலே
உபயந் தீர்பர மோக்கம தொருதிற முணரே.

அபரஞானமாக நிச்சயிக்கப்படும் அம்மூர்த்தி முதலிய மூன்றானும் அபரமுத்தியென்னும் பதமுத்தி யுண்டாகும்; ஈதொருவகையாம். சதாசாரியன் ("நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்") எனப் பயமின்மையாமாறு உபதேசித்தருளும் பரஞானத்தினால் ("சிவனார் சிவனா யிட்டிருப்பரே" என்று விதந்து கூறப்பட்ட) ஒன்றிரண்டென்னும் இருவகை விகற்பங்களு மொழிந்த பரமுத்தியுண்டாகும்; ஈதொருவகையாம். உணர்வாயாக.

பரத்தைக் காண்டற்குக் கண்ணாய்நிற்கும் அனுபூதிஞானம் பரஞானமெனப்படுதலின், அத்திறனின்றிச் சாத்திரஞானம்பற்றிப் பகிர்முகத்தே மூர்த்திவழிபா டொன்றிநிற்குஞ் சிற்றறிவு "அபரஞானம்" எனப்பட்டதென்க. இன்னும், அம் மூர்த்திமுதலிய வழிபாடு சரியை கிரியைகளா யிருக்குமாற்றானே அவற்றானெய்து சாலோக சாமீப கதிகள் அபரமுத்தி யெனப்படுதலின் அம்முத்தியறிவும் அபரஞான மெனப்பட்ட தென்பது மொன்று. மேலான உலகபதங்களிலிருத்தலே அபரமுத்தியென்னும் பதமுத்தியாகலின் அதனை "அபரபத மோக்கம்" என்றோதினார். உலகமல்லாத இடம் அத்துவித ஆன்மாவேயாம். அந்நிலை, நிரவயவ ஆன்மாந்தர்க்கத தகராகாசவழிப் பரஞானத்தா லெய்தும் பரமுத்தியாகலின் அதனைப் பரமோக்க

மென்று பகர்ந்தார். ஆகலினன்றே (ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோபாஸகோ வைகுண்டம் பவநம் கமிஷ்யதி=) "ஓம் நமோ நாராயணாய என்னும் மந்திரோபாசகன் வைகுண்டலோகத்தினை யடைகின்றனன்" என யஜுர்வேத நாராயணோபநிஷதம் உரைத்தபடியே யுரைத்துக்கொண்ட ஆத்மபோதோபநிஷதம்— பின்னும், (நிரவயவோஹம்=) "நான் அவயவமில்லாதவன்" (ஆத்மாநமேவ த்ருஷ்ட்வாநாத்மாநம் த்யஜாம்யஹம் =) "நான் ஆன்மாவை யறிந்தபடியால் (ஆன்மாவல்லாததை =) அநாத்மாவை நீக்கிவிடுகின்றேன்" (ஆத்மாநமம் ஜ்ஸாவேத்மிக்வாப்பஜ்ஞாநம் பலாயிதம்=) "ஆன்மாவை யுண்மையா யறிந்துகொண்டேன்: அஞ்ஞானம் யாண்டோ பறந்து போயிற்று"

(சித்ரூபத்வாத் நமேஜாட்யம்)

"சிற்சொரூபமாகவே நானிருத்தலின் என்மாட்டே சடத்துவமின்று" என ஒரு சுவானுபூதிமான் சொல்லினனென்றுங் கூறி முடிவதாயிற்று. உலகமல்லாதஇடம் ஆன்மாவே என்பது கணித்து அவ்வுலகத்தை 'அநாத்மா' என இச் சுருதி கூறியவாறே (அநாத்மாதுஸஜீவோ வியதாதிப்ரபஞ்சக: =) "அநாத்மா யாதெனிற் சீவனுட்பட ஆகாயம் முதலிய பிரபஞ்சமே" என்று ஸர்வஸாரோபநிஷத்துஞ் சாற்றிற்று. ஜீவனென்றது ௬௦-ன் உரைக்கட்போந்த புருடதத்துவத்தை. இத்தத்துவம்— "சித்தசித் தான்மாவொன்று" எனச் சிவஞானசித்தியார் தெரிக்குமாறு சித்தும் அசித்துமாயிருத்தலிற் சேதனப்பிரபஞ்ச மெனவும்படும். ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங் கடந்த அத்துவிதகதியே அப் பரமோக்க மென்பார் "உபயந்தீர் பரமோக்கம்" என்றார். உபயம் = இரண்டு. ஒன்று (= ஏகம்) என்பதூஉம், இரண்டு (= த்வைதம்) என்பதூஉமே அவ்விரண்டு. "செப்பிய யுகளத் தோடு சேர்ந்திடு முபய மென்ப— அப்படி யிரண்டி லக்கத் தபிதான மாகும்" என்பது சூடாமணி நிகண்டு.

'அபரபதமாம்' என இயைக்க. ஆம் என்பதைப் பரமோக்கம் என்பதனோடுங் கூட்டுக. தீர் பரமோக்கம் - வினைத்தொகை. (உஎ)

**சரியைக் காடிறை மூர்த்தியிற் றுன்மறைந் தருளுங்**
**கிரியைக் கிந்தன மதனத்தின் பொறியெனக் கிளரும்**

உரிய யோகினுக் காக்கறந் திடுதக வுறமும்
அரிய ஞானமென் பதற்குமுன் வற்சல மெனவாம்.

சரியா மார்க்கத்தில் நடேசன், மூர்த்தியின்கண் மறைந்துநின் றனுக்கிரகிப்பன். கிரியா மார்க்கத்தில் அரணிக்கடைதலிற் றோன்றி மறையும் புலிங்கம்போல அவன் வெளிப்படுவன். சாரூபகதிக்குரிய யோக மார்க்கத்திற் பசுக்கறக்கும்போது பால் பெருகிவரு தன்மை போல் அவன் வெளிப்பட்டு நிற்பன். அருமையான ஞான மார்க் கத்திற் கன்றானது விரும்புழி விரும்புழிப் பால் கொடுத்துக்கொண்டு நீங்காது நிற்குந் தலையீற்றுப் பசுப்போல அவனிற்பன்.

சரியை இற்றென்பதூஉம், கிரியை இற்றென்பதூஉம், யோகு இற்றென்பதூஉம் சிவசூரியப்பிரகாசத் தறியற்பாலன. தகரவித் தையே ஞானமாகலின் அஃது இந் நூலுரைகளில் ஊங் குணரக் கிடக்கின்றது.

சரியைக்கு, கிரியைக்கு, யோகினுக்கு, ஞானமென்பதற்கு என்பவற்றி லுள்ள நான்கனுருபு ழைனுருபாய் மயங்கிற்று. சரியை யுடையாரைச் சரி யையென்றும், கிரியை யுடையாரைக் கிரியையென்றும், யோகுடை யாரை யோகென்றும், ஞான முடையாரை ஞானமென்றும் உபசரித்தார் என்றலுமாம். ஆமேற் 'கு' - நான்கும் நான்கனுருபேயாமென்க. களர்தல் = எழல்; "கால்கிளர்ந் தன்ன வேழமேல் கொண்டு" என்றார் (திருமுருகாற் றுப்படையில்) நக்கீரனரும். வற்சலம் = கற்று; முன்வற்சலம் = தலையீற் றுக் கற்று. (உஅ)

தாச மார்க்கமும் புத்திர மார்க்கமுஞ் சகமும்
பாசத் தாற்பினும் பிறந்திடு பதமுத்திக் குரிய
பாச நீத்தசன் மார்க்கமிப் படிமிசைப் பிறவா
தீச னேடணை பரமுத்தி யென்பதற் குரித்தால்.

தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கமென்னும் மூன் றும் மூலபந்தத்தோடுள்ளனவாகலின் அவை, மேலும் பிறக்கும்படி யான பதமுத்தியை யீதற்குரியன. மூலபந்தநீக்கமுடைய சன் மார்க்கமானது இப்பூமியின்கட் பிறவாது பரசிவத்தை அனுபூதி வாயிலாக வணையும்படியான பரமுத்தியை ஈதற்குரியது.

சரியை முதலிய மூன்றும் முறையே தாசர் (= தொண்டர்) இயல்பினையும், புத்திரரியல்பினையும், தோழரியல்பினையும் ஒத்தலினு

னும், அவ்வியல்புகளே மறுமைக்குரிய கதிநிலையினு மெய்துதலினா னும் அவை, தாசமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கமெனப் பெயர் பெற்றன. சகமார்க்கஞ் சகமெனப்பட்டது. சகன் = தோழன்; (𑌸𑌖𑌃) ஸக: என்பது வடசொல். இந்தச் சகமார்க்கமாகிய யோகத் தை ஞானயோகமல்லாத கன்மயோகமென்றே கோடல்வேண்டும், என்னை? அஃதும் பிறந்திடு பதமுத்திக் குரியதென் றிங்கறிவுறுத் தினமையானும்; காசியாத்திரையில் —

> " எவனுருவந் தோன்றி யிறவாதோ வென்று
> மவனுருவ மாங்கதியு மற்றென் — றெவரு
> மறிவதற்கோ ரையமிலை யாதலிற்சா ரூப
> திறமும் பலவெனநீ தேர்."

என்று கூறினமையானும். சிவன் பிறவா னிறவானென்பது முற்காண்டத்துப் க0 - ஆஞ் செய்யுளுரைகளினும், ஆண்டுள்ள காட் டாய சுருதி முதலிய பிரமாணங்களினும் பெறப்படுதலால் ஞான யோகத்தா லுற்ற அவனதுருவ கதியாய சாரூப மழியாநீர்த் தென்ப தும், சிவானுக்கிரகத்தால் அவ்வுருவமிருந்தவாறே மறைய; அக் கதியினர் ஞான சாயுச்சிய மெய்துத லுளதென்பதுமே இங்ஙனுணர லுறக் கிடப்பன. உருவகதி யுற்றுச் சிவலோகத்திருப்பார் மீண்டு பிறவா ரென்பது —

> (𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨𑌚𑌪𑌨𑌰𑌾
> 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌨𑌚𑌪𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇)

> " ப்ரஹ்மலோக மபிஸம்பத்யதே நசபுநரா
> வர்த்ததே நசபுநராவர்த்ததே"

என்னுஞ் சாந்தோக்யோபநிஷத்தின் அ - ஆம் பிரபாடக வாக்கி யத்தும் பெறப்படுகின்றது. பொருள்:— " (அவன்) பிரமலோகத்தை யடைகின்றனன்; மீளத்திரும்புவானல்லன், மீளத்திரும்புவானல் லன்" எனவாம். இதுபற்றிய மதுகை பலவும் பரிபூரணானந்தபோதத் துப் பிற்படலத்துப் பிரதமச்செய்யுளுரையிற் றெளியலாம். கன்ம யோக பதகதி பிறப்புக்குரியதென்பதும், ஞானயோக பதகதி பிறப் புக்குரிய தன்றென்பதும் —

> " தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
> சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோர்
> ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
> ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றோர்

ஊனமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
    மொடுங்கும்போ தான்முனிலா தொழியினுற்ப வித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனை ”

என்று சிவஞானசித்தியார் கூறுமாற்றினும் பெறலாம். மிருகேந்த்ராகம பஞ்சக்ருத்யப்ரகரணத்தில் —

(𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌮𑍋𑌚𑌯𑌤𑌿𑌸𑍍𑌵𑌾𑌪𑍇 𑌶𑌿𑌵𑌾𑌸𑍍𑌸𑌦𑍍𑌯𑍋𑌭𑌵𑌨𑍍𑌤𑌿𑌤𑍇 ।
𑌸𑌂𑌹𑍃𑌤𑍌𑌵𑌾𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 𑌵𑌣𑌵𑌃 𑌪𑌤𑌯𑍋𑌥𑌵𑌾 ॥)

“ யாந்விமோசயதிஸ்வாபே சிவாஸ்ஸத்யோபவந்திதே ।
ஸம்ஹ்ருதௌவாஸமுத்பூதா வணவஃ பதயோதவா ॥ ”

என வருவதூஉம் ஈண்டுக் கருதிக்கொள்ளத் தக்கதே. பொருள் :— “ சங்காரத்திற்குப் பின்னே சிவன் எவர்க் கனுக்கிரகஞ் செய்வனோ அவரெல்லா முடனே சிவத்துவ மடைவர் : சங்கார காலத்துஞ் சிருட்டி காலத்து மனுக்கிரகிக்கப் படுவோர் அதிகார பதித்தன்மையையேனும், அஃதில்லாத முத்தியையேனு மடைவர் ” எனவாம். போந்த சிவஞானசித்திச் செய்யுளில் ஈசனியோக நெறியாற் பதமுத்தியெய்தினோர் சிவானுக்கிரகம் பெறாராயிற் பிரளய காலத்தின் ஞானசாயுச்சியம் பெறாது பூமியிற்பிறந்து ஞானமடைவரென்பதுங் காணப்படுகின்றதன்றோ ? அது, யோகநிட்டையி விழிந்தோர் கதியெனக் கொளப்படும். மூச்சைப்பிடித்துச்செய்யும் வளியோகமே கன்மயோக மாகும். சாலோக சாமீப கதிகள் பிறப்புக் குரியன வென்பதற்கு, (காசியாத்திரையில்) “ அப்பருஞ் சுந்தராருமக்கயிலை நின்றிழிந்தே — இப்புடவி வந்துகண்டா ரெம்மான் பரஞ்சோதீ.” என்றபடி திருநாவுக்கரசுகள் புராணமும், சுந்தரமூர்த்திகள் புராணமுஞ் சான்றாயிருக்கின்றன. இப் புராணங்களுட் கூறப்படாத யாதானுமோ ரபிமான கற்பனையினுல் விழுங்கப்பட்டார் சிலர், இந் நாவுக்கரசுகண் முதலிய அறுபான்மும்மை நாயன்மார் இவ்வுலகியல் நீத்து முத்திபெற்றாரல்லர் ; இவண் நடந்துகாட்ட வந்தவர்களென்று கூறின், ஒருபெண்ணை வேட்டதற்பின் மற்றொரு பெண்ணையு மணந்துகொண்மின் : அங்ஙனமே சிவபெருமானைத் தூதனாகவும் போகவிடுமின் : பிரமாணவுரை கடந்துசென்று விழியிழந்து நின்மின் ; பின்னர்க் கோல்பற்றுமின் : பின்றை விழிபெறுமின் என்பனவாதியாகச் சுந்தரமூர்த்திகளும், சிவலிங்கத்தின் மீது உச்சிட்ட நீரை யுமிழ்மின் : பன்றியிறைச்சி படைமின் : கந்தலூறு கண்ணதருகே தோற்கழற் காலினை யூன்றுபு தங்கண்ணினைப் பிடுங்குபு

ஆவயி னப்பியிடு மேல்வை அக்காலினை பெடுமின் என்பன வாதி யாகக் கண்ணப்பநாயனாரும், சிவலிங்கத்தின்மீது நாளுங் கல்லி னையே யெறிந்து வம்மின் என்று சாக்கியநாயனாரும், பொற்பார்ந்த புதல்வனைத் தாய்பிடிக்கவுந் தந்தை யறுக்கவு மாமொரு கோறலிற் கறிசமைத்துப் பைரவர்க்குப் படைமின் எனச் சிறுத்தொண்ட நாயனாரும் நடந்து காட்டினரோ ? எனக் கடாவி அக்கூற்றினை மறுக்கு மாற்றானே உண்மையை நிறுவுக. ஏனைய நாயன்மார் நடைகளையு மிவ்வாற்றானெடுத்து விவகரித்திடுக. நிற்க. அந் நாயன்மார்கண் முத்திபெற்றா ரல்லராயிற் சைவத்தின் முத்தரோ யிலரென்பதூஉ மெய்துமால். என்னை ? நடந்துகாட்ட வந்தவரென்னும் அன்னோர் மாற்றம், சிவசாரூப சாயுச்சியங்கள் பிறவிக்குரியனவென்பதை நிலை பெறுத்துகின்ற தாகலின். உருவகதியும் பதமுத்தியெனப்படுமோ வெனின்,— உருவமூர்த்தியினுடைய வுலகத்தில் அக்கதியினர் வாச மிருத்தலின் அஃதுமவ்வாறு கூறப்படலா மென்க. ஆகலினன்றே "சன்மார்க்கம்" என்றற் றொடக்கத்துச்செய்யுளில் "மூன்றினுக்கு முத்திபத மென்பர்" எனச் சிவஞானசித்தியாருந் தெரிப்பதாயிற்று. நன்னெறியாகிய ஞானமே "சன்மார்க்கம்" எனப்பட்டது.

உரிய - அன் சாரியை பெறாப் பலவின்பான் முற்று. (உக)

மொழிந்த மூர்த்தியொ டாமொரு மூன்றினுங் கலுடங்
கழிந்து போமத னாற்கதி யாமெனக் கழறின்
கழிந்த தங்ஙனங் காரியங் காரணங் கழியா
தழிந்து தோன்றொரு மதிபொரு மெனவறி வாயால்.

மேற் கூறியுள்ள மூர்த்தியோடு பொருந்திய முத்திறவழிபாட் டானும் பாவம் நீங்கும்; அப்படி நீங்குதலாற் சற்கதி கூடுமெனத் தலமான்மிய நூல்கள் சாற்றின், அவ் வழிபாட்டா லொழிந்ததும் பாவத்தின் காரியமேயன்றிக் காரணமாய்நிற்குங் கன்மமல சேட மன்று. அஃதழிந்து தோன்றுகின்ற மதியினை யொத்திருக்குமென்று (நீ) அறிவாயாக.

மதி என்றது மனத்தை. பஃறிறவெண்ணங்களாய்நிற்கு மிம் மனம் நினைப்பை மறந்தகாலத்தும் பெயர்த்துமது தோன்றற்கொரு காரணமாயிருத்தல்போலப் பாவகாரியம் நசித்தவிடத்துந் தோன்று வது தோன்றக் கன்மகாரணங் கெடாதிருப்பதேயாமென் றறிய வேண்டுமென்பார் "அழிந்து தோன்றொரு மதிபொரு மெனவறி

வாய்" என்றார். இதுபற்றி மேலுங் கூறிமுடிக்குஞ்செய்தி அடுத்த செய்யுளுழைப் பெறலாம்.

முன்னை மாதவருட்சிலர் ஞானத்தால் வீடென்றது மூர்த்தி, தலம், தீர்த்தமென்னு மூன்றனும் அவ் வீடாமென்றது எத்தன்மைத்து? என்னுங் கடாவுக்கு இதுகாறும் விடையிறுத்தவாறு.

கலுடம்= பாவம். பொருவும் என்பது பொரும்" எனப்பொருந்திற்று; ஒக்குமெனும் பொருண்மைத்து. அறிவாய் - முன்னிலை யேவலொருமை எதிர்கால வினைமுற்று; அறி - பகுதி, ஆய் - விகுதி, வகரம் - உடம்படு மெய். ஆல் - அசை. (ந௦)

ஞானமின்றிச் சனனாகித மில்லையாகலின்
ஞானமே பெரிதென்பது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அக்கா ரியநந் திடவே யவனு
ரைர்போ மறும்வீழ் கதிவா தையுறுஞ்
சொக்கார் பவனம் பவகா ரணமென்
றுரிசென் பதுநின் றுறுசன் மவுடல்
புக்கா டிடவே புரியும் புரியாப்
புலமே யருண்ஞா னமதர்ப் பதனுற்
பிக்கே துமிலா விபுவா மறிவே
பெரிதென் றறிவாய் பிழையொன் றிலியே.

(தகராலயரகசியத்தைக் கேட்குந்தன்மையினல்) ஒரு குற்றமுமில்லாத மனசனே! அந்தப் பாவத்தின் காரியம் ஒழியவே நாம் பாவஞ் செய்தோமோவெனப் பொருந்தியிருந்த மனக்கவலையானது அங்ஙனம் நீங்கும். எய்தவிருக்கின்ற நரகவாதனையொழியும். (அவ்வொழிவில் அம் மூர்த்திமுதலிய முத்திற வழிபாட்டுப் புண்ணிய பலனுய் வரத்தக்க) அழகிய சுவர்க்கமும் பொருந்தும். பாவகாரணமென்னுங் குற்றமென்பது எஞ்சிநின்று, எய்துவதாகிய சனனவுடம்பிலே தங்கிப் போகநுகர்ந்து திரியும்படிசெய்யும். அப் பாவகாரணமானது அப்படிச்செய்யாத நிலைக்களமே திருவருண்ஞானப் பெருமிதமாகும். அதனுல், எவ்வகைக்குற்றமு மிலதான வியாபகஞானமே பெரியபேறென் றறிவாயாக.

ஆசைவடிவ மாத்திரையாய், (நரகத்திருந்தேனுஞ் சுவர்க்கத்திருந்தேனு முறும்) மறுபிறப்பிற்கு வித்தா யுள்ள கன்மசேடமே

"பவகாரணமென் றுரிசு" எனப்பட்டது. இப்பவம் பாவத்திற்கும் பிறப்பிற்குமாக ஈண்டுக் கொளக்கிடத்தலின், அஃதும் "பவமென்ப சனனம் பாவம்" என வகரவேதுகையிற் பெறப்படுதலிற் றமிழ் வழக்கில் இரட்டுற மொழிதலென்னும் உத்திபால் இஃதோதப்பட்டதென்க. "துரிசு மல்ல கண்டமுந துரா லும்" எனப் பிங்கலநிகண்டு கூறுமாற்றானே துரிசு துக்கமெனப்படும்; ஈண்டதன் காரணமென்னுங்குற்றம் எனும் பொருள்பட நின்றது. கன்மசேடம் —

(𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌯𑌯𑍇ऽ𑌨𑍁𑌶𑌯𑌵𑌾𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌥𑍇𑌤𑌮𑌨𑍇𑌵𑌂 𑌚)

" க்ருதாத்யயேநுசயவாந் த்ருஷ்ட
ஸ்ம்ருதிப்யாம் யதேதமநேவஞ்ச "

எனப் பிரஹ்மஸூத்ரத்துங் கூறப்பட்டுளது. பொருள் :— "கன்மானுபோக முடிவில் ஆன்மா கன்மசேடத்துடன் மீளுகின்றது: அது போந்தமையானும், மீண்டமையானு மென்று சுருதி மிருதி சொல்லுதலின்" என்க. 'அநு' என்பது ஒடு என்னும் பொருள்பயக்கு மாற்றானே 'அநுசயம்' என்பது ஆன்மாவினொடு கன்மசேடஞ் சார்ந்துளதெனும் பொருளைப் பயப்பதாம். ஒருவரொருவனை நோக்கி, இனி நீ இவ்வித சனனமடைக; இவ்வாறுகுகவெனச் சபித்தவாற்றானும், எண்ணிய நியவெண்ணம் எத்துணையோ அத்துணையிருந்தவாற்றானும் உறு பிறவியிற்றானே யுறுப்புப்பழுதெய்துதல் இழிபிறப்பெய்துதன் முதலியனவும் அக் கன்மசேடத்தின்பாற் படுவனவே. இன்னு மிக்கன்மம்பற்றி யறியவேண்டுவ பலவுஞ் சிவசூரியப்பிரகாசத் துரைத்தாம்; அதன்கட் காண்க.

கன்மசேடமுங் கெட்டொழியச் சற்கதியெய்துதல் திருவருண் ஞானத்தாலன்றி ஏனைக் கன்மங்களால் அன்றென்பது இச்செய்யுளிற் பெறப்படூஉங் கருத்தாயிருக்கின்றது. இவ்வேதுவைக் கொண்டும் ஞானத்தால் வீடென்னுந் தமது பிரதிஞ்ஞையைச் சாதித்தாரென்க.

'ஆரஞர் அவண் போம்' எனக்கூட்டுக; அஞர் = வருத்தம்; "வாரவுண்டு போஞர் போக்கி" என்றார் முடத்தாமக்கண்ணியாரும் (பொருநராற்றுப்படையில்). அவண் = அவ்விடத்தில்; அண் - இடப்பொருள் காட்டுமொருகிளவி. 'வீழ்கதி வாதை அறும்' எனவும், 'சொக்கார் பவனம் உறும்' எனவும் மாறுக. இம் மண்ணுலகிலிருநது பாதாளவுலகில் வீழ்தற்காங் கதி "வீழ்கதி" எனப்பட்டது; வடநூலார் அதோகதி யென்ப. இது நரகமே. 'சொக்கார் பவனமும்' என எச்ச வும்மை விரித்துரைக்க. சொக்கு =

அழகு; பிங்கலநிகண்டு காண்க. பவனம்= சுவர்க்கம்; "பவனஞ் சுவர்க்கந் தெய்வலோ கப்பெயர்" என்பது சே-திவாகரம். போம், அறும், உறும், புரியும் என்பன வினைமுற்றுக்கள். பிறக்கே என்பது 'பிக்கே' என எதுகைநோக்கி விகாரப்பட்டது. பிறக்கு = வழு; "பிறக்கு வழுவே" என்பது சே-திவாகரம். (௩௧)

பஞ்ச மாபாதக விவரம்.

எனலும் பொறைசேர் மனசன் பெருவாழ்
விறையே முனரே சொனமா பவமைந்
தெனையென் றிடலும் பெருமா னருள்வா
னிகழ்பொய் கொலைகா மநறை களவென்
பனவென் றறிபொய் பகரிற் பலநாள்
பணிவந் துளமா தவமுந் தொலையும்
இனன்மைந் தனின்வெஞ் சினமுங் குவவா
யெழுமிவ் வுலகும் பழிகூ றுமரோ.

என்றாசிரியர் கூறியவளவிலே, பொறுமை பொருந்திய மனசனென்பான் பெருத்த ஞானைசுவரியத்தைப பெற்ற ஆசாரியமூர்த்தியே! முன்னர்க்கூறிய மாபாதகம் ஐந்து என்னை? என்று கேட்டவளவிலே, ஆசிரியர் கூறுவாராயினர். (பெரியோரால்) இகழப்பட்ட பொய், கொலை, காமம், கள், களவு என்பன (அவ்வைந்து) என்றறிவாயாக. (அவற்றுள்) பொய் கூறுதலாற் பலநாளுஞ் செய்யப்பட்டு இகபரசாதகமாகச் சேர்ந்துள்ள பெரிய தவமும் அழியும். ('இற்றைக்கு மில்லையோ பாவி பிறவாமை' என்று கூறிக்கோபிக்கும்) யமதருமனுடைய வெப்ப கோபமும் மிகுதியாயெழும். இவ்வுலகத்தாரும் பொய்யனென் றிழித்துப் பழிகூறுவர்.

காரணம் பற்றியேனும், அறியாமையாலேனும் ஒருவன் தனக்குத் தீங்கிழைத்தவிடத்துத் தானும் அதனை, அவனிடத்துப் புரியாது பொறுத்துக்கோடல் பொறையெனப்படும். இதுவுஞ் சீடன் மாட்டுளதாதல் வேண்டுமென்பார் "பொறைசேர் மனசன்" என்றார். பொறை - ஐ விகுதிபெற்ற தொழிற்பெயர். பொய், கொலை, காமம், கள், களவென்னு மைந்தும் பஞ்ச மாபாதக மெனப்படுமென்பதை,

"கொலையே களவுகட் காமம்பொய் கூறல்
மலைவான பாதக மாமவை நீக்கி"

என்று திருமந்திரங் கூறுதலிற் பெறுக. (𑌪𑌂𑌚𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇) "பஞ்சமஹாபாதகாத்ப்ரமுச்யதே" என இம்மாபாதகமைந்தும் அதர்வணவேத ஸூர்யோபநிஷத்திற் படிக்கப்படுகின்றன. பொய்பகரிற் பலநாள் பண்ணிவந்துள்ள மாதவமுந் தொலையுமென்னுமொரு நியதி —

(𑌸𑌮𑍂𑌲𑍋𑌵𑌾𑌏𑌷𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌯𑌤𑌿𑌯𑍋𑌽𑌨𑍃𑌤𑌮𑌭𑌿𑌵𑌦𑌤𑌿

ஸமூலோவாஏஷபரிசுஷ்யதியோந்ருதமபிவததி)

"பொய் புகல்கின்றவனெவனோ அவன் அடியோடு கெடுகின்றனன்" என்று பிரச்நோபநிஷதங் கூறுதலிற் பெறலாம். இப்பொய் புகலா வாய்மை பிராமணனிடத்திலேயே யுளது; ஏனையோரிடத்திலதென்பது —

(𑌨𑍈𑌤𑌦𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌵𑌿𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿𑌸𑌮𑌿𑌧𑌂𑌸𑍋𑌮𑍍𑌯𑌾

𑌹𑌰𑍋𑌪𑌤𑍍𑌵𑌾𑌨𑍇𑌷𑍍𑌯𑍇𑌨𑌸𑌤𑍍𑌯𑌾𑌦𑌗𑌾𑌇𑌤𑌿𑌤𑌮𑍁𑌪𑌨𑍀𑌯)

"நைததப்ராஹ்மணோவிவக்துமர்ஹதிஸமிதம்ஸோம்யா

ஹரோபயித்வாநேஷ்யே நஸத்யாதகா இதித முபநீய"

என்னுஞ் சுருதிமொழிகளிற் பெறப்படுகின்றது. சாந்தோக்யோபநிஷத்தின் ௪ - ஆம் பிரபாடகத்து இம் மொழிகளின் பொருள்:— "சோமிய ! பிராமண னல்லாதவன் இத்திற வுண்மைகூறற்கு அருகனல்லன் : சமித்துக்களை யெடுத்துவருதி : உனக்கு யான் உபநயனஞ் செய விழைந்துளேன் : நீ சத்தியத்தினின்றும் வழுவாதவனாயுளை யென்று அவர் அவற்கு உபநயனஞ் செய்தார்" என்பதாம். (𑌜𑌬𑌾𑌲𑌾) சபாலையென்னும் பெயரியவொருத்தி பெற்றபிள்ளையாகிய சத்தியகாமனென்பார் தந்தாயாலுந் தங்கோத்திரம் இஃதெனவறியக்கூடாதிருக்குந் தந்தன்மையினை ஆரித்துருமத ரென்னும் ஆசிரியர்பாற் கூறி வேதாத்தியயனம் விழைந்துநின்ற ஞான்று அவ்வாசிரியர், இவன் நாணமென்ப தொருசிறிதுமின்றி உண்மை யுரைத்தமையின் இவன் பிராமணனுக்குப் பிறந்தோனே யாவனென்னு நிச்சயங்கொண்டு அவற்கு உபநயனஞ் செய்தனரென்னுஞ் சரித்திரமே இச்சுருதியி னுணரக்கிடப்பது. பிராமணன் = பிரமத்தைத் தியானித்திருப்போன். இதனால், பொய்புகலேவாரது உபநயனமும், வேதாத்தியயனமும், பிராமணத்தன்மையும் பொய்யேயா மென்பதும், அம்மூன்றும் எக்கோத்திரத்தும் மெய் புகல்வோர்க்கே எஞ்

ஞான்று முரியனவென்பதும் பெறப்படுகின்றன. உபநயனம்= பூ ணூல். இது, சூத்திரமெனவும்படும். 'உலகினர் காணுமாறுடம்பிற் றரித்துக்கொண்டிருப்பது உண்மைச் சூத்திரமன்று: அக்ஷரம் பரம் பிரமம் யாது? அது, தரித்துக்கொள்ளத்தக்க (உண்மை ஞான) சூத் திரமாம்' என்னுஞ் சுருதி முடிவினால் அதனுண்மையு மறியக்கிடக் கின்றது. இதனை, யஜுர்வேத பிரஹ்மோபநிஷத்தில் —

(யதக்ஷரம்பரம்ப்ரஹ்ம தத்ஸூத்ரமிதிதாரயேத் ।)

"யதக்ஷரம்பரம்ப்ரஹ்ம தத்ஸூத்ரமிதிதாரயேத் ।"

எனவரு வசனத்தானும், இதனைத் தொடர்ந்துவரு வசனங்க ளானு மறிக. "நூலுஞ் சிகையு முணரார்நின் மூடர்கள்— நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்" எனத் திருமந்திரமுனிவ ரோதி யதூஉம் இங்குக் கருதத்தக்கதே.

சம்ஹாவென்னுஞ் சூரியனுக்கும், அவன் மனைவி சஞ்ஞிகை யென்பாளுக்கும் பிறந்தவன் யமனாதலின் அவன் "இனன் மைந் தன்" எனப்பட்டனன். இனன் = சூரியன்.

எனை - என்னை என்பதன் விகாரம்; அஃறிணை யிருபாற்கும் பொது வாம் எவன் என்னும் வினாவினைக் குறிப்புமுற்று என்னை என மரீஇயிற்று. நறை= கள். தொலைதல்= நிலையழிவு. (௩௨)

கொலையென் பதுகே ளுடலென் றசடங்
கொளுமா வியினங் களிலே யெதையுந்
தொலையும் படிசெய் வதுதா னிதுசெய்
சுகுர்தங் களெனும் விறகோ திகளை
உலையும் படிசெய் கனலா மழல்வா
யுறுதுன் பமதா முணவென் றுயிர்கொல்
புலையன் புலையுண் பவனுஞ் சொனவா
புகுவார் நரகம் புதரா யினுமே.

(இனி), கொலையென்பதைக் கேட்பாயாக. உடலென்று சொல் லப்பட்ட சடத்தினைக்கொண்ட சீவவர்க்கங்களிலே எந்தச்சீவனையும் அவ்வுடலைவிட்டுப் போம்படி (கோறல்) செய்வதுதான். இக் கொலைப் பாவமானது ஒருவன்செய்த பல புண்ணியங்களாகிய காஷ்டபர்வதங் களை நசிக்கும்படி செய்யும் பெருநெருப்பாகும். எரிவாய் நரகிடைப் பொருந்து துன்பமும் அதுவாகும். ஊனுண்டற்கென்று பிராணிகளை

வதைக்கும் புலையனும், புலையென்னும் பெயருடைய ஊனையுண்பவனும் எத்துணைப் புத்திமான்களாக விருப்பினும் முன்னர்க்கூறியவாறு நரகங்களிற் குடிபுகுவர்.

உடலைச் சித்தின் நீக்குதற்கு "உடலென்ற சடம்" என்றார். மலைபோன் மாணப்பெரிய அறங்களையுங் கொலைப்பாவங் கெடுக்குமென்பார் "சுகிர்தங்களெனும் விறகோதிகளை யுலையும்படிசெய் கனலாம்" என்றார். இப் பாவம் இத்துணைக் கொடிதென்பதை வலியுறுத்துவான் நூலாசிரியர், அதி நிபுணத்துவமான கடா விடைகள் பல துறுமிநிற்கவும், உ௩௫ - செந்தமிழ்ச்செய்யுள்க ணிரம்பியிருக்கவு மியற்றியுள்ள வொரு பனுவலின்பெயரே ஜீவயாதனையைக் குறித்தவியாச மென வழங்கப்படுகின்றது. சுகிர்தம் - 'ஸுக்ருதம்' என்னும் வடசொல்லின் விகாரம்; அறமெனும்பொருட்டு. காஷ்ட பர்வதங்கள் "விறகோதிகள்" எனப்பட்டன. ஓதி = பர்வதம் = மலை. "புறணி புலாலே புலையு மாகும்" என்று பிங்கலநிகண்டு கூறுமாறு புலால் "புலை" எனப்பட்டது; அது விழைந்து கொல்வோனும் "புலையன்" எனப்பட்டனன். கொன்றுண்போனுக்கு வேறாகக் கொல்லாதுண்போனு மிருத்தலின் அவன் "புலையுண்பவன்" என வேறு கூறப்பட்டனன்.

கொலை - ஐ விகுதிபெற்ற தொழிற்பெயர். கொலையென்பதை என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. தான் - கட்டுரைச்சுவைக்கண் வந்த அசை. புலையுண்பவனும் என்பதிலுள்ள உம்மையைப் புலையன் என்பதனோடுங் கூட்டுக. புதர் = புத்திமான்கள். (௯௯)

காமம் பரதா ரசையோ கமிதன்
கனுடம் பெரிதிற் பெரிதீ தறவோர்
தாமுந் தடுமா றிடவுண் ணுழையுந்
தரமே யுளதிம் மகிமா னுடையார்
ஏமம் புகினுந் தொடர்பீ டுளதா
மிகலும் பர்துரும் பெனவே மெலிதற்
கேமந் திரமொன் றிடும்வெல் லுநரை
யிறையோ னெனவே தொழல்சா லுமரோ.

காமமாவது பரதார சையோகமாம். இதனாலுண்டாகும் பாவமோ பெரிதினும் பெரிதாம். இது, முனிவர்களும் தாங்கள் மேற்கொண்ட தவவொழுக்கம் நிலைகுலையும்படி மனத்தின்கட்புகும் வலி

யுடையதாகும். இப்படிப்பட்ட இஃது இம்மண்ணுலக மயக்கிற் கிடப்பார் சுடுகாடெய்தினும் நும்மை விடேனெனத்தொடரும் மகத்துவமுள்ளதாகும். ஆற்றலுடைத் தேவருங் காமநோயாலே துரும்பு போல மெலிதற்கு ஒருமந்திரம் புகவிடும். (இத்திற மகத்துவம் வாய்ந்த இக் காமத்தை) வெல்லும் மனோதிடமுடையோரை ஈசுவரனேயென்று வணங்கலும் ஆகும்.

"அறவோர் தாமுந் தடுமாறிடவுண்ணுழையுந் தரமேயுளது" என்றது விசுவாமித்திரர் தவநிலை மேனகையாற் றடுமாறிற் றென்னுஞ் சரிதையிலும், வேறுசிலர் சரிதைகளிலும் பெறலாம். அறவோர் = முனிவர். "உம்பர் துரும்பெனவே மெலிதற்கு ஏம மந்திரமொன்றிடும்" என்றது ஆயிரங்கண்ணன் அகலிகைமீது காதல் கொண்டுழன்றன னென்பது பகரும் பனுவலிலும், வேறுசிலர் வரலாறுகளிலும் பெறலாம். உம்பர் = தேவர். இக்காமம் எளிதின் மயக்கி வருத்தும் பெற்றித்தென்பதை "ஏம மந்திர மொன்றிடும்" என்பது விளக்கி நிற்பதாயிற்று. ஏமம் = மயக்கம்; "ஏமாப்பு மயக்கம் ஏம மாகும்" என்பது சே - திவாகரம். ஏம மந்திரம் என்பது "ஏமந்திரம்" எனத் தொகுத்தல் விகாரப்பட்டது. தேவர்களாலும் வெல்லற்கரிய இக்காமத்தின் றேவதையை நெற்றிவிழி நெருப்பாற் சாம்பராக நீற்றினவன் இறைவனாகலின் அதனை வெல்லுநரையும் "இறையோனெனவே தொழல் சாலும்" என்றார். இறைவன் காமதேவதையாய மன்மதனை நீற்றினதற்குச் சுருதிப்பிரமாணம் —

(𑌭𑌸𑍍𑌮𑍀𑌕𑌾𑌰𑌂𑌮𑌨𑍍𑌮𑌥𑌂𑌯𑌮𑌞𑍍𑌚 𑌤𑌸𑍍𑌮𑍈𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯𑌨𑌮𑍋 𑌅𑌸𑍍𑌤𑍁

பஸ்மீசகாரமந்மதம்யமஞ்ச தஸ்மைருத்ராயநமோ அஸ்து)

"மன்மதனையும், இயமனையு நீறுகச்செய்தருளிய அவ்வுருத்திரற்கு நமற்காரம்" என்னுஞ் சரபோபநிஷத வாக்கியங்களாம். "அயனை யனங்கனை யந்தகனைச் சந்திரனை— வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ" எனத் தமிழ்மறையும் அது கூறிற்று. அனங்கன் = மன்மதன். இறைநீர்மையினடங்கி யிரியத்தக்க இக் காமத்தின் வீறுபாடு நூலாசிரியராலே திருத்தலதரிசனகாலங்களிற் பாடியுள்ள கட்டளைக் கலித்துறைகளுள் —

"சேமத்தை வெல்லினுஞ் சாமத்தை வெல்லினுந் தீயவர்செய்
ஓமத்தை வெல்லினு மீமத்தை வெல்லினு மோங்குசிங்க

வீமத்தை வெல்லினும் வீரத்தை வெல்லினும் வீறியெழு
காமத்தை வெல்வ தரிதுகண் டீர்குகற் கண்ணுநரே."

எனக் கூறப்பட் டுளது.

மகிமால் = மண்ணுலக மயக்கம். இகல் = ஆற்றல். என - உவம வுருபு. (௩௪)

இதுபொன் றிடின்மற் றெவையுங் கழியு
மிதுநின் றிடின்மற் றெவையுங் குழுமும்
மதுரந் தரல்போ னிரயந் தருமோர்
மனுடன் புடைவெண் ணெயிலூ சிபுகும்
விதமென் னநுழைந் திடுமைம் புலனும்
விலகா வினைசெய் தரசா யுலவும்
மதிதங் கியுளா ரிதைவென் றுயவே
மதியஞ் சுகசத் துவவூ ணுகர்வார்.

இக்காமமொன்றுமாத்திரந் தொலையுமாயின் மற்றைக் குற்றங்களனைத்தும் அதனுடன் றொலையும். ஈதொன்று தொலையாது நிற்கின் மற்றைக்குற்றங்களெல்லாங் கூட்டமாக வந்துகூடும். (இக்காமம்) சுகத்தைக் கொடுப்பதுபோல நரகத்தைக் கொடுக்கும். ஒரு மனிதன்கண்ணே வெண்ணெயில் ஊசி பிரவேசிப்பதுபோல எளிதாகப் புகும். பஞ்சேந்திரியங்களு நீங்காம லுடனிருக்கச் செய்துகொண்டு அவற்றின் அரசா யுலாவிவரும். புத்திமான்கள் இக் காமத்தை வென்று வாழும்வண்ணம் (ஏக காலவுண்டி யுடையவராகி) நடுப் பகலிற் சுகத்தைத் தரும்படியான சத்துவகுண ஆகாரத்தைக் கொள்வர்.

பரதார சையோகம் ஒழுக்கமற்ற நடையி னிகழ்வதாகலின், அது நிகழ்வழிப் பலகுற்றங்களும் வந்துகூடுமென்பதும், நிகழாவழி அக் குற்றமனைத்தும் அதனோடு நீங்குமென்பதுந் தோன்ற "இது பொன்றிடின் மற்றெவையுங் கழியு மிதுநின்றிடின் மற்றெவையுங் குழுமும்" என்றனர். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்னும் ஐம்புலனையும் உளப்படுத்திக்கொள்ளத்தக்க அதன்பிரவேச சாமர்த்தியம் வெண்ணெயில் ஊசிபுகும்வித மெனப்பட்டது மிக்க பொருத்த முடைத் தென்பதற்கு மேலைச்செய்யு ளுரையிற்போந்த முனிவர் தேவர் சரிதைகள் சான்றேயாம். இந்தச் சையோக காமம் ஆகார

சார மிகுதிப்பாட்டான்வினை விந்துவழி மல்குவதாதலின் அதனை, வென்றுய்யுமுபாயம் நடுப்பகலிற் சத்துவவூணுகவுண்ணும் ஏக கால வுண்டியேயாமென்பதுதோன்ற "மதியஞ் சத்துவவூ ணுகர்வார்" என்றனர். மதியம் - (மத்யம்) மத்யம் என்னும் வடசொல்லின் விகாரம்; இஃதிங்கே, நடுப்பகலென்னும் பொருள்பட நின்றது. சத்துவ குணக்கேடும், ஆக்கமும் இன்ன இன்ன வுண்டிவழி யுண்டாமென்பதைத் திருவலங்கற்றிரட்டின் உ - ஆங் கண்டத்தில் —

"சாந்தமெனுஞ் சத்துவந்தான் றமதத்தைப்
 பெருக்குகிற *தசைமிசைத லானுங்
காந்தியறு பழஞ்சோறு கைதொடுத
 லானுமிரா சதம்பெருக்குங் காரஞ்
சேர்ந்தனவெல் லாநுகர்த லானுநனி
 கெடுமெனவே தெரிந்துநல மாக
மாந்திவோர் மனமமர்ந்த மாமுருகா
 வெனதகத்து மருவியருள் புரியாய்."

"மோகஞ் செய்†யீ ருளியெண் ணெயமீன் மூலங் கடுகனை யாப்
பாகஞ்செவ்வாற் ‡கோதூம் பையரி பச்சைப் பயறுகுளஞ்
சாகம் பைங்காய் தேனெய் வெணணெய் ததிசுக் காகுமினும்
ஊகந் தருநன் பான்மே லென்றுண் ணுறுவர் பிரான்முருகோன்."

என்னுஞ் செய்யுள்களிற் கூறியுள்ளார் ஆசிரியராகலின், இவற்றால் அச் சத்துவவூணினை யுணர்க.

"எண்ணெய் வீவு நாளில் வாதை யீயு மாநெயும்
வெண்ணெய் பாலு மிக்க வுண்ணின் விந்து வூறியே
பெண்ணை நேட நேரு மென்று பெட்பி லாதினி
துண்ணு சீரி யோர்பி ரானெ னுட்ப வேலனே."

என அங்ஙனம் வருஞ்செய்யுளையு நோக்குக. மல மூத்திரங் கண் மிக்கவிடத்து அவற்றினை யடக்கிக்கொண்டிருத்தல் எங்ஙனங் கூடாததோ அங்ஙனமே மிக்க விந்துவையு மடக்கிக்கொண்டிருத்தல் கூடாததாகலின் அது, மிகுதற்கேதுவாம் உண்டியைத் துறவினைப்பேணுவார் சுருக்கிக்கோடல்வேண்டுமென் றுரைத்த வுபாயந் தகுதித்தேயாம்.

---

* தசை = ஊன். † ஈருளி = வெள்ளுள்ளியும், ஈராவுள்ளியும். மூலம் = கிழங்கு. அரி = அரிசி. குளம் = சருக்கரை. சாகம் = இலைக்கறி. ததி = தயிர். ‡ 'கோதூமஃ' என்பது வடசொல்.

புடை - ஏழனுருபு. என்ன - உவமவுருபு. 'நுழைந்திடும்' என்றதில் இடு - துணிவுப்பொருளுணர்த்துஞ்சொல். விலகா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். உலவல் - உலாவல் என்பதன் விகாரம். உய - உய்ய வென்பதன் விகாரம். (௩௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நறுவென்னுங் கள்ளருந்த னலங்குலமு
    நனியழித்து நரகு நல்கும்
பெறுவின்னல் பெறப்பினரும் பொறியிகந்த
    பேயாகிப் பிதற்றச் செய்யும்
மறுதித்தை யுளர்கலைதேர் பண்டிதரா
    யற்புதராய் வயங்கி னானும்
உறுர்முத்தி மேதையுளா ரிவர்வதன
    மதைச்சிறிது முற்று நோக்கார்.

நறவு என்னும் பெயரினை வாய்ந்த கள்ளுண்ணும் பழக்கமானது செல்வத்தையுங் குலத்தையும் மிகவுங்கெடுத்து நரகத்தையுந் தரும். மேலும், அனுபவியாத துக்கங்களெல்லாம் அனுபவிக்கும்படி மூடப் பேயெனவாகி, வரையறையிலாது பிதற்றச்செய்யும். இக்கள்ளுண்ணும் பழக்கத்தை மறுது கொண்டுளோர் சகல சாத்திரமுந் தேர்ந்த பண்டிதராய் யாவருங்கண் டதிசயிக்கத்தக்க அற்புதமுடையராய் விளங்கியிருப்பினும் முத்தியினை யடையார். ஞானமுடைய பெரியோர் இவர் முகத்தைச் சற்றேனு முற்று நோக்கார்.

நறவு என்பது நறுவென எதுகை நோக்கி விகாரப்பட்டதென்றேனும், மரீஇயிற்றென்றேனுங் கொள்ளப்படும் இவ்வாறன்றிக் குறியதன் இறுதிக்கணின்ற ஆகாரத் தொருமாத்திரைகெட்டு உகரம் புலப்பட நிகழாது நின்ற சுறுவென்னுஞ் சொல்லினை யொத்ததே இங் "நறு" எனக் கூறுதலுமாம். இப்படியறிந்து கூறற்குக் "குறியத னிறுதி சினைகெட வுகர—மறியவருதல் செய்யுளு ளுரித்தே." என்னுந் தொல்காப்பியச் சூத்திரம் ஆதாரமாயுளது. குலமும் என்பதன் உம்மையை 'நலம்'என்பதனோடுங் கூட்டுக. 'பின்னரும் பெறு இன்னல் பெற' என வியையும்; பினரும் - தொகுத்தல். பொறியிகந்த பேய் = புத்தியுடம்பா டில்லாத பிசாசம் = மூடப்பேய்; இகத்தல்= கடத்தல்; "இளமையின் இகந்தன்று மிலனே" என்றார் கபிலரும் (குறிஞ்சிப் பாட்டில்). பேயாகி - உவமத் தொகை. இதனை என்பது "இத்தை" என மருவிற்று; (திருவாசகத்து அதிசயப்பத்து) "இத்தை மெய்யெனக்கருதி நின்று" என்புழிப்போல. (௩௬)

களவெனுமோர் வன்சனிதான் பற்றுமெனிற்
சோதிடநூல் கழறு கின்ற
அளவையொரு பதினைந்திற் பாதியல்ல
வனந்தமாண் டங்கு மிங்குஞ்
சுளகிலுழ றுனியம்போ லுழன்றலையத்
துனிதந்து சுகமொன் றில்லாத்
தளர்வுடையர் தமக்குமக வாயுதிக்க
வேவிதிக்குந் தரணி மீதே.

களவென்னும் ஒரு வலிய சனியானது (ஒருவனைப்) பிடிக்குமாயின், சனியி னலைப்புக்குரிய காலமாகச் சோதிடநூல் கூறுகின்ற ஏழரையாண்டே அல்ல; அநேக ஆண்டளவும் முறத்திற் புடைக்குங் கால் அலையுந் தானியமொத்து அங்கு மிங்குமா யலையும்படி துன்பத்தையளித்து, இப் பூமிமீது ஒரு சுகமுமில்லாத வறுமையுடைய பிதா மாதாக்களுக்குப் பிள்ளையாய்ப் பிறக்கும்படியாகவே (அது) விதிக்கும்.

பாவப்பயனுலகு நரகமேயாயினும், பாவசேடப் பயனுலகு இப் பூமியாயிருத்தலின் இரண்டுமே "அங்கும் இங்கும்" எனப்பட்டன. ஏற்புடைப் பிரமாணம் முற்காண்டத்துப் கஅ-ன் உரையிற் காட்டியுள்ளோம். பிறர்பொருளை அவரறியாத வகையிற் கிரகிப்பதே களவாடலாதலின், அஃதுக் கள்வனை வறுமையாளர்க்கு மகவாய்ப் பிறக்கவே விதிக்குமென்ற தேற்புடைத்தேயாம். சனியின் பீடிப்பாவது அலைப்பும், வறுமையுமா மென்பதூஉம் இங்ஙனம் பெற்றும்.

உழல் தானியம் - வினைத்தொகை. துனி = துன்பம். 'தரணி மீது சுகமொன்றில்லாத் தளர்வுடையர் தமக்குமக வாயுதிக்க வேவிதிக்கும்' என மாறுக. இல்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இதனில், இல் எதிர்மறை குறித்ததனுல் ஆ - சாரியை. ஏகாரமிரண்டனுண் முன்னையது தேற்றம்; பின்னையது ஈற்றசை. (கள)

**மாபாதகமைந்தனுள், காமம் பொய் யென்னுமிரண்டுமே பெருவலி யுள்ளன வென்பது.**

சொற்றவைந்து பாவமுமெப் பாதகத்துந்
தலையாகுஞ் சொனவோ ரைந்திற்
சிற்றளவில் காமம்பொய் யென்னுமிரண்
டும்பெரிய செகமாய் நிற்கும்

பெற்றிதனை யீண்டறிதி யிவைநீங்கின்
மறைவில்லை பிழையு மில்லை
நற்றவமுஞ் சித்திக்கு ஞானநெறி
கைகூடு நலன்மிக் குள்ளாய்.

நற்குண மிகுந்துள்ள மனச! மேலே கூறிய பாதகங்க ளெந்தும் எத்தகைய பாதகங்கட்கும் மேற்பட்டனவாம். அந்த வெந்தனுள், பேரளவினவாய காமம், பொய்யென்னு மிரண்டுமே பெரிய வுலகமாய் நிற்கும். அவற்றின் வியாபகத் தன்மையினை யிங்ஙனமறிந்து கொள்வாயாக. இவ்விரண்டும் ஒழியின், (ஒருவன்) தலை மறைவாகத் திரியவேண்டுவதுமில்லை; பிறர் அலர்தூற்றச் செய்யுங் குற்றமு மில்லையாம்; அங்ஙனமே நல்ல தவமுஞ் சித்திக்கும்; ஞான நெறியுங் கைகூடும்.

உண்மையை மறைத்துப்பேசுவதே பொய்யெனப்படுதலானும், அதன் சார்பிலேயே பரதார சையோகம் நிகழ்தலானும், அச்சையோகார்த்தமாகவே மாயாவிலாச வுலகினைப் பெரிதும் அவாய்நிற்கும் பெற்றி யுறுதலானும் "இரண்டும் பெரிய செகமாய்நிற்கும் பெற்றி தனை யீண்டறிதி" என் றறிவுறுத்தார். "இவை நீங்கிய வழியே ஒழுக்கமுடையாருடைய கண்ணுக்கெட்டாது மறைந்து திரிதற்கும், பலர் பழிதூற்றுதற்கும் இடனில்லை" எனும் பொருளையும், "உண்மையை மறைத்துப்பேசுவது இரையெனப்படு மஃதின்றேற் சத்திய தெய்வம் முன்னிற்கும்; பொய்ச்சார்பி னிகழும் பரதார சையோகம் பிழையெனப்படு மஃதின்றேல் உலகவினையடங்கலு மொருவுங்காரணத்தால் நரகு நீங்கும்" எனும்பொருளையும் "இவை நீங்கின் மறைவில்லை பிழையுமில்லை" என்ற தொடர் பயத்தலின் இஃது இரட்டுறமொழிதலென்னும் உத்தியி னேதப்பட்டதென்க. ஈண்டுக் கூறுஞ் சத்தியம், காமநீக்கம் என்பனவற்றுனெய்து நயப்பாட்டினை,

(𑌸𑌤𑍍𑌯𑍇𑌨𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌪𑌸𑌾𑌹𑍍𑌯𑍇𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑍇 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑍋 𑌹𑌿
𑌶𑍁𑌭𑍍𑌰𑍋𑌯𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑌯𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌦𑍋𑌷𑌾𑌃 ॥)

"ஸத்யேநலப்யஸ்தபஸாஹ்யேஷ ஆத்மாஸம்யக்ஜ்ஞாநேந
ப்ரஹ்மசர்யேணநித்யம்। அந்தச்சரீரேஜ்யோதிர்மயோஹி
சுப்ரோயம் பச்யந்தியதய: க்ஷீணதோஷா: ||"

என்னும் முண்டகோபநிஷத வாக்கியங்களினும் பெறலாம். தமிழ் :— "தோடமில்லாத யதிகள் சரீரத்தி னுள்ளிடத்தே சோதி மயனுய்த் தூய்மையோனுய்த் தரிசிக்கவுள்ள இவன் ( = ஈசன்) சத்தியம், தவசு, ஆன்ம மெய்ஞ்ஞானம், நித்தியப் பிரமசரியம் இவைகளா லடையப்படுவன் " எனவாம். பிரமசரியம் = மகடூஉ சம்பந்தமின்மை. மகடூஉ = பெண்.

'இரண்டுமே ' எனப் பிரிநிலையேகாரம் விரிக்க. நலன்மிக்குள்ளாய் - விளியுருபேற்ற பெயர். (நடஅ)

உபதேசக் கிரமமாகக் குகேசவழிபா
டவாய சீடனுக்கு ஆசிரியர்,
மேலுங் கூறுவன கூறல்.

என்றறிஞ னுங்குரவ னோதிடலுந்
தெளிதோர்ந்த மனச னெந்தாய்
உன்றகவிற் றகரவித்தை முதலாய
சரதமெலா மொருங்கே யோர்ந்தேன்
மன்றினடம் புரிகுகனை நான்வழிபா
டதுசெய்யு மார்க்க மென்ப
தொன்றையினி யருள்கெனலு மவ்வறிஞ
னுள்ளுவந்தீ துணர்த்த லுற்றான்.

இவ்விதமாக அறிஞனென்னும் ஆசிரியர் கூறிய வளவிலே, அவற்றை இனிது ஆராய்ந்தறிந்த மனசன், என் பிதாவே ! நினது காருண்ணியத்தி னாலே தகரவித்தை முதலிய உண்மைப்பொருளனைத்தையும் ஒரு முகமாக வறிந்துகொண்டேன். இனி, பொற்சபையில் நடனஞ்செய்யுங் குகேசனை நான் வழிபடும்படியான மார்க்கமொன்றை, அனுக்கிரகித் தருள்வாயாகவென விண்ணப்பித்த வளவிலே, (அவனை நோக்கி) அவ்வாசிரியர் மனமுவந்து பின்வருமாறுபதேசிக்க லாயினர்.

மனசனென்னுஞ் சீடன்— "அரசன் றலைவன் றந்தை முன்னோன்— குரவனே டைவருங் குறிப்பினிற் றந்தை." என்று பிங்கலநிகண் டோதுமதானே ஐவகைக்குரவரு ளொருவராய ஆசிரியரை "எந்தாய்!" என விளித்தனன். 'எந்தை' என்பதனிலக்கணம் முற்காண்டத்து கூ - ன் உரையி லுரைத்தாம் ; ஆண்டுக்காண்க.

ஓதிடலும் = கூறியவளவிலே; இடு - துணைவினை. உன்தகவு - ஆறனுருபுத் தொகை. இனி - எதிர்காலங்குறிக்குமோரிடைச்சொல். அருள்கெனலும் - வியங்கோளீறு தொகுத்தல். (நக)

ஆவிடை யிலிங்க வுண்மை.

அக்குகனன் னட்ட நிகழ் ஞானவெளி
யலர்தானே யருளென் றோதுஞ்
சக்கரவட் டாகார பீடமெனு
மாவிடையாத் தயங்கா நிற்குஞ்
சொக்கமுள்ள சிதாகாச மேகோளா
காரலிங்க சொரூப மாகி
எக்கணுமே நிறைந்ததனி னிற்குமிது
வேசைவ லிங்க மாதோ.

அந்தக் குகேசனது திருவருளென் றோதப்படு நல்ல நடனம் நிகழ்கின்ற ஞானகாச தாமரைமலரே திருவருளென்று சொல்லப் படுஞ் சக்கரம்போன்ற வட்டவடிவுடைய பீடமென்னும் ஆவிடையாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். சிதாகாசமே அழகிய கோளாகாரலிங்க சொரூபமாகி எங்கணும் வியாபித்து அப்பீடத்தில் ஊற்றமுடையதாகி நிற்கும். இதுவே சைவ லிங்கமாம்.

ஆன்ம இருதயதாமரை மலரே பீடம்; அவ்வான்மா முற்காண்டத்து ந0 - ன் உரைக்கண் (𑌆𑌤𑍍𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌯𑌨𑌮𑌃) "ஆத்மலிங்காய நம:" என்னுஞ் சுருதிவாக்கியத்தோடு காட்டப்பட்ட சுருதியாதி பிரமாண வாயிலாக அங்குட்ட தீபாகார இலிங்கவடிவிற் றென்பது பெறப்பட்டமையின் அவ்வடிவ மாத்திரையாகத்தானே, யாண்டுமுள்ள சிதாகாசம் அப்பீடத்தினிற்குமென்பது இச்செய்யுட்கட் பெறப்படுகின்றது.

(𑌹𑍃𑌦𑌯𑌚𑌕𑍍𑌰𑌮𑌷𑍍𑌟𑌦𑌲𑌮𑌧𑍋𑌮𑍁𑌖𑌂
𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌕𑌾𑌰𑌂𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 ।)

"ஹ்ருதயசக்ரமஷ்டதள மதோமுகம்
தந்மத்யே ஜ்யோதிர்மய லிங்காகாரம் த்யாயேத்।"

என்னுஞ் சுருதி— "அதோமுகமாயுள்ள இருதய சக்கரம் எட்டிதழ்களோடுங் கூடியுள்ளது: அதன்நடுவிலே சோதிமய இலிங்காகாரம் தியானித்தல் வேண்டும்" என்னும்பொருளைத் தருமதரா

னும் இதனை யாதரிப்பதாயுளது. இது, ருக்வேத ஸௌபாக்யலக்ஷ்ம்யுபநிஷத்தது. (ஶப்தாதேவ ப்ரமித:) "சப்தாதேவ ப்ரமித:" எனப் பிரஹ்மஸூத்ரத்து க - ஆம் அத்தியாயத்தில் வரு சூத்திரமும் இங்கே கருதிக்கொள்ளத் தக்கதே. பொருள்:— "வேதத்தினாலேயே (அங்குட்ட வளவினனாக அவன்) அளக்கப்பட்டனன்" என்க. இந் நடு நுதலியே —

"எளியே னிறுமாக்க வெஞ்ஞான்று மொல்கா
அளியே யளித்தருள்க வாசில்—களியே
தருகவமு துண்ட தகையுடைவிண் ணோருங்
கருதரிய வொண்குகலிங் கம்." [உகூ]

என்பதாதியாகப் பாடப்பட்ட காசியாத்திரைத் தூக்குக்களும் இலிங்கங் குகலிங்கமேயென வறிவுறுப்பனவாயின. சிவ சம்பந்தமான இலிங்கவுண்மை இவ்வா றிருத்தலினன்றோ சைவத் திருமுறையுளொன்றாய திருமந்திரம் —

"உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்"

என் றியம்புவதாயிற்று. சைவம்= சிவசம்பந்தம். இதனை, "சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது" என்று மேலைத் திருமந்திரந் தெரிக்குமாற்றானுமறிக. அறிவுபடைத்த ஆன்மாக்களெல்லாம் இலிங்காகாரம் பரமான்ம சம்பந்தமென் றறிந்து அது பூஜித் துய்யுமாறாகவே அரிபிரமர்கட் கிடையிலும் அடிமுடி காட்டாது அழற்பிழம்பாஞ் சோதிலிங்கமாக நின்றருளினன் அச் சிவன் என்க. இவ்வுண்மைக்கு மாறுகோளாக இலிங்க பகாங்கங்களென அருவருப்பி லெழுதியது களைக எப் புத்தகத்திருப்பினும். பீடம் கிரியாசத்திமயமென்றும், இலிங்கம் ஞானசத்திமயமென்றுங் கிளத்துப. கோளாகாரலிங்கம் = அண்டவடிவான அடையாளம். சித்திரித்தலென்னும் பொருளைத் தரூஉம் (லிகி) லிகி என்னுந் தாதுவினின்று லிங்கம் என்னுஞ் சத்தம் பிறந்தமையிற் சிருட்டியாதி ஐந்தொழிலானும் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கும் பரமான்மாவுக்கு அது, திருமேனியாகுமென்றுஞ் சத்தார்த்தங் கூறுப.

'அக்குகன் அருளென்றோதும் நன்னட்டம்' எனவியையும். 'குகனது' என்னும் ஆறனுருபு விகாரத்தாற்றொக்கது. சக்கரவட்டம் = சக்கரம் போன்ற வட்டம்; உவமத்தொகை; புனிற்றிளங் கன்று என்பதுபோன்ற

ஒருபொருட் பன்மொழி யெனினும் எயும். குள + ஆம்பல் = குளாம்பல் என மரீஇயினுற்போல வட்ட + ஆகாரம் = வட்டாகாரம் என மரீஇயிற்று; விதி, இக்காண்டத்துப் கஉ - ன் உரையிற் காட்டப்பட்ட தொல்காப்பியச் சூத்திரமே. ஆகாரம் = வடிவு. ‘ஆவிடையா’ என்றதில் ஆ - ஆக என்பதன் விகாரம். தயங்கல் = ஒளிசெய்தல்; சூடாமணிநிகண்டு காண்க. ‘சொக்கம்’ என்பதில் அம் - சாரியையாகலாம்; சொக்கு = அழகு; “சுந்தர மணங்கு மஞ்சு சோக்கூத்தே சிகமம் பொன்னே” என்பது மேலைநிகண்டு. ‘சிதாகாசமே சொக்கமுள்ள’ என மாறுக. மாது, ஓ - அசை. (௬0)

கலிவிருத்தம்

இந்த லிங்கம தெம்பெரு மான்சுடர்
சொந்த லிங்கஞ் சுயஞ்சவி லிங்கமா
பந்தம் வீட்டு பராபர லிங்கநீ
சிந்தை செய்யுஞ் சிதம்பர லிங்கமே.

இந்தச் சைவலிங்கமானது எமதான்மநாயக னிருந்து பிரகாசித்தற்குரிய சுதந்திரலிங்கம், சுயஞ்சோதிலிங்கம், பெரிய பந்தத்தையொழிக்கும் பராபரலிங்கம், நீ தியானிக்குஞ் சிதம்பரலிங்கம் ஆம்.

தகராலயத்திற் றியானிக்கவுள்ள இவ்விலிங்கம் ஆன்மலிங்கமாயிருத்தலிற் ‘சொந்தலிங்கம்’ என்றும், அது பைங்கலோபநிஷதம்—

(𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍇𑌵 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍂𑌪𑌕𑌂)

“ஆத்மாநமேவ ஜ்யோதிரூபகம்”

என்றபடி புகையில்லாத ஒளிவடிவிற்றா யிருத்தலிற் ‘சுயஞ்சவிலிங்கம்’ என்றும், அவ் விலிங்காகாரத்தில் அவ்வாகாரமேயாய்க் காரணவுடம்பும் உயிரும்போன்ற அனாதி சம்பந்த அத்துவிதத் தன்மையின் உயிர்க்குயிராய்க் காணார்க்கு அன்னியமாயுங் காண்பார்க்கு அனன்னியமாயு மிருத்தலிற் ‘பராபரலிங்கம்’ என்றுங் கூறப்பட்டது. பராகாசத் திருத்தலிற் பராபரலிங்கமெனப்பட்டதென்றலுமாம். சவி = ஒளி. சவிலிங்கம் என்னாது ‘சுயஞ் சவிலிங்கம்’ என்றமையின் அஃது ஒருவரா லாக்கப்படாத சுயம்பு என்பதும் பெற்றாம். பண்டைநூல்களிற் சுயம்பு, தேவம், பாணம், ஆரிடம், மானுடமெனச் சொல்லப்பட்ட சிவலிங்கங்களுள் ஒருவராற் பிரதிட்டிக்கப்படாததாய்ப் பூமியிலிருந்து தம்பாகார சிலாவடிவா யெழுந்துள்ளதே சுயம்புவெனப்படும். இச் சுயம்புவினுஞ் சுயம்புவாயுள்ள

தன்றோ இங்குணர்த்தப்பட்ட சித்தான ஆன்மலிங்கமென்பது தெள்ளியோராற் செம்மையே யறியக்கிடக்கின்றது. இவ்விலிங்கம்பற்றி யுணரவேண்டிய பிரமாணம் முதலிய பலவும் மேலைச் செய்யுளுரைக் கண்ணும், முற் காண்டத்து ௩௦ - ன் உரைக்கண்ணும் விளக்கியிட்டாமாகலின் ஈங்கத்திறன் விளக்காது விட்டாம். ஒருமுந்தளவு முதன் முழமீறுயுள்ள இலிங்கங்களைப் பாணாசுரன் பூசித்த காரணத்தால் அவை, பாணமெனப்பட்டன வெனவும், பாணமென்னும் பெயருடைச் சலத்திலுண்டா மிலிங்கம் பாணமெனப்பட்ட தெனவுஞ் சொல்லுப. "சிந்தைசெய்யுஞ் சிதம்பர லிங்கமே" என்றதன் வாயிலாக நன்னடனப்பெருமானை அவ் விலிங்கத்தின்கண்ணே தியானித்தல் (= பாவித்தல்) வேண்டுமென்னுந் துணிபு பெறப்படுதல் —

"அங்கரி பிரமபு ரந்தர ரண்டர்கண் முனிவர கண்டமும்
இங்கெம தினியந டஞ்சிவ லிங்கம திசையதி னேங்தொளிர்
கொங்கலர் பலமல ரன்பொடு கொண்டடி வழிபடு மென்றுயர்
மங்குலி னிடைவிடை தங்கிய மங்கையொ டிறைவன்ம றைந்தனன்."

எனக் கோயிற்புராணத்துப் பதஞ்சலிச்சருக்கத்தில் வரு செய்யுட்கண்ணும் பெறப்படுமால். இச் செய்யுட்பொருள் : — "சிவபெருமான் அங்கே அரி பிரமன் இந்திரன் தேவர்கள் முனிவர்களாகிய நீயிரெல்லீரும் இங்கே எமது இன்பநடனத்தைச் சிவலிங்கத்தின்கட் பொருந்தத் தியானித்து, விளங்குகின்ற மணம்விரிந்த பன்மலர்களைக் கொண்டு அன்போடெம்முடைய திருவடியை வழிபடுமினென்று பணித்து மேலான ஆகாயத்தின்கண்ணே இடப வாகனத்தின்மீதுதங்கிய உமாதேவியோடு மறைந்தருளினன்" எனவாம்.

'லிங்கம்' என்றது வடநூன்முடிபாகலின் இகரம் பெற்றிலது; தலைக் குறையெனினுமாம். சுடர் - வினைத்தொகை. 'வீட்டு பராபரலிங்கம்' என்றது வினைத்தொகை யாகலின் வலி யிரட்டவில்லை. (௬௪)

ஆதி யாமு னனாதியி னுள்ளவிச்
சோதி லிங்க சுயம்புவிண் ணுந்தொழுங்
கோதி னன்னர்க் குகேச னவன்பெயர்
ஓதி லோஞ்சுப்ர மண்யமென் றோங்குமே.

ஆதியென்பது தோன்றுமுன், அனாதிக்கடவுள்போல அனாதியாகவே யிருக்கின்ற (ஆன்மாவாகிய) இந்தச் சோதிலிங்கத்திருக்குஞ் சுயம்புவாகிய ஆகாயமே நாந்தொழு நன்மைக் குகேசன்,

குற்றமற்ற அவனது பெயரினைக் கூறுங்கால் ஓம், சுப்பிரமணியம் என்ன மகத்துவத்துடன் விளங்கும்.

'விண்' என்பது தகராலயம் ஆகாயலிங்கமுடைத் தென்பதை யுணர்த்துகின்றது. குமேசன் பெயர் ஓம் எனப்படுதல் "ஸுப்ரஹ்மண்யோம்" என்று சாமவேதஞ் சாற்றுமாற்றிலும், பாயிரத்து உ - ன் உரைக்கட் காட்டியுள்ள காட்டுக்களிலும் பெறலாம்.

'அநுதியின்' என்றதில் இன் - ஒப்புப்பொருளில்வந்த ஐந்தனுருபு. சுயம்பு - ஸ்வயம்பூ8 என்னும் வடசொலவின் விகாரம். நாம் தொழும் நன்னர்க் குமேசன். மேசாநில் அவன் பெயர் ஓதில் எனக் கூட்டுக. 'ஸுப்ரஹ்மண்யம்' என்பது வடமொழி. (சஉ)

### சுப்பிரமணிய நாமார்த்தம்.

சுவ்வெ னும்பறை சுத்தவின் பாகுமோர்
அவ்வி யத்தவிண் ணும்பிர மத்தினின்
றெவ்வ மின்றொளிர் கின்றமின் னேணியம்
ஒவ்வுங் கீர்சுப்ர மண்யமென் றோர்தியால்.

(ஸு) 'சு' என்னுஞ் சொல்லின்பொருள் பரிசுத்த ஸுகமென்னும் ஆனந்தமெனவாகும். (ப்ரஹ்மம்) பிரமம் என்பதன் பொருள் கட்புலனுகாத இணையற்ற சிதாகாசமெனவாகும். அநுபூதியில் அந்தப் பிரமத்திலிருந்து குறைவில்லாமல் வியத்தப்பட்டு விளங்குகின்ற வொளியே 'ணியம்' என்பதன் பொருளாகும். இப் பொருள்கட் கிணங்கிநிற்கின்ற பதம் (ஸுப்ரஹ்மண்யம்) சுப்பிரமணியமென் றறிவாயாக.

மேலைச் செய்யுளிற்போந்த சுப்பிரமணியமென்னு நாமத்திற்கு இச் செய்யுளில் அருத்தஞ் சொல்லப்பட்டது. இந்த அருத்தமானது— ஸு= ஸுகமென்னும் ஆனந்தமெனவும், ப்ரஹ்ம= பெரிய பொருளெனவும், ண்யம் = வேறு காணப்படுமொன்று அஃதாவது அவ்வியத்த மெனும்படி மறைந்துள்ள பெரியபொருளி னின்றும் வெளிப்பட்டு மிளிர்வதெனவும் வ்டநூன்முடிபிற் கொள்ளககிடத் தலிற் சுவாநுபூதிச் செல்வர்க்கு அவ்வநுபூதிபபொருளாய்ப் பிரகாசிப்பதுதான் (ஸுஸ்வநுபூதி) "ஸுப்ரஹ்மண்யம்" என்பதனை யிச்செய்யு ளுணர்த்திநின்றதென்க. ஸுகம் ஆனந்தம் என்னும் பொருளைப் பயக்கின்ற 'ஸு' என்பதும், அதனோடேய்ந்

துள்ள 'ப்ரஹ்மம்' என்பதும் (ஆநந்தம்ப்ரஹ்ம) "ஆநந்தம்ப்ரஹ்ம" என்னுந் தைத்ரீயோபநிஷத்தின் ஆநந்தவல்லி வாக்கியமாய் நிற்றல் காண்க. 'ப்ரஹ்ம' சத்தம் பெரிதெனும்பொருட் டென்பதற்கும், அது சிவபரம்பொருளினது நாமமென்பதற்கு முரிய பிரமாணங்கள் முற்காண்டத்து ச - ன் உரைபடித் தறியற்பாலன. ஆகலினன்றே திருவலங்கற்றிரட்டின் உ - ஆங் கண்டத்தில்—

"துப்புரவு நாடியிரே சுப்பிரமண் யத்தின்மேல்
எப்பிரம முள்ள தியம்பு."

என எதிர்மறை முகத்தானும் இடித்துரைத்தார் ஆசிரியர். 'ண்யம்' எனப் பிரிக்கப்படுவது 'ண்யம்' எனவாயவா றென்னையோ வெனின்,— ரகரத்தின் முன்வந்த நகரம் ஒருமொழிக் கண்ணதாயின் ணகரமாய்த் திரியுமென்னும் வடமொழிமதம் பற்றியவாறே என்க. ந்யம்=வேறு; நபும்ஸகலிங்கம்; விச்வப்ரகாசங் காண்க. இப் பொருளுக்கு வேறாகவு மொருபொருள் ஸ்காந்தமஹாபுராண ஸம்பவ காண்டத்து ௩௫ - ஆம் அத்தியாயத்தில்—

(ப்ராஹ்மணாநாமஹந்தேவ ஸுதராம்மத்ஸுத: ப்ரியே।
ஸுப்ரஹ்மண்யஸ்ஸமாக்யாதஸ் ஸுராஸுரநமஸ்க்ருத:॥)

"ப்ராஹ்மணாநாமஹந்தேவஸ் ஸுதராம்மத்ஸுத: ப்ரியே।
ஸுப்ரஹ்மண்யஸ்ஸமாக்யாதஸ் ஸுராஸுரநமஸ்க்ருத:॥"

எனவரு உ0 - ஆஞ் சுலோகத்திற் காணப்படுகின்றது. அது, "பிராமணர்கட்கு அல்லது வேதங்கட்கு யாம் முக்கிய தெய்வமாகலின் யாம் பிரமணியமாவோம்: நங் குமாரன் அங்ஙனம் விசேடனாகலிற் சுராசுரர்களால் வந்திக்கத்தக்க சுப்பிரமணிய னெனப்படுகின்றனன்" என்பதே. இது, பரமன் பார்வதியம்மைக்குப் பகர்ந்ததாகவுளது. இப்பொருளில் 'ஸு' என்னும் உபசர்க்கமே விசேடார்த்தம் பயந்து நிற்பதாயிற்று.

பறை= சொல். 'பிரம் அவ்வியத்த விண்ணும்' என மாறுக. பிரமம் 'பிரம்' என விகாரப்பட்டது. அதனில் என்பது 'அத்தில்' என மரீஇயிற்று. எவ்வம் = துக்கம்; குறைவெனும் பொருள்பட நின்றது. இன்றி என்னும் வினையெச்சத்து இகரம் உகரமாய்த் திரிந்தது. மின் = ஒளி. 'ஆம்' என்பது பின்னருஞ் சென்று பொருந்தும். ஆல் - அசை. (சந)

### புத்திரப் பெயர்.

அத்து வாவெனு மாறையு நீத்தவோர்
சுத்த வத்துவிற் றோன்றலி னுலகைப்
புத்தி ரப்பெயர் பூண்ட பிரானெனுப்
பத்தர் யாரும் பழிச்சிடு வாரரோ.

மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலையென்னும் ஆறத்துவாக்களையுங் கடந்த நிலையிலுள்ள வொரு பரிசுத்த வத்துவினின்று வெளிப்படுங் காரணத்தால் அ ர சுப்பிரமணியத்தைக் குமார பிரான் என்று அடியார் யாவருந் துதிப்பர்.

கலாத்துவா, தத்துவாத்துவா, புவனாத்துவா, வர்ணாத்துவா, பதாத்துவா, மந்திராத்துவா வென்பனவற்றையே "அத்துவா வென்னும் ஆறு" என்றார். இவற்றுள்—

(௧) கலாத்துவா:— நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் ஐந்துமாம். இவை, சுத்த மாயையிற் றோன்றி யுள்ளன.

(௨) தத்துவாத்துவா:— முற்காண்டத்துப் ௧௪ - ன் உரையிலுரைக்கப்பட்ட ஆன்மதத்துவம் ௨௪, வித்தியாதத்துவம் எ, சிவதத்துவம் ரு - என்னும் முப்பத்தாறுமாம். இம் முப்பத்தாறுள்—

பிருதிவி தத்துவம் சிருட்டிக்குரிய நிவிர்த்திகலையி லுள்ளது.

அப்புமுதல் அந்தக்கரணம் இறுவாய்க்கிடந்த ௨௩ - தத்துவங்கள் திதிக்குரிய பிரதிட்டாகலையி லுள்ளன.

கலைமுதல் மாயை இறுவாய்க்கிடந்த எ - தத்துவங்கள் சங்காரத்துக்குரிய வித்தியாகலையி லுள்ளன.

சுத்தவித்தைமுதற் சாதாக்கியம் இறுவாய்க்கிடந்த ௩ - தத்துவங்கள் திரோதானத்துக்குரிய சாந்திகலையி லுள்ளன.

சத்தி, சிவமென்னும் ௨ - தத்துவங்கள் அனுக்கிரகத்துக்குரிய சாந்தியதீதகலையி லுள்ளன.

(௫) புவனாத்துவா :— நிவிர்த்திகலையில் ௧௦௮ - ம், பிரதிட்டா கலையில் ௫௬ - ம், வித்தியாகலையில் ௨௭ - ம், சாந்திகலையிற் ௧௮ - ம், சாந்தியதீதகலையிற் ௧௫ - ம் ஆக இருநூற்றிருபத்து நான்காம். இவ்விருநூற்றிருபத்து நான்கனுள் —

௧௦௮ :— காலாக்நி, கூஷ்மாண்ட, ஹாடக, பிராஹ்ம, வைஷ்ணவ, ரௌத்ர, கபாலீச, அஜ, புத்த, வஜ்ரதேக, பிரமத்ந, விபூதி, அவ்யய, சாஸ்த்ரு, பிநாகி, திரிதசாதிப, அக்நிருத்ர, ஸுதாசந, பிங்கள, ஹாகாதக, ஜ்வலந, தஹந, பப்ரு, பஸ்மாந்தக, க்ஷயாந்தக, யாம்ய, ஹாமிருத்யு, தாத்ரு, விதாத்ரு, கர்த்ரு, ஸம் யோக்த்ரு, வியோக்த்ரு, தர்ம, தர்மபதி, நிருதி, மாரண, ஹந்த்ரு, க்ரூரத்ருஷ்டி, பயாநக, ஊர்த்வ, சேம, விரூபாக்ஷ, தூம்ரக, லோஹித, தமஷ்ட்ரீ, பல, அதிபல, பாசஹஸ்த, மஹாபல, சுவேத, ஜயபத்ர, தீர்க்கபாஹு, ஜலாந்தக, மேகநாத, ஸுநாத, சீக்ர, லகு, வாயுவேக, ஸூக்ஷ்ம, தீக்ஷ்ண, க்ஷயாந்தக, பஞ்சாந்தக, பஞ்சசிக, கபர்த்தி, மேகவாஹந, நிதீச, ரூபவாந், தந்ய, ஸௌம்யதேஹ, ஜடாதர, லக்ஷ்மீத்ருக், ரத்நத்ருக், ஸ்ரீத்ருக், பிரஸாதக, பிரகாமத, வித்யாதிப, ஈச, ஸர்வஜ்ஞ, ஞாநபுக், வேதபாரக, சுரேச, சர்வ, ஜ்யேஷ்ட, பூத, பால, பலிப்ரிய, விருஷ, விருஷதர, அநந்த, க்ரோதந, மாருதாசந, கிரஸந, உதும்பரேச, பணீந்த்ர, வஜ்ர, தமஷ்ட்ரீ, சம்பு, விபு, கணாத்யக்ஷ, திரியக்ஷ, திரிதசேச, ஸம்வாஹ, விவாஹ, நப, லிப்ஸு, திரிலோசந, வீரபத்ர, பத்ரகாளீ என்பன. இவை, பிருதிவிதத்துவ புவனங்களாம் என்ப. இந் நூற்றெட்டுட் சில பெயர்கள் பேதமாகவும் ஆகமப் பிரதிகளிற் காணப்படுகின்றன.

௫௬ :— அமரேச, பிரபாச, நைமிச, புஷ்கர, ஆஷாட, முண்டி, டிண்டி, பாராபூதி, லகுளீச, ஹரிச்

சந்த்ர, ஸ்ரீசைல, ஜலேபச, ஆம்ராதக, மத்திய மேச, மஹாகாள, கேதார, பைரவ, கயா, குருக்ஷேத்ர, நாகல, நகல, விமலேச, அட்டஹாச, மஹேந்த்ர, பீமேச்வர, வஸ்த்ரபாத, ருத்ரகோடி, அவிமுக்த, மஹாலய, கோகர்ண, பத்ரகர்ண, ஸ்வர்ணாக்ஷ, சதாணு, சகலண்ட, துவிரண்ட, மாகோட, மண்டலேச்வர, காலஞ்சர, சங்குகர்ண, தூலேச்வர, தலேச்வர, பைசாச, ராக்ஷச, யாக்ஷ, காந்தர்வ, ஐந்த்ர, ஸௌம்ய, பிராஜேச, அகிருத, கிருத, பைரவ, பிராஹ்ம, வைஷ்ணவ, கௌமார, ஔம, ஸ்ரீகண்ட என்பன. இவை, அப்பு புவனம்-அ, தேயு புவனம்-அ, வாயு புவனம்-அ, ஆகாச புவனம்-அ, தன்மாத்திரை புவனம்-ரு, கன்மேந்திரிய புவனம்-க, ஞானேந்திரிய மன புவனம-க, அகங்கார புவனம்-க, புத்தி புவனம்-அ, புத்திக்கு மேலுள்ள புவனம் அ-எனப் பகுக்கப்படும் என்ப.

உஎ :— வாம, பீம, உக்ர, பவேச, ஈசாந, ஏகவீர, பிரசண்ட, உமாபதி, அஜ, அநந்த, ஏகசிவ, குரோத, ஸம்வர்த்த, ஜ்யோதி, பிங்க, சூர, பஞ்சாந்தக, ஏகவீர, சிகேத, மகாத்யுதி, வாமதேவ, பவ, உத்பவ, ஏகபிங்கள, ஏகேக்ஷண, ஈசாந, அங்குஷ்டமாத்ர என்பன. இவை, புருஷ புவனம்-௬, அராக புவனம்-ரு, நியதி புவனம்-உ, வித்தியா புவனம்-உ, கலா புவனம்-உ, காலபுவனம்-உ, மாயா புவனம் அ-எனப் பகுக்கப்படும் என்ப.

கஅ :— வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ, காளீ, கலவிகரணீ, பலவிகரணீ, பலப்ரமதநீ, சர்வபூததமநீ, மநோந்மநீ, அநந்த, ஸூக்ஷ்ம, சிவோத்தம, ஏகநேத்ர, ஏகருத்ர, திரிமூர்த்தி, ஸ்ரீகண்ட, சிகண்டி, சதாசிவ என்பன. இவை, சுத்தவித்தியா புவனம்-௯, ஈச புவனம்-அ,

சாதாக்கிய புவனம் ௧ - எனப் பகுக்கப்படும் என்ப.

௧௫ :— நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை, இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை, வியாபினி, வியோமரூபிணி, அனந்தை, அநாதை, அநாசிரிதை என்பன. இவை, சத்தி புவனம் - ௫, சிவபுவனம் ௧௦ - எனப் பகுக்கப்படும் என்ப.

(௪) வர்ணாத்துவா :— சாந்தியதீதகலையிற் ௧௬ - ம், சாந்திகலையில் ௩ - ம், வித்தியாகலையில் ௭ - ம், பிரதிட்டாகலையில் ௨௪ - ம், நிவிர்த்திகலையில் ௧ - ம் ஆக ஐம்பத்தொன்றும். (வர்ணம்= எழுத்து.) இவ்வைம்பத்தொன்றுள் —

௧௬ :— 𑌅, 𑌆, 𑌇, 𑌈, 𑌉, 𑌊, 𑌋, 𑍠, 𑌌, 𑍡, 𑌏, 𑌐, 𑌓, 𑌔, 𑌅𑌂, 𑌅𑌃 என்பன.

௩ :— 𑌕, 𑌖, 𑌗 என்பன.

௭ :— 𑌘, 𑌙, 𑌚, 𑌛, 𑌜, 𑌝, 𑌞 என்பன.

௨௪ :— 𑌟, 𑌠, 𑌡, 𑌢, 𑌣, 𑌤, 𑌥, 𑌦, 𑌧, 𑌨, 𑌪, 𑌫, 𑌬, 𑌭, 𑌮, 𑌯, 𑌰, 𑌲, 𑌵, 𑌶, 𑌷, 𑌸, 𑌹, 𑌳 என்பன.

௧ :— 𑌕𑍍𑌷 என்பது.

(௫) பதாத்துவா :— சாந்தியதீத கலையில் ௧ - ம், சாந்திகலையிற் ௧௧ - ம், வித்தியாகலையில் ௨௦ - ம், பிரதிட்டாகலையில் ௨௧ - ம், நிவிர்த்திகலையில் ௨௮ - ம் ஆக எண்பத்தொன்றும். இவ்வெண்பத்தொருபதத்துள் —

௧ :— 𑍐 என்பது.

௧௧ :— 𑌵𑍍𑌯𑍋𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑍇, 𑌵𑍍𑌯𑍋𑌮𑌰𑍂𑌪𑌾𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑍇, 𑌶𑌿𑌵𑌾𑌯, 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌯, 𑌅𑌨𑌾𑌥𑌾𑌯, 𑌅𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌯, 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌯, 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌯, 𑌯𑍋𑌗𑌪𑍀𑌠𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌯, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍋𑌗𑌿𑌨𑍇

(வ்யோமவ்யாபிநே, வ்யோமரூபாய, ஸர்வவ்யா
பிநே, சிவாய, அநந்தாய, அநாதாய, அநாச்
ரிதாய, த்ருவாய, சாச்வதாய, யோகபீடஸம்
ஸ்திதாய, நித்யயோகிநே) என்பன.

உ0 :— 𑌧𑍍𑌯𑌾𑌨𑌹𑌾𑌰𑌾𑌯, 𑍐𑌨𑌮𑌃𑌶𑌿𑌵𑌾𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌭𑌵𑍇,
𑌶𑌿𑌵𑌾𑌯, 𑌈𑌶𑌾𑌨𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌯, 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷
𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌯, 𑌅𑌘𑍋𑌰𑌹𑍃𑌦𑌯𑌾𑌯, 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵 𑌗𑍁
𑌹𑍍𑌯𑌾𑌯, 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇, 𑍐𑌨𑌮𑍋
𑌨𑌮𑌃, 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌤𑌿𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌯, 𑌗𑍋𑌪𑍍𑌤𑍍𑌰𑍇, 𑌅𑌨𑌿𑌧
𑌨𑌾𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌗𑌾𑌧𑌿𑌕𑍃𑌤𑌾𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾
𑌧𑌿𑌪𑌾𑌯, 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍂𑌪𑌾𑌯, 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰
𑌪𑌰𑌾𑌯, 𑌅𑌚𑍇𑌤𑌨 𑌅𑌚𑍇𑌤𑌨, 𑌵𑍍𑌯𑍋𑌮𑌿𑌨𑍍
𑌵𑍍𑌯𑍋𑌮𑌿𑌨𑍍, 𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑍍 𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌨𑍍

(த்யாநஹாராய, ஓந்நமச்சிவாய, ஸர்வப்ரபவே,
சிவாய, ஈசாநமூர்த்தாய, தத்புருஷவக்த்ராய,
அகோர ஹ்ருதயாய, வாமதேவ குஹ்யாய,
ஸத்யோஜாதமூர்த்தயே, ஓந்நமோநம8, குஹ்
யாதிகுஹ்யாய, கோப்த்ரே, அநிதநாய, ஸர்வ
யோகாதிக்ருதாய, ஸர்வவித்யாதிபாய, ஜ்யோ
திரூபாய, பரமேச்வர பராய, அசேதந அசே
தந, வ்யோமிந் வ்யோமிந், வ்யாபிந் வ்யாபிந்)
என்பன.

உக :— 𑌅𑌰𑍂𑌪𑌿𑌨𑍍 𑌅𑌰𑍂𑌪𑌿𑌨𑍍, 𑌪𑍍𑌰𑌥𑌮 𑌪𑍍𑌰𑌥𑌮, 𑌤𑍇𑌜
𑌸𑍍𑌤𑍇𑌜𑌃, 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃, 𑌅𑌰𑍂𑌪,
𑌅𑌨𑌗𑍍𑌨𑌿, 𑌅𑌧𑍂𑌮, 𑌅𑌭𑌸𑍍𑌮, 𑌅𑌨𑌾𑌦𑍇, 𑌨𑌾𑌨𑌾
𑌨𑌾𑌨𑌾, 𑌧𑍂𑌧𑍂 𑌧𑍂𑌧𑍂, 𑍐 𑌭𑍂𑌃, 𑍐
𑌭𑍁𑌵𑌃, 𑍐 𑌸𑍍𑌵𑌃, 𑌅𑌨𑌿𑌧𑌨, 𑌨𑌿𑌧𑌨, 𑌨𑌿𑌧𑌨𑍋
𑌦𑍍𑌭𑌵, 𑌶𑌿𑌵, 𑌸𑌰𑍍𑌵, 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍍, 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰.

(அரூபிந்அரூபிந், ப்ரதமப்ரதம, தேஜஸ்தேஜ8,
ஜ்யோதிர்ஜ்யோதி8, அரூப, அநக்நி, அதூம,
அபஸ்ம, ஆநாதே, நாநா நாநா, தூதூ தூதூ,

ஓம்பூ:, ஓம்புவ:, ஓம்ஸுவ:, அநிதந, நிதந, நிதநோத்பவ, சிவ, சர்வ, பரமாத்மந், மஹேச்வர) என்பன.

உஅ :— 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵, 𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑍇𑌶𑍍𑌵𑌰, 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌃, 𑌯𑍋𑌗𑌾𑌧𑌿𑌪𑌤𑍇, 𑌮𑍁𑌞𑍍𑌚 𑌮𑍁𑌞𑍍𑌚, 𑌪𑍍𑌰𑌥𑌮 𑌪𑍍𑌰𑌥𑌮, 𑌶𑌰𑍍𑌵 𑌶𑌰𑍍𑌵, 𑌭𑌵 𑌭𑌵, 𑌭𑌵𑍋𑌦𑍍𑌭𑌵, 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤 𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦, 𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌨𑍍𑌨𑌿𑌧𑍍𑌯𑌕𑌰, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑌪𑌰, 𑌅𑌨𑌰𑍍𑌚𑌿𑌤 𑌅𑌨𑌰𑍍𑌚𑌿𑌤, 𑌅𑌸𑌂𑌸𑍍𑌤𑍁𑌤 𑌅𑌸𑌂𑌸𑍍𑌤𑍁𑌤, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤, 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿, 𑌤𑍁𑌰𑍁 𑌤𑍁𑌰𑍁, 𑌪𑌤𑌙𑍍𑌗 𑌪𑌤𑌙𑍍𑌗, 𑌪𑌿𑌙𑍍𑌗 𑌪𑌿𑌙𑍍𑌗, 𑌜𑍍𑌞𑌾𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨, 𑌶𑌬𑍍𑌦 𑌶𑌬𑍍𑌦, 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮, 𑌶𑌿𑌵, 𑌶𑌰𑍍𑌵, 𑌸𑌰𑍍𑌵𑌦, 𑌓𑌂 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃, 𑌓𑌂 𑌶𑌿𑌵𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃, 𑌓𑌂

(மஹாதேவ, ஸத்பாவேச்வர, மஹாதேஜ:, யோகாதிபதே, முஞ்ச முஞ்ச, ப்ரதம ப்ரதம, சர்வசர்வ, பவபவ, பவோத்பவ, ஸர்வபூத ஸுகப்ரத, ஸர்வஸாந்நித்யகர, ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரபர, அநர்ச்சித அநர்ச்சித, அஸம்ஸ்துத அஸம்ஸ்துத, பூர்வஸ்தித பூர்வஸ்தித, ஸாக்ஷி ஸாக்ஷி, துரு துரு, பதங்க பதங்க, பிங்கபிங்க, ஜ்ஞாநஜ்ஞாந, சப்தசப்த, ஸூக்ஷ்மஸூக்ஷ்ம, சிவ, சர்வ, ஸர்வத, ஓந்நமோநம:, ஓம் சிவாய நமோ நம:, ஓம்) என்பன.

(சு) மந்திராத்துவா :— சாந்தியதீத கலையில் (அ) ங - ம், சாந்தி கலையில் (ஆ) உ - ம், வித்தியாகலையில் (இ) உ - ம், பிரதிட்டாகலையில் (ஈ) உ - ம், நிவிர்த்திகலையில் (உ) உ - ம், ஆகப் பதினொன்றாம். இப் பதினொரு மந்திரத்துள் —

(அ) ங :— சிவ, ஈசாந, அஸ்த்ர என்பன.

(ஆ) உ :— தத்புருஷ, கவச என்பன.

(இ) உ :— அகோர, சிகா என்பன.

(ஈ) உ :— வாமதேவ, சிரோ என்பன.

(உ) உ :— ஸத்யோஜாத, ஹ்ருதய என்பன.

இவ் வாறத்துவாக்களுள் மந்திரங்கள் பதங்களாலும், பதங்கள் வர்ணங்களாலும், வர்ணங்கள் புவனங்களாலும், புவனங்கள் தத்துவங்களாலும், தத்துவங்கள் கலைகளாலும் வியாபிக்கப்பட்டுள வென்று சைவமஹாபுராணத்து வாயுசங்கிதை வழங்குகின்றது. இச் சங்கிதை—

(𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌪𑌦𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌭𑌵𑌨𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑍍𑌵𑌾 𑌕𑌲𑌾𑌧𑍍𑌵𑌾 𑌚𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥)

" மந்த்ராத்வாசபதாத்வாச வர்ணாத்வாசேதிசப்தித ꞉ ।
புவநாத்வாசதத்வாத்வா கலாத்வாசார்த்தத꞉ க்ரமாத் ॥ "

என மிழற்றுமாற்றானும் அத்துவாவின் முறைமை அறியக் கிடக்கின்றது. பொருள் :— " மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவாவென்பன சொற்பிரபஞ்சமாகவும; புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா வென்பன பொருட்பிரபஞ்சமாகவும் அத்துவாக்களின் ஒழுங்குசொல்லப்படும் " எனவாம். வர்ணாத்துவாவிலுள்ள எழுத்துக்களையும், பதாத்துவாவிலுள்ள பதங்களையும், பிறவற்றையுங் கருதுமிடத்துத் தமிழர் வடமொழி விரும்புவோராகவே யுள்ளாரென்ப தேற்படுகின்றது கூறிப்போந்த பிரதிட்டாகலையிலுள்ள ருங - புவனங்களிலே ' கௌமார ' எனப்பட்டதைக் குமாரக்கடவுள் புவனமெனக் கோடல்வேண்டுமென்பது சித்திக்கின் அது, பிரமா விட்டுணு உருத்திரனென்னுந் திரிமூர்த்திகளுட் சிரேட்டனாயுள்ள உருத்திரமூர்த்தியே சிவன் ; அம்மூர்த்தியின் சுதனே குமாரனென்னும் முடிவினையேற்படுத்திக்கொண்டு குமாரவழிபாடு செய்தாரையெல்லாம் ஏன்றுகொண்ட புவனமாதல்வேண்டு மென்பாம். இவ்வாறு துணிதற்கு அங்ஙனமே பிரமபுவனம் ' பிராஹ்ம ' எனவும், விட்டுணுபுவனம் ' வைஷ்ணவ ' எனவுங்கூறி மேமேலே கௌமார, ஔம, ஸ்ரீகண்ட என்பன கூறப்பட்டிருத்தல் தக்க ஏதுவாதல் காண்க. போந்த உருத்திரமூர்த்தி பெயர் ஸ்ரீகண்டனெனவு நூல்களிற் சொல்லப்படுதலின் அம்மூர்த்திபுவனம் ' ஸ்ரீகண்ட ' எனப்பட்டது ; உமை (= உமா) புவனமெனப்படுவதே ' ஔம ' எனப்பட்டது என்க. இங்ஙனமே, திரிமூர்த்திகளி லொருவனான குணருத்திரனுடைய தேவியே உமை யென்பதூஉம், இவ்விருவருடைய

சுதனை குமாரமூர்த்தி யென்பதூஉம் பெறுமாறுகவே 'ஸ்ரீகண்ட' என்பதையொட்டி அந்த 'ஔம' 'கௌமார' என்பன நிறுவப்பட்டன வெனின்,— அக் குணருத்திரன் ஆணவம் கன்ம மென்னும் இருமலப் பசுவர்க்கத்துப் பிரளயாகலரு ளொருவனாய் அசுத்தமாயேய சரீரியாய்ப் பிரகிருதியிலுள்ள குணதத்துவத்திலும் அசுத்த மாயையிலுள்ள அராக தத்துவத்திலு மிருக்கத்தக்க மூர்த்தியாய்க் காணப்படுகின்றமையாலும், ஸாமவேதம்— ஓங்காரத்தின்பொருள் சதாசிவன் என்னுமருத்தத்தில் "ஸதாசிவோம்" என்று கூறிக் கொண்டு ஓங்காரத்தின்பொருள் சுப்பிரமணியன் என்னு மருத்தத்தில் "ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம்" என்று மும்முறை மொழிதலினாலும், இச்சுருதிக்கு உபப்பிருங்கணமாக ஸ்காந்தமஹாபுராணத்தின் சம்பவகாண்டத்து ௩௪-ஆம் அத்தியாய வசனங்கள் —

(𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑍋𑌮𑍍𑌸𑍍𑌵𑌰𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍 𑌤𑍍𑌵𑌞𑍍𑌚𑌾𑌹𑌞𑍍𑌚𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌮𑍍 ॥
𑌇𑌤𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿𑌯𑍇𑌲𑍋𑌕𑍇 𑌤𑍇𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌮𑌤𑍁𑌲𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।

ஸுப்ரஹ்மண்யோம்ஸ்வரஸ்யார்த்தஸ் த்வஞ்சாஹஞ்சஸதாசிவோம் ||
இதிஜாநந்தியேலோகே தேயாந்திமமதுல்யதாம் |)

"வேதத்தில் ஸுப்ரஹ்மண்யோம் என்றுள்ளபடி நீயும் ஸதாசிவோம் என்றுள்ளபடி யாமுமே அந்தப் பிரணவப்பொருளாகின்றோமென அறிபவர்களெவர்களோ அவர்கள் எமக்குச் சமமாவார்கள் (= சிவ சமத்துவ முத்தியை யடைவார்கள்)" என்று குமாரமூர்த்தி முன்னிலைக்கட் பரமசிவன் பகர்ந்தனன் என்னும் ஒண்பொருள் பயத்தலினாலும், அந்தப் பிரணவம் அவ்வசுத்தமாயையைக் கடந்துள்ள சுத்தாத்துவாவிற் சிவதத்துவம் ஐந்துமாயிருக்கின்ற சுத்தமாயையினதாதலினாலும் அச் செய்தி யொருசிறிதும் பொருந்தாது. இந் நிச்சயம்— மேலைச் சம்பவகாண்டத்தின் ௨௧-ஆம் அத்தியாய வசனங்கள் —

(𑌦𑍇𑌵𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌯𑌂 𑌤𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌦𑌯𑌾𑌨𑌿𑌧𑍇 ॥
𑌸𑌂𑌹𑌰𑍍𑌤𑌾𑌜𑌗𑌤𑌾𑌮𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌧𑌾𑌰𑍋𑌮𑌰𑌾𑌗𑍍𑌰𑌣𑍀𑌃 ।
𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌸𑌨𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌮𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌸𑍍𑌸𑌹 ॥

தேவகாலாக்நிருத்ரோயந் தவமூர்த்திர்தயாநிதே |
ஸம்ஹர்த்தாஜகதாமந்தே ஸர்வாதாரோமராக்ரணீ: |
ஸம்ப்ராப்தச்சாஸநாதத்ய ஸமாநாத்மகுணஸ்ஸஹ ||)

"தயாநிதியாகிய மகாதேவா! இவர் தாம் நினதுவடிவுகொண்டவரும், முடிவிற் சருவ சகத்தையும் அழிப்பவரும், சருவப்பிரபஞ்சாதார பூதரும், சருவ தேவர்க்கும் முதன்மையானவருமான காலாக்கினி ருத்திரர்" என்று நந்திதேவர் பரமசிவனுக்குக்காட்டினின்றனரென்னும் பொருளைப் பயக்குமாற்றானும், ஸ்ரீ பார்வதிகலியாணமகோற்சவ தரிசனார்த்தமாக வந்து கூடிய தேவர்கள் பெயர்களைச் சிவபெருமானது முன்னிலையில் நந்திதேவரெடுத்துக்கூறுங் கிரமத்திலேயே காலாக்கினிருத்திரனைப்பற்றிய இச்செய்தியுங் கூறப்பட்டிருத்தலானும், இப் பார்வதி பரமேசுரர்கட்குப் புத்திரனாகவே குமாரன் வந்தனனென்பது புராணத்திற் பெறப்படுதலானும், குமாரனுடைய அனந்த திருநாமங்களிலே ஸஹஸ்ரநாமத்துட் பார்வதிநந்தனனென்பதும் உமாசூனுவென்பதும் வழங்கப்படுதலானும், மேலைச் சம்பவகாண்டத்து ௩௫ - ஆம் அத்தியாயச் சுலோகங்கள் —

(𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌶𑌾𑌸𑌨𑌾𑌦𑌸𑍍𑌯 𑌪𑌾𑌪𑌿𑌨𑌾𑌂𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑍀𑌡𑌨𑍈𑌃 ॥
𑌜𑍀𑌵𑌤𑌾𑌂𑌯𑌾𑌤𑌨𑌾𑌭𑌿𑌶𑍍𑌚 𑌮𑍃𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌿𑌤𑌾𑌵𑌤𑍀 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑍋𑌪𑌿𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑍃𑌜𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌵𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 ॥
𑌨𑌵𑌭𑌿𑌶𑍍𑌚𑌤𑌥𑌾𑌨𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌭𑌿𑌰𑌾𑌦𑌰𑌾𑌤𑍍 ।
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍀 𑌨𑌰𑌭𑍂𑌤𑌜𑌲𑌾𑌶𑌯𑌃 ॥
𑌕𑌰𑍋𑌤𑌿𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌜𑌗𑌤𑌃 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌸𑍍𑌯𑍈𑌵𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 ।
𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌪𑌕𑌵𑌾𑌨𑍍 𑌸𑌂𑌹𑌰𑌤𑍍𑌯𑍇𑌵𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 ॥
𑌸𑌰𑍍𑌵𑌂𑌜𑌗𑌦𑌿𑌦𑌂𑌕𑌾𑌲𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌸𑍍𑌯𑌵𑍇𑌧𑌸𑌃 ।
𑌕𑌾𑌲𑌸𑍍𑌸𑍃𑌜𑌤𑌿𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑌾𑌲𑌸𑍍𑌸𑌂𑌹𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌕𑌾𑌲𑌸𑍍𑌯𑌵𑌶𑌗𑌾𑌃 𑌸𑌕𑌾𑌲𑍋𑌸𑍍𑌯𑌵𑌶𑍇𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

ம்ருத்யுச்சசாஸநாதஸ்ய பாபிநாம்வ்யாதிபீடனை ஃ ||
ஜீவதாம்யாதநாபிச்ச ம்ருதாநாமபிதாவதீ ।
சதுர்முகோபிபூதாநி ஸ்ருஜத்யஸ்யைவசாஸநாத் ||
நவபிச்சததாந்யைச்ச ப்ரஜாபதிபிராதராத் ।
நாராயணோமஹாயோகீ நரபூதஜலாசய ஃ ||
கரோதிரக்ஷாம்ஜகதஷ் ஷண்முகஸ்யைவசாஸநாத் ।

காலாக்நிருத்ரோபகவாந் ஸம்ஹாரத்யேவசாஸநாத் ।
ஸர்வம்ஜகதிதம்காலே ஸம்ப்ரஹ்மண்யஸ்யவேதஸ ஃ ||
காலஸ்ஸ்ருஜதிபூதாநி காலஸ்ஸம்ஹாரதிப்ரஜா ஃ ।
ஸர்வேகாலஸ்யவசகா ஃ ஸகாலோஸ்யவசேஸ்திதஃ ||)

"குமாரனது கட்டளையினுலேயே நமன் பாவிகளை வாணுள் களில் நோய்களானும் மரித்தபின்றை நரகயாதனைகளானுந் தண்டிக் கின்றனன்: நவப் பிரசாபதிகளோடுள்ள நான்முகன் சிருட்டி புரி கின்றனன்: நாராயணன் றிதிசெய்கின்றனன்: காலாக்கினிருத்திரன் பிரளயகாலத்திற் சருவசக சங்காரம் உஞற்றுகின்றனன்: பிரஜை களைச் சிருட்டிக்கின்றதுஞ் சங்கரிக்கின்றதுங் காலந்தான்: அக் காலமோ இச் சுப்பிரமணியன் வசத்திலுளதே" எனப் பரமசிவன் உமாதேவிமுன்னிலையி லுரைத்தருளினன் எனும்பொருளைப் பயக்கு மாற்றானும், மும்மூர்த்திகளி லொருவனான உருத்திரன் ஈசனைத் தியானிப்போன் என்பது போதர— (த்யாதாருத்ர:) "த்யாதா ருத்ர:" என அதர்வசிகோபநிஷதம் பகர்தற் கேற்ப ஸ்காந்தமஹா புராணத்தின் உபதேசகாண்டத்து எச - ஆம் அத்தியாயத்து ருச - ஆஞ் சுலோகம் —

(தெவி த்வத்பூஜயா லப்த்வா மஹாபோகாம்ஸ்த்ரயஸ்ஸுரா: ।
குர்வந்தி ஸததம் ஸ்ருஷ்டி ஸ்திதி நாசாந் க்ருதக்ருத்யா: ॥

தேபிதத்பூஜயாலப்த மஹாபோகாஸ்த்ரயஸ்ஸுரா: ।
குர்வந்திஸததம்ஸ்ருஷ்டி ஸ்திதிநாசாந்க்ருதக்ருதத் ||)

"பின்றைப் பிரம விட்டுணு உருத்திரரான அம்மூவரும் அம் மகேசனைப் பூசித்து அனேக போகானுபவ முடையராய்ச் சிருட்டி திதி சங்காரங்களை மீட்டுமீட்டுஞ் செய்கின்றனர்" எனும்பொருளைப் பயக்குமாற்றானும், மாணிக்கவாசகனாரது தமிழ்வேதம் —

"தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி"

என்று கூறுமாற்றானும், அன்ன பிறவாற்றானும் மதுகை யுறு கின்றது. சத்த பாதாளமுங் கடந்த அண்டகடாக வெளியிலுள்ள காலாக்கினிருத்திர புவனமும் அவ்வுருத்திரமூர்த்திக் குறைவிடனு யிருத்தலின், அம் மூர்த்தியைக் காலாக்கினிருத்திரரென்று நந்தி தேவரும் பரமசிவனும் நவின்றனரென்பதியைபு. சிவபெருமாற்கு நீலகண்டமுண்மையின் அப் பெருமானுடைய அனந்த திருநாமங்களு ளொன்று ஸ்ரீகண்டனெனவும் வழங்கப்படுகின்றது. ஸ்ரீகண்டம், நீலகண்டமென்பன ஒருபொருட் கிளவிகள். சிவபெருமானுடைய உரு, நாமம், தொழி லென்பனவற்றைத் தாங்கியுள்ள அவ்வுருத்திர

மூர்த்திக்கும் இந்த ஸ்ரீகண்டனென்னும்பெயரெய்துவதேற் புடைத்தே. அவ்வாறெய்திய இயைபறியாது இப்பெயரொன்றே பற்றி அதற்குச் சிவபெருமானை பருத்தஞ்செய்தல் கூடாது. பிறவும் அன்ன. உருத்திரமூர்த்தியின் பெயர்கள் சிவபெருமான் பெயர்களால் விளங்கினுங் காலாக்கினிருத்திரன், காலருத்திரன், பிரளயகாலருத்திரன், பிரளயகாலாக்கினி ருத்திரன், சங்காரகாலருத்திரன், நீலலோகிதருத்திரனென்னும் பெயர்களானும் விளங்கும். இம்மூர்த்தியினுடைய தேவிபெயர் உருத்திரை, உருத்திராணி முதலியனவாக விளங்குதலோடு "ஒத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி" என்று சிவஞானசித்தியார் கூறுகின்றபடி "உமை" எனவும் விளங்குவதாயுளது. இப்பெயர்— சிவபெருமானுடைய தேவிக்கே யுரியதென்பது மண்டலப்ராஹ்மணோபநிஷத்தில் (பஞ்சவக்த்ரம் உமாஸஹாயம் நீலகண்டம்) "பஞ்சவக்த்ர முமாஸஹாயம் நீலகண்டம்" எனவும், கைவல்யோபநிஷத்தில் (உமாஸஹாயம் பரமேஶ்வரம்) "உமாஸகாயம் பரமேச்வரம்" எனவும்,

(ஸ ப்ரஹ்ம ஸ ஶிவ ஸேந்த்ர ஸோऽக்ஷர:
பரம: ஸ்வராட் । ஸ ஏவ விஷ்ணு:)

"ஸப்ரஹ்மஸசிவஸ் ஸேந்த்ரஸ்ஸோக்ஷர:
பரமஸ்ஸ்வராட் | ஸஏவவிஷ்ணு:"

எனவும் வரு மந்திரங்களானும் பெறப்படுகின்றதனால் இது, சிவநாமமெல்லாம் உருத்திரமூர்த்திக்கு மெய்ந்நிலைமை புரையா அம்மூர்த்தி பத்தினியாய உருத்திராணிக்கு மெய்திற்றென்னலாம். 'ஸப்ரஹ்ம' என்றற் றொடக்கத்ததாய் மேலே காட்டப்பட்ட மந்திரம்:— "பரமேசுவரனாயுள்ள அவனே பிரமன்; அவனே சிவன் (=குணருத்திரன்); அவனே இந்திரன்; அவனே நாசமிலான்; அவனே சுவராட்டு; அவனே விட்டுணு" என்னும்பொருளைத் தருமாற்றானே பிரமன் விட்டுணு உருத்திரனென்னும் மூவரும் உமாசகாயனுயுள்ள பரமேசுவரனது விபூதியினுள்ளாரென்பது பெறப்படுதல் காண்க. பிரணவத்தின் அ, உ, ம - என்னும் மும்மாத்திரைகளும் எழுத்துமாறலால் உ + ம + அ = உமா எனவாம்; இவ்வாறாய சொல் உனது பிரணவமென்று சிவபெருமான் றன்னுடைய தேவி முன்னிலைக்கட் சொல்லியருளினனென்பதூஉம் இலிங்கபுராணம் பூர்வபாகத்து அறு - ல் —

(உகாரஂவகாரஂவ அகாரஂவக்ரமேணது।)

"உகாரஞ்சமகாரஞ்ச அகாரஞ்சக்ரமேணது।"

என்று கூறிச்சேறலிற் பெறப்படுகின்றது. இத்திற ஏதுக்களால் உமாதேவியினது பெயரினைக் கொண்ட உருத்திராணி புவனமே 'ஔம' எனவும், ஸ்ரீகண்டபரமேசுவரனது பெயரினைக்கொண்ட உருத்திரமூர்த்தி புவனமே 'ஸ்ரீகண்ட' எனவுங் கூறப்பட்டன; இவ்விரண்டும் மேன்மிழற்றியவாறு குணருத்திரமூர்த்தியே பரம சிவன், அவனுடைய பத்தினியே உமாதேவியென்னும் முடிவினை யேற்படுத்திக்கொண்டு அன்னோரை வழிபட்டு நிற்பாரை ஏன்று கொள்ளும் புவனங்களாம் எனல் ஏற்புடைத்தென்பாம். ஆயின், பரமசிவ சுதனே குமாரனென்னுமொரு முடிவினிற்பாரை ஏன்று கொள்ளுங் குமாரனது புவனம் யாண்டுளதெனின்,— உரைப்பம். இக்காண்டத்து உகூ-ன் உரையிற்போந்த சுருதியிலும், பரிபூரணானந்தபோதத்தின் பிற்படலத்து க-ன் உரையிற்போந்த சுருதிகளிலும், பிரஹ்மஸூத்ரத்திலுஞ் சிவலோகமென்னும்பொருள் கொள்ளக் கிடக்கின்ற (ப்ரஹ்மலோகம்) "ப்ரஹ்ம லோகம்" யாதோ அஃதென்பதும், சைவமஹாபுராணத்துக் கைலாஸஸம்ஹிதையின் (தகனகனனவிதியில்) இறுதிப்பாகத்தில் வாமதேவமுனிவர்க்கு முருகப் பெருமானால் மொழிந்தருளப்பட்ட அர்ச்சிராதிமார்க்க சதாசிவ லோகம் யாதோ அஃதென்பதும், ஸ்ரீமத்-சுந்தரமூர்த்திசுவாமிகள் வெள்ளையானைமீதிவர்ந்து அர்ச்சிராதிமார்க்கம்போந் தடைந்த சிவலோகம் யாதோ அஃதென்பதும் அந்தப் புவனமா மென்க. பிரணவாகாரத்தை அவ்வெள்ளையானை வடிவ முணர்த்திநிடு மென்க. பிரணவபீடத்திருப்பவனும் பிரணவத் திருமேனியனும் பிரணவப் பொருளாயுள்ள அக் குமாரனது புவனம் அந்தப் பிரணவ சுத்தமாயையிலுள்ளதென்பதும், அப்புவனத்திலே மேம்பட்ட கைலாயமுமுள்ளதென்பதும், அக் கைலாயத்திற்கு அணித்தாயுள்ள கந்தாசலத்திலே துவாதச மகாகுண்டலங்களோடு விளங்கா நின்ற விகசித முககமல ஷட்கனும் தயாந்தோளித அஷ்டாதச குமுதநயனனும் குங்கும ரக்தவர்ணஜ்யோதிரூபனும் சர்வாபரண பீதாம்பரங்களாலுஞ் சக்தி முதலிய ஆயுதங்களாலும் அலங்கரிக்கப்பட்ட சர்வாவயவ மங்களமூர்த்தியாய் அவன் வீற்றிருக்கின்றன னென்பதும், சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவபுவன வடிவாயிருக்கின்ற அம்மாயையினது சென்னி சிவபெருமாற்குப் பீடமா

யிருந்தாங்கு அப்பெருமானை நீங்கிபிராக் குமாரப்பெருமாற்கும் பீடமாயிருக்கின்றதென்பதும் இங்ஙனம் அமைகியாம். ஆகலினன்றே ஆசிரியர் " அத்துவாவெனு மாறையு நீக்கவோர் சுத்தவத்துவிற் றேருன்றலி னுலது, புத்திரப்பெயர் பூண்டபிரான்" எனச் சொரூப லக்கணத்தில் வைத்தோதாதியவுண்மை கடத்தலக்கணத்தும் பொருந்தக் காண்கின்றனம். சிவபெருமான் தனக்கும் உமாதேவிக்குமிடையிற் குமாரமூர்த்தியும் விளங்குமா றிருக்குந் திருக்கோலமே ஸோமாஸ்கந்தமூர்த்தம்; இது மகேசுரமூர்த்தம் உரு - ல் உக - வதாம் என்பதைக் காட்டவந்த —

(விம்ஶதிர்விக்ரஹப்ரஸாதஃ ஸோமாஸ்கந்தஸ்ததஃ பரம் ।)

" விஞ்சதிர்விக்ரப்ரஸாதஃ ஸோமாஸ்கந்தஸ்ததஃ பரம் । "

என்னும் வாதுளோத்தர சுத்தாக்ய தத்வபேதபடல வசனமும்,

(ருதஞ்சஸத்யம்புருஷோ விஶ்வோவிஶ்வாதிகஶ்சஸஃ ।
ருதஞ்சஸத்யம்புருஷோ விச்வோவிசவாதிகச்சஸ: ।)

" குமாரன் விசுவரூப முடையவனும், விசுவங்கட்கு அதீதப்பட்டவனுமா யுளன் " என்னும் பொருளைப் பயக்கின்ற மேலைச் சம்பவகாண்டத்து ருறு - ஆம் அத்தியாய வசனமும், அன்ன பிறவும் இவ்வமைதியினை வலியுறுத்தும். விசுவமென்பது சுத்தமாயை வரையிலுஞ் செல்லு மென்க.

" ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்று னம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான் "

என்று பரமசிவன் பார்வதியை நோக்கிப் பகர்ந்தருளினனெனக் கந்தபுராணத்தில் வருதலும் ஈங்குக் கருதிக்கொள்ளத் தக்கதே. அப்பரமசிவன் சூரியமண்டல மத்தியினு மிருக்குமாறுபோல் மற்றெங்கெங்குந் திருக்கோயில்கொண் டிருப்பனே அங்கங்கெல்லாங் குமாரனு மிருப்பனென்பதூஉம் இங்ஙனங் கொளக்கிடக்குமோருண்மையிலே இப்பிரகிருதி புவனம் அவனுக்கிருக்கையாவதில் ஓரிழுக்குமெய்தாதென்பது மறியப்படும். முன்னர்க் கூறப்பட்ட பிரம விட்டுணுக்களின் றலைவராய் நூற்றுப்பதினெட்டு உருத்திரராயிருக்கின்ற பிரளயாகலருள் ஒரு சிரேட்டனாயுள்ள குணருத்திர மூர்த்தியையும், விஞ்ஞானகலரினுள்ள அனந்தனெனும் மகேசுர மூர்த்தியையும், அணுசதாசிவமூர்த்தியையும் ஆண்டுகொண் முறைமையின்

மகாருத்திரனாய் மகேசுவரனாய்ச் சதாசிவனாய் அந்தப் பார்வதி பதியாய பரமசிவனிருத்தலினன்றோ அப்பெருமானை வேத முதலிய பிரமாணங்கள் அப்பெயர்களானு மறிவிக்கின்றன. கல்லாலந் தண்ணிழற்க ணெழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தியும், காமனையெரித்த காமநாசமூர்த்தியும் இவ் வுமாபதியேயாகலின் இம் மூர்த்தங்களை மகேசுவரமூர்த்தம் இருபத்தைந்தனுள்வைத்து (தக்ஷிணாமூர்த்திரூபந்து சதுர்விம்ஶதிரீரிதம் ।) "தக்ஷிணாமூர்த்திரூபந்து சதுர்விஞ்சதிரீரிதம் ।" என்றும், (காமாரிம் ஸப்தமம்) "காமாரிம் ஸப்தமம்" என்றுங் கூறுகின்றது வாதுளாகம சுத்தாக்ய தத்வபேதபடலம். இவை மகேசுரமூர்த்தங்களேயென்னு நியதி ஸ்காந்தமஹாபுராணத்தின் உபதேசகாண்டத்துத் ௩0 - ஆம் அத்தியாயத்தும் பெறப்படுகின்றது; மஹேதிகாசமாகிய சிவரகசியத்தும் பெறலாம். அறுபான்மும்மை நாயன்மாருந் திருவாதவூரடிகளும் ஏனைப்பெரியாரும் வழிபட்ட கடவுளும், வேதாகமங்களை வெளியிட்ட இறைவனும் இங்கறிவிக்கப்பட்ட பெருமானே. உமாபதி செய்தி யிவ்வாறிருப்ப; சைவம் புகுந்து சமயதீக்கை பெற்றவர் வழிபடு கடவுளும், தேவர்கட்கும் இருடிகட்கும் அறுபத்துமூவர் முதலாயினோர்க்கும் நிக்கிரக அநுக்கிரகங்களைச் செய்த கர்த்தாவும் அந்தப் பசுவர்க்கப் பிரளயாகலரிலுள்ள ஸ்ரீகண்டருத்திர னென்பதாகச் சைவரிற்சிலர் தெரித்திட்டமைக்கேற்ப, சர்வான்மசம்பு வென்பாரால் வடமொழியி லியற்றப்பட்ட சித்தாந்தப்பிரகாசிகையின் றமிழ்மொழிபெயர்ப்பில் —

"'சிவானுக்கிரகம்பெற்ற ஸ்ரீகண்டருத்திரர் மூன்றுமலமுடைய சகலருள் ஞானத்தாலும், யோகத்தாலும், தவத்தாலும், தியானமுதலியவற்றாலுஞ் சிறந்தவரைப் பிரமபத விண்டுபதங்களில் இருத்துவர்' 'குணதத்துவத்திலிருக்கும் ஸ்ரீகண்டருத்திரர் மத்தியப்பிரளயம் வரையும் அதிகாரஞ்செய்துகொண்டிருந்து பின்பு அந்தப்பிரமவிட்டுணுக்களையும் ஒடுக்கிக்கொண்டு தாம் மிச்சிராத்துவாவில் அராகதத்துவத்தி லிருப்பர்' 'சமயதீக்கை பெற்றோர் உருத்திரபத மடைவர்'"

என்னுந் தமிழ்களு மெழுதப்பட்டுள. இவையற்றையும், இவைபோல்வனவற்றையும், இவையற்றை யாதரிக்கு மியைபிற்குரியனவாய்க் குமாரனைப் பசுவர்க்க ஸ்ரீகண்டருத்திர சுதனென்பதற்கியைவனவாய் ஆகமவசனங்க ளிருப்பின் அவையற்றையும் எம்மனோரங்கீகரிக்க நியாயமின்றென்னு நெறியானே பிரதிசெய்தோராலேனும் மற்றெவராலேனுங் கதாநுகதநியாயமாய் வந்த பிறழ்ச்சியென்றே அவ்வசனங்களையும் யாம் ஒதுக்குவாம். போந்த ஸ்காந்த

மஹாபுராண வசனத்துள்ளபடி பரமசிவ சன்னிதியினின்ற நந்திதேவர் விஞ்ஞானகலரு ளொருவரென்பதே சால்பிறது. இவ்வண்ண மோதுவதற்கே மேற்போந்த சித்தாந்தப்பிரகாசிகையிற் "சுத்தவித்தியா தத்துவத்தில், நந்திதேவா முதலிய கணநாதர் எண்மருமிருப்பர்" என்பது மெழுதப்பட்டுளது. இன்னணம நந்திதேவரை ஒரு மல விஞ்ஞானகலரென விளம்பி அவ நடையா தலைமைக்கடவுளை இரு மலப் பிரளயாகல ரென்பதுதான் யாங்ஙனம் பொருந்தும்! ஈண்டு அக்கணநாதர் வேறென்பர் போலும். எப்படியாயினும் பசுவல்லாத பதிப்பொருளாயுள்ள பரமசிவ சன்னிதியி லிருக்கின்ற நந்திதேவரை விஞ்ஞானகலரென்பது வழாத்தீர்வையே யாம்.

பாயிரத்து உ-ன் உரையிற் காட்டப்பட்ட "குமாரச் சிவம்" என்னுஞ் சுருதி வாக்கியந்தானே இங்குப "புத்திரப்பெயர் பூண்ட பிரான்" எனப்பட்ட தென்க.

'அதை' என்புழி அன்சாரியை விகாரத்தாற் றொக்கது. எனா = என்று; ஆவீற் றுடன்பாட்டு வினையெச்சம். பழிச்சல் = துதித்தல். அரோ - அசை. (௬௬)

இன்ன வாமிளி ரும்பொருட் கேயினும்
பன்னு வார்முரு கன்சிவ பாலனென்
றென்னை யாளவ னேண்வலி யின்விறல்
மின்னும் பெற்றி விளக்குங் குமாரப்பேர்.

இவ்வண்ணமாகப் பிரகாசிக்கும்பொருளையே இன்னும், முருகனென்றும், சிவபாலனென்றும் அவ்வடியார் சொல்லுவார். என்னை யாட்கொண்ட அம் மூர்த்தியின் நிலைபேறான வீறுபாட்டு வலியின் றன்மையை விளக்கும் (பிரபஞ்சத்திற்) பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற குமாரன் என்னும் அபிதானம்.

'முருகு' என்பது கட்டிளமையென்னும் பொருள் பயத்தலின் அதனை யென்றுமுடைய குமாரன் முருகனெனப்பட்டனன். இவ் விளமை, பிள்ளைமை குறிக்குமாற்றானே முருகனென்பது சிவசுதனெனும் பொருட்டென் றுரைக்கலாம். நறுமணத்தோடுங் கூடிய தெய்வத்தன்மையும், அழகும் முருகெனப்படுமாற்றானே அத்தன்மைக ளுடையோன் முருகனெனப்பட்டன னென்பதுமாம். திருவலங்கற்றிரட்டின் உ-ஆங் கண்டத்தில் —

"முருகு லாசறிய முருகு
முருகு கோடியென முருகு
முருகு மூசுலக முருகு
முருகு ருதுமன முருகு."

என வரூஉம் அந்தாதிமடக்கு, ஒற்றிலாச்செய்யுள் இங்குக் கருதத்தக்கதே. இதன்பொருள் :— "திருவிழாவி லுலாவும் நல்ல இளமைப்பருவமுடைய முருகென்னுந் திருப்பெயருடையாய்! (என்னைக்) கொள்வாயாக என்று மலர்களின் மணமும் அழகும் மொய்க்கின்ற வுலகத்திலே துன்பின் உருகுகின்ற பிறப்பானது (இன்னும்) பொருந்தாமல் மனமே உருகுவாயாக." என்பதாம். (உருகம் உருகென்றாயது. உருகம் = பிறப்பு.)

குகேசனுடைய பலப்பல திருப்பெயர்களுட் சுப்பிரமணியம், குமாரபிரான், முருகன், சிவபாலன் என்பன — மறைந்துள்ள பரசிவப் பொருளினின்று வெளிப்பட்டு மிளிர்வதென்னும் பொருளைப் பயக்குமென்பது சக - முதல் இச்செய்யுள்காறும் பெற்றாம். குமாரனென்னுந் திருப்பெயர் பிறிதொரு விசேடார்த்தமும் பயக்குமென்பது கருதி "அவனேண்வலியின்விறல் மின்னும்பெற்றி விளக்குங் குமாரப்பேர்" என்றார். விவரம் அடுத்தசெய்யுளிற் கூறியுள்ளார்.

'இன்னவா' என்பதில் ஆ - ஆறு என்பதன் விகாரம். இன்ன - இகரச் சுட்டடியாப்பிறந்த பெயரெச்சம்; ன் - சாரியை, ன் - சந்தி. குவ்வுருபை ஐயுருபாகத் திரித்துக்கொள்க. 'முருகன் சிவபாலனென்று பன்னுவார்' என மாறுக. 'மின்னுங் குமாரப்பேர் ஏண் விறல்வலியின் பெற்றி விளக்கும்' என இயையும். ஏண் = நிலைபேறு; "ஏணே நிலையுடைமை." என்பது சே - திவாகரம். 'பெற்றியை' என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் றொக்கது. பேர் - பெயர் என்பதன் மரூஉ. (சகு)

### குமார நாமார்த்தம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

குவ்வெனுங் குற்சிதம் மாமலங்
கொன்றருள் செய்பவன் மாரனென்
றெவ்விடு மர்த்தம தாமவை
யொன்று நுவற்சி குமாரனென்
றுவ்வுளர் நாவி லெழும்பவே
யுள்ளது சந்தத நன்னிலைப்

பவ்வமெ னுங்கும ராவெனப்
பன்னுநர் பாசறை பாறுமே.

கு - என்னுங் குற்சிதம் மலமென்னும் அருத்தத்தி னுளதாம். மாரன் - (என்பது அம்மலத்தை) அழித்தருள்பவனென்று பொருந் தும் அருத்தத்தி னுளதாம். அவ்விரண்டும் பொருந்திய தொடர் மொழியே குமாரனென்னும் பெயரெனத் தபோதனருடைய நாவி னிற் றோன்றவுள்ளது. (அங்ஙனமே) பிரமானந்த வாரிதியெனப் படுங் குமாரா! என்று துதிப்போருடைய துன்பம் நீங்கும்.

(கு-ரை:) குமாரன் என்னும் வடமொழிப்பெயர் கு+மாரன் எனப் பிரியுமிடத்துக் கு = குத்ஸிதம், அருவருப்பு எனவும், மாரன் = அழிப்பவன் எனவுங் காரணப்பொருள்படும். படுமாற் றானே குற்சித மல மாயா கன்மங்களென்னும் பாசத்தை அழித் தருள்வோனென்பது குமாரனென்பதன் அருத்தம் என்பது தோன்ற "அவை ஒன்று நவற்சி குமாரன்" என்றுரைத்தார். இவ்வா றுரைத்தவாசிரியர் இத் திருப்பெயர் பொருந்த நித்தியானந்தக் கட லெனப்படுங் குமாரா! என்று விளித்துத் துதிப்பவர் துன்பம் நீங்கு மென்பதுந் தோன்றவே "சந்தத நன்னிலைப் பவ்வமெனுங் குமாரா வெனப் பன்னுநர் பாசறை பாறும" என்றுரைத்தார் என்க. இவ் வாறு துதித்தல் "அழிவிலா வானந்த வாரி போற்றி" எனத் தமிழ்மறைக் கண்ணும் பெறப்படுகின்றதன்றோ (போற்றித்திருவக வல்). போற்றி = வணக்கம். 'மலம்' எனப் பொதுப்படக் கூறுத லானே ஆணவமலம், கன்மமலம், மாயாமலமென்னு மூன்றுங் கொள்ளப்படும். மலம் பாசமெனவும்படும்.

'மலம் ஆம்' என மாறுக. 'அர்த்தமதாம்' என்றதில் அது - பகுதிப் பொருள் விகுதி. உவ்வுளர் = தவமுடையோர்; உவ்வு = தவம். "நோன் பென் கிளவி தான்றவ மாகும்— உவ்வென் கிளவியு மோதுவ ரதற்கே" என்பது பிங்கலநிகண்டு. பௌவம் - 'பவ்வம்' என எதுகை நோக்கிப் போலியாயிற்று. பௌவம் = கடல். பாசறை = துன்பம்; "நடலை கம் பலை செல்லல் பாசறை" என்பது சே - திவாகரம். (௪௬)

சச்சிதானந்தமென்னும் பதத்திலுள்ள சத்து, சித்து, ஆனந்தமென்னு மூன்றிலக்கணமுஞ் சிவம், சத்தி, சுப்பிரமணிய மென்பது.

பொருளுள சத்து நிரந்தரம்
பொருவறு மத்தை யணைந்தவிர்

அருளுறு சித்து நிரம்பிடு
மதிக மதர்ப்பெனு மின்பமும்
ஒருமுக முற்றசொ லின்கண்முன்
னுளது சிவப்பொரு ணள்ளது
திருவுறு சத்திந லந்தரந்
திகழ்வது சுப்பிர மண்யமே.

உண்மையென்னும் அருத்தத்திலுள்ள சத்தென்பதும், சமான மற்ற அச் சத்தினை எஞ்ஞான்றும் நீங்காது தாதான்மியமாய் நின்று பிரகாசிக்கின்ற கருணையுடைய சித்தென்பதும், யாண்டும் நிறைந் துள்ள பேரின்பமென்னும் ஆனந்தமென்பதும் ஒன்றுபட்ட "சச்சி தானந்தம்" என்னுமொரு சொற்றொடரின்கண்ணே முதலிலுள்ள சத்து - சிவபரம்பொருளாம். இடையிலுள்ள சித்து - நலஞ்சிறந்த சத்தியாம். ஈற்றிற்றிகழ்ந்துள்ள ஆனந்தம் - சுப்பிரமணியமாம்.

சிவம் சத்தென் றோதப்படுதலை —

(ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்)

" ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் "

என்னுஞ் சாந்தோக்யோபநிஷத்தின் ௬ - ஆம் பிரபாடகத்து வச னத்தி னறிக. பொருள் :— " சோமியனே! இதற்குமுன் ( = பிர பஞ்ச சிருட்டிக்கு முன்னே) அத்விதீயமா யுள்ளபொரு ளொன்றே யிருந்தது : அது (ஸத்) சத்தே" எனவாம். இச் சத்து— சிவபரம் பொருளே யென்பதை,

(புருஷோவைருத்ரஸ் ஸந்மஹோநமோநம: ।)

" புருஷோவைருத்ரஸ் ஸந்மஹோநமோநம: । "

என்னுந் தைத்திரீயாருணசாகை நாராயணவசனம் வலியுறுத்து தலு மறிக. பொருள் :— "புருடனுவான் மகானாகிய சத்தெனப் படும் உருத்திரனே; நமற்காரம்! நமற்காரம்!!" எனவாம். சிவ சத்தி சித்தென் றோதப்படுதலை, (ப்ரஜ்ஞாநம்ப்ரஹ்ம) "ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம" என்னும் ஐதரேயாரண்யகோபநிஷத் வசனத்தி னறிக. பொருள் :— "பெரிய ஞானமே சொரூபமாகவுள்ளது பிரமம்" என வாம். இங்கே ஞானமெனப்பட்டதே அந்தச் (சித்) சித்து. ஞானம் சிவசத்தி யென்பதனை (ஜ்ஞாநாநாம் விநயாதீதா) "ஜ்ஞாநாநாம்

சின்மயாதீதா '' என்னும் அதர்வணவேத தேவ்யுபநிஷத் வசனத்தி னறிக. சுப்பிரமணியம் ஆனந்தமென் றோதப்படுதலை (ஆநந்தம் ப்ரஹ்ம) '' ஆநந்தம் ப்ரஹ்ம '' என்னுந் தைத்திரீயோபநிஷத்தின் ஆநந்தவல்லி வசனத்தானும்,

(ததா தேவோ மிதாநந்தோ ஹ்யங்கஸ்பர்ஶாம்ருதாம்புதி ।
ஆநந்தாப்தௌ ஸ்வயோஸ்ஸூநோ ரகாதேஹி மமஜ்ஜஹ ॥
ததாதேவோமிதாநந்தோப் யங்கஸ்பர்சாம்ருதாம்பவி ।
ஆநந்தவிந்தோஸ்ஸத்ஸூநோ ரகாதேஹிமமஜ்ஜஹ ॥)

(குமாரன் மகாதேவனது தோண்மிசை யேறி யிருந்தனன் ;) '' அஞ்ஞான்று மகாதேவன் அளவற்ற ஆனந்தசொரூபியாயினும் தன்னுடைய உத்தம புத்திரனும் ஆனந்த சாகரத்தினது திருமேனி பரிசித்தலாய அளப்பறு மகிழ்ச்சோதகத்திடை அமிழ்வாறாயினன் '' என்னும்பொருளைத் தரத்தக்க ஸ்காந்தமஹாபுராணத்தின் சம்பவ காண்டத்து ௩௨ - ஆம் அத்தியாயத்து ௫ - ஆஞ் சுலோகத்தானு மறிக. இச் சத்து, சித்து, ஆனந்த மென்பனபற்றி இன்னுமறிய வேண்டிய பிரமாணங்களும், இவைபுகளும் பரிபூரணானந்தபோதப் பாயிரத்து ௨ - ன் உரையிலுள்ளன ; காண்க.

பொருள் = உண்மை ; ரகரவெதுகை காண்க. 'பொருவறும் அத்தை நிரந்தர மணைந்து' எனவும், 'நற்றிருவுறுசத்தி' எனவு மியையும். நள்ளது = நடுவிலிருப்பது ; நள் = நடு. அந்தரம் = ஈறு ; நகரவெதுகை காண்க. (௬௭)

ஆனந்தம் பிரமமென்ற சுருதியின்படி
அது, சுப்பிரமணிய மென்பது.

பூரண சுகவதி யின்பமே
பூரண பிரமம தேயென
ஆரண நுவல்வண மின்சுக
மாமொரு முருகிறை யென்றுணர்
காரண முதல்வன வன்முது
சுபாவ மிலைமறை காயெனே
தாரண திரிவித மென்பன
சாரடி நடுமுடி போலுள.

பூரண சுகமாகிய பேரானந்தமே சருவ வியாபகப் பிரமம் என்று வேதம் விளம்புகின்றபடி, ஒப்பற்ற முருகக்கடவுளே (அந்த)

இனிய சுகசொரூபமாமென் றுணர்வாயாக. காரணங்கட்கெல்லாம் முதல்வனுன அவனது பழைய இயல்பு (யாது? எனின் அஃது) இலைமறைகாயைப் போன்றதென்று சொல்க. உறுதியாயுள்ள (அந்தச்) சத்து, சித்து, ஆனந்தமென்பன — யாதொரு பொருளிலேய்ந்த அடி, நடு, முடி யென்பன போலவுள.

மேலைச் செய்யுளிற்போந்த இன்பமென்பதே இச்செய்யுளில் 'இன்சுகம்' என அநுவதித்துக் கொள்ளப்பட்டது. இன்பம், இன்சுகமென்பன பேரின்பமெனும்பொருளைப் பயக்குங் கிளவிகள். அச் செய்யுளில் இன்பம் (= ஆனந்தம்) சுப்பிரமணியமென்று கிளந்ததற்கு இச் செய்யுளிற் சுருதிப்பிரமாணங் காட்டினர். அச்சுருதி— மேலைச் செய்யுளுரையில் "ஆநந்தம் ப்ரஹ்ம" என வந்ததேயாம். உரிய உபப்பிருங்கண (புராண) வசனங்களும் அங்ஙனமே வந்துள்ளன. சாந்தோக்யோபநிஷத்தின் எ - ஆம் பிரபாடகத்திலே (ஹூமைவ ஸுகம் - பூமைவ ஸுகம் = ) "பூமாவே ஆனந்தம்" என வருவதையும் உரையிற்கோடலென்னும் உத்தியால் இங்குக் கொள்க. பூமா = அதி உத்தமமானது. காரணங்கட்கெல்லாங் காரணமாயுள்ள ஆனந்தவத்து முருகப்பெருமானுக வெளிப்பட்டு நிற்குமுன் அவனது இயல்பு யாதெனக் கடாவி நிற்பாரது ஐய மொழித்தற் பொருட்டு "அவன் முது சுபாவம் இலை மறைகாய்" (என் = ) என்று சொல்க எனச் சீடற்கு ஆசிரியரறிவுறுத்தினமையின், அப்பெருமான் எஞ்ஞான்று முள்ளவனே யென்பதும் பெற்றும். இப்பேற்றிற் கேற்புடையதாகவே (மகாருத்திரனுடைய நெற்றிக்கண்களினின்று வெளிப்பட்டுள்ள அப்பெருமான் முற்போந்த மகாசிருட்டி காலத்தில்) மகேசுரனது இருதயத்தினின்று வெளிப்பட்டவனென் றுலகமுணருமாறு —

(ஷண்முகோஹ்ருதயே ஜாதோ)

"ஷண்முகோஹ்ருதயே ஜாதோ"

என்னும் வசனமும் வாதுளாகம சுத்தாக்ய தத்வபேத படலத்தே காணப்படுகின்றது. ஞானயோகிகளுடைய சுவானுபூதியில் வெளிப்படுமுன் உள்ளவியல்பிற்கும், சிவபெருமானது திருமேனி வாயிலாகத் தடத்தலக்கண மூர்த்தியாய் வெளிப்படுமுன் உள்ளவியல்பிற்கும் இலைமறைகாய்உவமை பொதுவாகக் கொள்ளத்தக்கது.

'பிரமமே' என்றதில் அது - பகுதிப்பொருள்விகுதி; ஏ - அசை. 'ஒரு முருகிறை இன்சுகமாம் என்றுணர்' என வியைத்துரைக்க. முருகு என்பதன் பொருள் சுடு - ன் உரையிற் சொல்லியாயிற்று. எனே — ஏ - அசை. (சஅ)

**சச்சிதானந்த தத்துவம் பதக்கப்படாதது; ஆனந்தப் பிரமமே சுவானுபூதிப்பொரு ளென்பது.**

மூவகை யென்று மொழிந்தவை
மூடக லங்கன நீளமென்
றுவது றழ்ந்து பிறங்கிடு
மாகலி னொன்றென நின்றிடும்
கூவிய மைந்த னகந்தைவெல்
கூட லெனுஞ்சுக வாய்வரும்
ஏவமி லின்ப வரும்பொரு
ளீதல தொன்றிலை யென்றுணர்.

மேலே, மூவகையென்று எம்மாற் சொல்லப்பட்ட அந்தச் சத்தும், சித்தும், ஆனந்தமும் — யாதொரு பொருளில் வியாபித்திருக்கும் அகலந்தையும், கனத்தையும், (கணிக்குங்கால்) நீளமெனப்படுவதையு மொத்துப் பிரகாசிக்குமாகலின் அம் மூன்றும் ஒரு பொருளென நின்றிடும். சற்புத்திரமார்க்கத்தி னின்றுகொண்டு பிதாவே! என ஓலமிட்டழைக்குஞ் சொல்லையுடைய புத்திரனது சீவ போதத்தினை வெல்லுங் கூடல் (= நிட்டை) என்னுஞ் சுக நிலைக்களத்தே வெளிப்படும் துன்பமில்லாத ஆனந்தப்பிரமம் இது வேயன்றி வேறொன்றின்றென அறிந்துகொள்.

மேலேகூறிப் போந்தவாறு பரம்பொருளின் இலக்கணம் சத்து, சித்து, ஆனந்தமென மூத்திறப்படுதலின் அவை, வேறுவேறு யிருப்பனவல்ல வென்பதை யுணர்த்துவான் மேலைச் செய்யுட்கண் "அடி நடு முடி போலுள" என்பது கூறப்பட்டது. ஒரு பொருளிலே யுள்ள அவ்வடி நடு முடி யென்பன மூன்று கண்டமாக ஆக்கப்படினும் படுமே, அவ்வாறு பரம்பொருளும் ஆக்கப்படுங்கொலோ? என்னு மாசங்கையை நீக்குதற்பொருட்டு இச் செய்யுட்கண் அகலம், கனம், நீள மென்னும் உவமானத்தைவைத் துரைப்பாராயினர். அகலம் முதலிய மூன்றிலக்கணமுமே யாதொரு பொருளா யிருக்கின்றபடி சத்து முதலிய மூன்றுமே பரம்பொருளாயிருக்குமென்

பதூஉம், அகலம் முதலிய மூன்றுஞ் சொன்மாத்திரையாய் உருமாத்திரையாய்ப் பிரிக்கப்படுமாறு சத்து முதலிய மூன்றும் பிரிக்கப்படுமென்பதூஉம், அவ்வாறு பிரிக்கப்படினும் பொருண்மாத்திரையாக அகலமுங் கனமும் நீளமும் வேறுபடுவன வல்லவென்ப தறியக் கிடக்குமாறே அச் சத்து முதலிய மூன்றும் பொருண்மாத்திரையாக வேறுபடுவனவல்ல வென்ப தறியக்கிடக்கின்ற தென்பதூஉம் இங்ஙனம் பெறப்படுவனவாம். பரமாணுமுதற் பிரமாண்டம் இறுவாய்க் கிடக்கின்ற பொருள்களெல்லாம் அகலம் முதலிய மூன்றுமாகவே யிருத்தலினாலும், உவமானத்திற் கெடுத்துக்கொளப்படும் எப்பொருளும் இம் மூன்றின்பாற் படுதலினாலும் வியாபகமாயுள்ள இவ் வுவமானம் உவமானங்களின் தெய்வமேயாம். ஆகலினன்றே அகலங் கன நீளம் என வாளா கூறாது "மூடகலங்கன நீளம்" என அடைமொழிகொடுத் தோதினார். மூடு அகலம் - வினைத்தொகை. மூடுதல் - ஈண்டு வியாபகத்தின்மேற்று. சச்சிதானந்தவுண்மை பிரிக்கப்படாத தென்பதற்குச் சிலராலெடுத்துக் காட்டப்பட்ட மலர், நிறம், மணமென்னு மூவமானம் இனிது பொருந்துமாறின்று. என்னை? மலரினின்றும் மணம் பிரிந்துபோத லறியப்படுதலின்; அகலம் முதலியவற்றின் வியாபகமனைய வியாபகம் இன்மையின். இத்திறத் தோடம் ஒன்றும் பலவுமாக வேறுபல வுவமானங்களினு மெய்தும். சொரூபலக்கணத்துள்ள சத்துஞ் சித்தும் நிரமலே தேவனுந் தேவியுமெனத் தடத்தலக்கணப்படிற் சொரூபலக்கண ஆனந்தங் குமாரமூர்த்தியெனத் தடத்தலக்கணப்படுமென் றீண்டறியக்கிடக்குமோருண்மையில் அவ்வாறாய அம் முத்திற வடிவுகளும் பிரிவு காட்டாவோ? எனின்,— காட்டா. என்னை? மேற் கருதிக்கிளந்தவாறு அவ்வகலம் முதலிய மூன்றுஞ் சொன்மாத்திரையாய் உருமாத்திரையாய்ப் பிரிவெய்தினும் பொருண்மாத்திரையாய்ப் பிரிவெய்தாமலிருக்குமாறு அச்சத்து முதலிய மூன்று மிருக்குமாகலின். பல மணிகளில் ஒரு நூலே புக்கிருத்தல்போலப் பிரணவமாயுள்ள அம் மூன்று திருமேனியிலும் அந்தச் சச்சிதானந்த பரமான்மா வொன்றே யிருக்கின்றதென்று பிறிதோ ருவமான வாயிலாகவும் அந்நிலையினுண்மையை யுணரலாம். சிவனைப்பற்றி —

(ஶிவாதிஶிவஸ்வரூபஜ்ஞ ஸச்சிதாநந்த லக்ஷண ।
உமாரமணஸம்ப்ரேதஸ ப்ரஸீத காருணாநிதே ॥)

"தேவாதிதேவஸர்வஜ்ஞ ஸச்சிதாநந்தலக்ஷண ।
உமாரமணபூதேச ப்ரஸீதககுணாநிதே ॥"

என்று சுகரஹஸ்யோபநிஷதங் கூறுவதூஉம், குமாரனைப்பற்றி ஸ்காந்தமஹாபுராணத்தின் சம்பவகாண்டத்து ௨௯ - ஆம அத்தியாயம் —

(𑌇𑌤𑌿 𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑍇𑌕𑌮𑌮𑌿𑌤𑌂𑌵𑌚𑌸𑌾𑌂 𑌮𑌨𑌸𑌾𑌮𑌗𑍋𑌚𑌰𑌮𑌨𑌨𑍍𑌤𑌸𑍌𑌖𑍍𑌯𑌮𑍍 ।
𑌶𑌿𑌶𑍁𑌭𑌾𑌵𑌮𑍇𑌤𑍍𑌯𑌸𑌮𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌿𑌮𑌤𑍍 𑌸𑌮𑌲𑌞𑍍𑌚𑌕𑌾𑌰𑌶𑌿𑌵𑌯𑍋𑌸𑍍𑌸𑌵𑌿𑌧𑌮𑍍 ॥

இதிஸச்சிதைகமமிதம்வசஸாம் மநஸாமகோசரமநந்தஸௌக்யம் ।
சிசுபாவமேத்யஸமலங்க்ருதிமத் ஸமலஞ்சகாரசிவயோஸ்ஸவிதம் ॥)

"வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத அநந்தாநந்த சச்சித் (பரப்ரஹ்ம) வத்துவானது இவ்வாறு அதிபலங்காரமான ஒரு குழவித்தன்மை (= குமாரப்பான்மை) வகித்து ஸ்ரீபார்வதி பரமேசுவரர்களின் பக்கலினின்று பல திருவிளையாடல்கள் புரிந்து அலங்கரித்து வந்தது"

என்னும் பொருளை (௯ - ஆம் வசனத்தில்) நல்குவதும் ஈங்குத் துணிந்துரைக்குமொரு நிச்சயத்தினை வலியுறுத்துவனவாயுள. ௪௪ - ன் உரையுழைப் பிரமாணவாயிலாகக் காட்டப்பட்ட ஸோமாஸ்கந்த மூர்த்தத்தையும் இப்பிரிவின்மைபற்றிக் கருதிக்கொள்க.

"கூவிய மைந்த னகந்தைவெல் கூடலினுஞ்சுக வாய்வரும் எவமி லின்ப வரும்பொருள்" என்று கூறினமையின், புத்திரமார்க்கத்துள்ளோன் சகமார்க்க நிட்டையினை நன் கெய்து முன்னை பரமபிதாவாகிய முதல்வனை நேடி ஒலமிடுபவனாகவே யிருப்பனென்பதூஉம் பெற்றாம்.

மொழிந்த அவை என்பது 'மொழிநதவை' எனப் பொருந்திற்று. அகலத்தையும் கனத்தையும் நீளமென்றூவதையும் என உருபுகளும், சாரியைகளும், உம்மைகளும் விரிக்க. கூவு + இய = கூவிய. கூவுதல் = அழைத்தல். இயம் = சொல்; யகரவேதுகை காண்க. தன்பமென்னும் பொருளில் வரூஉம் எவ்வம் 'ஏவம்' என எதுகைநோக்கி விகாரப்பட்டது. (௬௯)

**மறைந்து நிறைந்த பொருள் சிவம்; சுவாநுபூதிப்பொருள் குமாரனென்பது.**

யாதொரு சீவ னரும்பர
ஞானமி லாம லிருஞ்சக

ஆதர மாயையி னின்றகா
　　ளுடவொ ளுவுண் மறைந்துள
தேதகை யார்சிவ மெண்பதி
　　யாதொரு சீவ னறிந்தகால்
கோதற வேநனி கண்டவிண்
　　கொள்கும ரேசுர னென்றுணர்.

யாதானுமொரு சீவன் அருமையாகிய பரஞானமில்லாமல், (இந்தப்) பெரும்பிரபஞ்ச வாஞ்சையாயுள்ள மாயையிற் கட்டுண்டு நின்ற அவசரம், அச் சீவனறியக்கூடாத வுட்புலத்தே மறைந்திருந்த பரம்பொருளே பெருமையார்ந்த சிவமென்று சொல்லப்படுவது. யாதானுமொரு சீவன் ஞானநேத்திரம்பெற்றுச் சுட்டியறியாதறிந்த அவசரம், குறைவற நன்கு தரிசிக்கப்பட்ட ஆகாயம் ஆண்டுகொள்ளுங் குமாரேசனென் றறிந்துகொள்.

பிரபஞ்சம் எதன்கட் டோன்றி யெதன்கண் ஒடுங்குமோ அது 'மாயை' எனப்பட்டது. மா = உற்பத்தி; யா = இலயம். மாயா என்னும் வடமொழியை மாயை என்பது தமிழ்வழக்கு. பரவத்து ஊனக்கண்ணிற்குப் புலப்படாதிருத்தலின் அது மறைந்திருக்கும் பொருளென்பது உண்மையே. இங்ஙனமே சுருதியும் —

" இவன் எல்லாப் பூதங்களகத்தும் மறைந்து பிரகாசியாதிருக்கின்றனன் " என்றோதுவதாயிற்று. இதற்குரிய (கடோபநிஷத்) வடசொற்களை முற்காண்டத்துப் கச - ன் உரையுழைக் காண்க. அங்ஙனமே பிரமாணிக்கப்பட்ட —

" விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான் "

என்னுந் தமிழ்மறை மொழிகளையுங் கருதிக்கொள்க.

(𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌰𑌣𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌰𑌣𑌿𑌮𑍍 ।
𑌧𑍍𑌯𑌾𑌨𑌨𑌿𑌰𑍍𑌮𑌥𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌦𑍇𑌵𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌨𑍍𑌨𑌿𑌗𑍂𑌢𑌵𑌤𑍍 ॥ )

" ஆத்மாநமரணிம்க்ருத்வா ப்ரணவம்சோத்தராரணிம் ।
த்யாநநிர்மதநாப்யாஸாத் தேவம்பச்யேந்நிகூடவத் ॥ "

என யஜுர்வேத பிரஹ்மோபநிஷத்திலும், ஸாமவேத தியாநபிந்தூபநிஷத்திலும் வரூஉஞ் சுலோகமும் இந் நிச்சயத்தைக் காட்ட

வுளதே. பொருள்:— "ஆன்மாவைக் கீழரணியாகவும், பிரணவத்தை மேலரணியாகவுங்கொண்டு கடைதலாகிய தியானப்பியாசத்தினுன் மறைந்து நின்றதை வெளிப்படக் காண்பன்" எனவாம். இப்பொருள் சுவேதாச்வதரோபநிஷத்திலும் பெறலாம். மறைந்த பொருளை அனுபூதியிற் காணலாமென்பதற்கும் இங்கே காட்டப் பட்ட காட்டுக்களும்,

> "'செறிவற் றுலகோ டுறைசிந் தையுமற்
> றறிவற் றறியா மையுமற் றதுவே'
>
> 'உருவன் றருவன் றுளதன் றிலதன்
> றிருளன் றொளியன் றெனநின் றதுவே'"

என (அருணகிரிநாதப் பெருமான்) அனுபூதியின் வெளிப்பட்ட வாக்குக்களும்,

(गुहायागतयत्सर्वं हृद्गुहस्थाययोगिनाम् ।
स्थितः ।)

குஹாயாகதயத்ஸர்வம் ஹ்ருத்குஹஸ்தாயயோகிநாம் । ஸ்தித ॥

"யோகிகளுடைய இருதயாகாசத்தில் விளங்கிக்கொண்டிருக்குங் குகனாகிய பிரபு" என்று சூதமாமுனிவர் கூறுங்கூற்றாக வரும் ஸ்காந்தமஹாபுராணத்தின் சம்பவகாண்டத்து ஈற்று மொழிகளும், அன்ன பிறவும் பிரமாணமா யுள்ளன.

தகை = பெருமை. கோது = குற்றம்; ஈண்டு, குறையென்னும் பொருள்பட நின்றது. இவ்வாறன்றி "யாதானுமொரு சீவனானது தனது களங்கமற ஞானநேத்திரம்பெற் றறிந்தகாலத்தே" என்று பொருள் படுத்துமாறு "யாதொரு சீவன் கோதற அறிந்தகால்" எனக் கூட்டின் அக்கோது குற்றமெனும் பொருளையே பயப்பதாம். (कुमारेश्वरः) குமாரேச்வரன் என்ற வடமொழிப்பெயர் 'குமரேசுரன்' எனச் சந்தநோக்கி விகாரப் பட்டது. (௫0)

ஞானிகளுட் சிதாகாச முருகனைத் தரிசியாதாரிலர்;
அவனை யடைதலே முத்தி யென்பது.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

> சருவ பூரண சிதம்ப ரத்திலருள்
> சால்கு கேசனெனு முருகனைக்

கருதி யேதரிசி யாத மெய்யறிவர்
கால மூன்றுமுள ரோவிலர்
அருவ முஞ்சொலவொ ணுவ தீதபர
மாய சங்கவிரி வாயவிர்
முருக ஞோடணவி யுய்வ தேபரம
முத்தி யென்றவொரு சித்தியே.

சருவ வியாபகமாகிய சிதாகாசத்தில் அருள்சான்ற குகேச னென்னும் ஆனந்தப் பிரமத்தைத் தியானித்துத் தரிசியாத ஞானிகள் முக்காலங்களினு முளரோ? இல்லாதவரேயாகிறுர். அருவத் திருமேனியும்வைத் துரைத்தற்குக் கூடாத அதீத பரமாய் ஏக வியாபகமாய் அவிர்கின்ற (அந்த) ஆனந்தப் பிரமத்தோடு அனன்னியமாகப் பொருந்தி வாழ்தலே (வேதம் முதலிய நூல்களில்) மேலான முத்தியென் றுரைக்கப்பட்ட ஆன்ம லாபமாம்.

அருவமும் என்னும் உம்மையால உருவத் திருமேனியும், உருவருவத் திருமேனியுஞ் சொரூபலக்கண பரம்பொருட்கு உளவெனச் சொல்லல் பொருந்ாதென்பதூங் கொளக்கிடக்கின்றது. அருவம் முதலிய இத் திருமேனிகளின் விவரம் பாயிரத்து ௬-ன் உரைக்கண்ணேயே உரைத்தாம். சுவானுபூதியில் வெளிப்படும் ஆனந்தப் பிரமம் 'முருகன்' எனப்பட்டது. இக் காண்டத்துப் ௧௬-ன் உரையீற்றிலே "அவ்வனுபூதியிற் பேரின்பமேயல்லாற் பிறிதொன் றின்று" எனத் தெரித்து மேலெடுத்துக் காட்டப்பட்ட பிரமாணங்களையும், ௬௭, ௬௮-ன் உரைகளிற்போந்த ஆனந்தவல்லி, சம்பவ காண்டம், சாந்தோக்யோபநிஷத மென்பவற்றின் வாக்கியங்களையும் இங்குங் கருதிக்கொள்க. "முருகனோ டணவி யுய்வதே பரம முத்தி" என்றது "இறைகளோ டிசைந்த வின்பம் இன்பத்தோ டிசைந்த வாழ்வு" என்னுஞ் சுந்தரப்பெருமானது தமிழ்மறை முடிபாகவு மிருக்கின்றதன்றே.

மூன்றும் - 'மூன்றிலும்' என விரிக்க. அசங்கம் = குழுவின்மை = ஏகம். அவிர் முருகன் - வினைத்தொகை. (௯௧)

அம் முத்தியினையே பலதிறவைக்கிய
மாக விளம்பல்.

ஆகம் வாக்குமன மென்னு மூன்றுமசை
யாச்சு வானுபவ வத்துவாம்

ஏக வேமதக ரால யக்குகனை
யெய்து முத்தியினை யேசிவ
போக வைக்கிய மிலிங்க மென்றவொரு
பொருளி லைக்கிய மகோசர
மாக வைக்கிய மயான சோதியெனும்
வாளி லைக்கிய மெனுவுணர்.

காயம், வாக்கு, மனமாகிய திரிகரணங்களும் அசையாத சுவானுபவ நிலைக்களத்துள்ள பொருளாகிய ஏகானந்த தகராலய குகனை யடையும் முத்தியையே சிவபோக ஐக்கியம், இலிங்கமெனப் பட்ட ஒருபொருளில் ஐக்கியம், வாக்குக்கும் மனத்திற்குமெட்டாத ஆகாச ஐக்கியம், மயானசோதியென்னும் ஒளியில் ஐக்கியம் (எனப் பலதிறப்படக் கூறுவர்) என்று உணர்வாயாக.

"ஆகம் வாக்கு மனமென்னு மூன்றும் அசையாச் சுவானுபவ வத்துவாங் குகனை யெய்துமுத்தி" என்றது —

(𑌮𑌨𑍋𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯
𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌾𑌵𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑍇𑌨
𑌭𑍍𑌰𑌮𑌰𑌕𑍀𑌟𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿)

"மநோவாக்காயகர்மபிஸ்ஸர்வஸம்ஸாரமுத்ஸ்ருஜ்ய
ப்ரபஞ்சாவாங்முகஸ்ஸ்வரூபாநுஸந்தாநேந
ப்ரமரகீடந்யாயேந முக்தோபவதி"

என்னுஞ் சுருதியாகவே யுளது. நாரதபரிவ்ராஜகோபநிஷத்தின் ரு - ஆம் உபதேசத்ததாய இதன்பொருள் :— "மன வாக்குக் காய கன்மங்களின் எல்லாச் சமுசாரமு மொழித்துப் பிரபஞ்சத்தை நோக்காதவனுய்ச் சொரூபானுசந்தானத்தினுற் பிரமரகீட நியாய மாய் முத்தியடைகின்றனன்" எனவாம். பிரமரகீட நியாயம் = குளவி புழு நியாயம்; விவரம் சிவசூரியப்பிரகாசத்தே கூறியுள்ளாம்; ஆண்டுக் காண்க. ஆகம்= காயமாகிய வுடம்பு. இம் மன வாக்குக் காயங்களின் வழியாகவே பாவ புண்ணியங்க ளென்னுங் கன்ம முண்டாதலிற் சுருதியும் அங்ஙனங் கர்மமென்று குறிப்பதாயிற்று. பாவம் தீக்குணமெனவும், புண்ணியம் நற்குணமெனவும் பகரப்படு மாற்றனே கொலைவிரும்பல், காமப்பற்று, பிற ஆசை என்பன மனத் தீக்குணமென்றும்; பொய்புகறல், கோட்சொல்லல், கோபித்துக்

கூறல், பயனிலபகர்தல் என்பன வாக்கின் றீக்குணமென்றும்; களவாடல், வறிதே தொழிலிழைத்தல், சோறல்புரிதல் என்பன காயத் தீக்குண மென்றுங் கழறப்படுமால். உலக வியவகாரங்களினிற்கும் மாந்தர்கள் இத் தீக்குணங்களி லெனைத்தாயினும் பொருந்தாதிரா ராகலின் அன்னோருள் விவேகிகளாயுள்ளார் கடவுளையுங் கடவுட் பேறுடையாரையுந் தொழுதுநிற்றல் கைங்கரிய முஞற்றன் முதலிய நற்கன்மங்களாற் காயத் தீக்குணத்தாலுற்ற பாவத்தையும், கடவுளைத் துதித்தல் கடவுளது திருநாமத்தைச்செபித்தன் முதலிய நற் கன்மங்களால் வாக்கின் றீக்குணத்தாலுற்ற பாவத்தையும், கடவுளைத் தியானித்திருத்தல், தவப்பற்றுடைமை முதலிய நற்கன்மங்களான் மனத் தீக்குணத்தாலுற்ற பாவத்தையு மொழித்துக்கொள்வார்கள். இந் நற்கன்மங்களை நாளுஞ்செய்வோர் நாளுந் தூய்மையாளராயே யிருப்பரென்பது திண்ணம். இந் நியதியான முடிபு —

"உரையினில் வந்த பாவ முணர்நோய்க ளும்ம
செயறீங்கு குற்ற முலகில்
வரையினில் லாமை செய்த வவைதீரும் வண்ண
மிகவேத்தி நித்த நினைமின்"

எனவரு ஞானசம்பந்தப்பெருமானது திருவாக்கினும் பெறப்படுகின்றது. இது, திருநாரையூர்ப பதிகத்தது. இத் திருவாக்கில் 'உரையினில் வந்த பாவம்' 'உணர் நோய்கள்' 'செயல் தீங்கு' என்பனவற்றான் முறையே வாக்கினாலுற்ற பாவமும், மனத்தினாலுற்ற பாவமும், காயத்தினாலுற்ற பாவமு மறியக் கிடக்கின்றன; காண்க. இம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் அசையாதிருக்கு நிட்டையில் வெளிப்பட்டுநிற்பது சுவானுபவப்பொருளாகலின் "மூன்று மசையாச் சுவானுபவ வத்து" என்றார். "ஏக ஏமம்" என்றது —

(ஏகரஸ ஆநந்தம்)

"ஏகரஸ மாநந்தம்"

என்னும் ஸர்வஸாரோபநிஷத வாக்கியமா யிருக்கின்றது. (ஏகாத்மப்ரத்யயஸாரம்) "ஏகாத்மப்ரத்யயஸாரம்" (= ஏக ஆன்மானந்தம்) என்னும் மாண்டூக்யோபநிஷத வாக்கியமும் அதுவன்றோ. ஏமம் = இன்பம். இன்பம், ஆனந்தம், இரசம், சாரம் என்பன ஒருபொருண் மாற்றங்கள். ஆனந்தப் பிரமத்தையடை

யும் முத்தியே சிவபோக ஐக்கியம், இலிங்க ஐக்கியம், (ஞான) ஆகாச ஐக்கியம், சோதி ஐக்கியமென்று சொல்லப்படுமெனற்கு அடியிற் காட்டப்படுஞ் செய்யுள்களிலுள்ள திருப்பெயர்கட் குரியார் சான்றாயிருக்கின்றனர்.

"தேசிகனூர் சொற்றமறை யறைகின்ற வாறுபுலாற் றேகம் விட்டுப்
பேசரிய முத்திபெற லுண்டெனற்குப் பெருமிழலைக் குறும்பர் நீறு
பூசிமென் பேறுதி மெய்ப்பொரு டகீசிமுனி போற்பல் லோருங்
காசினியிற் கரியென்று கழறுவார் சன்மார்க்கர் கதிர்வே லோனே.

வேலுடைச் செம்மா அல் வித்தகக் கடா அல்
இரைதே டுவதோ டிறையுந் தேடியர்
மதியுடை யாருள் வதிதருந் திருவே
என்னக வடிகே ளிரும்பர வெளியை
மரீஇய தற்கு வாதவூர் முனியும்
மோதமிக் குளசுக முனிவரு முளரே
ஆசறு சோதி யடைந்த தற்கால்
அமணர் சிங்க மாதியெண் ணிலரும்
பத்திர கிரியொடு பலரு முளரே
சிவலிங்க வைக்கியஞ் சேர்ந்த கரிக்குப்
புரைதெறு மப்பர் போற்பல ருளரே
தாவறு பெற்றான் சாம்பா னென்பான்
உருநீ ருகி யுற்ற திறம்போற்
பலவா கிளக்கும் பனுவலும் பலவே."

இவை, இந்நூலாசிரியரது கந்தர்நான்மணிமாலையுழிப் ௧௫, ௧௬ - ஆம் பாட்டுக்களாயுள. 'ஐக்கியம்' என்பது விருத்திலயம்; அது மனோலயம், சீவபோதவொடுக்க மெனவும், இந்த இலயமுற்றுச் சுவானுபூதியினை யெய்தாமே மலத்திற் கட்டுண்டிருந்த ஆன்மாத் தனது கண்டிப்பு நீங்கி அருளிலழுந்தி ஒன்றிரண்டெனற் கியையாச் சுத்தாத்துவித சித்தியி னிற்றலெனவும், அதனை யடைதலெனவும் அருத்தமாம். வேதாகமாதி நூல்கள் ஐக்கியங்கூறு மிடந்தோறும் இந்த அருத்தமே யல்லாமல் என்றும் அத்துவிதமாயுள்ள சிவனுஞ் சீவனுங் கலத்தலென்பது அருத்தமன்று. இதுபற்றி மேற்கோள்களோடுணர விழைவது பரிபூரணானந்தபோதத்தின் முற்படலத்து ௧௦௬ - ன் உரைபடித் தறிக. ருக்வேத நிர்வாணோபநிஷத் —

(மாயாமமதாஹங்காரதஹநம் ஸம்ஸாரே ।)

"மாயாமமதாஹங்காரதஹநம் ச்மசானே ।"

என நீவாதுகின்றபடி மாயாகாரிய மமதை, அகங்கார மென் பன தகனஞ் செய்யப்படு நிலைக்களமே மயானமெனப்படும். ஆண்டு, அவையற்றைத் தகிக்கும் ஞானமே சோதியாம். இச் சுருதிக்கு —

"கடல்விட நுகர்ந்த தொல்லைக் கடவுள்பின் னழிக்குங் காலை
உடலுயி ரகிலம் யாவு மொடுங்கிய விடம தன்றே
சுடலைய தாகு மந்தச் சுடலைகா ணனைய சோதி"

என முதல்வன்புராணத்தில் வருஉந் தொடர்பு உபப்பிருங்கண மாகவே யுளது. இதன்கண் அகிலமென்றது உலகம். உடலென் றது மமதை. இவ் விரண்டுமே மாயாகாரியம்; உயிரென்றதே அகங் காரம் என்க. இம் மயானப் பிரபாவம் ஆசிரியராலுங் கூறப்பட்ட தென்பது வருஞ்செய்யுளிற் பெறலாம். இம் மயானவொளியில் ஐக் கியங் கூறினமையால் இதனையடையாத ஆன்மாக்களுள் ஒவ்வொன் றும் உலகில் இறந்திறந்து பிறக்குந்தன்மையின் எய்து மெண் ணிறந்தவுடம்புக ளெண்ணிறந்த மயானங்களை யடையுமென்பதூஉம் பெறுதும்.

'தகராலயக் குகன்' என்பதில் வன்மை மிக்கது; "விலகு பூதக்கணம்" என்புழிப்போல (திருந்துதேவன்குடித் தேவாரம்). எகாரம் பிரிநிலையெனி னுந் தேற்றமெனினு மொக்கும். (ஷோ௱) போகம் என்னும் வட சொல் சுகம், ஆனந்தமென்னும் பொருள்பயக்கும். மாகம் = ஆகாயம். வான் = ஒளி. (௧௨)

இங்ஙுரைக்கப்பட்டது தகராகாச நாயகமான
தகப்பிரமத்தினது நிட்களநிலையே; இனிச்
சகளநிலை சாற்றுதுமென்பது.

பசுவை மந்தமது பண்ணு நான்மமதை
பல்கு தத்துவ மனைத்தையும்
அசல ஞானவெரி யாலெ ரிக்கும்வன
மாம்ப ரம்பர சிதம்பர
பசுப திப்பெய ரிலங்கு ஞானசுக
பானு வாங்குக பரத்தினோர்
சுசிசி றந்தநிலை யீண்ட திர்த்ததறி
சொல்லு துஞ்சகள நிலையையே.

சீவனதறிவை மக்கினப்படுத்தாநின்ற அகங்காரம், மமதை யென்னுங் காரியமானது பெருகற்குக் காரணமாயிருக்கும் மாயாதத்துவம் ஆகிய அனைத்தையும் நிலைபேறுயுள்ள ஞானமயானத்தில் ஞானாக்கினியினாலே தகனஞ்செய்யும் பரமமய சிதம்பரபசுபதியென்னுந் திருப்பெயருடைய ஞானாங்கபாவுவாகிய குகப்பிரமத்தினது ஒப்பற்ற பரிசுத்த நிட்களநிலையே இங்ஙனங் கூறப்பட்டது. (இனி, அந்தப் பிரமத்தினது) பரிசுத்த சகளநிலையைக் கூறுகின்றனம்; நீ கேட்டிணர்.

பசுவினதறிவைப் பசுவென் றுபசரித்தார். அகங்காரம் நான் எனப்பட்டது. தத்துவங்கள் மாயை யாதலானும், அவை மாயையின் மல்கு காரியமாய் மமதையோன விருத்தலானும் 'மமதைபல்கு தத்துவம்' என்றார். நான், மமதைபல்கு தத்துவமாயை என்பன வற்றை வனத்தில் (= மயானத்தில்) எரிப்பதாக வியம்புமொரு செய்தி சுருதிமுடியா மென்பதற்குரிய காட்டு மேலைச் செய்யுளுரைக் கண்ணேயே வந்துளது. இருதயாகாசத்திற் பசுவுக்குப் பதியாயிருப்பது குகப்பிரமமாதலின் அது 'பசுபதி' என்னும்பெயர் பெற்றதென்க. இப் பெயர் 'பூதாதிபதி' என்றும வழங்கப்படுமென்பது முற்காண்டத்துப் ௧௦ - ன் உரை படித்தறியலாமன்றே. சகளநிலையினும் மேம்பட்டது நிட்களநிலையாகலின் அதனைச் 'சிறந்த நிலை' என்றார். சகளம் = கலையோடு கூடியிருப்பது. நிட்களம் = கலையோடு கூடா திருப்பது. இவை, முறையே உடம்புண்மையும், உடம்பின்மையு மாகக் கூறப்படும். இவ் விவரத்தினை,

(𑌦𑍇𑌹𑌸𑍍𑌥𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌦𑍇𑌹𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।)

"தேஹஸ்தம்ஸகளம்ஜ்ஞேயம் நிஷ்களம்தேஹவர்ஜிதம் ।"

என்னும் வாதுளோத்தர சுத்தாக்ய தத்வபேதபடல வசனத்தினறிக. "குமாரன் விசுவங்கட்கு அதிதப்பட்டவனுமாயுளான்" என்னும்பொருளில் இக் காண்டத்து ௪௪ - ன் உரையிற் காட்டப்பட்ட சம்பவகாண்டத்து ௩௫ - ஆம் அத்தியாய வசனமும் இங் குரைக்கப்பட்ட நிட்களநிலையை நிலைபெறுத்தும்.

'அனைத்தையும் அசலவனம்' எனவியையும். வனம் - எழனுருபுத் தொகை. வனமாம் — ஆம் - அசை. 'சகள நிலையைச் சொல்லுதும் அறி' என இயைத்துரைக்க. சுசி என்பதைச் சகளநிலை என்பதனோடுங் கூட்டுக. (௫௩)

**முருகனது சகளநிலை.**

சிட்டி யாதிவினை யைந்து ஞற்றுமருள்
 சேர்செம் மாமுகமொ ரைந்துடன்
தட்டின் ஞானசிவ சத்தி யும்மினிது
 சார வாறுமுக வுருவமாய்
மட்டி லிந்த்ரதிசை யாதி நான்குமொளி
 மன்னு மம்பரமு மதமுமாச்
சுட்டு மாறுதிசை நோக்க மாகிநிமிர்
 துய்ய னேமுருக மெய்யனே.

சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங்களை நடாத்தும் அருளார்ந்து சிறந்த செவ்விய ஐந்து திருமுகங்களுடன் குற்றமற்ற ஞான (வித்தியாங் குரை யெனப்படுஞ்) சிவசத்தி முகமும் நன்கு பொருந்த ஆறுமுகத் திருவுருவமாகி, இந்திர திசை (= கிழக்கு) முதலிய திசை நான்கும் ஒளிபொருந்தும் ஊர்த்துவதிசையும் அதோ திசையுமாகக் குறிக்கப்படும் ஆறுதிசை நோக்கமாகி வீற்றிருக்கும் பரிசுத்தமுடையானே முருகனாகிய மெய்யன்.

இங்குரைக்கப்பட்ட ஆறுதிசைகளையும், அத்திசை நோக்கங்களாயுள்ள ஆறுமுகங்களையும் பற்றிய விவரம் பாயிரத்து ௨-ன் உரைக்கட் கூறினுமாகலின் இங்குக் கூறிற்றிலம். இவ் வாறுமுகங்களோடு கூடிய திருமேனியுடைய பரமன் எண்ணில்லாத வடிவங்களைக்கொண்டு எண்ணில்லாத திருவிளையாடல்கள் புரிந்தனனென்பதை ஸ்காந்தமஹாபுராணத்தின் சம்பவகாண்டத்து ௨௧-ஆம் அத்தியாய மியம்புகின்றது.

(அ) (𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌮𑌾𑌯𑌾𑌭𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌰𑍂𑌪 𑌈𑌯𑌤𑍇)

"இந்த்ரோமாயாபி꞉ புருரூப ஈயதே"

எனப் பிருஹதாரண்ய கோபநிஷத்தின் ௪-ஆம் அத்தியாயத்து ௫-ஆம் பிராஹ்மணங் கூறுவதும்,

(ஆ) (𑌸𑍍𑌥𑌿𑌰𑍇𑌭𑌿𑌰𑌙𑍍𑌗𑍈𑌃 𑌪𑍁𑌰𑍁𑌰𑍂𑌪 𑌉𑌗𑍍𑌰𑌃)

"ஸ்திரேபிரங்கை꞉ புருரூப உக்ர꞉" (௨, ௩௩, ௧.)

என ருக்வேதங் கூறுவதும் இங்குக் கருதிக்கொள்ளத்தக்கன.

பொருள்:— (அ) "முதல்வன் (சுத்த) மாயை வாயிலாகப் பலவடி

வங்கள் கொண்டனனெனல் காணப்படுகின்றது" (ஆ) "உக்கிரன் உறுதியாகிய அங்கங்களோடு பலரூப முடையன்" எனவாம். இந்திரனென்பது தலைவனென்னும் பொருளுடைத்து. அக்னிமுதற்கடவுளை யுணர்த்திற்றாகலின் சமன்னோன் அதன்பொருளாவானல்லனென்க. உக்கிரனென்பது எவர்க்கு மடங்கா வொருவன்; உக்கிரனென்னும் பெயரிய வீரபத்திரனாய் நின்றனொருவன்; சூரிய மண்டல நடுவிலிருக்கின்ற வொருவனென்னும் பொருள்கள் பயக்கும். குமாரன் சிவபிரானுடைய ஆறு நெற்றிக்கண்களினின்றும் வெளிப்பட்ட தேஜஸாய்ச் சிசுவாய்க் குமாரப்பருவ முடையனாய் விளங்கினனென்று நூல் நுவறலின், அவனது திருமேனி தோன்றல், வளர்தல், திரிதல் (= பரிணாமம்) முதலிய விகாரங்களுடைத்தெனப் படாதோ? என்னுங்கடா வொன்றெழற்கும் இங்கனிடனின்று; என்னை? முதல்வன் சுத்தமாயை வாயிலாகப் பலவடிவங்களைக் கோடலுண்டென்பது போதர இச்சுருதிகள் கூறியவாறே குமாரன்கொண்ட வடிவங்கள் பலவெனவும், அப்பலவும் ஒவ்வோரற்புத மூர்த்தமாக வெண்ணப்படுவனவேயன்றி ஒன்றின் விகாரங்களாக வெண்ணப்படாவெனவுந் தெளிபோ ருணர்ந்துகொள்வராகலின். சஅ - ல் "இலைமறை காய்" (= இலையில் மறைந்துள்ள காய்) என்றதையும் இங்ஙனங் கருதிக்கொள்க. அந்தத் தேஜஸ் (தேஜஸ்) கோடி சூரியப்பிரகாசமுள்ள காலாக்கினிபோல் விளங்கிற்று என்னும் பிரபாவமானது போந்த சம்பவகாண்டத்து உரு - ஆம் அத்தியாயம் —

(நிராகாக்கோடிஸூர்யாப தேஜஸா காலாக்நிஸந்நிபம் ।)

"நிரகாத்கோடிஸூர்யாபக் தேஜகோலாக்நிஸந்நிபம் ।"

என்று கூறுமிடத்திற் பெறப்படுதலும், குமாரனுடைய அனேகாற்புத பாலலீலைகளைத் தெரிக்கின்ற போந்த உசு - ஆம் அத்தியாயத்திற் குமாரன் அங்ஙனம் மிக்க வயோதிகவடிவினையுங்கொண்டு நின்றனனென்னும் அற்புதம் பெறப்படுதலும் அவ்விடையினை வற்புறுத்தும். நிமித்த மாத்திரையாகவே தோன்றி மறைவனவும் அத்திற மூர்த்தங்களுள் உள வென்க. அத் தேஜஸ் தேஜோமய மூர்த்தமாம். 'கருப்பத் தூறிப் பிறவாதே' என்றற்றொடக்கத்துத் திருப்புகழில் "செகத்திற் சோதிப் பெருமாளே" என வருவதூஉம் அது. ஸ்கந்தனது வரலாறு முதலிய பிரபாவங்களை நன்கு விளக்குங் காரணத்தாலேயே "ஸ்காந்தம்" என்னுமொரு பெயரால் விளங்கு

கின்ற மஹாபுராணத்திற் கூறப்படூஉம் அவனுடைய வரலாற்றிற்கும், மகிமைக்கும் விரோதமாகக் கூறப்படூஉம் எச்சரித்திரமும் எம்மனோர் என்று கொள்ளத் தக்கதன்று.

“ இறைவன் உமையை வதுவை செய்துகொண்ட நாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி தவிரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அவனும் அதற்குடம்பட்டு அதுதப்பானாகிப் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையிற்கொடுப்ப, அதனை இருடிகளுணர்ந்து அவன்பக்கனின்றும் வாங்கித் தமக்குத்தரித்தல் அரிதாகையினாலே இறைவன் கூறாகிய முத்தீக்கட் பெய்து அதனைத் தம்மனைவியர் கையிற் கொடுப்ப, அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக; ஆறு கூறாகி வளர்கின்ற காலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக கொடுத்தநிலையை மறந்து ஆண்டு வந்து வச்சிரத்தான் எறிய, அவ்வாறுவடிவு மொன்றாய் அவனுடனே பொருது அவனைக்கெடுத்துப் பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறாகிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச்சென்றதென்று புராணங்கூறிற்று. இதனைப் ‘ பாயிரும் பனிக்கடல் ’ என்னும் பரிபாடற்பாட்டா னுணர்க.”

எனத் திருமுருகாற்றுப்படையுரையில் நச்சினார்க்கினியரெழுதிய மொழிகளா னறியப்படூஉங் குணமல்லாத செய்திகளும், வேறு புராணேதிகாசாதிகளாய வடமொழி தென்மொழிகளிலுள்ள சிலவும் வாய்மைதழுவா வழுவின்பாற்படு மென்க. அத்தமிழ்ப்புலவரும் மின்மினிமுகத்தே நெருப்புவிழைந்து நிற்பார் போல்வாராயினா ரென்க.

சிட்டி - சிருட்டி என்பதன் விகாரம் தட்டில் = தட்டில்லாத. தட்டு = குற்றம்; டகாரவேதுகை காண்க. ‘ சத்தியும்மினிது ’ என்பதில் ம் - விரித்தல்விகாரம். இந்த்ர - வடநூன்முடிபு. அம்பரம் = திசை; இது ஊர்த்துவதிசையை யுணர்த்துவதாயிற்று ஆ - ஆகவென்பதன் விகாரம். ‘ சுட்டும் ’ என்றதிற் படுசொற் றொக்குநின்றது. (ருச)

நறிய பூகயிலை யரிய மேருகயி
லாய மன்னுபிர மாண்டமா
பொறிக ளுக்குபரி யாய மாபுனித
வப்பி ராகிருத கயிலைமேல்
நெறிசெ யுஞ்சிவ சதாசி வற்கறிவி
னேர்மை சொற்றவனும் வாமையை
மறைவி லாதவொரு வதன மாயணிவி
வந்த தைவதமு முருகனே.

தெய்விக மணங்கமழும் பூலோக கைலாயமும், அடைதற்கரிய மேரு கைலாயமும் நிலைபெற்றிருக்கின்ற பிரமாண்டத்தி லுள்ள பெரிய செல்வங்கட்கெல்லாம் மேலாகிய மிக்க பரிசுத்தம் வாய்ந்த அப்பிராகிருத கைலாயத்தி லெழுந்தருளியிருந்து, தனது ஒழுங்கான கிருத்தியத்தை நடாத்துஞ் சதாசிவனுக்கு ஞானார்த்தத்தை (= பிரணவார்த்தத்தை) உபதேசித்த குருவும, அழகிலே (தனக்கு) ஒப்பாரும் மிக்காரு மில்லாத காரணத்தினால் வாமையென்று சொல்லப்படுஞ் சிவசத்தியை மறைவில்லாதவொரு திருமுகமாகக்கொண்டு பிரசன்னமான தெய்வமும் (அந்த) முருகனை (என்க).

மேலைச் செய்யுளிற் பஞ்சகிருத்தியங்களை நடாத்துஞ் சிவனுடைய ஐந்து முகங்களோடு சிவசத்திமுகமுஞ் சார்ந்தவாறே ஆறுமுகத்திருமேனி யென்றார். அங்ஙனமே சிவனுக்கு அச் சத்திமுக மின்றோவென்னுங் கடாவொன் றெழல்கூடுமென்பது கருதி இச் செய்யுளில் விடையிறுப்பான் புகுந்தவாசிரியர் சிவன்மாட்டு மறைந்திருந்த அம் முகம் குமாரன்மாட்டு வெளிப்பட்டதென்பது தோன்ற "வாமையை மறைவிலாதவொரு வதனமாயணவி வந்த தைவதம் முருகன்" என்றார். கிரிவில்லியாய பரமன் கிரிகுமாரியை நோக்கிக் கூறிய வாய்மையாக —

"நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி யுற்ற"

எனக் கந்தபுராணத்தும், ஸ்காந்தமஹாபுராண சம்பவ காண்டத்து ௬௫ - ஆம் அத்தியாயத்தில் —

"நங் குமாரன் உனது சுவரூபத்தையும், எமது சுவரூபத்தையுங் கொண்டுளோனாகலின் ஆறுமுகனெனப்படுகின்றனன்"

என அ - ஆஞ் சுலோகத்தும் வருமுறைகளானும் இங்குக் கூறிய வுண்மைகளை யுணர்க. இச் சுலோக வடமொழியானது பாயிரத்து உ - ன் உரையிற் றீட்டப்பட்டுளது இவ்வாற்றாற் குமாரனது திருமேனியே சச்சிதானந்த பிரசன்ன பூரண சகளகோலமென்பது பெறப்படுவதாயிற்றால். இது கருதியன்றே தாயுமானசுவாமிகளும் "அஞ்சுமுகங் காட்டாம லாறுமுகங் காட்டவந்த — செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ." என்று திருவாய்மலர்ந் தருளினர். பூலோக கைலாயம் 'பூகயிலை' எனப்பட்டது. இஃது இமயகிரிக்கும் ஏமகூட பருவதத்திற்கும் இடையிலுளதென்று ஸ்காந்த

மஹாபுராண தக்ஷகாண்டத்து ௩௯-ஆம் அத்தியாயம் மொழிகின்றது. இது வெள்ளிமலை யெனவும்படும். முற்காண்டத்து ௩௦-ன் உரையில் மேரு இன்னதென வறிதல்வேண்டுமெனக் கூறினும், அங்ஙனமே மேருகைலாயமும் உளதென்க. இவ்விருதிறக் கைலாயங்களுண் மேருகைலாயமே மேலாகவுளது. இதற்கும் மேலாகவுளதே அப்பிராகிருத கைலாயம். பிரகிருதியைக் கடந்துளதே அப்பிராகிருதமாகலின் அக் கைலாயம்— பிரகிருதிமாயை யாகிய தூலப்பிரகிருதியையும், அசுத்தமாயையாகிய சூக்குமப்பிரகிருதியையுங்கடந்த உம்பரிலேயுள்ள சுத்தமாயையாகிய பரப்பிரகிருதியின் உச்சியில் விளங்கியிருப்பதாம். ஆகலினன்றே வாளா அப்பிராகிருத கயிலை என்னாது "மாபுனித அப்பிராகிருத கயிலை" என விசேடித்தார். புனிதம் = சுத்தம். ௬௬-ன் உரைக்கட் சதாசிவலோகமெனப்பட்டதும் இதுவே. இதன்கணிருப்பன வெல்லாம் மிக்க தெய்வத்தன்மையி னுள்ளனவாம். இதன்மேலாக எவ்வுலகு மின்று என்க. பிரணவார்த்தத்தைச் சிவபெருமாற்கு உபதேசித்த பரமாசாரியன் இக் குமாரனே யென்பார் "சதாசிவற் கறிவினேர்மை சொற்றவனும்" என்றார். 'அறிவினேர்மை' என்றது ஞானசூக்குமமெனவும், அச் சூக்குமம் பிரணவார்த்தமெனவும் பொருள்படும். ஆதலினன்றே —

"அறிவை யறிவது பொருளென வருளிய— பெருமாளே"

என்று ('குமரகுருபர குணதர நிசிசரர்' என்றற் றொடக்கத்துத்) திருப்புகழிலும்,

"முக்கட்பர மற்குச் சுருதியின் முற்பட்டது கற்பித்து"

என்று ('முத்தைத்தரு பத்தித்திருநகை' என்றற் றொடக்கத்து) முதற் றிருப்புகழிலும்,

"'நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருடான்'

'வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே'"

என்று கந்தரனுபூதியிலுங் கூறியருளினர் ஆசிரியர் - அருணகிரிநாதனார். குமாரன்பாற் சிவபிரான் பிரணவார்த்தங் கேட்டு நின்ற மூர்த்தம் சிஷ்யபாவமெனப்படும். இதனை, சிவபிரானுடைய அட்டாட்ட விக்கிரக லீலாமூர்த்தங்களி லொன்றென்ப.

நறிய - நறுமையென்னும் பண்பினடியாகப் பிறந்த பெயரெச்சம். பூ கயிலையும் மேருகயிலாயமும் என உம்மைகள் விரிக்க. கைலை என்னுஞ் சொல் 'கயிலை' எனவும், கைலாயம் என்னுஞ்சொல் 'கயிலாயம்' எனவும் முதற்போலியாயின. மாபுனிதவப்பிராகிருதம் - தமிழ்நூன்முடிபு. உபரி= அக்கிரம்= மேல். இதனை, அமரஸிம்ஹ நாநார்த்தவர்க்கத்திலே (வ॰ரொயிகஊ॰வயடூ௱ம) "புரோதிகரூபர்யக்ரம்" என வருதலினறிக. வாமையினது வடிவை வாமையென் றுபசரித்தார். தைவதம்= தெய்வம். (௫௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதனா.

இருநில மிசைநல மகிழ்வுறு மனையற
மெனுமொரு நெறிநிமிர்வான்
முருகுறு கிரியையின் மகள்குற மகள்வல
முதனனி யமரவுமே
பொருபுலன் விலகிமெ யறிவுட னடியவர்
புகுமரு ணெறிநிமிர்வான்
அருளுடை யறிவெனு மொருசுர மகளிட
னமரவு மவனுளனால்.

(இப்) பெரிய பூவுலகின்கண்ணே நல்ல மகிழ்ச்சி பொருந்துகின்ற இல்லற தருமமென்னு மொருமார்க்கம் ஓங்கியிடும்வண்ணம் அழகிய கிரியாசத்தியாகிய ஸ்ரீ வல்லிதேவி வலப்பாரிசத்தில் நன்கு அமர்ந்திருக்கவும், தம்மோடு போராடும் ஐம்புலன்களு நீங்கி உண்மையறிவுடன் அடியார் பிரவேசிக்குந் திருவருண்மார்க்கம் ஓங்கியிடும்வண்ணம் அருட்குணமுடைய ஞானசத்தியென்னும் ஒப்பற்ற ஸ்ரீ தேவசேனாதேவி இடப்பாரிசத்தி லமர்ந்திருக்கவும் அம் முருகனெழுந்தருளியிருப்பன்.

இல்லறம் 'மனையறம்' எனப்பட்டது. இல்லறம் கிரியாசத்தி பரமாகக் கூறப்பட்டமையின், துறவறம் ஞானசத்தி பரமாமென்பதுங் கொள்ளக்கிடக்கின்றது. "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்றருளியபடி கிரியாகாண்டத்தின் வழிநின்று பலன் விரும்புநர்க்குக் கிரியாசத்தி வழியாகவும், ஞானகாண்டத்தின் வழிநின்று பலன் விரும்புநர்க்கு ஞானசத்தி வழியாகவும் பலனளித்

தரு ளிறைவன் அவ் விருதிறச் சத்திகளோ டெழுந்தருளி யிருப்ப னென்பது —

"வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாச் சூழ"

எனக் கந்தபுராணத்தில் வரு தொடர்பின்கண்ணும் பெறப்படு கின்றது. இறைவன் தேவசேனாதேவியை இடமருங் கிருத்திக் கொண்டபின்றை, வல்லிதேவியை வேட்டனனாகலின், அத்தேவி யிருக்கை வலமருங் காயிற்றென்க. கிரியாசத்தி காரியத்துள்ள கிரியையிற் சரியையும், ஞானசத்தி காரியத்துள்ள ஞானத்தில் யோகமும் அடங்குமென்க. தேவேந்திர புத்திரியாகிய (தேவகுஞ் சரீ=) தேவயானை என்னும் பெயரினளே தேவசேனையென்று சொல் லப்படூஉம் மகாதேவியாயுள்ளாள். இத்தேவியையே குமாரச்சிவன் திருப்பரங்கிரியின்கண்ணே விவாகஞ் செய்துகொண்டனனென்று ஸ்காந்தமஹாபுராணத்தின் தேவகாண்டத்து க, உ - ஆம் அத்தியா யங்கள் அறைதருகின்றன. (தேவஸேநா) தேவசேனையென்னு மிப் பெயர் அந்த க - ஆம் அத்தியாய ஆரம்பத்தில் —

(ஹஜெதாராஉஹாவல்லீ தெவஸேநாபதிம்குஹம் ।
மயூரவாஹநம்ஶக்தி யாரம்தாரகமாரகம் ॥)

"பஜேதாரமஹம்வல்லீ தேவஸேநாபதிம்குஹம் ।
மயூரவாஹநம்சக்தி தாரம்தாரகமாரகம் ॥"

எனவும், அந்த உ - ஆம் அத்தியாயத்தில் —

(ஏகாஸநஸ்திதாவெதௌ தெவஸேநாகுஹாவுபௌ ।)

"ஏகாஸநஸ்திதாவேதௌ தேவஸேநாகுஹாவுபௌ ।"

எனவும் வருவனவற் றுளதுகாண்க. இன்னுமிது, மேலை அத் தியாயங்களிற் பல பாங்கர்களினும், இவ்வத்தியாயங்களைத் தொடர் ந்து வரூஉம் பலவத்தியாயங்களினுஞ் செம்மையே யறியக்கிடக்கின் றது. குமாரனுடைய திருநாமங்கள் குயிலும் பாங்கர் (வல்லீஶஃ) "வல்லீசன்" என்பதையும் வழங்குகின்ற அமரஸிம்ஹம் (தேவ ஸேநாபதிஃ) "தேவஸேநாபதிஃ" என்று மியம்புகின்றது. இவை, நன்குணர மாட்டாதார் தேவயானையென்பாள் தேவசேனையல்ல ளென்பதும், அவட்குவேறாய தேவயானையையே முருகவேள் விவா

கஞ் செய்துகொண்டனனென்பதும் போதர வரைந்துள்ளார். அறி யார்செய்கை இன்னன பலவாம்.

நிலம்= அசையாது நிற்பது; நில் - பகுதி, அம் - கருத்தாப்பொருள் விகுதி. கிரியையின் மகள் குறமகள்= கிரியாசத்தியாகிய குறமகள் என இருபெயரொட்டு. மிசை, முதல் - என்பன ஏழனுருபு. ஏ - அசை. வான் இரண்டும் எதிர்கால வினையெச்ச விகுதி. உடை - உடையவென்பதன் விகாரம். இடம் - இடன் எனப் போலி. இடன்= இடப்பக்கம். அமர் தல்= பொருந்தியிருத்தல்; "குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்— மடவரல் வள்ளியொடு நகையமர்ந்து" என்றார் நக்கீரனாரும் (திருமுருகாற் றுப்படையில்). (௯௬)

ஈற்றுச்சீர் தனதனன.

திரிகுண முதலென வுளவொரு பிரகிரு
திமுருக னிவர்நவிரம்
பரிவுறு திருவரு ளறிவயி லெனுமொரு
படையவ னுடையகுணம்
பெரியக ருணைநிறை வவனொரு பெயரறு
பிரணவ மனுநுவலின்
கரிசறு பொறிவிரி யறிவுட னொருசிவ
கதிவரு மெனவுமுணர்.

தாமதம், இராசதம், சாத்துவிகமென்னும் முக்குணமாயுள்ள பிரகிருதி மாயையும், அதன் காரணமாயுள்ள அசுத்தமாயையும் என்னையன்றி யில்லையெனும்படி மேம்பட்டிருக்கின்ற பரப்பிரகிருதி தான் இளம்பெருமான் இவர்ந்துள்ள மயிலாகும். திரு, அருள், ஞானமென்னுஞ் சத்திகள் பரிவுடைய அப் பெருமானது ஒப்பற்ற வேலென்னும் படைக்கலமாயிருக்கும். அவனுடைய குணம் பெரிய கருணையும், நிறைவுமாம். அவனதொருபெயர் பிரணவரூபமான சடக்ஷரமந்திரமாம். இம் மந்திரத்தை விதிப்படி செபிக்கிற் குற்றமற்ற (அட்டமாசித்திகளாகிய) சம்பத்தும், அகண்டத்துவ சிவஞானத் தோடு அதன்பயனாஞ் சிவப்பேறும் உளவாகும்; எனவு முணர் வாயாக.

தாமதம், இராசதம், சாத்துவிகமென்பனவே திரிகுணம். இக் குணம் பிரகிருதி மாயையாம். இதன்முதல் (=காரணம்) அசுத்த மாயையாம். இவ் விருதிற மாயையுஞ் சுத்தமாயையாகிய என்னை

யொழித்து விளங்கமாட்டாவாகலின் அவைகளு நானேயென்னும் படி மேம்பட்டிருக்கின்ற பரப்பிரகிருதிதான் இறைவன் இவர்ந் துள்ள மயில் என்பார் “ திரிகுணம் முதல் எனவுளவொரு பிரகிருதி முருகன் இவர் நவிரம்” என்றார். இவர்தல் = ஏறுதல். நவிரம் = மயில். இது, வாச்சியார்த்தமல்லாத இலக்ஷியார்த்தத்திற் சொல்லப் பட்டது. இந்த அருத்தம் —

(𑌅𑌧𑌿𑌰𑍂𑌢𑌬𑍃𑌹𑌤𑍍𑌕𑍇𑌕𑍀 𑌵𑌾𑌹𑌨𑌸𑍍𑌥𑌸𑌾𑌸𑍁𑌰𑌾𑌨𑍍 ॥
𑌸𑌂𑌪𑍀𑌡𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌸𑍁𑌰𑍈𑌰𑍍 𑌭𑍃𑌶𑌂𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌵𑌶𑌙𑍍𑌗𑌤𑌾𑌨𑍍 ।
𑌆𑌶𑍍𑌵𑌾𑌸𑌯𑌜𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑌾𑌦𑍀𑌨𑍍 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚𑌾𑌗𑌤𑌃 ॥

அதிரூடப்ருஹத்கேகீ வாஹநஸ்தரஸாஸுராந் ||
ஸம்பீட்யமுக்தாநஸுரைர் ப்ருசந்நித்ராவசங்கதாந் |
ஆச்வாஸயஜ்ஜயந்தாதீந் ஸ்வப்நரூபேண சாகத: ||)

“ சொப்பனத்தில் மிக்க பெரிய மயில்வாகனத்தின் மீது வீற் றிருந்தவனைக் கந்தன் காணப்பட்டனன்; வீரமகேந்திரத்திற் சிறைப்பட்டிருந்த இந்திர புத்திரனாகிய சயந்தன் முதலிய தேவர்கள் முன்.” என்பது ஸ்காந்தமஹாபுராண வீரமாஹேந்த்ரகாண்டத்து ௯ - ஆம் அத்தியாயத்திற் பெறப்படுமாற்றானே ஆதரிக்கப்படுகின் றது. இச் செய்தி, சூரனைக் கோறல்புரிந்து அவனை மயில்வாகன மாக ஏன்றுகொள்ளும் முன்னரேயே தேவர்கனவில் நிகழ்ந்தது. இதனால், இறைவன் எஞ்ஞான்றும் மயிலேறும்பெருமா னென் பதூஉம், அது நானாவித விசித்திரதர அலங்கார திரிகுணப்பிரபஞ்ச நாமரூப விலாச கலாபத்தை விரித்தாடாநின்ற மா மாயையே யென்ப தூஉம், இறைவனதருளவாம் பெற்றிமீக்கொண்ட இந்திர னிவ்வுண் மையுணர்ந்தே சூரன் மயிலாதற்கு முன்னர் மாபோர் முகத்திற் றானொரு மயிலாகி யிறைவனைச் சுமந்துலாவின னென்பதூஉம், அது கருதியே சூரனும் பண்டைநாண் ஞோற்ற பலதவ பலன் கைவருமாறு பின்றை இறைவனேறு மயிலாயின னென்பதூஉம் பெறக்கிடக்கின் றன. எத்தேவர் வாகனமு மிவ் விலக்கணமுடைத் தன்று. திரி குணம் முதல் என்பது “அகரமுதல்” என்றாற்போல இயல்பு கணத் துக்கண் மகரங்கெடவே ‘திரிகுண முதல்’ என நின்றது. இங்ங னம், அந்த மா மாயையை அதோமாயை ஊர்த்துவமாயை எனப் பாகுபாடு செய்துகொண்டு அதோமாயையை வாகனமாகக் கொண் டனனென்று கூறுவதாயின், ஊர்த்துவமாயையைக் கோழியெனுங் கொடி (= குக்குடத்வஜம்) ஆகக் கொண்டனனென்று கூறல்வேண்

டும். அங்ஙனமாயின், எம்மிறைவனுற் பிரபஞ்சம் ஆளப்படுகின் றது; "வேண்டுவார் வேண்டுவதே யீவான்" என்றபடி அந்தப் பிர பஞ்ச சம்பத்துக்களையேனும், அவையற்றைக் கடந்துநின்றவையும் ஞானனந்தத்தையேனும் இனிது விழைவோர்க்கெல்லாம் இவ் வெம் மிறைவன் அவையற்றை யீந்தருள்கின்றனனுகலின் இவண் வம்மின் என ஆன்ம கோடிகளையழைக்குங் குறிப்பில் அக்கோழி யொரு கொடியாகவும், கு= பூமி, குடம்= வக்கிரமாகக் கிண்டல எனப்படு மியவைபானே பூமியை வக்கிரமாகக் கிண்டி யுண்பனகண் டுண் ணுங்கோழி வடமொழியிற் (குக்குடம்) குக்குடம் எனப்பட்டமை யின் அக்கிண்டல் பிரபஞ்ச விகாரத்தைச் சேதித்த லெனும்பொருள் ஈண்டுப் பயப்ப, அது குக்குடமெனுமொரு பறவையாகவு மிருக்கு மென்க. அயனுக்கும், அரிக்கும், அரனுக்குமுள்ள வாகனங்களை கொடிகளாகவு மிருப்ப, குமாரனுகிய இவ் விறைவனுக்குள்ள வாக னமும், கொடியும் இருவேறு வகைப்பட்டிருத்தலும் அவனது பூர ணுதிக்கியத்தை யுணர்த்துமெனல் கணித்து நூலாசிரியர் திருவலங் கற்றிரட்டின் உ - ஆங் கண்டத்தில் —

"வேதற்கு மேலா விளம்புமரிக் கும்மரற்குங்
கோதற்ற வாகனமுங் கொள்கொடியு மோருருவே
பேதற்ற ஞானப் பெருக்கிலமிழ் வாரினிய
காதற்கு ளாமா கருணையிறை யாம்வள்ளி
நாதற்கு வாகனமு நண்கொடியு மீருருவே."

என்று பாடினது மோர்க. இஃ தைந்தடியான் வந்த தரவு கொச்சகக்கலிப்பா. சீவன்முத்தி தசையில் அறிஞரைத் தொழு மொரு செல்வம் பிறங்கச்செய்யும் ஆன்மாவின் கிரியாசத்திக் காதா ரம் பரமான்மாவின் கிரியாசத்தியாகலின் அது 'திரு' எனவும், அத்தசையில் ஆன்மாவின் இச்சாசத்தியை அறிஞரோடு மருவும்படி அருள்புரிவது பரமான்மாவின் இச்சாசத்தியாகலின் அஃது 'அருள்' எனவும், அத் தசையில் ஆன்மாவின் ஞானசத்திக்குப் பேரறிவாய்ப் பிறங்குவது பரமான்மாவின் ஞானசத்தியாகலின் அஃது அறிவெனவும்படு மாதலின் அப் பரமான்மசத்தி மூன்றுமே இறைவனது திருக்கரத்திற் சிறந்த ஆயுதமாய் விளங்கியிருக்கும் வேற்படை. என்பார் "பரிவுறு திரு அருள் அறிவு அயிலெனுமொரு படை" என்றார். இதுபற்றிப் பாயிரத்து எ - ன் உரையில் "இச்சா ஞானக் கிரியாசத்தி ரூபமாகவுள்ள சத்தியெனும் வேலைத் தரித்துளன் சத்

திர சுவாமியெனும் பெயரிய முருகன்" என்னும் பொருளிற் காட்டப்பட்ட ஆகம வசனத்தையும் அங்ஙனமேயுள்ள வேறு பிரமாணங்களையும் ஈங்குக் கருதிக்கொள்க.

முற்காண்டத்து உஅ - ஆஞ் செய்யுளுரைக்கட் பிரமாணவாயிலாகக் காட்டப்பட்ட (க) சருவஞ்ஞதை, (உ) திருத்தி, (ங) அநாதிபோதம், (ச) சுவதந்திரத்துவம், (ரு) அலுத்தசத்தி, (சு) அனந்தசத்தி, (எ) நிராமயாத்துவம், (அ) விசுத்ததேகமென்னும் எட்டும் முதல்வனுடைய குணங்களெனப்படும். இவ்வெட்டும் உடையோனே முதல்வனென்பது தோன்ற ஸ்ரீமத் - அருணகிரிநாத முனீந்திரரும் —

" பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே "

என்றோதியருளினர் (அனுபூதியில்). இவ்வெட்டும் முறையே —

(க) கருவியுதவிகொண்டு சுட்டியறியாது முற்றுமுணர்தலெனவும்,

(உ) நித்திய நிரதிசயானந்தமெனும் வரம்பிலின்பமுடைமை (பூர்த்தி) யெனவும்,

(ங) இயல்பாகவே பாசங்களிலனாதலெனும் அநாதி முத்தத்துவமெனவும்,

(ச) தன்வயத்தனாதலெனும் (பிறர்வயப்படு மிழிவிலாதிருக்குமோருண்மைத்தன்மையின் யாவு நடாத்துஞ்) சர்வகர்த்திருத்துவமெனவும்,

(ரு) பேரருளுடைமையெனவும்,

(சு) முடிவிலாற்றலுடைமையெனும் படைத்தற்றொழின் முதலியன வுஞற்றுஞ் சத்தியெனவும்,

(எ) இயற்கை யுணர்வினனாதலெனவும்,

(அ) தூய வுடம்பினனாதலெனவுஞ்

சொல்லப்படுமென்ப. இவ்வெட்டனுள் எ - வதிலுள்ள இயற்கையுணர்வினனாதலை ங - வதிலுள்ள அநாதிபோதத்தினும், அ - வதிலுள்ள தூயவுடம்பினனாதலை ரு - வதிலுள்ள அலுத்தசத்தியினுமடக்கி அறுகுணங்களாகவு மோதுப. முற்காண்டத்து சு - ன் உரையுழை " ஆகாசமயவிக்ரஹம் " எனவும், " ஆகாச சரீரம் ப்ரஹ்ம "

எனவும் போந்த சுருதிகளாலும் தூயவுடம்பினனாதல் என்பது சித்திக்கும். இது பிரணவ சரீரமாம். இவ்வாறு குணங்களுள், சுவதந்திரத்துவமென்பதைச் சத்து எனவும், சருவஞ்ஞதை அலுப்தசத்தி அனந்தசத்தி என்பனவற்றைச் சித்து எனவும், திருத்தி அநாதிபோதம் என்பனவற்றை ஆனந்தம் எனவுஞ் சொல்லப்படுமாற்றானே ஈசுரப் பிரபாவகுணம் மூன்றெனவும் படும். அநாதிபோதத்தைச் சுவதந்திரத்துவத்தோடு சேர்த்துச் சத்தெனச் சாரினுஞ் சாற்றலாம். இம்மூன்றனுள், சித்திலடங்கிய அலுப்தசத்தி (= பேரருளுடைமை) கருணையெனப்படும்; சத்திலடங்கியவைகளும், சித்திலடங்கிய சருவஞ்ஞதை அனந்தசத்தி என்பவைகளும், ஆனந்தத்திலடங்கிய திருத்தியும் நிறைவெனப்படும் ஆகலின் "அவனுடைய குணம் பெரிய கருணை நிறைவு" என்றார். கருணை நிறைவு - உம்மைத்தொகை. இது, சுருங்கச்சொன்னவாறெழிலாம். நிறைவு என்பதிற் கருணை அடங்காதோ? எனின், — அடங்கும்; ஆயினும் அந்நிறைவு பூதாகாசம்போற் சடமாமோவென்னும் ஆசங்கையெழாதொழிதற்பொருட்டும், ஆன்மகோடிகளை ஆளுந்தன்மையிற் கருணையே சிறந்துநிற்பதென்பதையறிவுறுத்தற்பொருட்டும் அஃது உடன்கிளக்கப்பட்டதாயினும் முறையின்வைப்பு என்னுமோராற்றின் அது, நிறைவுக்கு முன்னர் வைக்கப்பட்டதன்றே. ஓர்க. இப்படிக் குணங்கூறல் (ஸகுணம்) "நிர்க்குணம்" என்னுஞ் சுருதியோடு முரணும் பிறவெனின்,— முரணாதென்பது முற்காண்டத்துப் க0 - ன் உரையிற் பிரபலப் பிரமாணங்களைக் கொண்டே சாதித்தனம்; கடைப்பிடிக்க.

முருகன் என்பதைப் பரிவுறு என்பதனோடுங் கூட்டுக. பரிவு= அன்பு. மனு= மந்திரம். நுவலின் என்பதற்குமுன்னே இதனை என்பது வருவித்துரைக்க. இவர்நவிரம், பரிவுறுதிரு, அறுபொறி, விரிஅறிவு என்பன வினைத்தொகை. உம்மைகள் விரித்துக்கொள்க. (௩௭)

### சீடனது வேண்டுகோளை அங்கீகரித்த வாசிரியர் அவற் கனுக்கிரகித் தருளல்.

*தனதன தந்தன தனதன தந்தன*
*தனதன தந்தனனு.*

சொலிய பரம்பர னருளுற முன்சொன
துகளில்வ ரம்படைவே

செலவவன் மந்திர மருளின மன்பொடு
திரிபற நின்றளியால்
நலதுதி வந்தனை புரியமை யந்தல
நசையற வெங்கணுமாய்
நிலவுசி தப்பர மதையடை யென்றிறை
நிசவுரை தந்தனனே.

முற்கூறிய பரம்பரனது அருள் பொருந்தும்பொருட்டு, மேற் சொன்ன குற்றமில்லாத வழிவரம்பினைக் கடவாமல் ஒழுங்காகவே (நீ) செல்லும்படி, அவனது மகாமந்திரத்தை அன்போடு செவ்வனே (உனக்கு) உபதேசித்தனம். (அதில் நீ) நின்று அன்பால் நல்ல துதிகளையும் வணக்கங்களையுஞ் செய். காலமும், இடநசையும் இல்லாதொழிய எவ்விடத்துமொரு பூரணமாய்ப் பிரகாசிக்கின்ற சிதாகாசத்தை (அநுபூதிவாயிலாக) அடை என்று ஆசிரியர் (சீடற்கு) உண்மையுபதேசத்தைச் செய்தருளினர்.

இக் காண்டத்துள் இவ் வையமறுத்தருளியலிற் சொல்லப்பட்ட படியே ஒழுங்காக நீ சேறல்வேண்டும்; அது கருதியே அவனது மகா மந்திரத்தை அன்போடு செவ்வனே நினக்குபதேசித்தனம் என்பார் "முன்சொன்ன துகளில் வரம்படையே செல்லவவன் மந்திர மருளின மன்பொடு திரிபற" என்றனர். திரிபு அற = கேடற = செவ்வனே. திரிபு = கேடு; "இழிவொடு திரித னந்த லிறுதல்" என்பது சூடாமணிநிகண்டு. இவ்வுபதேசத்தில் முக்கியமாகக் கருதிக்கொள்ளத்தக்கவை இக்காண்டத்தில் —

"சுத்தப் பிரம புரத்திற் குகமொரு சொருபா கலமது வுளதாகச்
சித்தத் துழைமு னினைத்துக் குருவுட றிகழும் படிமதி நனிபாவித்
தத்தற் குரிய வெழுத்தைப் பரவியு ளலையா வணமனி யதன்மேலங்
நித்தப் பெருவெளி பொற்சிற்பரவொளி நிகழுந்தரமென வவண்முன்னே."

எனவரு கஉ-ஆஞ் செய்யுளும் அதனுரையுமே. உபாசனை யொழுங்குகடோன்றக் கூறியுள்ள அச் செய்யுள்பற்றி யுரைக்கும் கஅ-ன் உரையும், சக-ல் "நீ சிந்தைசெய்யுஞ் சிதம்பர லிங்கமே" என்றதும், சஉ-ல் "சோதிலிங்க சுயம்புவின் ஞூந்தொழுங் கோதின்னனர்க் குகேசன்" என்றதும் இங்குக் கவனிக்கத் தக்கன. மேலான அனுபவ முணர்த்துவான் இக்காண்டத்து ங., ச, ரு-ஆஞ் செய்யுள்களினு முரைகளிலுங் கூறியுள்ளனவுங் கவனிக்கத் தக்கன.

'மந்திரம்' எனப் பொதுப்படக் கூறினமையின், சுப்பிரமணிய காயத்திரியும், சடக்கரமும், ஓங்கார சடக்கரமுங் கொள்ளக்கிடக்கின்றன. சடக்கரம் ஆறெழுத்தாகவும், ஒன்பதெழுத்தாகவும், பதினெழுத்தாகவு முளதென்பது முதலிய விவரங்கள் பரிபூரணானந்தபோதத்துப் பிற்படலத்துக் ௧௬-ஞ் செய்யுளுரையிலுரைத்தாம். அங்ஙனமே ஓங்கார சடக்கர விவரமு முரைத்தாம். கடைப்பிடிக்க. தைத்திரீயாருண சாகை நாராயணத்தில் —

(தத்புருஷாய வித்மஹே
மஹாஸேநாய தீமஹி
தந்நஷ் ஷண்முகப்ரசோதயாத் ।)

“ தத்புருஷாய வித்மஹே
மஹாஸேநாய தீமஹி
தந்நஷ் ஷண்முகப்ரசோதயாத் ।”

என சுப்பிரமணிய காயத்திரி கூறப்பட்டது. இதன்பொருள்:— “தத்புருஷனைச் சண்முகனை யறிவோமாக: மகாசேனனைத் தியானஞ் செய்யக் கடவோம்: நமது [illegible] அச்சண்முகன் நிறைவேற்றுவானாக” என்பதாம். ஸ்காந்தமஹாபுராண சம்பவகாண்டத்துக் ௧௬-ஆம் அத்தியாயம் —

(அநேந வ்யாத்மநா யஸ்மாத் மஹாஸேநா த்வமாஹ்ருதி: ।
ஸாஸேநாயததேநாயம் மஹாஸேநஸ்ஸுதஸ்தவ ॥

ஆமநந்த்யாத்மநாயஸ்மாத் மஹாஸேநா த்வமாஹ்ருதி ।
ஸாஸேநாயத்தேநோயம் மஹாஸேநஸ்ஸுதஸ்தவ ॥)

“மகாசேனையாய ஆன்மசத்தியின்கண் ஆன்மாக்களை நீ ஆராதனை செய்துகொண்டு அவளைத் தலைமைப்படுத்துகின்றமையின், (பரமேசுவரியாகிய) நின் திருமகன் (இவ்வாறே) மகாசேனனெனப்படுகின்றான்” எனப் பரமேசுவரன் பார்ப்பதிதேவிக்குக் கூறுதலின் மகாசேனனென்னும் பெயர்ப் பொருளறிபவாம். காயத்திரியென்பது 'காபா' என்னும் பிராணன்களைக் காப்பது என்னுங் காரணப் பொருள்படும். இதனை, பிருஹதாரண்யகோபநிஷத்தின் ரு-ஆம் அத்தியாயத்துப் கச-ஆம் பிராமணமாம் — (ஸபாஸ்த்ராணாம - - - - தஸ்மாத்காயத்ரீநாம) “காயந்தத்ராணாம் - - - தஸ்மாத்காயத்ரீநாம” என்று கூறிச்சேறலி னறிக. மந்திரமென்பது எல்லாமறியுந் தன்மை

யும், சரீரசாதாரத்தினின்றெடுத்துக் காக்குந்தன்மையுமுடைத்து
எனக் காரணப்பொருள்படும் என்க. இதனை, காமிகாகமத்து மந்த்
ராவதாரபடலம் —

([illegible]
[illegible])

"மநநம்ஸர்வவேதித்வம் த்ராணம்ஸம்ஸாரஸாகராத் ।
மநநத்ராண தர்மித்வாத் மந்த்ரமித்யபிதீயதே ॥"

என்று கூறுதல் காண்க. இப்படலத்தில் —

([illegible]
[illegible])

"குர்வாஜ்ஞாபூர்வகம் வத்ஸ க்ருஹ்ணீயாந்மந்த்ரமுத்தமம் ।
அந்யதா ஸ்வீக்ருதே மந்த்ரே ஜபே ஸ்யாதநர்த்தக்ருத் ॥

என்பதுங் கூறப்பட்டது. தமிழ்:— "உத்தமமான மந்திரத்
தைக் குருவினது ஆணையையிலாதக் கொள்ளுதல் வேண்டாம். இவ்வாணை
யிலாது கொள்ளப்பட்டது ஜெபிக்கப்படுமாயின் (அஃது) அனர்த்
தத்தை யுண்டுபண்ணும்" எனவாம். இவ்வுறுதி புலங்கொள அறிய
மாட்டாதார் யாண்டேனுங் கிடைக்கும் ஏடுகளிற் பொறிக்கப்பட்ட
மந்திரச்சொற்களைத் தாமாகவே பாடஞ்செய்துகொண்டு ஜெபிப்
பர். அவரது விழைவு வீணாம் விபரீதமாம். மனத்தூய்மை தனைத்
தேடியும், சிக்க நவிலியும், உபதேசவழிப் பொருளீட்டுவோரா
யுட்டுன்பமாயுள்ளார் அன்பரைக் குருவாகப் பற்றாரென்பதும் உரி
யோருணர்க. மந்திரோச்சாரணை — வெளிப்படவுச்
சரித்தலென்றும், (உபாம்சு) மந்தமாயுச்சரித்தலென்றும், மானசமா
யுச்சரித்தலென்றுஞ் சொல்லப்படுமென்பதும், இவை ஒன்றற்கொ
ன்று மேம்பட்டதென்பதும் போந்த மந்த்ராவதாரபடலத்திற் பெறப்
படுகின்றன. உபாம்சு உச்சையென்பன வாகவுள்ள வாசகஜெபத்
திலும், மனனம் தியானமென்பன வாகவுள்ள மானசஜெபம் பெரி
தாம் அதிகமென்பது தர்சனோபநிஷத்திற் பெறப்படுதலைச் சிவசூரியப்
பிரகாசத்திற் காண்குறலாம். உள்ளி தம்பத் ஜெபிக்கத்தக்க இம்மானச
ஜெபத்தை ஆண் பெண்ணென்பதின்றி யாவருந் தீட்டு ஆசூசம்
பூப்பு முதலிய உற்ற காலங்களிலும், எயிறெறிந்த காலத்திலும், மற்
றெக்காலங்களிலுஞ் ஜெபிக்கலாம். ஓரெழுத்தாயுள்ள ஓங்கார சடக்
கரமானது அக்ஷர ஷடக்ஷரமெனவும்படும். இது, மானச ஜெபத்

திற் குரியதேயாம். அந்நாளில் ஆன்மலிங்கமாக பாவனையில் அங்க வமைவு பாவிக்கத்தக்கதே. அவ்விலிங்கமாகாய் அவ்வழிவிற்றே. அவ் வோங்காரம் சேதியை தழுவலாகமாக அணைந்து நிற்றலின் குழவை யென்னும் பெயர்க்காயிற்று. குண்டலியெனவும் படும். குண் டம் = வட்டவளைவு; கவிப்பான வளைவு. குறிழுங் கொக்கவிப்பி னும் 'ரு' என்னு மெழுத்து அமைக்கப்படுதற்கு வேண்டுக. யோகநிலையில் இவ்வோங்காரமே பிரிவிணையறுக்கப்படுக; வேர் பற்றுத தக்கதன்று. பிரணவமாகிய இது, சக்கரப்படுத்திகின்ற கடக்கச் செய்தலின், தாரமாம். தாரம் (தாரகஃ) தாரகமெனப் படும். 'க' - பிரத்தியயம். இது, நாரதபரிவ்ராஜகோபநிஷத்தின் அ - ஆம் உபதேசத்திற் பிரணவ விளக்க வகைக்குப் பின்னே (ஸம்ஸாரதாரகஃ) "ஸம்ஸாரதாரகம்" என வேதப்பட்டுள்ளது. சமுசாரத்தைக் கடக்குமாறு செய்வது என்பது பொருள். இது, முன்னர்ப் பின்னர்ச் சேர்ந்துள்ள காரணத்தாலேனும், பிறிது கா ணத்தாலேனுஞ் சில மந்திரங்கள் தாரகமென வழங்கப்படினும் இஃ தொன்றுதானே தாரக சத்தத்திற்குரியதாய் முழுத்தாரகமாய் ஒன் றான்றாய் நிற்கும். இப்பிரணவமாகத்துக்கு வாச்சியமாயுள்ளவன் சுப்பிரமணியனென்பது முற்போந்த வுபநிஷத்துக்களினால் வந் துளதன்றே. மேன்மொழிக்குள நிகழ் பொருளும் பெரும்புண் ணியம் வாய்ந்தோர் இதன்பொருள் சுப்பிரமணியனென அறிந்து செய்து செபித்து அவ்வழகனை அடைந்தெய்துவர். இவ்வெழுத்துக் கவோ மீனைந்தாமே தெகிக்கமாட்டா. இப்பிரணவம் தனியாதபொருட்டிற் குரியதன்று. அவ்வாறு செபிக்கப்படுவனவாறு தனியாரேசரும், ஆசிரிய கட்டளையும் பெற்றுச் செபிக்கத்தக்கவரும்.

தீக்ஷைபெற்ற செவ்வி தொடக்கமாகவுள்ள காலை, மாலை, உச்சி யென்னு மொவ்வொரு காலத்துஞ் சிவாகந்தரத்தைச் செபிக்கும் முறை ௧0 - ஆயிற் பெரும்விருத்தியும், ௨0 - ஆயின் ஆயுள்விருத்தி யும், ௪0 - ஆயின் பாவக்குறைவையும், ௫0 - ஆயிற் பிராயச்சித்தமும், அ0 - ஆயின் விண்டுபதமும், ௧00 - ஆயின் ருத்திரபதமும் எய்து மென்று பண்டைநூல் (= புராணம்) பகர்கின்றது. ௧௨000 - முறை செபிப்போன் பரசிக்கப் பெறுவனென்பதையும் அஃதறை கின்றது. இங்ஙனமே சுருதியும் —

(ஸர்வேஷாமேவபாபாநாம் ஸங்காதேநவ்யுபஸ்திதே |
தாரம்த்வா தசஸாஹஸ்ர மப்யஸேச்சேநந்ஹ்நுதத் |

யஸ்துத்வாதசஸாஹஸ்ரம் ப்ரணவம்ஜபதேந்வஹம் ।
தஸ்யத்வாதசபிர்மாஸை: பரம்ப்ரஹ்மப்ரகாசதே ॥)

"பாவக்கூட்டங்கள் வந்துறின், நாசகத்தைப் ௧உ000 - முறை அப்பியாசம் புரியவேண்டும்; அஃதவற்றினை யழித்து விடும். யாவன் பிரணவத்தினை நாடோறும் ௧உ000 - முறை செபிக்கின்றனனோ அன்னோற்குப் ௧உ - மாதங்களுட் பரப்பிரமப் பிரகாசமாம்" என்றியம்புகின்றது. இது, ஸாமவேத ஸந்ந்யாஸோபநிஷத். இவ்வாறு கணக்கிட்டுச் செபங்களெல்லாம் ஞானசத்தியுடைத்து ஓரிடத்திருந்தே செபிக்கத் தக்கன.

கடவுள்வழிபாடு இன்ன காலத்திற்றான் செய்யவேண்டுமென்னு நியதியும், அஃது இன்ன தலத்திற்றான் செய்யவேண்டுமென்னும் ஆசையும் உலகோர் பகிர்முகத்தே புரியும் ஏகதேசவழிபாட்டிற் குரியனவாகலின், எக்காலத்தும் எவ்விடத்தும் இருந்தபாவனை நாட்டத்தினிற்கத்தக்க நீ 'அவற்றினை விழையற்க' என ஞானபூசையினை விதிப்பார் "அவையம் தலங்களை அற எங்குமாய் நிலவு சிதம்பரமதை அடை" என்று சொல்லினார். இவ்வாறு சொற்றது உண்மையுபதேசமாதலின் அது "நிசவுரை" எனப்பட்டது. நிசம் - நிஜம் என்னும் வடசொல்லின் விகாரம். எக்காலத்தும் எவ்விடத்தும் இருந்த பாவனை நாட்டத்தினிற்கவேண்டுமென்பது, இக் காண்டத்தின் உ௫ - ன் உரையிற் காட்டப்பட்ட ௪ - ஆவது ஞானபூமி பற்றி —

"எஞ்ஞான்றும் உண்முக நாட்டமுறு தன்மையினேல் எஞ்ஞான்றும் வெளிமுக வியாபாரங்களி லிருப்பினும் இளைப்புற் றுறங்குத லொக்கு நிலையாம்."

என்றியம்பிய சுருதிநிச்சயத் துள்ளதன்றோ. திருஞானசம்பந்தரது தமிழ்மறையில் —

"நனவிலுங் கனவிலு நம்பா வுன்னை
மனதிலும் வழிபடன் மறவே னம்மான்"

என வருதலும், திருநாவுக்கரையரது தமிழ்மறையில் —

"அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ"

என வருதலும் அப்பொருளவாம். தைத்திரீயோபநிஷத ஆநந்தவல்லியில் —

(தமேதவஹயம்விதுஷோஹ்வா நஸ ।
தத்தேவபயம் விதுஷோமந்வாநஸ்ய ।)

"அறிந்து தியானத்தை விட்டவனுக்கு அந்தத் தியானம் விட்டதே அச்சமாய்" என அப்பையதீக்ஷிதருங் கூறினார். (விதுஷ: அமங்களஸ்ய = "அறிந்து தியானத்தை விட்டவனுக்கு" என்பது பொருள்.)

௯௩ - ஆஞ் செய்யுள்முதல் இச்செய்யுட்கள் வரையிலுமங்கி ரோபதேசங்களும் போகங்களாயும் முதல்வனது சகலகலை சம்பந்தமேயாம். கூறியவாறு இப் முதல்வனது பேரான இருக்கை அப்பிராகிருத சிவலோகத் திருக்கயிலையென் றிங்கண் ௩௮-ஆஞ் செய்யுளுரைகளிற் றெரிக்கப்பட்ட சரியாமார்க்க சாலோகத்தியும், க்கிரியா மார்க்க சாமீபத்தியும், யோகமார்க்க சாரூபத்தியும் ஆன்மாக்களாலடையப்படுகின்றன. இன்றெனின் அக்கதிகளு மில்லையாம். என்னை? உலகல்லாத அத்துவித ஆன்மசொரூபத்தைத் தன்னுட்கி வாயிலாக அடையகில்லாச் சீவர்களும் அம் முத்திகளிலொன்றனை அடைந்து சித்த முடையராயிருப்பரென்பதூஉம், அன்னோருடைய தலைமீதுங்கவாறு அக்கதிகளில் அவரைச் சேர்ந்தாற்றலும் அவனுக்கே யிருக்கின்ற தென்பதூஉம் இனிது புலப்படுகின்றமையின். சாலோகியமென், தனக் கொருசிறிது பிரியமுடையாரைத் தனது உலகத்தும் அங்ஙனுயர்ந் தாரைத் தனது சமீபத்தும் வைகியமையுமாகவும், அவரினுமுயர்ந் தாரைத் தன்னுடைய ஆடை அணி போல்வனவுமுற அணியும்படி செய்து தனது தலைமையின் கீழான அதிகார பம்பத்துக்களிற் றன தருகிருந்து வாழுமாறுகவுஞ் செய்தலாமென முதல்வனுடைய செய்கையே சாலோகத்தியும், சாமீபத்தியும், சாரூபத்தியுமாம். முதல்வனுடைய உருவம்போன்ற வுருவமுடைச் சாரூபத்தியினர், அம் முதல்வனுடைய ஊர்தி ஆயுதமென்பன போன்ற ஊர்திகளையும் ஆயுதங்களையும் உடையராயிருப்பரென்பதூஉம் —

"ஓரெழுகோடியைங்கரர்கோடி வயிரவரொன்பதுகோடி
சீர்கெழுமெண்டோணீலிகண்மயின்மேற்செலவுறும்வேலுழவரெண்கோடி
ஏர்பெறுமியக்கரொன் றரைக்கோடியிசைகவில்கின்னரர்கோடி
கூர்நுதிப்பிறைப்பற்புயங்கமோர்மூன்றுகோடி தானவரிருகோடி."

என்னும் பாட்டி னறியப்படுகின்றது. இது, ஸ்காந்த மஹாபுராணத்தைச்சார்ந்த காசிகாண்டத்து ௯௨ - ஆம் அத்தியாயத்தது. 'மயில்மேற் செல்லும் வேலுழவர் எண்கோடி' என்பது கவனிக்க. பரசுப்பிரமணிய மூர்த்தியின் றிருவுருப் பெற்றோரெல்லாம் அபரசுப்பிரமணியரெனப்படுவர்; அணுசுப்பிரமணியரெனவும்படுவர். அவ

வப்பட்ட அனுபவஞான வாயிலாகச் சொரூபத்தையடையுஞ் சாயுச்சிய கதியையும் அம்மூர்த்தியே அளித்தருள்வன்; அங்ஙனமவன் ஆசாரியனெனப்படுவன். ஆகலினன்றே —

> "முருகன் றனிவேன் முனிநங் குருவென்
> றருள்கொண் டறியா ரறியுந் தரமோ"

என்றருளிச் செய்தார் ஆசிரியர் - அருணகிரிநாதனுருமர். இவ்வேதுக்களால் அவன், ஆன்மகோடிகளையாளுந் தலைவனாகவும், அங்ஙனந் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனார்த்தம் அவற்றினை நடாத்திவருளும் அரசனாகவும், சாயுச்சியகதி தலைப்பட்டார்க்கெல்லாந் தனது சன்னிதிமாட்டுள்ள செல்வத்தையுதவி உபகரிப்போனாகவும், அக்கதி தலைப்படுநெறி பற்றுநர்க்கு அதனையுங் கொடுத்தருள் குருவாகவு மிருக்கின்றனனாகலின் இச் சைவமார்க்கந் தலை தணந்த கிருபா மார்க்க மெனப்படூஉ மென்க.

இவ்வுண்மை தெளியமாட்டாதார் எங்குநிறைந்த கடவுட்கும் உருவுண்டோ? என்கின்றனர். அது செவிக்கொண்ட சைவருட் சிலரும் நாணுற்று ஊமையாகி யுழிதருகின்றனர். இனியேனும் அவர்— 'யாண்டும் ஆன்மதத்துவ சொரூபமாத்திரையாயுள்ள கடவுட்கு உருவின்று; அக் கடவுளை அடைவிக்கும் பரமாசாரியனாயுள்ளவனே அவ்வுருவன்; மனிதராய்ப் பிறந்து மதகுருவாய்ச் சின்னாளின்று சென்றுவிட்ட வுருவர்போலாகா வொருவன் அவனாகலின் அவனை, இரகசியங்களுடன் கொண்டது இச் சைவசமயம்' என்று வாய்மணக்க, வழிமணக்க, மதிமணக்கக் கூறிக்கொள்வாராக. மறைவின்றிப் பகிரங்கமான இடங்களெங்கணுமின் றிதுபோதிக்குமொரு புண்ணியமும் பெறுவாராக. நாணத்தை யொழிப்பாராக. ஆயின், அவ்வுருவனுக்கு மணவாட்டியுளாளெனக் கூறிக்கொள்வதெவன்? எனின்,— ஆன்மகோடிகளெல்லாம் ஆணாகவேயிராமற் பெண்ணாகவு மிருத்தலின், அப்பெண்கண் மறுமையிற் சாலோக சாமீப சாரூப கதிகளைப் பெறீஇ மரபு வழாது தனதருகிருந்துய்தற்கு அவ்வுருவனுடைய தேவியிருக்கின்றனள்; அவளில்லையாயின் அப்பெண்கள்கதி நிர்க்கதியாமாகலின் அவ்வாறு கூறிக்கோட லேற்புடைத்தென்க. அவள் சத்திரூபமா யிருந்தருள் இருதிறப்பான்மைகள் நிசு - ஆஞ் செய்யுளுரைகளி னுரைக்கப்பட்டன; காண்க. விரகநோ யொழித்தற்பொருட்டு அத்தேவன் தேவிகளோ டிருப்பானல்லனென்பதை அத்தேவிகண்

மதலையொன்றாம் என்றது, நித்திய கன்னியாயிருக்குமெனக் காட்டும். ஷண்முக ஸஹஸ்ரநாமத்திலே (ப்ரஹ்மசாரி) பிரமசாரி எனவொரு திருநாமங் கூறப்பட்டிருத்தலையுங் கருதிக்கொள்க. இவ்வுண்மைக்கு முரணாக விரகநோய்க் கதைகளைப் புத்தகத்தெழுதப்பட்டிருப்பினும் அவைகள் அன்னியாதமைப்பு, அறியார் செய்கையாமெனக் கொள்க. சிவன் காமதேவனைப்பெரிதுங் கருக்கியவனைக் குறிக்கப்படுக தாக. அச் சத்திவைக்குறிக்கும் பாஷ்யங்களிற் வுரைக்குக் கீழாம் இரகசியவுரைகளுள பக்கமேயுள பாக்கமேரா நமைமயிலவைக் தாக் கூறியது மாயக்கத்திருப்பினும் அஃது ஆயு மென்னமொண படுஉ மிருமாலா நம வெறுக்கத்தக்கதாரவின அன்னயுங் கொள்க.

இங்ஙனுணர்த்தப்பட்ட அறுமுகச்சிவமூர்த்தியாகிய குமாரனைச் சிவாலயவழிபாடு செய்யுஞ் சைவர்கள் யாவரும் ஆர்யாதி பெருதாங்கிருபதை யாம் பலவிடத்துங் கண்டுளோமாம். ஸ்காந்தமஹாபுராண சம்பவகாண்டத்து ௩௩ - ஆம் அத்தியாயத்தில் —

(ஜஹாரதேந தம்ப்ரஹ்மா நைவாஜ்ஞாநாத் பரம்பரம் ।
பரவிவேச சிவம் த்வா சிவாலயம் தமப்யயம் ॥
சிரந்தத்ர மஹாதேவம் ஸமுபாஸ்ய ஸஸாரம் ।
ஸாத்தயை ஸாகம் விஸ்ருஷ்டோ ஸௌ ஸ்வலோகாயதிரம் ॥

ஜஹாரதேநதமபரஹ்மா நைவாஜ்ஞாநாத்பரம்பரம் ।
பரவிவேசசிவமமதவா சிவாலயம் தமப்யயம ॥
சிரந்தத்ரமஹாதேவம ஸமுபாஸ்யஸாரம ।
ஸாத்தயைஸாகமவிஸருஷ்டோஸௌ ஸ்வலோகாயதிரம ।)

“ சுப்பிரமணிய மூர்த்தியைச் சேரப் பமைக் கொண்டு பிரம்மாவென்று கருதாமே ஒரு சிசுவெனவெண்ணியாங்கிருந்த பிரமதேவன் சிவசந்நிதியுட் புக்கனன். அங்கு மகாதேவனை நெடுங்காலம் அர்ச்சித்து விடை பெற்றுச் சத்திபாகனோடு சந்திப்பிலோகத்தை செலவானை வெளிவந்தனன்” என வருமாறு ஐம்முகச்சிவபெருமானை யுடனாய்க் குறித்து தனிப்பூசித்துக் குமாரனைப் பூசியாது வந்த பிரமதேவனை அக் குமாரனுற ழண்டிக்கப்பட்டுக் கன்னெறியினுந் செலவுறப் இழந்து நப்பாயந்து சிறையிருந்தனன் என்னுந் சரிதைப் பொருளாதிகளெல்லாம், இங்ஙனம் பிதாமகனாகிய பிரமனைத் தண்டிக்கப்படுவனேல் எனை மனிதர் கதி யாதாமென்பதையும் இச் சைவர் நுணராம்போலும். இது கிடக்க. மானுடரிற் றம்மினுயர்வுடையாரைக் காண்டொறுங் காண்டொறுங்

கைகூப்பிநிற்கு மிவர், அக்குமாரனது சன்னிதி வழிபாட்டை யொழித் தாநிற்கும் பெற்றிதான் எத்தன்மைத்தாகும்! ஹரே; ஹரே.

(𑌗𑌾𑌂𑌗𑍇𑌯𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑍇𑌯𑌾𑌦𑌿 𑌨𑌾𑌮𑌭𑌿𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌨𑌿𑌗𑌦𑍍𑌯𑌤𑍇 𑌮𑍁𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍈𑌰𑍍𑌮𑍂𑌢𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑌯𑌾 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

காங்கேயகார்த்திகேயாதி நாமபிः பரமேச்வரः ।
நிகத்யதே முநிச்ரேஷ்டைர் மூடாபிந்நதயாவிதுः ॥)

"காங்கேயன், கார்த்திகேயன் முதலிய திருப்பெயர்கட்குப் பரமேசுவரன் என்பதுதான் பொருளென்பது முனிசிரேட்டர் கொள்கை: மடவோர்தாம் பேதம்பேசுவர்" என்று ஸ்காந்தமஹாபுராண யுத்தகாண்டத்துப் ௧௬ - ஆம் அத்தியாயம் பகர்தலையும்,

(𑌗𑍋𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌫𑌲𑌂 𑌪𑌰𑌮𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ।

கோவிஜ்ஞாநாதிதேவஸ்ய பலம்பரமமத்புதம் ।)

"(குகேசனாகிய) அத்தேவனது பரமாற்புத பலத்தை யாவரே அறிய வல்லார்" என விட்டுணுமூர்த்தி விளம்பிநின்றனர் என்று மேலைக்காண்டத்து ௨௬ - ஆம் அத்தியாய மியம்புதலையும்,

(𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌚 𑌪𑍁𑌨𑌰𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌵𑍇𑌤𑍍𑌤 𑌮𑌾 𑌶𑌿𑌶𑍁𑌮𑌜𑍍𑌞𑌵𑌤𑍍 ।
𑌪𑌶𑍍𑌯𑌤𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍁 𑌮𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌪𑌰𑌂 𑌯𑌤𑍍𑌪𑌾𑌰𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥

ப்ரோவாசசபுநர்தேவாந் வேத்தமாசிசுமஜ்ஞவத் ।
பச்யதாத்யாசுமத்ரூபம் பரம்யத்பாரமைச்வரம் ॥)

"தேவர்காள்! நீயிர் மூடரைபொத்தவராய் எம்மைச் சிசுவென்று நினையன்மின். இங்ஙனம், எமது சருவசிரேட்ட பாரமைசுவர ரூபத்தைக் காண்மின்" என இளம்பூரணனாகிய குமாரன்கூறி அவ்வுருவத்தைக் காட்டிநின்றனன் என்று சம்பவகாண்டத்து ௩௧ - ஆம் அத்தியாயம் மொழிதலையும்,

"வேதத்தில் ஸுப்ராஹ்மண்யோம் என்றுள்ளபடி நீயும், ஸதாசிவோம் என்றுள்ளபடி யாமுமே அந்தப் பிரணவப் பொருளாகின்றோமென அறிபவர்களெவர்களோ அவர்கள் எமக்குச் சமமாவார்கள் (= சிவசமத்துவ முத்தியையடைவார்கள்)"

எனக் குமாரன் முன்னிலைக்கட் பரமசிவன் பகர்ந்தனன் என்று ௪௪ - ன் உரையகத்தே காட்டப்பட்ட சம்பவகாண்டத்து ௩௪ - ஆம் அத்தியாயம் நவிறலையும்,

“ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.”

என உமாதேவியை நோக்கி உமாபதி யுரைத்தனன் என்று கந்த புராணத்துத் திருவிளையாட்டுப்படலங் கூறுதலையும், அன்ன பிறவாற் றானுறு பிரமாணவாக்கியங்களையுங் கருதியபாரார் சிலர், முருகன் பரிவாரதேவர்களு ளொருவனென்றார்.

“வெருவருஞ் செலவின் வேழ முகத்தனை விதித்த சாபப்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியாற் சாபங் கூறான்
அருவரை நெஞ்சு போழ்ந்த வள்ளிலை வடிவேற் செங்கை
முருகனை வணிகர் தம்மின் மூங்கையா கென்று சபித்தாள்.”

என மதுரைத் திருவிளையாடற்புராணத்து வலைவீசின படலத்தில் வரூஉம் விருத்தத்தினைக்காட்டி முருகன் சாபத்தி னுட்படுத்தப்பட்ட ஓரான்மாவென்றுங் கூறித்திரிகின்றனர். சுருதிகட்கும், உபப்பிருங்கணங்கட்கும் மாறுகோளாகக் கூறப்படும் பௌராணிக சரிதையும் பிரமாணமாக அங்கீகரிக்கப்படுவ தன்றென்பதை அறியாத அவர்களுக்கு யாது கூறலாம்! சிவபெருமானது மாண்பிற்கு விரோதமாக வைணவ புத்தகங்களில் வரையப்பட்ட இலிகிதங்கள் கொள்ளப்படுமாறு முருகப்பெருமானது பரத்துவத்திற்கு விரோதமாகக் காணப்படு கதையனைத்தையும் மேனுவன்றபடியே அன்னியர் நுழைப்பு, அறியார் செய்கையெனவே கொள்ளல் அவன் திருவடி சிந்திக்குந் திருவுடையார்க்கெல்லாங் கடமையேயாம். அத் திருவிலார்க்கன்றோ அக்கடமை யொருதலையா னொருசிறிது மொருஞான்று மொருவழியு மில்லாதொழிகின்றது. தானங்கள் பலவற்றுள்ளுஞ் சிறந்த அன்னதானஞ் செய்வார் மாட்டுச் சிறந்துநிற்குமதுபோலத் தருமசிரேட்டமாயுள்ள இதுவுஞ் செய்வார்கட் சிறந்துநிற்குமாறுகவே அந்நுழைப்பு, அவ்வறியார்செய்கைகளை அப்பெருமான் றடாது வாளாவிருக்கின்றனனென்பதூஉம் ஈண்டமைதிபோலும். சிவன், சத்தியைச் சபிக்கினுங் குமாரனைச்சபிக்கினும் சிவனைச்சபித்ததாகவே ஆமென்னும் உண்மை புலங்கொள அறியாமே அத் தலபுராணத்தில் அக் கதை இயற்றப்பட்டதென்பதற்கு “வேழமுகத்தனை விதித்த சாபப்பெருவலி தன்னைச்சாரும் பெற்றியாற் சாபங்கூறான்” என்பது சான்று பகரவே நிற்கின்றது. முருகனைச்சபித்தால் அது தன்னைச் சாராதென்று சிவன் கருதி, அம்

முருகனைச் சபித்தனனென்னும் பொருட்குரிய அச்செய்தி ஹாலாஸ்ய மாஹாத்ம்யத்தும் இன்று. அதன்கண் —

(तं दृष्ट्वा कुपितं सोऽपि शम्भुः कोपाकुलस्तदा ।
ऊहकोपवेहितं स्कन्दं शशापात्मजमप्यथ ।)

தம்த்ருஷ்ட்வாகுபிதம்ஸோபி சம்புஃகோபாகுலஸ்ததா ।
ஷூகோபவேஹிதம்ஸ்கந்தம் சசாபாத்மஜமப்யத ॥)

"அஞ்ஞான்று அந்தச்சம்புவுங் கோபத்தால் வியாபிக்கப்பட்டவனுப் கோபிக்கின்ற அக் கந்தனைப் பார்த்து, பின்பு ஊமையாகக் கடவையென்று தன்னுடைய புத்திரனாகிய அக்கந்தனையுஞ் சபித்தனன்" என்பதே யுளது. இதுதான், யாங்ஙனம் பயன்படும்! இந்த ஹாலாஸ்யமாஹாத்ம்யம் ஸ்காந்த மஹாபுராணத்ததெனச் சொல்லப்படினும், அதிலுள்ள அம் மாஹாத்ம்யத்தி லெழுதப்பட்டிருப்பினும் அஃதப்புராணத்தில் யாண்டேனு முளதன்று. ஒல்லை நூலாயுள்ள அப்புராணத்தின்கண் அம் மாஹாத்ம்யமென்ப திருத்தற் கிடனுமின்று. என்னை? பிற்காலத்த திருவாதவூரடிகளது சரித்திரமும், திருஞானசம்பந்தப் பெருந்தகையினது சரித்திரமும் அதனுழை யெழுதப்பட்டிருக்கின்றமையின். குணருத்திரமூர்த்தி பிரமதேவனது நெற்றியினின்று தோன்றினனென்று முந்துநூல் கூறுமாறு குமாரனுஞ் சிவனுடைய நெற்றிக் கண்களினின்று வந்தனனாகலின், அவன் ஹேற்றத்தானு மிழிந்தவனாகான். நரசிங்கம் ஒரு தூணிற் றோன்றியவாறுங் கருதுக. குமாரன் குருவாகவுஞ் சிவன் சீடனாகவு நின்ற 'சிஷ்யபாவம்' சிவனுக் கெக்காலத்து முளதென்று கூறொண்ணாததுபோலவே குமாரனுடைய பற்பல மூர்த்தங்களுள்ளும் பரிவாரதேவமூர்த்தமென்பதொன் றெக்காலத்து முளதென்று கூறொண்ணாததா மென்பதனால் அமைதி கெடாது. "மீனவர் சேனைகாவல ராயினார்" என்றபடி சிவன், வங்கியசேகர பாண்டியனுக்குச் சேனைத்தலைவனாகச் சென்றனன் நின்றனனென்பதுங் கருதுக. முன்னர்க் கல்லாலந் தண்ணிழற்கண் எழுந்தருளிய தென்முக பரமாசாரியமூர்த்தியே பின்னர்க் குமாரமூர்த்தி சன்னிதிமுன்னே சீடனாய் நின்றனனென்பதை நுனித்து நோக்கின், இக் குமாரமூர்த்தியே ஆசாரியர்க் கெல்லாம் ஆசாரியன்; இனி, இம்மூர்த்தியை வழிபட்டு வாழ்மின் எனப் (பிரணவப்பொருளை நன்குணராதிருந்த) பிரமன் முதலிய தேவர்க்கும், பிறர்க்கும் முதல்வன் அறிவுறுத்தருளினனென்பதும், அது நிலையூன்றுமாறே அவன் சீடனாய் நின்றுகாட்டின

னென்பதூஉம் புலப்படும். இம்முடிபினை உத்தர கைலாசபதியாகிய சிவபெருமாற்கும், தக்ஷிண கைலாசபதியாகிய அகத்திய மாமுனிவரர்க்கும், பீடுகெழு பிறர்க்குங் குருவென விளங்கியுள்ள அக் குமாரனை வழிபட்டு நிற்கு நிலைக்களத்தே பயனமைந்த ஆன்மகோடிகள் ஆன்மலாபத்தை ஒல்லையி லெளிதினெளிதாகப் பெறுமென்ப துணராக் கிடக்கின்றது. கூட்டிப்பெறுதாங் கையன் கைகூட்டி நின்று காட்டிய அருமைப்பாட்டினை யுணர்வார் நல்லூழுள்ளாரன்றி எவர்தாம் வல்லராவர்? ஆசிரியர் தமது பாடலில் —

"போகமாலவிரிஞ்ச னேனைவிண் ணவரும்
புகழ்சரணம்புய வடிகேள்
ஏகநாயகனு யிருந்துள வொருசீ
யெளியனை வலியவந் திழுத்து
யோகமே யோகமிலே நீயென வுரைப்பேன்"

என்றும், திருவலங்கற்றிரட்டின் ௩-ஆங் கண்டத்தில் —

"அன்னவா கனனை யருஞ்சிறைப் படுத்திமெய் யறிவார்
பன்னகா பரணற் கோமுதற் பொருடனைப் பகர்ந்தோய்
கன்னல்சூழ் சோலை மலைமனு நின்கழல் கருதற்
கென்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநன் மனமே."

என்றுங் கூறியுள்ளமை இங்ஙன் நுதலிக் கொள்ளத் தக்கனவே. கேவலம், காவடி முருகனென்றே பிழைக்கின்ற கதியும் இங்ஙனம் யாதாகற்பாற்று!

இப் பரமமூர்த்தி சந்நிதியிற் றோத்திரமாகப் பாடத்தக்க தமிழ்ப்பாக்கள் பலவற்றுள்ளும் அருணகிரிநாதப்பெருந்தகை திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழ்களே முதன்மை படைத்தனவாகும். அங்ஙனம் அப்பெருந்தகையின் ஏனைய பிரபந்தங்களுமாம். என்னை? அவ்விறைவ னொருவனையே வழிபட்டுய்ந் தோனுடைய சீர்த்த திருவாக்குக்கள் அவையாகலின்; இறைவனுடைய திருச்செவிகளை யினிது துளைத்த துதிகளும் அவையாகலின். இவற்றை விடுத்துத் தேவாரதிருவாசகத திருப்பாட்டுக்களையே சிலர் பாடுகின்றனர். சிவபஞ்சாக்கரசெபம் ஐம்முகச்சிவனைத் திருத்திப் படுத்துவதுபோல அறுமுகச்சிவனைத் திருத்திப் படுத்தாது; குமார சடக்கர செபமே அறுமுகச்சிவனைத் திருத்திப்படுத்து மென்பதையும், அன்ன பிறவுரிமைகளையும் அறிந்துகொள்ளும் ஆற்றலில்லார் அவ்விதம் பாடுவோராவர். அவரது செய்கை வழிபாகமாட்டாது. தேவார திரு

வாசகங்களிற் குமாரப் புகழ்ச்சி யாண்டோ ஒன்றிரண்டு காணப்படினும் அஃது அவை பாட்டுடைத்தலைவனுக்குரிய தனிப்புகழ்ச்சியாகமாட்டா. தங்கட்கனுக்கிரகித்தருளிய சிவமூர்த்திகளையே திருஞானசம்பந்தர் முதலிய பேரருளாளர் அத்திறப் புகழ்ச்சியில்வைத்துப் பாடினர். திருப்புகழ் முதலியன ஆக்கியோனுந் தனக்கனுக்கிரகித் தருளிய குமாரமூர்த்தியினையே அவ்விதப் புகழ்ச்சியில் வைத்துப் பாடினன். இவ்வாறு பற்று நெறியே —

(𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑍋
𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌂 𑌶𑌰𑌣𑌮𑍁𑌪𑌗𑌮𑍍𑌯

ஸர்வகர்மாங்பரித்யஜ்யநிர்மமோநிரஹங்காரோ
பூத்வா ப்ரஹ்மைகம் சரணமுபகம்ய)

"எல்லாக் கருமங்களையும்விட்டு நான் எனதென்பன இல்லாதவனாய்ப் பிரமமொன்றையே சரணமாகவடைந்து" என்று நிராலம்போபநிஷத் திகழ்த்துகின்றபடி பந்தவிடுதலை பெறுவாரெல்லாங் கோடற்பாலதாம். இதுபரம்பரத்திற் றியானம் ஒருமூர்த்திபாவனையிலேயே கூடுமாகலிற் பலமூர்த்தி வழிபாடு பந்தமேயாம். ஒருமூர்த்தியினுடைய பலமூர்த்தங்களையும் அங்ஙனம்வைத்துத் தியானித்தலுஞ் சாரூபகதியைக் கொடுக்குமொரு பந்தமாம். பகிர்முகத்தே காணப்படு சிவ சம்பந்தமான விம்பங்களையுஞ் சிவோபாசகர்களையும் தன்னுடைய உபாசனாமூர்த்தியின் ஒள்ளிய மேனியேயெனப் பாவித்து உழுவலின் வழிபடல் இவ்விதபந்தமாகாதென்று. பசுவர்க்கத்துள்ள பலதேவமூர்த்திகளையும், பதியாயுள்ள சிவமூர்த்தியையும் அறிவின்மையின் ஒன்றெனவிரவிக்கொண்டு பகிர்முகாராதனை புரிவோருடைய புண்ணியம் பொதுவதாயிருத்தலால் அவர் சிறந்த சிவலோககதியி லொன்றுமெய்தாமே பொதுத தருமங்களைக் கருதிவரு தேவருளை இந்திரனுங் கொடுக்கப்படு சுவர்க்கங்களை யடைந்து மீளத் திரும்புவோராகலிற் குமாரபரமேசுவர கதியைவிரும்புவோர் குமாரமூர்த்தியையே தியானித்தல் வேண்டும். அறியார்பலர் இதிலிழுக்கினரென்க. குமாரசன்னிதியின் மேன்மொழிந்தவாறு திருப்புகழ் முதலியன பாடிய பின்றைத் தேவார திருவாசகங்களும் பாடலாம். இது மரபாம்.

ஈண்டுக் குமார வழிபாடு கௌமாரசமய மெனப்படுமோ? எனின்,— கூறுதும். குமாரனைச் சிவமென்று வேதம் முதலியன

கூறுதலானும், ஷண்முகஸஹஸ்ரநாமத்திற் "சிவ:" என்னுந் திருநாமமிருத்தலினாலும், ஐம்முகச்சிவனும் ஆறுமுகச்சிவனுந் தம்மை நம்பிய ஆன்மாக்களைச் சேர்த்தருளுமொரு சொரூபசாயுச்சிய கதியும், அச்சொரூப பரம்பொருளுஞ் "சிவம்" எனப்படலானும், "ஆறுமுகனவனும் யாமும் பேதக மன்றாம்" என ஐம்முகச்சிவன் றிருவாய் மலர்ந்தருளின னென்பது பெறப்படலானும் அவ்வழிபாடு சைவமென்றே சாற்றப்படும்; அதுவே சாலவுடைத்தென்க. ஐம்முகச் சிவனுக்கும் மேலானவன் ஆறுமுகச்சிவனென்பதே மெய்ம்மைச் சைவமெனப்படுவது; அஃதீண்டைக் கேலாது. இதுபற்றி நூலாசிரியருந் தமது பாடலில் —

"பலதரக கோக்களின் பால்களெல் லாநிறப்
பண்பினி லேகமாகப்
பார்க்கின்ற தேய்ப்பநற் சைவத்தின் புறத்துகள்
பலருளா ரெனினுமுண்மை
கலையாவொர் சீர்மையை யுணர்ந்துமுன் னிருமையாக
நிலையாத சமயமெனவுஞ்
கழறுவார் பேதப் படுத்தியிங் கப்பாற்க
கழறினூஉ மென்னலைசவ
நிலைகுறையு மோவைந்து மாறுமொன் றொன்றுள்ள
நேர்குறையு மோசொன்னவா
நிஜநிலையி லென்னைவாழ் விக்கவரு தெய்வமே
நிட்டையின் பப்பிழம்பே
மெய்யாத் தத்வசிவ ஞானிக ளகந்தோறு
மிளிர்பரஞ் சோதிவடிவே
வீரமுள தேவர்தவ மேவுறுவர் தொழுதிரு
வேரக மமர்ந்தவேளே."

என்று கூறியுள்ளார்; தெளிக. (ஓம் அதஹைநம் பகவந்தம் ஜாபாலிம் பைப்பலாதி: பப்ரச்ச) "ஓம் அதஹைநம் பகவந்தம் ஜபாலிம் பைப்பலாதி: பப்ரச்ச" என்று தொடக்கத்த (ஸாமவேத) ஜாபால்யுபநிஷத்—

(பகவந்மே ப்ரூஹி பரமதத்வரஹஸ்யம்) "பகவந்மே ப்ரூஹி பரமதத்வரஹஸ்யம்" என்றும், (யதாஜ்ஞாதமிதி) "யதாஜ்ஞாதமிதி" என்றும், (ஷடாநநாதிதி) "ஷடாநநாதிதி" என்றும், (தேவேசாநாதிதி) "தேவேசாநாதிதி" என்றும், (ததுபாஸநாதிதி) "ததுபாஸநாதிதி"

என்றுங் கூறிச்செல்லு மதரானே பைப்பலாதியென்னும் பெயருடையார், பகவானன ஜாபாலியென்னும் பெயரிய மாவிருடியை நோக்கிப் பரமதத்துவ ரகசியம் யாது? என வினுதலும் அதனைச் சொல்லத்தொடங்கிய அவ்விருடியை மறித்தும் அப் பைப்பலாதி யென்பார், இவ்விரகசியத்தினை நீயிர் தெரிந்துகொண்டது யாவர் பால்? எனக் கடாய கடாவிற்கும், மேலும் அவர் வினுய வினுவிற்கும் அவ்விருடி, 'யான் அன்னணந் தெரிந்துகொண்டது (ஷடாநநன்) அறுமுகன் பால்' என்பதையும், 'அவ்வறுமுகன் அதனை பொருப்பட்ட சிந்தையிற் றனுது ஈசான சொரூபத்தினின்று வெளிவரக்கண்டவனுயுளன்' என்பதையும் விடைகளாக விறுத்தனனென்பதறியப்படுதலினுலும், அவ்வுபநிஷத்தின்கண் அறுமுகன தனுக்கிரகமாக அம்மாவிருடி திருவாய் மலர்ந்தருளிய முடிவு (வ்ரதமேதச்சாம்பவம் =) "இது சாம்பவ விரதம்" என விருத்தலினுலும் அறுமுகச்சிவன தனுக்கிரகம் 'சைவம்' என வீண்டுததுணிதல் மதுகை யுறுகின்றதன்றே. சாம்பவ விரதஞ் சைவ விரதமெனப்படும். "நல்ல துதி" எனக் கிளந்தமையின் அத்துதி, வனப்பு வாய்ந்த பாட்டாயிருக்க வேண்டுமென் றறிவுறுத்தருளினுரென்பது பெறுதும். இக்காண்டத்து உ-ன் உரைக்கட் "பாடுவார்க் கருளு மெந்தை" என்பதாதியாக வெடாக் காட்டப்பட்ட காட்டுக்களும், நூலாசிரியரது திருவலங்கற்றிரட்டின் உ - ஆங் கண்டகது வஞ்சியியற்கண் —

"பப்புப் புப்பாப் பப்புப்பூப்
பப்பப் புப்பே பாப்பாப்பை
பப்பப் புப்பூ பாப்பாப்பிப்
பப்புப் பாப்பொப் பொப்பொப்பே."

எனவரு பகரவிகற்ப மடக்கு வஞ்சிவிருத்தமு மிங்குக கவனிக்கத் தக்கன. விருத்தத்தின் பொருள்:— "பம்பு உப்பு= ஆரவாரிக்கின்ற கடலானது, உப்பா= அதிகப்படாத, பப்பு பூ= பரப்பாகிய பூமிக்கும், பம்பு அப்பு= பரவு நீரை, பே= நுரைகிளரப்பெய்யு மேகத்திற்கும், பாழி பாப்பு= பெரும்பாம்பாயுள்ள சேடனுக்கும், ஐ= அரசனுயுள்ளானே, பப்பு அப்பு பூ= பொலிவுடைய கங்கையில் வந்தவனே, பா பா= (செசவு) பாப்போற் செய்யப்படு பாட்டுக்கு, அப்பு= அப்பனே, இ பப்புப்பு= இப் பப்புப்பு என்றற் றொடக்கத்து, ஆப்பு= பாட்டை, ஒப்பு ஒப்பு ஒப்பு= ஒப்புக்கொள் ஒப்புக்கொள் ஒப்புக்கொள்" என்க. ஏ - ஈற்றசை. பம்பு என்னுமிரண்டும்

'பப்பு' என வலித்தல் விகாரப்பட்டன. பாழி 'பா' எனக் கடைகுறைந்தது. பாப்பா அப்பு என்பது 'பாப்பாப்பு' என மரீஇயிற்று. அப்பன் என்றபாலது 'அப்பு' எனத் தொகுத்தலாயிற்று. ஆப்பு - யாப்பு என்பதன் மரூஉ.

' சொலிய, சொன, செல, நல - விகாரம். வரைப்பு — எல்லை. நீ என்பது வருவித்து 'நீ செல்ல' என வுரைக்க 'அவன் மந்திரம் அன்பொடு திரிபுர அருளினம்' எனவியையும். மந்திரத்தை என இரண்டனுருபு விரிக்க. அளியில் என்பது வருவித்து 'அளியினின்று' எனவுரைக்க. அளி அன்பு. நிலவுதல் = ஒளிசெய்தல்; "அலங்கு நயங்க லவிர்த னிலவல்" என்பது பிங்கல நிகண்டு. 'சிதம்பரமனை' அது - பகுதிப்பொருள் விகுதி. (௫௮)

ஐயமறுத்தருளியன் முற்றிற்று.

---

## உ. தோத்திரவியல்.

சீடன்செய்த தோத்திரமும், பிரார்த்தனையும்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

தந்தன தந்தன தந்தன தந்தன, தந்தன தந்தனன(௫).

நன்றென மைந்தனு வந்துபரிந்தரு
ணந்தன கந்தகுகா
மன்றமி குங்குழ லஞ்சுர குஞ்சரி
மங்கைம ணந்தமனா
என்றன ரும்பர சங்கர புங்கவ
வெங்குநி றைந்தவனே
இன்றென ரந்தையொ டுங்குவ ணம்புரி
யென்றுப ணிந்தனனே.

சீடனும், அருளிச்செய்தது நல்லதே (அவ்வண்ணமே செய்வேன்) என்று மனமகிழ்ந்து, அன்புசெய்த ஆநந்தனனே! கந்தனே! குகனே! தெய்விகமணம் பரிமளிக்கும் அளகமும் அழகுமுடைய தேவகுஞ்சரியை மணந்தருளிய அரசே! என்னுடைய அருமையாகிய பரனே! சங்கர தேசிகனே! யாண்டும் நிறைந்துள்ள மேலானவனே! உன்னை விசாரித்துணரும் பாக்கியம் பெற்ற இக்காலத்தில் அடியேற்கு நேர்ந்துள்ள துன்ப மொடுங்கும்படி செய்தருளெனப் பிரார்த்தித்து வணங்கினன்.

அரன்.- (ஹர:) ஹரன் என்னும் வடமொழிப்பெயரின் விகாரம்; முடிவிலே மாயாகாரியமாயுள்ள அனைத்தையு மழிப்பவன்; ஆன்மாக்களின் மலங்களை அழித்தருள்பவன்; அடியார் துயர் களைபவனெனும் பொருள்களைப் பயக்கும்.

(तस्मादुपसंहर्त्रे महाग्रासाय वै नमो नमः)

" தஸ்மாதுபஸம்ஹர்த்ரே மஹாக்ராஸாயவைநமோநம: "

என்று பஞ்சருத்ரோபநிஷத்து ளொன்றாய அதர்வசிரோபநிஷதங் கழறுதல் கவனிக்க. தமிழ் :—"மா அழிப்புத்தொழில் புரிவோனுய்த் தன்வயமாக்கும் மா தொழில் இழைப்போனா யுள்ளோற்கு வணக்கம் வணக்கம்" எனவாம்.

நன்று = உத்தமமானது; நன்மையென்னும் பண்படியாப்பிறந்த பெயர். பரிதல்— அன்புசெய்தல். சங்கரபுங்கவன் = சங்கர தேசிகன்; "தேவே சிவசங்கராதே சிகனே" என்றார் ஸ்ரீமத் - அருணகிரிநாதருநம். சங்கரன் = சுகத்தைச் செய்பவன். (௩௧)

தானன தானன தானன தானன, தானன தானதனா.

மாபல தேவர்க டேவும னோலய
வாழ்வுடை யார்முதல்வா
நீபந றுவணி மார்பவ னாத
நீதிப ராகுமரா
பாபவி நாசந டேசகு கேசுர
பாலவி லோசனமா
தாபமு ளேனுனை யேகதி யாயடை
சார்புள னானதியால்.

மகத்தான வலியுடைய தேவர்களனைவரும் வழிபடு மகாதேவனே! மனோலயமாகிய வாழ்க்கையினை யடைந்த பெரியோர் தலைவனே! தேன் றுளிக்கும் கடப்பமலர் மாலையா லலங்கரிக்கப்பட்ட மார்பனே! நித்தியனே! நியாயபரனே! (என்றும் மாறாத குமரப்பருவமுடைமையால்) குமரனென்னும் திருப்பெயர் வாய்ந்தவனே! பாபநாசனே! நடேசனே! குகேசுவரனே! நெற்றிக்கண் ணுடையானே! சனன மரணங்களாகிய கோடையிலகப்பட்டுத் துக்கமாகிய மகா தாபமடைந்த வடியேன் உன்னையே சரணமாக வடையுமொரு சார்புடைய னாயினேன்; (ஆதலின் என்னை) ஆண்டருள்செய்வாய்.

பிருஹதாரண்யகோபநிஷத்தின் ௫-ஆம் அத்தியாயத்து ௯-ஆம் பிராஹ்மணம் —

([illegible]
[illegible]

அஷ்டௌவஸவ ஏகாதசருத்ரா த்வாதசாதித்யாஸ் த
ஏகத்ரிம்சதிந்த்ரச்சைவ ப்ரஜாபதிச்ச த்ரயஸ்த்ரிம்சாவிதி)

"வசுக்களெண்மர், உருத்திரர் பதினொருவர், ஆதித்தியர் பன்னிருவர் ஆக முப்பத்தொருவர். இவர்களோடு இந்திரனும், பிரஜாபதியுமாகத் தேவர் முப்பத்துமூவர் (= முப்பத்துமுக்கோடி தேவர்)" என்று கூறுமாறு இத்தேவர்கட்கும், பாயிரத்து ௨-ன் உரையிற் காட்டப்பட்ட சுருதியின்படி தேவர்களாயுள்ள விட்டுணு முதலாயினார்க்கும் முருகப்பெருமான் தேவராதலின் அவன் "தேவர்கள் தேவன்" எனத் துதிக்கப்பட்டனன். இவ்வாறாகவே "பொரு புங்கவரும் புவியும் பரவுங் — குருபுங் கவவெண் குணபஞ் சரனே" என்று அருணகிரி நாதரும், "மேலுலாந் தேவர் குலமுழு தாளுங் குமரவேள்" என்று (திருவிசைப்பாவில்) சேந்தனாருந் துதித்துள்ளார். புங்கவர் = தேவர். 'தேவர்கள் தேவன்' என்னு மிம்மேம்பாடு — ௪௪-ன் உரையிற் பிரமாணிக்கப்பட்ட ஸம்பவ காண்டத்து ௩௫-ஆம் அத்தியாயம் —

"குமாரனது கட்டளையினாலேயே நமன் பாவிகளை வாணாள்களில் நோய்களானும் மரித்தபின்னை நரக யாதனைகளானுந் தண்டிக்கின்றனன்: நவப்பிரசாபதிகளோடு நான்முகன் சிருட்டி புரிகின்றனன்: நாராயணன் திதிசெய்கின்றனன்: காலாக்கினிருத்திரன் பிரளயகாலத்திற் சருவசங்காரம் உஞற்றுகின்றனன்" என்றோதுமாற்றானும், மேலைய ஸம்பவகாண்டத்து ௩௧-ஆம் அத்தியாயம் —

([illegible]
[illegible]

ததஸ்தேவிபுதேந்த்ராத்யா ப்ரஹ்மவிஷ்ணவாதயஸ்ஸுரா:।
தத்தேஜோமண்டலஸ்யைதே ஸஹஸ்ராம்சமலோகயந்॥)

"சுரர்களாகிய பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவசிரேட்டரனைவருங் கந்தபிரானாகிய அவனது அளவிலாத் தேஜோமண்டலத்தில் ஆயிரத்தில் ஓரமிசவளவே யறிந்தனர் (= அதிகமறிய வலியிலாரயி

ஞர்)." என்று மிழற்றுமாற்றானும் எறாழூறும். அக்கினி, பிருதிவி, வாயு, அந்தரிக்ஷம், ஆதித்தியன், தியுலோகம், சந்திரன், நக்ஷத்திரங்க ளென்பனவே வசுக்களெண்மர். இவ்விவரம் —

> " கதமேவஸவ இத்யக்நிச்ச ப்ருதிவீசவாயுச சாந்தரிக்ஷம்
> சாதித்யச்ச த்யௌச்ச சந்த்ரமாச்ச நக்ஷத்ராணிசைதே
> வஸவ ஏதேஷு ஹீதம் வஸுஸர்வம் ஹிதமிதிதஸ்மாத்
> வஸவஇதி ॥ "

என அந்தப் பிருஹதாரண்யகோபநிஷத வாக்கியங்களைத் தொடர்ந்து வருவாக்கியங்களி னறியப்படுகின்றது. பிங்கலநிகண்டினர் —

> " ஆதித்தர் பன்னிருவ ரச்சுவினி களிருவர்
> ஈசர் பதினொருவ ரெண்மர் வசுக்கள்
> ஆக முப்பத்து மூவர்தம் பெயரே. "

என்று கிளத்துமாற்றானே இந்திரனையும் பிரஜாபதியையு நீக்கி அச்சுவினிக ளிருவரைச்சேர்த்துத் தேவர் முப்பத்து மூவரெனக் கொண்டார் என்க. அவர் அவ்வாறு கொள்ளினுஞ் சுருதிகூறுமாறு கோடலே யுசிதமாம். மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியனெனப்படுவோரே ஏகாதசருத்திரரென்று மேலைப் பிங்கல நிகண்டு கூறுகின்றது.

நெற்றியிற் கண்ணுடையபகுதியிற் சண்முகன் " பாலவிலோசனன் " எனப்பட்டனன். பாலம் — நெற்றி. அக் கண் ஆறுமுகங்களினு முண்மையிற் கண்கள் பதினெட்டாகும். பிரமாணம் —

(𑌦𑍍𑌵𑌿𑌪𑌾𑌦𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌭𑍁𑌜𑌂 𑌷𑌡𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑌡𑍍𑌵𑌿𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।

த்விபாதம்த்வாதசபுஜம் ஷட்வக்த்ரம் த்ரிஷட்க்ஷணம் ।)

" இரண்டு திருவடிகளையும், பன்னிரு தோள்களையுமுடைய சண்முகப்பெருமாற்குப் பதினெண்கண்கள் " என்று ஸ்காந்தமஹாபுராணத்தின் சம்பவகாண்டத்து ௨௮ - ஆம் அத்தியாயமும்,

(𑌷𑌡𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌭𑍁𑌜𑌮𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌮𑍍 ।
𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌰𑍂𑌪𑌮𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 ॥

ஷட்வக்த்ரம்த்வாதசபுஜ மஷ்டாதசவிலோசநம்
அநுக்ரஹாயலோகாநாம் ரூபமங்கீக்ருதம்சுபம் .)

“ஆறு திருமுகங்களும், பன்னிருபுயங்களும், பதினெட்டு விழிகளுமுடைய திருமேனியானது உலோகானுக்கிரகார்த்தமாக அங்கீகரிக்கப்படுகின்றது” என்று மேலைச் சம்பவகாண்டத்து ௩௫-ஆம் அத்தியாயமும்,

([illegible]
[illegible]

ப்ரஸந்நஷண்முகாம்போஜ மஷ்டாதசவிலோசநம் ॥
த்வாதசாயுதஸம்பந்ந புஜத்வாதசமண்டிதம் ।)

“ஆறு திருமுகங்களையும், பதினெட்டு நேத்திரங்களையும், பன்னிரண்டாயுதங்கள்பரித்த பன்னிரு கைகளையுமுடையவன் (இளம்பெருமான்)” என்று மேலைச் சம்பவகாண்டத்து ௪௩-ஆம் அத்தியாயமும்,

([illegible]

ஷட்வக்த்ரம்த்வாதசபுஜம் த்ரிஷண்ணயநபங்கஜம் ।)

“ஆறு திருமுகம், பன்னிருகரம், பங்கயமலரன்ன பதினெண்கண்” என்று மேலைச் சம்பவகாண்டத்து ௫௦-ஆம் அத்தியாயமுங் கூறுகின்றன காண்க. இச் சொப்பதத்தால் சண்முகனுக்குப் பன்னிருகண்களை கூறல்வேண்டுமென்றது வம்புவாதமும் வீணாய்ப் போயிற்றென்க. ஆயின்,

([illegible]

ஷட்வக்த்ரோபாலவேஷச்ச த்வாதசாக்ஷஸ்ததாபுஜ: ।)

“(குமாரன்) ஆறுமுகங்களையும், இளமைப்பருவத்தையும், பன்னிரு விழிகளையும், அவ்வளவு (=பன்னிரண்டு) தோள்களையுமுடையவன்” என்று காமிகாகம பூர்வபாகத்து அர்ச்சநவிதிபடலமும்,

“பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
- - - - பூவணத்தெம் புனிதனார்க்கே”

என்று திருநாவுக்கரசரது தமிழ்மறையுஞ் சாற்றுதலெவன்? எனின், — முற்காண்டத்து ௩௫-ல் உரைக்கப்பட்ட சாந்தோக்யச்சுருதியானது சூரியன் மத்தியிலிருக்கின்ற சிவனது (மூடப்பட்ட) நெற்றிக்கண்ணை நீக்கி ஏனையிருகண்களையுங் கூறினாற்

போல, இளம்பூரணனுடைய முகங்கடோறுமுள்ள நெற்றி விழிகளை நீக்கி மற்றைப் பன்னிருவிழிகளையுமே இப்பிரமாணங்கண் மொழிவனவாயினவென்பது அவிரோத நயமாகப் பொருந்துமென்க. 'பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்' என்பது, சென்னைச் சைவ வித்தியானுபாலன யந்திரசாலையில் 1911 - ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட தேவாரத்திருமுறைப் பிரதியிற் 'பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்' என விருக்கின்றது; பாடபேதமாகவுங் காணப்படவில்லை. எப்படியாயினும் போந்த காமிகாகம படலம் பன்னிருவிழிகளே கூறிற்றென லறியக்கிடக்கின்றது. கச்சியப்ப சிவாசாரியராற் பாடப்பட்ட தமிழ்க்கந்தபுராணம் வடமொழிப்புராணத்திற்கு நேரான மொழிபெயர்ப்பன்று. அத் தமிழ்ப்புராணம் குமரகோட்டத்துக் குமார மூர்த்தியினாற் றிருத்தப்பட்டதென்பதூஉம் நம்பத்தக்கதன்று.

நறு நீபம் என மாறுக. நறு = தேன்; இச் சொல்லிலக்கணம் நகூ - ன் உரையி லுரைத்தாம். பாபவிநாச - வடநூன்முடிபு. (சுஎ)

கலிநிலைத்துறை.

தானன தானா தானன தானா தனதானா.

சேலன கோவார் வேலன தோளார் சிவைசேயா
மாலன மாலா ரோதிமொய் கானார் மகணேயா
மூலப ரேசா சீலந டேசா முருகாமா
சாலவி னோதா வானுடை யாய்தா டரவாவா.

சேற்கெண்டையனைய கண்களையும், மூங்கிலனைய தோள்களையுமுடைய சிவையெனும் பெயரினளாகிய பார்வதியின் நந்தனா! மேகம் போன்ற கருநிறமார்ந்த அளகத்தையுடைய குறவர்மகளாகிய ஸ்ரீ வல்லிதேவியின் பிரியநாயகா! அனைத்துலகுக்கும் மூலகாரணமாகிய பரம்பொருளெனப்படும் ஈசனே! பஞ்சகிருத்திய சீலத்தையுடைய நடேசனே! முருகனே! சிறந்த அனேக அற்புதச் செய்கைகளை யுடையோனே! உயிருள்பொருள்க ளனைத்தையும் உடைப் பொருளாக (=அடிமையாக) வுடையானே! உன்னுடைய திருவடிகளைத் தர எழுந்தருள்வாய்; எழுந்தருள்வாய்.

வேல் = மூங்கில். 'மால்' இரண்டனுள் முன்னையது மேகம்; பின்னையது கருநிறம்; பிங்கலந்தைகண்டு காண்க. ஓதி = அளகம். மொய்கானார் = மொய்த்த கானிலுள்ளார்; குறவர் என்றபடி. (சுஅ)

சூரச மாரா வாரக ராவார் சுகராயா
நாரசு ரேசா வீரகு மாரா நடராயா
ஈரவி ராமா மாமயி லாவே சிடரோறாத்
தாரவி சாகா காநனி காவா சகமீதே.

சூரசங்காரனே! மாலைதரித்த கரனே! நிறைந்த ஆனந்தராசனே! அன்புடையோனே! சுரேசனென்னுஞ் சிறப்புப்பெயர் வாய்ந்தோனே! வீரனே! குமாரனே! நடராசனே! கருணையுள்ள இராமனே! பெருமைவாய்ந்த மயில்வாகனனே! குற்றமும் இடுக்கணுமற்ற தாரக வாசகத்திற்கு வாச்சியனுயுள்ளவனே! விசாகனென்னுந் திருப்பெயருடையானே! கற்பகக் காவே! (அடியேன் முன்) வருவாயாக. (இந்தச்) சகத்தின்கண் (அடியேனை) நன்கு காத்தருள்வாயாக.

அதர்வணவேத ராமரஹஸ்யோபநிஷதம் —

ரமந்தே யத்ர யோகிந:

(ராமோரமந்தே யத்ர யோகிந:)

"எங்ஙனே யோகிகள் ரமிக்கின்றார் களோ அதுவாயிருப்போன் ராமன்" என்றுணர்த்துதலின் யோகிகளால் அடையப்படுகுகேசன், "இராமன்" எனப்பட்டனன். ராம சப்தம் அழகெனப் படுமாற்றானே அதனையுடைய அவன் இராமன் எனப்பட்டனனென் றுரைத்தலு மொன்று. ராமன் என்பதை 'இராமன்' என்றது தமிழ்நூன் முடிபு. ஈரம் அவனது கருணையை யுணர்த்துவதாயிற்று.

சூரஸம்ஹாரா என்னும் வடசொற்பெயர்விளி 'சூரசமாரா' என விகாரப்பட்டது. ராயா = ராஜாவென்பதன் விகாரம். நார் என்னும் அன்புடையோன் 'நாரன்'. கா = கற்பகக்கா; கற்பக தருவிற்குள்ள வேண்டிற்றெல்லாந் தருந்தன்மை மிகுந்துள்ள முருகவேளுக்கு உவமையாகுபெயர். 'வாசகமீது நனிகா' எனவியையும். சகமீது = சகத்தின்மேல்; மேல் - கண்ணுருபு. இதனை, சகம் ஈது எனப் பிரித்து, சீவர்களை மயக்கும்படியாய மாயாசகம் இஃதாகலின் இவண் என்னை நன்கு காத்தருளென்று பிரார்த்தித்தனன்சீட னெனும்பொருளுங் கொள்ளலாம். இச்செய்யுளும் மேற்போந்த வண்ணக் குழிப்பிற்று. (சுஉ)

தானா தானா தானா தானா தனதானா.

**பீடார் நால்வே தாதீ தாசோ பிதசோதீ**
**தாடா தாடா தாதா வேயா ளனவாடார்**
**கூடா வாழ்வா வாடா நாடா குகதேவா**
**ஏடா வாடா வீடீ வோநா மெனவாடே.**

சிறப்புவாய்ந்த நான்கு வேதங்கட்கு மெட்டாதவனே! சோபிதமாயிருக்கும் பரஞ்சோதீ! தாதாவே! திருத்தாளைத்தா, திருத்தாளைத்தா; ஆட்கொள் என்று கூறுதார் எய்தாத வாழ்க்கை யுடையோனே! குகதேவனே! (ஞான) ஒளியைத்தா; (வீடெய்துங்காறும்) வாணாளைத்தா. ஏடா இங்கே வா; ஏடா (நீ வருந்தற்க;) நாம் வீடுபேற்றைத் தருவோமென (நீ) கூறியருளல்வேண்டும்.

பிரமதேவனைச் சிறையிலிடுவித்து, அத்தேவனது படைத்தற்றொழிலைத் தானேசெய்துகொண்டிருந்தமையின், ஸ்ரீமத் - குஹதேவன் தாதாவெனப்பட்டனனென்க. (யாதா) தாதா = பிரமதேவன்; அமரஸிம்ஹங் காண்க.

'பீடார் நால்வேதாதீதா சோபிதசோதீ தாதாவே தாடா தாடா ஆளனவாடார் கூடா வாழ்வா குகதேவா வாடா நாடா ஏடா வாடா நாம் வீடீவோமெனவாடே' எனக் கூட்டுக. தாள் + தா = தாடா. என ஆடார் = என்று சொல்லாதார்; ஆடல் = சொல்லல்; "சொற்ற லாடல் சொல்லுதலென்ப" என்பது பிங்கல நிகண்டு. 'வாடா நாடா' என்பவற்றை வாள் ஆ நாள் தா என்ப்பிரிக்காமல் வாடாத நாட்டையுடையோனே! எனப்பொருள் செய்யினுஞ் செய்யலாம். ஆவதேல் வாடாமை அழியாமையின் மேற்றும். வாள் = ஒளி. ஏடா - தோழன் முன்னிலைப்பெயர். வா ஏடா என்பது வாடா என நின்றது. இரண்டனுருபுகள் விகாரத்தாற் றொக்குநின்றன. (௬௨.)

கலி விருத்தம்.

**நாதநி லைக்குயர் வுள்க ணலங்கிளர்மெய்ப்**
**போதவெ ளிக்குண் லசைவு பொருந்தவிடு**
**பாதமெ னக்கருண் முனிவர் பணிந்தறியென்**
**பேதம றுத்திட வுரிய பெருங்குகனே.**

முனிவர்கள் பணிந்தறிந்த நாதநிலைக்கு மப்பாற்பட்ட நலங்கிளர் மெய்ஞ்ஞான வெளிக்குள் நல்ல வுயிர்க்கூத்தானது பொருந்துமாறு செய்தருள்கின்ற சீபாதத்தை யெனக்குக் கொடுத்தருள்;

சிவன், சீவனென்று இருந்திரப்பட்டிருக்கும் என்னுடைய பேத நிலையை அறுத்தருளற்குரிய குகப்பிரமமே.

'முனிவர் பணிக்தறி நாத நிலைக்குயர்வுள கண்' எனவியைக்க. 'நாதநிலைக்கு' கு - என்னு நான்கனுருபு ஐந்தனுருபில் எல்லைப்பொருளில் வந்தமையின் உருபு மயக்கம். உள - உள்ள என்பதன் விகாரம். இடுபாதம் - வினைத்தொகை. பாதம், பேதம் என்பன இரண்டனுருபுதொகை. முனி, (சீ-மநி:) முநி? என்னுஞ் சொற்கள் தென்மொழியிலும் வடமொழியிலும் வரிவடிவில் வேறுபட்டு விசர்க்கம் ஈங்க, ஒலியளவிலொன்றுபட்டு முனிலைப்பொருள் வேறுற நின்றும் ஒருபொருளையே பயக்கின்றன. என்னை? பிரபஞ்சத்தை முனிவோனும், கடவுளையே முன்னு முன்னமுள்ளும் முனியெனப்படுவாரென்பது தென்மொழிப் பொருள் பிரபஞ்சத்தை விரும்பா மனமென்னும் அறிவினையுடையோனும், மௌனத்தையுடையோனும் முனியெனப்படுவாரென்பது வடமொழிப்பொருள் மந - ஞானமாதலின் ஞானத்திலிருப்போன் முநியெனவும், மநேஃ + உசச -- மநேருசசவென்று சேரும்; அதனுள் மந என்றதில் உ - எறி முந எனவாமிடத்து முநே முநி யெனவாமெனவும், விதிபாணிநீயத்து ச - ஆம் அத்தியாயத்து உ - ஆம் ஸூத்ரத்தில் "மநேருச்ச" எனவருவதெனவும் வழங்குப. முனி என்பதன்மேல் அர் - பலர்பால் விகுதி. வ் - பெயரிடை நிலை; எழுத்துப்பேறெனினுமாம். "வெறுப்பொடு முனை வொல்லாமை வேண்டாமை யுவர்ப்பே மாவே — அறுகதிட லவாவின் மைப் பேர்" என்னுஞ் சூடாமணிநிகண்டுத் தொடர்பின்படி அவாவின்மை 'முனைவு' எனப்படும். அதனை யுடையார் யாவரேயாயினும் அவர் முனைவரெனப்படுவர். இப்பெயரும் முனிவரென்பதற்கு வேறுபொருண்மைத் தன்று

இவ்விருத்தமும், அடியிலுள்ள மூன்று விருத்தமும் வண்ணக்குழிப்புக் குரியனவே யாயினும் அடிகளினீற்றசைகள் ஒன்றுபோ வில்லாமையின் உரிய குழிப்புத்தீட்டப்படவில்லை. இன்னணம் வண்ணமொலிக்குஞ் செய்யுளும் இந்நூற்கட் பலவென்க. (௲௪)

உயிரொடு ரித்துந லுடலு மொருங்குற நின்
றயர்பர நிட்டையி லொளிரு மருப்பொருளே
செயிரறு ரிற்கக னமது திருந்துநடங்
கயமுற நித்தலு மிடுகு கவந்தருளே.

பிராணவாயுவும், புருடனும், நோயற்ற சரீரமும் ஒற்றுமைப்பட நின்று (= அசைவற நின்று) புரியும் மேலான நிட்டையிற் பிரகாசத்துடன் வெளிப்படும் அருமைபாகிய பொருளே! குற்றமற்ற ஞானகாசத்துள்ள மதுரமே! திருத்தமாகிய நடனத்தை மகத்துவத்துடன் நாடோறுஞ் செய்தருளுங் குகேசனே! வந்தருள்வாய்.

செயிர்= குற்றம். மது= மதுரம்= தித்திப்பு. கயம்= பெருமை; பிங்கலநிகண்டு காண்க. 'அருளே' ஏ - ஈற்றசை. (௬௫)

தேனினு மின்புறு மினிமை சிறந்திடவென்
பானிகழ் கின்றபல் பனிகள் பறந்தறநின்
கோனுனுள் வந்தன னெனுரை குயின்றருள்செய்
ஞானந டம்புரி குகவெ னலம்பரமே.

ஞான நடனத்தைச் செய்யுங்குகனே! எனதான்ம வெளிக்கு ஆதாரமா யுள்ள வெளியே! என தகத்தே தேனினு மினிமை பொருந்திய பேரின்பம் பெருகவும், (என் கண்ணே) நிகழ்ந்துகொண்டிருக்கிற துன்பங்களெல்லாம் விரைந்தோடி யொழியவும் "(அடியவ!) உன்னுடைய ஆன்ம நாயகன் உனக்குள்ளே வெளிப்படலாயினன்" என்னும் இன்பவுரைகளைச் சொல்லி யருள்புரிவாயாக.

'ஞான நடம்புரி குக என் நல் அம்பரமே என்பால் தேனினும் இனிமையுறும் இன்பு சிறந்திட' என வியையும். பனிகள்= துன்பங்கள். "ஆமா கோனவ் வணையவும் பெறுமே." என்னும் விதிப்படி 'கோன்' என்பதில் ன் - சாரியையாம். உரைகுயின்று, நடம்புரி என்பன இரண்டனுருபுத் தொகை. (௬௬)

மூடம லங்கெட வறிவு முதிர்ந்திடவென்
னோடணை யன்பர்க ணெறியை யுவந்தருளுஞ்
சேடுய ரென்குக தகர சிதம்பரமாம்
வீடெனு மம்பெரு வெளியில் விளங்கொளியே.

அன்பர்கள் கருதுகின்ற நெறியை யறிந்தருளுநன்மை யதிகரித்துள்ள என்கடவுளே! தகர சிதாகாசமாகிய வீடென்னு நல்ல பெருவெளியில் விளங்கிக்கொண்டிருக்கும் ஒளியே! (என்) அறியாமையும் அதனுகார ஆணவமலமுங் கெடவும், ஞானம் விருத்தியாகவும் என்னை யணைத்துக்கொண் டருள்வாய்.

கடவுளைத் தடத்தலக்கணத்துஞ் சொரூபலக்கணத்தும் வைத்துத் துதித்த துதிகள் இவ்வியற்க ணுள்ளன வென்க. சுவானுபூதியிற் காணப்படும் ஏகபூரண சொரூபலக்கணம் போலாது பலவாய்ப் பிறிதுபொருளின் சார்பாயிருக்கும் பொதுவியல்பு தடத்தலக்கணமெனப்படும். தடத்தம்= அயலிடத்துளது. அப்பூரணமா யியற்கையாயிருக்குஞ் சிறப்பியல்பு சொரூபலக்கணமெனப்படும். ஸ்வ

ரூபம் சொரூபமென்றாயிற்று. வீடு, தகரசிதம்பரமாம் என்று வட மொழி வழக்குப்பற்றிக்கூறிப் பின்றை, அம்பெருவெளி என்று தென் மொழியிற் கூறினது விளங்கும்பொருட் டென்க. அழகென்னும் பொருளைப் பயக்கும் அம் - தகர புண்டரீகத்தின் மேற்று.

'அன்பர் கண்ணெறியை யுவந்தருளுஞ் சேடுய ரென்குக தகர சிதம்பரமாம் வீடெனு மம்பெருவெளியில் விளங்கொளியே மூடமலங்கெட வறிவு முதிர்ந்திட வென்னோடணை.' எனக் கூட்டுக. மூடமலம் - உம்மைத் தொகை; "அஞ்ஞான கன்மம்" என்புழிப் போல (சிவஞானபோதத்துப கo - ஆஞ் சூத்திர எது). மூடம் மலம் என்னும் பிரயோகத்தில் மகரவொற்றுக் கெட்டது; அதனால் இது பன்மைவிகுதி பெறா அஃறிணை உம்மைத்தொகை யெனினுமாம். 'என்னோடு' என்றவிடத்தில் ஓடு என்னும் மூன்றனுருபு இரண்டனுருபில் வந்தமையின் உருபுமயக்கம். அணை - ஏவலொருமை முற்று. கண்ணெறி - வினைத் தொகை. கண்ணல் — கருதல். சேடு — நன்மை. (கூள)

தோத்திரவியன் முற்றிற்று.

---

## h. முடிபியல்.

---

சீடன் சுவானுபூதி யடைதல்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இனவாறுண் ணனிதூண்ட மனச னன்று
 யிறைஞ்சிடலுந் திருவருளாற் சலன மில்லா
மனவடக்க மதுகூடிக் குகனைக் காணு
 மகிழ்வெய்தி மனசனெனும் பெயர்போ யாணர்க்
கனவறிஞ னாய்த்தனொரு குருவைக் கண்டான்
 களிகூர்ந்து தகரால யத்தைக் கண்ட
எனதரிய வன்பவென்னோ டிருத்தி யென்று
 விறையவனு மாங்கணைத்தின் பெய்தி னானே.

இவ்விதமாக உள்ளமானது பெரிதும் பிரேரிக்க; மனசனாகிய சீடன் (உள மொழி மெய்களால்) நன்றாக இறைஞ்சிய வளவிலே, திருவருளால் அசைவில்லாத மனோலயசித்தி கைகூடிக் குகேசனைத் தரிசித்து ஆனந்தமயமாகி மனசனென்னுந் தனது பெயர்போய்ப்

புதுமைவாய்ந்த மகா ஞானியெனப்படுவோனும் தன்னுடைய ஒப் பற்ற காரணகுருவைத் தரிசித்து (வணங்கி) நின்றனன். (அது கண் னுற்ற) ஆசிரியரும் பேருவகையுற்றுத் தகராலய பரம்பொருளைத் தரி சித்த எனதுண்மையான அன்ப! (இனி) நீ என்னுடன் சமமாயிருப் பாயாகவென்று சொல்லி (அவனை த தமதருகிருத்தி) அணைத்துடன் கொண்டு பேரின்பவீட்டை யடைந்தனர்.

இன்னவாறு என்பது 'இனவாறு' எனவும், தன்னொரு என்பது 'தனொரு' எனவுந் தொகுத்தல் விகாரப்பட்டன. இறைஞ்சிடலும் - உம் விகுதி பெற்ற இறந்தகால வினையெச்சம்; பிற்பொருளோடு விரைவையுங் குறிக்கும். காணூ= கண்டு; என்னூ= என்று; ஆவீற்றுடன்பாட்டு வினையெச்சங்கள். யாணர் = புதுமை; "யாணரே புதுமை தச்ச ரெய்திய வனப்பு நன்மை" என் பது ணகரமெதுகை. 'இறையவனுவ களிகூர்ந்து தகராலயத்தைக் கண்ட எனதரிய வன்ப வென்னோ டிருத்தி யென்று ஆவகணைத்தின் பெய்தினனே' என வியையும். தகராலய பரம்பொருளைத் தகராலயமென் றுபசரித்தார். அன்ப - அண்மைவிளி. இருத்தி இருப்பாயாக; ஏவலொருமை முற்று; இ - விகுதி, த - எழுத்துப்பேறு. ஏ - ஈற்றசை. (சுஅ)

வாழ்த்து.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

அருமறை யொடுக்க மாகி யாகமத் தீற தாகி
நிருமல சரத மாகி நித்தியா னந்த மாகிப்
பெருவெளி மயமா யுள்ளுட் பிறங்குமி ரகசி யத்தைக்
கருதுநர்க் கருளு மந்தக் கடவுளெந் நாளும் வாழ்க.

அருமையான வேதங்களில் இலைமறைகாய் போல மறைந்திருக் கும் இரகசியப் பொருளாய், காமிகாதி வாதுளாந்தமாகிய மூலாக மங்களின் சித்தாந்தமென் றோதப்பட்ட முடிந்த பொருளாய், எக் காலத்தும் அழுக்கில்லாததாய், என்றென்றுமுள்ள ஆனந்தமாய், அகண்டாகார வெளிமயமாய் உண்முகப் பிரமானுபூதியிற் பிறங்கி நிற்கும் இரகசியத்தைத் தன்னைத் தியானிப்போருக்குக் கொடுத்தரு ளும் அந்தக்கடவுள் எந்நாளும் வாழ்வானாக.

'அந்தக்கடவுள்' என்பது முன்னங் கூறப்பட்ட கடவுளெனும் பொருள் படத்தினும், சருவ புவனாந்தமான பரப்பிரகிருதியின்மேல் வைகுங் கடவுள், சருவ சங்காரமாகிய அந்தத்தைச் செய்யுங் கடவுள்,

"வேதத்தி னந்தமு மிக்கசித் தாந்தமு
நாதத்தி னந்தமு நற்போ தாந்தமு
மோதத் தகுமெட்டி யோகாந்த வந்தமு
மாதிக் கலாந்தமு மாறந்த மாமே."

எனத் திருமந்திரங் கூறுமாறு வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தமென்னும் ஆறந்தத்தும் ஒருங்குற்றிருக்குங் கடவுளென்னும் பொருள்களும் பயக்கும்.

அருமறை = அருமையாகிய மறை; பண்புத்தொகை. 'வாழ்க' என்றதில் க - வியங்கோள்முற்று விகுதி. (௬௯)

தையலர் சதுர்த்தர் நீசர் தாபதர் சுரரே னோருள்
வைதிக சைவ ஞான மார்க்கநன் னிலைவ ழாது
கைதவங் கடந்து நிற்குங் கனகமன் றடியர் வாழ்க
மெய்புக லிந்த நூலை விரித்தவர் கேட்டோர் வாழ்க.

எல்லா வருணத்து அரிவையர், நான்காம் வருணத்தவர், நீசர், தவநிலையுடையோர், தேவர், மற்றையோர் ஆகிய இவர்களுள் வைதிக சைவ ஞானமார்க்கமாகிய நன்னிலை வழுவாமல் (நாமே நலம்பெறல் வேண்டுமென்னுங் கருத்தாற் பிறர்க்கேதாதொழியும்) வஞ்சகத்தைக் கடந்து நிற்குங் கனகசபையிலுள்ள அடியவர் வாழ்க. உள்ளத்துள்ளபடி போதுகின்ற இந்நூலின் பொருளை விரித்தெடுத்துரைத்தோரும், இதனைப் பத்தி சிரத்தையுடன் கேட்டோரும் வாழ்வாராக.

சதுர்த்தரென்பது நான்காம் வருணத்தினராகிய சூத்திரரென்னும்பொருள் பயக்கும். இதனானே இவ்வருணமும், இதற்குமேலாம் உயர்வில் வைத்துரைக்கப்படு மூன்று வருணங்களுங் கருத்தாவினது ஆரம்ப சிருட்டியிலேயே தோன்றியுளவெனக் கூறிக் கொள்வாரது கொள்கையை யொப்புக்கொண்டு "சதுர்த்தர்" என்பது கூறப்பட்டதெனக் கொள்ளொண்ணாது. இத்தேயத்தாருள், துகளறு செந்தண்மைப் பொருண்மை துணியமாட்டா இரக்கமில்லார் பல்லோர் சதுர்த்தர் இன்னவ ரின்னவரென இழிவில்வைத்து வழங்கி வரூஉம் வழக்கினுட்பட்ட அச்சதுர்த்தருமென்பதறிவித்தற் பொருட்டே அப்படிக் கூறியதென்க. இம்முடிவு, சதுர்த்தரினுந் தாழ்ந்தார் நீசரென அவர்கொள்ளுமாறே கொண்டு "நீசர்" என்பதொன்று நிகழ்த்தினமையானும், முதன்மூன்று வருணத்துப் பெண்

களுஞ் சூத்திரர்க்குச் சமமோராவரென அவ்விரக்கமில்லாரா விழித்துக் கூறப்படு பெண்களையும் ஏனைய பெண்களையுமே "தையலர்" என வெடுத்து அவர்களையு முடன்கூறினமையானும் மொய்ம்புறும். கருத்து— 'இப்படித் தாழ்த்தப்பட்டாரும் வைதிகசைவ ஞானமார்க்க மாகிய நன்னிலை வழாது கைதவங் கடந்துநிற்குந் தன்மை யெய்துவாராயிற் பொதுவாகிய கனகசபையிலுள்ள அடியவராவர்' என்பதாம். பாயிரத்து ரு - ல், "தள்ளற் பாலது சாதி விகற்பமே" என்றதையும், அதுபற்றி பெழுந்த வுரையையும், அதன்கணுள்ள சுருதி வாக்கியங்களையுங் கவனிக்க. இங்குப் பிராமண சாதி முதலியனவற்றை பொய்புக்கொண்டு கூறுது சுட்டியுரைத்தன் மாத்திரையே யெடுத்துக் கொண்ட விச்செய்கை, வஜ்ரஸூசிகோபநிஷதம் முதலியவற்றிலுங் காணப்படுகின்றது.

இவ்வியவையான் முழுமுதற் கடவுள்— உலகவழக்கிலாய ஒரு சாதியார்க்கே, ஒரு கூட்டத்தார்க்கே, ஓரண்டத்தார்க்கே, ஒரு கண்டத்தார்க்கே, ஒரு தேயத்தார்க்கே, ஒரூரார்க்கே, ஒரு கிராமத்தார்க்கே, ஒரு தெருவார்க்கே, ஒரு நிலயத்தார்க்கே, ஒரு சமயத்தார்க்கே யுரியவனுயிருப்பனெனத் துணியும் மந்தபுத்தியும் மதவெறியுங் கூர்ந்தாருடைய கோட்பாடுகளி லடங்காதவனுய் வஞ்சகர் செய்கைகளி லெழுத்துக்களிற் சிமிழ்ப்புண் டொருசிறிதும் நிற்பா னல்லனுய்த் தன்னை யினிது அவாய் நிற்பார்க்கெல்லாம் முன்னுதல் பின்னுதல் இடையாதல் அனுக்கிரகித்தருளொரு பரம்பொருளா யுளோனென்பது பெறுதும். இது, சீரும் சிறப்பும் அறிவும் இவற்றிற் கெதிர் மறையா யுள்ளனவும் எல்லாக் கண்டங்களினு முள்ள எல்லாத் தேயத்தினர்க்கும் பொதுவாகக் காணப்படு மோருண்மையின் உறுதி யுறும்; உறும்; உறும்.

> "வாதமுஞ் சமய பேதமுங் கடந்த
> மனோலய வின்பசா கரமே
> எதுமொன் றறியேன் யாதுநின் செயலே
> யிறைவனே யேகநா யகனே"

என்று திருவெண்காட்டடிகளும் (பூதமுங் கரணமும் என்றற் றொடக்கத்துச் செய்யுளிலே) திருவாய் மலர்ந்தருளின ரன்றே. நூலாசிரியர் காசியாத்திரையில் —

"எம்மார்க்க மெவ்வா றியம்பினுஞ் சிவ னுன்றாற்
செம்மார்க்கு மென்பதென் றன் றீர்வை பராஞ்சோதீ."

என்றதூஉம் அம் முடிபினுள்ளதே. தேசாபிமானி தன் றேசத்தையும், பாடாபிமானி தன் பாடையையும், குலாபிமானி தன் குலத்தையும் உயர்த்திக் கூறுஞான்று நடுவுநிலைமை கெடாதிருத்த லரிது. அவ்வாறே மதாபிமானி கூற்றகத்துமாம். அந் நடுவுநிலைமையினையும் பேணிநிற்கும் மதாபிமானி, யாண்டும் வாய்மையையுந் தெய்வமேன்மையையுமே நன்கு பற்றுக்தக்கவனாகலின், அவன்மாட்டே மந்தபுத்தியும், மதவெறியுமிலவென்பது செவ்விதே. நடுவுநிலைமையே தெய்வவுரிமை. "தெய்வ விவேகம் மெய்யறி வார்கண்." என்னும் ஞானவாக்கியங் கருதுக. வேதாகம சம்பந்தமாயுள்ளது வைதிகசைவமாம். இது, சிவஞான சித்தியாரின் அ - ஆஞ் சூத்திரத்துப் கரு - ல் "வேதாந்தத் தீதில் பொருள்கொண் டுரைக்குநூல் சைவம்" எனவும், சிவப்பிரகாசத்தின் உ - ஆஞ் சூத்திரத்துப் கங - ல் "வீடு வைதிக சைவம் பகரும்" எனவும் வருவனவற்றானு மறியப்படும். இங்ஙனமே —

(𑌵𑌿𑌹𑌿𑌤𑍇𑌽𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍌 𑌉𑌭𑌯𑍋𑌸𑍍𑌸𑌙𑍍𑌕𑌰𑌾𑌰𑍍𑌥𑌕𑌮𑍍 ।
𑌆𑌧𑌾𑌨𑌵𑌾𑌕𑍁𑌣𑍍𑌡𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍈𑌦𑌿𑌕𑌶𑍈𑌵𑌕𑌃 ॥

விஹிதேந்த்யேஷ்டிகர்மாதௌ உபயோஸ்ஸங்கரார்த்தகம் ।
ஆதௌவாகுண்டஸம்ஸ்காரம் குர்யாதவைதிகசைவகம் ||)

"வைதிக சைவனானவன் அந்தியேட்டி முதலிய கன்மங்களில் வைதிக சைவங்களின் கலப்பாம் அக்கினியையேனும், குண்ட ஸம்ஸ்காரத்தையேனுந் தொடக்கத்திற் செய்தல்வேண்டும்" என்று காமிகாகமத்து அக்நிகார்யபடலம் நவிறல் நன்கு கருதத்தக்கது. இதனால், ஆகம சைவர்க்கு வேத முடம்பாடன்றென்பதூஉம், 'வைதிக சைவம்' என்னும் பிரயோகம் ஆகமத்தி லின்றென்பதூஉம் அறியார் கூற்றுக்களேயாம்.

நூலின் முதல், இடை, கடையென்னு மூவிடத்தும் மங்கலங் கூறுதன் மரபாகலின் வாழ்த்து, வணக்கம், உண்மைப் பொருளுரைத்த லென்னு மூவகை மங்கலங்களுண் முதற்கட் கடவுள் வணக்கங் கூறி ஈங்குக் கடைக்கண் வாழ்த்தியம்பினர். இவற்றினுட்பட்ட நூன் முழுதும் உண்மைப்பொருள் குறித்தலென்னு மங்கலமாம்; ஆகவே, மூவகை மங்கலமும் இந்நூற்கண் அடங்கியிருக்குமா றறிக.

ஞானமார்க்க நன்னிலை = ஞானமார்க்கமாகிய நன்னிலை. கைதவம் - வடமொழி; வஞ்சகமென்னும் பொருளுணர்த்தும். உருபுகளும், உம்மைகளும் விரித்துக்கொள்க. (௭௦)

ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம்.

முடிபியன் முற்றிற்று.

## இரண்டாங்காண்ட முற்றிற்று.

ஆகப் பாயிரமுட்படச் செய்யுள் - ௧௧௭.

---

## தகராலயரகசியமெனு மூலமும், சதானந்தசர்கரமெனு முரையும் முற்றுற்றன.

---

குமாரகுருபரன் றிருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

---

## தகராலய ரகசியச்

# செய்யுண் முதற்குறிப் பகராதி.


| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| **அ** | |
| அகமானதை | கச |
| அக்காரிய | உ0உ |
| அக்குகனன் | உகரு |
| அங்கிங்கெனா | அஅ |
| அச்சிவ | எகூ |
| அச்சுக | கசசு |
| அஞ்சாகு | கூஉ |
| அண்டமன் | ககரு |
| அத்துவாவெனு | உஉக |
| அந்தஞான | சஎ |
| அந்தவாரிய | ககூச |
| அந்தவி | கசரு |
| அபரஞான | ககூசு |
| அம்மலை | எரு |
| அருமறை | உகூ0 |
| அருவமொரு | க0 |
| அவ்வம்போரு | சக |
| அளப்பிலய | எஎ |
| அற்றமில் | ருசு |
| அன்புமீக் | உஎ |
| **ஆ** | |
| ஆகம்வாக்கு | உசசு |
| ஆசிலாச்சிவ | கஅகூ |
| ஆதியாமு | உகஅ |
| ஆவரண | எரு |
| ஆனுடலி | எஅ |
| **இ** | |
| இச்சவை | ககக |
| இட்டியனந்த | கஉச |
| இதயபங்கய | சகூ |
| இதுபொன் | உ0கூ |
| இந்துலிங்கம | உஙஎ |
| இந்நோர்மையி | கூகூ |
| இயல்பாரநடன் | அகூ |
| இருநில | உருஎ |
| இருளின் | கஎஉ |
| இனமும் | ஙஎச |
| இனவாருண் | உஅகூ |
| இன்னவா | உஙரு |
| **உ** | |
| உட்டுறவு | கசச |
| உயிரொடு | உஅஎ |
| உருவங்தெரி | ககூகூ |
| **எ** | |
| எனலும் | உ0ச |
| என்றறிஞனுங் | உகச |
| என்றறிஞனே | கஉகூ |
| என்றுதேசிக | கஅஅ |
| என்றமில | ருஅ |
| **ஏ** | |
| ஏமநாயக | ங |
| **ஒ** | |
| ஒல்லைப்பசு | கஅசு |
| **ஓ** | |
| ஓலவாரண | உகூ |
| **க** | |
| கண்ணனதி | கூஎ |
| கரிசறு | கஉ0 |
| களவெனு | உகஉ |
| **கா** | |
| காமம் | உ0எ |
| காமியார்த்த | ககூக |
| **கு** | |
| குலமுநாமமும் | ருஉ |
| குவ்வெனுங் | உஙசு |
| **கொ** | |
| கொலையென் | உ0சு |
| **ச** | |
| சரியைக் | ககூஎ |
| சருவபூரண | உசரு |
| சலனப்படு | கசுசு |
| **சி** | |
| சிட்டிதிதி | சுங |
| சிட்டியாதி | உருஉ |
| சிதமாகிய | கூரு |
| சிதமெனும் | சரு |
| சிற்பர | கருசு |
| **சீ** | |
| சீர்சிறந்துள | உங |
| **சு** | |
| சுத்தப்பிரம | ககூச |
| சுவ்வெனும் | உககூ |

| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| **சூ** | |
| சூரசமார | ௨௮௫ |
| **சே** | |
| சேலன | ௨௮௪ |
| **சொ** | |
| சொலிய | ௨௬௩ |
| சொற்றதல | ௧௫௧ |
| சொற்றவைந்து | ௨௧௨ |
| **த** | |
| தரிசித்திட | ௮௨ |
| தள்ளற்பாலது | ௭ |
| **தா** | |
| தாசமார்க்க | ௧௯௮ |
| தாண்டவனைக் | ௧௩௪ |
| **தி** | |
| திரிகுண | ௨௫௯ |
| **தூ** | |
| தூயநனீரிடைத் | ௧௨௧ |
| **தே** | |
| தேவர்காதை | ௧௭ |
| தேணினு | ௨௮௮ |
| **தை** | |
| தையலர் | ௨௯௧ |
| **ந** | |
| நறுவென்னுங் | ௨௧௧ |
| நறியபூ | ௨௫௪ |
| நன்றென | ௨௭௯ |
| **நா** | |
| நாதநிலை | ௨௮௬ |
| **நி** | |
| நிருத்தனை | ௧௧௩ |
| **ப** | |
| பசுவை | ௨௫௦ |
| **பா** | |
| பாதகமொ | ௧௩௧ |
| **பி** | |
| பிண்டமாமுரு | ௩௬ |
| பிரமமென்னு | ௩௯ |
| பிரமம்பரி | ௮௪ |
| **பீ** | |
| பீடார்நால் | ௨௮௬ |
| **பூ** | |
| பூரணகுமேச | ௮௧ |
| பூரணாக | ௨௩௯ |
| பூருநடு | ௧௫௫ |
| பூவலஞ்செய் | ௧௨௧ |
| பூவார்செஞ் | ௧ |
| பூவுதக | ௬௯ |
| **பொ** | |
| பொருளுள | ௨௩௭ |
| பொன்னவை | ௧௧௩ |
| **போ** | |
| போகபூமிக | ௧௯௪ |
| போதப்பொறி | ௧௬௪ |
| போதமல | ௧௬௦ |
| **ம** | |
| மனதிற்கரியது | ௧௬௭ |
| மனமேசனன | ௧௭௦ |
| **மா** | |
| மாபல | ௨௮௦ |
| **மு** | |
| முனமேசொன | ௮௭ |
| **மூ** | |
| மூக்குநுதி | ௧௪௯ |
| மூடமலங் | ௨௮௮ |
| மூர்த்திபாதி | ௧௯௫ |
| மூவகை | ௨௪௧ |
| **மெ** | |
| மெய்மை | ௧௨௬ |
| **மே** | |
| மேலாயுள | ௯௧ |
| **மொ** | |
| மொழிந்தமூ | ௨௦௧ |
| **யா** | |
| யாதொரு | ௨௪௩ |
| **வி** | |
| விடயக்கறை | ௧௬௮ |
| விறலோங்கு | ௧௮ |


செய்யுண்முதற்குறிப்பகராதி முற்றிற்று.

# தகராலயரகசிய மூலத்து
# விடய அகராதி.

## பாயிரம்.


விடயம். பக்கம்.

க. அருணகிரிநாதசுவாமிகள் துதி ... க௦
உ. அவையடக்கம் ... க௭
ந. ஆக்கியோனுக்குவயம் ... கஅ
ச. ஆறுமுகச்சிவபிரான்றுதி . ந
ரு. நூலின்பெயர் ... கச
சு. முன்னோன்றுதி ... க


## நூல்.


அ பக்கம்.

க. அண்ட தகராலயரகசிய நாமாதி விவரம் ... அஉ
உ. அண்ட பிண்டவடக்க இரகசியமும், அதனையறிய நடேசனைத்தொழு வென்பதும் ... சசு
ந. அம்முத்தியினையே பலதிறவைக்கியமாக விளம்பல் ... உசா

ஆ

ச. ஆரணத்தினு மாகமத்தினு முள்ள்முடி பொன்றே யென்பது ... கருசு
ரு. ஆவிடை இலிங்கவுண்மை ... உகரு
சு. ஆனந்தம் பிரமமென்ற சுருதியின்படி அது, சுப்பிர மணியமென்பது ... உநசு

இ

எ. இங்குரைக்கப்பட்டது தகராகாச நாயகமான குகப் பிரமத்தினது நிட்களநிலேயே; இனிச் சகளநிலே சாற்றுது மென்பது ... உரு௦

பக்கம்.

௮. இந்நெறி, விடயப்பிரியர்கட் கமைவதரிதென்பது ... ௧௬௬

௯. இருதயபுண்டரீகபுட்பத் துள்ளிடத்தே பராசத்தியை நீங்காப் பரம்பொருள் சூக்குமமாயும், அகண்டாகாசமாயு முளதென்பது ... ௩௬

௧0. இவ்வதி சுலபமான முத்திமார்க்கத்தை மானுடர் பாவத்தான் விட்டு வேறு மார்க்கத் தலைவாரென்பது ... ௧௮௬

௧௧. இனி, அந் நடேசனை அறிந்துய்யுமாற்றினை விளக்கியருள்கவென வேண்டிநிற்குஞ் சீடனுக்கு ஆசிரியர் கூறுவன கூறியருளல் ... ௧௨௯

உ

௧௨. உபதேசக் கிரமமாகக் குகேசவழிபா டவாய சீடனுக்கு ஆசிரியர், மேலுங் கூறுவன கூறல் ... ௨௧௪

௧௩. உருவமனம் இனையதற்குறித்து ; அருவமனம் இனையதற்குரித்தென்பது ... ௧௬௮

கு

௧௪. குகேசனாகிய பிரமத்தை, வேதம் வியோமவடி வென்றதற்குக் காரணங் கழறல் ... ௫௬

௧௫. குகேசனுடைய சொரூபலக்கணம் ... ௫௨

௧௬. குமார நாமார்த்தம் ... ௨௩௬

ச

௧௭. சச்சிதானந்த தத்துவம் பகுக்கப்படாதது ; ஆனந்தப் பிரமமே சுவானுபூதிப்பொருளென்பது ... ௨௪௧

௧௮. சச்சிதானந்தமென்னும் பதத்திலுள்ள சத்து, சித்து, ஆனந்தமென்னு மூன்றிலக்கணமுஞ் சிவம், சத்தி, சுப்பிரமணியமென்பது ... ௨௩௭

௧௯. சத்தாவரண விவரம் முதலியன ... ௬௯

சி

௨0. சிதம்பரத்தை, இன்னாரிவ்வழியாய்த் தரிசிப்பரென்பது . ௯௨

௨௧. சிதம்பரத்தை யடைவான் உரியவுபாயமுணர்த்தல் ... ௧௬௪

௨௨. சிதம்பரநடனங் காணுங்கண்ணினையும், அதிகாரியினையும் விளக்கல் .. ௭௫

௨௩. சிதம்பர நடனங் காண்டற்கதிகாரி அல்லாதாருறுபயன்... ௮௧

௨௪. சிதம்பரநடனங் காண்டற்கதிகாரி ஆவாருறுபயன் ... ௭௯

௨௫. சிதாகாசம் சீவனதறிவுக் கறிவென்பதும், அங்குநிகழ் கூத்து உயிர்க்கூத்தென்பதும் ... ௫௮

சீ பக்கம்.

உசு. சீடனது வேண்டுகோ ளங்கீகரித்த வாசிரியர் அவற் கனுக்கிரகித் தருளல் ... உசுரு
உஎ. சீடன் சுவானுபூதி யடைதல் ... உஅகூ
உஅ. சீடன்செய் தோத்திரமும், பிரார்த்தனையும் ... உஎகூ

சு

உகூ. சுப்பிரமணிய நாமார்த்தம் ... உருகூ

ஞா

ஙO. ஞானமின்றிச் சனனரகிதமில்லையாகலின் ஞானமேபேரி தேன்பது ... உOஉ
ஙக. ஞானிகளுட் சிதாகாச முருகனைத் தரிசியாதாரிலர்; அவனையடைதலே முத்தியேன்பது ... உசரு

த

ஙஉ. தகரவித்தை யித்தன்மைத்தென்பது ... ?கூ
ஙங. தகராலய தாரணையே சிரேட்டம் ... ஙசகூ
ஙச. தகராலயத்தில் அந்தர்முகத்தில் உரூற்றுதொழில் ... கஎஉ
ஙரு. தகராலய வெளி, உள்நாம விவரம் ... ஙகூ

ந

ஙசு. நடேசனை நீத்த நோன்பு முதலியன பயன்படா வென் பது ... ககரு
ஙஎ. நடேசன் றிறம் ... அகூ

ப

ஙஅ. பகிர் முகத்தினும், அந்தர்முகத்தினும் உஞற்றுதொழில் கஎச
ஙகூ. பஞ்சகிருத்தியக் கூத்து இத்தன்மைத்தென்பது ... எரு
சO. பஞ்சகிருத்தியக் கூத்து இன்னகாரணம்பற்றி நிகழ் கின்ற தென்பது ... சுங
சக. பஞ்சமாபாதக விவரம் ... உOச
சஉ. பரம்பொருட்குக் குகனேன்னும்பெயர் போந்ததற்குக் காரணங் கழறல் ... சகூ

பு

சங. புத்திரப் பெயர் ... உஉக
சச. புலியூ ரின்னவிட னென்பது ... கருரு

பொ

சரு. பொன்னம்பலத்தைப் புகலாறூலும், விழையாமை யவும் இன்னனவாமென்பது ... ககக
சசு. பொன்னம்பலமென்னும் பெயர்க் காரணம் ... சஎ

போ பக்கம்.

சஎ. போதத்தினது உதயமு மோக்கமும் இருதயதாமரை யின்கணென்பதும், அஃதெங்கணு முள்ள சிதா காசமென்பதும் ... க௬0

ம

சஅ. மறைந்து நிறைந்தபொருள் சிவம்; சுவானுபூதிப் பொருள் குமாரனென்பது ... உச௩

சகூ. மனசனது வேண்டுகோளங்கீகரித்த அறிஞர், வழிபடு கடவுளைவாழ்த்திக் கூறுவன கூறத்தொடங்கல் ... உஎ

ருO. மனசனாகிய சீடன் அறிஞனாகிய குருவைத்தரிசித்துத் தகரவித்தையை விளக்கியருள்கவென வேண்டல் உ௩

ருக. மனத்தின் றிறம் ... க௬௬

மா

ருஉ. மாபாதகமைந்தனுள், காமம் பொய்யென்னு மிரண்டுமே பெருவலியுள்ளன வென்பது ... உகஉ

மு

ரு௩. முருகனது சகளநிலை ... உருஉ

மூ

ருச. மூர்த்தி, தலம், தீர்த்தமென்னு மூன்றனும் மோக்க மென்ற தெத்தன்மைத்து? என்ற சீடனை ஆசிரியர்நோக்கிக் கூறுவன கூறல் ... கஅஅ

வா

ருரு. வாழ்த்து ... உகூO

ஆகப்பாயிரத்துள்ளனவுமுட்பட - ௬௧.

மூலத்துவிடயஅகராதி முற்றிற்று.

அநந்தச்ருதி ஸ்ம்ருதி புராணேதிஹாஸாதி பிரமாணங்களோடு விளங்காநின்ற இவ்வரிய பெரிய வனுபூதிநூன் மூலத்திலு முறையிலும் மெடுத்துக் காட்டப்பட்ட

# பனுவல்கள்.

---

நூற்றெட்டுபநிஷதக்கோவை
யைச்சேர்ந்த உபநிஷதங்கள்.

### அ

க. அதர்வசிகோபநிஷத்.
உ. அதர்வசிரோபநிஷத்.
௩. அம்ருதபிந்தூபநிஷத்.
௪. அக்ஷமாலிகோபநிஷத்.

### ஆ

௫. ஆத்மபோதோபநிஷத்.

### ஐ

௬. ஐதரேயாரண்யகோபநிஷத்.
(ஐதரேயம்)

### ஹ

௭. ஹம்ஸோபநிஷத்.

### க

௮. கடோபநிஷத்.
௯. கர்ப்போபநிஷத்.

### கை

க0. கைவல்யோபநிஷத்.

### ச

கக. சரபோபநிஷத்.

### சா

கஉ. சாண்டில்யோபநிஷத்.
க௩. சாந்தோக்யோபநிஷத்.
க௪. சாரீரகோபநிஷத்.

### சு

க௫. சுகரஹஸ்யோபநிஷத்.
க௬. சுவேதாச்வதரோபநிஷத்.

### ஜா

க௭. ஜாபாலோபநிஷத்.

### ஸ

க௮. ஸங்பாளோபநிஷத்.
க௯. ஸர்வஸாரோபநிஷத்.

### ஸு

உ0. ஸுபாலோபநிஷத்.

### ஸூ

உக. ஸூர்யோபநிஷத்.

### ஸௌ

உஉ. ஸௌபாக்யலக்ஷ்ம்யுபநிஷத்.
(ருக்வேதகம்)

### த

உ௩. தர்சனோபநிஷத்.

### தி

உ௪. தியாநபிந்தூபநிஷத்.

### தே

உ௫. தேஜோபிந்தூபநிஷத்.
உ௬. தேவ்யுபநிஷத்.

### தை

உ௭. தைத்திரீயோபநிஷத்.

### நா

உ௮. நாரதபரிவ்ராஜகோ
உ௯. நாராயணோபநிஷத்.

### நி

௩0. நிராலம்போபநிஷத்.
௩க. நிருஸிம்ஹோத்தரதாபிந்யுபநிஷத்.
௩உ. நிர்வாணோபநிஷத்.

### ப

௩௩. பஸ்மஜாபாலோபநிஷத்.
௩௪. பஞ்சப்ரஹ்மோபநிஷத்.
௩௫. பஹ்வ்ருசோபநிஷத்.

### பி

௩௬. பிரச்நோபநிஷத்.
௩௭. பிரஹ்மோபநிஷத்.
௩௮. பிராணாக்நிஹோத்ரோபநிஷத்.
௩௯. பிருஹஜ்ஜாபாலோபநிஷத்.
௪௦. பிருஹதாரண்யகோபநிஷத் (யஜுர்வேத காண்வசாகை).

### பை

௪௧. பைங்கலோபநிஷத்.

### ம

௪௨. மண்டலப்ராஹ்மணோபநிஷத்.
௪௩. மஹோபநிஷத்.

### மா

௪௪. மாண்டூக்யோபநிஷத்.

### மு

௪௫. முக்திகோபநிஷத்.
௪௬. முண்டகோபநிஷத்.

### மை

௪௭. மைத்ராயண்யுபநிஷத்.
௪௮. மைத்ரேயோபநிஷத்.

### யோ

௪௯. யோககுண்டல்யுபநிஷத்.
௫௦. யோகசூடாமண்யுபநிஷத்.

### ரா

௫௧. [illegible]ாஹஸ்யோபநிஷத்

### ரு

௫௨. ருத்ர[illegible]ருதயோபநிஷத்.

### வ

௫௩. வஜ்ரஸூசிகோபநிஷத்.
௫௪. வராஹோபநிஷத்.

---

### வேதபாகங்கள்.

௫௫. சாமவேதப் பிரதமமந்திரம்.
௫௬. தைத்திரீயாருணசாகை நாராயணம்.
௫௭. புருஷஸூக்தம். (யஜுர்வேதத்தில் உச-மந்திரங்கள்)
௫௮. மத்தியந்தின சாகை.
௫௯. ருக்வேதம்.
௬௦. ருத்ராநமகம். (யஜுர்வேதம்)

---

### ஆகமங்கள்.

௬௧. காமிகம்.
௬௨. குமாரதந்த்ரம். (உபாகமம்)
௬௩. மிருகேந்த்ரம். (காமிகாகம வழிவந்த உபாகமம்)
௬௪. சிவதருமோத்தரம். (சருவோத்தாகம வழிவந்த உபாகமம்)
௬௫. வாதுளோத்தர சுத்தாக்யம்.
௬௬. ஸர்வஜ்ஞானோத்தரம்.
௬௭. நிசுவாச காரிகை.

---

### வடமொழிச்சித்தாந்தநூல்.

௬௮. சிவஜ்ஞானபோதம். (வடமொழி)

---

### ஸ்ம்ருதி.

௬௯. மநுஸ்ம்ருதி.

---

### புராணேதிஹாஸங்கள்.

௭௦. இலிங்க புராணம். (வடமொழி)
௭௧. இலிங்க புராணம். (தென்மொழி)
௭௨. காருடபுராணம்.

எ௩. கூர்மமஹாபுராணம்.
எ௪. சிவரஹஸ்யம். (மஹேதிகாசம்)
எ௫. சைவமஹாபுராணம்—
கைலாஸஸம்ஹிதை,
வாயுசங்கிதை.
எ௬. ஸ்காந்த மஹாபுராணம்—
ஸம்பவகாண்டம்,
அசுரகாண்டம்,
தக்ஷகாண்டம்,
யுத்தகாண்டம்,
உபதேசகாண்டம்,
தேவகாண்டம்,
வீரமாஹேந்த்ர காண்டம்.
எஎ. கந்தபுராணம் (முதல்வன் புராணம்.)
எஅ. காசிகாண்டம் (தமிழ்மொழி பெயர்ப்பு.)
எ௯. சூதசங்கிதை (தமிழ்மொழி பெயர்ப்பு.)
அ0. பராசரபுராணம்.
அ௧. மஹாபாரதம். (வடமொழி)
அ௨. ராமாயணம்.
அ௩. ஸேதுமாஹாத்ம்யம்.
அ௪. ஹாலாஸ்யமாஹாத்ம்யம்.
அ௫. திருவிளையாடற்புராணம்.
அ௬. கோயிற்புராணம்.
அஎ. திருவாதவூரர் புராணம்
அஅ. பெரியபுராணம்—
திருநாவுக்கரசுகள் புராணம்,
சுந்தரமூர்த்திகள் புராணம்,
சாக்கியநாயனார் புராணம்.
அ௯. சேக்கிழார் புராணம்.
௯0. { சண்முக சகச்சிர நாமம் / ஷண்முக ஸஹஸ்ர நாமம். } பிரமாண்டபுராணத்தது

## ஸூத்ரம்.

௯௧. பிரஹ்மஸூத்ரம் (வியாஸ முனிவர்).

## பாஷ்யம்.

௯௨. நீலகண்ட பாஷ்யம்.

## தமிழ்மறைகள்.

௯௩. திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கு.
௯௪. திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கு.
௯௫. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு.
௯௬. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கு.

## தமிழ்ச்சித்தாந்தசாத்திரங்கள்.

௯எ. சிவஞானபோதம் (மெய்கண்டதேவர்.)
௯அ. சிவஞானசித்தியார்.
௯௯. சிவப்பிரகாசம் } உமாபதி சிவாசாரியர்.
௧00. உண்மை நெறி விளக்கம் } உமாபதி சிவாசாரியர்.
௧0௧. திருவருட்பயன் } உமாபதி சிவாசாரியர்.
௧0௨. உண்மை விளக்கம் (திருவதிகை - மனவாசகங்கடந்தார்).
௧0௩. திருக்களிற்றுப்படியார் (திருக்கடவூர் - உய்யவந்ததேவர்).
௧0௪. திருவுந்தியார் (திருவியலூர் - உய்யவந்ததேவர்).

## அருணகிரிநாதசுவாமிகள் திருவாக்குமுதலியன.

௧0௫. கந்தரனுபூதி } அருணகிரிநாதசுவாமிகள்.
௧0௬. கந்தரலங்காரம்
௧0௭. திருப்புகழ்
௧0௮. திருவிசைப்பா (சேந்தனார்).
௧0௯. திருமுருகாற்றுப்படை (நக்கீரதேவர்).
௧௧0. „ உரை (நச்சினார்க்கினியர்).
௧௧௧. குகப்பிரமவருட்பத்து } பாம்பன் - குமரகுருதாச சுவாமிகள்.
௧௧௨. குமரகுருதாசசுவாமிகள் பாடல் கந்தர்நான்மணிமாலை
௧௧௩. திருப்பா
௧௧௪. பரிபூரணானந்தபோதம்
௧௧௫. சிவசூரியப்பிரகாசத்தில் விசேடவுரை
௧௧௬. காசியாத்திரை
௧௧௭. திருத்தொடையல்
௧௧௮. திருவலங்கற்றிரட்டு
க - ஆங் கண்டம்
உ - ஆங் கண்டம்
௧௧௯. குமரவேள்பதிற்றுப்பத்தந்தாதி
௧௨0. செக்கர்வேள் செம்மாப்பு
௧௨௧. ஜீவயாதனை வைக்குறித்த வியாசம்
௧௨௨. ஞானவாக்கியம்
௧௨௩. சைவசமய சரபம்
௧௨௪. திருவிரிஞ்சை முருகன்பிள்ளைத்தமிழ்.
௧௨௫. செந்தினிரோட்டகம்.
௧௨௬. திருமந்திரம் (திருமூலநாயனார்).
௧௨௭. { பட்டினத்தடிகள் திருவெண்காட்டடிகள் } திருவாக்கு
௧௨௮. தாயுமானசுவாமிகள்பாடல்.
௧௨௯. ஔவையார் பாடல்.
௧௩0. திருவள்ளுவதேவர் குறள்.
௧௩௧. பொன்முடியார் கூற்று.
௧௩௨. பட்டினப்பாலை (கடியலூர் உருத்திரங்கண்ணனார்).
௧௩௩. மலைபடுகடாம் (பெருங்குன்றூர்ப்பெருங் கௌசிகனார்).
௧௩௪. மதுரைக்காஞ்சி (மாங்குடிமருதனார்).
௧௩௫. பொருநராற்றுப்படை (முடத்தாமக்கண்ணியார்).
௧௩௬. குறிஞ்சிப்பாட்டு (கபிலர்).
௧௩௭. தொல்காப்பியம்.
௧௩௮. „ உரை (நச்சினார்க்கினியர்).
௧௩௯. நன்னூல்.
௧௪0. சித்தாந்தப் பிரகாசிகை. (தமிழ்)
௧௪௧. பாணினீயம்.
௧௪௨. நாடகத் தமிழ்நூல்.
௧௪௩. அணியிலக்கணக்காட்டு.
௧௪௪. ஆன்றோர் வாக்கு.

---

## நிகண்டுகள்.

௧௪௫. அமர ஸிம்ஹம். (வடமொழி)
௧௪௬. பர்யாயார்ணவம். (வடமொழி)
௧௪௭. விச்வப்ராகாசம். (வடமொழி.)
௧௪௮. பிங்கலநிகண்டு.
௧௪௯. சேந்தன் திவாகரம் (சே-திவாகரம்).

கடு0. சூடாமணி நிகண்டு

ககர வெதுகை,
டகர வெதுகை,
ணகர வெதுகை,
தகர வெதுகை,
நகர வெதுகை,
மகர வெதுகை,
யகர வெதுகை,
ரகர வெதுகை,
லகர வெதுகை,
வகர வெதுகை,
ழகர வெதுகை.

---

மைத்ராயண்யுபநிஷத். இது, வங்காளதேசத்துப்பிரதி. இதன் பெயர் "மைத்ர்யுபநிஷத்" எனவும் வழங்கப்படுகின்றது.

வடநூல்களின் பெயர்முதற்கண்ணுள்ள மெய்யெழுத்துக்கள் தமிழ்வழக்கிற்கிசைய உயிர்மெய்யெழுத்துக்களாக வரையப்பட்டன.

---

## இந்நூ லச்சிடுமாறு முன்பணமாக
## 5 - 4 - 0 க்குக் குறையாதளித்த
# சிவநேயச் செல்வர்கள் பெயர்.

---

மகா - ா - ா - ஸ்ரீ

(1) திவான் பகதூர் - சா. ராம. மு. இராமசாமிச் செட்டியாரவர்கள்; சிதம்பரம். 5 - 4 - 0

(2) மெ. லெ. ராம. லெட்சுமணஞ் செட்டியார்; தேவகோட்டை. 5 - 4 - 0

(3) N. சுப்பிரமணியபிள்ளை; கவர்ண்மெண்ட் டெல்லகிராப் மாஸ்ட்டர் (சென்னை). 10 - 8 - 0

(4) முத்துக்குமரபிள்ளை; மிராசுதார், உடையூர். 5 - 4 - 0

(5) வெ. தில்லைநாயக முதலியார்; ஸ்ரீ சபாநாயகர் கைலசந்திக்கட்டளை, சிதம்பரம். 5 - 4 - 0

(6) பாலஸுப்ரஹ்மண்ய பக்தஜந ஸபையார்; இராயப்பேட்டை (சென்னை). 5 - 4 - 0

(7) ஆ. முருகேசமுதலியார்; பென்ஷனர், சிந்தாதிரிப்பேட்டை (சென்னை). 5 - 4 - 0

(8) செ. கோவிந்தராஜமுதலியார்; கவர்ண்மெண்ட் டெல்லகிராப் ஆபீஸ் கிளார்க், சென்னை (வைத்தியநாதமுதலித்தெரு). 5 - 4 - 0

(9) ஏ. ஆண்டாளம்மாள் எனப்பெயரிய மங்கையர்க்கரசியார்; சைவசித்தாந்த மஹாசமாஜ வனிதை வகுப்புக் காரியதரிசி, சென்னை. 10 - 8 - 0

(10) C. ஏகாம்பரமுதலியார்; Director Saiva Siddhanta Maha Samajam, சென்னை. 10 - 8 - 0

(11) P. மாணிக்கம்பிள்ளை; கிளார்க், Gordon Woodroffe & Co., Madras. 5 - 4 - 0

(12) செ. சிவசங்கரத்தம்பிரான்; இரும்புக்கடை, No. 233. ராஜப்ப செட்டித்தெரு, சென்னை. 5 - 4 - 0

(13) P. சம்பந்தமுதலியார்; உத்தியோகம், புதுப்பாக்கம் (சென்னை). 5 - 4 - 0

(14) சதாசிவமெனும் பெயரிய கணபதிநாயகர்; Head Clerk Board of Revenue Inam, Dept Madras. 5 - 4 - 0

(15) குமாரமூர்த்தியெனும் பெயரிய நல். கண்ணப்பமுதலியார்; உத்தியோகம், திருவல்லிக்கேணி (சென்னை). 5 - 4 - 0

(16) குமாரச்சிவமெனும் பெயரிய தா வேங்கடாசலமுதலியார்; உத்தியோகம் (Bank of Madras), திருவல்லிக்கேணி (சென்னை). 5 - 4 - 0

(17) சண்முகானந்தனெனும்பெயரிய மயிலை அ. கந்தசாமிமுதலியார்; உத்தியோகம் (Bank of Madras), திருவல்லிக்கேணி (சென்னை) 5 - 4 - 0

(18) குமரகுருதாசரெனும்பெயரிய தே. குருசாமிமுதலியார்; உத்தியோகம் (General Traffic Manager's office M. & S.M.Ry.) 5 - 4 - 0

(19) குமாரானந்தனெனும்பெயரிய வா. ஆ. ஜகந்நாதமுதலியார்; உத்தியோகம், சிந்தாதிரிப்பேட்டை (சென்னை). 5 - 4 - 0

(20) குமாரபரமேச்வரனெனும்பெயரிய V. இராஜாபாதர் முதலியார்; உத்தியோகம், திருவல்லிக்கேணி (சென்னை). 5 - 4 - 0

(21) சுப்பிரமணியதாசரெனும்பெயரிய பு. சின்னசுவாமிமுதலியார்; பிரபலசோதிடர், திருவல்லிக்கேணி (சென்னை). 5 - 4 - 0

(22) சண்முகப்பிரமமெனும்பெயரிய க. ஆ. இராஜமுத்துப்பிள்ளை; உத்தியோகம், மைசூர். 5 - 4 - 0

(23) T. J. சாமிநாதபிள்ளை; உத்தியோகம், No. 12. பாலப்பா கார்டன் பி. தெரு, சிக்கப்பஜார் ரோட், கிராஸ் கண்டோன்மெண்ட், பெங்களூர். 8 - 12 - 0

(24) M. அப்பாவுபிள்ளையாகிய பால்வண்ணம்பிள்ளை; Drawing Master, பெரியகுளம் (மதுரை ஜில்லா). 5 - 4 - 0

(25) K. P. கந்தசாமி முதலியார் Brass vessels Merchant, பெரியகுளம் (மதுரை ஜில்லா). 5 - 4 - 0

(26) S. சரவணப்பெருமாள் பிள்ளை; Retired Revenue Inspector, சிக்க நரசையன்கிராமம் (திருநெல்வேலிப்பாலம்). 5 - 4 - 0

(27) S. ஐயாச்சுவாமிப் பிள்ளை; சிவகிரிகர்ணம், சிவகிரி (திருநெல்வேலி ஜில்லா). 5 - 4 - 0

(28) தா. முத்துக்கருப்ப பிள்ளை; பிரபலசோதிடர், இராமேசுவரம் (இராமநாதபுரம் ஜில்லா). 7 - 0 - 0

(29) ந. கு. அய்யாவு ஆசாரி; பாம்பன் (இராமநாதபுரம் ஜில்லா). 5 - 4 - 0

(30) இ. ஆ. வேலுப்படையாட்சியார்; மிராசுதார், செயங்கொண்டபட்டணம் (தென்னாற்காடு ஜில்லா). 5 - 4 - 0

(31) வே. வீ. ஆறுமுக பக்தர்; மிராசுதார், குயவன்பேட்டை வரகூர் (தென்னாற்காடு ஜில்லா). 5 - 4 - 0

(32) விசுவலிங்க பண்டாரம்; பிரபலசோதிடர், குயவன்பேட்டை (தென்னாற்காடு ஜில்லா). 5 - 4 - 0

# புத்தகவிஷயவறிவிப்பு.

(1) இந் நூலாகிய தகராலயரகசியமெனு மூலமும், சதானந்தசாகர மெனு முரையும். விலை 2 - 8 - 0

(2) பரிபூரணானந்தபோதமூலமும், சிவசூரியப்பிரகாசமெனுமுரையும். சற்சீடன்கடாவுக்குச் சற்குரு விடையிறுக்கத்தொடங்கல் என்றற்றொடக்கத்துப் 18 - உட்பிரிவுகளைப் பதி பசு பாச யதார்த்தவிளக்கப்படலம், துறவுறவிளக்கப் படலமென்னும் இரண்டனுள் அடக்கிக்கொண்டு விளங்குமோ ரரியபெரிய சித் தாந்தநூல். வேதோபநிடதங்கள் 108 - ல் 73 - ம், உபநிடதங்க ளெனப்படா வேத சாகைகளோடு சைவாகமம், தேவாரம், திருவாசகம் முதலிய சாத்திரங்கள் 98 - ம் உரையிற்கொண்டுளது. கிரந்தாக்ஷர வடமொழிக ளெல்லாந் தென் மொழி யெழுத்திலுந் தீட்டப்பட்டுத் தமிழுருத்தத்தோடு மிளிர்ந்துகொண்டிருக் கிறது. சுத்தாத்வைதப்பொருள் சுருதிபிடித்துத் தெளிவினுந் தெளிவாக இந் நூற்கட் காட்டப்பட்டதுபோ லெந்நூற்கண்ணுங் காட்டப்பட்டதின்று. இந் நூலாராய்ச்சி யில்லாதார்க்குச் சைவசித்தாந்த நிச்சயமெல்லாம் வேதமேயெனல் புலனாகமாட்டாது. குருசீட வடிவங்களை யினிது காட்டத்தக்க உயர்ந்த ஆப் டோன் பிளாக் படமொன்றுமுளது. 2 - 0 - 0

(3) இப் பரிபூரணானந்தபோத மூலமுமுரையும், 1 - ஆம் எண்ணிற் குறிக் கப்பட்ட தகராலயாகசிய மூலமுமுரையும் ஒன்றாகக்கட்டப்பட்டது. 3 - 12 - 0

(4) சைவசமயசாரம்.—போதகமுறையினே தன்னின் மிக்கநூல் இன்று காறு மேற்பட்ட தின்றென்னும் புனித நியாயங்கள் பொலிவுறப்பெற்ற பொற் பினைத் தன்கண்ணேகொண்டு நிகரற்று நிற்பது. பரவஸ்து அதுவோ இதுவோ வென் றுழிதருவாரை யுண்மையினிறுவுந்தகைத்து. 70 - உபநிடதங்கண் முத லிய சுருதிகளையே பெரிதும் பிரமாணமாகக்கொண்டு தமிழுருத்த புஷ்டியோடு பிரகாசிக்கின்ற இவ்வரிய பெரிய வசனநூல்— ஒவ்வொரு சைவசமயச்செல்வர் கண்ணு மெஞ்ஞான்று மிருத்தற்குரித்து. (சைவநிந்தைமுதலியன வெழுதப் பட்டு வெளிவந்த பத்திரிகைநிமித்தம் இந்நூலாசிரியராய ஸ்ரீமத் - சுவாமிகளே வாதியாகவிருந்த) திருக்கோயிலூர் : மகா - ரா - ரா - ஸ்ரீ 1 - வது வகுப்பு சப் டிவிஷனல் மாஜிஸ்த்திரேட் அவர்கள் கோர்ட்டு 1908-ம் ஹு C. C. No. 112-ல் தண்டிக்கப்பட்ட வைஷ்ணவர்களி லொருவரான சிதம்பரம் : இராமாநுஜதாஸ

றென்பார் ஷை கோர்ட்டிலும், கனந்தங்கிய சென்னைக் கவர்ன்மெண்ட் ஆபீசிலுமாகச் செய்துகொண்ட 2 - தாவாக்களாலு மொழிக்கப்படாத வுறுதி பெற்றுள்ளது மிதுவே. 1 - 12 - 0

(5) ஜீவயாதனாவியாசம்.—மூலமுமுரையும். படிக்குந்தோறுந் தெவிட்டாத தெள்ளமுதுபோனிகழும். சர்வசமயத்து இல்லறத்தாருந் துறவறத்தாரும் அவாவித் தெரிந்துகொள்ளவேண்டிய "ஜீவயாதனை செய்யொண்ணாது" "புலாலுண்ணொண்ணாது" என்னும் விசேடதருமாதிகள் விளக்கப்பட்டன. இவற்றை விளக்கவெழுந்தநூல்கள் பலவற்றுள்ளும், உபந்யாஸங்களுள்ளும் 235 - செய்யுள்களைக்கொண்ட மூலமும், உரையுமாயுள்ள இதுவே அனந்த சம்வாதமாய் ஐயமெல்லா மறவிளக்கும் பெருநூல். ஆப் பைண்டு 0 - 11 - 0

(6) வேதநதைக்துறித்த வியாசம்.—வசனம். நூல்களினுட்பம் உணர விழைவோர் இதனைப் படித்தே யுணரவேண்டும். ஆப் பைண்டு 0 - 8 - 0

(7) பந்தபபிரபந்தம்.—இதனில் சஸ்திரபந்தம் (வேல்), மயூரபந்தம் (மயில்), அந்தாதித்தொடைக் கமலபந்தம், பிறிதுபடு துவிதபங்கி, பிறிதுபடு திரிபங்கி, பிறிதுபடுபாட்டுப்பிரபந்தம், ஐந்தந்தாதியென்னும் பகுபடுபஞ்சகம், சஷ்டி வகுப்பு, தங்க ஆனந்தக்களிப்பு, அனவரத பாராயணாஷ்டகம் என்பவைகளுள்ளன. அருத்தமுமுண்டு. கமலபந்தமாகிய ஒரு சித்திரத்தினுட் பல சித்திரகவிகளிருத்தலின் விசேட விசித்திரகவியாம்; காண்பாரை விம்மிதப்படுத்தும். சஷடிவகுப்பாய ஒரு கவியிற்றனே 32 - வண்ணச் சந்தபேதங்களைக் கண்ணுறலாம். இத்துணைச் சந்தபேதவண்ணச்செய்யுளை யாவரே கண்ணுற்றார்! கேட்க ஆசை. இது, ஸ்கந்தஷஷ்டிபூஜையில் முக்கியமாகப் பாடத்தக்கது. முருகப்பெருமானை யுணர்த்தாநின்ற தங்க ஆனந்தக்களிப்பானது செவிச்சுவையும் பொருட்சுவையுஞ் சிறந்துவிளங்குஞ் சீர்மைத்து. பிறவு மன்ன. டயிட்டில் பதிக்கப்பட்ட ராபர் 0 - 7 - 0

(8) ஷை பிரதி.—சாதாரண ராபர் 0 - 6 - 0

(9) பதுதுப்பிரபந்தமும், இன்சுவைமல்கிய 608 - த் திருச்செய்யுள்களானிரம்பிய காசியாத்திரையும். இந்த யாத்திரையில் எத்தனையோ இரகசியங்களையறியலாம்; கட்டளைக்கலித்துறை வண்ணத்தினிகழ்தலும், சில செய்யுள்கள் விநோதத்தினிகழ்தலும் இதனிற்றானுள. 0 - 12 - 0

(10) காசியாத்திரையும், பத்துபபிரபந்தமும், ஜீவயாதனாவியாச மூலமு முரையும் ஒன்றாகக் கட்டப்பட்டது. ஆப் பைண்டு 1 - 4 - 0

(11) இந்த 3 - உடன் மேலேகாட்டப்பட்ட வேதவியாசமும் ஒன்றாகக் கட்டப்பட்டது. ஆப் பைண்டு 1 - 12 - 0

(12) ஸ்ரீ சுப்பிரமணியவியாசம்.—வசனம். ராபர் 0 - 7 - 0

(13) குமாரகுருதாசசுவாமிகள் பாடல்.— 81 - பிரபந்தங்களைக் கொண்டது. சைவராயுள்ளார் சந்தேகநிவர்த்தியின் பொருட்டுப் படித்துணரத் தக்கது. சண்முகப்பிரம நிலயமாய்நிலவுவது. ஒருபாட்டே 125-(வண்ணப்) பாட்டாகின்ற "பஞ்சவிம்சதியதிக சதபங்கி"யும் இதனிலுளது. இப்பங்கியில் வெண்பா முதலிய பாக்களும், பாவினங்களுமுள. கிளோஸ் ஆப் பைண்டு 0 - 12 - 0

(14) ஷை ரப் ஆப் பைண்டு 0 - 8 - 0

(15) திருவலங்கற்றிரட்டு.— 1 - ஆங் கண்டம். இன்சுவை மல்கிய 60 - திருப்பதிகங்களடங்கிய பண்பாடல். ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய பக்தரும், ஏனையோரும் படித்துணரத் தக்கது. கிளோஸ் ஆப் பைண்டு 0 - 6 - 0

(16) ஷை ரப் ஆப் பைண்டு 0 - 4 - 0

(17) திருவலங்கற்றிரட்டு 2 - ஆங் கண்டம். முழுதும் முருகக் கடவுள் தோத்திரமாயுள்ள இது— ஞானசாத்திரம், யாப்பிலக்கணம், யாப்பிலக்கியம், குழிப்பிலக்கணம், குழிப்பிலக்கியம், அணியிலக்கண சித்திரகவியென்னும் 7 - வடிவிற்ருகவுமமைந்த அரிய பெரிய நூல். கவிகளின் சந்தபேதங்களையெல்லாஞ் சால விளக்குமுறையில் இதனின் மிக்கதுமில்லை. செய்யுள்களின் பெயர் தெரியாமே "வேறு, வேறு" என வரைதன்முதலிய அறியாமைகளையடியோடொழிக்கும். ஆப் பைண்டு 0 - 10 - 0

(18) திருவலங்கற்றிரட்டு 1 - ஆங் கண்டமும், 2 - ஆங் கண்டமும் கிளோஸ் ஆப் பைண்டு 0 - 14 - 0

(19) இந்த 2 - கண்டங்களும், மேலைய குமாரகுருதாசசுவாமிகள் பாடலும் ஒன்றாகக் கட்டப்பட்டது. கிளோஸ் ஆப் பைண்டு 1 - 10 - 0

(20) சிறுநூற்றிரட்டு.—இதனில் ஷண்முககவசம், பஞ்சாமிர்தவண்ணம், திருத்தொடையல், கந்தரெர்லியலந்தாதி, குகப்பிரமவருட்பத்து, ஞானவாக்கியம், கந்தகோட்ட மும்மணிக்கோவை, வடதிருமுல்லைவாயிற் குகபரர்வண்ணம், நவரத்தினக்கலிவிருத்தமென்னும் 9 - நூல் வரலாற்றோடுள்ளன. கவசம்— அனுபவ சித்தமாகவே காக்கும் மகிமையுடைத்து; காக்கப்பட்டாருமுளர்; 2 - ஆம் பதிப்பு. ராபர் 0 - 3 - 0

(21) சேந்தன்செந்தமிழ்.—வடநூல் கற்றருட்சிலர், தமிழ்நூல்களில் வழங்கப்படு மொழிகளிற் பலவற்றை யெடுத்து இது வடமொழி, இது வடமொழித்திரிபு, இது வடமொழியழிவென் றுரைத்தற்காயமொழி யொன்றேனும் புகாது தூயசெந்தமிழின் முருகப்பெருமான்மீது இனிது பாடப்பட்ட 50 - நேரிசைவெண்பாக்களா னிரம்பிய வோரரிய நூல். தமிழொரு தனிப் ரவைத யெனற்பாலதை யிதுகொண்டுதான் வற்புறுத்தல் வேண்டும். இதனது முன்னுரை— 6 - பிரிவாய் அகரநிரலாய் ஏறக்குறைய 3000 - சொற்களிலமைந்துளது. அது தமிழகராதிகளானும், நிகண்டுகளானும் இது தென்மொழி, இது வடமொழியென வறியக்கூடாத குறைவை தீர்க்குந் தகைமைத்து. திறமான கவர் 0 - 2 - 0

(22) கனவதிகாரமும, பெருமிறைக்கவியுரையும்.— கனவதிகாரத்தில் நன்று தீதென்னும் பலனுக்குரிய கனவுகள், சாக்கிரத்திற் பலிக்குங் கனவு, திருவருட்செயற் கனவு, பெரியோர்காண் கனவு, உட்டிணத்தாலுறுங் கனவு, பழையவாசனைக் கனவு, சூக்குமதேகத்திற்குந் தூலதேகத்திற்கும் அனுபவங் கனவிலொன்றாயிருத்தல், பொய்ப்படு கனவு, உருவெளித் தோற்றம், கனவினுக்குரிய சுருதி நியாயம் காலம் முதலியவெல்லாம் அடங்கியுள்ளன. பெருமிறைக்கவியுரையில் 'தானே' 'ஆனே' 'பூனே' என்னும் ஆறெழுத்துக்கள் காரணமாக வமைந்துள்ள (11) பதினொன்கு விசித்திர அலங்காரங்களையுஞ் சித்தாந்த முக்கியப்பொருள்களைக் குறிப்பானுணர்த்திநிற்றலையுங் கண்டு களிகூரலாம். இவ்விரண்டையுந் தமிழறிந்தாரெவரு மெளிதிற்படித் துணராலாம். ராபர் 0 - 2 - 0

(23) குமரவேள்பதிற்றுப்பத்தந்தாதி.—படிக்குந்தோறுங் கண்ணீர் வாரப் பக்திரசம் இனிது பெருகும். நூலாசிரியர், விதேகமுத்தியை யவ பாடிய அனுபவநூல், ராபர் 0 -

(24) இன்னும் பல வுள.

☞ அத்தியாச்சிரம வைதிக சைவசித்தாந்த ஞானபானுவாய் விளங்கும் பாம்பன் : ஸ்ரீமத் - குமாருதாச சுவாமிகளால் உலோகோபகாரமாக அருளிச் செய்யப்பட்ட இவை :— சென்னையைச்சார்ந்த திருவல்லிக்கேணி வீரராகவ முதலித் தெரு 135 - வது வீட்டில் ம - ா - ா - ஸ்ரீ, V. இராஜாபாதர் முதலியாரிடத்திலும், சென்னை: வைத்தியநாதமுதலித் தெரு 44 - வது வீட்டில் ம - ா - ா - ஸ்ரீ, C. ஆதிகேசவமுதலியாரிடத்திலுங் கிடைக்கும். ஒரு புத்தகத்திற் 10 - பிரதி கொள்ளும்போது 1 - பிரதி விலையிலா தளிக்கப்படும்.